நில்லவேபோகரிட மணியைக்கேளு நிலையானமணியதுவும்சித் தர்வேதை, புல்லவேசாகரத்தின்சலமேயாகும் போக்கானபடிரண்டு வளந்துவாரு, கொல்லவேசேர்த்துப்புபடியேயாகும் குணமானவளை யலுப்புபடியேயாகும், வெல்லவேவிதுரண்டும்பொடியதாக்கி மேன் மையுடன்காச்சும்வகைசெப்பக்கேளே. சுஉஉ

செப்பவென்றால்சலந்தனிலேவுப்பைக்கொட்டிசீலமுடன்தான் கரைத்து தெளிவைவாங்கி, ஒப்பமுடன்சீலைபதுவேடுகட்டி வுத்தம னேஅடுப்பேற்றியெரிப்பாயப்பா, தெப்பமுடன்நீரெல்லாம் சுண்டி யேதான் தெளிவுபெறவுப்பதுதான்வட்டுபோலாம், நெப்பமுடன்தா னிருக்கும்வுப்பைத்தானும் நேர்ப்பாகசுரண்டியதையெடுத்திடாயே.

எடுத்துமேமறுசட்டிதானெடுத்து யெழிலானகடல்சலந்தான்ப டிரண்டப்பா, தொடுத்துமேமறுபடியும் வுப்பைக்கொட்டி தொடர வேதான்கரைத்து வடிதான்கொண்டு, விடுத்துமேமேற்கவஸம் சீலை கட்டி விருப்பமுடன்றனெரிப்பாய்சுண்டமட்டும், கொடுத்துமேதா னிறக்கியெடுத்துப்பாரு குடிலமுடன்வுப்பதுதான்கரடுமாமே. சுஉச

கரடானவுப்பதனையெடுத்துக்கொண்டு கருத்துடனேமறுசட்டி கடற்சலந்தான், பிரட்டாதேபின்னுமந்தசட்டிக்குளளேபேரானகட ற்சலந்தான்படிரண்டிட்டு, வரட்டேனேவுப்பையெல்லாம்சீவிவாங்கி வளமாககடல்சலத்தில் கரைத்துக்கொண்டு, திரட்டேனேவடிகட்டி யெடுத்துக்கொண்டு தீற்கமுடனடுப்பேற்றி யெரிப்பாய்நேரே. சுஉரு

நேரானவுப்பையெல்லாஞ்சுரண்டிவாங்கி நேர்ப்புடனேமறுசட் [illegible] குணமுட

னேவுப்பெல்லாம்வுருகிக்கட்டும், பேரானவுப்பதுவும்வயிரம்போல ம்பெரிதானவயிரமதையெடுத்துக்கொண்டு, சேரானமண்ணுனசட்டி தன்னில்தெளிவுடனேகாச்சியல்லோமுசைக்கேற்றே. ௬௨௬

ஏற்றவேவுப்பதனைமுசையிட்டு யெழிலானதன்பதத்திலிருக்கித் தீரு, போற்றவேகருகட்டிசிலைதான்வாாப்பாய் புகழானசிலையதுவும் பாய்ந்தபின்பு, சீற்றமுடன்சிலையதுவுஞ்சாரணிப்பாய் சிறப்புடனே மேனியென்னுங் குப்பைமேனி, தேற்றமுடன்சார்பிழிந்து காய்ச்சு தோய்ப்பாய் தேர்மையுடன்சிலையதுவுமிறுக்கும்பாரே. ௬௨௭

பாரேதான்சிலையதுவுமிறுகிக்காட்டும் பாங்கானலிங்கமுடன் று ருசுதானும், சீரேதான்கெந்தியுடன்தாரந்தானும் சிறப்பானசூதமுட னிடையாய்ச்சேர்த்து, வேரேதான்முலியதுவிராலிதானும் வேகமுட ன்முன்பிழிந்துசரக்கைமைந்தா, கூரேதான்மைபோல வரைத்துப்பி ன்பு குணமானமருந்தையெல்லாஞ்சிலையிற்கேற்றே. ௬௨௮

சிலையானவுப்பினிடகெதையைமைந்தா சீர்பெறவேகவசித்துப் பூசிப்பின்பு, மலையானவோரமதில்தானேபூர்க்கு மகத்தானபூநீறுகவ சஞ்செய்து, குலையானசித்தர்முனிரிஷிகளில்லாக் கொலுக்கூடவனந் தனிலேபுடத்தைப்போடு, விலையானவுப்பதுவும் சிவந்துமேதான் வி ண்ணுலகந்தான்மதிக்கு மதீதம்பாரே. ௬௨௯

அதிதமாங்கெதைபதனை யெடுத்துமைந்தா அழகுபெறதகைவீ ட்டில்பதனம்பண்ணு, துதிதமுடனுந்தனுக்கு வறுமைவந்தால் துடி யானகெதைபதனைசீவிமைந்தா, நதீதமுடன்செம்பதனில் நூற்றுக் கொன்று நாட்டிடவேமாற்றுபனிரண்டதாகும்,பதிபானசித்தர்முனி செய்யும்வேதை பாருலகில்யார்செய்வார்நம்பிடாதே. ௬௩௰

சன்னிக்கு சுடரெண்ணை.

நிம்பவெண்ணைபடியாழாக்கரண்டிபிட்டு நினைவாகவெள்ளுள்ளி தாரங்கொஞ்சம், தெம்புடனேவிட்டெரித்துச்சூடுகண்ட திறமானப ருவமதில்சிரசிலூற்று, துன்பமதுசன்னிதனிற்பிரட்டல்போகுந் துடி ப்புள்ளசலவைகளுஞ்சொல்லாதோடும், நம்பியிட்டபயிர்போலேகல மதாகும் நாதாந்தமாகபோகர்நவின்றிட்டாரே. ௬௩௧

விஷபேதிக்கு.

கருத்துடையமானிடர்க்குப் பேதிகண்டால் கைக்கடங்கப்பிடி யெடுத்துமுலைகாய்தன்னை, இருத்தியபாவெண்ணைபோல்முளைத...

விதமாகப்பதிந்திட்டுப் பின்புநீயும், பொருத்தமுள்ளவன்னிபற்பமு டனேதாக்கு பேருலகிற்சன்னியற்றுப்பிழைப்பார்பாரு, வருத்தமில்லை கைகண்டதொழிலுமாகும் வண்மையாய்போகர்முனி வழுத்தினரே.

பேதிகண்டவுடனேதான்பத்துஒத்து பேதமிலாவாக்கிறுணம்க லிக்கம்பற்பம், நீதிபாய்மாத்திரைகளன்னப்போக்கு நிலையாகவொரு நாளிற்செய்துகொள்ளு, சோதிபெறநாளிரண்டிற்செய்யவேண்டாஞ் சுருக்கிலேகுளுமைவந்து மூடிப்போகும், நாதிதானில்லாமலுயிரும் போகும் நலமானபோகரிஷிநவின்றவாரே. ௯௱௩

நிம்பயிலையிடையெட்டு வரலிவிட்டு நேகயிடிபாணிரெட்டிசாவி விட்டு, தம்பமறவெட்டிலொன்றாய்க்காச்சிக்கொண்டு தனையெடுத்து கிட்டிகட்டிப்பிழிந்துதன்னை, நிம்பியிடுஅரன்பிசப்பலமுமஞ்சு நிரம் பிட்டுஒட்டியெரிக்குழம்பதாக, நம்பியெடுகல்வமிட்டுஅரைநேர்சாம ம் நாடிபெடுமெழுகாகு நாட்டுளோர்க்கே. ௯௱௪

எண்ணை.

ஈரவெங்காயமது கழற்சிக்கொட்டை யிலைபிடித்துஇரண்டெ டையும்படியுமிட்டு, காரமுள்ளமுத்தெண்ணைபடியுமொன்றுகருத்த றிந்ததந்திவிரைபலமுங்கால்தான், கோலமுள்ளரசமெழுகு பலமுங் கால்தான் கூட்டியெரிவடிகட்டிப் பூசைசெய்து, பாரமுள்ளயெண் ணைபதுபணமும்வீதம் பாச்சிடநோய்தீரும்பரிசுகேளே. ௯௱௫

பாரிந்தயெண்ணைதனைமூன்றுபோது பாச்சிடவேபாரிசமாஞ்சூ லையெல்லாம், சாரியந்தப்படியோடுமேகமெல்லாந் தாக்கிநெய்யடிப டுங்காண்மகோதரங்கள், கூறிந்தப்படிபோகும்வாதமெல்லாங்கொள் ளையதுசொண்டாப்போ லோடிப்போகும், சோரிந்தமேகவெட்டை நீர்களெல்லாஞ் சுவரிடுங்காண்வாயுவெல்லாம்சூட்சமாமே. ௯௱௬

சுவறிடுங்காண்பௌத்திரங்கள்மூலரோகஞ் சொல்லரியநீரும்ப ல்துடிகள்போகும், கவறதுபோலாகிவிடுமெண்ணைப்போக்குகைகண் டுபோகரிஷிகருத்தில்வைத்து, தவறிடாதெனக்குரைத்தார் லோகத் தோர்கள் தான்பிழைக்கச்சொன்னதிந்த மார்க்கந்தன்னை, எவரிடத் தில்சொல்லாதே புளிப்புதள்ளு இனமாகவுண்டவர்க்கு பிணிகள் போமே. ௯௱௭

காரிநாகபதங்கம்.

காரியெடைசேர்த்துமே கூடச்சேர்த்துக கரண்டியிட்டுயிலுப் பைநெய்யிலுருக்கிமெள்ள, சாரியிட்டுப்பத்திரண்டுதாமுஞ்சாச்சிசரி ...வகரண்டியிட்டுவுருக்கிமெள்ள, கூறிபதோர்சூதமிட்டு வருக்கத்

சானேநாற்றமறமுன்னெண்ணையிறையவிட்டு, பரிபிதுபத்துமதுயெ
ரியவிட்டுப் பாகமதுயெடுத்துநிறையிடைபோகாதே. ௩௫௮

போகாதேஅன்னமிட்டுவுடைத்துஅன்னம் பூட்டியரைவில்லைக
ட்டுகிடத்திவிட்டு, பாகமாயெரித்திடவேயுயரவேறிப்பார்த்திடவுமெ
டுத்துவைத்துவடியில்நின்ற, சாகமாய்வில்லையைசோறுவிட்டுத் தா
க்கியேவில்லைகட்டிப் புடமுன்றிட்டால், நாகமாம்வில்லையதுசிவந்து
போகும் நாதாக்கள்சொன்னதிந்தநாட்டந்தானே. ௩௫௯

எறிகின்றசூதமிடை புகைநீர்விட்டு எரியழலிற்றயனனிடமவை
த்துப்பாரு, கூறியதோர்காளாஞ்சிவந்தவில்லை கூட்டியரைகடமிட்டு
எரிநேர்ப்பாக, மாறியெடுசிவந்துநிற்கும்ரவியில்நீறு மயமாகத்தாக்கி
டவேயொன்றதாகப்,பாரியதுஓமமதுபத்துமாகும் யாலித்தாரிஷிபோ
கர் பண்பதாமே. ௩௬௰

தேனிலிடுசகலநோயெல்லாந்திருஞ் செங்கதிருமேனியதுஇரு
புபோலாம், வானிலேயிப்பாகம்பொய்யோவென்றால் வண்மையுள்ள
ஆண்டவனும்பொய்யதாகும், ஞானிகளுக்கிவ்வேதை யெறக்கமிட்டு
நாட்டிலுள்ளநல்லவர்கள்செய்துகொள்வார், கூறுநீமிருதவர்கள்செ
ய்யமாட்டார் கொட்டிரைமெய்போகர்குணமிதாமே. ௩௬௧

மகோதரத்துக்கு.

வீரமுடன்பதங்கபற்பம்பலமும்மூலு வீதமிடைமிளகுசுக்குதந்
திகூட்டி, டாரமுள்ளநெல்லிமுள்ளிகடுக்காய்நேருய் பார்த்துஅரைபு
கைநீருற்சாமம்ரண்டு, கோரமதாயுத்தியளவாகவுண்டை கொடுத்து
விடுமகோதரங்கள்முப்பத்தொன்றும், நேரமில்லையோடிவிடுநிமிஷந்
தன்னில் நிச்சயமாபோகரிஷிநேர்சொன்னரே. ௩௬௨

நல்இரும்புவோடைபாஞ்செம்புநேரே நாட்டியரைபொடியாக
குகையிலிட்டு, மெல்லவதையுருக்கியிடப்புட்டுபோலாம் விரும்பியெ
டுரண்டுமுக்கால் நாத்தஞ்சூடன், செல்லநிறுவிரண்டுமரைநிறுத்துக்
கொள்ளு சிறுகவதுவீரமதையிரண்டுகாலாம்,சொல்லவிந்தவைந்துட
னேநிறுத்துக்கல்வஞ் சுருதியுடன்பாணிவிட்டுஅரைத்துக்கொள்ளே.

அரைத்துவில்லைபங்கிபிடுபத்துந்தாமம் அதின்பெருசயமக்கினி
யதைநிறுந்து, வரைத்துபலமொன்றுநிறு வெவ்வேறு வகைகடுகுஓம
மொடுசிறுதேக்காகும், நிறுத்துஎடு ஆனைத்திப்பிலியிந்துப்பு நேரான
கோஷ்டமொருவகைக்குவொன்று, அரைத்துநிறுகாயங்கால் வசம்பு
காலாங் குணமானகடுகுபொடி-அரைப்பம்போடே. ௩௬௩

அயக்காந்த லேகியக்குளிகை.

சங்குநிறம்மீறியதோர் சீனச்சுன்னஞ் சாதகமாயெடுத்துநேரே துடிசாற்ற கேளு, இங்கிதமாய்வன்னிரசம் உப்பிலிட்டு இதமாகயெரித்திடவேபதங்கமேறும், துங்கவதையெடுநிறுத்துமுன்சுன்னவைத்து சுகமாகச்சேர்த்துகல்வமீதிலிட்டு, சங்கைபடப்பழச்சாற்ருற்சாமமாட்டிச் சதுருகக்கிடத்திலிட்டுமூடிக்கேளே. ௬௪௫

மூடியதைச்சீலைசெய்து எரிநால்சாமம் முத்தியதையெடுத்துமண்டலமேயுண்ண, கோடியநோயெல்லாங் குஷ்டம்போகுங் குணமாகும்வாதவெடிசூலைபோகும், நாடியதுமகோதரமுப்பதாகும் நாட்டிலுள்ளநீர்ழிவுநடுங்கியோடும், வாடிமுகங்கனலிகண்ட விருள்போபோலாகும் வகையாகபோகரிடிசொன்னர்தாமே. ௬௪௬

பாஷாணக்கட்டு.

வச்சிரத்தின்பாலாழாக்குப் பீங்கானிலிட்டு வசமாகமுற்றிவெள்ளைக்கருநேரிட்டு, தச்செயலாய்த்திரிநாள்வைமூரிந்துநீராந்தகைமைபெறமலிகொல்லியோட்டிமிட்டு, வைச்சபடிமுன்னீரால்சுருக்குயிட்டு வகையாகநாற்சாமம்போட்டுத்தீரு, உச்சிதமாயண்டமென்றசுண்ணங்கட்டி யூரறியப்புடமிடவேகட்டுந்தானே. ௬௪௭

கட்டுநின்றபாஷாணங்கரியிலாடுங் காதலாயெடுத்ததைதவைத்துக்கொண்டு, வெட்டுநீவெள்ளீயநூற்றுக்கொன்று விரும்பியிடுரெசிதமாநீர்களற்று, தட்டுநீநாதம்வரும்கடையில்விற்று தகமையுள்ளஞானத்தைத்தரித்துக்கொள்ளு, பட்டுநூற்சாய்ம்போற்பாகம்பாரு பதிவானபோகரிஷிபாலித்தாரே. ௬௪௮

சடைக்கஞ்சாபலநூறுசட்டியிட்டுச் சலம்விட்டுத்திரிநாள்வையவெம்பிவாங்கி, திடமாகப்பின்னுமொருசட்டியிட்டுச் சீருவின்பால்படியுப்பாணிநேரே, விடையாகவிட்டெரிநீகோணியிட்டு விதமாகப்பிழிந்துரசம்வாங்கிப்பின்பு, கிடமிட்டுஆவினெய்சிறுகவிட்டுக் கிருபையாய்வைத்துநீபகரக்கேளே. ௬௪௯

சக்கரையின்சுக்கேலமிளகுமஞ்சி சாதிக்காய்பத்திரியுங்கிரும்புகோஷ்டம், மிக்கஅதிமதுரமுடன்அமுக்குருவும் விதமானவால்மிளகுசகசாவும், தொக்கவகைபலமிரண்டுதட்டியிட்டுச் சுருநியெனும்பாலிலிட்டுப்பாகாய்க்காச்சி, பக்கமுளமுன்ரசத்தை பதிலேயிட்டுப் பாகமாயிறுகபதம்பார்த்துக்கேளே. ௬௫௦

பார்த்தெடுநீசாருயங்கேளுமிட்டுப் பகமாகவூந்தியளவாகச்செய்து, சாற்றிடுவாயொருகுளிகைகொடுத்துப்பாரு சதுரத்தில் வசனமுகற்பேதிநிற்கும், காததுநல்லமூலத்திற்கிறுணிநல்ல கடிதான செறியாமைவாந்திநிற்கும், போற்றியேதேகத்தைப்பார்த்துத்தாக்குபுகலரியபோகரிஷி புகன்றிட்டாரே. ௯௫௧

போகர்சீனபதியில் வெள்ளைமனுஷர்பிரதாபம்.

புகன்றிட்டாரின்னமொருகருமானங்கேள் புகழானபோகரிஷிகீர்த்திமார்தம், தகன்றிட்டசீனபதி சென்றுயானும தாழ்வாகுளிகைகொண்டுபூமிதன்னில், மகின்றிட்டியானுமங்கேயிரங்கிப்பார்த்தேன் மனிதருடபிறந்தானுமேகவெளளை, பகின்றிட்டநிறமதுதான்வெள்ளையாகக் கண்டேனேபெண்களுடரூபந்தானே. ௯௫௨

தானனரூபமது வெண்மைகண்டேன் தாக்கானதரணியெல்லாம்சுத்திவந்தேன், கோனனபெண்களெல்லாம்வர்ணபேதம்குணக்குறிகளனேகமதாய் தோற்றங்காணும், வேனனசீனபதிப் பெண்களெல்லாம் மேன்மையுடன்றானிருக்கக்கண்டேன்யானும், பானனகாரமதுபூமிதன்னால் பாங்கியர்களெல்லவரும்வெண்மைதானே. ௫௩

வெண்மையாம்பெணகளுடன் போகஞ்செய்தேன் வேதாந்ததாயினதுவருளினாலே, கண்மையாம்காலாங்கி தனைநினைந்து களிப்புடனேயிந்திரபோகஞசெய்தேன், தண்மையாம்பதினெட்டுத்தொப்பிக்காரர் தாரணியிலவதரித்தார் புகழ்ச்சிமெத்த, உண்மையாமானிடர்கள்பிறந்தாரப்பா வுற்பனமாம்கோடிவித்தைபெற்றோர்தாமே. ௯௫௪

தாமேதான்சவுக்கார வழலைசெய்வார் தகைமையுள்ளகண்ணாடிகாய்ச்சுவார்பார், போமேதான்பூநீரைசுண்ணம்பாக்கபுத்தியுள்ளமாந்தரப்பாசீனதேசம், கமேதான்மற்றதோர் தேசமெல்லாம் கருவளையல்பூநீரைக்காய்ச்சுவார்பார், நாமேதான்போகரிஷி கண்டமார்க்கம் நாதாக்கள்கைமறைப்பும் வெளியிட்டேனே. ௯௫௫

வெளியிட்டேன்கோடியுகவித்தையெல்லாம் வேணபடியுபதேசஞ்செய்தேன்யானும், பளியிட்டயெங்களுக்குசாபமில்லை பாருலகில்சித்தர்முனிகைமறைப்பை, நெளியிட்டவெள்ளையென்ற மனிதருக்குநேர்ப்புடனேகாட்டிவிட்டேன்காரணத்தை, துளியிட்டதேசமெங்குஞ்சுற்றிவந்தேன் சூட்சாதிசூட்சமெல்லாந்திறந்திட்டேனே. ௯௫௬

திறந்திட்டேன்வெள்ளையென்ற மனிதர்நீக்கி செப்பவில்லைகருநீ லமாந்தருக்கு, குறைந்திட்டவித்தையெல்லாம்கூறவில்லைகொட்டின ல்மோசமதுவாகும்பாரு, முறைந்திட்டசாஸ்திரங்கள் சாபமெய்தும் மோட்சமென்றவீடில்லை நரகம்போவார், வரைந்திட்டவாக்கியங்கள் பிசகாப்போகும் வாகுடனேபோகரிஷிபாடினேனே. ௬௫௭

காந்தச்செம்பு.

பாடினேனின்னமொரு கருமானக்கேள் பாருலகில்சித்தர்முனி கூறுமார்க்கம், நீடியதோர்காந்தமதுபலமோவைந்து நேறானவெண் காரம்பலமோவைந்து, கேடியதோர்பூநீறுபலமோவைந்து தெளிவா னகெந்தியதுபலமோகால்தான், கூடியதோர்சரக்கெல்லாமொன்றாய் ச்சேர்த்து குமுறவேகுழிக்கல்லிலபோட்டிடாயே. ௬௫௮

போடவேதேனதுவும் விட்டுமைந்தா பொங்கமுடன்றானரைப் பாய்சாமம்நாலு, நீடவேவச்சிரமாங்குகையில்வைத்து நேர்ப்புடனே நிலவிட்டுச்சீலைசெய்து, கூடவேரவிதனிலே காயவைத்து குணமாக வுலையில்வைத்துவூதிப்பாரு, வாடவேகாந்தமதுசத்தேயாகும் வளமா கசததெல்லா மெடுத்துக்கொள்ளே. ௬௫௯

கொள்ளவேகாந்தமென்றசத்துதன்னைக் குமுறவேமறுபடியுமூ சைக்கேற்றி, விள்ளவேதானுருக்கியெடுத்துப்பாரு வீரானமணியது வாய்வுருகிநிற்கும், மெள்ளவேசத்தெடுத்துக்கல்வமிட்டுமேன்மைபெ றவாழவைகைசெபநீர்தன்னால், துள்ளவேதானரைப்பாய் நாலுசாமம் துறையாகதானெடுத்துரவியிற்பூசே. ௬௬௦

பூசவேசெம்பென்றதகட்டில்மைந்தா புகழாகபத்துக்கு வொன் றேயாகும், காசென்றதுட்டின்மேல்பூசிப்பூசிக் கனமாகரவியில்வைத் துப்புடத்தைப்போடு, மாசென்றபுடமதுவும்பத்தேயாகு மகத்தான செம்பதுவுமுறலேகும, பாசென்றகளிம்பதுவுமற்றுப்போய் பளிங்கா னதம்பாக்குநிறமபோலாமே. ௬௬௧

நிறமானசெம்பதுவு மொன்றேயாகும் நிறையான வெள்ளியது வொன்றேயாகும, திறமானதங்கமதுவொன்றேயாகும் திடமுடனே நூனைச்சிட்டுவுருக்கித்திரு, பரமானசரக்கதுவு மொன்றாய்ச்சேர்த்தி பளபளத்தவர்னமதுகாந்திமெத்த, உறமானமாற்றதுவு மெட்டதாகு முத்தமனேபோகரிஷி யுறைத்தவாறே. ௬௬௨

வாறானபொன்னதுவும்வாரடித்துவளமுடனேபூங்காவிதன்னிற் போடு,மாறானமாகியதுநீங்கியேதான்மகத்தானபசுமைநிறத்தங்கமா

கும், காருனகடைத்தங்க மிதுக்கொப்பாமோ கடந்தமுனிசித்தரிஷி செய்யுமாற்கம், பேருனகாலாங்கியடிவணங்கி பேருலகில்மாந்தர்கட் காய்செப்பினேனே. ௬௬௩

செப்பினேன்நாதாக்களருமைவித்தை செகத்திலேபாராலுங்கூறப்போமோ, ஒப்பவேமனோன்மணிபாள் பாதம்போற்றி ஒழுங்குடனேசிதாபாசந்தனைநீக்கி, தப்பவேபூரணத்தைமனதிலுன்னி சதாகாலம்நிருவாணிமுன்னதாக, மெப்புடனேபராபரியை மன்னிப்பாக மேதினியில்தவசிருந்துநாளைப்போக்கே. ௬௬௪

போக்கவேதுஷ்டருடன் கூடவேண்டாம் பொலிவானவுளவையெல்லாங்காட்டவேண்டாம், தாக்கமுடன்சோம்பருடன்கூடிவார்த்தை துறைமுறைகள் யாதொன்றுங்காட்டவேண்டாம், வாக்கிலுள்ள சித்தர்முனிரகசியத்தை வளப்பமுடன்விருதாவில்கொட்டவேண்டாம், நோக்கமுடன்றுனிருந்து பொருளாராய்ந்து நொடிக்குள்ளேகாயசித்திக் கிடமுந்தேடே. ௬௬௫

வசியமை.

தேடயிலேயின்னமொருமாற்கம்பாரு தெளிவானமையொன்று செப்பக்கேளு, நீடயிலேவழுகண்ணிதொழுகண்ணியாகும் நீடானநீர்மேலினெருப்புமாகும், கூடயிலேபசளையாங்கரும்பசளையாகும்குறிப்பானவாள்காட்டினிலையுமாகும், வாடையிலேஅழுஞ்சியென்றமூலியாகும் வகுப்பானகருமூலிஇருள்மூலியாமே. ௬௬௬

மூலியாம்பேய்மிரட்டி முசுட்டையாகு முகிழானகருந்தும்பைவிளாத்தியாகும், வாலிவாம்கருடனிடமூலியாகும் பாங்கானகருங்குவளைபொன்முசுட்டை, வேலியாங்கருமூலிச்சாறுங்கூட்டு வெடிப்பானமாதளையின்பாலுங்கூட்டி, கோலியாம்கழற்சியிடமூலிதானும்குணமானபசுமூலிபுன்னையாமே. ௬௬௭

புன்னையாமேரண்டமிரண்டதாகும் புகழானநரிமிரட்டிமூலிதானும், மன்னையாம்பேய்மூலிதிகைப்பூண்டாகு மயமானவரளையுடனூமத்தையாகும், தொன்னையாங்கடம்பையுடன் முதிபார்கூந்தல் தோரானவாள்மிரட்டிமூலிதானும், பன்னையாங்கருங்காலி சாறையாகும் பாங்கானதிமிர்க்கோட்டான் மதிப்பூண்டாமே. ௬௬௮

பூண்டானகூத்தனிடகுதம்பையாகும் புகழானநன்னாரிமூலிதானும, நீண்டாதவாடுதின்னாப்பாளைதானும திறமானகருங்கோவைசி

வநூர்வேம்பு, கூண்டானமரமல்லிசெவ்வல்லிதானும்கொடிதானமை யூரின்கிகைதானுகும், தூண்டானமூலியிட சாறுவாங்கி துறைபோல மையெடுக்கும் வகையைக்கேளே. சுசுகூ

கேளேநீசாரெல்லாமொன்ருப்க்கூட்டி கீர்த்திபெறசீலதனிலூட்டிமைந்தா, பாளேதான்போகமல்காயவைத்துப் பாங்குபெறசீலதனையுருட்டிபேதான், மீளேதான் அமுஞ்சிபிட தயிலத்காலேமிகமை பெறதானனைத்துக் கொளுத்திப்போடு, கிளேதான்பீங்கான்வைதயிலம்வீழும் கிருபையுடன்றனெடுத்துவகைகையைக்கேளே. சுஎ0

வகைபானவாங்கையுட பிச்சுதானும் வலுவானசெம்போத்துப் பிச்சுதானும், பகைபானவல்லூறு பிச்சுதானும பாங்கானகரட்டோணுன்பிச்சுதானும், தகையானவாயசத்தின்பிச்சுதானும தடிப்பானசாரையுடபிச்சுதானும், முகையானகாடையுட பிச்சுதானும் மூர்க்கமாங்கருங்குருவிபிச்சுதானே. சுஎக

பிச்சானமீன்குத்தி பிச்சுநானும் பேரானதேவாங்குபிச்சுதானும், முச்சானகருங்குரங்குபிச்சுதானும்மூபலானநாரையுட பிச்சுதானும், இச்சானமாடப்புருபிச்சுதானும கெடியானபூனையுட பிச்சுதானும், நச்சானபாமபரணி பிச்சுநானும் நலமானகருஞ்சாரை பிச்சுமாமே. சுஎஉ

ஆமேதானித்தனையுமொன்ருய்க்கூட்டி அப்பனேபுனுகுடனே பச்சைப்பூரம், போமேதான்கோரோசனைகுங்குமபபூ பொலிவான சவ்வாதுதானுங்கூட்டி, காமேதான்கஸ்தூரிவாடைதானும் கருவானமுதற்றிட்டுச்சிலேயோடு, வேமேதான்வழிஞ்சியிட தயிலத்தாட்டிவிருப்பமுடன்பரணிதனில் பதனம்பண்ணே. சுஎஙு

பண்ணேவேமையதனையெடுத்துக்கொண்டு பதிவானவுருவுதனையேற்றியேதான், திண்ணமுடனஞ்சனேயர் வுருவைமாட்டித் திகழுடனேலட்சமுருபோட்டுக்கொண்டு, வண்ணமுடன்லலாடமதில் மையைத்திட்டி மயங்கிடவேலோகமெல்லாம் வசியமாவார், நண்ணமுடன்ராஜாதிராஜர்தாமும் நாட்டிலேசித்தர்களுமவசியமாமே. சுஎச

வசியமாமஷ்டசித்து மிதனுலாகும் வளமானமோகனமு மிதனுலாகும், வசியமாம்ஸ்தம்பனமு மிதனுலாகும் வாகானசருவுகளுமிதனுலாகும், வசியமாம்பேதனமு மிதனுலாகும் மகத்தானகிரியைமுதவிதனுலாகும், வசியமாமுச்சாடண மிதனுலாகும் மார்க்கமுடனருமாற்றமிதனுலாமே. சுஎரு

ஆமேதான்சித்தர்முனி செப்யும்பாகம் அடவாகப்பலநூல் மாராய்ந்தேதான், நாமேதான்காலாங்கிநாயர்பாதம நாட்டமுடன்ருள் பணிந்துநவிலலுற்றேன், வேமேகாணிக்கருவைவெளிவிடாதே விட்டாலேவெகுமோசமாகும்பாரு, நாமேதான்சொல்லுகிறேம் யாணை மாற்கம் நாதாக்கள்பிடிவாதம்நவில்வோம்பாரே. ௯௭௬

பாரேதான்குருவாணைசுவாமியாணை பராபரியாள்தன்னாணைசிவனாணை, சீரேதானுமையாணைவும்பராணை சிவாலயங்கள் தன்னாணை தேவியாணை, கூரேதான்குருவாணைகணேசனாணை குறுப்பானகணணனிடவாணைகண்டீர், நேரேதான்சித்தரிடயாணைகண்டீர் நெறியான முனிரிஷிகளாணையாமே. ௯௭௭

ஆமேதானாணைபதை கடக்கவேண்டா மப்பனேசாமமது யெய்தும்பாரு,நாமேதானசொல்லுகிறேம்ரிஷிகள்போக்கு நன்மையுடனுபசாரஞ்செப்யவேண்டும்,வேமேதான்மன துவரநடக்கவேண்டும் வேதாந்தத்தாயின துவருளவேண்டும்,போமேதான்கற்பமதுகொள்ளவேண்டும் பொலிவானநன்னடக்கைவேண்டுந்தானே. ௯௭௮

தானனரிஷிகளிடபதாம்புயத்தைச் சதாகாலஞ்சிரசின்மேற்றாங்கவேண்டும், கோனனசாபத்திற்கிடங்கொடாமல் குருநிந்தையணுகாமலிருககவேண்டும், பானல சித்தர்முனிதங்களுக்குப் பட்சமுடன் மன துவரநடக்கவேண்டும், மானனசாத்திரத்தையாருக்குந்தான் மானிடரே கொடுத்தாக்கால்தீமையாமே. ௯௭௯

தீமையாந்தலைபதுதான் வெடித்துப்போகும் திசழானசாபமதுமேவும்பாரு,சாமையாங்கோபமதுவதிகமாகசண்டாளதுரோகியென்றுசபிப்பார்சித்தர், ஊமையாமூடனென்றபெயர்தானுகு மூர்க்கமுடன்கானுனைப்பார்வதீதமெத்த, ஆமைபோலுறுப்பெல்லாந்தானடக்கி அவனியிலேவாழுவதுமதிதங்காணே. ௯௮௦

காணவேநல்லவழிபோகாவிட்டால் கடிந்துரைப்பார்சித்தரெல்லாம்நாள்கடோறும்,மாணவேசாபத்துக்கிடமுண்டாகு மாற்கமுடன்யாதொன்றுங்காட்டவேண்டாம், வேணவேசூத்திரசாத்திரங்களெல்லாம் விள்ளாதகைமறப்பு வளவுசொல்லி, நாணவேமுப்பூவுக் குறவுஞ்சொல்லி நாதாக்கள்தாமெனடுக்கும்வகையைத்தேடே. ௯௮௧

பூநீறுக்குபூமிகளம்.

தேடையிலேபூம்பாறையாணைக்கல்லாம தேசத்தில்சோழனிட நாடேயாகும், ஓடையிலேவிராலியிடமலைதானுகும் வுத்தமனேதிருப்

பாண்டிக்கோட்டையாகும், மேடையிலேநாகார்ச்சன்மலையுமாகும் மேலா
னநாமக்கல்பாறையாகும், வாடையிலேசுவாமியிடமலைதானாரும் வள
மானகரசிந்தியோரமாமே. ௯௮௨

ஓரமாமகர்மதாபூமியாகு முத்தமனே திருமாளிநகரமாகும், கார
மாமுகவைபதிகடலோரந்தான்கரியானபூமியிடம்படிக்ககல்லாம், தூ
ரமாம்பரபர்னிஸ்தலமுமாகும் தூக்கானவேகவதிதீர்த்தமாகும், பா
ரமாம்சித்தூராமாக்கடாகும் பசுமலையுந்நீரெடுக்கப்பதியுமாமே. ( )

பதியானகங்கைநதிக்கடலோரஞ்சான்பாங்கானவளர்பூமிதேசம்
யாவும், நதியானவால்மீகர்பாளந்தன்னில் நயமானஇடப்பாகம் புத்த
ருண்டு விதியானசித்தர்முனியிருக்குந்தானம் வினைதவதியாரொன்
றுகம்பமொன்று, சதியானமிருகங்களிருக்குந்தானம் சதகோடிசூரிய
ர்போல்ரிஷிகள்பாரே. ௯௮௪

பாரேதான்கல்லானைவாசஞ்செய்யும் பனிமூடும்தேசமது பகர
ப்போமே, நேரேதான்சுனையொன்றுமலையுண்டுண்டு நெடிதானபூ
மியெல்லாமளறேயாகும், சீரேதான்பாலைநிலமென்பர்சித்தர் சீர்பாத
ம்பட்டாலே வெந்துபோகும், ஊரேதான்பூண்டிருதலில்லையப்பா வு
த்தமனேகாரமென்றபூமியாச்சே. ௯௮௫

சுண்ணமென்றபூமிதனில்பூநீரப்பா சுருதியுடன்றனெடுத்துமா
ண்டார்கோடி, அண்ணலென்றவாவடையார்கோயிலுண்டு அதன்பக்க
மெண்ணாயிரகாதமப்பா, கண்ணபிரான்றானிருக்கும்கோயிலுண்டு க
டுந்தூரமானிடர்கள்செல்லமாட்டார், தணணமுடன்மகாகோடிமுனி
வர்சித்தர் சதாகாலவாசமதுசெய்வார்தானே. ௯௮௬

தானானகோபில்குளமதிகங்காணும் சாக்கானமானிடர்கள் கா
ணாதேசம், பானானவூர்வனமுமில்லாத்தேசம் பாழானமலைகுகைகள்
கண்டோரில்லை; தேனானதேன்விளையுங்கதண்டிக்காடுதெற்கானதேச
மதுகள்ளர்நாடு, மானானவழகர்மலைபுத்தூராகுமகத்தானவைகைநதி
பூமியாமே. ௯௮௭

ஆமேதானத்திநகராசீர்மந்தான் அயோத்திநகரசற்றீரங்கரை
தானாகும், வேமேதான்விலாடபுரிகுகையோரந்தான்வெளிக்காடுபூமி
யெல்லாமளறேயாகும், நாமேதான்கண்டபடி மின்னஞ்சொல்வோம்
நாதாக்கள்தானெடுக்கும் வளமுஞ்சொல்வோம், போமேதான்பொ
ன்னகரமேருபக்கம் பொலிவானஸ்தலமுண்டுபுகலக்கேளே. ௯௮௮

கேளேதான் ஸ்தலமதுவும் தேவதாஸ்தானம் கெடியானகோபுர முந்தங்கமாகும், காளேதான் விக்கினங்கள் தங்கமாகும் கடலானமதி லெல்லாம்தங்கமாகும், ஆளேதான்கண்டறியா தேவதானம் ஆஸ்தா னமண்டபமுந் தங்கமாகும், மீளேதானவாகனங்களெல்லாம் தங்கம் மெழிலானபூமியெல்லாந் தங்கமாமே. ௬௮௯

தங்கமாம்தேவரதம்தங்கவர்ணம் தனியானபிரதமைகள் தங்கமா கும், அங்கமாலட்சுமியும்வாசஞ்செய்வாள் அந்நகரங்கண்டவர்களா ருமில்லை, புங்கமாஞ்சித்தர்முனி ரிஷிகள்தாமும் பொலிவானகூட்ட மெத்தகோயிலுள்ளே, சிங்கமுடன்கோபுரமாம்வாசல்தன்னில் சிறப் புடனேகாவலதுகண்டேன்பாரே. ௬௯௰

கண்டேனேவன்னகரஞ்சிலதுகாலம் கவனமுடன்குளிகையது பூண்டுகொண்டு, அண்டரண்டமுடையதொரு கோபுரத்தில் அப்ப னேயான்சென்றுபார்த்தபோது, திண்டமுடனவ்விடத்தில்ரிஷிகளப் பாதேவாதிகோஷ்டமுடன் தியானஞ்செய்வார், தெண்டமுடனவ ரைக்கண்டபோது திடுக்கிட்டுமனங்கலங்கித்தியங்கிட்டேனே. ௬௯௧

தியங்கிட்டுவெடிபேனும் காலாங்கிதன்னைத் தியக்கமுடன்தானி னைத்துவிழித்துப்பார்த்தேன், மயங்கிட்டவெந்தனையும்ரிஷிகள்பார்த் து மனமிறங்கிதீரமுடன்வதீகஞ்சொன்னார், நயங்கிட்டவெந்தனையும் யாரென்றுகேட்கத் தாழ்மையுடன்சிரங்குவித்து வணக்கஞ்சொன் னேன், நயங்கிட்டுவெடிபேனும்குளிகைபூண்டு நாட்டமுடன்பூவிலையு ம்தேசம்வந்தேன். ௬௯௨

வந்தேனேபூமிவளங் காணவந்தேன் வளமையுடன்நாதாக்களி டுக்கும்ஸ்தானம், சந்தேகமில்லாதவனந்தனும் சார்புடனேமலைக்கு கைகள்யாவும்கண்டேன், தொந்தமுடன்நதிக்கரைகள்யமுனையாவும் தோருமல்குளிகைகொண்டு சுத்திப்பார்த்தேன், எந்தனிடதைரியங் கள்மிகவுமாகி பேசினேன்பொன்னகரங்காணத்தானே. ௬௯௩

காணயிலேதேவஸ்தானபெருமைகண்டேன்கைலங்கிரிவாசகங்க ளிதற்கிடல்ல, வேணவேவதிசயங்களெல்லாம்பார்த்தேன்விளைகின்ற பூசீரும்காரமெத்த, தோணவேமானிடர்களெடுக்கமாட்டார் தொலை தூரதேசமுந்தொடரமாட்டார், மாணவேவந்தாலுமாண்டுபோவார் மகிதலத்தில்சித்தருட தேசந்தானே ௬௯௪

தேசத்தைக்கண்டாலுமாண்டுபோவார் செரிசித்தால்சித்தர்களு ஞ்சாபஞ்சொல்வார், பாசத்தைவிட்டொழித்துவந்திட்டாலும்பதை பாமறகாரத்தால்சாவார்தாமும், வேஷத்தைபோட்டுமல்லோ வீணர்

கூடி வெகுவெகுவாய்வளம்பார்ப்பார் கோடிகோடி, நேசத்தைவிட் டொழிபார்மாய்கைபாலேநெடுந்தூரஞ்சொல்லார்கள்சண்டிமாடோ

மாடானசண்டிகளைவிட்டுநீங்கி மார்க்கமுடன்குளிகைகொண்டு பார்க்கவந்தேன், காடானவனுத்திரங்கள் குகைகள்கண்டேன்கனம னசித்தரிடமார்க்கம்பார்த்தேன், கோடானகோடிமுறை யாவும்பார் த்தேன் குறிப்புடனேபொன்னரமகண்டுவந்தேன், சேடானுபகவா னால்சொல்லலாகா சிறப்பானபொன்னகரங்கண்டேன்தானே. ()

கண்டேனேசதாசிவத்தின்கோயில்கண்டேன்கைலங்கிரிவாசரை யான்கண்டதில்லை, தெண்டுசெய்யும்ரிஷிமுனிவர் பாதங்கண்டேன் தோராதவர்ச்சனைகளயாவும்பார்த்தேன், அண்டரண்டசராசரங்களி தற்கீடல்ல ஆதிசேடன்றன்னாலுங்காணலாகா, தெண்டமுடன்மேற புரவாசல்வந்தேன் தேவரிஷியென்றொருவர்முனிகண்டேனே. ௲௲௭

முனியானரிஷிசித்தர்யானுங்கண்டேன் மூலஸ்தானப்பெருமை கோயில்கண்டேன், தனிபானவடவாசலசேர்வைகண்டேன் தாக்கா னபொன்கோபுரவாசல்கண்டேன், தொனியானவாத்தியங்கள்வழங்க க்கண்டேன் தோராதகண்ணபிரானுஞ்சலகண்டேன், இனியானக டாகங்கள்படிகளெல்லா மியலானதங்கமதுவர்னமாமே. ௲௲௮

ஆமேதான்வண்ணங்களெல்லாம்பார்த்தேன் அதறகப்பால்பூமியி டநாதக்கண்டேன், தாமெதானின்னகரம்பூநீரப்பா தாக்கானசித்த ர்களுங்கண்டமாற்கம், போமேதான்முந்நூறுகாதந்தானும் பொலி வானபூநீறுவிளையும்பூமி, நாமேதான்கண்டுவந்தோம்பூநீர்தன்னை நா ட்டிலேகண்டவர்களில்லை தானே. ௲௲௯

தானேதான்கண்டமட்டுங்குளிகைகொண்டேன் தபவுடனேமா னுக்கள்பிழைக்கவென்று, நானேதான்சித்தர்முனிசொன்ன நூலை நல முடனேயாமுப்த்துவளமுங்கண்டு, மானேதான்தேர்ந்தெடுத்தேனிக் கதேச மகத்தானதேசங்களிதற்கீடல்ல, பானேதான்முன்சொன்ன தேசமெல்லாம் பாங்கானபூநீறுக்காதிபாச்சே. ௭௱

பூநீரெடுக்கவிதி.

ஆச்சப்பாபூநீறுயெடுக்குமார்க்கம் அப்பநேவிதிசொல்வேன்மதியா ய்க்கேளும், பேச்சப்பாசித்தருடசாத்திரத்தில் பிறட்டாககைமறப

புவதீநமெத்த, காச்சவேபூநீறையெடுக்குஞ்சைசகைகருவாகச்சொல்ல வில்லைசாத்திரத்தில், பாச்சலுடன்காலாங்கிவையர்பாதம் கருணையுட ன்குருள்பணிந்து கூறுவேனே. ௭௱௧

கூறுவேன்பங்குனியாம் பருவந்தன்னில் குறிப்புடனே நாதாக் கள்சொன்னமாற்கம், மாறுபடுபேதனங்கள் கண்டாராய்ந்து மகிதல த்தில் பூநீறுகாய்க்குங்காலம், வேறுடனே ராக்காலஞ்சாமம்மத்தி வி ருப்பமுடன்காட்டகத்தேசென்றுமேதான், காறுடனேகாடெல்லாம் திரிந்துபார்ததால் கதிரானபூநீறுபூர்க்குந்தானே. ௭௱௨

பூர்க்குமேபூநீறுகதிர்போலாகும்பொங்கமுடன்குனெமும்பிமல ர்போல்வீழும், நீர்க்குமேவிடியநற்சாமந்தன்னில்நிலையாதுபூநீறுகார ம்போச்சு, தீர்க்கமுடன்காரமதுயில்லாட்டாலும் தெளிவானபூநீறை வாரிவந்து, மார்க்கமுடன்குன்கரைத்துதெளிவிறுத்துமயங்காமல் தீ ட்சையதுபத்துசெய்யே. ௭௱௩

செய்யவேயின்னமொருவயணங்கேளு செழிப்பானசித்திரையா ம்பருவகாலம், பையவேபூரணையாம்பட்சந்தன்னில்பாங்கானநடுச்சா மவேளைபார்த்து,மெய்யவேபூநீறுவிளையுமாற்கம்மேன்மையுடன்கண் டறிந்துயெடுக்கும்போது, தொய்யவேதேவதையின் பூசைவேண்டுந் தோராமல்வட்சரத்தைமாறிக்கொள்ளே. ௭௱௪

கொள்ளவேதீட்சைவிதிமார்க்கந்தன்னை குறிப்பாகத்தான்செய் துமுடிப்பாயானல், எள்ளளவுங்கோளாறுநேராதப்பா என்மகனேகு ருமுடிக்கும்வகையைத்தேடு,விள்ளவேபூமியிடவளமுஞ்சொன்னேன் விருப்பமுடன்நாதாக்கள் துறையுஞ்சொன்னேன், மெள்ளவேபெண் ணூலேழாயிரந்தான் மேன்மையுடன்கண்டறிந்துயோகந்தேடே. ()

தேடையிலேபோகரிஷிசொன்னமாற்கம் தெளிவாகயாருந்தான் சொல்லாரப்பா, நீடையிலேவாசனத்துக்குறுதிசொல்வேன் நெடிதா னமான்தோலாசனந்தானகும், ஆடையிலேகாவிகாஷாயமாகு மப்ப னேயடிவேட்டிமுழந்தானலு,மூடையிலேமேலங்கிமுழங்கால்மட்டும் முக்கியமாய்த்தானணிதல்முறைமையாமே. ௭௱௬

முறைமையாய்த்தானிருந்து யோகவேட்டி முடிமீதுதானணிந் துயோகஞ்செய்வாய், நிறைமையாய்கைகாலைமுடக்கவேண்டும் நித்தி யமும்வாசிதனைநடத்தவேண்டும், திறைமையாய்வட்சரத்தைமாறவே

ண்டும்தீர்க்கமுடன்சின்மயத்திலேறவேண்டும், வறைமையாய்சூட்சா திவாராதாரம்வகுப்புடனேயறிந்தவனேயோகியாமே. எ௱௭

ஸ்ரீரொடுக்கமறுபாகம்.

யோகியாமின்னமொருமாற்கங்கேளு கொடிதானசித்திராப்பர்வ மூன்னே, ஆகியேபூமிவளந்தன்னைப்பார்த்து அப்பனேயளர்பூமியா ராய்ந்தேதான், பாகியேயோராளிஞழ'மட்டும் பாங்குடனேயளர்களை த்தையாராய்ந்தேதான், மாகியேகிட்டணைகள் மிகவுஞ்செய்துமார்க் கமுடன்பண்ணுடைமேலேசாத்தே. எ௱அ

சாத்தவேமூன்றுநாள் சென்றபின்புசாங்கமுடன்றான் சென்று பார்க்கும்போது, ஏத்தமுளவளர்போலயிருக்கும்பாருளன்மகனேவா ரியதைபீங்கானிட்டு, தூத்தமுடன்பனிநீரால்கரைத்துமேதான் தோ ராமல்பத்துமுறைதெளிவிறுத்து,மாத்தவேமறுசட்டிக்குள்ளேவார்த் து மயங்காமல் பத்துமுறைக்காய்ச்சுகாய்ச்சே. எ௱௯

காய்ச்சவேவுப்பதுவுமிகவேபூர்க்கும் கருவானவுப்பதுவுங் கார மெத்த, மாய்ச்சலுடன்சரக்குக்குக்கடுங்காலனுக மகத்தானவேதை யிதுகோடிக்கொவ்வும், தீய்ச்சலுடன்வுப்புக்குதீட்சைசெய்து திறமு டனே காயத்துக்குறுதிபண்ணு, பாய்ச்சலுடன் முப்பூவுந்தின்றாயா னால் பாங்குடனேதேகமதுபிறுகுந்தானே. எ௱௰

தானானகாயத்தைநிலுத்தவேண்டும் சதாகாலம் சுக்கிலத்தைக் கட்டவேண்டும், வேனுமும்மலத்தையறுக்கவேண்டும் வெளியான சிதாபாசம்நீக்கவேண்டும், பானுமுச்சுடரையறுக்கவேண்டும் பா ழான தூலமதைவெறுக்கவேண்டும், மானனபராபரியை நிர்த்தஞ்செ ய்து மானிலத்தில்வாழ்பவனேசித்தனாமே. எ௱௰௧

மேருவுக்கு இடபாகத்தில்கண்ணபிரான்

ஸ்ரீலீலைமண்டபத்தைபோகர்கண்டது.

சித்தனுங்காலாங்கிநாயர்பாதம் சிறப்புடனேபோகரிஷியடிபணி ந்து, சுத்தமுடன்மேருவுக்குயிடபாகத்தில் சுடரொளிபோல்மடுவொ ன்றுநதியொன்றுண்டு, முத்தமுடன்மண்டபமுஞ்சுனையுங்கண்டேன் முயலானமண்டபத்தினருகேசென்றேன், கர்த்தனெனுங்கண்ணபிரா ன்மாளிகண்டேன் கதிரொளிபோல்நவரத்தினகசிதந்தானே.எ௱௰௨

கசிதமாமண்டபத்தினடியோரந்தான் கதிரோனைக் கண்மறைக் கும்சித்தரப்பா, நிசிதமுடன்தவநிலையில்வணங்கிநிற்பார் நீடுழிகாலவ

ளைக்கண்டதில்லை, உசிதமுடன்கண்ணபிரானுணவற்குவுற்பனமாங் குளிகைய துமிகவேஈவார், துசிதமுடன்குளிகைய துபூண்டுகொண்டு துரைராஜர்சதாசித்தம் கலவிசெய்வார். ௭௱௰௩

செய்வாரோபன்னிரண்டாயிரந்தான் சிறப்பானதேவதாபெண்கள்தானும், உய்குவாரெட்டெட்டுக்கலவியோடு வுற்பனமாம்நிசிதகலையார்செய்வார்பார், மொய்குழல்மார்தானிருக்கும் பளிங்குமாடமும் மணியாய்தேவரிடவாசிர்மந்தான், நெய்தலுடன்கொட்டியலர்தாமரைப்போல் நேரானதடாகமொன்றுகண்டேன்பாரோ. ௭௱௰௪

போகர்ஸ்ரீகிருஷ்ணமண்டபத்தில் சித்தர்களைக்கண்டது.

பாரேத்ரன்தடாகத்தில்கோடிசித்தர் பாங்கானயாதவத்தின் சித்தராகும், நேரோதான்தடாகத்தின் கீழ்பாகத்தில்நெடிதானசித்தர்களோ குறும்பராகும், சேரோதான்தடாகத்தின்மேற்பாகத்தில சிறப்பான சித்தர்களோமூலவர்க்கம், ஊரோதரன்தடாகத்தின் குணபாகத்தில்வுத்தமனேகன்னடியர்சித்தராமே. ௭௱௰௫

ஆமேதான்சித்தருடவளமுங்கண்டேன் அதற்கப்பாலவருடையவளவுங்கண்டேன், தாமேதான்தவநிலையினுறுதிகண்டேன் சாங்கமுடன்வபதல்லோலக்கோயில்லை, போமேதான்குளிகையதுபூண்டுகொண்டு பொங்கமுடன்தவநிலையிலெதிரில்நின்றேன், வேமேதான்சித்தர்களுமென்னைக்கண்டு வெகுவெகுவாய்மாருட்டஞ்செய்தார்பாரோ. ( )

செய்யவேயடியேனுங்குலைநடுங்கித்திகைக்கிட்டு மெய்மறந்துயேங்கிநின்றேன், பையவேயெந்தனையாரொன்றுகேட்க பட்சமுடன் காலாங்கிதனைநினைந்து, மெய்யுடனேயென்பேருபோகரென்றேன்மெய்ச்சியேயெனக்குயுபதேசஞ்சொன்னார், மையுடனே லாடமதில் பூண்டுகொண்டுமகத்தானகண்ணபிரான்தனைக்கண்டேனே. ௭௱௰௭

கண்டேனேகண்ணபிரானருகில்வந்தேன்கனமுடனேயவர்பாதம்போற்றிசெய்தேன், தொண்டனெனு மடியேனுந்தாள்பணிந்து துரைராஜர்முன்பாகநிற்கும்போது, தெண்டமுடன்மண்டபத்தினருகே நீதான் தீவிரமாய்வரலாமோசித்தாவென்றார், பெண்டுகள்தாமிருக்குமிடந்தெரியாதோதான்பேரானபோகரிஷிசாபந்தானே. ௭௱௰௮

சாபமதுசொன்னவுடனடியேன்தானும் சாங்கமுடன் கண்ணபிரான்தன்னைநோக்கி, வேகமுடன்காலாங்கிதனைநினைந்து விகற்பமதுயெந்தனுக்குநேர்ந்ததென்று, சாகமுடனடியேனைஞ்சாபம்நீக்கித்தா

ணியில்பிழைப்பதற்குகெதிதானென்ன, பாகமுடன்கண்ணபிரான் ம
னமுவந்து பட்சம்வைத்துயெந்தனுக்குமொழிசொன்னாரே. ௭௱௰௯

சொன்னாரேகண்ணபிரான் மனமுவந்து சுட்டெரிக்கபோகனை
யுமனதிலெண்ணி, நன்னயமாய்குளிகைகொண்டபோகர்தன்னை நய
முடனேதாமுனைப்பார்ரதீதமெத்த, பன்னகசாலையிலிருக்கும் பாங்கி
மாரைப்பார்த்ததினாலுந்தனுக்குகெடுதியாச்சு, வன்னயமாயெந்தனை
யுமெடுத்துக்கூறவாருடனேமறுபடியும் வணங்கிட்டேனே. ௭௱௨௰

வணங்கிட்டபோதையிலேசித்தரொல்லாம் வாகாக வோடிவந்து
யென்னைச்சூழ்ந்தார், பிணங்கிட்டயெந்தனையும்ரிஷிகள்பார்த்துபிரிய
முடனோடிவந்துபின்னுஞ்சொல்வார், தணங்கிட்டயெந்தனுக்குசொ
ன்னதென்றால் தபவுடனேபோகரிஷிசொல்லக்கேளும், சுணங்கிட்டு
கண்ணபிரான்மண்டபத்தில்துறைகோடிரிஷிமுனிவர்போனார்காணே

காணாமேயிதுநெடுநாள்சித்தர்தம்மைக் காத்திருந்தோம்நெடு
நாளாய்நதியோரத்தில், நாணவேதேவாதிரிஷிகளெல்லாம் நலமுட
னேயன்றாடம்வருவார்போவார், வேணவேவுபசாரம்நடக்குமிங்கேவி
சையுடனேமண்டபத்தில்போனாரில்லை, ஆணவேயும்முடையவிறுமாப்
பாலே ஆக்கினையைத்தான்கடந்துவந்திட்டீரே. ௭௱௨௨

போகருக்குச் சாபங்கொடுத்தது.

வந்ததினாலுந்தமக்குச்சாபமப்பா வரைகோடியுகவருஷம் தந்
தோம்காணும், தொந்தமுடன்றான்கொடுத்தார்சித்தரெல்லாம் தொ
ல்லுலகில்போவதற்குயிடமுமில்லை, சந்தமுடன்கிருஷ்ணமண்டபத்தி
னோரம்சாங்கமுடன்றானிருந்தேன்சிலகாலந்தான், கந்தமுடன்பெண்
களெல்லாம் நதியோரத்தில் கலந்துமேசலக்கிரீடைவந்தார்தாமே. ()

தாமேதானெந்தனையுங்கண்டாரப்பா சதகோடிசூரியர்போல் க
ண்டேன்யானும, காமேதான்பெண்களெல்லாம் கிட்டிவந்தார் கண்
டாரேயெந்தனையும்பெண்களெல்லாம், வேமேதான் யெந்தனையுமா
றொன்றார்கள்மிக்கவுமேதாள்பணிந்துயடிவணங்கி, நாமேதானிவ்வூறு
தேசமல்ல நலமுடனேசீனபதியென்றிட்டேனே. ௭௨௪

என்றவுடன்பெண்களெல்லாமதிசயித்து ஏற்றமுள்ளசிறுபாலா
யேன்தான்வந்தீர், கன்றுடனே।சுநீங்கும்கதையைப்போல பாங்கிய
ற்குப்பரிதாபமெடுத்துச்சொன்னேன், நன்றுடனேகாலாங்கிசீஷனம்
மாநாட்டிலுள்ளவளமெல்லாங்காணவந்தேன், தென்றிசையில் நானி
ருந்துகுளிகைபூண்டு சிறப்பானசீனபதிபோனேன்தானே. ௭௨௫

போனதினல்வதிசயங்கள்மெத்தவுண்டு பூதலந்தாருருந்தான் கண்டதில்லே, நானதினல்சிலகாலமங்கிருந்தேன் நயமுடனேபெண் களெல்லாம்வெண்மைகண்டீர், தானவனும்கமலமுனி யங்கிருந்தார் சாஷ்ட்டாங்கதெண்டனிட்டுத் தாள்பணிந்தேன்,ஆனதினுலெந்தனு க்குவுபதேசங்களனேகமதாய் தானுரைத்தார்வதீதந்தானே ௭௨௬

தானனவதிசயங்களனேகஞ்சொன்னேன் தகமையுள்ளசீனபதி சிறப்புஞ்சொன்னேன், வேனனமேருகிரிபோனேனம்மாவெழிலான விருவத்தோர்வரைதானுண்டு,கோனனயேழுவரைசொன்னேனம்மா கோடிமுனிசித்தர்களைக்கண்டேனென்றேன், பானனவடிவேலர்ஸ்த லமொன்றுண்டு பாங்கானபொன்மானுங்கண்டிட்டேனே ௨௨௭

கண்டேனேசித்தர்வர்க்கங்கோடாகோடிகாணுதவரைதேசமன ந்தமுண்டு, அண்டானமுனியறியாக்காடுங்கண்டேன், அங்குள்ளவ திசயங்களெல்லாஞ்சொன்னேன், பண்டமுடன்கிடாரங்கள் வைப்பு சொன்னேன் பாங்கியர்களெலலோருமதிசயித்தார்,தெண்டமுடனெ ந்தனுககுச்சாபந்தீர்த்து திகமுடனேயனுப்பவென்று விடைகேட் டேனே. ௭௨௮

கேட்டவுடன்பெண்களெல்லாம் கிருபைவைத்துக் கிருபையுட ன்கண்ணபிரான்பக்கல்வந்து, நோட்டமுடன் பன்னீராயிரங்கள் பே ரும்நுணுக்கமுடன் ருமுரைத்தாரென்னேத்தானும்,தேட்டமுடன்சீ னபதியிருந்தசித்தன் திறமுடனேலோகமெல்லாங்காணவென்று, வா ட்டமுடன்குளிகையதுபூண்டுகொண்டு வந்திட்டானும்பர்பதியென் றிட்டாரே, ௭௨௯

என்னவேபெண்களெல்லாமொன்ருய்க்கூடி யெழிலாகவெந்த னுக்குச்சாபம்நீக்க, நன்னயமாய்க்கண்ணபிரான்தன்றமக்கு நலமுட னேதாமுரைத்தாரதீதமெத்த, சொன்னவுடன்கண்ணபிரான்கடாட் சம்வைத்து சுகமுடனேசித்தர்தம்மைத்தாமழைத்து, பன்னயமாய் சாபமதைநீக்கவென்று, பட்சமுடனெந்தனுக்குவிடைதந்தாரே.

விடைதந்தார்சித்தர்களுந்தானுங்கேட்டு விரைவுடனேயோடிவ ந்துவுண்மைகூறி, படையுடனேகூட்டமதாயொன்ருய்க்கூடிப் பரி வாகவுபதேசம்பாலித்தேதான், சடையுடனேரிஷிமுனிவர் சித்தர்தா மும் சமைத்திட்டார்சாபமதையெந்தனுக்கு, தடைநீங்கிகண்ணபிரா ன்விடைகள்பெற்றுச்சாங்கமுடன்சீனபதிவந்திட்டேனே. ௭௩௧

கமலமுனியைக்கண்டது

வந்தவுடன்கமலமுனிதன்னைக்கண்டேன் வாகுடனேகண்ணபிரான்வளமைசொன்னேன், நொந்துமனமுருகியல்லோ சித்தரெல்லாம்நொடிக்குள்ளேயெந்தனுக்குச் சாபம்சொன்னார், கந்தபெண்களெல்லாருமென்னைக்கண்டு கருணைபெறசாபமதைதீர்க்கவென்று, அந்தமுடன்கண்ணபிரான்பக்கல்சென்று அடிவணங்கிசாபமதை தீரென்றாரே. எ௱௨

என்றையிலேகண்ணபிரான் முனிவர்தம்மை யெழிலாகத்தாமழைத்துவுறுதிசொன்னார், அன்றையிலேரிஷிமுனிவர்சித்தர்கூடி அகமுடனேமுகமலர்ந்துசாபந்தீர்ந்து, இன்றையிலேசாபமதுதீர்ந்ததென்று யெழிலுடனேசீனபதி போகவென்று, சென்றுடனேபோகவென்றுவிடையுந்தந்தார் சிறப்புடனேதம்பாதங்கண்டிட்டேனே.

கண்டேனேகாலாங்கிகடாட்சத்தாலே கருணைபெறயெந்தனுக்குவிடைதாவென்ன, தெண்டமுடன்விடைபெற்று நிடததேசம்திரும்பினேன்குளிகைகொண்டு வெகுகாலந்தான், தண்டிலவுமாலயனைத்தரிசித்தேதான்சாங்கமுடன் நளபதியைக்காணவென்று,அண்டமுடன்குளிகையிட்டுராஜதேசம் அப்பனேவந்திட்டேன்யானும்பாரே

போகர்நளபதிகண்டது

பாரேதான்ராஜாதிசக்கிரவர்த்திப் பரிவானமாளிகையுங் கோட்டைகண்டேன், சீரேதான்சித்திரரதம்தங்கமாகும் சிறப்பானகோட்டைகளும்குருந்தக்கல்லாம், நேரேதான்வைரியமண்டபந்தான் நெடிதானவாகனங்கள் தங்கவன்னம், ஊரேதான்பொன்னகரங்கையிலே யென்பார்வுத்தமனேநளபதிக்கு யீடாகாதே. எ௱௫

ஈடானதேசமதுகண்டோருண்டோ பெழிலானமாபுரமும்தங்கவர்னம், கோடானகோடிபொருளங்குண்டுகுகையுண்டுசுனையுண்டுதடாகமுண்டு, ஊடானமிருகங்களனேகமுண்டு வுத்தமனேபுலிபசுவுமொன்றேடொன்று, காடானவனாந்திரத்திலுறவுகொண்டு கருணையுடனெப்போதும்குடியுமாமே. எ௱௬

ஆமேதான்கோட்டைக்குள்குளிகைபூண்டு அப்பனேசுரங்கத்தின்வழியதாக, நாமேதான்சென்றல்லோபார்க்கும்போது நாட்டமுடனரசாட்சிக்கொலுக்கூடந்தான், போமேதான்கிட்டியல்லோ சென்றுநின்றேன் பொலிவானநவரத்தினக்கசிதத்தாலே, மாமேதான்பிரதமைகள்சூழ்ந்துநிற்க மயக்கமுடன்சிம்மாசனங்கண்டேன்தானே.

தானனமேற்புறத்தில்பக்கஞ்சென்றேன் தாக்கானகொலுமாளிகைலவைக்கூடம், வேனைகற்றூணும்வயிரக்கல்லாம் வெழிலானபக்க

மெல்லாம்பச்சைக்கல்லாம், மானனதேவதச்சன்மயனிறலே மார்க்கமுடன்புஷ்பரதமொன்றுகண்டேன், கானனகைலாசமென்பார்தானுங்காசினியிற்கண்டவரைவிண்டிலேனே. ௭௩௮

விண்ணவேதலைவாசல்பக்கம்போனேன் விராஜனிடகாவல்களாமாயிரம்பேர், திண்ணமுடனங்கிருந்தார்தவசியோர்கள்தீர்க்கமுடன்யெந்தனையுங்கண்டிட்டார்கள், எண்ணமுடன்யானுமல்லோ கண்டபோது எனைக்கொல்லத்திருஷ்டித்துபார்த்தாரென்னை, அண்ணலென்றகாலாங்கிதனைநினைந்தேன் அப்போவேயெந்தனையுஞ் சூழ்ந்திட்டாரே. ௭௩௯

சூழவேயடியேனும்கிகிகிடுத்துதுப்புறவாய்தாள்பணிந்துசரணஞ்சொன்னேன், தாழவேகாவற்காராயிரம்பேர்சார்புடனேயெந்தனையுமாரென்றார்கள், மீளவேயானுமல்லோதிரங்கொண்டு மேன்மையுடனவர்களுக்குவதிதஞ்சொன்னேன், ஆளவேயெந்தனையும் வரலார்கேட்டார் அப்பனேஅடிமுதலுமுரைத்திட்டேனே. ௭௪௰

உரைத்தேனேவதிசயங்களெல்லாஞ் சொன்னேன் வுலகமெலாஞ்சென்றதொருகீர்த்திசொன்னேன்,இரைத்தேனேதேசத்தினுளவுமார்க மெழிலாகக்கேட்டவுடன்கிருபைகூர்ந்து, வரைத்துடனேயெந்தனையுமழைத்துமேதான் வாகாகக்கோட்டைக்குள் கொண்டுசென்று, நிரைத்துடனேசித்தர்முனிகாவற்காரர் நிரையுடனேகாண்பித்தாரதிதந்தானே. ௭௪௧

தானனகளபதியின் கிடாரங்கண்டேன் தாக்கானசுரங்கத்தினுளவுகண்டேன்,வேனனபச்சையென்றமாளிகண்டேன்வெழிலானசெம்பினிடமதிலுங்கண்டேன், மானனதர்வாசல்நான்குபக்கம் மன்னனிடகாவல்களாஞ்சிங்கமுண்டு, பானனமதிலோரம்கானருண்டு பக்கமெலாந்தேக்கினிடக்காடுமாமே, ௭௪௨

காடானகோட்டைக்குள்மாளியேழுகருவானமண்டபங்களனேகமுண்டு, விடானமாபுரத்தில்சித்தர்கோடி விடுதியாய்த்தாமிருப்பார்கூறப்போமோ, நீடானமலையுண்டுசுனையொன்றுண்டு நித்தியமும்சித்தர்முனிவாசஞ்செய்வார், நாடானமனிதர்களுங் காணமாட்டார் நாட்டிலேகண்டவர்களில்லைதானே. ௭௪௩

இல்லையேபின்னமொருமார்க்கங்கேளு மியலானராஜனிடதேவிகோட்டை, பல்லையாம்வெகுதூரங்காந்தமாகும் பாரினிலேராசர்கட்குகிட்டுமோசொல், மல்லவேதமைபந்திபூணூரந்தான்மார்க்கமுடன்கண்டுவந்துயேங்கிநின்றேன், சொல்லவேபூணூரந்தன்னைத்தானும் கூட்சமுடன்கண்டுவந்தேன்போகர்தாமே. ௭௪௪

தாமேதான்சித்தர்முனிரிஷிகள்தாமும்தயவுடனேயெந்தனுக்கு வதீதஞ்சொன்னார், போமேதான்குகைமுதலும் கிடாரந்தன்னைபொங்கமுடன்தான்கொண்டுகொண்பித்தார்காண், நாமேதான்கண்டுமன முவந்துமெத்தநாதாக்கள்கிருபையதுமிகவும்பெற்றேன், ஆமேதான் விசுவாசமருளும்பெற்று அப்பனேசினபதியமர்ந்திட்டேனே எசரு

போகர்அகஸ்தியர்மலைகண்டது

அமர்ந்திட்டேனின்னமொருமார்க்கங்கேளு அப்பனேகுளிகை யதுபூண்டுகொண்டு, தமர்ந்திட்டவகஸ்தியனார் மலையைக்கண்டேன் தாக்கானமலையோரம் சென்றபோது, கமர்ந்திட்டசித்தர்முனி கோடாகோடிக்கண்டிட்டா ரெந்தனையுமயார்நீயென்றார்,சுமர்ந்திட்டகாலாங்கிகாயர்பாதம் சுடரொளியின்பதாம்புயத்தைநினைத்தேன்பாரே

நினைத்துமேகாலாங்கிசீஷனென்றேன் நேரானபோகரிஷியென் பேரென்ன, முனைத்துமேசித்தரெல்லாமொன்றாய்க்கூடிமுனையான வகஸ்தியனார்பக்கல்சென்று, தினைப்புடனேவாய்பொத்திகரங்குவித் துதேவனேசாஷ்டாங்கஞ் சரணமென்றார், பனைப்புடனேவகஸ்திய ருங்கண்டுமேதான் பட்சமுடன்தானுரைப்பார் சித்தர்க்காமே.

சித்தர்முனிரிஷிமுதலோரொன்றாய்க்கூடி தெட்சணாமூர்த்தியி டம்வந்ததென்ன, சத்தமுடனெல்லவருமொன்றாய்ச்சேர்ந்துசதாசிவ மேசுடரொளியேதயாளவானே, பத்தியுடன்காலாங்கி சீஷனென்று பாரினிலேபேர்படைத்த சித்துவொன்று, முத்திபெறதங்களிடங்காணவென்று முறைமையுடன்குளிகைகொண்டுவந்திட்டாரே எசஅ

வந்திட்டாரென்றலுமேகும்பயோனி வாகுடனேவருகவென்று விடைதந்தாரே, பந்திட்டயெந்தனையும்பட்சம்வைத்துப்பாகுடனே குகைக்குள்ளேகொண்டுசென்று,முந்திட்டசாத்திரங்களெல்லாங்கேட்டார்மோசமில்லையென்றென்னைக்கொண்டணைத்து, தந்திட்டாரெந்தனுக்குநூலுமீய்ந்தார் சதகோடிவித்தைகளுங்கற்பித்தாரே.

கற்பித்தார்பிரமமென்றவித்தைதானும் கருவானயேமத்தில்வித்தைதானும, உற்பித்தசாத்திரத்தினுளவையெல்லா மொன்றாகத்தானெடுத்துவுபதேசித்தார், மற்பித்தகருவிகரணாதியெல்லா மார்க்கமுடன்றான்கொடுத்தாருவமையாக, தற்பித்துசெய்துமல்லோபுத்திகூறிசகலகலைக்கியான மெல்லாமோதிட்டாரே. எ௲௰

ஓதவேயடியேனுக்குறுதிசொன்னார் வுத்தமனேபோகரிஷி சொல்லக்கேளும், நீதமுடன்சாஸ்த்திரங்களெல்லாங்கற்றீர் நிலையானகாயத்தைநிறுத்தக்கண்டீர், தோதமுடன்சித்தருட குளிகைகொண்டீர் தோராதகீர்த்தியுடன்சீனம்சென்றீர், பாதமுடன் காலாங்கியருளும் பெத்தீர் பட்சமுடன்சித்தருடவரங்கொண்டீரே. ௭௫௧

கொண்டீரோபோகரென்றபெயருங்கொண்டீர்குவலயத்தில்சித்தருடமகிமைகண்டீர், அண்டரண்டசராசரங்களனைத்துங்கண்டீர் ஆகாயப்பூமிமுதலுளவாராய்ந்தீர், திண்டமுடன்ராஜாதிராசர்சேர்வை திறமுடனேயவர்கள்வைத்தகிடாரங்கண்டீர், மண்டபங்கள்தடாகமுதல்குகையுங்கண்டீர், மன்னவர்கள்ராச்சியங்கள்கண்டீர்பாரே. ()

கண்டதினால்கீர்த்தியுண்டுகுற்றமில்லை கைலாசநாதனைப்போல் சித்தரப்பா,• மண்டபங்கள்கடலோரம்ரிஷிகள்தானும் மகாகோடிமானுக்கள்மிகவுண்டப்பா, நெண்டமுடனுந்தனுக்குசாபமீவார் தெளிவாகவவர்களிடஞ்சொல்லவேண்டாம், அண்டர்முனிபோலவரும் வதிதங்கேட்பார் அப்பனேதாள்பணிந்து வுரைசொல்வீரோ• ௭௫௩

சொன்னதினால்சாபமதுகிடமுருதுதொல்லுலகிலுன்னையொரு சித்தனென்பார், நன்னயங்கள்தாமுரைத்துநலமும்பேசி நாட்டிலுள்ளவளப்பமெலாங்கண்டாராய்ந்து, வின்னமிலாவரமுடனேசாபம்நீக்கிவேதாந்தத்தாயினதுவருளும்பெற்று முன்னயமாய்பெரியோர்கள் வரமும்பெற்றுமுகைமையுடனேசீர்மவருள்தந்தாரோ. ௭௫௪

போகர்இரத்தினகிரிகண்டது.

அருள்பெற்றுபோகருமேசீனஞ்சென்று அங்ஙனவேபோயிருந்து சிலதுகாலம், தெருளுடனேவித்தையெல்லாம் செய்துபார்த்துதேவதாக்கொப்பானமாந்தருக்கு, பொருளுடையகருவானவதிதவித்தைப் புகட்டினார்சீனமென்றமாநருக்கு, இருளகலப்போதித்துப்போகர்தாமும்யெப்போதும்போலாகப்பறந்திட்டாரே. ௭௫௫

பறந்திட்டார்சீனபதிவிட்டுநீங்கி பாங்குடனேகுளிகையதுபூண்டுகொண்டு, மறந்திட்டகாலாங்கிதனைநினைந்துமார்க்கமுடன்இரத்தினகிரிமலைமேற்சென்று, துறந்திட்டசித்தர்களைக்காணவென்று துரைராஜர்விற்றிருக்கும்பக்கல்சென்று, நினைந்திட்ட முனிவரிடம்நின்று பேசநிலத்தில்போகரையாரென்றிட்டாரே. ௭௫௬

என்னவேயடியேனுந் தாள்பணிந்தேன் யெழிலானகாலாங்கித னைநினைந்தேன், சொன்னதோர்சித்தர்கட்கு விடையுஞ்சொன்னேன் சுடரொளியாங்காலாங்கிசிஷனென்றேன்,நன்னயமாயெனையழைத்து குகையிற்சென்று நாதாக்களிருப்பிடமுங்காண்பித்தேதான், பன்னய மாஞ்சித்தர்களின்மறபுஞ்சொல்லி பட்சமுடனெந்தனுக்குவழி சொன்னாரே. எ௲ள

வழியுடனேயிரத்தினகிரிமேலேசென்றேன் வாகுடனே ரத்தின மென்றகிரியிற்கண்டேன், அழியாதவாஸ்தான கோட்டைகண்டேன் அதற்கப்பால்திருமாலின்கோயில்கண்டேன், குழிபோலக் குகையுட னேபுனலொன்றுண்டு கூரானமச்சமுனிசித்தனுண்டு, வழிபோகக் காண்பதற்குதுறையுமில்லை மகத்தானசித்தர்முனிகாவல்தானே. ()

தானனகாவலிடம்சென்றுபோனேன் நயவாகயெந்தனையுங்கண் டிட்டார்கள், மானனமச்சமுனியெங்கேயென்றேன் மகத்தானசித்த ர்களுங்கொண்டுசென்றார், வேனனமச்சமுனிகண்டபோது வெகுவெ குவாயெந்தனிடம்வார்சொன்னாரே,பானனதிருமூலர்பாட்டரெங்கே பார்த்துநெடுநாளாச்சுயென்றிட்டேனே. எ௲௯

போகர்திருமூலர்பாட்டனாசமாதியில்கண்டது.

என்றையிலேபோகரிஷிசொன்னபோது யெடுத்துரைத்தார்திரு முகங்கவனேகமுண்டு, நின்றையிலேசமாதியிடங்கொண்டுசென்றார் நிலையானரத்னகிரிமலையோரந்தான்,நனமைபெறதிருமூலர்பாட்டர்த ம்மை நாதாந்தசித்தொளிவைக்காணவென்று, தன்மையுடனவர் பா தம்தொழுதுநின்றேன் சணத்திலேசமாதியதுவெடிப்புண்டாச்சே.()

ஆச்சப்பாசமாதியதுவெடிக்கக்கண்டேன் அப்பனேதிருமூலர் பாட்டர்கண்டேன், மூச்சப்பாதானடங்கிபூமிக்குள்ளே மூன்றுயுகத் தானிருந்தசித்துதன்னை, பேச்சப்பாவெகுபேச்சுபேசுதற்கு பீடமு தல்தலைவாசல்முன்னேநின்றேன், நீச்சப்பாவாசனைகளொன்றுமில்லை நிலையானகற்பமுண்டகாயமாமே. எ௲க

காயமதுவாசனைகள்கூறப்போமோ கடும்பச்சைப்பூரமென்றவா டைவீசும், நேயமுள்ளமல்லிகைப்பூ மணம்போலெங்கும்நெருங்கவே வொட்டாதுகுகையினுள்ளே, சாயமென்றதேகமது குங்குமம்போல் தரிசிக்கமானிடர்க்குகிட்டுமோசொல், மாயமென்றசித்தொருவர்மகி மைசொல்லமாளாதுவையகத்தில் மாளதாமே. எ௲௨

மாளாதசித்தென்னைக்கண்டபோதுமகிதலத்திலாரப்பாக்காண வந்தீர், சூளாதசெனமில்லாச்சமாதியுள்ளே குட்சமுடன்வந்தலுவ

லென்னவென்றார், கோளானவார்த்தைகளும்பேசவேண்டாம் குறிப்புடனேயிரண்டொருவார்த்தைகள்சொல்லி,தாளானசமாதிதனைமுடிப்போடு தரணியுள்ளசித்தரெல்லாம் வருவார்தாமே. எசுரு

வந்தாரேபாமானல்கேள்விகேட்பார் வளமுடனேயவர்களுக்கு விடைசொல்லவேண்டும், சிந்தனையைபான்மறந்துபேசவேண்டும்பேசாட்டாலவர்களுக்குமனநோயுண்டாம், பந்தானமூலவர்க்கக்கோடியுண்டு பந்துபந்தாய்வருவார்கள் சமாதியண்டை, தொந்தரவுயெனக்கல்லோமிகுதியாகும துரைராஜசுந்தரனேசமாதிமூடே. எசுச

மூடென்றசொல்லுகையி லடியேன்தானும் முடிவணங்கிதெண்டனிட்டுகெதியேதென்ன, நாடென்றபதிதனிலேவாழுஞ்சித்தர் நாமிருக்குமிடந்தனையேயறியமாட்டார், மாடென்றமனிதரப்பா முழுமக்கள்தாமுமடையர்களோ கோடானகோடிபேர்கள், கூடென்றகூடுவிட்டுப்பாய்ந்தேனென்று குவலயத்தில்கூக்குரலுமிகவுண்டாச்சே.

ஆச்சதினலெந்தனையுமனேகம்பேர்கள் அதிசயமாய்க்காணவே வருவார்மாண்பர், மூச்சடக்கிமூன்றுயுகமிருந்தேனப்பா முனையான காலாங்கிசீஷன்தானும், பாச்சலுடன்குளிகையதுபூண்டுகொண்டுபட்சமுடன்வந்ததொருசோதிதன்னால், காச்சலுடன்மூடிருந்தசமாதிதானும் கடுகெனவேவெடித்துமல்லோகாணலாச்சே. எசுரு

கண்டதினலுந்தமக்குக்கருணைகூர்ந்துகடாட்சித்தேன்திருமூலர் பாட்டர்தானும், விண்டதில்லையொருவருக்கும்ரகசியார்த்தம் வேதாந்தத்தாயினதுகடாட்சத்தாலே, மண்டலத்திலுக்கனுக்கு வுபதேசித்தேன் மானிலத்தில்குளிகைபதுபூண்டுகொண்டு, தெண்டமுடன்சித்தர்களைவணங்கிநீயும் தேசமெலாங்குளிகைகொண்டுதிரிவாய்நீயே.

திரியென்றபோதைபிலேவிடையும்பெற்றுத் திரும்பினேன்சீனபதிகுளிகைபூண்டு,செரியென்றசத்தியத்தைக்கைவிடாத நேர்ப்பானவெள்ளையென்றமாந்தர்முன்னே, பரியென்றகருவிகரணுதி யெல்லாம் பாங்குடனேவுபதேசம்செய்தேன்யானும் சரியென்றுயெந்தனையுமாசீர்மித்து சாஷடாங்கநமஸ்காரஞ்செய்திட்டாரே. எசுஅ

செய்தபின்புவடியேனுஞ்சீனந்தன்னில் சிறப்புடனேசிலகாலமிருந்தேனப்பா, மெய்யுடனேஇன்னம்வெகுதேசம்காண மேதினியில் குளிகையதுபூண்டுகொண்டு, கைதவமாய்சீனபதிவிட்டுநீங்கி காலாங்கிநாயர்பாதம்மனதிலுன்னி, பையவேபானுமல்லோ பறந்தேனப்பா பாரினிலேவயோத்திகர்கண்டிட்டேனே. எசுகூ

போகர்அயோத்தியில்திருச்சங்கு சமாதிகண்டது.

கண்டேனேதிருச்சங்குசமாதிகண்டேன் கடலோரம்போயிறங் கிநின்றேனப்பா, அண்டர்முனிராட்சதர்களிருக்குங்கூட்டம் அணிய ணியாயவர்பாட்டன்சமாதிகண்டேன், தண்டுடனேராட்சதாள்கூட் டப்பக்கல் தாழ்மையுடன்போயிருந்துதெண்டஞ்செய்தேன, கொண் டென்னைதானணைத்துராட்சதாக்கள் கொண்டுபோய் சமாதியிடம்வி ட்டிட்டாரே. எஎ0

விட்டவுடனடியேனுந்தாள்பணிந்து விருப்பமுடன் காலாங்கித னைநினைந்தேன், கிட்டநின்றுபாலனுமேசிரங்குவித்துக் கிருபையுடன் திருச்சங்கைக்காணவென்று, திட்டமுடன்முழங்காலு சமாதியிட்டுத் தீவிரமாயடிதொழுதுபோற்றிநின்றேன், சட்டமுடன்சமாதியதுதா ள்திறந்து சடுக்கெனவேசத்தமதுகேட்டிட்டேனே. எஎக

கேட்டவுடனடியேனுங்கிடுகிடுத்து கிருபையுடன்சாஷ்டாங்கஞ் சமர்ப்பித்தேதான்,வாட்டமுடனெந்தனையாரென்றுகேட்க வளமுட னேசிறுபாலனுரைக்கலுற்றேன்,பாட்டரென்றதிருச்சங்குராஜன்தன் னைபாரினிலேகாண்பதற்குமனமுவந்து, நோட்டமுடன்சமாதியிடம் வந்தேனென்று நுட்பமதாய்போகர்ஷிவுரைத்திட்டேனே. எஎஉ

உரைத்தேனேயெந்தனிடதீரத்தாலேவுத்தமனேகாலாங்கிகடா ட்சந்தன்னல், திறப்புடனேகாலாங்கிசிஷனென்றேன் திகழுடனேசீர் பாதங்காணவென்று, மறைப்புடனேகுளிகையது பூண்டுகொண்டுமா ர்க்கமுடன்சீனபதிவிட்டுநீங்கி, விரைப்புடனேசமாதியிடங்கண்டுவந் து விருப்பமுடன்வந்தேனேபோகர்தானே. எஎஙு

திருச்சங்குபோகருக்குபுத்திகூறல்.

தானனபோகரென்றபோதேயப்பா தயவுடனேவென்மீதில்பட் சம்வைத்துக், கோனனதிருச்சங்குராஜன்தானும் கொற்றவனுரெந்த னுக்குவுபதேசித்தார், பானனபுத்திமதிமிகவுரைத்து பாங்குடனேகு ளிகைகொண்டுபோமிடத்தே வேனனசித்தர்முனிரிஷிகள்தாமும்வே னுமென்றேசபித்திடுவார்தப்பிக்கொள்ளே. எஎச

கொள்ளுவதுவுந்தனுக்குபுத்திமாற்கம் கோளாறுநேராமல்சித் தர்முன்னே, எள்ளளவும்பிசகின்றிநடந்துகொள்வாய் என்பேராவுந் தனுக்குசாபமில்லை, கள்ளமனமுடையதொருசித்தரப்பா கண்டா லேவுன்னையுந்தான்சபிப்பார்சித்தர், உள்ளபடிபோலாகவுறவுபேசிஒ ருகடிகைநேரமதில்சபிப்பார்பாரே. எஎரு

பாரென்றபோதையிலேயானடுங்கிப் பட்சமுடன்பாட்டரையா ன்பரிவுகேட்டேன், வேரென்றகெதியெனக்குபாட்டரென்றேன்விரு ப்பம்வைத்து யெந்தனுக்குஞானேபித்தார், சீருடனேயடியெனும் நடுநடுங்கி சிறப்புடனேவுபதேசம்பெற்றுக்கொண்டு, பேருடனேகா லாங்கிதனேநினைந்து பேரின்பசாகரத்தையடைந்திட்டேனே. ௭௭௬

போகர்கமலமுனியைக்கண்டது.

அடைந்தபின்புகுளிகைபதுபூண்டுகொண்டு அரசனும்திருச்சங் குவிடையும்பெற்று, கடந்துமேயயோத்திநகர்தன்னைவிட்டுக் காலா ங்கிநாதருடகிருபைபாலே, தொடந்துமேசினபதிக்கேகியானும் துப் புரவாய்கமலமுனிபக்கல்சென்றேன், நடந்ததொருசங்கிரகம்யானு ரைத்தேன் நலமுடனேகமலமுனிமகிழ்ந்திட்டாரே. ௭௭௭

மகிழவேபடியேனும்விடைகள்பெற்று மார்க்கமுடன் வெள்ளை யென்றமணிதர்பக்கம், நெகிழவேபோயிருந்து யாவுஞ்சொன்னேன் நெடிதானகருவிகரணுதிபெல்லாம், தகிழவேமுடித்திட்டேன் தலைகி ழாகச் சதாகாலம்வெள்ளையென்றமணிதருக்கு, புகழவேசினபதியோர் கள்மெச்சபுகட்டினேன்விநோதமென்றவித்தைதானே. ௭௭௮

தானெனவிநோதமென்றவித்தையப்பா தாரணியில்செய்தவரும் பார்த்தோரில்லை, கோனெனகுருவருளால்குளிகைபூண்டு குவலயங்கள் சுற்றியல்லோமுழுதும்பார்த்தேன், மானெனகற்றவித்தைவீண்போகா மல் மாறாமல்சதாகாலமென்பேர்கூற, வேனெனவித்தைகளைவிரும்பி யானும் விபரீதமாகவல்லோவிரித்திட்டேனே. ௭௭௯

விரித்துமேசினபதிதன்னில்யானும் வெகுகாலம்நானிருந்தேன் மைந்தாகேளு, நெரித்துமேமறுபடியும்குளிகைபூண்டு நேராகசினப திவிட்டுநீங்கி, புரித்துமேசத்திபரிச்சந்திரன்றன் புகழானசமாதிபிட ங்காணவென்று, தெரித்துமேவயோத்திநகர்வடபாகத்தில் தீறமுடன் சமாதிகண்டுபுறப்பிட்டேனே. ௭௮௰

போகர்சத்திஅரிச்சந்திரன்சமாதிகண்டது.

புறப்பிட்டேன்குளிகைகொண்டுபறந்தேனப்பா பொங்கமுடன யோத்திநகர்வடபாகத்தில், துறப்புடனேசமாதிபுறம் காணவென்று துப்புறவாய்நதியோரம்போனேன்யானும், முறப்புடனேகிங்கிலியர் கோடாகோடி மூர்க்கமுடன்காவற்காரங்கிருந்தார், சிறப்புடனேயடி யேனுமகாலாங்கிதன்னை சீர்பாதந்தனைநினைந்துகண்டிட்டேனே.

கண்டவுடன்கிங்கிலியரரரென்றூர்கள் காலாங்கி வையருடசீஷ னென்று, தெண்டமுடன்றிருச்சங்குபேரனென்று தீவிரமாய்முறை கொண்டுசெப்பலுற்றேன், மண்டலங்கள்யான்முழுதும்குளிகைபூண் டுமானிலத்தில் சுத்திபல்லோவரிசைபெற்றேன், குண்டலங்கள் சரப் பளிகள்பதக்கம்யாவும் குவலபத்திலெனக்களித்துபோவென்றூரே.

என்றூர்கள்மனுகோடிசித்தர்கூட்ட மெழிலுடனேரிஷிகள்முக லாசீர்மித்தார், குன்றுனமலைநதிகள்குகைகள்போனேன் கோடிவரை வெகுகாலமிருந்துபார்த்தேன், பன்றுனசீனபதிதலைமையென்று பாங் குடனேகுளிகைபதுபறந்திட்டேன்யான், நன்றுனகமலமுனிசித்தர் தம்மைநலமுடனேசீனமதில்பார்த்திட்டேனே. எ அ௩

பார்த்தேனேவெள்ளையென்றமணிதரப்பா பரிவாகபூமியெல்லா ங்காரமாகும், தீர்த்தமுடன்பொய்கையொன்றுசுனையொன்றுண்டு தி கழானபடியோரமசித்தொன்றுண்டு, ஊர்த்தமுடன்சமாதியிலேயிரு ந்தாரப்பா விவமையுடனவர்பாதங்கண்டுவந்தேன், ஏர்த்தமுடன்வர ரிஷிபாமவர்பேராகுமெழிலானமார்க்கமெனக்கோதிட்டாரே. எ அ௪

ஓதவேசிறுபாலன்விடைகள்பெற்று வுகமையுடனனேகவிதநூல் கள்பார்த்தேன், நீதமுடன்வாசிஷியார்நூலில்சொன்ன நுட்பமாமரி ச்சந்திரன்சமாதிகாண, வேதமுதலாராய்ந்துங்காணவில்லை வெளியா னவரரிஷியின்நூலிற்சொன்னூர், பாதமுடன்சத்தியரிச்சந்திரன்றன்ப தாம்புபத்தைக்காணவெனவந்திட்டேனே. எ அ௫

என்னவேபடியேனும்போகர்நாயன் பெழிலாகத்தானுரைத்தே ன்யிரக்கம்வைத்து, சொன்னபடிவிதிமுறையின் நுணுக்காராய்ந்துசு டரொளியின்காலாங்கிசீஷனென்றும், நன்னயமாய்ரிஷிமுனிவர்சித்த ர்தம்மால் நயமுடனேபலபேரின்வரமும்பெற்றேன், வன்னமுடனரி ச்சந்திரன்சமாதிமார்க்கம்வகையுடனேகாணவென்றுவழிகேட்டேனே

வழிகேட்டேன்துறைகேட்டேன்சமாதிகேட்டேன் வண்மையு டன்பெந்தனுக்குப்பட்சம்வைத்து, மொழியுடனேகாலாங்கி சீஷனெ ன்று முறைகொண்டுவந்ததினுல்போகருக்கு, பழியுண்டாமென்றல் லோபயந்தெல்லோரும் பாராளுமரிச்சந்திரன்சமாதிதன்னை, குழியு டனேதானிருக்குங்குகையினுள்ளே கொண்டுபோய்விட்டார் கிங்கிலி யர்தாமே. எ அ௭

விட்டவுடன்போகரும்பான் முன்னேசென்று விரைவுடனேதா ன்பணிந்துகரங்குவித்து, பட்டமன்னன்கொலுவினிட சமாதிபகக்கம் பாங்குடனேசிற்கையிலேசித்தர்கூட்டம், கிட்டவந்துயென்னையாரெ

ன்றுகேட்க கீர்த்திபெற்றகாலாங்கிசீஷனென்றேன், சட்முடடனென்
னையவர்பட்சம்வைத்து சாங்கமுடனுசீர்பஞ்செய்தார்தாமே. ௭௮௮

தாமேதானனேகவிததர்க்கஞ்சொன்னார்தாழ்வாகயானுமல்லோ
வெடுத்துரைத்தேன், போமேதான்சமாதியிடம்செல்கவென்றார்போ
னேனேஓங்காரஞ்சத்தங்கேட்டேன், வாமேதான்வாத்தியங்கள் கோ
ஷ்டம்போல வளமையுடன்வினோதவகைவரிசைகேட்டேன், நாமே
தானிருக்குமந்தகாலந்தன்னில் நலமாகச்சமாதியதுதிறக்கலாச்சே.

சமாதி திறந்தது.

திரக்கையிலேசத்தியரிச்சந்திரன்றன் திறலானசமாதியதுயென்
னசொல்வேன், சுரங்கமுடன்சுடரொளிபோல்காணலாச்சு சுக்கும்
மாந்தேகமதுமின்னல்போலாம், இரங்கவேமூன்றுபடி கடந்துபோ
னேன் இராஜனுமரிச்சந்திரனருகிற்சென்றேன், வரங்கொண்டவரிச்ச
ந்திரனென்னைப்பார்த்து யாரப்பாவந்தவனீரென்றார்பாரே. ௭௯௦

பார்க்கவேபாலனுமேகால்நடுங்கி பாராளும்ராசனுக்குப் பதிவு
கூற, ஏர்க்கவேமுடியாமல்மைந்தாயானும் பெரிலாகக்காலாங்கிசீஷ
னென்றேன், தீர்க்கமுடனவர்தானுமென்னைப்பார்த்து திறமுடனே
யவரெனக்குவுரைத்தவாறு, மாந்தமுடனென்தகப்பன் திருச்சங்கு
தானு மகத்தானசமாதியிலேபோனார்தாமே. ௭௯௧

போகையிலேகாலாங்கிசமாதிதன்னைப் பொங்கமுடனவர்போயி
க்கண்டதுண்டு, சாகையிலேயிடம்வாக்குத்தெரியும் பாலர்சதகோடி
யுகமதுவுஞ்சென்றுபோச்சு, ஆகையினாலுந்தமக்குயானுஞ் சொன்
னே மப்பனேபோகரிஷிவன்பதாக, வேகையிலேபுறங்காடுசுடுகாடப்
பாவெகுகாலம்யானுமல்லோ காத்தேன்பாரே. ௭௯௨

காத்தேனேமேதினியில் மெய்யொன்றுக்காய் கனமழிந்துகாடு
றைந்துகடந்துநின்றேன், நாத்தமுடன்சுடுகாடுகாத்திருந்து நலமுட
னேபிள்ளைமுதல்மனைவிதோத்தேன், பூத்தமலர்முச்சுகுணதேவிதன்
னைபொற்காசுவிசுவாமிக்கடனுக்காக, தோத்தேனேனுடுமுதல் நகர
மெல்லாந்தொலைத்தேனேசமுசாரதொல்லைதாமே. ௭௯௩

தொல்லைவிட்டுசமாதிக்குச்சென்றேனப்பா தொல்லுலகில் பற்
றொன்றுயில்லைகண்டீர், அல்லலெனுமரசாட்சிவிட்டுநீங்கி அப்பனே
சமாதியிடங்கண்டேனென்றார், மெல்லவேசதாகாலம் பூமிதன்னில்
மேதினியிலிருந்தோர்க்குப்பலனொன்றில்லை, வெல்லவேபூலோகமாய்
கைவிட்டு விருப்பமுடன்சமாதிதனிலிருக்கநன்றே. ௭௯௪

அரிச்சந்திரனிடம்போகர்வுபதேசம்பெற்றது.

இருக்கவென்றவார்த்தையதுகேட்டபோது யென்மகனேயென்புத்திலயித்துப்போச்சு, பொருத்துமுடிபோகவில்லைபூமியாசை பொன்னுலகங்காண்பதுவேபுண்ணியந்தான், திருத்தமுடனிவ்வுலகிலிருந்துமென்ன திறள்கோடிவித்தைகளுங்கற்றுமென்ன, வகுத்தமுடன்குளிகையிட்டுப்பறந்துமென்னவாகுடனேலோகமதிலொன்றுங்காணே

காணேமேயென்றுமல்லோகலங்கிநின்றேன் காலாங்கிநாதருட கிருபையாலே, தூணதுபோலங்கிருந்தவிருட்சந்தன்னில் சுடரொளிபோல்சோதியதுகாணலாச்சு, வீணையுடன்வாத்தியங்கள்முழங்கலாச்சு வேதாந்தத்தாயினதுமகிமையப்பா, நாணமுடன்பார்த்துமுனிசித்தரப்பா நடுக்கமுடன்றானடுங்கிபயந்திட்டாரே. ௭௯௬

பயந்திட்டசித்தர்களையான்வணங்கி பரிவாகசிரங்குவித்துவணக்கஞ்செய்து, நயமுடனேவதிசயங்கள்கேட்கும்போது நாதாந்தத்தாயினதுபிரகாசந்தான், மயமுடனேசத்தியரிச்சந்திரற்கு மகிமையுடனெப்போதுங்காட்சியுண்டு, தயவுடனேநிர்வாணிரூபவர்ணிசதாகாலங்காட்சியதுதருவாள்பாரே. ௭௯௭

தருவாளேமனோன்மணியுந்திரிகாலந்தான் தரணிபதியாளுமரிச்சந்திரற்கு, குருவானசித்தர்முனிரிஷிகளப்பா கூறினாரெந்தமக்குவண்மைமெத்த, திருவானவார்த்தையதுமிகவுங்கேட்டு திரனும்ராஜனிடமொழியுங்கேட்டு, மருவாமைவுபதேசமெல்லாம்பெற்றுமார்க்கமுடன்சீனபதிக்கேகினேனே. ௭௯௮

போகர்சீனபதிக்குவந்தது.

ஏகினேன்சீனமென்றபதிக்குமைந்தா யெழிலான குளிகைகொண்டுபறந்தேனப்பா, பாகமுடனுபதேசம்பெற்றமார்க்கம் பாங்குடனேவெள்ளையென்றமனிதரப்பா, வாகுடனேநூல்படியே முறையோதித்துவளமை பெறசமாதிக்குவழியுஞ்சொன்னேன், வேகுடனேவெகுகால மிருந்தேன்யானும் வேடிக்கைசிமிட்டுவித்தை செய்தேன்தானே. ௭௯௯

போகர்காத்தாடிவித்தைசெய்தது.

தானானபிரமகோடிவித்தைசெய்தேன் தாக்கானகாத்தாடிவித்தைவித்தை, மானானவித்தையிலுமதீதவித்தை மாணாக்கள்புகலுகிறேன்மகிமைகேளு, வேனானபட்டமதுகெஜமோபத்து வேகமுடன்நீளமதுகெஜமோபத்து, பானானவட்டமதுநடுவட்டந்தான் பாங்குடனேவுள்வட்டமுழந்தான்ரண்டே. ௮௱

இரண்டானபக்கவட்டமுன்றேயாகு மெழிலானநெடுவட்டம்நா
லேயாகும், முரண்டானவெளிவட்டம் சக்கரம்போல் மூலத்தின்வுள்
வட்டம்கமலமாகும், திரண்டானசுற்றேரம்கம்பியப்பா திரளானகம்
பிகளில்காதுரண்டாம், உருண்டானநடுக்கம்பில்சூட்சாதாரம் வுத்த
மனேபுறவட்டம்வளையமாமே. ௮௱௧

வளையுடனேயவ்வொன்றில் கொலுசுமாகும் வரிகளிலேகாந்தம
துசந்தேயாகும், களையுடனேநாரென்றபட்டேயாகும்கம்பிகளில்தை
யல்களைவோட்டவேண்டும், துளையானகொலுசுகளில்குண்டேயாகுந்
தோராதகயறுகளில்சூட்சமாட்டி, மூளையுடனேபூமிதனில்கயிறைமா
ட்டி மூர்க்கமுடன்பறக்துகையில் கயிறைத்தட்டே. ௮௱௨

தட்டையிலேகாத்தாடிதான்பறந்து சந்திரனார்மண்டலத்தினள
வுமட்டும், கெட்டையிலேதான்பறந்துநின்றுவாடும் நிலையானசூட்சா
திசூட்சத்தாலே, முட்டையிலேவுள்ளிருந்த கருவைப்போலு மொரு
ங்குடனெநின்றுடும் நெடிநேரந்தான், சட்டையிலேநாற்பட்டுக் காற்
றைக்கொண்டு சடுதியிலேதானெடுக்கும்பான்மைபாரே. ௮௱௩

பான்மையாம்வாயுவது மேலாதாரம் பற்றுகையில்காத்தாடிமே
லேநோக்கும், வான்மையுடனடுக்கம்பி வட்டந்தன்னில் நயமுடனே
சூட்சாதிசூட்சந்தன்னை,மேன்மையுடன்கயிர்மாட்டிசுறுக்கும்போது
மெல்லெனவேகாத்தாடியிறங்கலாகும், தான்மையுடன்சுக்கானின்சூ
ட்சமப்பா தாரணியிலாரறிவார்விசுவர்தானே. ௮௱௪

விசுவனும்தேவகம் மாளசித்தன் வேணபடிசெய்துமல்லோசூட்
சங்காண்பான், பசுவுடனேகண்சேர்ந்த கதையைப்போல கருத்தறி
யார்முழுமூடர்காண்பரோதான், முசுறுடையயிரும்பதனில்காந்தஞ்
சேர்ந்து முடித்தார்கள்காத்தாடிவித்தைவித்தை, நசுறுண்டாய்சூட்
சாதிசூட்சமார்க்கம் நாமுரைத்தபடியாருங்கண்டிடாரோ. ௮௱௫

கண்டபடிகருத்துடைய சித்தர்தாமும் காசினியில்செய்தவருங்
கண்டோரில்லை, கண்டபடிகாத்தாடிசூட்சாசூட்சம் கயிர்நிற்கும்வழி
யறிபார்துறையுங்காணார், கண்டபடிகருவூரார்செய்துபார்த்தார் கரு
த்திலேயவர்தனக்குந்தோன்றவில்லை, கண்டபடிபெத்தனுடபுத்தியா
லே காத்தாடியான்முடித்தேனவனியோர்க்கே. ௮௱௬

முடித்தேனேசீனமென்றபதியில்தானும் முனையானகாத்தாடிய
டிவாரத்தில், படித்தளமாம்தோணிய துமிகபோல்கட்டிபாங்கானமா

ளிகைபோல்தானமைத்து, குடித்தனமாஞ்சனங்கள்பதினாயிரம்பேர் குடைபடியில்தானேத்திக் கொண்டுசென்று, நடிப்புடனேதேவாதி தேவர்தானும் நாணமுற்றுபார்த்திடவேநடத்தினேனே. அாஎ

நடத்தினேன்சீனபதிசனங்களெல்லாம் நலமுடனேகாத்தாடித ன்னிற்கொண்டு, திடத்துடனேசீனபதிமூன்றுகாதம் திறமையுடன்சு த்திவந்தேன்சித்தர்மெய்ச்ச, வடத்திடமாய்சூத்திரக்கயிர்திரட்டி வா குடனேசீனபதியிறக்கிவிட்டேன், தடத்துடனேசீனபதி சனங்களெ ல்லாஞ் சந்தோஷித்தென்பேரிலன்புற்றாரே. அாஅ

கமலமுனி பரிவுகூறினது.

அன்புற்றார்கமலமுனி சேதிகேட்டு அப்பனேபோகரிஷி புகலக் கேளுமை, வன்புற்றயிதிகாசவித்தையெல்லாம் வளமுடனேகாட்டிவிட் டால்பூலோகத்தில், இன்புற்றுயாரொருவர்மதிக்கப்போறார்யேகவெ ளியாகிவிடுமென்னுகேளு, துன்புற்றுவந்தனையுஞ் சபிப்பாரப்பா சூட் சாதிசூட்சமதை வெளிகாட்டாதே. அாகூ

காட்டினல்லோகமெல்லாஞ்சித்தாய்ப்போகும் கசடருக்குகாட் டாதேகருணைபோகும், தாட்டிகமாய்நல்லோர்க்குகருவிகாட்டுதயை யுடனேயுபதேசம்பாவங்கூறும், கோட்டமுடன்முழுமக்க ளொன்றா ய்க்கூடி கொடிப்பார்கள்பகடிமெத்தக்கூறுவார்கள், தாட்டியுடன்பு ல்லோர்க்குபுத்திகூறு சதாகாலம்தானினைப்பார்தன்மைபாரே. அாய

இரசசெந்தூரம்.

பாரேதானின்னமொருமாற்கங்கேளு பாங்கானசூதமதுசேர்தா னென்று, சீரோதான்நாகமது சேர்தான்பாதி சிறப்புடனேயூகமதாய் வொன்றாய்க்கூட்டி, நேரேதான்வட்டோட்டில் பில்லையூத்து நேர்ப் பாகமில்லைக்குசுறுக்குதாக்கு, ஆரோதானாராதாரச்சரகா லப்பனே செயநீர்தான்செய்துகொள்ளே. அாயக

கொள்ளவேசெயநீரா சுறுக்குதாக்கு குணமுடனேசூதமதுயிறு கிக்காட்டும், விள்ளவேகிண்ணமதுசாற்றக்கேளும்வேடிக்கைசிமிட்டு வித்தைவாதம்பாரு, மெள்ளவேசரக்குவகையாமுறைப்போம்மேதினி யிலார்செய்வாரிந்தபாகம், துள்ளவேமிறுதாறுசிங்கிதானும் துறை யானதுருசுடனேகாரமாமே. அாயஉ

காரமாம்வீரமுடன் பூரமாகும் கருவானசீனமுடன் பாஷாணந் தான், தாரமாம்கெந்தியுடன்லிங்கந்தானும் தாக்கானசூடனுடன்கெ

வுரிதானும், காரமாம்காந்தமுடன் காடிக்காரம் கடிதானசாரமுடன் பூநீராகும், தீரமாம்பவளத்தின் புத்துமாகும் திறமான சலாசத்துப் பலந்தான் தூக்கே.   அ௱௰௩

பூட்டவேவிரிசியதுவிட்டங்கொண்டு புகழானசுள்ளாணி யிரும் புமாட்டி,மாட்டியதோர்யிரும்புக்குவளையமிட்டு மார்க்கமுடன்சுத்து புரம்கம்பிமாட்டி, நீட்டமுன்நாற்சதுரமத்திவட்டம்நெடியதொருகு ழலொன்றுமுனையில்வைத்து வாட்டமுடன்மத்தகஜம் தலையுண்டாக் கி வளமுடனேதலைகுழையில் சில்லுபோடே. ௨௱௫

சில்லுதனையெடுத்து மிகப்பூட்டிப்பார்க்கச்சிறக்கவேமறைகொ ண்டுதிருவல்பூட்டிப், பல்லுடனேசக்கரத்தில் திருவுபூண்டுபக்கமிரு புறமுமட்டும்குழைகள்விட்டு, மல்லுடனேமல்லணிந்து குழைசிபோ ட்டு மல்லினதுமேற்புறத்தில்குழைகள்நிற்க தெல்லுபோல்தகடதனை வருளைசெய்து தேர்வட்டம்போலாகத்தெரியபூட்டே. ௨௱௬

பூட்டுகையில்வில்லாணிசுள்ளாணியப்பா புகழான நடுச்சட்டம் திருகுசட்டந்தானும், தாட்டிகமாய்கயிற்போலத்திருகுகம்பிமாட்டி சட்டங்களில்மூன் றுவட்டபிறைபோலுண்டாக்கி, நீட்டமுள்ள செஜநூ றுவண்டிரதம்போல நெடிதானசட்டமதுவளவுடனேமாட்டு, காட்டவேவகலமதுகெஜமுப்பதாகும் கருணையுடனங்குலங்கள்வரைதப்பாமாட்டே. ௨ாள

தப்பாமல்மாட்டையிலேதேர்கொண்டசூட்சம் தாரணியில்போகுதற்குச்சட்டமுடன்கூட்டு, ஒப்பமுடன்காலில் ஒருபக்கமிகவாணி ஒங்குபுகழாணியிலேதிருவல்மிகமாட்டி செப்பமுட னடிவாரக்குழை தனிலேசில்லு, சீராகத்தானமைத்துகழுத்துக்கட்டைமாட்டி, நெப்பமுடன்சிம்மாடுகெட்டைதனில்மத்திநேராகதிருவலது சொருவல்மிகப்பூணே. ௨ாஅ

பூணவேநெடுங்கம்பியாறுவகைசட்டம் பூட்டியதோர் கம்பிகளிலாறுவரைக்குறுக்கு, தோணவேமேற்புரமுமடிப்புறமுமப்பா துப்புறவாய் நடுக்குழலில்யிருபக்கமடைத்து காணவேவாயுவென்ற காற்றதுவுமொடுங்கி, கடையாணிசுழலாணிசுள்ளாணிமுடுக்கி மாணவேபின்பக்கம்சட்டிகுழல்வைத்து மதிப்புடனேகொப்பறைபோல் வுருவையதுசெய்யே. ௨ாகூ

செய்யவேகொப்பறையில் வக்கினியும்நிற்க சேரவேவப்புவென்றகொப்பறைபின்பக்கம், உய்யவேசலமதுவும், ஆவியோடொக்கவுற்பனமாய்வாவிய துமேல்நோக்கிப்பாய, எய்யவேகுணபாலேநெருப்பதனைமாட்ட, பெழிலானவுள்ளாவிமேலாவிகொண்டு, பையவேசலமிருக்குமிடந்தனிலேபரவி பறக்குமே முன்குழலில்பரவிமிகப்போமே.

போகவேகைசுழலல் மறைதிருவலப்பா பொங்கமுடனீராவி தன்னில்மிகச்சார்ந்து, பாகமுடனக்கினிபின் காற்றதுவுமொடுங்கி பறந்துமேபெருங்குழாதன்னில்மிகச்சார்ந்து, சாகமுடன் சூத்திரங்கள் கண்டுமிகதிருப்பக் கர்ச்சனையாமாவியுடன்பறந்துமிகவோடும், தாகமெனும்பாணியினல்யாவிமுதலெல்லாம் தட்டொடுங்கிகுழல்தனிலே தரித்துமிகப்போமே. ௨ாயக

போமேதான்பஞ்சபூதமிதிலொடுக்கம்பாரு போக்கான வாயுதனில் தேயுமிகச்சார்ந்து, வேமேதான் தேயுவிலே வப்புமிகக்கலந்து வேகமுடனவிதனைவிளைவிக்கும்பாரு, தாமேதான்பிரிதிவினில் வாகாஷமொடுங்கி, தாரணியிலுள்ளடக்க பெட்டிமிகவாச்சு நாமேதான் சொன்னபடிபஞ்சகர்த்தாள்நாட்டினேன்தேவரதம்நாட்டினேனே.(

நாட்டினேன்நாதாக்கள் கண்டதில்லைநலமுடனே நூலாதிநூல்களெல்லாம், வாட்டமுடன்கண்டறிந்துவுளவுபார்த்துவளமுடனேசெய்துவைத்தேன்சீனந்தன்னில், தாட்டிகமாய்சீனபதிமூன்றுகாதம்தாரணியில்சுத்திவந்துவினோதஞ்செய்தேன், ஓட்டமுடனிமையகிரியோரம்சென்றேன் ஓகோகோநாதாக்கள்ரிஷிகண்டேனே. உாயகூ

கண்டேனேகோடிமுனிசித்தரப்பா கைலங்கிரிவாசரைப்போல் கோடாகோடி, தெண்டமுடனடியேனுங் காலாங்கிதம்மைத் தெளிமையுடனுனினைத்து சித்தர்தம்மை, கொண்டபடிசெனங்களெல்லாமேத்திக்கொண்டு கோர்வையுடனுயிரமாம் ரதங்கள்மாட்டி, அண்டர்முனிராட்சதர்கள்கிடுகிடுக்க அவனியெலாஞ்சுத்திவந்தேன்பாயத்தானே. உகச

போகர் உரோமபுரி கண்டது.

தானனரோமபுரிசுத்திவந்தேன் தாக்கானயெண்ணுயிரங் காதமப்பா, வேனனசித்தர்களையேற்றிக்கொண்டு வேகமுடன்தானடத்திவந்தேனப்பா, கோனனகுருசாமிகாலாங்கிநாதர்கொற்றவனும்ரோமபுரிராசர்தானும், பானனசமாதியிடமிடமுங்கண்டேன்பட்சமுடனவ்விடத்திலிறங்கினேனே, உகரு

இறங்கினேன்ராசரிடசமாதிகண்டேன்யெழிலானயேசுவின்றன்சீஷர்கண்டேன், சுறங்கமுடனிம்மான்வேல்சமாதிகண்டேன்சுத்தனும்பரிசுத்தர்சமாதிகண்டேன், வரங்கொடுக்குமிசுரவேல் சமாதிகண்டேன் வளமுடனேரோமபுரி தேசத்தார்கள், திறமுடனேரோமபுரிக்கோட்டைக்குள்ளேபோகுவதும்வருவதுங்கண்டேன்தானே. உகசு

கண்டேனேகோட்டைவழி சென்றபோது கடுங்காலையாயிரம் பேர்சூரரப்பா, தெண்டமுடன்யேசுவின்தன்பாதம்போற்றி தெளிவுடனே ஞானவுபதேசஞ்சொல்வார், பண்டிதங்களதிவிசேடமனைத்துமுண்டு பனிரண்டுசீஷவர்க்கச்சமாதியுண்டு, மண்டலத்தில்தானிருக்கும்யேசுதம்மைவணக்கமுடன் வரங்கேட்போர்கோடியாமே. உகஎ

கோடிபேர்சமாதிநிலைதன்னைக்கண்டேன் கொற்றவனும் ரோமபுரிசமாதியோரம், தேடியேபார்க்கவென்று போகும்போதுதேர்வேந்தராசப்பாயிசுரவேலர், நாடியேதபசிகளாமாயிரம்பேர் நலமுடனேசமாதியதுலக்கோரயில்லை, கூடியேபார்க்கையிலேவினோதமெத்தக்கூறவேமுடியாதுதிண்ணமாமே. உகஅ

திண்ணமாம்யெகிபத்துதேசங்கண்டேன் 'திடமுள்ளமாதாவின்தேசம்போனேன், வண்ணமுடன்யூதாவில்கோடானுகோடி வனந்தனிலேரிஷிகளப்பா சொல்லொண்ணாதே, எண்ணவேஏசுவின்றன்மகி

மைமெத்தஎடுத்துரைத்தார் சீஷர்வற்கமனேகம்பேர்கள், சண்ணலு டன் மலையெல்லாஞ்சுத்திவந்தேன் சாங்கமுடன்யீசர்க்குசமாதியுண் டே. ௨௧௯

உண்டானசமாதியிடம்போயிருந்தேன் ஓகோகோநாதாக்கள்சீ ஷவர்க்கம, கண்டேனேவெகுகோடிவதிசயங்கள் கலியுகத்தில்கண் டதில்லையிதுபோலப்பா, தண்டவனந்தான்தாண்டிசுத்திவந்தேன் ச கலசனசீஷபதிமார்க்கத்தாரை, கொண்டுமெல்லோவவரவர்கள்தேசம் விட்டுக்கொப்பெனவேதிரும்பிவந்தேன் சீனந்தானே. ௨௨௰

போகர்எருசலேம்பட்டணம்கண்டது

தானனமார்க்கமதுயின்னஞ்சொல்வேன் தகைமையுள்ளயெருச லேம்நகரத்திற்கு,வேனனகாலாங்கிநாயர்பாதம் விருப்பமுடன்றன்வ ணங்கியடியேன்யானும்,பானனகுருபரனேவணங்கியானும்பார்க்கவே யெருசலேம்போகவைன்று, மானனமாதாவைக்காணவென்று வணங் கினேனவர்பாதம்தொழுதிட்டேனே. ௨௨௧

தொழுகையிலேவசரீரிவாக்கியந்தான் தொடர்ந்துமேயவரிடத் தில்பிறந்ததாச்சு, எழுந்துமேபுகைரதத்தைநடத்திக்கொண்டு ஏகி னேன்யெருசலேம்நகரத்திற்கு, செழுமையுடன்தேசமெல்லாம் சுத் திவந்துசீர்பெறவேதாணிறக்கியடியேன்தானும, பழுதுமிகநேராமல் குளிகைபூண்டு பட்சமுடன்மலைமீதிற்சென்றேன்பாரே. ௨௨௨

சென்றுமிகப்பார்க்கையிலேகுகைகள்வுண்டு சிறந்ததொருகுகை தனிலேமலுங்குமார்கள், குன்றின்மேல்கோடானகோடிபேர்கள்கொ டுந்தபசியங்கிருந்தார்லக்கோயில்லை, தன்றனநபியுடையசீஷவர்க்கம் சார்பாகவொருபக்கம்தவமிருப்பார், பன்றனசீஷர்களுமனேகமுண் டுபடைபொருதபெண்மேலேவந்தார்தானே. ௨௨௩

வந்தாரேநபியுடையசீஷவற்கம் வளமையுடன்கோடிபேர்சூழ்ந் தாரப்பா, சுந்தரனேயாரென்றுகேட்கலுற்றார்சுடரொளிபோல்சொ ரூபமதைக்காணும்போது,எந்தனுக்குப்பயங்கொண்டுநடுக்கலாகியெ ன்மகனேகாலாங்கிசீஷனென்றேன், அந்தமுடன்யெந்தனேயும்பெரு ம்பாலாகவாதரித்துக்கோபமதை தணித்திட்டாரே. ௨௨௪

தணிந்தபின்புயெந்தனேயுமெங்கேவந்தாய் தயவுள்ளசிறுபாலா கூறுமென்ன, கணிதமுடனடியேனும்புகைரதங்கள் காசினியில்யா ரேனுமதிசயிக்க, துணிவுடனேசித்தர்முனிரிஷிகள்தம்மை சுகமுட னேதானேத்திசீனந்தன்னில், அணியணியாய்க்கொண்டுசென்று அ வனியெல்லாமவரவற்கு வதிசயத்தைக்காட்டினேனே. ௨௨௫

காட்டிவந்தேன்சீனபதிதன்னிற்சென்றேன் கடவுளாமேசுவின் றன்காட்சிகண்டேன், வாட்டமுடனபிமார்கள்சீஷர்வற்கம் வகையுடனேகாணவென் றுதிரும்பிச்சென்றேன், நாட்டமுடன் புகைரதத்தை மாட்டிக்கொண்டு நலமுடனேயெருசலேம் காணவந்தேன், மாட்டிமையாய்குளிகையது பூண்டுகொண்டு மாநபியைக்காணவென் றுவந்திட்டேனே. ௨௨௬

வந்திட்டேநபிபாதங்காண வந்தேன்வாகானசீனவர்க்கர் யென்னைநோக்கி, சொந்தமுடனுபசரணைமெத்தசெய்து தேவனிங்கேயில்லையென்றுவாக்குரைத்தார், எந்தனுக்கும்மனஸ்தாபம் மிகவுண்டாகி யென்சாமிநபிதனையேக்காணவென்று, நொந்துமனந்தானிருக்கசீஷவர்க்கம்நோக்கமுற்றுயெந்தனுக்குவழிசொன்னுரோ ௨௨௭

போகர்மக்காபுரிகண்டது.

சொன்னவுடனடியேனுமடிவணங்கி துணையாகசீஷவர்க்கம்கூட்டிக்கொண்டு, நன்னயமாய்புகைரதத்தில்யேத்தியேநான்நாதாந்தநபிதனையைக்காணவென்று, மனனர்மெய்ச்சு மக்காவாம் புரியைக்காணவகையுடனே நெடுந்தூரம்ரதந்திருப்பி, பன்னகரந் தனிலோரஞ்சென்றுயானும் பட்சமுடன்புகைரதத்தைநிறுத்தினேனே. ௨௨௮

நிறுத்தினேனங்கிருந்தார்சேனைவர்க்கம்நிலையான்புகைரதத்தைக்கண்டபோது, திருத்தமுடன்யோடிவந்தார்கோடிபேர்கள் திரளானநபிக்கூட்டமலுங்குமார்கள், பருத்தமலைதனையோரம்சமாதி பக்கம்பதுங்கியேகார்த்திருப்பார்சமாதிதன்னில், வருத்தமுடனபிபாதங் காணவென்றுவந்திட்டேன் பென்றலுமேயென்னைப்பார்த்தாரே,௨௨௯

பார்த்துமேநபிபாதம்காணவென்றேன் பட்சமுடன் கோரிக்குட்சென்றேனப்பா, நேர்த்தியாம்நவரத்தினசமாதிக்குள்ளே நேர்மையுடனபியிருக்கசொன்னுரப்பா, தீர்த்தமுடன்ரொட்டியொன்று யீய்ந்தாரப்பாதிறமுடையமலுமார்களாயிரம்பேர், கார்த்திருந்தேன் நெடுநேரமடியேன்தானும், கண்ணெதிரேரூபமதுகண்டிலேனே. ௨௩0

கண்டிலேன்நபிநாயகன்னைக்காணேன்காதாலேவசீரிவாக்குண்டாச்சு, அண்டர்முனிராட்சதர்கள் திடுக்கிட்டேங்க அவனியெல்லாந்தானடுங்கசப்தமாச்சு,தொண்டர்களெல்லாங்கூடியுத்தாலாவை தொழுதுமேபணிந்திட்டாரந்தநேரம், தெண்டனிடும் போதையிலே மலுங்குகூடத் துணையாகயானுமொருமலுங்கானேனே. (௨௩௧)

மலுங்காகத்தானிருந்தேன்வலதுகாலம் மானபியைக் காணவென் றுயெண்ணங்கொண்டேன், கலுங்கபத்திமுதலான சீஷவர்க்கம்கு

ணைகாணூர்கோடிமன்னர்காணீயிவார்,பலுங்குடனேபனிரண்டுவாண்
டுவாண்டுபாரினிலேசமாதியின்றன்சத்தமுண்டு,பலுங்கையுடசத்தம
துசதாகாலந்தான் பாலிக்குமென்றுனைம்பண்பதாமே. உ௬௨

பாண்பானசெய்திபல்லோ கண்டறிந்தேன் பட்சமுடநபிநாயந்
தன்னைக்காணேன், கண்பானசமாதியிலேமகிமைமெத்த காட்சியுட
னகாணுவதுமிகவுமாச்சு, நண்பானநபிக்கூட்டம்கோடிகாவல்நலமா
னசமாதியிலேயிருப்பாரப்பா, திண்பானமுகம்மதுமார்க்கத்தார்கள்சி
றப்புடனேகண்டேனேகோடிபேரே. உ௬௩

கோடியாம்பணிபணிபாய்ப்பார்த்து வந்தேன் கூறவேபோகாது
குவலயத்தில், தேடியேதிரிந்தாலுமக்காவைப்போல்செகத்திலேவதி
தமுள்ளதேசமுண்டோ,நீடியேமகிமைகளுமனேகமுண்டுநீணிலத்தி
ல்யான்சென்றேன்தேசமெல்லாம், பாடியேகுளிகையதுபூண்டு கொ
ண்டுபாரெல்லாஞ்சுத்திவந்தேன்பண்பாய்த்தானே. உ௬௪

பக்கிரியாக்கோபைக்கண்டது

தானேதான்சீனபதியேகவென்றுதாழ்ச்சியுடன் வுத்தாரங்கேட்
கும்போது, மானேதான்பக்கிரியாக்கோபுதானும் மகாதிட்சைபெறு
கவென்றுவணங்கிபென்னே, தேனனகாலாங்கிபாதங்காணதெளிவுட
னேயெந்தனுக்குவரமுமீவாய் பானனகமலமுனிதன்னைக்காணபட்ச
முடனிருப்பிடமுஞ்செப்பிடீரே. உ௬௫

செப்பவென்றுயாக்கோபுயென்னைக்கேட்கதெளிவுடனேயானு
மல்லோவிடையுஞ்சொல்லி,ஒப்பமுடன்புகைரதத்திலேற்றிக்கொண்
டுவுத்தமனேசீனபதிசென்றேன்யானும், கப்பலெனும்நீராவி மார்க்க
மாகக்கடுந்தூரந்திவுகளுஞ்சுத்திவந்து, மெப்புடனேசீனபதிகரையில
ப்பாமேன்மையுடனிறக்கிவிட்டேன்பாலன்றனே. உ௬௬

பாலனும்யாக்கோபுசித்தர்தாமும், பட்சமுடன் கமலமுனிதன்
னைக்காண, சீலமுடனுசோபசாரந்தன்னல் சிறப்புடனே சமாதியிட
ந்தன்னிற்சென்றார், கோலமுனிபானதொருகமலர்தாமும் குவலயத்
தில்சமாதியிலே யிருந்தாரங்கே, ஞாலமுள்ளசித்தொளிவைக் காண
வென்றுமகிழ்ச்சியுடன்சமாதியிடம்நெருங்கினரே. உ௬௭

நெருங்கியேகமலரிடசமாதிகண்டார்நேர்மையுடன்யாக்கோபுவ
ணங்கிநின்றார், கருங்கல்லுக்குள்ளிருந்தசித்துதம்மைக்கண்ணாலே க
ண்டாராம்யாக்கோபப்பா,உருகவேயடிபணிந்துபக்கிரிதானும்வுத்த

மஞர்த்தவமுனி பாதங்தொட்டு, தருகவேதாமெனக்குத் தயைசெய் யென்றுதாழ்மையுடன்கேட்டாராம்சித்தர்தாமே. உசல

தாமானயாக்கோபு கேட்கும்போது தயையுடனே கமல முனி சாற்றலுற்ருர், பூமானம் யாக்கோபு மைந்தாகேளு புகழ்ச்சியுடன் சொல்லுகிறேனுந்தமக்கு, நாமமுடன்தேசமெல்லாஞ்சுத்திவந்தீர்நா தாக்கள்சித்தர்முனிரிஷிகள் தம்மை, தாமமுடனவர்களிடம்வாதுபே சிசமர்த்துடனேவென்றுவந்தபாலாகேளே. உசக

கமலர்யாக்கோபுக்கு புத்திகூறல்.

கேளப்பாயுலகத்தில்கொடியசித்தர் கோடான கோடியுண்டுயி ருப்பாரப்பா, தான்மைபாய்வவர்களிடம்பேசியல்லோ சாங்கமுடன் வுளவுகளையறியவேண்டும், ஞானமுடனவர்களுக்குத் தொண்டுசெய் து நளினமுடன்ஞானத்தைதெரியவேண்டும், வேளாமையாய்யெதிர் த்துமிகவாயாடாதேவீண்வார்த்தைதாமிழுத்துசபிப்பார்தாமே. ()

சபிப்பாரேபக்குவமாய்நடந்துகொள்ளு சதாகால மவர்களிடம் பூசித்தேதான்,அபிமானம்தான்வரவே நடந்துகொள்ளு அப்போதே யுன்மீதில்கிருபைவைத்து, நபியுடைய மகிமைதனைப் பற்றியேதான் நாதாக்கள்மரியாதைசெய்வாரப்பா, கபிலமுனிநெடுங்காலமிங்கே வ ந்தார்கண்டல்லோசித்தர்களுஞ்சபித்திட்டாரே. உசங

இட்டாரேசித்தர்முனிரிஷிகள்தாமு மிடையூறுபேசினதோர்தர் க்கத்தாலே, கெட்டாரேகபிலமுனிக்கல்லாயப்போனுர்கெடியுடனே சித்தர்களுஞ் சமைத்தாரங்கே, கிட்டிருந்து மரியாதியாவும்பெற்றக் கிருபையுடன்மாக்காவுக்கேகுமென்ருர், சட்டமுனிமுதலானேரிங்கு வந்துசாங்கமுடனுபதேசமடைந்தார்பாரே. உசச

பாரேதான்போகரிடதீரம்வேண்டும் பண்பானவிட்டகுறைநேச ம்வேண்டும்,சீரேதான்காலாங்கி பட்சம்வேண்டும் சிறந்தமுனிபலபே ர்கள்கிருபைவேண்டும், நேரேதான்குளிகைபதுபூணவேண்டும் நீணி லத்தில்பெருமையது கீர்த்திவேண்டும், மேரேதான்கண்ண பிரானரு ளும்வேண்டுமில்லாட்டாலவனியிலேவெல்லார்தாமே உசரு

வெல்லார்களென்றுசொல்லியாசீர்மித்து விதவிதமாய்வேணதெ ல்லாந்தாமுரைத்து, சொல்லாதுமிகச்சொல்லி சுருபஞ் சொல்வித்து ணையுடனே முறையோடுகதையுஞ்சொல்லி, வல்லானகாலாங்கிநாயர் பாதம்வணங்கியேயெப்போது மனதுலுன்னி, மெல்லாவேயுந்தனிட பதியைத்தேடிமேன்மையுடன்போகவென்று வரந்தந்தாரே. உசசூ

தந்தவுடன் பக்கிரியாக் கோபுகானும் சார்புடனேதம்பதிக்குப் போனாரங்கே, அந்தமுடன் காலாங்கிதாள்வணங்கி அப்பவேசீனபதி விட்டியானும், விந்தமுடனதிசயங்காண வெளிப்பட்டேன் சீனபதித ன்னைவிட்டு, சொந்தமுடன்மேருவுக்கு கடைபாகத்தில் சூரியனார்தா மிருக்குமிடங்கண்டேனே. உசஅ

போகர்சூரியர்வனம் பார்த்தது

கண்டேனேவனந்தனிலேமகிமைமெத்தக் கண்டவர்கள் விண்ட வர்களாருமில்லை, அண்டமுனி ராட்சதர்க ளசுரர்கள் கூட்டம் அணி யணியாய்யென்னைவந்துசூழ்ந்துகொண்டார், தண்டவனந்தன்னிலே யான்குளிகைபூண்டு தாரணியிலிறங்கினதைப் பார்த்தாரங்கே, கொ ண்டல்வண்ணமேகங்கள் கர்ச்சிப்பாலே கோடானகோடி வதிசயங்க ண்டேனே. உசகூ

அதிசயங்கள்மெத்தவுண்டு வங்கேதானும் அப்பனேவசுராக்கள் கூட்டமப்பா, பதிவைவிட்டுபதிதேடிவந்தவன் யார்பாலகனு யிருக்கி றானென்றுசொல்லி, துதிதமுடன்பெந்தனிடகிட்டவந்து துப்புரவா யாரென்று, வினவிக்கேட்கதிதமுள்ளபோகரிஷியடியேன்தானும்க லங்கியேதிடுக்கிட்டுநின்றிட்டேனே. ருுய

நின்றேனேகிடுகிடுத்துபயந்துபேங்கி நெடுமூச்சு தானெறிந்துப யமுமுற்று, குன்றருகேநின்றுவிட்டேனடியேன்தானும் கூச்சலுடன சுராக்கள்கிட்டியேதான், சென்றுமேயென்னையெடுத்து விழுங்கவந்தா ர் சோரமல்யானுமல்லோவார்த்தைபேசி,வென்றுமேகாலாங்கி நாய ர்பாதம்விருப்பமுடன்றாள்வணங்கிபணிந்திட்டேனே. ருுக

பணிந்தேனே யெந்தனுக்குப் பட்சம் வைத்துப் பாரிலுள்ளவி னோதமெல்லாம்காண்பித்தார்கள், துணிவுடனே சூரியனின் வனங்க ளெல்லாஞ்சுத்திபேவலசாரியாகவந்தேன், அணிபெறவேயாளியுடவ னமுங்கண்டேன், கணிதமுடன் பூமிமுதல்முனையுங்கண்டேன்காலா ங்கிநாதருடகடாட்சந்தானே. ருுஉ

போகர்தாது லேகியம்

தானானவின்னமொருமாற்கம்பாரு தாக்கானகாதுபுஷ்ட்டிகுளி கைகேளும், வேனானபேரீச்சங்காய்தான்சேரு மிக்கான வூமத்தின்வி ரை தான்சேரு, பானானகஞ்சாவின் விரைதான்சேரு பாங்கானமாது ளையின்விரைதான்சேரு, தேனானகொமட்டிவிரைசேர்தானப்பா, தெ ளிவானவத்திவிரைசேர்தானென்றே. ருுரு

ஒன்றானவினையுடனேயத்திவித்து ஒளிவான ஆலின்றன்வித்து வாகும், நன்றானதுத்தியிடவித்துவாகும் நலமானசூரியிடவித்துவாகு ம், தன்றானவாவாரைவித்துவாகும்தாக்கானவெட்பாலைவித்துவாகும் பன்றானகார்போகவித்துவாகும்பாங்கானவாதுமையின்வித்துவாமே.

ஆமேதான்காரையுடவித்துவாகும் அப்பனேகொன்றையுட வித் துவாகும், தாமேதான் புரசையிடவித்துவாகும் தயவானகொத்தமல் லிவித்துவாகும், வேமேதான்நீர்முள்ளிவித்துவாகும் வியர்வானசூரை யுடவித்துவாகும், காமேதான்பூனையிடவித்துவாகும் கறுப்பான பா லையிடவித்துமாமே. ௨௫௨

வித்தானவெள்ளிரியின்வித்துமாகும் விதமானகாசிரியின்வித்து மாகும், சத்தானவரைக்கீரைவித்துமாகும் சார்பானகுலாமல்லிவித்து மாகும், சுத்தானவாலையின்றன்வித்துமாகும் சுடரொன்றதாய்ப்பாகல் வித்துமாகும், சித்தானதேற்றானின்வித்துமாகும்சிறப்பானகருங்கொ ள்ளுவித்துமாமே. ௨௫௩

தானானபூசனியின்வித்துமாகும் தனியானயெட்டியின்றன் வித் துமாகும், பானானமுருங்கையிடவித்துமாகும் பாகானமுள்ளங்கிவித் துமாகும், கோனானவரசினிடவித்துமாகும் குணமானசோகியிடவித் துமாகும், தேனானதாமரையின்வித்துமாகும் தெளிவானவழிஞ்சியிட வித்துபாரே. ௨௫௪

பாரேதான்சாரத்தின்பருப்புகூட்டி பாங்கானகசகசாதானுங்கூ ட்டி, நேரேதான்சாதிக்காய்சாதிப்பத்திரி நேர்பானவால்மிளகு சுக் கோடேலம்சாரேதான்கிராம்புடனே மிளகுகூட சார்பானலவங்கமெ ன்றபட்டைதானும்,வேர்பானபூமிசர்க்கரையின்மூலம்விராவானமரா ட்டியென்றன்மொக்குமாமே. ௨௫௫

பிசினிவகை.

மொக்கானகருவேலம்பிசினியாகும் முனையானவெள்வேலம்பிசி னியாகும், தக்கானசாலான்றன்பிசினியாகும் தகையான முருங்கை யுடபிசினியாகும், செக்கானமாங்கனியின்பிசினியாகும் சிறப்பானவ த்தியின்றன்பிசினியாகும், சுக்கானவிசுக்கோலின் பிசினியாகும் சுக மானவாலன்றன்பிசினுமாமே. ௨௫௬

பிசினுடனேகருங்காலி பிசினியாகும் பிசகில்லாபூதத்தின் பிசி னியாகும், நசிதமுள்ளகுங்குமத்தின்பிசினியாகும் நலமான காட்டா

த்திப்பிசினியாகும், உசிதமுள்ள பலாமரத்தின்பிசினியாகும் உத்தம னே வூஞ்சனுடபிசினியாகும், கசிதமுள்ளவிளாவினிட பிசினியாகும் கருவானகசகசா பிசினுங்காணே. உ௫எ

பூவகை.

காணவேபூவினிடமார்க்கம்பாரு கருவானமுருங்கையிட பூவுமா கும், தோணவேயாவாரைப்பூவுமாகும் துறையானதென்னம்பூசாமந் திப்பூ, மாணவேமல்லியிடபூவுமாகுமகத்தானவிளாவினுடபூவுமாகும, சாணவேதாழையுடபூவுமாகும்சார்பானதாமரையின்பூவுமாமே உ௫அ

ஆமேதான்விலாமிச்சுபூவுமாகும் அப்பனேமாதுளையின் பூவுமா கும், வேமேதான்வேம்பினிடபூவுமாகும் வெளியானதும்பையிட பூவு மாகும், காமேதான்கிளாவினிடபூவுமாகும் கடிதானசெவ்வல்லிப்பூவு மாகும், நாமேதான்பூவகையின்ரசமுஞ்சொன்னேம் நலமானசெம்பூ ரான்பூவுதாமே. உ௫௯

மூலவகை.

தாமானமூலவகைச்சாற்றக்கேளு தாக்கான தண்ணீர்மிட்டான் கிழங்குதானும், காமானபனையினிடமூலமாகும் கருவானகரும்பினிட மூலமாகும், சாமானசெங்தொட்டிவேரினோடு சார்பான கருந்துளசி வேருமாகும், வேமானபிம்பூராவேருமாகு மிக்கானசெம்பாளை வேறு மாமே. உ௬0

மாமிஷ வகை.

வேறானமாமிஷமாமடைக்கலந்தான்வேகமுள்ள வுடும்புமுயல்க லைதானும், வாரானமுட்பன்றிமயிலுமாகும் வாகானசெம்புரவி வா ண்குறியுமாகும், தூரானகாடைகவுதாரியாகும் துறைமேயும்கொக்கு டனேபுராவுமாகும், தாராவாம்பெட்டையுடன் செஞ்சேவல்தானும் சாதாவாம்குறுமபாட்டியிறைச்சிபாரே. உ௬௧

இலாச்சியாம்விலாங்குடனேயித்தனையுங்கூட்டிபெழிலாகவெயி லுலர்த்திச்சூரணித்து, முறையுடனேவொவ்வொன்றில் சேர்தானப் பா, முயற்சியுடன்தானெடுத்து சேர்க்கக்கேளு குறையாமல் முன் சொன்ன சரக்கையெல்லாம், கூட்டுமுறைதப்பாமல் வொன்றாய்க்கூ ட்டி, நிறையுடனேசரசவகையுந்தடபாவண்ணம்நினவுடனே நெய்தே னிற்கிண்டிடாயே. உ௬உ

கிண்டையிலே சர்க்கரையுஞ்சரியாய்ச்சேர்த்துக் கிருபையுடன் மெழுகுபதம்தனிலிறக்கி, பண்டிதமாய்நெய்தேனும்கூடக்கூட்டிப்பா

கமுடன்தானிறக்கிகுளிகைசெய்து கண்டிதமாய் மண்டலந்தானத்தி சந்திக், கருவாகத்தின்றுமல்லோகூடும்போதுவண்டினம்போல்கல்வி யதுமிகவுமாகி மங்கையருமானிலத்தில்நடுங்குவாரே. உசுரு

நடுங்குவார்மானிலத்தில்பெண்களெல்லாம்நானுவாரபுருஷாளை க்கண்டபோது, கடுஞ்சோபமதிகமுடன்காதல்கொண்டு கர்ச்சனையு மிகவுண்டாய்கதிப்புகொண்டு, விடுமானும்கலையுடனே கலந்தமான் போல் விடாய்ப்பட்டுமன்மதன்போல் காதல்பூண்டு, தொடுமாதர்நா ன்குவிதசாதிபோனாத்தோராமலனுபவித்துப்பெயர்கொள்வீரே. ()

கொள்ளவென்றால் பத்தியங்களில்லையப்பா குணமுடனே வண் மையுள்ளபதார்த்தமெல்லாம், தள்ளவேபோகாதுசதாகாலந்தான்தா ரணியிலுண்டவற்குப்பலமேழானே, விள்ளவேயுண்டாகுங் குளிகையப் ப்பா, விண்டலமுமண்டலமுமிடங்கொள்ளாது, உள்ளபடி யிக்குளி கையார்தான்செய்வார்வுத்தமனேகருவாளிசெய்வான்பாரே. உசுறு

போகர் அஷ்டகிரிபர்வதங்கண்டது.

பாரப்பாவின்னமொருமார்க்கம்பாருபாங்கானமகமேரு கிழக்கே யப்பா, நேராகத்தானிருக்கும்பர்வதந்தான் நேர்மையுள்ள வஷ்டகிரி யென்பார்சித்தர், சார்வாகயானுமல்லோகுளிகையிட்டு சட்டமுடன் சினபதிவிட்டுயேகி, காரானகதிரோனின்வனமுந்தாண்டி கடினமுட ன்மலையோரம்சென்றேன்தானே. உசுசு

சென்றேனேயடிவாரத்தருகிலப்பா திரளானகோடிமுனி சித்த ருண்டு, குன்றினிடம்வுட்சென்றேன்யானுமங்கே குறிப்பானகுத்துக் கால்வொன்றுகண்டேன், பன்றியெனும்பெருச்சாளிவாகனத்தில் பா ங்குடனேகணபதியும்வீற்றிருக்க, வென்றிடவேகுத்துக்கல்பிள்ளையா னைவேண்டினேன்போகரிஷிவேண்டினேனே. உசுஎ

கணபதி சமாதிகண்டது.

வேண்டியேயிற்கையிலே கணபதிதானும் விருப்பமுடன் போக னைதான்வளப்பங்கேட்டார், தாண்டியேவனமெல்லாந் தான்கடந்து தகமையுடன்வருவதற்குநீதியுண்டோ, பூண்டமன துறுதியினல்வந்தா ய்நீயும், பூலோகமானிடனும வரலாமோதான்மாண்டுமேபோவதற்கு சித்தர்தாமும், மன்னவனேதான்சபிப்பார் பெருமைபாரே. உசுஅ

பாரோதான்யென்றலுமேகணபதிதானும் பாங்குடனேபோகரிஷி திடுக்கிட்டேங்கி, நேரோதான்கணபதியைச் சாஷ்டாங்கித்து நிலைமை பெறசுவாமியெனக்கெதியேதென்ன, சாரவேயென்மீதில்பக்ஷம்வைக்

துச் சாங்கமுடன்யெந்தனுக்குவுபதேசித்து, சூரனுமிருக்குமிடங்கா ணவென் றுசுந்தரருமவாக்களித்தார்சூட்சந்தானே. உசுகூ

சூட்சமுடனுபதேசமருளும்பெற்று சுடரொளியாம்பத்மா சூர ஊையுங்காண, தாட்சியுடனிரண்டாங்கால்வரையுமேறிதண்மையுடன் முதற்கோபுரவாசல்நின்றேன், காட்சியுடன் சூரனதுஸ்தலமுங்கண் டேன், கைலாசசட்டமுனிசமாதிகண்டேன, மாட்சியுடன்கைலாச முனிதானங்கே மார்க்கமுடன் சமாதிநிலையறிந்திட்டேனே. உஎ0

அறிந்திட்டேன்சட்டமுனிபாதங்காண அவ்விடத்தில்சிலநேரம் நின்றேன்யானும், தறிந்திடவேசித்தர்முனிகோடாகோடிதகைமையு டன்கொலுக்கூடமங்கிருந்தார், செரிந்திடவேயடியேனைக்கண்டபோ துசேனைதிரள்கூட்டமுடன்கிட்டிவந்தார், புறிந்திடவேசிறுபாலாயெ ங்கேவந்தீர் புதுமையுடன்கேட்கலுற்றார் சித்தர்தாமே. உஎக

தாமானசித்தர்முனிகேட்கும்போது சாங்கமுடன் காலாங்கித னைநினைந்து, வாமமுடன்குருசாமிகாலாங்கிதம்மை வளமையுடன் தா னினைத்துதுதிக்கலுற்றேன், ஓமெனவேநாதாக்கள்கேள்விக்கல்லோவு த்தமனுமடியேனுங்கால்நடுங்கி, சாமெனவேசீனபதிதன்னில்யானும் சட்டமுடன்குளிகைகொண்டுவந்திட்டேனே. உஎஉ

வந்திட்டேனென்றலுமேசித்தர்தாமும் வணக்கமுடனிரண்டாங் கால்வரையிற்கொண்டு, முந்திட்டு மூலரிடபாதங்காண முனையானச மாதியிடம்நிற்கும்போது, கந்திட்டதேவரிஷிக்கொப்பாஞ்சித்தர் கரு வானதிருவாசற்படிகார்ப்பார்கள், தந்திட்டவாசலது திறக்கவென்று தாட்சியுடன்தேவரிஷிவினவிட்டாரே. உஎஙு

வினவையிலேசமாதிபதுதாள்திறந்து வேகமுடன்வசரிரிவாக்கு ண்டாச்சு, தினகரன்றன்னொளிபோலேவடிவங்கண்டேன் திகழானச ட்டமுனிதன்னைக்கண்டேன், மனமுறுகியென்மீதில்கிருபைவைத்து, மாட்சியுடன்ஞானோபதேசஞ்சொன்னார் அனல்கண்டமெழுகதுபோ ல்னெஞ்சந்தானும் அப்பனேமனமுருகிவழுந்திட்டேனே. உஎச

வழுந்திட்டபோதையிலேசட்டர்தாமும் வகையுடனேவாக்களி த்தார்யடியேனுக்கு, தொழுதிட்டபாலாநீசீனந்தன்னில்தோற்றமுட ன்குளிகைபதுதுலவாய்ப்பூண்டு கழுகுடனேவல்லூறு பரந்தாற்போ லகருணைபெறவெந்தனிடங்காணவந்தீர், தழுவியேசித்தநம்மைக்கண் டுபேசி தாரணியில்கல்லாகசபிப்பார்தானே. உஎரு

தானனசித்தருடவுளவுகாணீர்தாரணியில்ரிஷிமுனிவர் மர்ம்மங்
கோடி, வேனைகநல்லவர்போல்நேசிப்பார்கள் விருதாவாய்வாதுமிகப்
பேசிபல்லோ, கோனைககுறுநிந்தைகூறுவார்கள் குடிகெடுக்குஞ்சித்த
ருண்டுகுவலயத்தில், தேனனவமுர்தமதுஈவாரப்பா தெறியாமல்கரு
வழியாற்கொல்லுவாரோ. ௨௭௬

கொல்லுவாரவர்கள் பதிசெல்லவேண்டாம் கொடிமுடியுஞ்சித்
தரப்பாகோடியுண்டு, வெல்லவேசமாதியிடங் தானழைப்பார் விருது
மிகப்பேசியல்லோசாபமீவார், சொல்லவேஞானத்தின் வழிகேட்பார்
கள் சேறுனமுப்பூவின்மார்க்கங்கேட்பார், புல்லவேநாதத்தின்முறை
கேட்பார்புகழானவுறுக்கினத்தின்கிடங்கேட்பாரோ. ௨௭௭

கேட்கையிலேதூரநின்றுவார்த்தைகேளு கெடியானகும்பகத்தி
லிருந்துக்கொண்டு, நீட்டமுடன்வனைகதத்தை மேலேநோக்கி நெடுங்
தூரங்காணிறுத்திவூணிப்பாரு, பூட்கமலலட்சுமியும் பொருந்திநிற்பா
ள் புகழானவிசுத்தியிலேயேரிப்பாரு, தாட்கமலத்தாள்திறந்துயோக
ம்பார்த்துச் சதாகாலந்தாரணியிலகுவாய்வாழே. ௨௭௮

வாழவென்றால்வெகுகோடிகாலம்வாழ்வாய்வாகானகற்பமதுதெ
ரிந்துக்கொண்டு, நீழவேகாயசித்திமாயசித்தி நெடுங்காலம் தானறிந்
துநிலைத்துவாழ, மாழவேயோகநிலையறியவேண்டும் மகத்தானவிசுத்
திதனைசுழுத்தியிலேமாட்டி, சாழவேசடாக்ஷரத்தைமேலேநோக்கிச்
சதானந்தங்கணபதியைப்பூசிப்பாயே. ௨௭௯

பூசிக்கக்கணபதியுங்கந்தன்தானும் புகழாகவாணியுடன் மனமு
வந்து, நேசித்துவாலையுடன்நிருபிதன்னை நேர்மையுடன்கண்டறிந்து
நிட்சயித்து,ஆசையுடன்பிர்மானலாகிரிதன்னில்அப்பனேவிசுத்தியிலி
ருந்துக்கொண்டு, காசையென்னும்பொன்னாசைதனைமறந்து காசினி
யில்சித்தனைப்போல்வாழலாமே. ௨௮௰

சித்தானசித்தனைப்போல்வாழமென்றால் செகதலத்தி லின்னமு
ண்டுகாட்சியப்பா, கத்தனும்பிர்மாவின் பதியைக்காண பகருகிறேன்
மூன்றுங்கால்வனாதானப்பா, முத்தமுடன் நீர்சென்றுபார்த்துவந்தா
ல்மோசமில்லைபின்னம்வெகுகெவினியாவாய்,சுத்தமுடன் கைலாசநா
தர்தாமும் சூட்சமுடன்றமுனைத்தார்திரும்பினேனே. ௨௮௧

பிரமசமாதி கண்டது.

திரும்பியேகுளிகையதுபூண்டுகொண்டுதீரமுடனடியேனும்மே
லேலேசென்றேன், குரும்பானசித்தர்களாமனேகம்பேர்கள் கூடியே
வெகுபேர்கள்வந்தாரப்பா, இரும்பானசித்தரப்பாயானும்கண்டேன்

பெழிவாகபெந்தனையுமாரென்றார்கள், சுரும்புடனேகாலாங்கிதனை
னைந்துதுரிதமுடன்போகரென்றுவசனித்தேனே. ௨அ௨

வசனித்தபோதையிலேவடியேன்மீது வாகுடனேகளிகூர்ந்துகூ
றலுற்றார், துசனித்துசமாதியிடம்கொண்டுசென்றார், தோற்றமுடன்
பிரமாவின்வாசல்கண்டேன், நிசமுடனே கோட்டைக்குள் சுரங்கம்க
ண்டேன் நெடிதானசுரங்கத்தின்வழியைக்கண்டேன், புஜமுடையகி
ங்கிலியராயிரம்பேர் புனிதமுடன்கொலுவிருந்தார்ரிஷிகள்தாமே. ()

தாமானரிஷிமுன்னேசென்றேன்யானும் சதகோடிசூரியர்போல்
சமாதிக்குள்ளே, பூமானும்பிரமாவுமுள்ளிருந்து பிரியமுடன்யெந்த
னிடம்வார்த்தைசொன்னார், காமானமாகவல்லோ வடியேன்தானும்
கைகட்டிமுன்னின்றுவார்த்தைசொன்னேன், தேமானபிரமாவு மெந்
தனுக்குத்தெளிவாகத்தானுரைத்தார்பிரமந்தானே. ௨அ௫

பிரமானசாமியார்யெந்தன்மீது பிரியமுடன் பட்சமுற்றுக்கேட்
கும்போது, திரமுடனேவடியேனுங்கால்நடுங்கித்தெளிவாகயானுரை
த்தேன்கோடிவண்ணம், பரமானங்கண்டல்லோகுளிகைபூண்டுபட்ச
முடன்தமதிடத்தில்வந்தேன்சாமி, சிரந்குவித்துநமஸ்காரமிகவுஞ்செ
ய்துதிறமுடனேவுத்தாரங்கேட்டிட்டேனே. ௨அ௬

கேட்டேனேபிரமாவுமனமுவந்து கிருபையுடன்யெந்தனுக்குவ
ழியுஞ்சொன்னார், கோட்டமுடன் சீனபதிதேசத்தாற்கு நுணுக்கமு
ள்ளவதீதமென்றவித்தைதன்னை, தேட்டமுடன்வுளவுமுதல்யெல்லா
ஞ்சொல்லிதேசத்தில் சித்துயென்ற மர்மந்தன்னை, காட்டியேவிட்ட
தொருவண்மையெல்லாங்கண்டாரோயாமானல் சபிப்பார்காணே. ()

காணவேலோகமெல்லாஞ்சித்தாய்ப்போகும் கைலாசங்காணுவ
தும்சூட்சமாகும், நாணவேநாதாக்கள் கைமறைப்பை நாட்டமுடன்
கொட்டிவிட்டாய்கோடாகோடி, மாணவேகுளிகையதுபூண்டுகொண்
டுமகத்தானதேசமெல்லாஞ்சுத்திவந்தீர், வேணவேவினோதமென்றக
ருவியெல்லாம் வெட்டவெளிபாழாகிவீணாய்ப்போச்சே. ௨அஅ

போச்சென்றுவிடுகாதே புண்ணியாகேள் புகலுகிறேன்நாலாங்
கால்வரைதானப்பா, மாச்சென்றவியாசர்முனிசமாதியுண்டுமகாகோ
டிரிஷிகளெல்லாமங்கிருப்பார், ஆச்சரியமானதொருமகிமையுண்டு அ
துக்கப்பால்கிள்ளைவனந்தானுமுண்டு, பாச்சலென்றதபகோடி ரிஷிக
ளப்பா பாரவனங்கானிருப்பார்சொல்லொண்ணாதே. ௨அ௯

சொல்லவென்றால் நாவில்லைபாவுமில்லை சோதியுடன் மலைமீது தோற்றங்காணும், வெல்லவேசோதிரிஷிவியாசர்தானும் வினோதமுட னங்கிருப்பார்கொலுக்கூடந்தான், புல்லவேசித்தர்களின்கூட்டவர்க் கம்பூலோகமிடங்கொள்ளாததிதமெத்த, பல்லவேகொங்கணரின்கூட் டத்தார்கள்பகரவேமுடியாதுபண்பதாமே. ௨௯௰

பண்பானநாலுபக்கம்கோட்டைவாசல்பளிங்குமணிமண்டபங்க ளங்கங்குண்டு, திண்பானதடாகங்கள்குகைகளுண்டு திடமானகுண் ணுகளில்தவசிருப்பார், கண்பானதபசியிடம்யானுஞ்சென்றேன் கரு த்துடனேசித்தரொல்லாமெனைகண்டார்கள். வண்புடனே யடியேனு ம்தாள்பணிந்துவணக்கமுடன்குருவணக்கமோதிட்டேனே. ௨௯௧

ஓதவேகாலாங்கிதனைநினைந்தேன் வுத்தமனேயடியேனும்வார்த் தைசொன்னேன், நீதமுடன்யானுரைத்தமொழியுங்கேட்டு நித்திலங் கும்வியாசர்முனியாரென்றாரோ, வேதமுனிகூறினதோர் மொழியைக் கேட்டு வேகமுடன்காலாங்கிசீஷனென்றேன், போதமுடன்யெந்தனு க்குவேதயாகம்புகட்டினார்வேதரிஷிபுகலத்தானே. ௨௯௨

புகலவேவேதத்தின் சூட்சா சூட்சம்புகழான வஷ்டகர்மம்யாக மெல்லாம், நிகலவேயோகத்தின்மார்க்கந்தானும் நெடிதானகுருபாத சேஷமந்திரம், தகலவேசூக்குமத்தின்சூட்சாசூட்சம் தசாங்கமுடன் மேலேறிநிற்கலாகும், அகலவேபரவொளியைக்காணலாகும்அப்பனே கேசரத்திலிருக்கலாமே. ௨௯௩

இருக்கலாமஞ்சாங்கால் வரைதானுகும் யெழிலானகோட்டைய துருத்திரகோட்டை, பெருக்கமுடன்கானாறுகுகைகளுண்டு பேரான கல்லாறுதீயாறுண்டு, சருக்கமெனும்நாதாக்கள்சங்கமுண்டு சாயுச்சி யபதவியென்றுஞ்சொல்லலாகும், குருக்கதனில்ரசக்கிணறு கோடியு ண்டு குருவானயீசுரன்றன்விந்துவாமே. ௨௯௪

விந்தானரசமதுதான்பொங்கிப்பொங்கி விசையுடனே தீயாற்றி ல்பாயும்போது, தொந்தமுடன்கானாற்றி னோரமப்பா துறைமுகத்தி ல்சத்தியெனறகெந்தியுண்டு, விந்துடனேசத்தியது சேர்ந்துக்கொண் டுவீராகிதீயாற்றினக்கினியாலே, சந்தமுடனுறவாகிசிவப்புமாகி சார் பாகசெந்தூரஞ்செனிக்குந்தானே. ௨௯௫

செனித்ததொருசெந்தூரஞ்சொல்லப்போமோ திறளானசித்தர் முனிரிஷிகள்காவல் பனித்தடங்கண்வேகமது வதிகங்கொண்டு பாரி

லேமுப்பூவைப்போலேபூர்த்து, தனியாகச்காரமுடன்வீறுகண்டு நர்க்கானசெம்பினிடகோட்டையெல்லாம் வனிகனைப்போல் பழுத்துமிகவீறுகொண்டு, வாகானதங்கமது போலேகாணும் சனியானகோட்டையெல்லாந்தங்கமாகும், கதிரோன்போல்பிரகாசம்காணும்பாரே.(

காணுமேமகாதாக்கள்சித்துநாமும் காட்டினார்மகிமைகள்மெத்தவுண்டு, தோணவேவரைக்குள்ளேசெல்லும்போது துறையானசமாதிமுகம்கண்டுசென்றேன், வேணவேருத்திரனார்சமாதிபக்கம்விட்டார்களெந்தனையுமுனிவர்தானும், நாணவேயடியேனும்காலாங்கிதம்மை நலமுடனேதாள்பணிந்துநவின்றிட்டேனே. ௨௯௭

நவின்றிட்டேன்ருத்திராசமாதிபக்கம் நயமுடனேதலைவாசல் நிற்கும்போது, துவின்றிட்டசமாதிபதுதாள்திறக்க துலங்கவேருத்திரனார்குருவைக்கண்டேன், புவின்றிட்டதிருமுகத்தைப் பாற்கும்போது பொலிவானசோதியொளிமின்னல்போலாம் கவின்றிட்டதேகமதுகூச்சலிட்டுக்கண்காணசோதிதன்னில்சொக்கிப்போச்சே. ௨௯௮

போகையிலேருத்திரனுங் கண்டுயென்னைப் பெட்புடனேமனதிரங்கியெனையாரென்ன, சாகமுடன்காலாங்கிசேஷனென்றேன் சட்டமுடன்சொல்கையில்ருத்திரர்தாமும். பாகமுடனெந்தனுக்கு வரமுமீய்ந்தார் பட்சமுடன்வரம்பெற்று சித்தர்பக்கம், சோகமுடனிற்கையில் சித்தர்தாமும், சோதித்துமலைபோகச்சொன்னார்தாமே ௨௯௯

சொன்னவுட னடியேனுங்குளிகைபூண்டு சோதித்துமலைமீதில் சென்றபோது, அன்னமெனும்பட்சியைநான்கண்டேனங்கே அன்புடனேவன்னமதுகண்டபோது, நன்மையமாயெந்தனுக்குவன்னந்தானும் நலமுடனேருத்திரர்மகிமை தன்னை, பன்னயமாயதாம்வுரைத்துபெந்தன்தன்னைப் பட்சமுடன்முதுகேற்றிப்போகலாச்சே. ௩௱

முதுகின்மேலெந்தனையு மேற்றிக்கொண்டு முனையானமலைமுகவில்கொண்டுசெல்ல, கதுமபுடனேயானுமங்கே யிறங்கினேன்யான் கதிரவனார்தோற்றமதுகாணவில்லை, உதும்பானவிருள்மூடிபணிகள்நிற்கும், வுபர்ந்தமலைசுற்றிலுமேசித்தரப்பா ததும்பலுடன் நிற்கிறதைக் கண்டேயானும், தாடகையாள்சமாதிபதுசொன்னார்தாமே ௩௱௧

தாடகையாள்சமாதி.

சொன்னரேதாடகையாள்சமாதிதன்னை சொரூபமென்றதுக்கு மத்தைக்காணவென்று, நன்னயமாயாராங்கால்வரைதானப்பா நலமுடனேயான்சென்றுநிற்கும்போது, வன்னமதுவாய்திறந்துகூறிற்றங்கே வளமையுடன்தாடகையின்மார்க்கந்தன்னை, வின்னமிலாதானுரைத்ததெந்தனுக்கு விகற்பமுடனுரைத்திடவே மயங்கினேனே. ௩௱௩

மயங்கினேன்காலாங்கிதனைநினைந்தேன் மாற்கமுடன்ராவணன்றன்ரணக்களத்தில், தயங்கமுடன்தாடகையாள் பங்கங்கெட்டுத் தாரணியில்சமாதியதுபூண்டபோது, தயங்கமுடனஷ்டகிரிபர்வதத்தில் சுரூபமுடன் தாடகையாள்சமாதிகண்டேன். தயங்கியேமேல்வரையிற்சென்றுபோனேன்தாக்கானசித்தர்களைக்கண்டேன்யானே. ௩௱௩

கண்டேனேபலகோடிரிஷிகள்மார்க்கம் கருத்திலேதானினைந்து பூசித்தேதான். மண்டலங்கள்சுற்றியல்லோகுளிகைகொண்டு மானிலத்தில்வெகுகோடிவதிசயங்கள், தண்டலங்கள்விண்டலங்கள் முழுதுஞ்சுற்றித் தாரணியில்குளிகைகொண்டுபறந்தேன்யானும், பண்டுடனேசமாதிபுரம்சுற்றிவந்தேன், பாரினிலேதாடகையாள்கதைகேட்டேனே, ௩௱௪

கேட்டவுடனேழாங்கால் வரைதானப்பா கெடியாகமேல்வரைசென்றதுபோது,நீட்டமுடன்சடாயுவனமங்கேகண்டேன் நேரானவனமுகத்தில்வீரபத்திரன், வாட்டமுடன்சமாதியதுதன்னைக்கண்டேன்வளமானதாள்வாசல்பூட்டிருக்கும், கூட்டமெனும்ராட்சதர்கள் பூதகூட்டம் பெருமையுடன்சமாதியிடம்நிற்பார்பாரே. ௩௱௫

பார்க்கையிலேவீரபத்திரன்சமாதிதானும் பாங்குடனேவயிரக்கல்பச்சைக்கல்லாம், தீர்க்கமுடன்சமாதியதுதிறக்கவென்றால் திறளானகாவலுடன்திறக்கவேண்டும், மூர்க்கமுடன் ராட்சதர்கள்முன்னேநின்று முடிசாய்த்துகரங்குவித்துவணங்கிநிற்பார் ஆர்க்கவேபோகாதுமுனிகளாலும் வஷ்டகிரிபர்வதத்தின்மகிமைதானே, ௩௱௬

மகிமையுடன்வீரபத்திரன்சமாதிதன்னில் மதிப்புடனேஓங்காரச்சத்தங்கேட்டேன், பகிரதனும்சீஷவர்க்கம்பக்கம்நின்றார் பரிவானவீரபத்திரன்வார்த்தைசொல்வார், சகிதமுடனுத்தாரஞ்சொன்னாரங்கே சட்டமுனிபக்கமதுசமாதியுண்டு துவிதமுடன்யெந்தனுக்குஞானமார்க்கம் துப்புரவாய்போதித்தார்ரிஷிகள்தாமே. ௩௱௭

தர்மேதான்போதனைகள்யாவுங்கேட்டு சாங்கமுடன்யெட்டாங் கால்தன்னிற்சென்றேன், வேமேதான்மேலவரைசென்றபோது வியர் வானருத்திரகாலன்தவசிருப்பான், சாமேதான்தவநிலையைக் கண்ட போது சாஷ்டாங்கம்தாள்பணிந்துகரங்குவித்து, நாமமுடன்காலாங் கிதனைநினைந்துநாதரிஷிபதாம்புயத்தைநாடினேனே. ௩௱௮

நாடினேன்ருத்திரகாலன்றன்னைத்தானும்நாட்டமுடன்கண்டல் லோதெரிசித்தேதான், தேடியேயவர்பாதம்தொழுதுநின்று தீரமுட ன்காலனெதிர்நின்றேன்யானும, வாடியேநின்றவென்னைகாலன்தானு மதிப்புடனேசிறுபாலாயாரென்றார்கள், கூடியேபோகரிஷியடியேன் தானும்குளிகையிட்டுவெஷ்டகிரிகாணலாச்சே. ௩௱௯

காணவேவெஷ்டகிரிதன்னில்நின்றேன் கைலாசமிதற்கீடுசொல்ல ப்போமோ, நாணவேகாலனவன்சமாதிபக்கம் நாதாக்கள்கோடிபேர் தவசிருப்பார், வேணபடிவுபசாரமதிகங்காட்டும் வெறிலானகாலனிட வதிநமெத்த, மாணவேகாந்தமென்றகோட்டையுண்டு மகத்தானசித் தர்களோசொல்லப்போமோ, ௩௱௰

சொல்லவென்றால்காஞ்சனமாமலையிற்குள்ளேசுடரொளிபோல் சித்தொருவர்யிருப்பாரங்கே, நல்லதொருசமாதிபதுவஞ்சனக்கல்நல மானவஞ்சனத்தினுள்ளிருந்து, புல்லவேலோகத்தினதிசயத்தைப்புக ட்டுவார்முனிவர்க்கும்சித்தருக்கும், செல்லவேசெந்தூரக்காடொன் றுண்டுசெகத்தினிலீசனன்றிகாணார்தாமே, ௩௱௰௧

காணவென்றாலின்னம்வெகுவதிசயங்கள் கண்டேனேகல்லென் றவெள்ளைக்கல்லில், மாணவேவுள்ளிருக்கும்ரவைதானப்பா மண்டல த்தில்கண்டதில்லைமாந்தரங்கே, தோணவேபிரகாசமானசோதி சுட ரொளிபோல்வயிரக்கல்கூறப்போமோ, நீணவேநாதாக்கள்காண்பத ல்லால் நீணிலத்தில்காமிகட்குகிட்டாதன்றே. ௩௱௰௨

அன்றனசடாயுயுடவனத்தில்தானும்அதிகாயன்சமாதியதுயிரு க்கக்கண்டேன், தன்றானசமாதிமுன்னேநின்றபோது தபவுள்ளவதி காயன்வாக்குரைத்தார், குன்றானமலைதேடிகுகைகள்தேடி குளிகை கொண்டுமலையேறிவந்ததெ ன, நன்றாகயென்னையுந்தான் கேட்ட போதுநலமுடனேயானுரைத்தவண்மைகேளே. ௩௱௰௩

கேட்டவுடனடியேனுங்கிருபையோடு கெவனமுடன்காலாங்கி நாதர்கம்மை, நீட்டமுடன்தானினைந்துகூறலுற்றேன் நெடுந்தூ

ருத்திரனார்காலனுக்கு, வாட்டமுடனஷ்டகிரிகாணவென்று வாகுட னேமலைவேபறிவந்தேனென்ன, மாட்டிமையாய்ருத்திரனார்யெந்தனுக் குமகிழ்ச்சியுடனுபதேசஞ்சொன்னார்தாமே. ௩௱௰௪

சொன்னவுடன்குளிகைபதுபூண்டுகொண்டு சுற்றியேபார்த்தும ங்கேயிருந்தபோது, மன்னனுமரிச்சந்திரன்பாட்டன்தானும் மகபதி யான்கொலுக்கூடசமாதிதன்னை,பன்ன ்வபாரக்குகைக்குவருகிற்செ ன்றேன்பாராளுஞ்சமாதியிலேவாக்குண்டாச்சு, நன்னயமாயெந்தனு க்குஞானோபதேசம் நவின்றிட்டார்ராசமன்னர்நவின்றிட்டாரே.

போகர்மோடிவித்தை.

நவிலவேவினோதமென்றவித்தைதானும்நாதாக்கள்செய்ததில்லை நாட்டிலேதான், புவியுடனேகாலாங்கிநாதர்பாதம் புகழ்ச்சியுடன்தா ன்வணங்கிசாற்றலுற்றேறன், பவிமதியாஞ்சந்திரன்போல்காரந்தன்னை ப்பக்குவமாய்த்தான்பொரித்துமுட்டைபோல,குவியலுடன்தான்சீவி வளவதாகவொற்றவனேமுட்டைபோலெடுத்துக்கொள்ளே. ௩௧௬

கொள்ளவேமுட்டைதனையெடுத்துக்கொண்டு கோபாலாசொல் லுகிறேன்குறிப்பாய்க்கேளு, விள்ளவேவாயிரம்பேர்கூட்டத்தார்கள் விருப்பமுடன்றான்பார்த்துக்களிப்புற்றேறங்க,மெள்ளவேமணலதனை பூமிதன்னில்மேன்மையுடன்கொட்டியேமேடைசெய்து, பள்ளமதா ய்குழியொன்றுநடுமைபத்தில்பாங்குடனேதான்பரவலாக்ச்செய்யே.

செய்துமேசெனங்களெல்லாம்பார்த்துயேங்க சிறப்புடனேபொ ரிகாரமென்னுமுட்டை,கைதனிலேதானெடுத்துமைந்தாபாரு கருவா கமுட்டைதனையெடுத்துக்கொண்டு, வெய்தமுடன்மந்திரங்கள்மிகவு ங்கூறிவேதாந்தத்தாய்தனையேமனதிலுன்னி, பைதவமாய்முட்டைத னைமணலிற்பரவிபட்சமுடன் சலமதனைவிட்டிடாயே. ௩௧௮

விட்டவுடன்முட்டையதுகரைந்துபோகும்வேகமுடன்காரமது வொன்றுங்காணார், சட்டமுடன்மெய்யானமுட்டைதன்னை சார்பாக கூப்பிடுதூரமப்பா, தட்டாமல்மண்மறைவில்புதைத்துப்போடு தார ணியில்லொருவருக்குந்தெரியவேண்டாம், திட்டமுடன்சீஷனைக்கொ ண்டெடுக்கச்சொல்லு தீரமுடன்றனெடுத்துத்தருவான்பாரே. ௩௧௯

கருகையிலேசனங்களெல்லாமிகநடுங்கி தாரணியிலிவர்போலசி த்தனுண்டோ, கருமானமிகவறிந்தசித்துதாமும் காசினியில்மாந்திரி கனிவனென்பார்கள், உருதெரியாமையுடையராசயோகன்வுலகத்தில்

சித்தனிவன்வசியராசன், பெருமைபுகழ்படைத்தொருதீரனாகும்பே
ருலகில்சித்தனைப்போலுருகாணுரே. ௩௨௰

காணுமல்செனங்களெல்லாமிகத்தவிப்பார் கண்டவர்கள்விண்ட
வர்கள்யாருமில்லை, தோணுமல்கருவானமுட்டையெங்கேதோற்றமு
டன்கண்டோமேகண்ணிர்காணேம், வீணுகப்பேசியல்லோமாந்தரெ
ல்லாம் விருதாவாப்தாறுமாருய்ப்புத்திகெட்டு, நாணமுடனிறங்கேங்கி
நடுக்கமுற்றுநாதாக்கள்மாயவலைசிக்கிஞரே. ௩௨௧

சிக்கவேமுட்டைதனையாருங்காணுச் சிறப்புடனேதானெடுத்துக்
காண்பித்தேதான், தக்கவேமந்திரங்களொன்றுசொல்லிச்சார்புடனே
கைமறைப்புவதிதஞ்செய்வார், சொக்கவேமறைப்பெல்லாம்சூட்சமா
கசூட்டினேன்மாந்தர்க்குமுரைத்தோம்யாமும், மிக்கவேலோகத்தில்
கைமறைப்புவிசமானவித்தைபோலாகுந்தானே. ௩௨௨

கெச்சக்காய்கோட்டையிடிப்பது

தாணுணகழற்சிக்காய்வாயிரந்தான் சதமுடனேலோகமதுபொ
டியைமைந்தா, வேணுணபொடிதன்னைபமைபோலாட்டி விருப்பமுட
ன்பழச்சாற்றாலரைத்துமைந்தா, கோணுணகுருபரனைத்தனைநினைந்து
குமுறவேகழற்சிக்காய்மேலேபூசி, பாணுணரவிதனிலேகாயவைத்துப்
பாங்குடனேகோட்டையதுகட்டிடாயே. ௩௨௩

கட்டவென்ருல்கழற்சிக்காய்கோட்டையாதும் கருவானகாந்தம
துகுச்சிக்கேற்றி, திட்டமுடன்குச்சிதன்ஞல்கோட்டைதன்னைத்திற
முடனேதானடிக்ககலேந்துபோகும், மட்டமென்றமண்மேலேவோடி
ப்பாயுமகத்தானகழற்சிக்காய்கிட்டிக்காணும், பட்டவுடன்காந்தமது
தானிழுக்கும்மகத்தானசித்துயிது வதிதந்தானே. ௩௨௪

அதீதமென்றவித்தையிது யாருங்காணூர் ஆச்சரியங்கொம்புக்கு
ள்காந்தவித்தை, கதீதமென்றகாந்தத்தால்சகலசித்தும் கருவாகவாடு
தற்குகாணியாகும், ததீதமென்றயிரும்புக்குக்காலனுகும்தாக்கானகா
ந்தமதுகருவுவேதை, சுதீதமென்றகருவாளிகாண்பான்பாரு சூட்சா
திசூட்சத்தைக்காணன்மாடே. ௩௨௫

மாடானமாடுகள்தான்சண்டிமாடு மானிலத்தில்காண்பதுவுமரு
மைமெத்த, கோடானகோடிமுனிரிஷிகள்வேதைகுவலயத்தில் கூற
வுந்தான்முடியாதப்பா, பாடானவின்னமொருகருமானங்கேன் பாடு
கிறேன்மாணுக்கள் பிழைக்கவென்று, நீடானமுட்டையதுகாற்றில்
போகநீணிலக்கில்பறப்பதற்குவிதைதங்கேளே, ௩௨௬

கோழிமுட்டை ஆகாசப்பறக்க.

கேட்கவேவினோதமென்றவித்தை சொல்வேன் கெவனமுடன்கருவாளியானால்கேளு, நீட்கமுடன்முட்டைதனில் கதிர்சில்லாக்கி நீடானபனிசலத்தையதற்குள்தாக்கு, நாட்கமலசெந்தாமரைப்பூரசத்தை நளினமுடன்றானெடுத்துவுளுந்துசீலை, ஆட்கமுடன்வலுவாகத்தானமைந்து அப்பனேரவிதனிலேவைத்திடாயே. ௯௨௭

வைக்கவேகதிரோனின் சுடரினாலே வாகான முட்டைக்குள்ளிருந்தநீராம், மெய்க்கவே சுடர்கண்டபோதேயப்பா மேலெழும்பிமுட்டையது பறக்கும்பாரு, மொய்க்கவே பூமிவிட்டுப் பறக்கும்போது மேன்மையுடன்மாந்தரெல்லாம்நசிங்குவார்கள, செய்க்கவே வாச்சரியமிந்தப்போக்கு செகதலத்தில்கிட்டாதுசிவயோகிக்கே. ௯௨௮

யோகியென்றால்ஞானத்தின் மகிமைவேண்டும் யோசனைகள்மிகவேண்டும்வாசிவேண்டும், போகமென்ற மாய்கைதனைவிட்டொழிக்கப்பொறுமையுடன்சிவயோகங்காணவேண்டும், பாகமது யெப்போதும்கைவிடாமல் பார்த்திபனேசெய்குபவன் யோகியாவான், சாகமுடன்காலாங்கிதனைநினைந்துசாற்றினேன்போகரிஷிபண்பாய்த்தானே

முளைக்கினைவித்தை.

பண்பானவித்தையது சாற்றக்கேளு பாரினிலேமானுக்கள் பிழைக்கவென்று, கண்பானயீசலதுமரக்காலாகும் கருவான புத்தீசல்தானெடுத்து, நண்பானபானைக்குள்சில்லுபோட்டு நலமுடனேகுழித்தயிலமிறக்கிக்கொண்டு, திண்பானதயிலமதில்கினைவித்தைதெளிவுடனேமுட்டைக்குள்வூறப்போடே. ௯௩௰

போட்டுமேமண்டலந்தான்சென்றபோது பொருமையுடன் றானெடுத்துமைந்தாபாரு, வாட்டமுடன்சீஷவர்க்கமிகவழைத்து வாகுடனேபோசனங்களுண்பதற்கு, கூட்டமுடன்சித்தர்முனிநாதர்கூட்டம் குறிப்புடனேபாயிரம்பேர்சூழ்ந்திருக்க, பாட்டமுடன்மணலதனைக்கொட்டிமைந்தா பட்சமுடன்வினைதனையேதெளித்திடாயே. ()

தெளித்தவுடன்சலமதனைவிட்டுமைந்தா தேற்றமுடன்யிருசாமப்பொழுதில்தானும், நெளித்துமேவிரையெல்லாமுளைகிளம்பி நேர்ப்புடனேசிறுசெடிபாமங்குலந்தான், களிப்புடனேசித்தர்முனி ரிஷிகளுக்குகண்கொள்ளாக்காட்சியுடன்கருவுமாகும், துளிர்ப்புடைய கினைவித்தைசொல்வாரார்தான்சுந்தரனேபோகரிஷிசொல்லிட்டேனே

இராஜவசியம்.

சொல்லவேவசியமொன்றுசொல்லக்கேளு சூரியின்றன் வடவே ருக்காப்புக்கட்டி, வெல்லவேமுட்பொலியுந்தான்கொடுத்து வேதாந் தத்தாய்தனையேமனதிலுன்னி, செல்லவேதலைப்பிள்ளைமஞ்சந்தானு ம் சிறப்பானகருங்கொன்றைவடவேர்தானும், கொல்லனுடமுலிதன் வடவேர்தானும் கூரானபேய்மிரட்டிவடவேர்தாமே. ௫௫௩

தாமானகருவாலிவடவேர்தானும் சார்பானவெள்ளெருக்கன் வ டவேர்தானும், கோமானகண்ணனிட வடவேர்தானும் குறிப்பானவ ழிஞ்சியிடவடவேர்தானும், வாமானகாட்டாத்திவடவேர்தானும்வா கானபிராயனிடவ்டவேர்தானும், தூமானகுமிழனிட வடவேர்தானு ம் துப்புறவாய் மேனியிடவடவேர்தாமே. ௫௫௪

வடவானவேருடனேவொன்றாய்க்கூட்டி வளமையுடன் பெரும் பாண்டந்தன்னிலிட்டு, குடவானபானைக்குதுவாரமிட்டுக் கொப்பெ னவேவேறெல்லாம்பாண்டத்திட்டு, திடமானசீலையதுவலுவாய்ச்செ ய்து தேற்றமுடன்குழித்தயிலம்வாங்கியேதான், தடமானதயிலமதை யெடுத்துமைந்தாதாக்குடனேகலசத்திலடைத்திடாயே. ௫௫௫

அடைத்துமேதயிலமதையுரைக்கக்கேளு அப்பனே சுழல்வண் டுபூதவண்டு, படையானகுழியானை மரவட்டைதானும் பாகமுடன் செவ்வட்டைமரவுணிதானப்பா, கடையானதம்பலமாம்பூச்சிதானும் கருவானவல்லூறுபிச்சுதானும், சடையானசெம்போத்துபிச்சுதானு ம்சார்வானநேவாங்குபிச்சுதானே. ௫௫௬

பிச்சானபச்சோணன்பிச்சுதானும்பிராளவாந்தையுடபிச்சுதா னும், மச்சானசாரையுடபிச்சுதானு மகத்தானமயிலினிடபிச்சுதானு ம், கச்சானகருமபூனைபிச்சுதானும், கருவானவெளவாலின் பிச்சுதா னும்பச்சானபாம்பிடபிச்சுதானும்பாங்கானவரணையிட பிச்சுமாமே

ஆமேதானித்தனையுமொன்றாய்க்கூட்டியப்பனேமுன்சொன்ன த்தயிலத்தாட்டி,வேமேதான்கபாலமென்றவோட்டிலப்பாவிருப்பமு டன்மைபிடித்துசசெப்பக்கேளு,நாமேதான்சொன்னபடிமையின்மா ர்க்கம்நலமுடனேபரணிதனில்பதனம்பண்ணு, போமேதான் நிர்வா ணிபூசைசெய்து பொங்கமுடனுருவேற்றிபூசிப்பாயே. ௫௫௮

பூசித்துமைதனையேயெடுத்துமைந்தா புகட்சியுடன்லாடமதில் திலதமிட்டு, நேசித்துராசரிடஞ்சென்றுயானல்நேர்மையுடன்நினை

த்ததெல்லாம்வசியமாகும், காசிபிலுன்னைப்போல் சித்தனுண்டோ கைலாசம்காணிய துவுனக்கேயாகும்,வாசியுடன்யோகநிலைநின்றுகொண்டுமகிழ்ச்சியுடன்சதாநித்தம்வாழலாமே. ௫௩௯

இலங்கைவேந்தன் குளிகை.

வாழவேவின்னமொருமார்க்கம்பாரு மகத்தானவிலங்கைபுரிவேந்தனப்பா, நீழவேதான்செய்தகுளிகையப்பா நீணிலத்தில்மானிடர்க்குகூறலாச்சு, தாழவேசெம்மண்ணும்பூமிதன்னில் தயவுடனே சென்றுமல்லோகுழிதான்வெட்டி, ஆழவேகுழிதனிலே ஈச்சன்வெல்லம் அப்பனேவரவுவைக்கல்கலந்துபோடே. ௫௪௰

போடவேயிராமுழுதும்சென்றபின்பு பொங்கமுடன் காலையில் பார்த்தபோது, நீடவேபூநாகம்சூழ்ந்திருக்கும் நெடிதானபூநாகமெடுத்துமைந்தா, வாடவேதிரியாதேபூநாகத்தை வாகுடனே தாமெடுத்துமண்ணைப்போக்கி, கூடவேபுளிப்பென்றமோருதன்னால்குணமான மண்ணையெல்லாம்போக்கிடாயே. ௫௪௧

போக்கியபின்பூநாகமெடுத்துபாலா பொருமையுடன் கெந்தியதுசமனைச்சேர்த்து, நோக்கமுடன்வாறுவகைசெயநீர்தன்னால் நொய்பவேதானரைப்பாய்நாலுசாமம், ஆக்கமுடன்பில்லையதுலகுவாய்ச்செய்து அப்பனேரவிதனிலேகாயவைத்து, ஊக்கமுடன் சில்லிட்டுச்சீலைசெய்து வுத்தமனேபுடம்போடக்கறுப்புமாமே. ௫௪௨

கறுப்பானமருந்துக்குநாலிலொன்று கருத்துடனேகாரமதுபொரித்துப்போடு, தெருப்பானவச்சிரமாங்குகையில்வைத்து தெளிமையுடன்தானடைத்துச்சீலைசெய்து, நெருப்பானவச்சிரமா மூலையில்வைத்து நேர்மையுடன்ருனுருக்கியெடுத்துப்பாரு,பொருப்பானரவியது தான்புகலப்போமோ பொன்னவனேயுனக்கிடாருலகில்தானே.௫௪௩

தானவனேபூநாகச்செம்புதன்னால் தாரணியி லதீதமென்றவித்தைசெய்வார், வானவனுஞ்செயவறியான் மானிலத்தில் வளமையுடனிப்பாகம்யாருஞ்சொல்லார், ஆனதினாலுந்தனுக்குகருவுசொன்னேன் அப்பனேகருவுளவுவெளிவிடாதே, பானமெனும் பரனையதுசெய்துபாலா பட்சமுடன்சூதமதைநிறைபலுத்தே. ௫௪௪

ஊந்திபயின்மேல்திருவல்கொண்டுமூட்டிவுத்தமனேசாதமது வேகும்போது, தோத்தவேமந்திரடுசொருகிப்போடுசுந்தரனேயாறினபின்னெடுத்துப்பாரு, பாத்திரமாம்பரனையதுதிருவல்தன்னைப்பக்கு

வமாய்காணெடுக்கருகந்தானும், மாத்தமென்றசத்துருவால் மடிந்து
பின்னும் மாசற்றவெண்ணெயதுபோலாம்பாரே. ௲௪௫

பாரேதான்வெண்ணெதனையெடுத்துக்கொண்டு பாகமுடன் மந்
தங்காய்வுள்ளழுந்தி, சாரமுடன்சுண்ணம்புச்சீலைசெய்து சட்டமுட
ன்தான்கெருவில்புடத்தைப்போடு, திரமுடன்றானெடுத்துப் பார்க்கு
ம்போது திறலானசூதமதுகற்போலாகும், காரமதுயின்னமுந்தானே
றுதற்து கருவாகச்சாரணையுமின்னமேற்றே. ௲௪௬

எற்றயிலேயிப்படியேவஞ்சுபத்துயெழிலாகப்புடம்போடக்கட்
டிப்போகும், சீற்றமென்றமேற்கவசம் தன்னைநீக்கி சிறப்புடனேதா
னெடுக்கக்கல்லேயாகும், மாற்றமென்ற சூதத்தின்கல்லேயாகுமார்க்
கமுடன்கல்லானகுளிகைதன்னை, கூற்றனென்னுமாதர்களைக்கூடுதற்
குகொற்றவனேமுறைசொல்வேன்குறைசொல்வேனே. ௲௪௭

குறைபானகுளிகைதனையெடுத்துமைந்தா கோலமுடனவாய்த
னிலேயடைத்துக்கொண்டு, முறைபானநாற்சாதிபெண்கள்தன்னைமு
ர்க்கமுடனணைந்திடிலோகோடிபெண்கள், நிறைபானமையலது நீங்
கியேதான் தேசத்தில்லுனைக்கண்டால் நடுங்குவார்கள், சிறைநீங்கிய
ணைவார்கள்மாதர்தாமும் சிறப்புடனேமன்மதன்போலீலைசெய்யே•()

செப்பவென்றால்ஸ்ரீலீலை கிருஷ்ணலீலை செகதலத்தில்பாராலு
முடியாதப்பா, மெய்யானகுளிகைநன்ன பதனம்பண்ணு மேதினியில்
யாருக்குங்காட்டவேண்டாம், பொய்யாதுபெந்தனுடகுளிகைமார்க்
கம்பூதலத்தில் பெண்களெல்லாம் நடுங்குவார்கள், மைபூண்டுகுளிகை
யதுவாயிலிட்டு மார்க்கமுடன்கெவினியைப்போல்நீயாவாயே. ௲௪௯

ஆகவென்றால் குளிகையதுசெய்யவேண்டும் அப்பனேகுளிகை
க்குயின்னஞ்சொல்வேன், சாகமுடன்வெள்ளியென்றயீயந்தன்னைச்ச
ட்டமுடன்சேரெடுத்துவுருக்கித்திரு, பாகமுடன் குளிகைதனையிட்டு
ப்பாரு பதிவானநீரையெல்லாமுண்டுவல்லோ, வேகமுடன் மேல்தெ
றித்துகுளிகைதானும் விரைவுடனேதானெகிரிவிழுகுந்தாமே. ௲௫௰

தாமானகுளிகைதனைபதனம்பண்ணு தபவுள்ளசிறுபாலா செப்
பக்கேளு, சாமானமாகியல்லோ மகிழ்ந்திடாதே சற்பனைகளுபசார
மதிகங்கொண்டு, ஈமானைப்பெயர்கொண்டுபூதலத்தில் யென்மகனே
வெள்ளிதனைவிற்றுமாறி, பூமான்போல்பூதலத்தில்வாழ்க்துங்கொண்டு
... ன்யெந்நாளும்பொருந்திடாயே. ௲

குளிகைவேதைசெந்தூரம்

பொருந்தவேவின்னமொருபுதுமைகேளு பொலிவானகுளிகைத னையெடுத்துமைந்தா, திருந்தவேசூதமிடை கெந்திசேர்த்துதிறமுட னேமனோசிலையும்காலதாக, வருந்தவேதாளகமும் காலதாகும் வாகா னவீரமதுவரிக்காலாகும், குருந்தவேபொற்றலையின் சாற்றாலாட்டிக் குமுறவேதானரைப்பாய்சாமம்நாலே. ருஉ

நாலானசாமமது வரைத்தபோது நலமான மைனம்போலாகும் பாரு, காலானரவிதனிலேகாயப்போட்டுக்கருத்துடனேபொடியாகச்செ ய்துகொண்டு, வேலானகாசியென்றகுப்பிமைந்தா விபரமுடன்தான் வாங்கிசெப்பக்கேளு,சீலானகுப்பிக்குச்சீலையேழு சிறப்புடனேதாள் செய்து ரவியில்போட்டே. ருரு

போடவேகுப்பிதனை யெடுத்துமைந்தா புகழாகமருந்தையெல் லாம்குப்பிக்கேற்றி, நீடவேமாக்கல்லால்கொண்டுமூடி நினைவாகதள வாயாஞ்சட்டிதன்னில், நாடவேமணல்தனைக்கொட்டிபாலாநண்மை யுடனகுப்பிதனைநடுமையத்தில், சூடவேகுப்பிநடுமையம்வைத்து சூ ட்சமுடன்மணல்தனைமேலேகொட்டே. ருச

கொட்டியேமேற்சட்டிக்கொண்டுமூடி கோலமுடன் சீலையதுவ லுவாய்ச்செய்து, திட்டமுடன்தானெரிப்பாய்யெட்டுசாமம் திகழாக வாறினபின்திறந்துபாரு, சட்டமுடன்செந்தூரமென்ன சொல்வேன் சார்வாகவருணன்போல்காந்தியுண்டாம்,பட்டசெம்புநாலுடனேவெ ள்ளியாறுபதமாகத்தான்சேர்த்துவுருக்கிடாயே. ருரு

உருக்கியேவாரடித்துப்புடத்தைப்போடுவுத்தமனேசெம்பதுவு ம்கன்றுபோகும், செருக்கியேவெள்ளியெடை நாலத்தொன்று செம் மையுடன்முன்சேர்த்துவுருக்கித்திரு, பெருக்கமுடனிடைகண்டுயின முங்கண்டு பேரானசேர்வைமுதலுளவுகண்டு, நெருக்கமுடன் மாற்ற துவுமேவலாகி நேர்மையுடன்பசுமையதுவெட்டதாமே, ருசு

எட்டானபொன்னதுவுமதிகங்காட்டும்யெழிலானமின்னமொரு கருமானங்கேள், திட்டமுடன்செந்தூரமனுபானத்தில் தீரமுடன்று னருந்தமண்டலந்தான், குட்டமென்றபதினெட்டுமகன்றுபோகும்கூ முனமேகமதுதுள்ளிபோடும், சட்டமுடன்கசரோகம் நீங்கிப்போகு ம் சாராதுபெந்நாலும்தளிர்ச்சியாமே. ருஎ

தளிராகும்தேகமதுவன்னிமீறும்சதாகாலம்சைதன்னியமதிகங் காட்டும், குளிராதுதேகமதுகனலோவீசும்குடிபோடும் ரோகமெல் லாந்துலேந்துபோகும், நளிரானநரம்புவலிபிடரிநோயும்நாடாதுதிரோ கம்விட்டுகளினமாகும், பளியானகாந்தியதுமிகவேவீசும்பான்மையா ம்தேகமதுபொன்னுமாமே. ௩௫௮

பொன்னனதேகமதுகாந்திமெத்தப் பொங்கமுடன்வாசியது கீ ழ்நோக்காகும், மன்னவனேவஷ்டாங்கந்தன்னிற்சென்று மானிலத்தி ல்நீயுமொருசித்தனுவாய், தென்பொதிகைசித்தனிலே நீயொன்றுக தேசத்தில்சிவயோகியாகவாழ்வாய், பன்னவேகாலாங்கி நாயர்பாதம் பணிந்துமேபோகரிஷிபாடினேனே. ௩௫௯

குளவிகூண்டுமெழுகுவேதை.

பாடியேவின்னமொருமாற்கம்பாரு பாங்கானபுழுகென்றகுளவி தன்னே,நாடியேகானகத்தில்தேடும்போது நலமானகுளவிகளாம்விரு ட்சந்தன்னில், தேடியேபார்க்கையிலேமண்கூடாலே திரளானகூட துதான்கட்டிருக்கும், கூடியேமண்ணுக்குள்திறந்துபாரு குறிப்பான மெழுகதுவுமுண்டாம்பாரே. ௩௬௰

பாரேதான் மெழுகெடுத்து துருசுவென்னேப் பதமுடனேருன் சேர்த்துமெழுகதாக்கி, நேரேதான்ரவிதனிலேபத்துக்கொன்றுநேர் மையுடன்ருனுருக்கிக்கொடுத்துப்பாரு, வேரேதான்கரியோட்டி லூ திப்போடு வேகமுடன்செம்பதுவும்வர்னங்காணும்,கூரேதான் மதித னிலேநாலுக்கொன்றுகொடுத்துருக்கமாற்றதுவு மாறதாமே. ௩௬௧

ஆருனமாற்றதுவுஞ்சொல்லப்போமோ அப்பனேசித்தருட மகி மைகோடி, கூருனபொன்தனேயேசெய்யுமார்க்கம் குறுக்குவழிநெடு க்குவழிகோடிக்கோடும், பேருனசாபத்தால்சகிப்பார்சித்தர் பேருல கில்வாதமதுபுகலப்போமோ, நேருனகல்லானேச்சுக்கான்கல்லாம்நே ர்மையுடன்ருனுரைப்போம் நுணுக்கந்தானே, ௩௬௨

சுக்கான்பெருமை கண்ணுடிக்காய்ச்சு.

தானுனசீனபதிசுக்கானப்பா தகைமையுள்ளசேரதுதான்பத்த தாகும், கோனுனகொங்கணவர்வைத்தபாகம் கூறுவேன்மாணுக்கள் பிழைக்கவென்று, வேனுனசுக்கானும் பூநீரோடே வேகமுடன்வேக வைத்துதெளிவிருத்து, பானுனகாரமதுகூடச்சேர்த்துப் பளிங்குபெ [illegible] ௩௬௩

காய்ச்சியே மூதிரையுருக்கிக்கொண்டு கருவாககருவதனில்மெழுகுகட்டி, பாய்ச்சலுடன் பலகைக்குக் காரமிட்டுப் பாங்குடனேவுருக்கையிலே கண்விட்டாடும், தேய்ச்சலுடன்பலகைபோல்கருதான்கட்டி செம்மியேவுருக்கினமாய்வார்ப்பாயானல்,மாய்ச்சலென்றபடிகம்போல்பாயும்பாரு மகத்தானகண்ணாடியாகுந்தானே. ருகூச

கண்ணாடிபிறக்கும்வகையின்னஞ்சொல்வோம் கருத்துள்ளமாந்தர்களேகழறக்கேளும், சுண்ணமென்றபூநீருல் விளையுமாற்கம் சூட்சாதிகுட்சமப்பா சொல்லப்போமோ, வண்ணமுள்ள கண்ணாடி வர்ணம்சொல்வோ மயங்காதே யிரும்பினிடமண்தானப்பா, திண்ணமுடன்பூநீரில்சேர்த்துருக்க புகழானகண்ணாடிவர்ணமாச்சே. ருகூரு

வர்ணமுடன்கண்ணாடியனந்தமாற்கம் வாகுடனே செய்பலாம் கோடிவித்தை, வர்ணமுள்ளபாத்திரங்களிதனாலாகும் வளமான புட்டிமுதல்குப்பிமாற்கம், வர்ணமுள்ளவிளக்கொளிவு யிதனாலாகும் வாகானபீங்கான்களிதனாலாகும், வர்ணமுள்ளமணிவகைக ளிதனாலாகும்மார்க்கமுள்ளவாபரணமிதனல்தாமே, ருகூகூ

சாமான்கண்ணாடி சன்னப்போக்கு

செய்வதற்குபூநீர்பேதவகை

தசமானபூநீருவிபரஞ்சொல்வோம் தாக்கானமண்தனக்கு வலைதான்கட்டி, சாமானமானதொருசலத்தைவிட்டு சண்ணலுடனதான்கரைத்துசாடிதன்னில், தேமமுடன்தெளிவிறுத்துமறுபாண்டத்தில்தெளியவேவடிகொண்டுகாய்ச்சும்போது, சாமமென்ற வர்ணமதிகங்காட்டும் சார்பாகபின்னுமொருபாண்டம்போடே. ருகூஎ

போடவேபூநீரைமுன்போற்காய்ச்சிப் புகழாகத்தானிறக்கியெடுத்துப்பாரு, நீடவேபூநீறும்வெளுப்புமாகிநிலையானவுருக்குக்குமுதற்றரந்தான், கூடவேவுருக்குக்குக்காலன்கூட்டி கொப்பெனவே யெடுத்துப்பார்தவளம்போலாம், சாடவேதவளத்தைப்பின்னும்பாண்டம்தகைமையுடன்முன்போட்டுக்காய்ச்சிடாயே. ருகூஅ

காய்ச்சிபேமுன்போலவடிதான்கொண்டு பாகமுடன்முன்காய்ச்சியெடுத்துப்பாரு, மாய்ச்சலுடன்பின்னுமோர்பாண்டமிட்டுமறுபடியுங்கனலேற்றிக்காய்ச்சும்போது, பேச்சலென்றநீச்சதுவுமட்டுமொகியெழிலானபடிகம்போல்வர்ணமாகும், வாச்சலுடன் வர்ணமதுபேதாபேதம்வகுக்கலாம் கோடிவழிவகுக்கலாமே

வகுக்கவென்றலிதனலேவெகுவிேனதம் வளமையுடன் செய்ய லாம்பூமிதன்னில், வகுக்கலாம்பிரிதிவியில்பிறந்தவர்ணம் வாகுடனே செய்யலாம்பூநீராலே, வகுக்கலாமவருமபொன்மணிவாபாணங்கள்வ ர்ணமுடன்செய்யலாம்கோடிபாதை- வகுக்கலாம்மொளிவட்டப் பூநீ ராலேவண்ணவண்ணவிதங்களெல்லாம் நாட்டலாமே, ௬எ௰

பீங்கான்பூநீர்விபரம்.

நாட்டலாம்சீனபதிநடுமையத்தில் நலமானபூனீருவிபரம்சொல் வோம், நோட்டமுடன்பூநீராமண்ணேயப்பா நுணுக்கமுடன்றனெடு த்துக்காய்ச்சும்போது, தாட்டிகமாயுவர்மண்ணுசுண்ணும்பாலே த ளிருடனேபிசைகிக்குகளிப்புண்டாகும், வாட்டமுடன் குயவனர்பா ண்டமொப்பாய்வளமையுடன்தான்வகுக்கவளமைகேளே. ௬எக

கேட்கவென்றல்பூனீருசுண்ணும்புதன்னேகெணிதமுடன் சக்க ரமாமாலேதன்னில், தீட்கமுடன்றனரைப்பாய்மைபோலாகதிறமுட னேகளிப்புபதமாகுமட்டும்,வேட்கமலவாலேயுடசுற்றேரங்கள்வெளி ப்படையில்பொங்குகின்றகளிப்புதன்னல்பூட்கமலவெள்ளேயென்றபீ ங்காணுச்சு புகழானவடிவண்டல்மட்டியாச்சே. ௬எ௨

ஆச்சென்றுவிடுகாதேமைந்தாகேளு அன்புடனே பின்னுமந்த வாலேதன்னில், மாய்ச்சலுடன்வதற்கடியில்நிற்குமண்ணுமகத்தானம ட்டியென்றபீங்கானகும், பாய்ச்சலுடன்வதற் கடியில்நிற்கு மண்ணு பாங்கானமட்டியென்றபீங்கானகும் நாச்சலுடனதற்கடியில் நிற்கும ண்ணுநாயகனேமட்டியென்றபீங்கானுமே. ௬எ௩

ஆமேதானிந்தவண்ணமாலேக்குள்ளேஅப்பனேபிரிவினேகளாகு ம்பாரு, நாமேதான்சொன்னபடிபீங்கான்மாற்கம் நாட்டிலேசெய்வா ர்கள்கோடிபாதை,வேமேதான்செய்தாலும்நாட்டுள்வேதைவேகவை த்தால்மண்ணதுவும்வெடியுண்டாகும், கோமானும்சாலியன்றன் வே தையென்பார்கொற்றவனேசீனபதிக்கொப்பதாமோ ௬எ௪

ஒப்பானவேதையிதுமனந்தமுண்டிஓகோகோநாதாக்கள்கண்ட தில்லே, செப்பானவகல்தனேப்போல்பாண்டங்கண்டார்செயலானசா லியன்றன்பாண்டங்கண்டார், மெப்பானபாண்டமது மண்பாண்டங் கள்மேவலுடன்செய்குவார்வதீதமாற்கம், துப்பானபாண்டங்கள்மிக வுஞ்செய்வார்துறைமுகமுங்காணர்கள்சித்தர்பாரே. ௬எ௫

பாரேதான்ராசாக்கள்கண்டதில்லேபாரினிலேவெகுகோடிராசர ப்பா,சீரேதான்பாக்கியங்கள்பெற்றுமென்னசிறப்புடனே பலபணிக

ள்பூண்டுமென்ன, நேரோதான்திருமுகமுங்கண்டதில்லை நீணிலத்தில் வசிகரத்தைப்பார்த்தோரில்லை, சேரானசெம்பதனை தகடதாக்கிச் சிறப்புடனே தான்துலக்கிமுகம்பார்த்தாரே. ருஎசு

பார்த்தாரே ராஜாதிராஜரெல்லாம் பளிங்குடனேதிருமுகத்தைக் கண்டதில்லை, நேர்த்தியுடன்கலையுடனே பணிதிபூண்டு நீணிலத்தில் திருமுகமங்கலாக, பூர்த்தியுடன்பிரகாசமானசோதி பூவுலகில்கண்டவருமொருவரில்லை, கார்த்தியுடன்மங்கலாய்முகத்தைக்கண்டார்காசினியில்ராசர்களும்சித்தர்காணே. ருஎஎ

காணமல்போனார்கள்ராசரெல்லாம் காட்சியுடன் கண்காட்சிக் கண்டதில்லை, வீணகத்தானலைந்தார்முனிவர்சித்தர் வெகுகோடியே மவித்தைசெய்தாரப்பா, பூணரம் பூண்பதற்குபொன்னுஞ்செய்தார் பூதலத்திலழகுதனைப்பார்ப்பதற்கு, தோணமல்தானிருந்தார்சித்தரப்பா தொல்லுலகில்மறந்திட்டார்முனிவர்தாமே. ருஎஅ

முனியானகாலாங்கிதாள்பணிந்து முயற்சியுடனடியேனுங்குளிகைபூண்டு, தனியாகயானுமல்லோசீனஞ்சென்றேன் தகைமையுடன் பூனீரைக்கண்டறிந்தேன், பனியானதேசமதுசீனமார்க்கம் பான்மையுடனெத்தொழிலுஞ்செய்வதற்கு தொனியானதேசமென்று நிட்சயித்துதொடங்கினேன்கண்ணுடிக்காய்ச்சவென்றே. ருஎகூ

என்றுமேசித்தரெல்லாமனேகவித்தை யெழிலாகச் செய்தார்கள்பூமிதன்னில், சென்றுமேயானுமல்லோசீனந்தன்னில்சிறப்புடனே கண்ணுடிகாய்ச்சவென்று, குன்றுமலைகுகைதனிலே யாராய்ந்தேதான் கோடானகோடிவளம் கண்டாராய்ந்து, நின்றுமேசாத்திரத்தினுளவுபார்த்து நிர்மித்தேன்கண்ணுடிமார்க்கந்தானே. ருஅய

மார்க்கமுடன் கண்ணுடிக்காய்ச்சிவிட்டேன்மயங்காமல்பூநீரைக்கண்டறிந்தேன், தீர்க்கமுடன்வட்டவொளிநேமித்தேன்யான் திறமுடனேபளிங்குயென்ற வட்டஞ்செய்தேன், வார்க்கமுடன் கருககட்டிவுளவுசெய்தேன் வளமுடனேசூதமுட னுளவுகண்டேன், பாரக்கையிலேசூதமென்றகிணறுகண்டேன் பாகமுடன்கண்ணுடிக் கேற்றலாச்சே. ருஅக

ஆச்சென்றுவிடுகாமல்கண்ணுடிக்கு அப்பனேகாரமென்றயியங்தன்னை, பூச்சென்றகட்டிக்குரசத்தைத்தாக்கிப் புகட்டினேன்கண்ணுடிக்குள்ளேயப்பா, பேச்சென்றதிருமுகமுங்காணலாச்சு பேறுனசுடரொளிபோல்முகமுங்கண்டேன், மாச்சலுடன்வட்டவொளி தன்னையானும் மயங்காமல்கண்டறிந்தேன்புனிதவானே. ருஅஉ

புனிதமுடன்கண்ணாடிமுடித்தபோது புகழானசித்தர்முனி ராசரெல்லாம், கனிவுடனேகண்ணாடிப்பார்த்தபோது கட்டழகா யெந்தனையும்வரவழைத்து, நனியுடனேயெந்தனுக்கு வுபசாரங்கள் நாட்டமுடன்செய் துவைத்துவாசீர்மித்து, முனிபோன்றரிஷிசித்தரெல்லாந்தானுமுபகற்சியுடன்புத்திமானென்றிட்டாரே. ௲அ௫

புத்திமான்யென்றுமேசந்தோஷித்துப் புகட்சியுடன் காலாங்கிசீஷனல்லோ சத்தியமாயின்னொருவன்செய்வான்றானோ தாரணியில் செய்வதற்குபுத்தியுண்டோ, வெத்தியுள்ளகுருவுக்குவுகந்தசீஷன் உலகத்திலுனைப்போலவொருவனுண்டோ, பத்தியுடன்யெந்தனுக்குவுபசாரங்கள்பலகாலும்பாலித்தார் பான்மையாமே. ௲அ௬

பான்மையா முபசாரம்பெற்றுயானும் பலபலவாமாச்சரிய வித்தையெல்லாம், மேன்மையுடன்சீனபதி யுலகத்தோற்கு மெகிழ்ச்சியுடன்செய் துவைத்தேன்கோடிவித்தை, மான்மையுடன்பூநீராக்காண பார்சித்தர் மார்க்கமுடன் துறைவழியுங்காணார்தாமும், கான்மையுடகாலாங்கிகடாட்சத்தாலேகண்டறிந்தேன்கண்ணாடிகாய்ச்சத்தானே

பளிங்குகற்பூரவைப்பு.

தானனக்கற்பூரவைப்புசொல்வேன் தாரணியில்சித்தர்முனிசெய்ததில்லை, பானனபழுப்புநிறக்கற்பூரந்தான்பாலித்தார்கோடிமுறைபாலித்தார்கள், மானனகற்பூரம்பளிங்குயானும் மார்க்கமுடன்செய்வதற்குமன்னகேளு, கோனனைகுருவருளால்காலாங்கிதம்மைக் குறிப்புடனேயான்வணங்கிகூறுவேனே. ௲அ௬

கூறுவேன்வெள்ளையென்றதுக்கில்தானும் குறிப்புடனே பாரமதுவொன்றேயாகும், நீறுடையபூநீறும்பாரங்கால்தான் நெடிதானமதியுப்புபாரங்கால்தான், சேறுடையசீனபதிசுண்ணம்கால்தான் சிறப்பானசீனமதுபாரங்கால்தான், நாறுடைத்தாழையிடச்சாறுவிட்டு நலமாகக்காச்சியெடுபதமாய்த்தானே. ௲அஎ

பதமுடனேகாய்ச்சுகையில்கருவாப்பட்டைக் கருத்துடனேதயிலமதுகூடச்சேரு, நிதமுடனேகற்பூரத்தயிலந்தானும் நேர்ப்புடதாழைமலருப்புகூட்டி, பேதமில்லாயேலரிசிதயிலந்தானும் பேரானபன்னீரும்விட்டுக்காய்ச்சி, பாதமுடன்கருப்பெட்டியொன்றுசெய்து பாகுடனேகாய்ச்சிபதைவிட்டிடாயே. ௲அஅ

விட்டவுடன்மற்றுநாளெடுத்துப்பாரு வேகமுடன்பளிங்கென் றகற்பூரந்தான், சட்டமுடன்பலகைபோல்கட்டியாகி சார்புடனே தான்திரண்டியிருக்கும்பாரு, அட்டதிசைதான்புகழும் பூரமாச்சு ஆச்சரியம்நாதாக்கள்செய்வாருண்டோ, மட்டமென்றகற்பூரம்செய்வாரப்பா மானிலத்தில்சித்தர்முனி செய்வார்பாரோ. ௩அ௬

பாரப்பாகற்பூரமனேகமுண்டு பாங்குடனேசெய்குபவர்கோடா கோடி, நேரப்பாசீனபதிக்கற்பூரந்தான் நீணிலத்தில்செய்பவருமுலகிலுண்டோ, சேரப்பாவெகுகோடிசித்தரப்பா செய்தார்கள்கற்பூரம் வினோதமாக, ஆரப்பாயெனைப்போலச்செய்ததில்லை அப்பனேயானுமல்லோமுறைசெய்தேனே. ௩௬௰

ஆகாயத்தில்போகா்கூண்டுவித்தை.

செய்தேனேவின்னமொருகருமானங்கேள் செயலான பிருக்கு வித்தைசெப்பக்கேளு,மெய்யானவித்தையது சூட்சவித்தைமேல்போகும்வித்தையிதுகூண்டுவித்தை, பொய்யான வித்தையிது சொல்லப்போமோ பூதலத்தில்கருவாளிகண்டுசெய்வான், வெயில்காணுமாகாஷவித்தையப்பாமேல்போகும் கூண்டினிடவித்தைதானே. ௩௬௧

தானகவித்தையிதுசொல்வேன்கேளும் தகைமையுள்ள யிரும்பினிலேகாந்தஞ்சேர்த்து, பானகத்தானுருக்கிகம்பியாக்கிப்பாலகனே சிறுகம்பிநூல்போலாக்கி, வேனகூண்டுதான்வடிதான்பத்து விருப்பமுடன்நீளமதுவடிதான்பத்து, மானகநாற்சதுரமாக்கியல்லோ மார்க்கமுடன்கம்பியால்கூண்டுகட்டே. ௩௬௨

கட்டயிலேசுற்றிலும்தூணிருத்திக் கருத்துடனேநடுக்கம்பிசதுரமிட்டு, தொட்டில்போல்தான்சமைத்துசுடர்கள்வைக்கச் சூட்சமுடன்கம்பிகளுக்குள்ளேமாட்டி, சட்டமுடன்சுற்றிலும்நாற்பட்டாலே சாங்கமுடன்தானமைத்து கிளிபோல்கட்டி, திட்டமுட னடிவாசல் தாள்திறந்து தீர்க்கமுடன்மேல்வாசல்மூடிப்போடே. ௩௬௩

போட்டவுடன் கற்பூரத்தயிலத்தூட்டிப் பொங்கமுடன் விளக்கொளிதான்வைத்துபாலா, நாட்டமுடன் கும்மட்டம்போல்சோடித்துநயமுடனேகாற்றடங்கச்செய்துபின்னும், மூட்டமுடன் வாயுவதுவுள்ளேதங்கி முயற்சியுடன் மேலெழும்பிப்போகும்பாரு, வாட்டமுடன் கூண்டதுதான்ஆகாஷத்தில் வளமையுடன்போவதற்குத்திறமுண்டாச்சே. ௩௬௪

உண்டானபோதையிலேகாற்றினாலேஓகோகோசெல்லுமதுவாகாயத்தில், கண்டாலேமானிடர்கள்காணும்போது கைலாசம்மேருவணாசெல்லும்பாரு, அண்டமுடனாகாச மேலேநோக்கி அதற்கப்பால்

போகும்வழிகாணுர்பாரு, விண்டலத்தின்வித்தையிது மாச்சரியமாகு ம் வெட்டவெளிவித்தையிதுசூட்சம்பாரே. ருகூரு

சூட்சமாம்கூண்டுவித்தை துலைதூரமோடும் தொல்லுலகில் கரு வாளிகாண்பான்பாரு, மாட்சியுடன்வாயுவினல்பிறந்தவித்தை மானி லத்தில்மன்னவர்கள்மயங்கும்வித்தை, தாட்சியுடன்பாலசொல்லா மா டும்வித்தை சதாகாலமாடுதற்குவினோதவித்தை, மீட்சியுடனிராக்கா லமாடும்வித்தைமேன்மையுடன்போகரிஷிபுகன்றிட்டேனே. ருகூசு

கெந்தருவித்தை சமுத்திரத்திலிறங்க.

இட்டேனேபின்னமொருமாற்கம்பாரு வெழிலான கெந்தருவவி த்தையப்பா, சட்டையொன்றுயிரும்பாலேசெய் துகொண்டு சாங்கமு டன்தலைதனிலேகுழையமைத்து,கட்டமுடன்சங்கிலியால்கயிறுபூண் டு கருத்துடனேமார்பதனில்தாளணிந்து, திட்டமுடன் கழுத்துமிக முடல்செய் துதெளிவுடனேநாசிவழிக்குழைசெய்வாயே. ருகூஎ

குழைதனிலேவடகலைதென்கலையமாத்திக் குறிப்புடனேநாசிவ ழிகாற்றுசெல்ல, இழையுடனேதிரிபோலகயிருண்டாக்கி யெழிலான கயிருக்குள் துவாரமிட்டு, பிழைபொன்றும்நேராமல்கழுத்தைச்சுற்றி ப்பிடரியிலே முடிச்சியுடன்பின்னல்செய்து, நுழையாமல் சலமதுவு ம்திருவல்பூண்டு நுணுக்கமுடன்தேகமதில்பூண்டுகொள்ளே. ருகூஅ

பூண்டுமேகாவடியிலிரும்புமாட்டிப் பொங்கமுடன் யிரும்புக்கு குண்டுவைத்து, நீண்டுமேதானுமல்லோதோணிகட்டி நெடிதானவா ரிதியில்மத்திபத்தில், தாண்டியேமரத்தினின்றுகுதிக்கும்போதுதாழ் வாகத்தாரணியைக்காணலாகும், வேண்டியேராமுழுதுமுள்ளிருந்து விருப்பமுடன்மேலேறிவருகலாமே. ருகூகூ

வருகவென்றுல்மேல்நிற்கும் சூட்சந்தன்னை வாகுடனே யோரா ள்தான்தூக்கினுக்கால், பெருகலுடன் சமுத்திரத்தைவிட்டுமைந்தா பெருமையுடன்கறைவழியே காணலாகும், துரிதமுடன் கடலுள்ளே சென்றுநீயும் துலையாதபொருள்களெல்லாமகாணலாகும், பருவமுட னிதிகாசவித்தையப்பாபாகமுடன்போகரிஷிபாலித்தேனே. சா

சமுத்திரத்தில்இராவணன்கோட்டைமுழுகினது.

பாலித்தேனின்னமொரு மாற்கம்பாரு பாருலகில்யாருந்தான் சொன்னதில்லை, சாலித்தகிரேதாயினுகத்திலப்பா சத்தசாகாம்பொ ங்கிமேல்வழிந்து, வாலித்துக்கோட்டையதுசலமேகொண்டு மண்மூ டிசலமதுவுமிகவேகோர்த்து, பாலித்துதேசமெல்லாமுழுகிற்றென்று பாலித்தார்காலாங்கியெனக்குத்தானே. சாக

தானனதிரேதாயினுகத்திலப்பா சதகோடிசூரியருங்கண்டதில்லை,வேனன ராவணனர்கோட்டைக்குள்ளே வெளிகாணுகோட்டையதுயேழுசுத்து, கோனனபென்னையர் காலாங்கிநாயர் குளிகையிட்டுகோட்டைக்குள்சென்றாரங்கே, பானனதிரேதாயினுகத்துசித்தர் பலருடனேயிருந்தாராம்கோடிபேரே. ௬௱௨

பேரானசித்தர்முனிரிஷிகள்கோடி பேருலகில்யிருந்தாராமனேகம்பேர்கள்,சீரானகோட்டைக்குள்சமாதிகண்டேன் சிறப்பானசமாதிமுன்ராட்சகூட்டம், பாரானஇங்கிலியராயிரம்பேர் படைபொருதவென்மேலேவந்தபோது, நேரானகாலாங்கிநாயர்தாமும் நெறிமுறைமைவழுவாதுநெறிசொன்னரே. ௬௱௩

சொன்னதொருகாலாங்கிநாதருக்கு சொரூபமென்ற சித்தரெல்லாமொன்றாய்க்கூடி, நன்னயமாயிராவணனர் கோட்டைக்குள்ளேநலம்பெரியவதிசயங்கள்யாவுஞ்சொன்னர்,பன்னபமாய்சமாதிவடஞ்சென்றபோது பார்த்தார்கள்கோடிமுனிரிஷிகள்தேவர், மன்னயினர்கோட்டைக்குள்வந்ததற்கு வாகுடனேதண்டனைகள் மிகுதியாச்சே.

ஆச்சுதாம்காலாங்கிநாதருக்கு அப்போதேசாபமதுநேர்ந்துதங்கே, மாச்சலுடன்காலாங்கிநாதர்தாமு மகத்தானசொரூபமென்ற குருவையெண்ணி, நேச்சலுடன்சாபமதைநிவர்த்திசெய்ய நேர்மையுடன்தன்மனதில்நினைத்தபோது, கூச்சலென்றசாபமது நிவர்த்தியாச்சுகொற்றவனே திரேதாயினுகத்தில் தானே. ௬௱௫

தானனயுகத்திலப்பாகாலாங்கிநாதர் தகைமையுடன்சாபமதைதீர்த்துக்கொண்டார், கோனனஎன்னையர்காலாங்கிநாதர் குவலயத்திகோடியுகம்குளிகைபூண்டார், தேனனரிஷிகளிட சாபத்தாலுந்தேயினர்ராவணனர்கோட்டைக்குள்ளே, மானனசமாதியிடம் கிட்டிப்போனர் மகத்தானதேவமுனிகண்டிட்டாரே. ௬௱௬

கண்டவுன்காலாங்கிநாதர்சாமி கருத்துடனேசமாதியிடம்சென்றபோது, அண்டமுனிராட்சதர்களசுராள்கூட்டம் அணியணியாய்வலாகொடுத்துநின்றாரங்கே,சண்டையிடும்ராவணனர்சமாதிகண்டார்சாங்கமுடன்ரிஷிகளெல்லாமங்கிருந்தார், தெண்டமுடன்சமாதியிடம்சென்றபோது திரமுடனுளவையெல்லாங்கேட்டிட்டாரே, ௬௱௭

கேட்கையிலேசதகண்டராவணன்தான் கெடியானசமாதியதுகண்டிட்டாராம், நாட்டமுள்ளசமாதியதுகடுமையத்தில் நலமபெரியகோட்டைக்குமேற்புறந்தான், நீட்டமுடன்பன்னீருகாதமப்பா நிலை

யானசாமியுட கோட்டையாகும், வாட்டமுடன் சமாதியது கிட்டிப் போனர் வாகுடனேசித்தர்முனிகாவல்தானே. சுாஅ

இராவணன்நவரத்தினசமாதி

காவலுடன் ரிஷிக்கூட்ட மசுராள்தானும் காவலனர் கோட்டையதுசமாதிமுன்னே, ஆவலுடன்காணவென்றுபோகும்போது அங்குள்ளராட்சதர்களசுராள்கூட்டம், ஏவலென்னும்கிங்கிலியர்ரயிரம் பேர்யெழிலானகோட்டைவழிதான்மறிப்பார், பாவலுடன்காலாங்கி வார்த்தைகூறி பதிபோகயுபாயமதுகண்டிட்டாரே. சுாகூ

காணவேசமாதியதுமேற்புரத்தில் கனகமணிநவரத்தின சமாதி கண்டார், வேணவேவுபசாரமுடன்காலாங்கிநாதர் விடுபட்சிச்சமாதியிடஞ்சென்றாரங்கே, நாணமுடன் தலைகுனிந்துவார்த்தைகூறிநலம்பெரிசமாதியிடஞ்சென்றிட்டாராம், பாணம்போலசரீரி வாக்கியந்தான் பாரினிலேசத்தமதுகேட்கலாச்சே. சுாய

கேட்டவுடன்காலாங்கிநாதர்தாமும் கிருபையுடன்சமாதியிடம் போகவஞ்சு, நாட்டமுடன்நடுமையம் கோட்டைக்குள்ளே நலமுடனேகாலாங்கிபெருமூச்சிட்டு, தேட்டமுடனிராவணனர்பாதம்காண தேர்வேந்தேயெனக்குகுறைநேறலாச்சு, கோட்டமுடன்மனக்குறைகளநேர்ந்ததென்று கூறினர்காலாங்கிநாதர்தாமே, சுாயக

தாமானகாலாங்கிநாதர்சாமி தண்மையுடனவர்களிடம் பேசாமற்றுன், நேமமுடன்காலாங்கிநாதர்தாமும் நெறியுடனேயங்கிருந்துமறுபக்கந்தான், போமெனவேதன்மனதிலடக்கிசாமி பொலிவுடனேகீழ்ப்புரமாம்திரும்பும்போது, ஈதமுடன்கோட்டைக்குள்ரிஷிகள்கோடிதெளிமையுடன்கண்டாராம் கோடிபேரே. சுாயஉ

கோடியாம்ரிஷிமுனிவர்கோடாகோடி கோமகனர்கோட்டைக்குள்வாசற்பக்கம், நீடியேசமாதியிடம் நின்றிட்டாராம் நித்திலங்கும் பூமகனர்சமாதிபக்கம், தேடியேபார்க்குகையில் சமாதிமுன்னே திகழானசித்தொருவரங்கிருந்தார், நாடியேயவரிடத்திற்கண்டுபேசி நயமுடனேராவணன்சேதிகேட்டிட்டாரே, சுாயங

இராவணன்பாட்டன் துவாபரயுகத்துச்சங்கதி.

கேட்கையிலேதுவாபர யுகத்திலப்பா கெடியானபென்பாட்டன்ராவணற்கு, சூட்சமுடன்ரிஷிசாபம் நேர்ந்ததென்று சூட்சமுடன் எந்தனுக்குச்சித்துசொன்னர், வேட்கமுடன்ரிஷியினிடசாபத்தாலே வேகமுடன்கோட்டையதுயழியவென்றும் நீட்கமல சூர்ப்பனகிபங்கமாகிநீடாழிகோட்டையதுபிடியென்றாரே. சுாயச

இடியென்றசாபத்தால்யிலங்கைதானும் யெழிலானபதிகள்முதல்யெல்லாம்போய்,நொடிக்குள்ளேவாரிதியுமிகவும்பொங்கிநோக்கமுடன்ராவணனுர்தம்பியானோர்,படிகடந்துசமாதிக்குப்போகநன்று பட்சமுடன் பாரினிலேயிருக்கலாகா, குடிகொண்டமயிலிராவணனுரொக்க கூட்டமுடன்சமாதிக்குஏகினரே. ௪௱௰௫

ஏகவேராமர்வெகுகோபத்தாலும் யெழிலானசீதையின் சாபத்தாலும், போகவேகோட்டைமுதல்யாவுங்கெட்டுபொன்னுலகுபதிதனக்குப்போகவென்று,சாகமுடசமாதிக்குயிடமுந்தேடிசட்டமுடனிலங்கைபதிகடலோரத்தில், பாகமுடன்கோட்டையதுநடுமையத்தில் சர்வரும்சமாதியதுனின்றிட்டாரே. ௪௱௰௬

நின்றதொருசமாதிமுதலெல்லாம்பார்த்து நேர்மையுடன்துவாபரத்துசேதிகேட்டு,தன்றனதுவரலாறுயாவுஞ்சொல்லிசட்டமுடனுபதேசம்பெற்றுமேதான், குன்றுமலைவாரிதியாவும்பார்த்துக் குவலயத்தில்காலாங்கிவந்துமல்லோ, சென்றுமேசமாதிக்குப்பருவமானுர் சிறப்புடனேகாலாங்கிநாதர்தாமே. ௪௱௰௭

நாதரும்சமாதிக்குப் போகுமுன்னே நலமுடனே யடியேனும் போகர்தாமும், பாதமுடன்வவர்பாதம்பணிந்துகொண்டு பாரினிலேயுபதேசம்யாவும்பெற்று,நீதமுடன்சீஷனதில்நற்சீஷனுகிநிமையுடன் நாதருடநருளும்பெற்று, போதமுடனுலகுதனில்குளிகைபூண்டு புறப்பட்டுபோனேனேசீனந்தானே. ௪௱௰௮

சீனபதிபெண்களுக்குகறபயெண்ணே.

தானனசீனபதி சென்றேன்பானும் தகைமையுடன் கருவெண்ணெய்சாற்றக்கேளும்,வேனனசிற்றிணுமணக்கிநெண்ணெய்விரைவானவரிச்குமட்டிநதிக்குமட்டி, கோனனகழச்சிக்காய் முடக்கொத்தானும்கூரானவிரலியுடன்காட்டுள்ளிதானும், பானனபிரமியுடன் வறுகுதானும்பாங்கானமுலிபிடச்சாறுகூட்டே. ௪௱௰௯

கூட்டவேயெண்ணெயது பங்கொன்றுகும் குமுறவேசாற்மூலிபங்கொன்றுகும், நீட்டமுடன்சரியெடையா யெடுத்துக்கொண்டு நெடிதானபுங்கன்வேர்சங்கன்வேறும், வாட்டமுடன்கொடிவேலிபங்கம்பாளைவாகானகிளுவையுடவாகைதானும், மீட்டமுடன்கிளுவையதுசங்குதானும்நெடிதானதலைச்சுருளிகாக்கணமே. ௪௨௰

காக்கமுடன்திரிதுமரிவெள்ளைச்சாறை கருவானமூவகைபின்வேறுங்கூட்டி, நோக்கமுடன்வகைக்குவொருபலமதாக நுணுக்கமுடன்

றுனிடித்துக்கூடப்போடு, தேக்கமுடன் கஸ்தூரிக்கள்ளிதானுந்தேர்ந்துமேதானெடுத்துப்பிழிந்தசாறு, தூக்கமுடன்வகைக்குவொரு காலதாகதுப்புரவாயெண்ணெ தனில்கலந்திடாயே. சஉக

கலந்துமேவதிற்போடுங்கற்பங்கேளுகருவானதிப்பிலியும் கடுகுதானும், அலர்ந்தகடுக்காயுடனேகடுகுரோணி அப்பனேவால்மிளகுசீரந்தானும், மலர்ந்ததோர்வால்மிளகுகுரோசானிதானுமார்க்கமுடன்கருஞ்சீரம்கஸ்தூரிமஞ்சள், நிலர்ந்தமஞ்சள்தன்னுடனேவரத்தைகூட்டிநெடிதானசுக்குடனேசிறுநாகப்பூவே. சஉஉ

பூவானபிந்துப்பு திப்பிலிதானும் பொங்கமுடன் பெருங்காயஞ்சாதிக்காயாம், மாவானசாதிக்காய்சாதிபத்திரிமாற்கமுடன்சேங்கொட்டைதாளிசந்தானும், சேவானசிவதைநிலவாகைவேரும் சிறப்பானகோரையிடகிழங்குதானும், காவானசுக்குடனேதான்றிக்காயும் கருவானநெல்லியுடன்வோமந்தானே. சஉங

ஓமமுடன்வாய்விளங்கம்விடையந்தானும் ஒப்பமுடன்மாசியென்றகாயுங்கூட்டி, தாமமுடன்வகைக்குவொருபலமதாகத்தைமையுடன்றுனிடித்துகூடப்போட்டு, வாமமுடன்வடுப்பேற்றியெரிக்கும்போதுவாகானவெண்காரம்விராகனென்று, தூமமுடனிந்துப்புவிராகன்ரண்டு சுயமானகரியுப்புவிராகனென்றே. சஉச

ஒன்றானயிவையெல்லாம்பொடித்துப்போட்டுவுத்தமனேமெழுகுபதந்தனிலிறக்கி, நன்றானக்கலசத்தில்பதனம்பண்ணும் நலமாகமண்டலஞ்சென்றெடுத்துக்கொண்டு, தன்றானவீட்டுக்குவிலக்கமானதயவான முதநாள்தான்மூன்றுநாளும், குன்றுமல்காலையிலே ராண்டிகொள்ளகுணமாகுமாறுவிதசூலேபோமே. சஉரு

போமேதான்கெற்பமென்றசூலேபோகும் பொல்லாதகெற்பத்தின்வாயுபோகும், தாமேதான்கெற்பத்தின்ரோகம்போகும்தனியானகெற்பத்தின்திரட்சிபோகும், வேமேதான்சூதகத்தின் வாயுபோகும்வெகுளாமல்குன்மத்தின்கட்டிபோகும், நாமேதான் சொன்னபடி பத்தியந்தான்நலமானவெள்ளாட்டுப்பால்தான்கூட்டே. சஉசு

கூட்டவேகாலாம்நாள்வென்னீராலே குமறவேஸ்தானமதுசெய்யவேண்டும், நாட்டமுடனன்றுமுதல்நான்குநாளும் நலமாகவிழுதியிலேபாலுங்கூட்டி, வாட்டமுடன்றுனருந்திவந்திசந்திவாகாகயேழநாள்யெணணெமுழ்கு, நீட்டமுடன்மூன்றுமுறையிப்படியேசெய்யநீணிலத்தில்கெறபமதுவிளையும்பாரே. சஉஎ

பாரேதான்வாணுக்குமிந்தபாகம்பட்சமுடன்றுனருந்தரோகம்போகும், சீரேதான்திங்களுகதுவைந்துநாளு திறமையுடன் மூன்றுமுறை

யுண்ணவேண்டும், நேரேதான்பத்தியமுமுன்போற்காரு நேரானமே கமதுகசரோகம்போம், வாரேதான்காலாங்கிநாயர்பாதம்வணங்கியே போகரிஷிவறைந்திட்டேனே. ௪௨௮

அறைந்திட்டேன்பலகருக்கடையாராய்ந்து அப்பனேமானிடர் கள்பிழைக்கவென்று,திறைந்திட்டேன்சூத்திரங்களூறுதிபார்த்துதெ ளிமையுடன்பலநூலும்பெருநூல்பார்த்து, குறைந்திட்டசூட்சாதிசூ ட்சம்பார்த்துக் கூறினேன்சித்தர்நூலெல்லாம்பார்த்தேன், முறைந் திட்டேனிந்தவண்ணம் யாருஞ்சொல்லார் முயற்சியுடன்பாடிவைத் தேன் காண்டந்தானே. ௪௨௯

தானனகாண்டத்தில்மூன்றுங்காண்டம் தகைமையுள்ளகருக்கு ருவுயாவுஞ்சொன்னேன், வேனனயென்னையர்காலாங்கிநாயர் விருப் பமுடனுபதேச மனேகஞ்சொன்னர், கோனன்வுபதேசம்யாவுங்கே ட்டு கொட்டினேன்சத்தமென்றகாண்டமப்பா, பானனகாண்டமே மூாயிரந்தான் பாகமுடன்பாடிவைத்தேன்போகர்தாமே. ௪௩௰

தாமேதான்மொழிந்திட்டாரனந்தங்கோடி தகைமையுடன்கண் டறிந்தேன்சதாகாலந்தான், வேமேதான்சித்தர்முனிரிஷிகளப்பாவெ னைப்போலயாருந்தான் சொல்லவில்லை, சாமமுடநூல்களெல்லாஞ் சாபஞ்சொன்னர்சாங்கமுடனுளவுகருசொல்லவில்லை, நாமமுடனடி யேனும்விரித்துரைத்தேன் நலமாகசீனபதியுலகத்தோர்க்கே. ௪௩௧

உலகானசீனபதிமாந்தரப்பா வுளவுமுதல்கருக்களெல்லாங்கண் டாரங்கே, நிலவுபோல்சொல்லிவிட்டேன்மாந்தற்கப்பா நிட்சயங்க ளெல்லாந்தான்கண்டுகொண்டார், கலவியுடனுமல்லோவுறவுகொ ண்டு காணுதகாட்சியெல்லாமங்கேகண்டேன், தலமதிகமானதொரு சீனதேசம் தாரணியிலெவராலுஞ் சொல்லப்போமோ. ௪௩௨

போகாதுவாதிசேடனிலுமாகப் பொங்கமுடன்சித்தரிலு மாகா தப்பா, வேகாதபிணம்போலவுழல்வாரப்பா விருதாவாய் நூல்சொல் லிமறைத்தாரங்கே, சாகாதகற்பமது வுறுதிசொன்னர் சாங்கமுடன் கற்பத்துக்குயிர்தானில்லை, ஆகாதசாத்திரங்களனைத்துஞ்சொல்லிஅ ப்பனேசாபமதுசொன்னர்காணே. ௪௩௩

காணவேசாபமதுசொன்னரங்கேகருவாகயெனைப்போலச்சொ ன்னரில்லை, தோணவேதோணுதபொருள்களெல்லாம்துறையுடனே முறையுடனே சொன்னேன்யானே, மாணவேயென்னூலைப் பார்த்த

பேர்க்குமறைப்புமுதல்திறைப்புமுதல்யாவுமில்லை, நாணவேசாத்திர ங்கள்முறைதப்பாமல் நலமுடனேபாடிவைத்தேன்நண்மைபாரே. ()

போகர் கருலேகியக்கிரதம்.

பாரேதானின்னமொருகருமானங்கேள் பாடுகிறேன்மாணுக்கள் பிழைக்கவென்று, நேரேதான்வரிக்குமட்டிசார்தாநாழி நேரானகள் ளிச்சார்சாறுநாழி, கூரேதான்வழிஞ்சிச்சார்சாறுநாழி குணமானயி ஞ்சிச்சார்சாறுநாழி, வாரேதான்மாவிலிங்குச்சாறுநாழிவாகானவிழு தியிடச்சாறுகூட்டே. ௬௫௫

கூட்டியேபழச்சாறுநாழிதானுங் குணமானபசுநெய்யும்நாழிகூ ட்டு, நாட்டமுடனயிதுவெல்லா மொன்றாய்க்கூட்டி வளமையுடன் தான்சேர்த்துமருந்துகேளு, நீட்டமுடன்திப்பிலியும்சுக்குதானும்நெ டிதானவெள்ளுள்ளியிலுப்பைப்பூவே. ௬௫௬

பூவானசவர்க்காரமிந்துப்போடு புகழானநவாச்சாரம்கடுக்காய் தானும், நாவானபெருங்காயம்வெண்காரந்தான் நலமானவாலுளுவை சீரந்தானும், பாவானவோமமுடன்கடுகுரோணி பாங்கானவரப்பொ டியும்கருப்புக்கட்டி, மாவானசாதிக்காய் கிராம்புதானு மகத்தான கடுக்காய்த்தான்றிக்காயே. ௬௫௭

காயானநெல்லிக்காய்சுக்குதானும் கருவானபிளகுடனேகோஷ் டந்தானும், தாயானயேலமுடன்வளையலுப்பு தாக்கானவெடியுப்பு யெவச்சாரந்தான், மாயானயிந்துப்புகல்லுப்போடு மகத்தானசவர்க் காரம்பலமதாகும், தூயானமிதுவெல்லாம் சமனாய்க்கூட்டி துப்புற வாய்சீனியது சரியாய்க்கூட்டே. ௬௫௮

கூட்டியேவாலுகையிலடுப்பிலேற்றிக் குமுறவேசேறுபோலாக க்காய்ச்சி, நாட்டமுடன்கலசமதில்பதனம்பண்ணுநலமுடனேயந்தி சந்திகொண்டாயானால், வாட்டமுடன்கவுசையொடுகுன்மம்பாண்டு வாகானதொண்டைமுதல்மலட்டுப்பூச்சி, காட்டகத்தேபோகுமென் றுபோகர்தானும் கருத்துடனேபாடிவைத்தகிரதந்தானே. ௬௫௯

தானானகிரதமதுபட்சந்தானும் தயவுடனேகொண்டவற்குகெற் பமுண்டாம், கோனானவிஷபாண்டு சோகைபோகும் குடிகெடுக்கும் கெற்பமென்றரோகந்தீரும், மானானகைகுடக்கல்வாயுபோகு மகத் தானசூலைமுதல்ரோகம்போகும், தேனானவிப்புருதிமாலைதீரும் தெ ளிவானகைமுடக்குபோகுங்காணே. ௬௬௰

காணவென்றால்யிடுப்புவலி சந்துவாதங் கழல்வாதம்குடல்வாத மொணுதோடும், நாணவேவயிற்றுவலிவிம்மல்போகும் நரம்பெலாம் பிரத்திருத்தல்நளினமாகும், ஈணவேபிறவீச்சுபித்தம்போகும்யெழி லானவாதமென்றதெண்பதும்போம், சீணவேவயிருளவுபெருமூச்சே கும் சிறப்பானபத்தியங்தானில்லையாமே, சசுக

ஆமேதான்மருந்துண்ணுங்காலந்தன்னில் அப்பனேவாயுவென் றபதார்த்தந்தள்ளு, போமேதான்சீதளமாம்பண்டமாகா பொலிவா னகாரமுதல்மிகவுமாகா, தாமேதானிச்சாபத்தியந்தான்காரு சார் பாகமற்றதெல்லாமாகும்பாரு, நாமேதான்சொன்னபடி போகர்நூ லுநாட்டிலேபொய்க்காதுநளினமாமே. சுஙஉ

ஊர்க்குருவிலேகியம்,

நளினமுடனின்னமொருமாற்கம்பாரு நாதாக்கள்சொன்னதில் லைநாட்டிலோர்க்கு, நளினமென்றவடைக்கலந்தானுணேயாகும் கரு வானவாண்குருவிகொண்டுவந்து, மளினமுடன்ரோமமுதல்யெல்லா மநீக்கி மாசற்றகுடல்தலைக ளெல்லாம்போக்கி, பளினமுடன்கருங் கோழிரத்தஞ்சேரில பாகமுடன்தான்பொரித்துயெடுத்திடாயே. ()

எடுத்துமிகப்பார்க்கையிலே பென்னசொல்வேன் யெழிலான சோரியதுசுண்டியேதான், தொடுத்ததொறுவடைக்கலமு மொன்று ய்ச்சேர்ந்து துப்புரவாய்திரண்டுமல்லோ கரிபோலாகி, விடுத்ததொ ருமாமிஷத்தையெடுத்துக்கொண்டு விபரமுடன்சொல்லுகிறேன்மை ந்தாகேளு, கொடுத்திடவேலவணவகைகற்பந்தானும்கூறுவேன்பளி ங்குடனேசெப்பக்கேளே. சுசுச

செப்பவென்றால்இந்துப்பு வராகன்ரண்டு தெளிவானகல்லுப்பு வராகன்ரண்டு, ஒப்பமுடன்வளையலுப்புவராகன்ரண்டு வொளிவான மதியுப்புவராகன்ரண்டு, செப்பமுடன்சாரமது வராகன்ரண்டு நேரா னவங்காரம்வராகன்ரண்டு, கொப்பமுடன்சவர்க்காரம்வராகன்ரண் டு குமுறவேபித்தனையும் பொடியாய்ச்செய்யே. சுசரு

செப்பவென்றால்பொடிதனிலேசேர்க்கக்கேளுசெயலானசுக்கு டனேமிளகுகூட, பெப்யவேவோமமுடன்சீரந்தானும் பேரானகரி யபோளந்சர்னப்பா, மெய்யானபூரமென்றபற்பந்தானும் மேலான ரசமென்றசெந்தூரந்தான், மையானபொடியாக்கிவொன்றாய்ச்சேர் ந்து மாற்கமுடன்நெய்தேனுங்கூட்டிடாயே. சுசசு

கூட்டையிலேசர்க்கரையு மொன்றாய்ச்சேர்த்து குணமாகத்தா ன்கிளறிபதனம்பண்ணு, நாட்டமுடன்லேகியத்தை மண்டலந்தான் நலமுடனேகொண்டுவரபலனைக்கேளு, தீட்டமென்றநாளையிலேவயி ர்நோப்போகும் திறமானகால்வீக்கமகோதரம்போம், வாட்டமுடன் சூதத்தின்திரட்சிபோகும் வாகானகட்டிமுதல்சூலைபோமே. ௪௪எ

சூலையுடன்வாயுவென்ற தெண்பதும்போம் சூக்குமத்தின்நீரேற் றமகன்றுபோகும், காலையிலேவாயூறலற்றுப்போகும் கதிப்புடனே கொதிப்புமுதல்காணுந்தோடம், மாலையிலேதான்காணுமண்டைக்குத் து மயக்கமுடன்றலையிடியுமாறிக்காணும், ஆலையிலேயகப்பட்டகரு ம்புபோல அகன்றுமேபோகுமடாபிணிகள்தாமே. ௪௪அ

பிணியானருதுகால வியாதிரோகம் பேரானகெற்பத்தின்ரோக ம்போகும், அணியானருத்திரமாங்குடல்தான்முட்டி அப்பனேவாயு வென்றகட்டிதானும், நணியானமகோதரமுமணுகாதப்பா நாடாது குடல்வலியும்போகும்பாரு, கணியானசோரியதுகட்டிப்போகும் கா ரானகெற்பநோய்போகுந்தானே. ௪௪௯

தானேகேள்சூதகத்தின் வாயுதீரும் தாக்கானக்ஷரோகமெல்லா ம்போகும், வேனேதான்திமிர்வாதம் குடலில்வாதம் மிக்கானபட்ச மென்றவாதம்போகும், கோனேதான்கெண்டையென்ற வாதம்போ கும் கொடிதானயிசிப்புவலிபோகும்பாரு, மானேதான்முழங்காலின் வாதம்போகு மகத்தானபாதமதுவீக்கம்போமே. ௪௫0

வீக்கமதுபேகுமதுயென்னசொல்வேன்மிக்கானதேகமதுயிளப் புமெத்த, தூக்கமதுமதிகமுடன்சன்னலாகும்துடியானநரம்புமுதல் துடிப்புமெத்த, தாக்கமுடன்சூடதுதான்தலைமேற்கொண்டு சதாகா லம்தலைவலியுமிகுதிகாட்டும், ஊக்கமுடன்தலையிலமது சொல்வோம் பாருவுத்தமனேபோகரிஷியுண்மைகாணே. ௪௫௧

கெற்பச்சூட்டுக்குத்தயிலம்

உண்மையாமின்னமொரு மாற்கம்பாரு வுத்தமனேநாதாக்கள் சொன்னதில்லை,வண்மையுடன்தயிலமதுசாற்றக்கேளுவாகானயெண் ணையதுசேர்தானப்பா, திண்ணமுடன்கையான்சாற் சேர்தானப்பா திறமானமுடக்கொத்தான்சேர்தான்பாதி, நண்ணமுடன்கருந்துளசி சேர்தானப்பாநவமானநெல்லிச்சாற்சேர்தான்கூட்டே. ௪௫௨

கூட்டவேதமுதாழைச்சார்தானுழி குணமானவழுதலைபின்சார் தானுழி, நீட்டமுடன்பசளைச்சார்சார்தானுழி நெடிதானகுமரிச்சார் சார்தானுழி, தேட்டமென்றநீர்ப்பூண்டுசார்தானுழி தெளிவானகரந் தைச்சார்சார்தானுழி; வாட்டமுடன்பசுவின்பால் நாழியாகும் வள மானகடைசரக்குசாற்றக்கேளே. ௪௫௩

கேளேதான்கற்கவகைசாற்றக்கேளும் கெடியான்வாலுழுவைய ரிசிதானும், தாளமுடன்நன்னாரிமுத்தக்காசு தாக்கானசீரகமும்வோ மந்தானும், நீளமுடன்கார்போகமேலந்தானும் நிலையானகோஷ்ட முடன்மதுரந்தானும், பாளமுடன்வகிற்கட்டைசெம்பூரானும் பாங் கானசந்தனமுடன்தேவனமே. ௪௫௪

தேவனம்பட்டையுடன் கருஞ்சீரர்தான் தேற்றுனுமெட்டியுட ன்சித்தரத்தை, காவமென்றவால்மிளகுசாதிக்காயும் கருவானபூப்ப னையும்தண்ணீர்மிட்டான், சாபமென்றகரிமஞ்சள் கஸ்தூரிமஞ்சள் சாபானவெள்ளையென்ற மிளகுகூட்டி, தூபமென்றசாம்பிராணிசம னதாக துப்புரவாய்முக்கண்ணின்பாலாலாட்டே. ௪௫௫

ஆட்டியேமெழுகுபதந்தன்னிற்காய்ச்சி அப்பனேதான்வடித்து பதனம்பண்ணு, தாட்டிகமாய்சீசாவிலடைத்துமைந்தா தகைமையுட ன்வொருதிங்களானபின்பு, நாட்டமுடன்தயிலமதைபிரயோகித்தால் நாடாதுகெற்பத்தின் சூலைபோகும், ஓட்டமுடன்கெற்பத்தின் வாயு போகும் ஓகோகோபொய்யாதுவுண்மையாமே. ௪௫௬

உண்மையாம்தயிலமாம்வுறுதிமெத்த வுத்தமனேபொறிச்சூடுவி ட்டேயோடும், திண்மையாம்பிடரிவலிசன்னிபோகும திறளானவேர் வையதுதுள்ளியோடும், வண்மையாம்கையெரிவுகாலெரிவுதானு மக த்தானவாயுவென்ற தெண்பதும்போம், நண்மையாம்காந்தலது மிக வேறுது நளினமுடன்போகரிஷிநவின்றவாறே. ௪௫௭

கந்தகத்திருவகம்.

வாறுனவின்னமொருமாற்கம்பாருவளமையுடன்கெந்தகமும்சே ர்தானென்று, நேறுனசீனமதுசேர்தான்ரெட்டி நெடிதானபூநீறுசே ர்தான்காலாம், பானுனவுப்பதுவும்சேர்தான்பாதி பளிங்கானவளைய லென்றவுப்புதானும்,தேறுனவெவாச்சாரம்சேர்தான்காலாம்சிறப்பா னசரக்கெல்லாம்பொடியாய்ச்செய்யே. ௪௫௮

செய்யவேவாலையென்றபானைக்குள்ளேசீருடனேசரக்கெல்லாம் போட்டரைத்து,பைபவேசக்கரமாம்வாலைவைத்துப்பாகமுடன்திரா வகத்தையெறக்கிப்பாரு, முப்பவேமுன்றுமுறை யிந்தபாக முபற்சி

யுடன்றனிறக்கி யெடுத்துக்கொண்டு, தூய்யநல்லசீஷாவி லடைத்து க்கொண்டு துப்புரவாய்கற்பரணைமூடிடாயே. சுடுக

மூடவேதிராவகத்தின் காரமப்பா மூவுலகந்தானெறிக்கும் கதிரோன்போல, சாடவேசரக்குக்கு காலனுகும் சாங்கமுடன்திராவக மோசுறுக்குமெத்த, நீடவேதிராவகத்தை தப்பதனம்பண்ணு நினைப்புடனேயின்னம்வொருமாற்கம்பாரு,கூடவேகண்டருட.திராவகத்தைக் கூறுவேன்மாணுக்கள் பிழைக்கத்தானே. சசுய

துருசு திராவகம்.

தானன துருசதுதான்சேர்தானென்றுதாக்கானசீனமதுசேர்தானென்று, வேனுனபூநீறுசேர்தான்பாதி வேகமுடன்கல்லுப்புசேர்தான்காலாம், கோனுனவெண்காரம் சேர்தான்காலாம் கொப்பெனவே விவையெல்லாம்பொடியதாக்கி, மானுனபெனதையர் குருவையெண்ணி மாற்கமுடன்பானைதனில்கொட்டிடாயே. சசுக

கொட்டியேகுருசொன்னவளவாய்க்கூட்டி குணமாகசக்கரமாம் பானைதன்னில், திட்டமுடன்வாலைவைத்துச்சீலேசெய்துசிறப்புடனே யிருபக்கம்புனலும்வைத்து, சட்டமுடனடுப்பேற்றியெரிப்பாயானல் சார்புடனேதிராவகமுமிறங்கும்பாரு, நட்டமில்லாதிராவகமுமெடுத்துப்பாரு காதாக்கள்செய்யார்களதிதந்தானே. சசுஉ

அதீதமென்றவித்தையிது வாலைவித்தை அவனியிலேசெய்யுவது வரிமைகாணும், கதிதமென்றதிராவகத்தைப் பதனம்பண்ணு கருவானசூதத்துக்குறுதிகாலன், நதீதமென்றக்ண்டருடதிராவகத்தால் நாட்டிலேவெகுகோடிசெய்வாரப்பா,பதீதமென்றதிராவகங்களின்னஞ் சொல்வேன் பாகமுடன்போகரிஷிபயின்றவாறே. சசுரு

சாரத்திராவகம்.

பயின்றதொருவின்னமொருமாற்கம்பாருபாங்கானசாரமதுசேர்தானென்று, நவின்றதொருபூநீறுசேர்தான்பாதி நலமானசீனமதுசேர்தானென்று, துயின்றதொருகல்லுப்புசேர்தான்கால்தான் சுயமான வெண்காரம்சேர்தானென்லு, அயின்றதொருசரக்கெல்லா மொன்றாய்க்கூட்டி அப்பனேகலசமென்றபானைக்கேற்றே. சசுசு

ஏற்றவேசக்கரமாம்வாலைவைத்து யெழிலாகச்சீலைபசுவலுவாய்ச்செய்து, காற்றதுதான்போகாமல்வடிப்பிலேற்றி கரகமென்றபானைக்குகுழலும்வைத்து, போற்றமுடன்புனல்வழியேசலமும்போகபொங்கமுடன்தானெரிப்பாய்சாமநேரம், கூற்றனைப்போல்திராவகமுமிறங்கும்பாரு கொடிதானவேகமதுசொல்லொண்ணுதே. சசுரு

சொல்லவேநாவேதுபாவுமேது சொற்பெரியதிராவகமும் காரமெத்த, வெல்லவேசரக்குக்குமித்திரகாலன் வெகுகொடியன்வெகு நெடியன்சாரனப்பா, புல்லவேதிராவகத்தைப்பதனம்பண்ணு பொங்கமுடன்சீஷாவில்விட்டுமைந்தா, மெல்லவேமேற்கல்லுகொண்டுமூடிமிக்கானதிராவகத்தைவுறுதிபண்ணே. ௬௯௬

வெடியுப்புதிராவகம்.

பண்ணவேயின்னமொரு மாற்கம்பாரு பாங்கானமதியுப்புசேர்தானென்று, உண்ணவேசீனமதுயிருசேராகும் வுத்தமனேசாரமது கால்சேராகும், திண்ணமுடன்பூனீறுசேர்தான்பாதி தெளிவானகல்லுப்புசேர்தான்கால்தான், வண்ணமுடன்சரக்கெல்லாமொன்றாய்க்கூட்டி வனமாகத்தான்பொடித்துக்கலசமாட்டே. ௬௯௭

ஆட்டியேவாலுகையை மேலேவைத்து அப்பனேசீலையதுவலுவாய்ச்செய்து, நீட்டியேதிராவகமுமிறக்கிப்பாரு நிலையானதிராவகமோகாந்தமெத்த,பூட்டகமாய்தானெடுத்துச்சீஷாவிற்குள்புகழாகத்தானடைத்துப்பதனம்பண்ணு, நாட்டமுடன்திராவகமோ நவிலப்போமோ நாதாக்கள்செய்யார்கள்நண்மைபாரே. ௬௯௮

பாஷாணத்திராவகம்,

நண்மையுடன்வின்னமொருமாற்கம்பாரு நாதாக்கள்கண்டதில்லைசுளுக்குவேதை, உண்மையாயுரைக்குகிறேன்பாஷாணந்தான் வுத்தமனேசங்கென்றபாஷாணந்தான், திண்மையுடன்சேரதுதானென்றேயாகும் தெளிவானசீனமதுரெண்டேயாகும், கண்மையுடன்பூநீறுகாலேயாகும் கதிப்பானவளையலுப்புகால்தான்கூட்டே, ௬௯௯

கூட்டவென்றால்கலுவத்திற் பொடியாய்ச்செய்து பொங்கமுடன்கலசமென்றபானைதன்னில், நீட்டமென்றபொடிதனையேபாண்டமிட்டு நேர்ப்புடனேவாலுகையைமேலேவைத்து, தாட்டிகமாய்மூடியதுவலுவாய்ச்செய்து சாங்கமுடன்திராவகத்தை யெறக்கிப்பாரு, நாட்டமுடன்திராவகத்தைப்பதனம்பண்ணு நலமாகசீஷாவிலடைத்திடாயே. ௭௱

அடைத்துமேதிராவகமோகாரமெத்த அப்பனேதிராவகத்தால்மோகம்நீறும், புடைப்புடனேலோகத்துக்காலனாகும் புகழாகசத்துருமித்திருதானாகும்,படைப்புடனேதிராவகத்தால்காராசாரம்பாகமுடன்றான்மடியும்பண்போமெத்த, கடைப்புடனேபிதனலேவயமுமாளும் கருவானதிராவகமுமென்பார்தானே. ௭௱௧

சங்குஅபத்திராவகம்.

தாமானவின்னமொருகருமானங்கேள் தணகமையுடன்வயமது தான்சேர்தானென்று, காமானபாஷாணம்சரியதாக கடிதானவயத் துடனேஒக்கச்சேர்த்து, நாமானபூநீறுவரையதாகநலமானவளையலு ப்புக்காலதாக, பாமானசீனமதுரெட்டிப்பாகபாகமுடன்றான்போட் டுக்கலசமூடே. ௪௭௨

மூடயிலேவாலுகையைமேலேவைத்து முயற்சியுடன்சீலையதுவ லுவாய்ச்செய்து தேடயிலேவடிப்பேற்றியெரிக்கும்போது தெளிவப கத்திராவகமுமிறங்கும்பாரு, நாடயிலேபுனலாலேசலமுமோடி நல மானதிராவகத்துக்குயிருமாச்சு, ஊடையிலேதிராவகத்தால்காரமெ த்த வுத்தமனேசெந்தூரக்குருவுமாச்சே. ௪௭௩

ஆச்சென்றுவிடுகாதே யின்னம்பாரு அப்பனேசெந்தூரமிதனு லாகும், போச்சென்றுபோகாதேபுண்ணியாகேள் பொங்கமுடனின் னமொருபாகஞ்சொல்வேன், தீச்சென்றபாஷாணஞ்சகலத்துக்கும் தெளிவாகயிந்தமுறைசெய்யலாகும், மூச்சப்பாசகலவிதபாஷாணத் தின் மூர்க்கமெல்லாஞ்சத்துருவால்முறிக்கலாச்சே, ௪௭௪

சீரகத்திராவகம்.

முறிக்கலாம்பலகோடிவேதையாகும் மோசமில்லைதிராவகங்க ள்காரமெத்த, தறிக்கலாமின்னமொருபாகம்கேளு தாக்கானசீரகமு ம்சேர்தானப்பா, செறிக்கவேசலமதுதான்ரெட்டிப்பாகும் சிறப்புட னேபூநீறுகாலதாகும், நெறியுடனேபாண்டமெனும் கரகத்துள்ளே நேர்ப்புடனேசலத்தோடேகொட்டிடாயே. ௪௭௫

கொட்டியேகரகத்தின்மேலேயப்பாகுணமாகவாலைதனைமேலே வைத்து, திட்டமுடன்சீலையதுவலுவாய்ச்செய்து திறமுடனேயடுப் பேற்றியெரிப்பாயானல், நட்டமில்லாத்திருவகமுமிறங்கும்பாருநல மானசீரகத்தின்வேகமெத்த, பட்டவுடன்பித்தம்நாற்பதும்போகு ம்பாங்கானசீரகத்தின்பண்புதாமே, ௪௭௬

தாமானசீரகத்தின்தயிலந்தன்னை தயவுடனேமூன்றுமுறையிப் படியேசெய்ய, பாமானவாலுகையால்காரமேறி பரிவுடனேபுகை யோடுநெடிதானுகும், காமானதயிலமதுயென்னசொல்வேன் காசி னியில்சித்தர்களுங்காணமாட்டார், பூமானும்காலாங்கிநாதர்பாதம்பு கழ்ச்சியுடன்பாடினேன்போகர்தானே, ௪௭௭

ஓமத்தயிலம்.

தானனவின்னமொருபாகம்பாரு தயவுடனே சொல்லுகிறேன் மைந்தாகேளு, வேனனவோமமதுசேர்தானப்பா வேகமுடன்கொ

ண்டுவந்துபாண்டமிட்டு பானுனசலமதுவும்ரேட்டிப்பிட்டு பாங்குட னேபூனீறுகாலதாக, மானுனசலமதனைவிட்டபின்பு மதிப்புடனேவா லுகையையமேலேவையே. சஎஅ

வைக்கவேசீலையதுவலுவாய்ச்செய்து வாகுடனேதிராவகத்தை வாங்கிமைந்தா, மெய்க்கவே மூன்றுமுறை யிப்படியேசெய்து மேன் மையுடன் திராவகத்தை யெடுத்துக்கொண்டு, மொய்க்கவேமுன் சொன்னதிராவகமுமப்பாமோசமதுவாராமல்செப்பக்கேளு, பொய்க் காமல்சரியெடையாயெடுத்துக்கொண்டு பொன்னவனே வெள்ளுள் ளிசேர்தான்போடே, சஎகூ

பெருங்காயவைப்பு.

போடவேதிராவகத்திலாட்டுமைந்தா புகழானவெள்ளுள்ளிமை போலாகும், நீடவேபூண்டுக்குகாயமேறி நிலையானவெள்ளுள்ளிக்கா ரமாச்சு, பாடவேசெம்மறியின் தோலாலப்பா பாகமுடன்தான்பொ திந்துதைத்துப்போடு, சாடவேமண்டலஞ்சென்றெடுத்துப்பாரு சர க்கானபெருங்காயம்காரமாச்சே. சஅ0

காசுக்கட்டிவைப்பு.

காயமாமின்னமொருமாற்கம்பாருகருவானகாசியென்றகட்டியப் பா, நேயமுடன்சொல்லுகிறேன் மைந்தாகேளு நேர்ப்புடனே வகி லத்தின்தூளுகூட்டி, பாயமுடன்பாக்கினிடகிஷாயந்தன்னுல்பாகமு டன்மூன்றுநாளாட்டிமைந்தா, தூயமுடன்ரவிதனிலே காயப்போடு துப்புரவாம்காசியென்றகட்டியாச்சே. சஅக

இரும்புசாயம்ஆடைகளுக்குவரணம்.

கட்டியென்னும்ரத்தமென்றபாளமாச்சு காசினியிலாருந்தான்க ண்டதில்லை, திட்டமுடன்சொல்லி விட்டோம் சீனத்தாற்கு திறமுட னேகண்டறிந்தோர் புத்திரவானும், சட்டமுடனின்னமொரு பாகம் சொல்வோம் சார்வானயிரும்பினிடசந்தைவாங்கு,வட்டமென்றகொ ப்பறையில்துப்பைக்கொட்டி வாகுடனேசெம்மரத்தின் தூள்தான் போடே. சஅஉ

போடயிலேசலமதுதான்பாண்டமிட்டுப் பொங்கமுடன்பட்சம் சென்றெடுத்துப்பாரு, கூடயிலேயிரண்டுமொன்றாய்சேர்ந்துகொண் டுகுணமானசிட்டம்போலிருக்கும்பாரு,நாடமுடனிரும்பென்றவாலை க்குள்ளேநளினமுடன்தான்கொட்டி வரைத்திட்டேதான், சாடவே சீலைகட்டுகாரமேற்றிச்சார்பாககரைகட்டியோரந்தீத்தே. சஅங

தீத்தையிலேபலபலவாம்ரூபம்காட்டும்சிவப்புமுதல்பஞ்சவர்ன ம்காணலாகும், தீத்தையிலேகாரங்களில்லாப்பக்கம்தெளிவானவர்ன

ங்கள்காணலாகும், நித்தமுடன்வரணங்களெழுதலாகும் திறமானயி ரும்பினிடகாரந்தன்னால், சித்தமுடன்செம்பினிடசத்துசேர்த்து சிற ப்பாகத்தானுருக்கியெடுத்திடாயே. ௪அ௪

எடுத்துமேவயத்தினிடபாகம்போல வெழிலாகவகிலமாம் பட் டைத்தூளும், தொடுத்துமேசெம்பினிடசத்துசேர்த்து தோற்றமுட னலைதனிலரைத்துக்கொண்டு, தடுத்துமேவயத்தினிட வர்னத்தாலு ம் தாக்கானசெம்பினிடவர்னத்தாலும், அடுத்துமேசிலைகட்டு வர்ன மாச்சுவப்பனேசினபதிவுளவுதானே, ௪அ௫

சீனபதிகாபிதபுகைபாலை,

உளவானசீனபதிவேதைமார்க்கம் வுத்தமனே வேடிக்கையின்ன ஞ்சொல்வோம், தளமானகாயிதம்சன்னமட்டும் தான்செய்யும்விபர ங்கள்சாற்றக்கேளு, நளமானதடமதுவும்கெசநூறுகும் நளினமுடன் கலமதுகெசநூறுகும், மளமானசுற்றேரகிராதிக்கம்பி மாற்கமுடன் றனமைத்துவாலைபூட்டே. ௪அ௬

பூட்டவென்றால்தலைபக்கம் கரும்பாலைபோல புகழானகுழியொ ன்றுதடாகமொன்று, நீட்டமுடன்றடாகத்தின்சுற்றுவோரம் நிலையா னவாய்க்கால்போல்குழையுண்டாக்கி, பூட்டமுடன்குழைதனிலேயா லைழுவத்துப் பொங்கமுடன்தொட்டியென்றகிணறுண்டாக்கி, வாட் டமுடன் தொட்டிக்குள்தூண்போல்கம்பி வகுப்புடனேதானமைத் துசக்கரமாட்டே. ௪அஎ

சக்கரமுமாட்டியேவாலைதன்னைச் சாங்கமுடன்புகையென்றவா லைதன்னால், தங்கபடிதிருப்பலுடன்கோணிதன்னைச் சாங்கமுடன்தா னரைத்துகுளத்துக்கேற்றி, ஒக்கவேதெளிவதனைமேலேநோக்கி வுவ மையுடன்போகவேவழியுண்டாக்கிபக்கமுடன்தெளிவதனில்பூநீர்சே ர்த்துச் சார்புடனேதொட்டிதனில் கரைத்திடாயே ௪அஅ

கரைத்துமேமூன்றுநாள்சென்றபின்பு கருவாகதொட்டிதனில் சரக்கைவைத்து, நிரைப்புடனே படல்கட்டிக் காயிதத்தை நேர்புட னேதானெடுக்கவண்ணம்பாரு, திரைப்புடனேவாலையென்ற கையில ப்பாதிறமானபிரதமையொன்றிருக்கும், முரைப்படியேகைதனிலேப டல்தானீய முளையாமல்தொட்டிதனில்கலக்கிடாயே. ௪அகூ

கலக்கையிலேவண்டலதுபடல்மேற்சார்ந்து கடினமுடன்சக்கர த்தைச்சுத்திவந்து, நிலத்தினதுமேடையிலேசட்டந்தன்னில்நிலைமை யுடன்றனமைத்துமேலேவைக்கும், புலப்புடனேமறுவாலை தனிலிரு ந்து புகழாகச்சீலைபதுமுடிக்கொள்ளும் தலப்புடனேபின்னுமந்த ப துமைதானும் தடாகத்தில்வண்டல்தனையெடுக்குந்தானே. ௪கூ0

எடுக்குமேசக்கரமாமாலைதன்னால் பெழிலானவண்ட லுடன்சர க்கையெல்லாம், தொடுக்கவேமேற்படியில்கொண்டுசென்று துப்புற வாய்வாலையென்ற சட்டந்தன்னில், படுக்குமேபடல்தானும் விட்ட போது பாங்குடனேசிலைய துமூடிக்கொள்ளும், அடுக்குமேயிப்படியே பலகாலுந்தான் ஆலையதுசுழன்றுமேபோடுந்தானே. சகூக

ஓடயிலேமுதற்றரந்தானாலைதன்னில் வொளிவானகாகிதங்கள்ச ன்னமாகும், நீடமுடனிரண்டாங்காலாலைதன்னில் நேர்புடனேதான டக்கும்வண்மைபாரு, சாடலுடன்பஞ்சி யென்றவாலையுண்டு சட்ட முடன்முன்குழைபோலாணித்தானும், வாடலுடன்குளமதனில் வ ணடல்சேரும் வாகுடனேபஞ்சியென்றவண்டல்தானே. சகூஉ

வண்டலுடன்சுத்திதபூநீரப்பா வாகுடனேதான்சேர்த்துகுழ ம்புபோலாம், அண்டமெனும் நட்சத்திரவொளிவுவீசும் அப்பனே வ ண்டல்தனைகலக்கிக்கொண்டு, தண்டமுடன்சக்கரவாலைதன்னைச் சா ங்கமுடன்முன்திருப்பிரதமைதானும், கொண்டபடிபடல்சாத்திவண் டல்தன்னைக்கொப்பெனவேதானெடுக்கும் வண்மைபாரே. சகூ௩

பார்க்கையிலேபடல்சாத்திதானெடுத்துப் பாகமுடன் மேற்புற த்தில்கொண்டுசென்று, தீர்க்கமுடன்சட்டமென்றபடலின்மேலேதி றமாகத்தானமைக்கும்மேல்வட்டத்தில் ஆர்க்கமுடன்தன்மேலேசிலை கொண்டு அப்பனேமேல்மூடியாலையாலே, நீர்க்கலதுபடலதனைமே லேசாத்தும் நெடிதானசக்கரத்திநேர்மைகாணே. சகூச

காணயிலேசக்கரமாமாலைதன்னில் கருக்துடனே தான்முடிக்க ச் சலமும்நீங்கி, நீணமுடன்கசுவலதுநீங்கியேதான் நேரான காயித மும்சன்னமாச்சு, வேணபடிமூன்றுங்காலாலைதன்னில் வேகமுடன்தி ருப்பவுபாயங்கேளு, மாணலென்றசக்கரமுமாடிநிற்கும மன்னவனே நடுக்குளமாங்குழிதான்பாரே. சகூரு

குழியானசதுரமதுபள்ளத்துள்ளேகூரானதூணது காண்நடுமை யத்தில், வழியானசக்கரமாமாலைதன்னில்வகுப்பானபஞ்சினிட மஷ் டுதன்னால், முழியானபூநீறுமொக்கச்சேர்த்துமுயலவேதான்மசிந்து குழிக்குள்தானும், கழியானமயனம்போலாகும்பாரு கருத்துடனே முனெடுக்கும்கருவைக்கேளே. சகூசா

கருவானமேல்வட்டஞ்சக்கரத்தில் கடினமுடனாலையது வோடி ப்பாயும், திருவானவண்டலதுமேலோதனும் தெளிவுடனேபடல்மே

லேசென்றுநிற்கும், குருவானகடுமையசுக்கான்தானும் கொப்பென வேமேல்வட்டம்படல்தான்சாத்தும், தருவானவண்டல்மேல்படல்தா ன்மூடி சார்பாகசீலைய துபரவிக்கொள்ளே. ௪௲௬

கொள்ளயிலேமேல்சட்டம்நின்றுமூடிக் கொப்பெனவே படலா லேயாலைசுற்றி, மெள்ளவேசீலைபதுமேலேமூடி மேன்மையுடன்சலம தனைவடியச்செய்யும், தள்ளயிலேசக்கரமாம்பலகையாலே சாங்கமு டன்வாலையின்றன்திருப்பல்காணும், துள்ளியேதிருப்பலதுநின்றபோ து சூட்சத்தால்காயிதமுமெடுக்கலாமே. ௪௲அ

எடுக்கலாம்வாலைவிட்டுயெடுத்தபோது யெழிலானகாற்றதனில் காயப்போடு, தொடுக்கவேரவியென்றவொளிதான்பட்டால் தோற்ற முடன்காயிதமும்வெளுப்புமெத்த,படுக்கமுடனிப்படியே யாலைதன் னுல் பலபலவாம்காயிதங்களெடுக்கலாகும், கொடுக்கவேவாலைகளும னேகமுண்டு கொப்பெனவேயதன்கூறுசொல்லொண்ணுதே. ௪௲௯

சொல்லவேகஞ்சிதனைமேலேபூசி சுத்தமுடன் காயிதங்களெடு க்கலாகும், வெல்லவேகஞ்சிபினுல்வாலைதன்னில் மெருகுடனே சக்க ரமாமுருளையுண்டு, புல்லவேவுருளைக்குப்பஞ்சிபூட்டிப் பொங்கமுட ன்தோலாலேயாலைபாகும், பங்கமில்லாக்காயிதத்தை யாலைக்கிப பா கமுடன்மெருகுடனேதள்ளும்பாரே. ௫௲

தள்ளயிலேசக்கரமுமோடித்தானும் சாங்கமுடன்றுனெடுத்து வடிக்கும்பாரு, துள்ளியேபடல்தானும்மேலேயேற்றித் துப்புரவா ய டிவாரத்தொட்டிக்குள்ளே, மெள்ளவேகொண்டுசென்று யடுக்கிப்பி ன்புமேற்புரத்தில்சட்டமதி லேறிநிற்கும், கொள்ளவேசட்டமென்ற வாலையப்பா கொடிதானவாலைக்குகூறுண்டாமே. ௫௲௧

கூறுனவாலையிலேவோரமப்பா கொப்பெனவேகட்டுவகைதறிக் கலாகும், தாரானகாயிதமுஞ்சுற்றோரந்தான் சாங்கமுடன் திருகியல் லோநிற்கும்பாரு, சேறுனவாலையதுவோடிக்கொண்டு தெளிவான பு கையுடனேவாடிநிற்கும், பாருனகட்டுவகைதறிந்தபின்புபாகமுடன் கீழ்ப்புரமாய்தள்ளலாச்சே. ௫௲௨

ஆச்சென்றவாலையதுநித்தந்தானும் அப்பனேலட்சமது கோடி க்கோடும், காச்சலென்றகடிதாசிசெய்யும்நேர்மை காசினியில்சித்தர் முனிசெய்ததில்லை, மாப்ச்சலுடன்சீனபதியானுஞ்சென்றுமார்க்கமு டன்கருவானவேதையாவும், பாச்சலுடன்காலாங்கிநாதர்தம்மால் பா லித்தேன்வெகுகோடிவித்தைதானே. ௫௲௩

வரணபேதகடிதாசிசெய்யும்விபரம்.

வித்தையாமின்னமொருபாகம்கேளு வேடிக்கைவிநோதமென்ற வித்தையப்பா, சுத்தமுடன்பஞ்சவர்ணமையினாலே சுருதியுடனாலைத னிலேற்றிமைந்தா,பத்தமுடனாலைவாய்ப்படலின்மேலே பாங்குடனே பூசிபல்லோவாலைக்குள்ளே,வெத்தியென்ற காகிதத்தைவாலைதன்னில் விருப்பமுடன்றான்கொடுத்து செப்பக்கேளே. (௱ச

கேளேதான் காகிதமும்படிந்தபின்பு கெடியான வன்னமென்ற பேதிதன்னை, தாளவேதிராவகமாப் யெடுத்துக்கொண்டு தகைமையு டன்சபுரியின்றன்மயிரினாலே, மீளவேகத்தையாய்க்கட்டிக்கொண்டு விருப்பமுடன்றான்றெளிக்க வரணம்பாயும், சாளவேகடிதமெல்லாம் வரணபேதம் சார்பாகக்காட்டியல்லோபரவுந்தானே. ௱டு

தானானவனேகவிதம்செய்யலாகும் தகைமையுடன்வரணமென் றவாலைதன்னால், கோனானயென்னையர்காலாங்கிநாதர் கொட்டினார் லோகத்திலனந்தம்வேதை,பானுகயென்னைப்போலவெளியரங்கம்பாடி னார்லோகத்துமாந்தற்கில்லை, தேனானவமுர்தம்போல்சத்தகாண்டம் திரட்டினேன்யேழாயிரமுண்மைபாரே, ௱சு

சீனத்தாற்துவஸ்துவேதை,

உண்மையாமின்னமொருபாகம்கேளு வுத்தமனேவஸ்துவென்ற போதையப்பா, திண்மையாம்நெல்லிவேர்பனையின்வேரும் திறமான மாதளையின்கெஞ்சாவேறும், கண்மையாம்நன்னாரியலறிவேறும் கரு வானவாவாரைவேறுதானும், பண்மையாம்கிச்சிலியின்வேறும்கூட்டி ப் பாங்கானவேலனிடபட்டைகூட்டே. ௱எ

கூட்டியேவெள்வேலன்பட்டைதானும்குணமானசரியெடையா யெடுத்துக்கொண்டு, மாட்டியேபெரும்பாண்டம்தன்னிலிட்டு மதிப் புடனேசலமதுவும்நிறையவிட்டு, வாட்டமுடன் பத்துநாளூறிப்பின் புவகுப்புடனே சரக்கதனில் பனவெல்லத்தான், நீட்டமுடன்தான் போட்டுயடுப்பிலேற்றிவிலைமையுடன்திராவகமாயிறக்கக்கேளே. ௱அ

இரக்கவென்றால்வாலையது திராவகத்தை யெழிலான பாண்ட மதுயிறக்கிப்பாரு, சிறக்கவேதிராவகமும்காரமெத்த சீரானதிராவக மும்பதனம்பண்ணு, முறைக்கவே வஸ்துசுத்திசரக்குதன்னை முய்ய வேநாதாககள்செய்யமாட்டார்,திறக்கவேபலநூலும்கண்டாராய்ந்து தீரமுடன்பாடிவைத்தேன் மாந்தற்காமே. ௱க௯

ஆமேதான் சரக்குசுத்திகொண்டபோது அப்பனே வருளுண்டு ஞானமுண்டு, தாமேதான்நாதாக்கள்மனமுவந்து தயையுடனே வேணதெல்லாமீவார்பாரு, போமேதான்புகழுண்டு செல்வமுண்டு பொலிவான கருணையுடன்வரமுமுண்டு, வேமேதானெப்போது மனமுவந்து விருப்பமுடன்பட்சமதுவைப்பார்பாரே. நூ௱ம

தானானசதாநிலையைக்காணலாகும் தாக்கானசின்மயத்தை யறியலாகும், வேனானவறுகோணவட்டத்துள்ளேவேண்டியதோர் கருவிகரணாதியெல்லாம், மானானவாராதாரத்திலுண்மை மாற்கமுடன்காணுதற்கு மயக்கமில்லை, கோனானசிற்பரத்தையடுக்கலாகும் கொற்றவனேதவநிலையில்நிற்பூதாமே. நூ௱மக

சற்பராஜன்மாத்திரை.

நிற்பாரேபின்னமொரு மாற்கம்பாரு நிலையானமாணாக்கள்பிழைக்கவென்று, துற்பரவாய்குளிகையது சொல்லப்போமோ துடியானபாஷாணசற்பராஜன், பற்குணமாமபாஷாணமொருவர்காணார் பாருலகில்கண்டறிந்துபகுத்துரைப்பேன், சற்பமென்றகுளிகையதுபெருமை மெத்தசர்வகுணரோகிகட்கும்புகட்டலாமே. நூ௱மஉ

புகட்டலாம்சங்கென்றபாஷாணந்தான்புகலவேகளஞ்சியெடையெடுக்கலாகும், பகட்டுடையதாளகமுங்களஞ்சிரண்டுபொங்கானபூரமதுகளஞ்சிநாலு, தகட்டானவப்பிரகம்களஞ்சிரண்டுதகைமையுள்ள வீரமதுகளஞ்சியொன்று, மகட்டுடையதுரிசியது களஞ்சியொன்று மாசற்றரசமதுவும்களஞ்சியொன்றே. நூ௱மங

ஒன்றானசூத்முடன்றுத்தங்கூட்டிவுத்தமனே சிங்கியதுகளஞ்சிமூன்று, பன்றானகெந்தகமும்களஞ்சியாறு பாங்கானலிங்கமதுகளஞ்சிநாலு, கன்றானகெவுரியதுகளஞ்சியொன்று கருவானதீமுறுகல்களஞ்சியொன்று, தன்றானமனோசிலையும்களஞ்சியொன்று தாக்கானசூடனுமேகளஞ்சியொன்றே. நூ௱மச

களஞ்சியாம்காந்தமதுகளஞ்சிரண்டு கடிதானபொன்னிமிளைகளஞ்சியொன்று, தளமுடைய சூதசெந்தூரமொன்று *தாக்கனவரப்பொட்டியுங்களஞ்சியொன்று, மளமானவயத்தொட்டிக்களஞ்சியொன்றுமாற்கமுடன்செங்கெந்திகளஞ்சிரெண்டு, பளமான கருடக்கல்களஞ்சிரண்டுபாங்கானசீனமதுகளஞ்சிநாலே. நூ௱மரு

நாலானகல்நாறுகளஞ்சியெட்டுநலமானகல்மதம்களஞ்சியாறு, பாலானசிலாசத்துக்களஞ்சிரண்டு பதிவானபவளமதுகளஞ்சிநாலு,

சேலானமுத்தகதுவும்களஞ்சிரண்டுசெயலானசங்கதும் களஞ்சியாறு, கோலானமான்கொம்பு களஞ்சியெட்டு கூரானவகிற்சிலையுங்களஞ்சிபத்தே. ௫௱௰௬

பத்தானகடைசரக்குசாற்றக்கேளு பாங்கானசுக்கதுவும் களஞ்சியெட்டு, முத்தானமிளகதுவும்களஞ்சியாறு முயலானபரங்கியதுகளஞ்சியெட்டு, மத்தானவவங்கமதுகளஞ்சிநாலு மகத்தானசாதிக்காய்களஞ்சிரண்டு, சித்தானரோசனையும்களஞ்சியாறு சிறப்பானவால்மிளகுகளஞ்சிமூன்றே. ௫௱௰௭

மூன்றானமிளகுடனேகருவாய்ப்பட்டை மூர்க்கமாய்கருஞ்சீரம்களஞ்சிரண்டு, தான்றானபத்திரியுங் களஞ்சியொன்று தருவானதக்கோலம்களஞ்சிரண்டு, கான்றானகார்கோலங்களஞ்சியொன்று கருவானமாசிக்காய்களஞ்சிரண்டு, பான்றானதேசாவரம்களஞ்சியொன்றுபாகமுடன்வாய்விளங்கரெண்டாய்ச்சேரே. ௫௱௰௮

சேர்க்கையிலேவசம்பதுவும் களஞ்சியொன்று செயலானசேங்கொட்டைகளஞ்சியொன்று, பார்க்கமுடன்கடுக்காய்த் தோல்களஞ்சிரண்டு கருவானகருஞ்சீரம்களஞ்சியொன்று, தீர்க்கமுடனற்சீரங்களஞ்சியொன்று திடமானசிறுதேக்குகளஞ்சியொன்று, ஏர்க்கவேதாளசமுங்களஞ்சியெட்டு யெழிலானமுந்திரிகளஞ்சிரண்டே. ௫௱௰௯

இரண்டானஎள்ளுடனேகளஞ்சிரண்டு இயலானஓமமுடன்களஞ்சிரண்டு, பண்டானகொள்ளுடனேகளஞ்சியொன்று பாங்கானவெட்டிவிரைகளஞ்சியொன்று, குண்டானதேற்றான்விரை களஞ்சிரண்டுகொடிதானகொடிவேலிகளஞ்சியொன்று, திண்டானவாலுழுவைகளஞ்சியொன்று, திறமானசோம்பதுவும்களஞ்சிநாலே. ௫௱௨௰

நாலுடனேதிப்பிலியும்களஞ்சியொன்று நலமானகஸ்தூரிகளஞ்சியொன்று, பாலுடனேகுங்குமப்பூகளஞ்சியொன்று பாங்கானமோடியதுகளஞ்சிநாலு, சேலுடனேமுத்தமதுகளஞ்சிரண்டு செழிப்பானதாண்றிக்காய்களஞ்சிநாலு, காலுடனேநெல்லியது களஞ்சிரண்டுகருவானமுள்ளியதுகளஞ்சியாறே. ௫௱௨௰௧

ஆறானசிவதையதுகளஞ்சிநாலுயப்பனோகன்ஞரிகளஞ்சிபத்து, நேறானபற்பாடம்களஞ்சியாறுநேறானசிறுதேக்கு களஞ்சிரண்டு, சாறானபற்படகம்களஞ்சிரண்டு தளிரானசோரியதுகளஞ்சிரண்டு, சேறானசெம்பூரான்களஞ்சிரண்டு சிறப்பானதேசாவின்வரமுந்தானே.

தானானவரமதுவுங்களஞ்சிரண்டு தாக்கானமயிலிறகுகளஞ்சினா லு, வேனானவலம்புரியுங்களஞ்சியொன்று வியர்வானயேலமதுகளஞ் சியெட்டு, பானானசாம்பிராணிகளஞ்சிநாலு பதமானரோகணியுங்க ளஞ்சியெட்டு, தாமானமகரப்பூகளஞ்சிரண்டு தகைமையுடன்குரோ சாணிகளஞ்சிபத்தே. ருஉங

பத்தானநாகப்பூகளஞ்சியொன்று பாகமுடன்சித்தரத்தைக்கள ஞ்சியொன்று, சித்தானகிலப்பனையுங்களஞ்சியொன்று சிறப்பானபூ மிசர்க்கரைதானென்று, புத்தானவட்டதிருப்பிலிதானென்று புசழா னவாய்விளங்கம்களஞ்சியொன்று, முத்தாகவக்ரமெனும்பேதிதானு முயற்சியுடன்சாத்திரத்தின்பேதிதாரே. ருஉச

பேதியாம்மாமிஷமும்களஞ்சியொன்று பேரானயிருமஞ்சள் ம ரமஞ்சள்தானும், வாதியாய்குன்றிமணிகளஞ்சியாறுவகுப்பானமுட் டியுடன்பேராமுட்டி, சாதியாமதுரமுடனக்கிராகாரம்சாங்கமுடன் களன்சியதுரண்டதாகும், மேதியாம்நெருஞ்சியது ரண்டதாகும்மே லானகளஞ்சியதுரண்டதாமே. ருஉரு

தாமானவெள்ளுள்ளிகளஞ்சியாறு தாக்கானகசகசா களஞ்சிர ண்டு, காமானசரக்கெல்லாமொன்றாய்க்கூட்டிக்கருவாகத்தானரைக் கவிபரங்கேளு, நாமானமூலிவகையுரைப்போம்பாராய் நாட்டிலேகா தூக்கள்சொன்னதில்லை, பாமானகைபான்சார் சாமம்நாலு பாங்குட னேதானரைப்பாய்மைந்தாகேளே. ருஉசா

கேளேதான்நற்கையான்சாமம்நாலு கெடிபானபொற்கையான் சாமம்நாலு, பாளேதான்போகாமல்யரைப்பாயப்பாபாகமுடன்குலா மல்லிச்சாற்றினாலே, தாளவேதக்காளிச்சாற்றினாலேசாங்கமுடன்று னரைப்பாய்நாலுசாமம், மாளவேபுளியாரைசாமம் நாலுமயங்காமல் தானரைப்பாய்மகிபாதானே. ருஉஎ

தானேகேள்கீலியின்றன்சாமம்நாலு தருவானவாதொண்டைச் சாமம்நாலு, மானேகேள்பொன்னாவரைச் சாமம்நாலு மாற்கமுடன் பாற்சுரண்டிசாமம்நாலு, தேனேகேள் மலைத்தேனுசாமம்நாலுதெளி வானநீர்மிட்டான்சாமம்நாலு,வேறானகவுதும்பைச்சாமம்நாலுவிருப் பமுடன் தானரைப்பாய்பண்பாய்த்தானே. ருஉஅ

பண்பானதாளிச்சாற்சாமம் நாலுபாங்கானகற்றாழைச்சாமம்நாலு, திண்பானகொள்ளிலைச்சாற்சாமம்நாலு திடமானயிருள்ளிச்சாமம்நா லு,நண்பானவரிக்குமட்டிச்சாமம்நாலு நலமானபேய்க்குமட்டிச்சாம

ம்நாலு, கண்பானகருப்பன்சார்சாமம்நாலு கதிரானமேனிச்சார்சாம ம்நாலே. ௫௨௯

நாலானமுசுக்கைச்சார்சாமம்நாலு நலமானமாதுளையின்சாமம் நாலு, காலானமுருங்கைப்பூச்சாமம்நாலுகடிதானமுடக்கொத்தான் சாமம்நாலு, தாலானமாந்துளிருசாமம்நாலு தாக்கானசெங்தோன்றி ச்சாமம்நாலு, நூலானவெங்தோன்றிச்சாமம்நாலு நுணுவுடனேசெ ம்பருந்திச்சாமம்நாலே. ௫௩௰

சாமந்தானரைக்கையிலேயின்னங்கேளு சாங்கமுடன்பழச்சாற் றாலாறுசாமம், நேமமுடன்தானரைப்பாய்தேங்காய்ப்பாலால் நே ரானவாறுவகைசெயநீர்தன்னால்தாமமுடன்பெண்சாமமரைத்தபோ துதனைகமையுள்ளசரக்கெல்லாமடிந்துமல்லோ, சாமமுடன்மெழுகது வாய்மைபோலாகி சார்பானவெண்ணெபோலிருக்கும்பாரே. ௫௩௧

பாரேதான்மெழுகெடுத்துப்பதனம்பண்ணு பாங்கானகாயசித் திமருந்தென்பார்பார், சீரேதான்மண்டலங்கள் கொண்டுசென்றால்தி றலானவியாதியதுயேகும்பாரு, கூரேதான்சொன்னபடிவியாதிமாற் கம் கூறுவோமாணுக்கள்பிழைக்கவென்று, நேரேதான்மேகமென்ற திருபதும்போம் நெடிதானகுஷ்டம்பதினெட்டும்போமே. ௫௩௨

போகுமேகரப்பன்பதினெட்டுபோகும் பொல்லாதகுன்மமது யெட்டும்போகும், ஏகுமேவாயுவென்றதெண்பதும்போம்யெழிலான பித்தம்நாற்பதுவுமபோகும், சாகுமேசேந்துமங்கள் தொண்ணூற்று ம் சார்வானகிரந்திபதினெட்டும்போகும், வேகுமேசூலைபதுபதி னெட்டும்போகும் வேகமுடன்பரையாப்புவெள்ளைபோமே. ௫௩௩

வெள்ளையென்றரோகமதுராஜரோகம் வெளிகாணுமேகமதுகச ரோகம்போம், கிள்ளையென்றசயமதுவும்பதினெட்டும்போம் கிழான பாண்டுமுதல்மகோதரம்போம், வள்ளையென்றகாமாலையாறும்போகு ம்வாகானநீரிழிவும்துமேகம்போம், கொள்ளைகொண்டவயிற்றுவலிவி ம்மல்போகும் கொடிதானசுரமுதலுமகன்றுபோமே. ௫௩௪

அகன்றுபோம்சகலவிதநோய்கள்தானும் அப்பனேதேகமதுவ ன்னிமீறும், துகன்றதொருவனுபானமறிந்துகொண்டால் துடிப்புட னேசரம்பெல்லாம் வலித்துக்காட்டும், புகன்றதொருதேகமதுகாந்தி விசும்புகழானகாயமது மிறுகும்பாரு, நிகன்றதொருதாபாதிகற்பமெ ன்பார்நிலத்தில் சித்தர்செய்யும்வேதையாமே. ௫௩௫

வேதையாம்கோடிவழிவேதையுண்டு வேகமுடன்செய்பாகம்பாரும்செய்யார், பாதையாமிம்மருந்துவதிதமெத்த பாகமுடன்யான்முடித்தேனிந்தபாகம், நோதமுடன்சித்தர்முனிரிஷிகள்தானும் தோற்றமுடன்தான்முடித்தாரனந்தபாகம், காதமுடன்காலாங்கி நாயர்பாதம் கருத்துடனேயான்வணங்கிப்பாடினேனே. ருசு

நவநீதகற்பம்,

பாடினேன்வின்னமொருபாகம்கேளு பாங்கானகோமேதம்புஷ்பாராகம், தேடியேவப்ரேகம்பச்சைகெம்பு சிறப்பானவயிரமதுசங்கு முத்து, கூடியேபவளமதுநவதாதாகும் கொப்பெனவேவாறுவகைசெயநீர்தன்னால், நீடியேசமனெடையாயெடுத்துக்கொண்டுநேர்மையுடன்ருனரைப்பாய்சாமம்காலே. ருஎ

நாலானசாமமது வரைத்துமைந்தா நலமுடனேபில்லையதுதட்டிபேநான், கோலமுடன்ரவிதனிலேகாயவைத்துக்குறிப்பாகவோட்டிலிட்டுச்சீலைசெய்து, ஞாலமுடன்சீலையதுகாய்ந்தபின்பு நளினமுடன் கனயெருவிற்புடத்தைப்போடு, தாலமுடன்புடமாறியெடுத்துப்பார்க்க தவளநிறபற்பமதுகாந்தியாச்சே. ருஅ

ஆச்சென்றுவிடுகாதேமைந்தாகேளு அப்பனேசொர்னமென்றபற்பந்தானும், மாச்சலுடன்நாலுக்கோர்நவதீதவித்தை மாட்டடாவிரண்டுமொன்றுப்க்கல்வமிட்டு, காச்சலுடனறுவகைசெயநீர்தன்னால் கருத்துடனேதானரைப்பாய் நாலுசாமம், மூக்கடங்கத்தானரைத்துப்பில்லைகட்டி முயலவேரவிதனிலே காயப்போடே. ருகூ

போடவேபில்லையதுகாய்ந்தபின்பு பொங்கமுடன்வோட்டிலிட்டுச்சீலைசெய்து, நீடவேகோழியென்றபுடத்தைப்போடு நீணிலத்தில்நீயுமொர்நுசித்தனுவாய், தேடவேகாயாதிகற்பபற்பம் தேர்ந்தாலும்யாருந்தான்சொல்வதில்லை, பாடவேபலநூலுங்கண்டாராய்ந்து பாலித்தேன்லோகத்துமாந்தற்காமே. ருசக

ஆமேதான்ப்ற்பமுறையாரும்சொல்லார் அப்பனேமானிடர்கள்பிழைக்கவென்று, நாமேதான்பலநூலுங்கண்டாராய்ந்து நளினமுடன்ப்பாடிவைத்தேன் சத்தகாண்டம், போமேதான்வீணிலேமனம்செல்லாமல் பொங்கமுடனிப்பாகம் செய்தாயானால், மாமானகாயகற்பமிதுதானுருமகத்தானபற்பமதுகாவெண்ணாதே. ருசக

ஒண்ணுதுபற்பத்தைப்பணவிடைதானு முத்தமனேவெண்ணெய்தனில்கொண்டாயானால், நண்ணுதுரோயேதுரோகமேதுநாடாது காலனுமேநாடமாட்டான், திண்ணுலுங்காயகற்பமிதற்கொவ்வாது திறமையுடன்செய்துகொண்டோன்புத்திவானும், பண்ணுலுமுடியாது பாரிலப்பா பாக்கியவான்செய்துகொள்ளும்வேதையாமே ருசஉ

சூரணங்களனுபானம்.

வேதையிலேயின்னமொருபாகம்கேளு விருப்பமுடன்சூரணங்களைதுவானாலும், தீதையிலேவனுபானந்தெரிந்துகொண்டாய் தேகமதுகற்றூணுமாகும்பாரு, போதையிலேகாயாதிபற்பமாகும் பொங்கமுடனுண்டவற்குப்பலனுண்டாகும், பாதையிலேமேகமென்றயிழிவுபோகும் பாரினிலேநீயுமொருசித்தனாமே. ருசஙு

புட்டிக்குள்கோழிமுட்டைவிடுகிறசாலம்

சித்தனாமின்னமொருமார்க்கம்பாரு சிறப்பானபெருஞ்சாதிகோழியொன்று, முத்தலாய்கொண்டுவந்துவவயமிட்டு முதன்மையாமுட்டைதனையெடுத்துமைந்தா, சுத்தமுள்ளபூநீராம்புட்டியொன்றுகுட்சமுடன்சின்னவாய்க்கொண்டதாக,வெத்தியுடன்புட்டிக்குள் முட்டைபோக விருப்பமுடன்சொல்லுகிறேன் பண்பாய்க்கேளே. ருசச

பண்பானமுட்டைதனைசெப்பக்கேளுபாகமுடன்காரமென்றகாட்டிதன்னில், திண்புடனேமூன்றுநாள் முட்டைதன்னைத் திறமுடனேயூறினபின்னெடுத்துப்பாரு, நன்பானமுட்டையதுகாரமேறிநவிலவேவோடதுதான் சவ்வுபோலாம், தண்பானமுட்டையதுதளர்ந்துபோகும்தாக்கடாபுட்டியென்றசீஷதானே. ருசரு

தானானசின்னவாய்ச்சீஷாக்குள்ளே தள்ளடாமுட்டைதனையுள்ளேபோகும், வேனானமுட்டையதுசென்றபின்புவிருப்பமுடன்பாணியென்றதண்ணீர்தானும், கோனானபுட்டிக்குள்ளம்பவிட்டு குறையாமல்சீஷாவைமுடிப்போடு, தோனானமுட்டையதுகல்லுபோலாம்தீவிரமாய்பாணிதனைவூத்திடாயே. ருசசு

ஊத்தியபின்புட்டிதனைமூடிப்போடு வுத்தமனேராசரிடம்சென்றுநீயும், நேத்தியுடன்புட்டிதனைகைகொடப்பா நேரானபுட்டிதனைப்பார்க்கும்போது, மாத்தலுடன்புட்டிக்குள்முட்டையப்பா மன்னவனேசென்றவழியதீதவித்தை, காத்தலுடனாச்சரியவித்தைதன்னைக் காண்பிலேராசரெல்லாமயங்குவாரே. ருசஎ

மயங்குவார்வித்தையிதுமண்டலத்தில் மாற்றானுங்கண்டறியான் வினைதவித்தை, தயங்கியேசெய்தாலுங்காணமாட்டார்தகைமையுள்ளகருவாளிகாண்பான்பாரு, புயங்கமுடன்தாரணியில்மற்றோராலும் புகழ்ச்சியுடன்செய்புவதுவருமையாகும், வயங்கமுடன்காலாங்கிநாதர்பாத வாகும்டனேதாள்பணிந்துபாடினேனே. ருசஅ

தங்கநிமிளைவேதை.

பாடியேயின்னமொருகருமானம்கேள் பாலகனேமாணாக்கள்பிழைக்கவென்று, தேடியேநிமிளையதுதங்கமப்பா தெளிவானநிமிளையதுகூறக்கேளு, வாடியேதிரியாதேமன்னுபாருமகத்தானசெம்புக்குத்தகட்டின்மேலே, நீடியேகூதமதைமேனிச்சாற்றால் நேர்மையுடன்றானரைத்துப்பூசிடாயே. ருசகூ

பூசியேநிமிளைதனைப் பொடித்துக்கொண்டு பொன்னவனேகரியோட்டில்தட்டிவைத்து, ஆசியேநிமிளைதனைசன்னமாக வப்பனேகீழ்மேலும்பொதிந்தபின்பு, காசிக்குச்சீலையதுவலுவாய்ச்செய்து கருத்துடனேகவுதாரிபுடந்தான்போடு,மாசிபோல் வர்னமதுமிகவுண்டாகிமன்னவனே தாம்பரமும்பழுக்கும்பாரே. ருருய

பாரேதான்தாம்பரமும்பொன்னுமாகும் பாங்கானநிமிளையதுவரணமெத்த, சீரேதானுருக்கிப்பார்மாற்றெட்டாகும் சிறப்பானவரணமதுதாம்பரவேதை, வேரேதான்காணணுமோவதீதவேதை வேடிக்கைசிமிட்டுவித்தைசுத்தர்வித்தை, கூரேதான்சிநபதிமாற்கத்தார்கள் குறிப்புடனேசெய்வார்கள்கோடிதானே. ருருக

கோடிபர்ம்வேதையிதுகோடாகோடி கொட்டினேன்மாணாக்கள்பிழைக்கவென்று, நீடியேநிமிளைதனைக்காணமாட்டார் நிமிளையில்வரணமதையறியமாட்டார், மூடியேபித்தளைபோல்கல்லுமப்பா முறுக்கலுடன்சிட்டம்போலிருக்கும்பாரு, தேடியேயலைந்தாலும்கிட்டாதப்பா தேசத்தில்வதிதமென்றசிட்டம்பாரே. ருருஉ

சிட்டமுடன்கல்லதனைசெந்தூரித்தால்சிவப்புடனேதங்கமதுசெந்தூரந்தான், கிட்டமென்றநிமிளையதுவாணமெத்தக் கெடியாகசெந்தூரங்குன்றியுண்ணு,குட்டமென்றதேகமதுபொன்போலாகும் குறையாதுவயததுதான்கெவினியாவாய், மட்டமுடன்வெள்ளிசெம்பில்பத்துக்கொன்று மயங்காமல்கொடுத்திடவேமாற்றெட்டாமே. ருருங

எட்டானமாற்றதுவுமதிகமாகி யெழிலானபடத்துக்குவுறுதிதகம், மட்டானதங்கமதுபசுமையாகு மகத்தானவேதைபிதுசித்தர்வேதை, கட்டானநிமிளையதுகருவுவேதைகாசினியிலாருந்தான் சொல்லமாட்டார், சட்டமுடன்காலாங்கிதனைவணங்கிசார்புடனேபோகரிஷிபாடினேனே. ருநச

பன்னிபப்சா.

பாடவேமாற்றுயர்வுபகரக்கேளுபாங்கானதுருசதுவும் பவமோவொன்று, நீடவேதுருசுக்குசுண்ணம்பப்பா நிலையானசுண்ணமதைக்கவசம்செய்து, தேடவேமூன்றுநாள்காய்ந்தபின்பு தெளிவுடனேகாடையென்றபிடத்தைப்போடு, கூடவேகவசமதைபிரித்துப்பாருகொற்றவனே துருசதுவும் வெளுக்கும்பாரே. ருருரு

பாரோதான் துருசதுவுமொன்றேயாகும் பாங்கானலிங்கதுவொன்றேயாகும், சீரேதான்சூதமதுவொன்றேயாகும்சிறப்பானகாரமதுவொன்றேயாகும், நேரோதான்பெலிக்காலின்தழைபினலே நேர்ப்புடனேதானரைப்பாப்நாலுசாமம், தீரேதான்சிமிழ்தனிலே பதனம்பண்ணுதிறமாகமட்டமென்றபொன்னிற்போடே. ருருசா

போடவேமூன்றுபுடமுமினீராலே பொங்கமுடன்தகட்டினமேல்லேசாய்ப்பூசி, தேடவேபூங்காவிதன்னிற்போடுதெளிவாகமாற்றதுவுமொன்பதாகும், நீடவேயுருக்கிப்பார்மாற்றேகாது நிலையானபுடத்துக்குவலுத்ததங்கம், சாடவேமட்டமதுபழுப்புமாகா சாங்கமுடன்பசும்பொன்னிற்போடக்கேளே. ருருஎ

கேளேதானிவ்வேதை சிடிகைவேதை கெணிதமுடனுதாக்கள்செய்யுமவேதை, கோளேதான்வாராதுகுருவின்மாற்கம்கூறுவேன்வின்னமொருமாற்கமபாரு, தானேதான்வுப்பினிடசெந்தூரத்தைதாக்குடனேசெய்வதற்கு தகைமைகேளு, வீளேதான்செந்தூரப்போக்குசித்தர்வீணிலேசொல்லியல்லோமறைத்தார்நாமே. ருருஅ

உப்புசெந்தூரவேதை.

தாமானவுப்பதுவுஞ்சேர்நாஞென்று தாக்கானமுருசதுவும்சேர்த்தான்காலாம், வாகானதும்பலென்றபூண்டினலே வகையுடனே தானரைப்பாய்நாலுசாமம், காமானபில்லையதுகட்டிமைந்தா கருவாகரவிநனிலேகாயவைத்து, நாமானவோட்டிலிட்டுச்சீலைசெய்து நலமாகப்புடம்போடக்கட்டிப்போமே. ருநகூ

கட்டியதோருப்பதனையெடுத்துக்கொண்டு கருத்துடனேமுன் போலழுலியாலே, திட்டமுடன்றானாப்பாய்நாலுசாமம் திறமாகர விதனிலேகாயவைத்து, சட்டமுடனேட்டிவிட்டுச்சீலைசெய்து சாங் கமுடன்கோழியென்ற புடத்தைப்போடு, கிட்டமென்ற வுப்பதுவும் காரமேறிகிருபையுடன்றான் சிவக்கும்பான்மையாமே. ருசுய

பான்மையாமிப்படியேவைத்து பத்துபாகமுடன் புடம்போடச் சிவக்கும்பாரு, வான்மையுடன்கரிப்பில்லைகசுவுமில்லை வளமாகவுப்பு க்குக்காரமெத்த, தான்மையுடன்கரிதனிலேயுருகியாடும் தகைமையு டன்மணிபோலவொளிவுவீசும், கான்மையுடன்மணிதனையேவுமிரா லே கருத்துடனேமட்டமென்றபொன்னிற்பூசே. ருசுக

பூசவேகளஞ்சிக்குக்குன்றிதானும் பொலிவாகத்தானெடுத்துப் பூசிப்போடு, ஆசலுடன்பூங்காவிதன்னிற்குள்ளே வப்பனே புடம் போடமாற்றுகாணும், கூசாமல்மூன்றுபுடமபோட்டாயானல் குறை யாதுசரிநிறையும்பேகாதப்பா, தாசமுடன்முன்றுமுறைபோட்டபோ துதப்பாதுவாணிக்குப்பத்துமாத்தே, ருசுஉ

மாத்தானதங்கமதுவாணித்தங்க மகத்சானதங்கமது வுருக்கிப் பாரு, கூத்தானகாய்ச்சலுக்குசுலாய்ப்புகாணும் குவலயத்தில்சித்தர் முனிசெய்யும்வேதை, சாத்தலுடன்கருவாளிகாண்பான்பாரு சாங்க முடன்பின்னொருவர்காணுவாரே, நீத்தலுடன் விட்டகுறை நேர்ந் தோன்காண்பான் நீணிலத்தில்மற்றொருவர்காணாராமே. ருசுங

ஆமேதான்செந்தூரங்குன்றியுண்ணு அப்பனேகாயாதிகற்பமா ச்சு, தாமேதான்சமாதிக்குயிடமுமில்லை தாக்கில்லைநோக்கில்லைதேக ம்போகா, வாமேதான்வாசியதுகிழ்நோக்காகும் வளமானயோகத்தி லிருக்கலாகும், போமேதான்தேகமதுகற்றாணுகும் போக்கானமேனி யதுசண்ணுதன்றே. ருசுச

அயசசெந்தூரம்.

சண்ணுதுயின்னமொருபாகம்கேளுசார்வானலோகமது செந்தூ ரந்தான், பண்ணுதுமபண்ணுவார்மாந்தரப்பா பாரினிலேசித்தர்கை மறைப்புகாணர், தண்ணமுடன்காலாங்கிநாயர்பாதம் தாக்குடனே யான்வணங்கிகூறலுற்றேன், வண்ணமுடனயமதுவும்ராவிமைந்தா வ ளமையுடன்றான்செய்பவகைதான்கேளே. ருசுரு

வகையானலோகமதுசேர்தானப்பா வாகுடனேதானெடுத்துசா ற்றக்கேளு, தொகையானசினமென்றகாரந்தன்னல்துப்புரவாய் தான

ளைத்துக்கழுவிப்போடு, தகையானபால்நண்டுசாமம்நாலு தாக்குட னேதானரைப்பாய்மைந்தாகேளு,பகையானபில்லைதனை ரவியிற்போ டுபாகமுடன்வோட்டிவிட்டுச்சீலைசெய்யே ௫௬௬

செய்யவேபுடமதுதான்கோழியாக செப்புகிறேன்மாணுக்கள்பி ழைக்கவென்று, உய்யவேபத்துபுடமிப்படியேபோடு வுத்தமனே பி ன்னுலேசாற்றக்கேளு, பையவேசூதமென்றராஜாதன்னைப் பாகமுட ன்சரிகாலால்சேர்த்துக்கொண்டு, நையவேதானரைப்பாய்முன்மூலி யாலேநயமுடனேபில்லைதட்டிக்காயப்போடே. ௫௬௭

காய்ந்தபின்புதானெடுத்துமாணுகேளு கருவாகதளவாயாஞ்சட் டிதன்னில், ஆய்ந்ததொருவுப்பதனைமைபோலாக்கி வப்பனேசட்டி தனில்கீழேபோட்டு, மாய்ந்தலுடன்பில்லைதன்னை நடுமையத்தில்மா ற்கமுடன் தானமைத்துமன்னுபாரு, பாய்ந்தலுடன்மேலுமந்த வுப் பைக்கொட்டி பதமுடனேசீலையதுவலுவாய்ச்செய்யே. ௫௬௮

செய்துமேவாலுகையிலடுப்பிலேற்றி செம்மையுடன்தானெரிப் பாயாறுசாமம், பெய்துமேயாறினபின்னெடுத்துப்பாரு பேரானசெ ந்தூரமுருக்கம்பூவாம், நைதுமேசெந்தூரமெடுத்துப்பாரு, நாதாக்க ள்முறைபதுதான்சொல்லப்போமோ,கொய்துமே செந்தூரம்பதனம் பண்ணு கொப்பெனவேவேதைமுகம்செப்பக்கேளே. ௫௬௯

செப்பவென்ருல்செந்தூரம்வெள்ளியாறு சிவப்பானசெம்பதுவு ம்செம்புநாலு, ஒப்பவேதங்கமதுவொன்றுகூட்டி வுவமையுடன்ருனு ருக்கிகுருவொன்றீய மெப்பவேகரிபோலேயிருக்கும்பாரு மேன்மை யுடன்காரமிட்டுவூதிப்போடு, அப்பவேபொன்னுமதுமாற்றுகாணு ம ப்பனேயெட்டறையுமாகுந்தானே. ௫௭௰

அப்ரோகசெந்தூரம்

அதிகமாமின்னமொருகருமானங்கேள் அப்பனேமாணுக்கள்பி ழைக்கவென்று, துதிதமுடன்நீதமதுநவநீதந்தான் சுத்தமுடன்வெ ண்ணெயதுபெடுத்துப்பாரு, கதிதமுள்ளவெண்ணெய்யதுசோதானென் ன்று கருவாகவெடியுப்புசேர்தானென்று, புதிதமுள்ளகெந்தியதுசே ர்தானென்று புகழானயெருக்கன்பால்தன்னுலாட்டே. ௫௭௧

ஆட்டவேபனிரண்டுசாமந்தானு மப்பனே வெண்ணெய்ப்போல் பில்லை தட்டி, மாட்டடாபில்லையதுரவியிற்போடுமயங்காதேமன்னவ னேவோட்டிவிட்டு, மூட்டடாசீலையதுவலுவாய்ச்செய் துமூர்க்கமுட

ன்கெஜமென்றபுடத்திற்போடு, திட்டடா பின்னுமந்தயெருக்கன்பா
லால்திறமாகத்தானரைப்பாய்சாமம்நாலே. ௫௭௨

நாலானசாமமதுவரைத்தபோதுநாயகனேபில்லையதுகாயவைத்
து, தாலானரவிதனிலேகாய்ந்தபின்பு தகைமையுடன்வோட்டிவிட்டு
ச்சீலைசெய்து, மேலானபுடமதுவும்கெஜமேயாகுமுத்தமனேயாறின
பின்னெடுத்துப்பாரு, பாலானபற்பம்போலிருக்கும்பாரு பாலகனே
யிப்படியேபத்துபோடே. ௫௭௩

போடையிலேதசபுடமுந்தீர்ந்தபின்பு பொங்கமுடன்காரமென்
றதும்பப்பூண்டு, தேடையிலேதானரைப்பா யாறுசாமம் தெளிவாக
பில்லையதுதட்டிமைந்தா, மேடையிலேரவிதனிலே காயவைத்துமே
ன்மையுடன்வோட்டிவிட்டுச்சீலைசெய்து, கூடையிலேபுடமதுதான்
கெசமேயாகும்கொற்றவனே புடமாறியெடுத்துப்பாரே. ௫௭௪

பார்க்கையிலேபற்பமதுசிவப்புகொஞ்சம் பார்த்திவனேயிதிற்ப
த்துபுடமும்போடு, சேர்க்கையிலேபுடமதுவுந்தீர்ந்தபின்பு செயலா
னமூலியதுசொல்லக்கேளு, மூர்க்கமுடன்பொன்னுவாவரைதான் மூ
லிமுயன்மையுடன்றனைப்பாயெட்டுசாமம், தீர்க்கமுடன்றனரை
த்துபில்லைதட்டித்திறலாகரவிதனிலேகாயப்போடே. ௫௭௫

காய்ந்தபின்புவோட்டிவிட்டுச்சீலைசெய்து கனமாகநூறெருவிற்
புடத்தைப்போடு, மாய்ந்தபின்புதீயாறியெடுத்துப்பாருமன்னவனே
செந்தூரம்வர்ணம்காணும், சாய்ந்தலுடன்யிப்படியேபத்துபோடுசா
ர்பாகப்புடமதுவுந்தீர்ந்தபின்பு, ஏயந்தலுடனுதரமாம்வேலிகைதன
னுலெழிலாகத்தானரைப்பாய்சாமம்ரண்டே. ௫௭௬

ரண்டானசாமமதுவரைத்தபோது பெழிலானபில்லையதுதட்டி
மைந்தா, திண்டானரவிதனிலேகாயவைத்து திறமாகவோட்டிவிட்டு
ச்சீலைசெய்து, கண்டானபுடமதுவும்வராட்டிநூறு கவனமுடன்போ
ட்டுவரசெந்தூரிக்கும், தண்டானபுடமதுவும்பத்துபோடு தாக்கான
செந்தூரம்சிவப்புகாணே. ௫௭௭

காணவேசெந்தூரமென்னசொல்வேன் கடிதானரசமதுதான்ம
டியுமட்டும், தோணவேபுடமதுவும்செப்பக்கேளுதுறையுடனே சார
மென்றசெயநீர்தன்னல், மாணவேதானரைப்பா யாறுசாமம் மாற்க
முடன்பில்லைதட்டிக்காயவைத்து, ஊணவேவோட்டிவிட்டுச்சீலைசெ
ய்துவுத்தமனேநூறெருவிற்புடந்தான்போடே. ௫௭௮

TAMIL NUMBERING
93-98 MISSING IN BOOKITSELF

ராமல்சட்டிக்குள்ளே, நீடவேயுப்புதனைசட்டிக்குள்ளே நிறையவே பாதிநடுமையம்வையே. ௬௱௰௫

வைக்கவேமேலுமந்தவுப்பைக்கொட்டி மறவாமல் மேற்சட்டிக் கொண்டுமூடி, துப்புரவாய்சீலைய துவலுவாய்ச்செய்து துடியானவா லுகையிலெரிப்பாயப்பா, தப்பாமல்சாமமதுயெட்டுசாமம் சாங்கமு டனாறுனெரிப்பாய்பான்மையாக, குப்புரவாயாறியபின்னெடுத்துபா ரு குணமானபூரமதுபற்பமாச்சே. ௬௱௰௬

ஆச்சென்றுவிடுகாதேயன்பாய்கேளு அப்பனேவெள்ளியதுயே மூமாகும், மாச்சலென்றசெம்பதுவுமூன்றேயாகும் மகத்தானகுகைத னிலேயுருக்கிபப்பா, காச்சலுடன்பத்துக்குவொன்றுபூரம் கருவாகத் தானுருக்கிகொடுத்துப்பாற்க, பேச்சொன்றுமில்லையப்பாபொன்னே யாகும் பொன்னவனேமாற்றதுவும்மாகும்பாரே. ௬௱௰௭

பாரேதான்கரியோட்டிலூதிப்போடு பாங்கானசெம்பதுவும்நீங் கியேதான், நேரேதான்வெள்ளியதுயெடைதானிற்கும் நேர்மையுட னிரண்டுக்கோதங்கஞ்சேர்த்து, வாரேதான்வாரடித்துப்புடத்தைப் போடு வாகானதங்கமதுயிறங்கும்பாரு, சீரேதான்பிறப்பென்றதங்கம ப்பாதேசத்திற்கிட்டாதுபுண்ணியோற்கே. ௬௱௰௮

புண்ணியத்தாலிவ்வேதைவாய்க்குமல்லால் புகழானபூரமென்ற பற்பந்தன்னே, திண்ணமுடனறுமாற்றுணீக்கமப்பா திறமாகமட்ட மென்றபொன்னுமாகும், வண்ணமுடன்தகடடித்துகளஞ்சியப்பா வா குடனேகுன்றியதுவுமிதீராலே, தண்ணமுடன்தான்குழைத்துதடவிப் போடு தகைமையுடன்மாற்றதுவுமுயருங்காணே. ௬௱௰௯

காணவேபூரமதுகுன்றிதானும் கருவாகத்தாளெடுத்துவனுபர னத்தில், தோணவேகொண்டாக்கால்வாய்வுபோகும் தோற்றமுடன் மேகமென்றதிருபதும்போம், வேணவேசூலையொடு விம்மல்போகும் மிக்கானவயிற்றுவலி பொருமல்தீரும், சீனமுடன்வக்கினியாமந்தந் தீரும் சிறப்பானகுன்மமுதல்சொரிகள்போமே. ௬௱௨௰

போகுமேகசரோகமெல்லாம்போகும் பொல்லாதசயரோகமே கும்பாரு, ஏருமேசில்விஷபாகமனைத்தும்போகும் யெழிலானபாண் டுமுதல்கவுசிபோகும், சாகுமேவீக்கமுதல்ரணங்கள்போகும் தாழ் வானரோகமுதல்மூலம்போகும், வேகுமேபிணிகளெல்லாஞ்சடலம் விட்டு வேகமுடன்திருமென்றுவறைந்திட்டேனே. ௬௱௨௰௧

பஞ்சபூதசெந்தூரம்.

வறைந்திட்டேன்பஞ்சபூதம்சொல்லக்கேளு வகையானலோகம துவஞ்சுங்கூட்டி, துரைந்திட்டேன் தங்கமதுவொன்றேயாகும் துறையானவங்கமதுமொன்றேயாகும், பறைந்திட்டசெம்பதுவுமொன்றேயாகும் பாலகனேபிரும்பதுவுமொன்றேயாகும், கறைந்திட்டநாகமது நான்கேயாகும் கருவானலோகமதுவஞ்சுங்கூட்டே. சூ௨௨

கூட்டியேதானுருக்கியெடுத்துப்பாரு கூறுவேன்கிராசமதுசாற்றக்கேளு, தாட்டிகமாயரிதாரம்களஞ்சியாறு தாக்குவாய்கிராசமது தன்னிலீவாய், வாட்டமுடன்களங்கமதுபோலேயாகும் வாகான களங்கமதுசிவப்புசெய்ய, மாட்டிமைபாய்சூதமென்றராசாதன்னை மயங்காமல்கெந்தியதுவொக்கக்கூட்டே. சூ௨௩

கூட்டியேசெந்தூரம் செய்யக்கேளும் குறிப்பானபாண்டமது கொண்டுவந்து, நாட்டமுடன்வுப்புதனைக்கீழ்மேலிட்டு நளினமுடன் நடுமையம்காரமிட்டு, வாட்டமுடன்கெந்தியதுமேலேபோட்டு வளமாகநடுமையம்சூதமிட்டு, தீட்டமுனமெலுமந்தவுப்பைக்கொட்டி திறமாகமேல்மூடிசீலைசெய்யே. சூ௨௪

செய்யவேரவிதனிலேகாயவைத்துச் சிறப்பாகவாலுகையிலடிப்பிலேத்தி, உய்யவேதீமூட்டியெட்டுசாமமுத்தமனே தானெரிப்பாய் மைந்தாகேளு, பையவேயாறினபின்னெடுத்துபாரு பாகமுடன்செந்தூரமாகுமப்பா, தொய்பவேசெந்தூரங்களங்குபாதிதுறையோடுமுறையோடுமரைத்திடாயே. சூ௨௫

அரைக்கையிலே தும்பையென்றபூண்டினாலே அப்பனே நாற்சாமமனாத்தபோது, நிரைக்கையிலேமைனம்பேலாகும்பாரு நேர்மையுடன்ரவிதனிலேகாயவைத்து, திரைக்கமுடன்கல்வத்திற்பொடியாய்ச்செய்து திறமுடனேகாசியென்றகுப்பிதானும், வரைக்கமுடன்குப்பிக்குச்சீலையேழு வாகுடனேவாலைவிட்டுச்சீலைசெய்யே. சூ௨௬

சீலைபதுசெய்துபின்புபின்னுங்கேளு செழிப்புடனேமருந்தையெல்லாங்குப்பியிட்டு, வாலையென்னுமனோன்மணியைத்தியானங்கொண்டுமறவாமல்மாக்கல்லுகொண்டுமூடி, பாலையுடன்சட்டிதனில்மணல்தான்கொட்டி பாலகனேநடுமைபம்குப்பிவைத்து, ஆலையென்னும் வாலுகையிலடுப்பிலேற்றி வப்பனேயேழுநாளெரித்திடாயே. சூ௨௭

எரிக்கையிலே செந்தூரமருணன்போலா மெழிலானமுருக்கன் பூகிறம்போலாகும், அரிக்கையுடன்செந்தூர மெடுத்துப்பாரு அபப னேசீஷாவிற்பதனம்பண்ணு, தரிக்கமுடன்வெள்ளிசெம்பில் பத்துக் கொன்று தயையுடனேதானுருக்கிகுருவொன்றிய,பரிகமுடன்தானு ருகிவாங்கிக்கொள்ளும் பாலகனேகரியோட்டிஊதிடபோடே. ௩௨௰

ஊதிப்பார்மாற்றதுவு மாறுகாணு முத்தமனேதங்கமது நாலுக் கொன்று, சாதியாங்குங்குமப்பூதங்கமப்பாசார்புடனேதான்சேர்த்து வாரடித்து, வாதியாமபுடமதுவுமாற்றுகாணும் மகத்தானவேதையி துவுறுதித்தங்கம், பாதியாந்தங்கமதுபிரண்டுக்கொன்று பாகமுடன் மாற்றுறுசேர்த்துப்பாரே. ௩௨௧

சேர்க்கையிலேமாற்றதுவுஞ்சிவந்தபொன்னும்தெளுவானவரண மதுவதிகங்காட்டும், பார்க்கையிலேபிறவியதுபிறவிப்பொன்னும்பாரி னிலேநாதாக்கள்ரிஷிகள்வேதை, தீர்க்கமுடன்கருவாளி செய்வான் பாரு தீரமுடன்மற்றொருவர்செய்வாரோதான், மார்க்கமுடன்காலா ங்கிபாதம்போற்றி மன்னவனேபாடிவைத்தேன்போகர்தாமே. ௩௨௰

தாமானபாகமது யாருஞ்செய்யார் தாரணியில்புத்தியுள்ளான் செய்வான்கண்டீர், சாமானவாதவித்தைவதீதவித்தை சாங்கமுடன் யோகவான்காணும்வித்தை, வாமானஞானவான்சிவயோகிக்கு வாகு டனேபலிக்குமல்லால் மற்றோர்க்கில்லை, தாமானமின்றிலார்க்குதவு மோசொல் துப்புறவாய்வித்தையதுபலிக்காதாமே. ௩௩௧

பலிக்காதுகாமிகட்கும் கர்மிகட்கும் பாங்குடனேபாவியென்ற சண்டாளற்கும், சொலிக்காதுயேமமென்றவித்தையப்பாகுட்சாதிகு ட்சமதைக்காணமாட்டார், ஒலிக்கவேபூரணத்தைமனதிலுன்னி வுத் தமனேயெந்நாளுஞ்சிவயோகம்பார், கெலிக்கவேபிராணயந்தன்னிற் சென்று கெவனமுடன்குளிகைக்கு வழிதான்தேடே. ௩௩௨

காணவென்றாலுந்தனுக்குவருமைமீறி கட‍தனக்குமுழப்புபிணி நேர்ந்தபோது, நாணவேமச்சமடம் பயிர்ப்புதானும் நளினமுடனுந் தமக்குநேருங்காலம், தோணவேசிவனத்துக் கில்லாவிட்டால் தோற் றமுள்ளவேதையிதுசெய்துபாரு, ஈணவேசமுசாரத் தொல்லைபோக் கை யெழிலானவாதத்தால்நிருத்தலாமே. அ௨௯

நிருத்தலாம்வறுமைவருங் காலந்தன்னில் நீமகனேயிவ்வேதை மாரியுண்ணு, செருக்கமுடன்கோடிவரையுண்ணலாகும் செம்மையு டனிச்சவளே செந்தூரித்தால், பொருத்தமுடன்செந்தூரப் போக்கு சொல்வேன் பொங்கமுடன்சவளையது வொன்றேயாகும், கருத்துட னேதங்கமதுசரிகாலாக கருவாகத்தான்கூட்டிவுருக்கிடாயே. அ௩௰

அயச்சவளே செந்தூரம்.

உருக்கையிலேகட்டினதோர்கெந்திதானும் வுத்தமனேகிராசம தூஈவாய்பாதி, நருக்கையிலேகளங்கமதைகல்வமிட்டுநாதாக்கள்சொ ற்படியேசெப்பக்கேளும், முருக்கலெனுங்கையாஞ்சார் சாமம்நாலு முசியாமல்தானரைப்பாய் மைந்தாநீயும, வருக்கமுடன்ரவிதனிலே காயப்போடு வாகுடனேகுப்பிதனிலடைத்திடாயே. அ௩௧

குப்பியென்றால்காசியென்ற குப்பிதானும் குணமானசீலையதுவ லுவாய்ச்செய்து, தப்பிதங்கள்வாராமல்மாக்கல்கொண்டு தளராமல் வாய்மூடிசீலைசெய்து, ஒப்பமுடன்தளவாயாம் சட்டிதன்னில் உத்த மனேபொடிமணலே பாதியிட்டு, நெப்பமுடன்குப்பிநடு மையந்தன் னில் நேர்மையுடன்மேலுமந்தமணலைமூடே. அ௩௨

மூடவேமேல்சட்டிக்கொண்டுமூடு முறையோடுநாதாக்கள்சொ ல்லைப்போல, வாடவேதிரியாதேமபங்கவேண்டாம் வாகுடனேவாலு கையாமேந்திரத்தில், நீடவேஎண்சாம மெரித்தபோது நீதியுள்ளபா லகனேநிசமாய்க்கேளு, சாடவேசெந்தூர மென்னசொல்வேன் தளு க்கற்றசந்திரன்போல் தளும்புந்தானே. அ௩௩

தானனசெந்தூரமருணன்போலாம் தாக்கானபிரகாசமானசோ தி, வேனைகொங்கணவர்செய்தபாகம் மேதினியில்யாருந்தான்செய்

யவில்லே, கோனுனயெனதையர் காலாங்கிநாதர் குருசொன்னபடிய ளவாய் செய்தேன்யானும், தேனுனசெந்தூரப்போக்குதன்னே தேச த்தார்சீனத்தார்க்குரைத்திட்டேனே. ௮௩௪

உரைத்திட்டேன்சீனபதித்தேசத்தார்க்கு வுகமையுடன்செய்து வைத்தேன்யிந்தபாகம், வரைத்திட்டசெந்தூரப்போக்குதன்னேவள முடனேமண்டலந்தான்கொண்டபோது, குரைத்திட்டசோரியதுமே னிதானும் குறையாமல்குன்றியதுபோலேகாணும், பரைத்திட்டவடி வுமதுசிவப்புகாணும் பளபளப்புமென்றுமதிதமாமே. ௮௩௫

அதிதமாமின்னமொருபாகங்கேளு வப்பனேயான்கண்டவரைக் குஞ்சொல்வேன், துதிதமுடன்செந்தூர முண்டபோது துறையான மேகமென்ற திருபதும்போம், சதிதமுள்ளயாறுவகை நீரும்போகும் சுபத்துடனேயீளேமுதல் காணுதோடும், பதிதமுள்ளலிங்கத்தின்பு த்திபோகும் பாங்கானகண்டத்தின்மாலேபோமே. ௮௩௬

மாலேயுடன்சுவாசகாசங்கள்போகும்மன்னவனேவிப்புருதிக்கட் டிபோகும், வாலேயாம்வயததுவு மதிகமெத்த வாகுடனேநரைதிரை யுமற்றுப்போகும், காலேயிலேமருந்துண்ணுங்காலந்தன்னில் காலாற நடந்துவர மெத்தநன்று, வேலேயிலுமெப்போதுஞ் சோம்பலாகா வீ ணிலேகாலமதுகழிக்காநன்றே. ௮௩௭

நன்றானசோம்பலது நீக்கியல்லோ நாயகனேகஷ்டமென்ற வே தைபாரு, தன்றானமேனியது பிணிநாடாது சதாகாலந்திமிரேனுங் கிட்டாதப்பா, பன்றானமருந்ததுவும்வீறுகாணும் பரிதிபோல்தேகம துகற்றூணுகும், நின்றுடுமரவமதுதீண்டிட்டாலும் நேரானவிஷமது தானேராதன்றே. ௮௩௮

யேராதுவிஷமதுவுமேல்நோக்காது யென்மகனேயெந்நாளுங்க ற்பமான, கூரானதேகமதுபோலேதோற்றும் குறையாதுவாசிபதுய டங்கிபாடும், பேரானநாதாக்கள்முனிவர்பாகம் பேருலகில்கிட்டாது புண்ணியோர்க்கு, நேரானசெந்தூரம் சொல்லொண்ணுது நேர்மையு டன்பாடிவைத்தேன்போகர்தாமே. ௮௩௯

காயகற்பவுண்டை.

தாமானவின்னமொரு மாற்கம்பாரு தயவானசிறுபாலசாற்றக் கேளும், கோமான்களுண்பதற்குவுண்டைசொல்வேன் கொற்றவனே கருஞ்சீரம்நற்சீரந்தான், வேமானமுட்டியதுசிற்றுமுட்டிவிரைவான பேராவின்முட்டிதானும், நாமானதிரிமஞ்சள்தானுமாகும் நாட்டிலு ள்ளவேலியதுாண்டதாமே. ௮௪௦

ரண்டானமூலமதுசிவப்புமூலம் நெடிதானகறுப்பான மூலந்தானும், கண்டானகத்திரியு மிரண்டதாகும் கருவானமஞ்சளென்றகத்திரிதானும், துண்டானவெண்கத்திரிதானுமப்பா துறையானகருவேலன்வெள்வேலன்தான், உண்டானயத்தியது ரண்டதாகும் வாகுடனேபேயத்திநல்லத்தியாமே. ௮௪௧

அத்தியுடன் துத்தியதுரண்டதாகும்அப்பனேவட்டமென்றதுத்திதானும், மத்தியாந்தட்டமென்றதுத்திதானும்மன்னவனேமிளகதுவுமிரண்டதாகும், சுத்தியாம்நன்மிளகுவால்மிளகுதானும் துறையானகருஞ்சூரைசெஞ்சூரையப்பா, வெத்திபெறவலம்புரியு மிடம்புரியுமாகும் வேகமென்றவேப்பிலையுமிரண்டதாமே. ௮௪௨

தாமானகருவேப்பினிலையுமாகும் தாக்கானமலையின்வேப்பிலையுமாகும், தாமானமழிஞ்சியது ரண்டதாகும் துவர்ப்பானயேரழிஞ்சியிரங்கழிஞ்சியுமாகும், காமானவேளையது ரண்டதாகும் கதிப்பானநல்வேளைமுக்காவேளை, நாமானவோமமது ரண்டதாகும் நலமானகுராசானிநல்லோமமாமே. ௮௪௩

ஓமமுடன்பிரண்டையதுரண்டதாகு முத்தமனேநற்பிரண்டைஓத்தையப்பா, தாமமென்றவாலிலையு மிரண்டதாகும் தாக்கானகல்லாலை நல்லாலையப்பா, நேமமுடன்கள்ளியது ரண்டதாகும் நெடிதானகொடிக்கள்ளிகொம்புக்கள்ளி, காமமென்றவூமத்தைரண்டதாகும் கருவானவூமத்தைமருளூமத்தையாமே. ௮௪௪

மத்தையுடன்வுள்ளியது ரண்டதாகும் மகத்தானவெள்ளுள்ளியீருள்ளியப்பா, சத்தானதாமரையு மிரண்டதாகும் சார்வானகுழித்தாமரைநற்றாமரைதானும், முத்தானதிப்பிலியுமிரண்டதாகும்மூனையானயானையின்திப்பிலியுமாகும், சத்தானவரிசையிடதிப்பிலிதானும் சார்பானநிலாவிரையுமிரண்டதாமே. ௮௪௫

தாமேதான்கூரத்துவிரையுமாகும் தாக்கானநாட்டிலுள்ளவிரையுமாகும், வேமேதான்சுரையதுவு மிரண்டதாகும் வெடிப்பானநற்சுரையும்பேய்ச்சுரையுமாகும், நாமேதான்சொன்னபடிகொன்றைரண்டு நற்கொன்றைமயிற்கொன்றை ரண்டதாகும், போமேதான்சீந்தியதுரண்டதாகும் பொற்சீந்திநற்சீந்திதானுஞ்சேரே. ௮௪௬

சேரேதான்பசளையதுரண்டதாகும் சிறப்பானகரும்பசளைசெம் பசளையுமாகும், தூரேதான்கையானு மிரண்டதாகும் துடியானநற் கையான்பொற்கையான்றான், சாரேதான்கிரந்தையதுரண்டதாகும் சாங்கமுடன்சிவகிரந்தைவிஷ்ணுதானும், நேரேதான்பாளையதுரண் டதாகும் நெடிதானபங்கனிடபாளைதானே. ௮௪௭

தானானபாளையது வாடுதீண்டா தாக்கானசின்னியதுபெருஞ்சி ன்னிதானும், மானானசிறுசின்னிதானுங்கூட்டு மைந்தனேமுருங்கை யது ரண்டதாகும், வேனானபேய்முருங்கைநல்முருங்கைதானும்வேக முடன்தான்கூட்டுமெத்தநன்று,பானானகத்தாழைரண்டதாகும்பாக முடன்கல்லினிடதாழையாமே. ௮௪௮

தாழையாம்சோத்தினிட தாழையாகும் தாக்கானகருங்கொள் ளுசெங்கொள்ளுமாகும், வாழையாம்பேய்வாழைநல்வாழைப்பாவா குடனேகருணையதுரண்டதாகும், மோழையாம்நற்கருணைபொற்கரு ணையாகும் மூதண்டநெல்லியதுரண்டதாகும், காழையாம்பெருநெல் லியருநெல்லியாகும் கடிதானகரும்பதுவுமிரண்டதாமே. ௮௪௯

ரண்டுடனேவெண்கரும்பு செங்கரும்புதானும் நிலையானவாகை யதுரண்டதாகும், திண்டானபெருவாகைசிறுவாகைப்பா திறமான நொச்சியதுரண்டதாகும்,பண்டானகருநொச்சி வெண்ணொச்சிதானு ம் பாகமுடன்றான்சேர்க்க மெத்தநன்று, கொண்டலுடன்நாவலதுர ண்டதாகும் கொடிதானகருநாவல்வெண்ணாவல்தானே. ௮௫௰

தானானநங்கையதுரண்டதாகும் தாக்கானபெரியானின்சிறியா ன்றானும், வேனானவிளாவதுவுமிரண்டதாகும் வேகமுடன்குட்டிவி ளா பெருவிளாவுமாகும், கோனானவவரையது ரண்டதாகும் கொடி தானநல்லவரை கோழியவரைதானும், பானானகடுக்காயுமிரண்டதா கும் பாங்கானபொற்கடுக்காய்நற்கடுக்காய்காணே. ௮௫௧

காணவேவாவாரை ரண்டதாகும் கருவானபொன்னிற வாவரை யாகும், தோணவேநல்லவாவாரையாகும் தோராமல்கூட்டுவது மெ த்தநன்று, சாணவேவாமணக்குரண்டதாகும் சாங்கமுடன்சிற்றிரும ணக்குதானும், வேணவேபெரியவாமணக்குமாகும் மேதினியில்கண் டறிந்து கூட்டுவாயே. ௮௫௨

கூட்டுவாய்வகைவகைக்குசேரொன்றாக குமிப்பாகயினங்கண்டு சேர்வைகண்டு, மாட்டுவாய்வித்திலுடபாகங்கண்டு மதிப்புடனே மூலியுடபதமுங்கண்டு, நீட்டுவாய்பட்டையுட அளவுங்கண்டு நேற்புடனேசரக்கெல்லாமலொன்றாய்க்கூட்டி, வாட்டமுடன் தானிடிப்டாய்சரக்கையெல்லாம் வாகுடனேதான்போடவண்மைகேளே. அறுரு

கேளேநீபாண்டமதிலிட்டுமைந்தா கிருபையுடன்பேரீச்சங்காய்தானப்பா, மாளேநீகொடிமுந்திரிபழமுந்தானும்மார்க்கமுடன்வகைக்குவொருசேரதாக, வாளேதான்மலைத்தேனுங்கூடச்சேர்த்து வளமுடனேகற்கண்டுசரியாய்ச்சேர்த்து, பாளேதான்போகாமல் ரவியில்வைத்து பாகமுடன்சீசாவில்பதனம்பண்ணே. அறுச

பண்ணவேகாயாதிகற்பவுண்டை பாருலகில்நாதாக்கள்ரிஷிகள்தாமும், வண்ணமுடன்மாணுக்கள்பிழைக்கவென்று வாகுடனேசீனபதிதேசத்தார்க்கு, திண்ணமுடன்யிப்பாகஞ்செய்துவைத்தேன் திறமையுடன்காயாதிகற்பந்தன்னை, நண்ணமுடன்யுண்டுமல்லோமாந்தர்தாமும்நாணிலத்தில்சித்தனைப்போல்யிருந்திட்டாரே. அறுறு

இருந்திட்டார்வெகுகோடிகாலமப்பா எழிலானசித்தர்முனிதம்மைப்போல, குருந்திட்டசமாதிதனிலிருந்துகொண்டு குருவானபோகரைத்தான்மனதிலெண்ணி, திருந்திட்டசிவயோகந்தன்னில்நின்று தீரமுடன்காயத்தைநிருத்திக்கொண்டு, பொருந்திட்டமாகவல்லோவாசிதன்னைபூட்டியேயுள்ளடக்கிபுரிந்திட்டாரே. அறுசூ

புரிந்திட்டகாயமதுமூச்சடங்கி பொங்கமுடன்வெகுகோடிகாலந்தானும், பரிந்திட்டமாகவல்லோசமாதிதன்னில் பரிதிமதிகாணுமல்யிருந்தாரப்பா, சரிந்திட்டமாகவல்லோசரிதைதன்னை சாக்கிரதைசுழுத்தியுடன்கிரியையோடு, துரிந்திட்ட துரியாதிதாமும்பூண்டு துப்பரவாய்மண்மறைவில்யிருந்தார்தாமே. அறுஎ

தாமானகாயாதியுண்டைதன்னை தற்காலம்மானிடர்கள் கொள்வாராகுல், பூமான்கள் வெகுகோடிகாலமப்பா பூவுலகில்தானிருப்போர்வயதோமெத்த, சீமான்கள்காயாதியுண்டிட்டாலும் சீர்பெறவேமாய்கைதனையொழிக்கவேண்டும், நாமானவாயுநவேகந்தன்னை நாட்டினேன்மாணுக்கள்பிழைக்கத்தானே அறுஅ

தானனகற்பமது உண்ணும்போது தகைமையுடன்புளிபுகையு ந்தள்ளவேண்டும், வேனனகற்பமது கொண்டபோது வேகமுடன் வாசியதுகீழ்நோக்காகும், கோனனமண்டலந்தான்கொண்டாயான ல்கொடுங்காசைமீளையதுதொண்ணூற்றுறும், மானனவாதமென்ற தெண்பதும்போம் மதிப்புடனேபித்தம்நாற்பதுவும்போமே, அடுகூ

போமேதான்மேகமதுயிருபத்தொன்று பொலிவானகிரந்தியது பதினெட்டும்போம், வேமேதான்சூலைபதினெட்டும்போகும் விருப்ப முடன்குன்மமென்றதெட்டும்போகும், நாமேதான் சொன்னபடிபா ண்டாறும்போம் நாடாதுவிஷவலியும்நவிலொண்ணது, சாமேதான்ச ன்னிபதிமூன்றும்போகும் சார்பானகக்கலுடன்வாந்திபோமே. ()

வாந்தியாம்விக்கலுடன்வரோசிகம்போம் வகுத்ததொருபீனச முமெட்டும்போகும்,காந்தலெனும்தேகமதுகுளிர்ச்சிகாணும் கண்கூ ச்சம்பெருமூச்சு காணதோடும், பாந்தலெனும் பாணமதுபோலாம் நோய்கள் பறக்குமடாதேகமதிற்சன்னலாகி, சாந்தமுடனென்னனை ம்தளிர்ச்சிகாணும் சதாகாலமெங்நாளும்கற்றூணமே. அசுக

கல்லானதூணுக்கு யிணைவேறுண்டோ காசினியிற்சித்தனைப் போல்சீயுமாவாய், வல்லானசித்தர்முனிரிஷியென்பார்கள் வையகத் திலுனைக்கண்டோர் நடுங்குவார்கள், புல்லானமானிடனை யிருந்திட் டாலும்பூதலத்திலுன்னைபொருநாதனென்பார்,வெல்லானரிஷியென் றுநடுங்குவார்கள் வேதாந்தத்தாயருள்தான்வேண்டும்பாரே. அசுஉ

பாரேதான் பராபரியாளருளும்வேண்டும் பாருலகில்சித்தர்மு னிகடாட்சம்வேண்டும்சீரேதான்விட்டகுறைகாணவேண்டும்சிறப்பா னதொட்டகுறைநேரவேண்டும், நேரேதான்லலாடகருவிருக்கவேண் டும் நேர்ப்புடனேஇதுவெல்லாம்கூடினக்கால், கூரேதான்நினைத்த தெல்லாஞ்சித்தியாகும் கொற்றவனே நீயுமொருசித்தனமே. அசுங

போகர் சத்தசாகரங் கண்டது.

ஆமேதான்பின்னமொருகருமானங்கேள் யப்பனேயான்கண்ட வரைதான்கேளு,போனேனே சத்தசாகரமுங்கண்டேன் பொங்கமு டனேமுவகைதோற்றங்கண்டேன், நானேதான்அஷ்டவகை தீவுகண் டேன் நாட்டமுடனஷ்டபாலகரைக்கண்டேன், கோனேதான்யென னதபர்காலாங்கிநாதர்குருபதத்தைவணங்கியல்லோபோனேன்பரோ,

வெள்ளையானைமீதில் தேவேந்திரனைக்கண்டது.

பாரேதான்குளிகையொன்றுபூண்டுகொண்டு பட்சமுடன்தீவுகளிற்செல்லும்போதும், நேரேதான்வெள்ளானைமீதிலேறி நேர்புடனேஇந்திரனும்போகக்கண்டேன், தேரேதான்யடியேனும் சிறுபாலன்றான்சீக்கிரமாய்அடியேனும்பின்றொடர்ந்தேன், சீரேதான்தேவேந்திரபகவான்தானும் நிர்த்தமுடனென்றனையும்யாரென்றாரே. ௪௬௫

யாரென்றுகேட்கையிலேயடியேன்றானும் அப்பனேகால் நடுங்கிமெய்நடுங்கியேதான், சீருடனேகாலாங்கிசீஷனென்றேன் சிறப்புடனேயானுமல்லோபக்கல்சென்றேன், பார்புகழும்தேவேந்திரனென்னைப்பார்த்துப்பாலகனே சிறுவயதுள்ளபாலா, நேருடனேயென்முன்னேபயமில்லாமல் நேர்மையுடன்வந்ததினால்சாபந்தானே. ௪௬௬

தானென்னசாபமது சொல்லும்போது தண்மையுடன்குளிகைபூண்டுவந்தேன்சாமி, கோனென்னயென்னையர்காலாங்கிநாதர் குருபதத்தை வணங்கிநித்தம்விடையுங்கேட்டு, பானென்னபராபரியாளுரையுங்கேட்டு பட்சமுடன்சத்தசாகரமுங்காண, நானென்னபோகரிஷிவருகும்போது நளினமுடன்தெரிசனங்கள்கிடைக்கலாச்சே. ௪௬௭

கிடைத்ததென்றுசொல்லுகையிலடியேன்றானும் கீர்த்தியுடன்றானுரைக்கச்சாமியப்போ, படைத்தலைவர் கிங்கிலியராயிரமபேர்பாங்குடனேயிந்திரனைசூழ்ந்திருக்க,உடைபூண்டபெண்களுடன்கோடாகோடிவுத்தமரைசூழ்ந்துகொண்டுதாமிருந்தார், நடைநொடி ரம்பையுடன்மெல்லிதானும், நாட்டியமாமேனகையுமிருந்ததாமே, ௪௬௮

தாமுடனே திலோர்த்தமையு மூர்வசியுந்தானும் தகமையுடன்கொலுக்கூடமங்கிருந்தார்,நேமமுடன்தபோதனர்கள்கோடாகோடி நேர்மையுடன்கைலாசகிரியில்தானும், வாமமுடன்தவசிருப்பார் லக்கோயில்லை வாகுடனேரிஷிகூட்டமனேகந்தானும், சேமமுடனிந்திரனேடிருக்கக்கண்டேன்சேனவதிசயங்களெல்லாந்தெளிந்திட்டேனே

தெளியவேயடியேனும்காத்திருந்தேன் தேவேந்திரபகவானுமெந்தனுக்கு, எளியனென்மெந்தனுக்குகிருபைவைத்து யெந்தனதுபதிதேடிவந்ததாலே, வெளியரங்கமாகவேதான்சாமிதானும் வேடிக்கைவினோதமெல்லாங்காண்பித்தேதான், ஒளியானசோதியென்னுமாசீர்மத்தில்வுத்தமனேயிடதுபக்கமிடந்தந்தாரே. ௪௭0

தங்தவுடனடியேனுமங்கிருந்து சதகோடிசூரியசிம்மாசனத்தில் சொங்தமுடன்சுகித்திருந்துகேள்விகேட்டு கேள்விக்குவுத்தாரவிடையுஞ்சொல்லி, அங்கமுடன்தேவர்களின்பக்கம்போயி அங்கரலோகத்துமர்மமெல்லாம், விந்தையுடன்றானறிந்தேன் விநோதமெல்லாம் விருப்பமுடன்றானுரைப்பேன்மகிமைகேளே. ௮௭௧

போகர்அமராபுரிகண்டது.

கேளப்பாவமரபுரிசென்றேன்யானும் கெடியானகோட்டைமுதலுளவுகண்டேன், தாளப்பாதங்கமதில்கோட்டையப்பா தாக்கனமாளிகையுங்கோபுரந்தான், வாளப்பாவீதிகளின்தேர்களப்பா வகுப்பானசாலைமுதல்தோப்புமுண்டு, நீளப்பாமல்லிகைப்பூசாலையுண்டுநீடாழிகோட்டைக்குவலங்கமுண்டே. ௮௭௨

உண்டானவசுவங்கள்கூட்டமுண்டு வுத்தமனேவெள்ளானைக்கூட்டமுண்டு, திண்டானகோட்டைக்குள்ளனேகமாதர் சிறப்புடனேநாட்டியங்கள்செய்துநிற்பார், பண்டானகனிவகைக ளனேகமுண்டு பாங்கானதேவதாகனியென்பார்கள், வண்டானகூட்டங்கள் கீதம்பாடும்மகத்தானதொனியோசையனேகம்பாரே. ௮௭௩

பாரேதான்நவரத்தினமலையுமுண்டு பாலகனேவெகுகோடிரிஷிகள்கண்டேன், மேரேதான்மேருவு மிதற்கீடல்ல மெத்தவுண்டுவதிசயங்கள்சொல்லப்போமோ, நேரேதான்வாக்கினையின்பக்கல்சென்றேன்நெடிதானவடக்குபுரம்கொண்டுசென்றார், சீரேதானுக்கினைகள்மெத்தவுண்டு சிறப்புடனேகண்டுமெல்லோதிடுக்கிட்டேனே. ௮௭௪

திடுக்கிட்டுப்பார்த்தளவில்கிங்கிலியரப்பா திறள்கூட்டமாயிரம்பேரோடிவந்து, ஒடுக்கமுடன்றூதுவர்களாயிரம்பேர் வுத்தமர்களானவர்களொன்றாய்க்கூடி, நடுக்கமுடன்நரகமதிலிழுத்துக்கொண்டுநாட்டமுடன்றள்ளுகின்றவளமைகண்டேன், ஒடுக்கமுடன்மாந்தர்களைத்தான்குறித்துவுத்தமரேசெய்பாவஞ்சொல்லென்றாரோ. ௮௭௫

சொல்லென்றுகேட்கையிலேதூதர்காமும்செப்பலுற்றாரவர்செய்தபாபங்தன்னை, வெல்லவேபூசைமுகமிடார்செய்தோர்கள் வேகமுடனுடைமைதனைகொள்ளைகொண்டோர், புல்லவேமிருகமென்றசீவன்தன்னை பொங்கமுடன்வதைசெய்துகொன்றுபோட்டோர், அல்லலுடன்சைபோகஞ்செய்தபேரை அகடழித்துகாணம்வரச்செய்தோர்தாமே. ௮௭௬

செய்பவேதபசுகட்குவின்னஞ்செய்தோர் செயலானபாக்கியத்தைக்கொள்ளைகொண்டோர், மெய்யுடனேபுருஷனுக்குவுண்மையேசிமேதினியில்சோரத்துவம்செய்தபேரும், கைதவமாய்ஞானிகட்குயிடர்செய்தோரும் காசினியில்நற்பெண்டீர்கெடுத்தபேரும், வெயில்தனிலேமாடுகட்குசலங்காட்டாமல் வெட்டவெளிதன்னிலேதான் விட்டோர்தாமே. ௮௭௭

விட்டபெரியோர்களைத்தா னகடுபேசி வேதாந்தத்துண்மையெனும்நாதர்தம்மை, தொட்டுமேபறக்கடித்துயிடங்கொடாமல்தோராமல்சதாகாலத் துன்பஞ்செய்தோர், நட்டமுடன் யகதிபரதேசிதம்மைநாடோறுமைபமிடாதிட்டபேரும், வட்டமுடன்குழந்தைகட்குப்பால்கொடாமல்வாகுடனேவதைசெய்தோர் பாவியாமே. ௮௭௮

பாவியாயிருந்துகுஷ்டரோகமாகி பாரினிலேவெகுகோடிபாபஞ்செய்தோர், பூவினிலேவழக்கோரஞ்சொன்னபாவிபொன்தனையேயபகரித்தபாவியோரும், தேவியெனுமம்பாளின்பூசைமார்க்கம்தேடியேமிகக்கெடுதிசெய்தபேரும், நாவினிலேபாஷாணந்தடவியல்லோநாயகனைக்கொன்றதொருபுண்ணியோர்க்கே. ௮௭௯

புண்ணியனுமனியாயஞ்செய்தபேரைபேரின்பவீடதனைஜோடித்தோர்கள், திண்ணமுடன்வைகுண்டப்பதியிலெல்லாம் திசைகெட்டுமுறிபட்டுகிடைக்கும்வண்ணம், நண்ணமுடனிதுகளெல்லாங்கண்டேன்பானும் நளினமுடன்வக்கினியின்சுவாலைகண்டேன், தண்ணமுடன்வட்டையென்றகுழியுங்கண்டேன் தாக்கானவரணையென்றகுழிகண்டேனே. ௮௮௰

கண்டேனேமுதலையுடசுனையுங்கண்டேன்காணுறுவோலடகளில்பானைகண்டேன், தண்டமுள்ளகாடுகள்போலனந்தங்கண்டேன்தண்மையுள்ளதிநரகிற்றள்ளகண்டேன், கொண்டல்வண்ணனச்சுதனையங்கேகண்டேன்கோடானகோடிமனுராசர்கண்டேன், தெண்டமுடன்ரிஷிக்கூட்டங்கோடிசேனைகொற்றவனை சூழ்ந்திருக்கப்பார்த்திட்டேனே. ௮௮௧

பார்த்தேனேயெமபுரத்துச்சாங்கமெல்லாம் பாழ்நரகுபடுகுழியாவுங்கண்டேன், தீர்க்கமுடன்லிங்கமதுதெரிசித்தேன்யான் திறமுடனேகோடிமுனிதபசிகண்டேன் சேர்த்துமே வைகுண்டபதியைக்கண்டேன் சேனைதிரள்கூட்டமதைசேனைகண்டேன் பார்த்துமேவந்தேனயான்பரலோகத்தைப்பராபரியாள்கிருபைதன்னால் பார்த்திட்டேனே. ௮௮௨

பார்க்கவென்றால்யெந்தனதுகணக்குகண்டேன்பாருலகில்மூன்றுயுகமிருக்கக்கண்டேன், தீர்க்கமுடன்கணக்கெல்லாம்பார்த்தாராய்

ந்து திறமுடனேகண்டுவந்தேன்தெளிவதாக, ஏர்க்கவே சத்தலோக த்தின்மார்க்கம் பெனைப்போலக்கண்டவருமொருவருண்டோ, நாற்க மலவட்டத்தாளாயிபாதம நான்வணங்கிகண்டறிந்தேனவிலத்தானே

வைகுண்டத்தில்பிரமாவைக்கண்டது.

தானானமுன்யுகத்தில்பிரமாவுக்கு தாக்கான ஈஸ்பரியாள்தந்த சாபம், கோனானயெனதையர்காலாங்கிதாதர் குருசாமியெந்தனுக்கு ச்சொன்னதுண்டு, தேனானபிரமாவும்வைகுண்டத்தில்தேர்வேந்தரா ஜரிடமிருக்கக்கண்டேன், பானானரிஷிக்கூட்டமாயிரம்பேர் பாங்குட னேபிரமனிடம்கண்டேன்பாரே. ௮௮௪

கண்டேனேயின்னம்வெகுவதிசயத்தைக் காசினியிலாருந்தான் கண்டதில்லை, திண்டானவாத்துமகோடிகூறொண்ணாது வுத்தமனே யவரவர்கள்செய்தபாவம், கொண்டானமட்டிக்கும்வாக்கினேயம் கு றிப்புடனேநேமிப்பார்தருமராஜன், சண்டாளமானதொருகர்மியோ த்துசதாகாலமாக்கினைகள்நேருந்தானே. ௮௮௫

நேரவென்றால்புண்ணியர்கள்மெத்தவுண்டு நெடுங்காலம்தவசி ருப்பார்மனுக்கள்கோடி, சேரவேவெகுநாளாயிருந்துபார்த்தேன்சே னைதிரள்கூட்டங்கள்புண்ணியவான்கள்,கூரவேமுடியாது சோடசா ரம்சொன்னாலும்நம்பார்கள்கர்மிமாண்பர், திறமுடனேவடியேனும் இட்டிருந்து திகழுடனேகண்டேனேபோகர்தாமே. ௮௮௬

தாமானமின்னமொருகருமானங்கேள் தபவாகச்சொல்லுகிறே ன்தண்மையாக, சாமானமானதொருவகத்தியர்தாமும்சாங்கமுடன் வைகுண்டந்தன்னிற்கண்டேன், கோமானுங்கொங்கணவர்செய்தபா வம்குவலயத்தில்முற்பிறப்பில்மெத்தவுண்டு, பூமானும்கொங்கணரை கேள்விகேட்டு புத்தியுடன்தண்டனைக்குள்ளாக்கினாரே. ௮௮௭

ஆக்கினார்யிடைக்காட்டார்தன்னைக்கண்டேன் அப்பனேயவர் செய்தவினைதான்கேளு, பாக்கியங்களனேகமதாய்க் கொண்டுமென் ன பாருலகில்சிவதருமமில்லையப்பா, நோக்கமுடன்வவர்செய்தபூர்வ புண்ணியமகோடிக்குள்ளோராசனவன்கண்டாராய்ந்து, தாக்கவென் றுஅவர்மீதில்பட்சம்வைத்துக் கஷ்டமில்லாவாக்கினைக்குள்சென்றி ட்டாரே. ௮௮௮

சென்றவுடன்சிவவாக்கியர்தன்னைக்கண்டேன்சிறப்புடனே யவ ர்தம்மைக்கேள்விகேட்டார், ஒன்றுமில்லையவர்மீதில்குற்றமில்லைவுத் தமனேவைகுண்டப்பதியில்தாமும்குன்றின்மேலிடங்கொடுத்தார்து தர்தாமும்கொப்பெனவேசாமிக்குத்தொண்டனாக்கி, வென்றிடவேச தாகாலம்கைலாசத்தில் வேகமுடன்வீற்றிருக்கவெடுவுண்டாச்சே. ()

ஆச்சப்பாபிரமமுனிதன்னைக்கண்டேன் அப்பனேயவர் செய்த கொடுமைக்கேளும், மூச்சடங்கிப்பிணம்போலவிருந்துசித்தன் முடி மீதில்செபமாலையணிந்துகொண்டு, பாச்சலுடன்வெகுதேசம்வோடிச்சென்று பாடுபட்டுத்திரவியங்கள்சேகரித்து, மாச்சலுடன்சாத்திரங்கள்படித்துக்கொண்டு மாறுட்டமாகவல்லோமறைந்தார்தாமே. ()

மறைத்தபொருளானதினால்சித்துதம்மை மாற்கமுடன்வைகுண்டந்தன்னிற்சென்று, குறைத்தபொருளுளவுகளைமறைத்ததாலே கோடானகோடிபாவம்நேர்ந்ததென்று, நிரைத்தனமாய்ஏன்மனயெண்ண ...ர் நேர்மையுடன்வைகுண்டப்பதியின்சேதி, முறைப்படியேசெய் ...னறுதூதர்தாமும் முயன்றுமேவாக்கினைகள்செய்திட்டாரே. ()

செப்பவேகமலமுனிதன்னைக்கண்டேன் சேர்வைமுகம் காணுகையிலடியேன்பக்கல், பையவேதீர்ப்புமிகச்செய்யக்கண்டேன் பாழ்நரகில்சிலபேர்களிழுக்கக்கண்டேன், தொய்யகாலனவன்கிருபைவைத்து துப்புரவாய்யெந்நாளும்தர்மஞ்செய்ய, மெய்யுடனேதீர்ப்புனாக்ககண்டேன்யானு மேதினியில்சொன்னாலும்பொய்யென்பாரே. ()

பொய்யென்பார்பூதலத்தார்சொல்லுவார்கள் பொங்கமுடன்யான்கண்டவரையிற்சொல்வேன், மெய்யுடனேபுலிப்பாணிதன்னைக்கண்டேன் மேதினியிலனேகமதாய்பாபஞ்செய்தார், கைதவமா யவர்செய்தபாவந்தன்னைக் கண்டுமெல்லோயெமதர்மராஜன்தானும், பையவேவாக்கினைகள்செய்யக்கண்டேன் பாழ்நரகிலிழுத்துபோகக் கண்டேன்தானே. ௮௯௩

தானனபுண்ணாக்கர்தன்னைக்கண்டேன் தாக்கான யவர்செய்த கொடுமைமெத்த, தேனனயெனதையர் காலாங்கிநாதர் தேர்வேந்தானவரும்சொன்னதுண்டு, பானனபுண்ணாக்கர்தன்யானும்பரமனிடைகைலேதனிலகண்டேனப்பா கோனனபுண்ணாக்கர்செய்தபாபம் கோடியுண்டுலக்கில்லையென்பார்காணே. ௮௯௪

காணவேபவருக்குவாக்கினைகள் கண்கொள்ள முடியாதுவைகுண்டத்தில், தோணவேமாடுகட்டிபுண்ணாக்கியார் தொடர்வழக்குமெத்தவதிகாரத்தாராம். வேணவேவட்டிக்குவட்டிவாங்கி மேதினியிலிருந்துபலமோசம்செய்து, நாணவேநாணயங்களதிதஞ்சொல்லி நயமுடனேவஞ்சகமுஞ்செய்தார்தாமே. ௮௯௫

செய்ததினால்யெமதர்மராஜனனோர் சீருலகில்செய்ததொருபாபத்தாலே, பையவேவாக்கினைகள் செய்யவென்று நாட்டமுடன் விசார

ணையில்கொண்டுசென்றார், வைபவே குளிகைகொண்டுபக்கல் சென்றேன் பார்த்தேனேயவருக்குநடக்குந்தியமை, பொய்யெலலவுலகுதனில்சொல்லப்போனால் பொங்கமுடன்நம்பார்கள்சண்டிமாண்பே.()

சண்டியாம்சட்டைமுனிதன்னைக்கண்டேன் தகமையுடன்யவர்செய்தபாவங்கேளு, அண்டிவந்தசீஷருக்குவபதஞ்சொல்லி அனியாயமாகவல்லோநூல்மறைத்தார், கண்டிதமாய்ப்பாடல்களைசொன்னாற்போல கருமமைவுகாரணத்தைமறைத்துப்போட்டார், பண்டிதங்களில்லாமற்செய்ததாலேபாவம்வந்துநேர்ந்துதென்றுதெண்டித்தாரே

தெண்டமுடன்சட்டமுனிதன்னைக்கண்டு தேர்வேந்தரெ... ராசரண்டை, கொண்டுபோய்விட்டார்கள்கோடிதூதர் கொ... மெமதர்மராசனங்கே, அண்டையிலே தானிருக்குமடியார்தம்மை அங்ஙனவேசாத்திரத்தைப்பார்க்கசொன்னார், தொண்டுசெய்யும்முனிக்கூட்டம்ரிஷிகள்தாமும் சுருதியெனும்சாத்திரத்தைப்பார்த்தார்தாமே. அ௲அ

பார்க்கையிலேசாத்திரங்கள்மறைப்புமெத்தப் பாழாகிமாந்தரெல்லாம்சுட்டுமாண்டார், தீர்க்கமுடன்மறைபொருளைவொளித்துச்சொல்லி திடங்குலைந்துபோவதற்குதிறவுசொல்லி, சேர்க்கவேவொன்றுவிட்டுமுன்பின்னாகச் செழிப்பானவுட்பொருளையறியாமற்றான், கார்க்கவேநூலதனைக்கண்ணிற்காட்டி கருவாகத்தான்மறைத்தார்சித்தர்தாமே. அ௲௯

சித்தராஞ்சாத்திரத்தைமறைத்ததாலே சிருடனேயவர்தனக்குதீர்ப்புசொன்னார், மெத்தனவேதீவடிகொண்டுதம்மைமேன்மையுடன்நாவதனைசுடவுங்கண்டேன், சுத்தனேயான்செய்ததப்பிதத்தைகாத்துயென்னைரட்சிக்கவேண்டுமென்று, சுத்தமுடன்கைகட்டிவாய்புதைத்து சுந்திரனுநின்றிருக்கப்பார்த்தேன்தானே. ௲௱

தானனையிவ்வார்த்தைச்சாற்றப்போனால் தாரணியில்பொய்யென்றுசொல்வார்மாண்பர், கோனனையெனதையர்காலாங்கிநாதா கொற்றவனார்வாசீர்மத்தாலேயானும், தேனனகுளிகையதுபூண்டுக்கொண்டு தெளிவுடனேபரலோகங்கண்டுவந்தேன், மானனமயேஸ்பரியாள்பாதந்தொட்டு மானிலத்தைக்கண்டொழித்துவந்திட்டேனே. ()

வந்தேனேவைகுண்டம்யானும்சென்றேன் வாகுடனேசித்தர்களைக்கண்டேன்யானும், அந்தமுடன்தெண்டனைக்குவசனுமானார் அப்பனேயான்கண்டதனைகமுண்டு,சொந்தமுடன்யெங்நாளும்வைகுண்டத்தில் சுந்தரனேயிருக்கமனுதான்கொடுத்து, விந்தையுடன்வாக்கினைகள்நேர்ந்துஇங்கே வேகமுடன்தாண்டேனேபோகர்தாமே. ௲௱௨

நாமானபோகர்முனி சாற்றக்கேளும் சதாகாலம்வைகுண்டந் தன்னில்யானும், வாமானவாக்கினையின் பக்கந்தன்னில் வாகுடனேசுற்றிவரும் போதிலப்பா, நாமானகருவூரார் தன்னைக்கண்டேன் நாயகனார்செய்ததொரு வண்மைகேளும், கோமானுமரசருக்கு வாதஞ்சொல்லி கோடிபொருள்தானிழக்கச் செய்தார்தாமே. ௬௱௩

நடராஜர் விக்கிரகம்.

சொற்கதிறைற்பாபம்வந்து சேர்ந்ததாலும் செயலானபாக்கியக் காருஞ் செடுத்தகாலும், பையவேபாண்டியர்க்கு மோசஞ்சொல்லி பவெற்றேனேதில்லைபதி சென்றாரங்கே, கைதவமாய்பாண்டியனார் தேவஸ்தானம் கட்டினார்வெகுகோடி காலமப்பா, மெய்யுடனேதேவதாஸ்தானந்தன்னில் மேன்மைபெறவிக்கிரகஞ் செய்திட்டாரே. ௬௱௪

செய்திட்டாரெவர்தன்னால் செய்தாரானால் செயலானகருவூரார் தன்னைக்கொண்டு, மைதிகழுஞ்சித்தர்கருவூரார்தன்னை மன்னவனும்பாண்டியனார் தானழைத்து,வைபுகழும்சித்தரே கேளுமென்று வாகுடனேபாண்டியனார் வாக்களித்தார், பொய்புகலாபுண்ணியரே கேளுஞ்சுவாமி பொன்னாலேவிக்கிரகஞ் செய்யென்றாரே. ௬௱௫

என்றைபிலேகருவூரார் சொல்லக்கேட்டு பெழிலானமன்னவரோ தடையென்றேதான், குன்றானமலைத்தங்கம் கோடிமாற்று கொற்றவனேபெய்தனிட மெத்தவுண்டு, பன்றானபாண்டியனார் தாமுறைக்க பாலகனார்கருவூரார் வுட்கொண்டேதான், வன்றானதிரவியத்தை வாங்கிக்கொண்டு வளமுடனேகருவூரார் நடந்திட்டாரே. ௬௱௬

நடந்துமேகருவூரார் பொன்னைவாங்கி நடராசவிக்கிரகஞ் செய்யவென்று, கடந்துமேகாவேரித்தன்னைத்தாண்டி காவலனாரரண்மனையிற் றன்னிற்சென்று, தொடந்துமேநடராசர் கருவமைத்து சொரூபமுள்ளவுட்கருவை வுள்ளமைத்து, படந்துமேமெழுகாலே வுருக்கெடுத்து பாங்குபெறசிலைதனையே வமைத்திட்டாரே. ௬௱௭

அமைத்திட்டகருவதனை வுருக்கொண்டேதத அப்பனேமண்ணாலே மூசைபண்ணி, சுமைந்திடவேகருக்குருவும் வோடிப்பாய சட்டமுடன்தாள்திறந்து பாச்சியங்கே, தமைந்திடவேதங்கமதை செம்பதாக்கி தயவுடனேவிக்கிரகஞ் செய்தாரங்கே, சுமைந்திடவேதங்கமது செம்புமாக்கி சொரூபமென்றவுருவமதை மாத்திட்டாரே. ௬௱௮

மாத்திரையேசெம்பாலே வுருவமைத்து மன்னவனார்பாண்டியனு முன்னேவந்து, நேத்தியுள்ளப்ரதமையான் செய்துவந்தேன் நேர்மையுள்ளபாண்டியனே கண்டுகொள்ளு, பூர்த்தியுடன்மனதுவந்து கருவமைத்து புண்ணியனும்பாண்டியனார் முன்னேவைக்க, தீர்த்தமுடன் பாண்டியனு ராசீர்மிக்க திகழுடனேயெதிர்கொண்டு புறப்பட்டாரே.

புறப்பட்டபோதையிலே கருவூரார்தாம் பூபாலர்பாண்டிய ரவுகண்டு, சிறப்புடனேபாண்டியற்கு யெதிரேசென்று சிறப்படிவணங்கி தெண்டனிட்டு, திறமுடையசிலைபொன்று நடேசாதம் சீர்பெறவேசெய்துவந்தேன் சாமியென்ன, குறமனதாய்பாண்டியனுந் திடுக்கிட்டேங்கி கோபமுடன்சிலைதனையே பார்த்திட்டாரே. ()

பார்க்கையிலேசெம்பான சிலையைக்கண்டு பாதகனேபாண்டியனே மோசஞ்செய்தீர், தீர்க்கமுடனுன்கையில் பொன்கொடுத்தேன் திரளானபொன்னையெல்லா மோசஞ்செய்தீர், ஏர்க்கையிலேஜாதினாபுத்திதானே எழிலானசிற்பரனே வகைசெய்தீர், சேர்க்கையிலே பொன்னோடே செம்புசேர்த்து சேர்வைதனைகண்மறைக்க மறைத்திட்டீரே. கூாயக

மறைத்திட்டபொன்னதனை மோசஞ்செய்து மன்னவனேசெம்புதனைக் கைகொடுத்து, குறைத்திடவேயென்மனதை புண்ணதாக்கி குவலயத்தில்பெருமோசஞ்செய்தபாவி, வறைத்திடவேகருவூரார்தன்னையங்கே வாகுடனேசிறைச்சாலை காவலுக்குள், முறைப்படியேவதிகாரி கொண்டுசெல்ல மூர்க்கமுடன்கருவூரா ருரைத்தார்பாரே. ()

பாரேதான்பாண்டியனார் தம்மைநோக்கி பதலமுடன்வுத்தாரஞ் சொல்வாரங்கே,சீருள்ளபாண்டியனே யின்னங்கேளும் சீறியேயென்மீதில் கனல்தான்கொண்டீர், நேருள்ளபாண்டியரேயின்னங்கேளும் நேர்மையுள்ளவிக்கிரகம் பொன்னேயானால், ஊருள்ளகுடிபடைகள் சோரஞ்செய்வார் வுத்தமனேசெம்மைநிற மாக்கிட்டேனே. கூாயக

ஆக்கினேன் தங்கமதைசெம்பதாக்கி அப்பனேயொருவருந்தான் காணுவண்ணம், நோக்கமுடன்மாந்தர்களும் காண்பாரானால் நொடிக்குள்ளேகன்னமிட வெண்ணங்கொள்வார், தாக்கவேதங்கமென்ற செம்பதப்பா தாழ்மையுடன்மோசமது செய்பவில்லை, ஏக்கமின்றி செம்புதனைக் கொண்டுநீரும் யெழிலானகருவுதனை சோதிப்பீரே. ()

சோதிக்கபாரமென்ற செம்புதன்னை சுத்தமுடன் தானுருக்கிசெப்பக்கேளும், வேதிக்ககருவுதனைசெய்வீர்மைந்தா விருப்பமுடன்சு... ...நீதியுடன்வுருக்குமுகந்தன்னிலிய நீடானசெ...

துவும்தங்கமாகும், பரிதிமதிமணிபூண்டபாண்டினாரே பசுந்தங்கம்பத்தரையுமாற்றுமாமே. ௯௱௰௫

மாற்றானபொன்னதுவை கண்டான்ராஜன் மகிமையதுதெரியாமல் கோபங்கொண்டார், கூற்றானயமனென்று எண்ணங்கொண்டு கோலமுடிசிற்பரனே கொல்லச்சொன்னோம், நாற்றிசையிலிவர்போலுஞ்சித்துமுண்டோ நடுநடுங்கிகொற்றவனுஞ் சுற்றிவந்து,போற்றிகருவூராரைக்காணவென்று பூபாலராஜரவர்நினைத்திட்டாரே. ௯௱௰௬

நினைத்தபொழுதவ்வளவில் கருவூரார்தாம் நிமைப்பொழுதிலாடமதில்மையேபூண்டு, சினத்துடனேமறைபனின்று மன்னர்தம்மைசீரலுடன்பார்க்குமந்த வேளைதன்னில், சுனைபபடியில்பாண்டியனும் நின்றுகொண்டு சுந்தரனுங்கருவூரார் யெங்கேயென்ன, தனைப்புகழும்காவலர்களங்கிருந்து தகமையுள்ளசிற்பரிங் கிலையென்றாரே. ௯௱௰௭

என்றையிலேபாண்டியனுந் திடுக்கிட்டேங்கி யெழிலானபாகுகனை தேடச்சொல்லி, குன்றுமலைகடலோரஞ்சுனைபோரந்தான் கொற்றவனுமதிகாரிசொற்படிக்கு, தென்றிசையிற்பொதிகவரை துலைதேசந்தான் தொடர்ந்துமேஆராய்ந்து பார்த்தோமென்ன, வென்றிடவேவந்தவருஞ் சித்தரல்ல வேதாந்தசாமிகுரு நாதந்தானே. ௯௱௰௮

நாதனென்றால்கண்ணுக்குத் தெம்படாது நாதாந்தகுருவானால் கண்ணிற்றோற்றும், போதமுடன்சித்தான குருவதாமோ பொங்கமுடன்கைலாய பகவான்தானே, நீதமுடன்தேடுவதி லாபமென்ன நீதியுள்ளபுண்ணிபத்தால் நேர்ந்தார்நேரும், தோதமுடன்பாண்டியனும் விசனங்கொண்டு துப்பரவாய்மதிகுலைந்து மயங்கினாரே. ௯௱௰௯

மயங்கியேபாண்டியனு மாசீர்மந்தில் மார்க்கமுடன்விசனமதாய்வீற்றிருந்தான், திபங்கியேநடராஜர் தம்மைத்தானும் தில்லையெனும்பதிதனக்கு சுவாமியாக்கி, தயங்கவேதாரணிபிலுள்ளமாந்தர் சட்டமுடன்றான்றொழுது வணங்கிநிற்க, பயங்கரமாயென்னாளும் நாதர்தம்மை பாலித்தார்தேவதா ஸ்தானமாமே. ௯௨௰

தானமாம்பாண்டியனை யிந்தக்கோலம் தகைமையுடன்செய்துவைத்தான் சிற்பன்றானும், காண்மையுடன்செய்ததினால் பாபமில்லை கடந்ததொருசித்தர்களை மோசம்பண்ணி, ஈனமுடன்சாத்திரத்தைப்பிரட்டல்செய்து பேளிதங்களாகவல்லோ பாடிப்போட்டார், ஊனமவரச்செய்ததினா லிந்தபாபம் வுத்தமர்க்குநேர்ந்ததென நினைத்திட்டேனே. ௯௨௧

நினைக்கையிறேசிறப்பனுககு வுபாயதண்டம் சேர்ந்ததுவும்பார்த் திருந்தேன்சுவாமிபக்கல், பனைப்புடனேகருவூரார் கேள்விசொல்ல பயந்துமேயடியேனு மிகநடுங்கி, வினைப்பயனால்சேர்ந்ததற்கு வென்ன செய்வோம் விதிவசத்தைதப்புதற்கு யாராலாகும், தினைப்புடனேயிச்சங்கைசொல்லப்போனால் தேசத்தில்பொய்யென்பார் மெய்யென்னுரே. ௬௨௨

மெய்யானயின்னமொரு மாற்கம்பாரு மேதினியில்இராம தவர் செய்தகூத்து, பொய்யானசாத்திரத்தை மெய்யதாகப் புகட்டினார் லோகமது மாந்தற்கப்பா, துய்யமுடன்சாத்திரத்தைப் பார்த்துப்பார்த்து துறைகெட்டுமுறைகெட்டுதுன்பப்பட்டு, பையவேவெகுபேர்கள்சுட்டலைந்து பாடுபட்டுமாண்டார்கள் கோடிதாமே. ௬௨௩

கோடியாமிராமதேவர்சாத்திரத்தைக் குறிப்புடனேமெய்யென்றுவிருதாவாக, தேடியேகோர்வைகள்தான் கிடைக்குமானால் தேசத்தில்சித்தனு யிருக்கவென்று, நாடியேராமரென்றும் யாக்கோபானாநாட்டமுடன்செய்துவைத்த நூல்கள்பார்க்க, பாடியேபயித்தியங்களதிகமாகிப் பாருலகில்கெட்டலைந்தார் மாண்பர்தாமே. ௬௨௪

மாண்பானயாக்கோபு மக்கதேசன் நளினமுடன்சென்றதொரு வண்மைதன்னை, காண்பான்புல்லரிடம் சென்றுதானும் கருவானவளவுகளைக் கண்டாராய்ந்து, தாண்பானதத்துவத்தில் கடந்தோனென்றும் தகைமையுடன்சாத்திரத்தைப் பெருமைசொல்லி, வீண்பாகமற்றதோர்சாத்திரங்கள் வீணைகப்பாடிவைத்தார்வீணதாமே. ௬௨௫

வீணனசாத்திரத்தை மாராட்டமாக விருதாவில்மாண்பர்களும் கெட்டுப்போக, காணுதநூல்கள்யெல்லாம்கண்டோமென்று காசினியில்கடைமுதலும் பார்த்துமேதான், கோணமல்வெகுபேர்கள்மாண்டுபோனார் தோற்றுமலின்னமவர் நூலைத்தேடி, சாணன்றான்கண்டபொருள்போலேவாய்க்கும்சட்டமுடன்சாத்திரத்தினுண்மைதானே.

உண்மையாம்சாத்திரத்தைமெய்போல்பாடி வுத்தமர்கள்தான்மயங்கதிடுக்கிட்டேங்க, நண்மையுடன்வாதத்தைமெய்போலாக நாதாக்கள்சாத்திரங்கள் பொய்போலாக, கண்மையுடன் பாடிவைத்தேன் கருவாகத்தான் காசினியில்யாருந்தான் சொல்லவில்லை, திண்மைபெறவின்னம்வெகு கோடிகோர்வை கொட்டினேனென்றுசொல்லி கூறினரே. ௬௨௭

கூறினார்சாத்திரங்கள் சித்தர்பாலில் குறுக்குமுறைகெடுக்குமுறையனந்தங்கோடி, மீறினார்முன்பின்னுப்பாடிப்போட்டார் மிக்கா

னசாத்திரத்தினேர்மைதானும், தூறினூர்குற்றங்கள் மிகவாய்ச்சொல்லி தூற்றினூர்யாக்கோபு நூலைத்தானும், மாறினூர்சித்தர்முனிசாத்திரத்தை மாற்கமுடன்ருன்கெடுத்தார் பான்மையாமே. ௬௨அ

பான்மையுடன்வெகுமாந்தர் கெட்டுப்போயி பாழாகிசாத்திரத்தில் முழுகிப்போனூர், வான்மையுடன்யாக்கோபு செய்தபாவம் வைகுண்டமவர்தனக்கு கேள்விமெத்த, மேன்மையுடன்சாபமதுநேர்ந்ததாலே மேலுக்குமின்னமொரு பிறவிகாண, மான்மையுடன்தண்டனைகள் மிகவுமாகி மன்னருக்குமறுபிறப்பில் குரைவுண்டாச்சே. ()

வுண்டானமுறைகளையான் கண்டுவந்தேன் வுத்தமனேவுலகுக்கனிற் சொல்லப்போனூல், சண்டாளமானதொரு சிலதுமாண்பர் சார்பானபொய்யென்றுசாற்றுவார்கள், கண்டாலும்பொய்யென்று கதறுவார்கள் சதாகாலங்கருமத்துக் கேதுவாவா, திண்டானமுறைமையிது சொல்லவந்தேன் திறமானபோகரிஷி கண்டதாமே. ௬௩0

கண்டதொருசேதிமுறை யின்னஞ்சொல்வேன் கைலாசவைகுண்டப்பதியின்சேதி, அண்டமுனிசிசுபாலனவனுக்குச்சீஷன் வவன்பேருசட்டைமுனி யென்பாரப்பா, கொண்டல்வண்ணன்ராவணனூற்கிடையேசெய்து கோடிமுறைதபசிகட்கு வின்னஞ்செய்து, தண்டவமைதானிருந்து ரிஷிகள்சாபம் சாற்றினூர்சாத்திரத்தின் தண்மைதனை. ௬௩௧

தானனசாத்திரத்திற் கிடையேசொல்லித் தப்பிதங்களாகவேதான் கெடுத்துப்போட்டு, கோனனையென்தையர் காலாங்கிதம்மைக்கொண்டபடியவர்பேரில் தோஷஞ்சொல்லி, வேனனகருவெல்லாமறைத்துப்போட்டு வேதமுதல்சாத்திரங்கள் பொய்யாய்ச்சொல்லி, பானனபலவிதமாய்ப் பாடிவிட்டார் பாருலகில்சட்டைமுனி சரிதையாமே. ௬௩௨

சரிதையுடன்சித்தர்முனி கோர்வையாவும் தப்பென்றுதான்மிகவும் வெகுசாய்க்கூறி, சுருதிபொருளாராய்ந்துசூட்சாசூட்சம் சுத்தமுடன்ருனறிந்து தன்தன்நூலை, விரிவுடனேபாடிவிட்டார் வனக்கங்கோடி விண்ணுலகுமண்ணுலவுங் கொள்ளாதப்பா, பரிவுடனேசொன்னதுபோல் தானுஞ்சொல்லிப் பட்சமுடன்ருமுலாத்தார் மாணுக்காமே. ௬௩௩

மாணுக்கர்வின்னூலை மெய்யென்றெண்ணி மானிலத்தில்வெகுநாளாய்கண்டாராய்ந்து, வீணுகசாத்திரத்தின்கோர்வைபார்த்துவிருதாவாய்சுட்டலைந்து பொருளுங்தோற்று, கோணுமல்மருந்தினது பாகம்காணூர் குவலயத்தில்மெய்ப்பொருளை பொய்ப்பொருளதாக்கி, வாணுளைநான்கழித்து மட்டிமாண்பர் மதிகெட்டுநின்றூர்கள் மகிமை ௬௩௪

பாரேதான்முப்பூவைக் கெடுத்துப்போட்டார் பலபலவாம்நூல் தோறும் பாடிப்போட்டார், நேரேதான்விதிமுறைகள்யாவுங்கூறி விதிமுடிக்குமுறையனைத்துங் குறைத்துப்போட்டார், சீரேதான்சாத்திரத்தை மெய்யென்றெண்ணி சிறப்புடனேமுப்பூவை முடிக்கவென்று, கூரேதான்சட்டைமுனி மெய்யாய்ச்சொல்லி குறிப்புடனே நூல்தனை மாத்திட்டாரே. ௯௱௫

மாத்தியேகலவரங்கள்மிகவுண்டாக்கி மன்னவர்கள்தான்மபங்கமரைத்துச்சொல்லி, நேத்தியுடன்பாடல்களைமெய்போல்சொல்லிநேர்மையுடன்திரவியங்கள் பாழாய்ச்செய்து, தூத்தியேவாதத்தை மெய்போல்சொல்லி முறைபோடுபொய்சொல்லித் துகளகற்றி, சரித்திரத்தைப்பாடினதால் சட்டையோர்க்கு சாபமுடன்வைகுண்டப் பதியில்தீதே. ௯௱௬

தீதானசாத்திரத்தைக் கெடுக்கதாலே தீங்குமிகநேர்ந்துசங்கே வைகுண்டத்தில், நீதமுடன்வாக்கினைகள் மிகவுண்டாகி நித்தியமும் வைகுண்டச்சார்புதன்னில், காதமதுவரண்வாசல் கோட்டைக்குள்ளே கால்நடையாய்தானடந்து சுத்திவந்து, போதமுடன்விசாரணைக்குத்தீமுன்பாக பொங்கமுடன்கொண்டுவந்து நிறுத்தினாரே. ௯௱௭

நிறுத்தையிலேசட்டைமுனிக் காகனேயம் நிருதியுடன்முன்செய்தார்ஊசியாலே, திறுத்தமுடன்நாவதனி லூசிகொண்டு திகழுடனேவுள்ளுக்கில்சுட்டாரப்பா, பருத்தமுள்ளவாக்கினைக ளில்லைகண்டேன் பாழ்நரகுமவருக்கு யில்லையப்பா, பொருத்தமுடனவர்தனக்குப் புத்திசொல்லிப் பொங்கமுடன்மறுவாசல் கொண்டுசென்றாரே. ()

சென்றுமேயவர்தனக்குப் பதமமர்த்தி சிறப்புடனேயென்னுருங் கைலைதன்னில், குன்றின்மேல்காவலுடன் ரிஷிகள்பக்கல் கொற்றவனுமெமதர்ம ராஜன்பக்கல், வென்றிடவேதவயோக புஷ்பசாங்கம் வேகமுடன்முனிவருக்குப் பூசைமாற்கம், அன்றலுடன்சதாகாலமங்கிருக்க வவர்தனக்குகட்டளைகள் விதித்திட்டாரே. ௯௱௯

விதிக்கையிலே யின்னமொருவதிசயங்கள் வினவுடனே யாமுனைப்போமின்னங்கேளு, துதித்தலுடன் மச்சமுனிதன்னையானும் துப்புரவாய்வைகுண்டப்பதியில்கண்டேன், மதிக்கவேசாத்திரத்தை மறைவுபேசு மகத்தானநூல்களையே கெடுத்துப்போட்டார், பதிக்கமுடன்மாந்தர்கட்குப் பொய்பொய்யாகப் பாடிவிட்டபடியாலே கர்மமாச்சே. ௯௱௰

ஆச்சென்றபடியாலே நூல்கள்தம்மை அப்பனேபலபேருஞ்சொல்லக்கேட்டு, கூச்சலுடன்சித்தர்முனி ரிஷிகள்வாக்கு குறையாமல் பாடிவிட்டா ரனந்தங்கோடி, மேச்சலுடன்முன்பின்னாய் சொன்னதாலே மேதினியில்மாந்தரெல்லாஞ் சுட்டலைந்து,பாச்சலுடன்மாண்டார்கள் கோடாகோடி பலபலவாய்கெட்டலைந்தோர்கோடியாமே.()

கோடிபேர்சாத்திரங்கள்பார்த்துமென்னகுவலயத்தில்கைமறைப்புயில்லாமற்றான், நாடியேசாத்திரங்கள்மிகவாராய்ந்து நாணமுடன்மெய்போலப் பாடிவிட்டார், ஓடியேகோர்வைதான் மெய்யென்றெண்ணி வுத்தமர்கள்கெட்டவர்கள் லக்கோயில்லை, தேடியேதிகைத்துமிக வாடிப்போனார் தேசத்திலதிகமுண்டுதெளிவுதாமே. கூசஉ

தெளிவானசாத்திரத்தைப் பாடியல்லோ தேசத்தில்சீர்த்தியுடன்பெயர்தான்வேண்டும், நெளிவானநூலதனைச் செய்யாமற்றான் நுணுக்கமெல்லாமறைப்பொருளாய்ச் சொன்னதாலே, ஒளியானசித்தர்முனிதங்கள்பேரில் ஓகோகோமோசமென்று நூலுஞ்சொல்லி, பளியானசாத்திரத்தைப் பாடிவைத்தார் பாலருக்குப்பாபம்வந்து லபித்துதாமே. கூசந

தாமானமச்சமுனிதன்னைத்தானும் தண்மையுடன்வைகுண்டப்பதியிலப்பா, கோமானுமெமதர்மராசனுண்டே கொற்றவனைத்தானழைத்துக் கொடுதான்போனார், பூமானின்மச்சமென்ற முனிவர்தம்மை புகழுடனேகேட்கலுற்றா ரந்தநேரம், வாமானமச்சமுனிகூறும்வண்ணம் வாகுடனேகிட்டிருந்து கேட்டிட்டேனே. கூசச

கேட்கையிலேவுத்தரவிடையுமில்லைகெடுதியுடன்வாக்கினைகள் கொஞ்சந்தானும், நீட்கமுடன்றான்கொடுத்து தீர்ப்புசெய்து நீதியுடன்யெமபுரத்துவாசலுண்டே, பூட்கமலதடாகமதில் காவல்வைத்து பொங்கமுடன்சங்கரற்குப் பூசைக்கப்பா, வாட்கமலபுட்பமது தான் பரித்து வளமுடனேறான்கொடுக்க நீதியாச்சே. கூசரு

ஆச்சப்பாயின்னமொரு வதிசயங்கேள் அப்பனேயானறிந்தவரைக்குஞ்சொல்வேன், வாச்சலுடன்தட்சணாமூர்த்திதன்னைவைகுண்டப்பதிதனிலே கண்டேன்யானும், கூச்சலுடன்கிங்கிலியர் தூதர்தாமும் குய்யோதான்முறையமென்றுவபயமிட்டு,பேச்சுடனேதக்ஷணாமூர்த்தியானாப் பெருமையுடன்விசாரணையில் பார்த்திட்டேனே. ()

பார்க்கையிலேதட்சண மூர்த்தியாரும் பாடல்களைவெகுசாகம ரைத்துப்போட்டார், சேர்க்கமுடன்வாதத்தைமுன்பின்னாகச்செப்பி னார்திரட்டுமுத லுளவுமார்கம், மூர்க்கமுடன்மருந்துவகை பாஷா ணத்தை முன்பின்னாய்பேர்மாற்றி பேருரைத்தார், தீர்க்கமுடன்சொ ன்னதினால்மாந்தர்யாவும் தேசத்தில்சுட்டலைந்து கண்கெட்டாரே.()

கெட்டுமேபோனாலும் போவதன்றிக் கெடியானபாஷாண மாற் கந்தன்னை, தொட்டுமேதானுடி மருந்துக்கிய தோராயமாகவல்லோ முழுதும்கெட்டு, வட்டமுடன்நோய்புகலும் பாண்டமாகி மானிலத் திலிறந்தவர்கள் கோடாகோடி, மட்டமென்றமருந்துகளுஞ் செய்து வல்லோ மன்னவரும்பயித்தியங்கொண் டேகினாரே. கூசஅ

ஏகவென்றால்பாபமது வதிகமாகி யெழிலானநோயதுவும் சொ ல்லப்போமோ, பாகமுடன்செய்பாகம் கெட்டலைந்து பாங்குடனே சாத்திரமும்பொய்யதாகி, தாகமுடன்பாஷாண வீறினாலே தாரணி யில்சடலமது யிழந்தாரங்கே, மேகமென்றமருந்தினது வேகத்தாலே மேனியெல்லாம்புண்ணாகி ரோகமாச்சே. கூசகூ

ஆச்சப்பாதட்சணாமூர்த்திசெய்த அரும்பவத்தையெமதர்மராஜ ன்தானும, மாச்சலுடன்கண்டறிந்து மூர்த்தியாற்கு மகாதீர்ப்புகொ டுப்பதற்குமனமுமானார், பூச்சலுடன்சாத்திரத்தைக் கெடுத்ததாலே புண்ணியனேவுந்தனுக்கு சொற்பதண்டம், தீச்சலுடன்சிவயோகி ரி ஷிகளுக்கு சிவாலயமடபதிக்கு காவல்தானே. கூடுய

தானானகாவலது யிருக்கவென்று தண்மையுடன்யெமதர்மராஜ ன்றானும், கோனானதட்சண மூர்த்தியாற்கு கொடுந்தவசிமுனியோ ற்கு வாளதாக, பானானபரமசிவன் பட்சத்தாலே பாலித்தாரென்று னும் வைகுண்டத்தில், தேனானதட்சண மூர்த்தியாரும் தேவனிட கோட்டைக்குள் ளிருந்திட்டாரே. கூடுக

இருந்தாரேகைலங்கிரி வைகுண்டத்தில் யெழிலாகசுவாமிகட்கு த்தொண்டனாகி, பொருந்தவேயவர்களிடம் பூசித்தேதான் பொங்க முடன்சதாகாலம் வைகுண்டத்தில், திருந்தமுடன்தாமிருந்தார்தட் சணயன் தீரமுடன்கதைதன்னையே செப்பவென்றால், வெரிந்திடவே லோகத்து மாண்பரெல்லாம் வெறும்பொய்யாமென்றுசொல்லி மே வுவாரே. கூடுஉ

மேவவேயின்னமொருதெரிசனங்கேள் மேன்மையுடன்யான்கண்ட வரைக்குஞ்சொல்வேன், காவலுடன்ரோமரிஷி தன்னைக்கண்டேன்க ருவாகவைகுண்டக் தன்னிலப்பா, ஆவலுடன்வவர்பக்கல்யானுஞ்செ ன்றேன் அப்பனேகேள்விகளனேகமுண்டு, பாவமெனும்புண்ணியங் களிரண்டைத் தானும் பராகரித்து கேள்விகளுங் கேட்கலாச்சே,

கேட்கவென்றால்வவர்மீதில் குற்றமெத்தக் கேள்விகளுமங்குண் டுசொல்லொண்ணாது, நீட்கமுடன்சாத்திரத்தைவெகுவாய்ச்சொல் லிநீடாழியுலகமெல்லாமயங்கப்பண்ணி, நாட்கமுடன்ரோமரிஷிகோ ர்வையாவும் தண்மையுடன் முன்பின்னாய்ப்பாடிவைத்தார், மீட்கமுட ன் கோர்வைதனில் நாலுகாப்பு மாளவே முன்பின்னாய்ப் பாடி னாரே　　　　　　　　　　　　　　　　　　　　　　௬௫௪

பாடினார்பரிபாஷைபாவுஞ் சொல்லிபாடல்களில்கைமறைப்புவ திதஞ்சொல்லி, மூடியேகருவளவுமுப்பின்மார்க்கம்மூதண்டபூனீரி ன்போக்குபாவும், தேடியேபரிபாஷைதிரட்டையெல்லாம் தெளிவ றவேசெய்பாதமார்க்கம் தன்னில், கோடிமனுசுட்டலைந்து கெட்டுப் போனார்குவலயத்தில்பாவம்வந்து நேரலாச்சே　　　　　　௬௫௫

நேரவேபாவத்தால் கருமந்தங்கி நெடிதானவைகுண்டப்பதியிற் சென்று, கூரவேயெமதர்மராஜன்பக்கல், கொற்றவனும்ரோமரிஷித ன்னைத்தானும், பாரமுடன் சாத்திரத்திரத்தைத்தலைமேல்வைத்து, பாங்குடனேதூதர்கொடுசென்றுபோனார், மாரலுடன்வைகுண்டப்ப தியில்தானும்மார்க்கமுடன்குற்றமதுநேமித்தாரே.　　　　　௬௫௬

நேமித்தார் குற்றமதை நேரதாக நெடுங்காலம்தானிருக்க வி டையுண்டாச்சு, சாமியுடபக்கலிலே யனேகஞ்சித்தர் சதகோடிசூரி யர்போல் கொண்டுவந்தார், வாமியுடன்வைகுண்டப்பதியில்தானும் வாகுடனேயம்பாளும்தானிருக்க, பூமிபிடங்கொடுவந்தசித்தர்தாமு ம் புகழ்ச்சியுடன்கோடியுடன்லக்கில்லைதானே　　　　　　௬௫௭

தானையின்னம்வெகு வதிசயங்கள் தண்மையுடன் சொல்லுகி றேன்தரணியோர்க்கு, வேனைவிலாடரிஷிதன்னைக்கண்டேன் வியா சமுனிசுநமுனி தன்னைக்கண்டேன்,கோனை குருமுனிதன்னைக்க ண்டேண்கொற்றவனார்போகரிஷிதன்னைக்கண்டேன், தேனைதிருமூ லக்கூட்டத்தார்கள் தெய்வபுரபதிதனிலேகண்டேன்பாரே　௬௫௮

பார்த்தேனேசிவவாக்கியர்தன்னைக்கண்டேன் பாலகனுமிடைக் காட்டார்தம்மைக்கண்டேன், மூர்த்தவனும்வகப்பேயர்சித்துதம்மை

முடியோடுஞ்சடையோடும்யானுங்கண்டேன், தீர்த்தகிரிதனிலிருந்த காசிநாதர் தீறமுடன்கொண்டுவரக்கண்டேன்யானும, ஏர்த்திடவே வரரிஷி தன்னைக் கண்டேன் யெழிலான சுந்தரனாக கண்டேன் தானே ௯௫௬

கண்டேனேயின்னம்வெகுசித்துதம்மைகைலாயபர்வதமாமவை குண்டத்தில, அண்டமுனிராட்சதர்கள்கோடாகோடிஅவனியிலேயி ருந்துவந்தோர்சொல்லொண்ணாது, கொண்டல்வண்ணன்மைத்துன னும்தருமராஜன் கொற்றவனும்தம்பிமுதல்யாவுங்கண்டேன்பண்டுள வமாலையணி சத்துருகாயன்பாவையெனும் சீதைதனைக்கண்டேன் தானே, ௯௬௰

கண்டேனேராவணனுர் சூர்ப்பனகைதானும் கைலங்கிரிவைகுண் டப்பதியிலோரம், தொண்டரொனும் அறுபத்து மூன்றுபேர்கள்தோ ராதபரவனுச்சியருங்கண்டேன், விண்டேனேவிண்ணுலகில்சேதியெ ல்லாம் விருப்பமுடன் நானறிந்தேன் சிலதுகாலம், கொண்டல்வண் ணனச்சுதனுமங்கிருக்ககோபாலன்ரூபாருங்கண்டிட்டேனே. ௯௬௧

கண்டிட்டேன் வைகுண்டப்பதில்தானும் கரியமால்சேனைபது கூட்டந்தன்னை, தொண்டிட்டஆள்வார்கள்கூட்டந்தன்னில் தொட ர்ந்துமேயவரிடமாம்பக்கல்சென்றேன், விண்டிட்ட ஆள்வாதிசாத்தி ரங்கள்வெகுமோசந்திருவனுடன்முன்மின்னாக, துண்டிட்டசாத்திர த்தில்தோஷமுண்டு தூராதிசிவன்தனைதோஷித்தாரே ௯௬௨

தோஷித்துசிவன்தன்மேல்தோஷஞ்சொல்லி தோராபமாகவல் லோ நூலைமாற்றி, பாஷியங்கள்தோருமல்லோபரமன்றன்மேல் பாடி வைத்தார்தூஷணைகள் மெத்தவுண்டுகாசினியிலாயிரத்தெட்டுசிவால யங்கள் கட்டினார்வெகுகோடிமாந்தரப்பா, பூசிதமாம்திருப்பதிநூற் றேபெட்டுபொங்கமுடன்கட்டினார்சூட்சந்தானே ௯௬௩

தானைசூட்சாதிதேவஸ்தானந்தானணியில்சொற்பமதாய் கண் டதுண்டு, பானைபரமசிவன்சிவாலயங்கள் பார்க்கவென்றால்கணக் கில்லைலக்கோயில்லை, தேனைவாதிசேடந்தன்னாலும் தெளியாதுநா வில்லைபாவுமில்லை, மானைபரமபதிமெத்தவுண்டுமானிலத்தில்வாயா து மாந்தர்கேளே ௯௬௪

கேளேதானசிவன்றனையே பழித்தலாலும் கீர்த்தியுடன்சாத்திர த்தைகூறலாலும், நீளேதான்வைகுண்டப் பதியிலப்பா சேர்ந்துதே வெகுகோடிதெண்டந்தானும்,மீளவேசொற்பனமாம்வார்க்கினையம்மீ ண்டுதே துள்வார்கைசீஷவர்க்கம், சூளவேயவர்பக்கல்யானிருந்துசு ந்தரனேயதிசயங்கள்பார்த்திட்டேனே ௯௬௫

பார்த்திட்டேன்வைகுண்டப்பதியில்தானும் பாங்குடனேவதிசயத்தைச்சொல்லப்போனால், பூர்த்திட்டபாரினிலேபொய்யென்பார்கள் பொய்யென்பார்மெய்யென்பாராருமில்லை, சார்த்திட்டவைகுண்டச்சரிதைதானும் தேர்ந்தவரையானுரைத்தேன்தெளிவதாக, மார்த்திட்டமாகவேதான்கைலைதன்னில் மகாகோடிவாக்கினைகள்மெத்தவுண்டே. ௯௬௬

உண்டானவதிசயங்களின்னஞ்சொல்வேன் உம்பர்பிரான்பதியினதுகாதையாவும், திண்டானகிருஷ்ணவதாரந்தானும் திகழுடனே வெகுகோடிமாதர்தம்மை, பண்டானவையகத்தில்கற்பழிந்து பாவையரைலீலையதுசெய்ததாலும், கண்டேனேவைகுண்டப் பதியில்தம்மை கரியாமாலாக்கினைகள்சொற்பமாமே. ௯௬௭

சொற்பமாமெமதர்மராஜன்றானும் தொல்லுலகில்ஒருவரையும்விட்டதில்லை, அற்பமாமாக்கினைகள்செய்ததுண்டு அவனியிலேயாருந்தான்மீண்டதில்லை, கற்பழிந்தமாதருக்குமிந்தநீதிகர்த்தனதுவைகுண்டப்பதியில்தானும், முற்பவத்தில்செய்தவினைபாவத்தாலே முனுமேவைகுண்டநீதிகாணே. ௯௬௮

காணவென்றால்பிரபஞ்சமாய்கைப்பா கண்டவர்கள்விண்டவர்களாருமில்லை, வேணபடிசாத்திரத்தைமிகவறிந்து வேகமுடன் காலாங்கிபாதம்போற்றி, நாணவேசித்தர்முனிதானடங்க நாதாந்தக்குளிகையதுபூண்டுகொண்டு, கோணவேசொர்க்கபதியானுஞ்சென்று தோற்றமுடன்கண்டுவந்தேன்போகர்தாமே. ௯௬௯

தாமானவையகத்தில்மாண்டமாண்பர் தாரணியில்வைகுண்டப்பதியில்தானும், கோமானும்அரசர்முதல்குருக்கள்தாமும்கோலமுடன்ராஜாதிராஜர்தாமும், பூமானும்சீமான்களெவரையுந்தான்பொன்னுலகப்பதிதனிலேகாணலாகும், நாமானசடலமதுமண்ணேயாகும் நாதாந்தக்காற்றதுதானழியாதென்றே. ௯௭௰

அழியாதுமாண்டவர்களெல்லாருந்தான் வப்பனுடபதிதனிலேகாணலாகும், அழியாதுவாத்மந்தானெந்நாளும் அமராதுபதிதனிலேகாணலாகும், அழியாதுமாண்டவர்களொருகாலந்தான்அப்பனேயொருகாலமெழுந்திருப்பார், அழியாதுவொருகாலமவர்தமக்கு அப்பனேநீதியுண்டுகேள்வியுண்டே. ௯௭௧

கேள்விக்குயுத்தாரஞ்சொல்லவேண்டும்சொல்லாட்டால் நீதியுடனாக்கினையுண்டு, தாழ்மையுடமெமதர்மராஜனுக்கு சாங்கமுடன்

நீதிமொழியுரைக்கவேண்டும், ஏழ்மையுடன்போலிருந்துநீதிபேசிநீதியுடனவர்பாதம்பணியவேண்டும், வாழ்மையுடனுன்மீதில்கிருபைவைப்பாராவாழலாம்சொற்கபதிவாழலாமே கூஎஉ

வாழ்வுதான்வையகத்தில் பொய்யேவாழ்வு வாழ்நாளும்வீணாளும் பாழ்நாளாகும், தாழ்வுடனேசாத்திரத்தை மிகவாராய்ந்து சாங்கடன்ஞானேபமிகவுஞ் சொல்வார், கேழ்மையுடன் மசானவைராக்கியஞ்சொல்வார் கேடுவரும்பாவவினை யறிபார்தாமும், ஊழ்வினைகள் தாமறிந்துநடந்துகொள்வோர் வுத்தமனேலோகத்துமாந்தராமே

மாந்தராம்சடலத்தை மெய்யென்றெண்ணி மாநிலந்தில்வெகு கோடிபாடுபட்டு, சாந்தமுடன்தேகமதைநிறுத்தவென்று சதாகாலம் வையகத்திலிருப்பதாக, போந்தமுடன்காராதிகற்பந்தன்னை பொங்கமுட னுண்டுமல்லோகற்பங்கொண்டு, வேந்தர்களும்விதிகாசவித்தை யெல்லாம் வேண்டியேவிருப்பமுடன்படித்திட்டாரே கூஎச

படிக்கவேவஷ்டாங்கங் காணவென்றும் பாருலகில்வசியனுயாகவென்றும், துடிக்கவேவாதமதை யறியவென்றும் துப்பரவாய்முப்பூவை முடிக்கவென்றும், மடிக்கவேசரக்குக்குச்சத்ருதானும் மார்க்கமுடன்கண்டறிந்தசித்தனென்றும், வெடிக்கவேசமாதிக்குளிருப்பேனென்றும் வேதாந்தம்பேசியல்லோவிழலாய்ப்போசசே கூஎரு

போச்சென்றுவிடுகாதே யின்னங்கேளு புதுமையுடன்கண்டவையாமுஞ்சொல்வோம், மாச்சலுடன்மோகனங்களறியவேண்டுமாராட்டமானதொருவெழுத்தைப்பாரு, கூச்சலன்றிசமாதிதனி லிருந்துமென்னகோடானகோடியுகங்கண்டுமென்ன, மூச்சடங்கிபோனபின்புஒன்றுமில்லைமுனிகோடிதவசிகளுமாண்டார்தாமே கூஎசு

தாமானகோடியுகமிதுவேயாகும் தாக்கானசித்துகளுமிப்படியேயுண்டு, நாமானபடியாலேசத்தலோகம்நாதாக்கள்போக்குமுச்ல்யாவுங்கண்டோம், நேமமுடன்சித்தரெல்லாமிப்படியேதானும்நேர்மையுடன்நிஷ்டையிலே யிருந்துமாண்டார், வாமமுடன்பூலோகவதிசயங்கள் வகுத்துரைத்தார்வண்மைகளுமனேகந்தானே கூஎஎ

கானேதான்ராஜாதிராஜரெல்லாம் தாரணியில்சாத்திரத்தைமிகவறிந்து, மானமுடன் சிவயோகநிஷ்டைநின்று மாநிலத்தில்தவசுபெரியோரைப்போல, தேனமிர்தங்கொண்டுமல்லோவாசிபூட்டி தேசத்திலிருந்தார்கள்சித்தரெல்லாம், மேனகையைக்கண்டுமல்லோமையல்கொண்டுமேதினியில்மாண்டவர்கள் கோடியாமே. கூஎஅ

கோடியாஞ்சித்தர்முனிமாந்தரெல்லாம் குவலயத்தில்மண்ணு சைபெண்ணுசையாலே, தேடியேசெம்பொன்னுசையாலும் திடங்குலேந்துமாண்டார்கள்மாந்தரெல்லாம், நாடியேநாதாந்தச்சித்தருக்கு நல்லவழியொருவருக்குங்கிடைப்பதில்லே, பாடியேநூல்தனேயேபார்த்துபார்த்து பரதவித்துயிருந்தார்கள்கோடிபேரே. ௯௭௯

பேரானதத்துவங்களறிந்துமென்னபேருலகில்ஞானிகளாயிருந்துமென்ன, நேரானநல்லவழிதெரிந்துமென்ன நேர்மையுடன்அறியாமல்யிருந்துமென்ன, கூரானசாத்திரத்தைக்கற்றுமென்ன குவலயத்தில்வெகுகாலமிருந்துமென்ன தூரானகெட்டவழிசென்றுமென்ன துறையோடுகொலம்வரைபொன்றுங்காணே. ௯௮௰

காணவேபிரபஞ்சவாழ்க்கைபாவும் கருத்துடனே கொண்டவர்க்குவொன்றுமில்லே, நோணவேநூலாதிநூல்கள்தோறும் துடர்ந்துமேசடலமதையிறக்கவென்று, மாணவேசித்தர்முனிரிஷிகளெல்லாம் மாராட்டமாகவல்லோநூல்செய்தார்கள், வேணவேகாலாங்கிநாதர்தம்மால் வேதமுடன்கண்டறிந்தவார்சொல்வேனே ௯௮௧

சொல்லவென்றால்பூலோகமிடங்கொள்ளாதுசுருதிபொருள்சாத்திரங்கள்மிகவும்பொய்யாம்,வெல்லவேமெய்யென்றும்புகலவில்லேவீணிலேசாத்திரத்தைப்பாடிப்போட்டார், அல்லலுடன்தேகாதிதேககாலம் அலேச்சலுடன்சாத்திரத்தைப்பார்த்து மாண்டார், கொல்லானதுவீதிபிலேவூசிவிற்ற கொடிதானகதைபோலஎன்முன்னுச்சே. ()

ஆச்சென்றதேசமதுநிந்யாநிந்பம் அப்பனேயாமறிந்தவரைக்துஞ்சொல்வோம்,மூச்சடங்கினதைபர்காலாங்கிநாதர் மூன்றுயுகங்கோடிவரைசீனந்தன்னில், பேச்சொன்றுமில்லாமல்சமாதிதன்னில் பிணம்போலயிருந்தாரேசிலது காலம், வாச்சலுடன்வாசிதனே அடக்கிக்கொண்டு வைபகத்தில்சிலதுநாளாயிருந்திட்டாரே. ௯௮௩

இருந்திட்டகாலாங்கிதம்மைப்போலவெழிலானசித்தர்முனிராதரெல்லாம், பொருந்தியேபூவுலகில்வாசிகொண்டு பொன்னுலகநாட்டுக்குப்போனுர்தாமும், திருந்திபேபொருவருந்தானிருந்ததில்லே சிறப்புடனேவைகுண்டஞ்சேர்ந்தாரங்கே, வருந்தியேயழைத்தாலும்வருவதுண்டோ வருங்காலந்தானிருந்தால்வருவதுந்தானே ௯௮௪

சீனபதியில்கமலமுனிசமாதி அதிசயம்.

தானேதானின்னமொருபுராணஞ்சொல்வேன் தாக்கானசீனபதிதன்னில்யானும்,காலனன்கமலமுனிசமாதிபக்கல் காத்திருந்தேன்

வெகுகோடிகாலமப்பா, தேனனகமலமுனி சீஷரென்பேர் தேவனி டசமாதியிடங்கண்டேன் பானும், பானுனசமாதிக்குமுன்னதாகபட் சமுடன் தாமிருந்தார்பண்பதாமே. ௬அரு

பண்பானசீஷவற்கந்தன்னேக்கண்டேன் பட்சமுடனுனவனைக் கேள்விகேட்டேன், திண்பானசீஷர்களுமதிதஞ்சொன்னர் திகழான வதிதமதுயென்னவென்றால், வண்பானமுதற்சீஷன்சொன்னமார்க்க ம் வாகுடனேவருஷமதுகொண்டுசெய்தேன், கண்பானவிரண்டாங் கால்சீஷன்தானும் கனமுடனேமுன்றுண்டுதொண்டனுமே. ௬அ௬

தொண்டனும்மூன்றுங்கால்சீஷந்தானும் சோர்வின்றி நாலாண் டுதன்னில்தானும், விண்டமுடன் நாலாங்கால்சீஷன்றானும் விருப்ப முடன்நாலாவதாண்டுமட்டும், கண்டிதமாய்ஐந்தாங்கால்சீஷன்தானு ம்கருத்துடனே வாராண்டுதன்னில்மட்டும், அண்டிடவேஆறாங்கால் சீஷன்றானும் அப்பனேஐயிரண்டுபத்துமாண்டே. ௬அஎ

பத்தானஏழாங்கால்தன்னிலப்பா பாகமுடன்மூவைந்துமூண்ட தாக,சித்தானஎட்டாங்கால்தன்னில்தானும் சிறப்புடனேபஞ்சதசம் மாண்டுதானும்,சுத்தானசித்தர்களும்தொண்டுசெய்துசூழ்ந்துமேவெ குகோடிகாலம்பார்த்து, வத்தானசமாதியிடங்காத்திருந்தார் வாகுட னேகமலமுனிவாக்குகேளே. ௬அஅ

வாக்கானகமலமுனி சித்துதாமும் வாகுடனேசமாதிக்குபோகு ம்போது, நோக்கமுடன்கமலமுனி சித்துதாமும் நுணுக்கமுடன்தா மறிந்தவித்தையெல்லாம், பாக்கமுடனுபதேசஞ்செய்பவென்று பா ண்மையுடன்சித்தர்களையழைத்துநாமும், சோக்கமுடன்யவர்க்களிக் கவேண்டுமென்று சுந்தரரைதாமழைத்துகூறினரே. ௬அ௬

கூறினர்சீஷர்களேகேளுமென்றார் குவலமுடிமன்னரெல்லாமெ ன்னேக்காத்தார், தேறினதோர் சீஷர்களெட்டுபேர்கள் தெளிவுடை யபாலர்களுமாகையாலே,காரியங்களானதொருவித்தைமார்க்கம் கரு த்துடனேகேளுமென்னகுருவுதானும், பாரினிலேஇதிகாசத்தைவிட் டு பாழானவித்தைதனேகேட்டார்தாமே. ௬௬௰

கேட்கையிலேஒருசீஷன்வசியங்கேட்டான் கேடுள்ளஒருசீஷன் மோகனமுங்கேட்டான், நீட்டமுடனொருசீஷன்வாதங்கேட்டான் நி னவானவாதத்தைபோதியென்றான், வாட்டமுடனொருசீஷன்பிரண வத்தைக்கேட்டான் வாகுடனேபிரணவத்தைவுச்சரிக்க, நாட்டமுட னொருசீஷன்ஞானங்கேட்டான் நலமானகுளிகைபதுகேட்டார்தமோம

கேட்டாரேகுளிகையதுமார்க்கந்தன்னை கெவனமுடன்குளிகையதுவேண்டுமென்றான், பூடடமுடனொருசிஷன்புளிதங்கேட்டான் புகழானலோகத்தின்வுளவுகேட்டான், காட்டமென்றவொருசீஷன்நிதியுங்கேட்டான் கருவானதயிலத்தின்மறைப்புங் கேட்டான், மாட்டிமைபாபொருசீஷன்தவத்தைக்கேட்டான் மார்க்கமுடன்பலபலவாய்க்கேட்டார்பாரே. கூசுஉ

பாரேதான்சீஷவர்க்கங்கேட்கும்போது பலபலனாமதுறையோடுமுறைமையெல்லாம், நேரேதான்குருவானகமலந்தாமும் நேர்மையுடன்சமாதிக்குச்சொல்லுமுன்னே, கூரேதான்அவரவர்க்கு தக்கயாகம் குறிப்புடனேதாம்கொடுந்தார்கமலர்தாமும், வூரோதான்சீஷவர்க்கமானபேர்க்கு உகமையுடன்ஞானோபமோதிட்டாரே. கூகூச

ஓதவேயுகங்கோடிகாலந்தானும்வுத்தமனும்சமாதிதனிலிருந்தாரங்கே, நீதமுடன்சமாதிக்குபூசைமார்க்கம் நேர்மையுடன்நாள்தோபம்செய்திருந்தார், காதமெனும் சீனபதிமூன்றுகாதம் கமலமுனிதன்னையவர்மாந்தரெல்லாம், வேதமுடன்சிவபூசைமார்க்கத்தோடு வேள்விகளுமனேகமதாய்நடத்துவாரே. கூகூச

நடத்துகையில்சீனபதிசென்றபோது நாதாந்தகாலாங்கிநாதர்தம்மை, திடத்துடனேகுருதனையேகாணவென்று தீரமுடன்சமாதிக்குசென்றேன்யானும், மடபதிபாமாயிரம்பேர்சீஷவர்க்கம் மக தானகுருதனையேகாணவென்று, வடகோடிகானகத்தில்மாந்தரெல்லாம்வளமுடனேசமாதிபக்கலிருந்தார்காணே. கூகூரு

காணவென்றாலவர்பெருமையாருக்குண்டு காசியினிலேயெல்லாமொருவர்க்குண்டோ, வேணபடிமகிமையதுபாருக்குண்டு வேதாந்தகாலாங்கிநாதாக்குண்டு, நீணமுடன்சமாதி தனைக்காணவென்று நேர்மையுடனங்கிருந்தேன்சிலதுகாலம், தோணவேயெனதையர்காலாங்கிக் கிசோடசமாமுபசாரஞ்சொல்லொண்ணாதே. கூகூசு

சொல்லவென்றால்ராஜாதிராஜர்க்கில்லை சூரியாதிசந்திராதிபவருக்கில்லை, வெல்லவென்றாலிவர்போலும்சித்துமுண்டோ மேதினியில்கண்டதில்லைசமாதிசித்து, புல்லவேதிரிகாலபூசைமாற்கம போற்றுவார்க்காலாங்கித்தம்மைத்தானும், அல்லவேபவர்கிருபைவேண்டுமென்றுவனேகமாம்கோடிபேர்வருணிப்பாரே. கூகூஎ

வருணமுடன்சித்தாதிசித்தரெல்லாம் வளமையுடனவர்தனக்கு வணக்கஞ்சொல்வார், அருணனைப்போல்ரிஷிகள்முனிசித்தரெல்லாம் அன்புடனேகாலாங்கி சரணஞ்சொல்வார், கருணையுடன்வவர்பாதம் தொழுதுநிற்பார் காவலுடன்சித்தர்களுஞ்சமாதிபக்கம், தருணமது சமாதிக்குமுன்னதாகதாழ்மையுடன்காத்திருந்தசித்துதாமே. கூகூஅ

சித்தானகாலாங்கிக்கிருபையாலே சென்றேனேகுளிகையதுபூண்டுக்கொண்டு, சத்தானலோகமெல்லாஞ்சுத்திவந்தேன் சாங்கமுடன்காணதகாட்சியெல்லாம், முத்தானகாண்டமதுமூன்றுக்குள்ளே முடிவுபெறப்பாடிவைத்தேன்லோகமாற்கம்-நித்தமுமேகாலாங்கியாமுந்தானும் நிதந்தோறும்பூசையிலேநினைக்கின்றேனே. கூகூகூ

நினைக்கையிலேகாரியங்களெல்லாஞ்சித்திநீனிலத்திலவர்போலுஞ்சித்துமுண்டோ, மனைதோறுங்காலாங்கி நூலைப்பார்த்து மாற்கமுடன்வர்ச்சித்தேபூசிப்பார்கள், சினத்தவருமுதவாவார்காலாங்கிதம்மால்சீருலகில்கீர்த்தியுடன்வாழலாகும், வினைப்பயனும்விட்டுமல்லோபுண்ணியனுவாய் வேதாந்தத்தாயினதுவருளுமுண்டே. த

அருளானசெல்வமுண்டு கியானமுண்டு அப்பனேகுருசாம்பிரதாயமுண்டு, பொருளுண்டுபுகழுண்டுபோகமுண்டு பொன்னுலகப்பதிதனிலே யிடமுமுண்டு, இருளகன்றுசூரியன்போல்விலாச முண்டு பெரிலானவஷ்டவிதபாக்கியமுண்டு, மருளகன்று வைகுண்டப்பதி பென்றனும் வாழ்வுண்டாய்வாழ்த்துமல்லோயிருப்பார்முற்றே. தக

போகர்சத்தகாண்டம் - எத.

மூன்றுவதுகாண்டம்.

முற்றுப்பெற்றது.

———)(*)(———

உ

கடவுள் துணை.

மஹாமகுத்துவம்பொருந்திய

போகமுனிவர்.

திருவாய்மலர்ந்தருளிய

பெருநூலாகியகுருநூல்

சத்தகாண்டம் - எ௲.

-பின்

நான்காவதுகாண்டம்.

காப்பு.

ஓடியேசதாசிவன்தான் பாதங்காப்பு
வுறைத்திடுவேன்போக ரேழாயிரத்தில்
தேடியேசத்தசாகரமதாக
திறமாகப்பாடிவைத்தேன் சத்தகாண்டம்
கூடியேகாலாங்கி ஞதர்பாதம்
குருவானநாதாக்கள் பாதம்போற்றி
ஆடியேவயித்தியமாம் நாலாங்காண்டம்
அப்பனேவாதமது காப்புதாமே.

தானனசத்தசாகரமுங்கண்டேன் தாக்கானசத்ததீவுகளுங்கண்டேன், வேனனசத்தநதிதானுங்கண்டேன் வேகமுடனஷ்டதிக்குதானுங்கண்டேன், கோனனவஷ்டபா லகரைக்கண்டேன் கொடிதானவஷ்டதேவாலயங்கண்டேன், பானனபராபரியைமனதிலெண்ணிபாங்குபெறபாடிவிட்டேன் காண்டம்பாரே.

பூநீரெடுக்கவிதி.

பாரேதான்குளிகையது பூண்டுகொண்டு பண்புடனேசீனபதி சென்றேன்யானும், நேரேதான்சீனபதி மூன்றுகாதம் நேர்மையுடன் சுத்திவந்து வளவுகண்டேன், சீரேதான்பூமிவளம் யானுங்கண்டேன் சிறப்பானயளர்பூமி யிதுவேயாகும், கூரேதான் நாதாக்கள்கண்டதில்லை கொற்றவனேயான்கண்டேன் பூநீராமே. ௩

ஆமேதான்பூநீரின்வளப்பங்கேளீர் அகிலமெலாம்பூநீர்கள்மெத்தவுண்டு, தாமேதான்பாண்டிவளமெத்தநாடுதாக்கானயாவடையார் பிரம்மதேசம், நாமேதான்கண்டபடிசேரநாடு நாதாக்கள்சோழவளமெடுப்பார்பூமி, போமேதான்நெடுங்காலந்தன்னிற்சென்று பொங்கமுடன்தானெடுப்பார் பூநீராமே. ௪

பூநீரிலின்னம்வெகு தளமுஞ்சொல்வேன் புகழானகாளஸ்திரீசிவகெங்கைதானும், தீநீராம்பாலைவனம் பூம்பாறையாகும் திகழானதிண்டிக்கல் பசுமலையுமாகும்,சேநீராந்தில்லைவனம்காளிங்கமடுவுசொ[illegible]ன்றபூதிப துவடமதுரையாகும், தேநீராம்தென்மதுரா வயோத்திநகராகும் தெளிவானபொன்னகரந்தானுமாமே. ௫

ஆமேதான்பாஞ்சாலன் பூமிவளமாகும் அப்பனேதென்வுவனம் வடபுவனமாகும், தேமேதான்புல்லாணி தீர்த்தகனையாகும் தேன்விளையும்நர்மதாவடமேருமாகும், போமேதான்யித்தாதிதேசநாடு பொலிவானவளர்பூமி யென்னலாகும், பாமேதான்பூநீரு யெடுக்குங்காலம் பகருவேன்காலமது செப்பக்கேளே. ௬

கேளேதான்சித்திராபருவமுன்னும் கெணிதமுடன்பங்குனிக்குமுன்னதாக, நாளேதான் அமாவாசைபூர்ணவட்டம் நாள்தேடிபரிபாஷைதாமுணர்ந்து, பாளேதான்போகாமல்நாளைப்பார்த்துபாரினிலேயெல்லவருமநூலாராய்ந்து, வேளேதான்சித்தர்நூல் நுணுக்கம்பார்த்து வேதாந்தத்தாயினுப வாசங்கொண்டே. ௭

கொண்டேதானுபவாச மிருந்துகொண்டு கோடானகோடிமலைதேசங்கண்டு, கண்டேதான்காறு தேசம்விட்டு காடுமலைநதிவனமுந்தான்கடந்து, விண்டேதான்பூநீறுமெடுக்குங்காலம் விண்ணுலகில்சித்தர்முனி சொல்லைப்போல, அண்டர்முனிராட்சதர்க ளிருக்குங்காலம் அங்ஙனவேதாம்போனர் மாந்தர்தாமே. ௮

மாந்தராந்தவயோகிசிவயோகிதானும்மார்க்கமுடன்முப்புவளங்காணவென்று, வேந்தர்பதிமுதலானதேசராஜாவெகுகோடிமாந்தரொ

ல்லாமுப்பைக்காண, போந்தமுட ன்கிலாப்பருவம்நன்னிற் சாமம் பொங்கமுடனடுசாமவேளைதன்னில், சாந்தமுடன்பிரணவத்தின்மா றல்கொண்டு சட்டமுடன்பூநீருமெடுப்பார்தாமே. கூ

எடுக்கையிலேசீனபதிதேசந்தன்னில் யெழிலானபூநீருமெடுக்கு மார்க்கம், அடுக்குடனேயோர்ஆளின்கீழ்மட்டாக அப்பனேயளர்பூ மிதன்னைத்தோண்டி, இடுக்கமென்றகுழிதனிலே மண்ணைத்தானும் யெழிலாகத்தான்பறப்பிமூடிப்போடு, ஒடுக்கமுடன்கெட்டணைகளதி கங்கொண்டு வுத்தமனேபன்னுடைமேலேசார்த்தே. ம

சார்த்தியேமூங்கலென்னும்குழல்கள்தன்னை சட்டமுடன்தானி ருத்திசாற்றக்கேளு, நேர்த்தியுடன்குழல்தனையேபூமிதன்னில் நேர் மையுடன்தானடித்துசில்லுபோடு,பூர்த்தியுடன்மூன்றுநாள்வெடியச் சாமம்பொங்கமுடன்தான்திறந்துபார்க்கும்போது,கார்த்திரமாய்கதி ர்கதிராய்பூநீர்தாமும் கதிரவன்போல்பூர்த்திருக்கக்கண்டிட்டோமே

கண்டிட்டோம்வாதிகளுமொன்றாய்க்கூடி கடுகெனவேபூநீரை யெடுத்துவந்து,அண்டமெனும்கற்சுண்ணமுடிப்பதற்கு அரகராபிண் டமென்றசெயநீர்தன்னால், விண்டபடிமேகமென்றபனிநீர்தானும் வி ரும்பமுடன்தானெடுத்துப்பூநீர்தன்னை, கொண்டபடிபாண்டமதிலி ட்டுமைந்தா கூறுவேன்காச்சலென்றவிபரங்கேளே. மஉ

கேளேநீபூநீரைக்காச்சவேதான் கெணிதமுடன் தான்கறைத்து மைந்தாகேளு, மாளவேமறுபாண்டந்தெளிவிருத்துமார்க்கமுடன்கா ய்ச்சிடுவாய்பூநீர்தன்னை, மாளவேதசதிட்சைபிப்படியேயாகு மானி லத்தில்செய்வார்களிந்தமார்க்கஞ், சூளவேயின்னமொருபாகங்கேளு சுடரொளியாம்பரிதிமுகம்செய்வார்பாரே. மங

செய்வாரேதினந்தினமும்தீட்சையப்பா செம்மையுடன்பூநீரைர வியில்வைத்து, பெய்யவேபனிநீரைபூநீரில்விட்டு பேரானரவிமுகத்தி ல்வைத்தபோது, துப்பவேபூநீராம் பூவேபூர்க்கும் துகளற்றவெண் மையதுகதிர்போலாகும், மெய்யுடனேயிப்பாகஞ்செய்வார் மாந்தர் மேதினியிலின்னமொருபாகங்கேளே. மச

பாகமென்றால்பாகமதுசொல்லொண்ணாது பாவையுடகருவான செயநீராகும், போகமென்றசெயநீராம்பிண்டமாகும் பொங்கமுடன் பனிக்குடமாஞ்சலமேயாகும், வேகமென்றபூநீரைவிட்டுமைந்தா வி ருப்பமுடன்சலமதனில்கறைத்துநீயும்,சாகமுடன்தசதீட்சையிப்படி யேயாகும் சட்டமுடன்செய்துவந்தால்பூர்க்கும்பாரே. மரு

பூர்த்ததொருபூவெடுத்துச்சொல்லக்கேளும் புகழானபூவுடனே பச்சைப்பூரம், நேர்த்தியுடன்வீரமதுகாலநாக நேர்மையுடன்சினமதுவறைபதாகும், கீர்த்தியுடன்வெடியுப்புச்சமனதாக கிருபையுடன் பூரமதுநாலுங்கூட்டி, மாத்தியேசரக்கெல்லாமொன்றாய்சேர்த்து மன்னவனேகல்வமதில்மாட்டிடாயே. ௰சு

மாட்டவேபிண்டமென்றசெயநீர் தன்னால் மயங்காமல்நாற்சாமறைத்துத்திரு, வாட்டமுடன்பில்லைதட்டிகாயவைத்து வளமாகவகல்தனிலேமூடிமைந்தா, நீட்டமுடன்சீலையதுவலுவாய்ச்செய்து நேர்மையுடன்ரவிதனிலேகாயவைத்து, நாட்டமுடன்தான்போடுகோழியாக நாயகனேபில்லையதுபூர்க்குந்தானே. ௰எ

தானனபில்லையதுபூர்க்கவிட்டால் தகைமையுடன்புடமதுவும்பின்னும்போடு, கானனபில்லையதுகறுப்பேராது கடுஞ்சுருக்குஓநவேளைசிவக்கும்பாரு, மானனபில்லையதுமறுபடியுமப்பா மயங்காமல் சயநீரிலரைத்துக்கொண்டு, கோனனகுருவருளால்பில்லைதட்டி கொப்பெனவேரவிதனிலேகாயப்போடே, ௰அ

போடவேபில்லையதுசத்தமிட்டால் பொங்கமுடன்வோட்டிலிட்டுச்சீலைசெய்து நீடவேரவிமுகத்தில்காயவைத்துநேர்மையுடன் சீலையதுவலுவாய்ச்செய்து, கூடவேகோழியென்றபுடந்தான்போடுகொப்பெனவேபில்லையது பூர்க்கும்பாரு, தேடவேபூநீராம் சுன்னமாகும் தெளிவானசரக்கெல்லாம்தட்டிப்போடே. ௰கூ

போமென்றுவிடுகாதேபின்னுங்கேளுபோக்கானசரக்கெல்லாங்கட்டுதற்கு, வேமென்றசத்துருவுமித்துருவுஞ்சேர்த்து வேகமுடன்கலசமதுசெய்துகொண்டு, நாமென்றவாக்குபொய்யாகாமற்றான் நலமானசட்டிதனில்மணல்தான்கொட்டி, சாமென்றமேல்சட்டிகொண்டுமூடி சட்டமுடன்தானெரிப்பாய்சாமம்நாலே. ௨௰

நாலானசாமமதுயெரித்தபோது நலமானபில்லையது பூர்க்கும்பாரு, காலானபில்லையதுகாரமெத்த கடுங்காரச்சுண்ணமென்றேசெப்பலாகும், பாலானசுண்ணமதைமஞ்சள் தன்னில்பாச்சினால்மஞ்சளதுசிவந்துபோகும், மேலான சரக்குக்குக்காலனாகும் மேன்மையுடன் சரக்கனைத்துங்கொல்லுந்தானே. ௨௧

கொல்லுமேபாஷாணமுப்பத்திரண்டும் கொடிதானசரக்கனைத் தும்நீற்றும்பாரு, வெல்லுமேநவலோகம்நீறிப்போகும் வேகமுடன் சூதமது துடித்துக்கொல்லும், புல்லுமேகாரசாரங்கள்தானும் புகழா னமுப்பூவால்மடிந்துபோகும், கல்லுகளுமுப்பூவால் நீறிப்போகும் காடெல்லாந்தான்விளையும்மூலியாமே. உ௨

மூலியாம்சாறுவார்தழைகளெல்லாம் மூப்பூவிலணுவளவுபட்டி ட்டாக்கால், கேலியாம்தழைகளெல்லாம்சலமாய்ப்போகும்கெவுன முடன்குளிகைக்குமுப்பூவாகும், வாலியப்பெண்ருதுவாவாள்முப்பூ வாலே வளமுடனேகாயமதுகற்றூணாகும்,சாலியனும்வண்ணானும்கா ணமாட்டான் சட்டமுடன்முப்பூவின்வளமைபாரே. உ௩

வளமுடனேமுப்பூவைக்கண்டபோது வாகுடனேயேமத்துக்கு றுதிபாச்சு,,பளமையுடன்வயித்தியமும்வாதயோகம் பலிக்குமடாமு ப்பூவின்மார்க்கத்தாலே, இளமையுடன்முப்பகலுமுப்பூவாலே வெ ழிலுடனேநீயுமொருசித்தனாவாய், நளபதியுமுப்பூவையுண்டபோது நரைதிரையுமற்றுமல்லோராஜனுமே. உச

ராஜனும்ராசாதிராசனுவான் நலமானமுப்பூவின்தன்மார்க்கத் தாலே, போஜனுமேயிவர்க்கீடுசொல்லப்போமோ பொங்கமுடன்மு ப்பூவின்பெருமையாலே. கோஜபீஜங்களதுமுப்பூவாலே குவலயத்தி ல்சாயகர்ப்பம்முப்பூவாலே,பாசமுடன்சித்தர்முனிரிஷிகள்தாமும்பா ரிலேகர்ப்பமுண்டியிருந்தார்தாமே. உரு

இருந்தாரேகோடிரிஷிசித்தர்தாமும் பெழிலானமுப்பூவைமுடி த்துக்கொண்டு, திருந்தமுடன்சமாதியினிலிருந்துகொண்டு சீர்பெற வேயனவேகவிதசித்துசெய்தார், பொறிந்தவே பூமியிடப்பாக்கங்க ண்டு புகழானமுப்பூவைக்கண்டறிந்து, வருந்தியேமுடித்தவர்கள் கோடாகோடி வளமுடனேபதங்கெட்டோர்கோடியாமே. உ௬

கோடியாஞ் சித்தர்களி லொருவருண்டு குவலயத்தில் குரு முடிப்போனொருவனுண்டு,தேடியேபார்த்தாலுங்கிடைப்பதில்லைதே சத்தில்விட்டகுறைநேருமானால், கூடியேயவர்தனக்குக்கிட்டும்பாரு கிட்டாட்டால்விட்டகுறையில்லையென்று, நாடியேகர்மானுபவத்தினா லேநாட்டமுடனறிந்துகொள்ள நீதியுண்டே. உ௭

உண்டானசாத்திரத்தில்அனேகஞ்சொன்னார் உத்தமர்கள்ரிஷி கோடிமுனிவர்தாமும், அண்டமுடன்பிண்டங்களையறியாமற்றான் அ னேகமதாய்சுட்டலைந்துகெட்டார்கோடி, கண்டபடிசாத்திரங்கள்தா

றுமாராய்காசினியில்தம்மனம்போல்பாடிவிட்டார்விண்டவர்கள்கண்டவர்களாருமில்லை விருப்பமுடன்பூநீரைகெடுத்தார்தாமே. உஅ

தாமானபிண்டமதுநடுப்பிண்டத்தை தாக்கானமடிப்பிண்டம்தலைப்பிண்டந்தான், கோமானுமாதர்களுங்கொண்டுவந்துகொப்பெனவேபூநீருகாச்சவென்று. நாமானசாத்திரத்தினுள்ளவுகாணூர்நாட்டிலேமெந்நூலைப்பாராமற்றூன், சாமானமானகவியேழாயிரத்தைசாங்கமுடன்பாராமற்கெட்டார்தாமே. உகூ

கெட்டாரேகோடிமனுராஜரெல்லாம் கேடுகெட்டகருமிகளுமாந்தர்தாமும், சுட்டாரேமுப்பூவைக்காணுமற்றூன் சுட்டதினுலாபமென்னலோபங்கண்டார், விட்டகுறைவிருந்ததினுலின்னூற்பார்த்துவிருப்பமுடன்வாதமதைகாணலாச்சு, இட்டமுடன்சத்தகாண்டமேழாயிரத்தில் வெழிலாகப்பாடிவைத்தேன்மறைப்பில்லைதானே. ௩௰

மறைவானபொருளெல்லாங்கண்டாராய்த்து மார்க்கமுடன்வாதமதைச்செய்யவேண்டும், குறைவானபொருளறிந்து சேர்க்காவிட்டால் குற்றம்வரும்வாதத்துக்குறுதியில்லை, நிறைவானபொருளையல்லோவிட்டார்மாந்தர் நீநிலத்தில்வெகுகோடிகெட்டார்வீணில், பறைவானசாத்திரத்தைமுன்பின்னுக பாடிபட்டுபாராமல்மடிந்தார்தாமே

மடிந்ததினுல்மானிலத்தில்கர்ப்பமுண்டு மறைவாகமண்மேலேயிருந்தார்தாமும், முடிந்ததொருகாயாதிகற்பந்தன்னை, மூதுலகில்பாடுபட்டுக்கிடைபாமற்றூன், படிந்ததொருகூடுவிட்டுக்கூடுபாயபாழானதேகமதைமெய்யென்றெண்ணி, வெடிந்தமட்டுமாயாதிசாகரத்தைவிட்டொழிக்கவகைதேடிமாண்டார்தாமே. ௩௨

மாண்பானபயிர்களெல்லாமொன்றுய்க்கூடி மயக்கமுடன்சாத்திரத்தில் பிரிவுதோன்று, காண்பான வவரவர்கள்செய்தகாப்பு கடையேடுமுடியேடுகேடுந்தான், வீண்பானமுப்பூவைமெய்யென்றெண்ணி விண்ணுலகில்சாத்திரத்தின்வழிபோகாமல், சாண்பாம்பையானுலுந்தடிகொண்டடிக்கத் தாரணியில்மறந்துவிட்டகாதையாமே

காதையாமிப்படியேதெளிவுகாணூர் காசியினில்வூசிகொள்ளதிராணிபற்று, பாதையாம்துலாங்கொண்டகணக்கைப்போல பாரினிலேகுருமுடிக்கசூட்சங்காணூர், மேதைமாம்பஞ்சணையிற்சுகங்கண்டாற்போல்,மேதினியில்சாத்திரத்தைப்பார்த்துமென்ன வேதையாம்பொருளறிந்துபோனவர்க்கு விருப்பமுடன்வாதமதுலபிக்கும்பாரே. ௩௪

பாரோதான்வண்டபிண்ட மறியவேண்டும் பாரினிலேயண்டம தையாருங்காணார், நேரேதான் முப்பூவும்பூர்க்கும்போது நெடிதான அண்டமென்றகல்தானப்பா, கூரானபிரதிவினுல்வுற்பத்தியாச்சுகொடிதானவிஷக்கல்லு அண்டக்கல்லாம், சேரோதான் சிற்றண்டம்பேரண்டமாகும் சிறப்பானநடுவண்டமென்னும்பேரே ௩௫

பேரானசுக்காங்கல்பிரம்மக்கல்லாம் பெருமையுள்ளமூதண்டக்கல்லுமாகும், சீரானபடிகக்கல்லென்றும்பேரு சிறப்பானகுழியானை யென்றும்பேரு, தாரானகுடுகுடுக்கல்லென்னும்பேரு தாக்கானசுண்ணக்கல்லென்றும்பேரு, பாரானபச்சை யென்றசுண்ணக் கல்லுபாங்கானவுதகமென்றகல்லுமாச்சே ௩௬

கல்லான கல்லதனைக்காணவேண்டும் காசினியிலாருந்தான் காணமாட்டார், புல்லானபூநீரையறியமாட்டார் புகழானசோனக்கல் சுண்ணமப்பா, மல்லானமண்கட்டியென்பார்பாரு வையகத்தில்தாமறியார்மகிமைதன்னை, செல்லானபுத்துக்குள்ளிருக்குங்கல்லாம் ஜெகஜோதிமகிமைதனை காணார்தாமே. ௩௭

காணரேகருவாளிகாண்பானைல்காசினியில்விண்டிடுவான்கருத்துளோர்க்கு, தோணவேபூவுலகில்தொட்டாலுந்தான் தொல்லுலகில்மாண்டிடுவார் மாந்தர்தாமும், நாணவேசாத்திரத்தைமிகவாராய்ந்து நாதாக்கள்சொல்லுறையும்மிகவுங்கெட்டு, நீணவேகர்ப்பாந்திரமிருப்பதற்கு நீணிலத்தில்கைமறைப்பு யாவுங்கேளே. ௩௮

கேட்கையிலேசாத்திரமாம்யுகாந்தகாலங்கீர்த்தியுடனிருப்பதற்குவாசிநோக்கு, நீட்கமுடன்வாசியிலேயிருந்துகொண்டு நீடாழியுலகத்தைவெறுக்கப்பண்ணி,சூட்சமுடன்சின்மயத்தையறிந்துபோற்றி சுருதியுள்ள கருவிகரணாதியெல்லாம், தாட்கமல பீடமதை பணிந்துபோற்றி சதாகாலம்சமாதியிலே யிருக்கநன்றே, ௩௯

முப்பூவினால் சரக்குக்கு சத்துருசங்கம்.

நன்றான சரக்குகளைக்கொல்லவென்று நாட்டமுடன்சத்துருமித்துருவுங்கண்டு, குன்றானமலைகளிலேபாஷாணமுண்டு கொப்பெனவேகொடுவந்துபூநீர்சுண்ணம், பன்றானவுமிழ்நீரால்மத்தித்தேதான் பாலகனேசுண்ணமென்றபாஷாணத்தில், தன்றானகட்டிக்கு வங்கிபூட்டி தகமையுடன்கோழியென்ற புடத்தைப்போடே. ௪0

போடயிலேபற்பமதுகடுங்காரந்தான் பொலிவானகண்டர்தமைக்கொல்லும்பாரு, சாடவேமுன்போலவுமிழ்நீர்தன்னில் சட்டமுடன்

தான்குழைந்துபுடத்தைப்போடு, நீடவேகடுங்காரச் சுண்ணமாகும் நேர்மையுடன்சத்துருவுக்காலமித்ரன், வாடவேதிரியாதேமைந்தாகேளு வளமுடனேசுண்ணமதை யெடுத்துக்கொள்ளே. சுக

கொள்ளவேசூதமதுக்கனுவுபோடு கொடிதானயேமரசந் துள்ளிப்போகும், விள்ளவேசூதமதுமடிந்துதானல்வேகமுடன்கவனமென்றகுளிகையாச்சு, மெள்ளவேகுளிகையதுகொண்டபேர்க்கு மேதினியில்சதாகாலம்சாவேயில்லை, உள்ளபடிகாலாங்கிநாதர்தம்மை வுத்தமனேநாம்வணங்கி பாடினேமே. சுஉ

பாடினேம்போகரிஷி சொன்னமார்க்கம் பாருலகில்பொய்யாது மெய்யேயாகும், தேடியேயிவ்வேதைமுப்பின்மார்க்கம் தெளிவறவேயாடிவிட்டேன்சத்தகாண்டம், நீடவேநான்காவதிந்தகாண்டம் நீடாழிசாகரம்போ லிதுவேயாகும், கூடவேயேழாயிரக்காண்டமப்பா கூறவேமுடியாது திண்ணந்தானே. சுஙு

திண்ணமுடனிப்பாகம்யாருஞ்சொல்லார் திறமையில்லாசுந்தரனூர்மறைத்தார்தாமும், வண்டமுடன்கொங்கணவர்சுருதிசொல்லி வளமையுடன்தான்மறைத்தார் பிண்டப்போக்கை, சுண்ணமுடன்செய்வதற்குகொங்கணவர்பாகம் சுத்தமுடன்செயநீரைமறைத்துச்சொன்னூர், எண்ணமுடனிடைக்காடார் டமராநந்தர் ஏத்தமுடனென்போலசொன்னூர்பாரே. சுச

சொன்னதிலைவ்விதிமுறைகள் காணுதப்பா துறைகோடிமுகங்கோடிகொந்தங்கோடி, வின்னமிலாசெய்வதற்குரிஷிகள்தாமும் விட்டகுறைவெட்டவெளியென்றுவிட்டார், நன்னயமாய்நாதாக்க ளடிபணிந்து நலமுடனேபாடிவைத்தேன்முப்புதீட்சை, பன்னவேயிந்நூலின்தீட்சைபார்த்து பாகமுடன்செய்பவனேவாதியாமே. சுரு

கேசரவித்தை.

வாதிபாமின்னமொருமார்க்கம்பாரு மகத்தானவேதையிதுசூளுக்குவேதை, சோதிபாங்கேசரத்தின் வித்தையப்பா சுளுக்கிலேயெவருந்தான்சொல்லமாட்டார், நீதியுடன்சூதமென்ற ராஜர்தம்மை நேர்மையுடன்சேரதுதான் கொண்டுசென்று, பாதியுமைதான்பணிந்து மைந்தாநீயும் பட்சமுடனுப்பூவில்ஒருமாபோடே. சுசு

போடயிலேமதயானைவீரடங்கிபொங்கமுடன்சூதமதுகட்டும்பாருகூடயிலேசூதமதுகுளிகைபாலுல்கோடானகோடிவித்தையாடலா

கும்,வாடயிலேசீவனத்துக்கில்லாவிட்டால் வளமாகவங்கமதையுருக்கிக்கொ
ண்டு, மூடயிலேகுளிகையதுபோட்டுபபாரு மூனேயானவங்கமதுவெள்ளிபா
ச்சே. ௪௭

ஆச்சென்றவெள்ளியதுபூசைக்கப்பா அப்பனேநாதாக்கள்முனிவர்தா
மும், மாச்சப்பாவாதவித்தைசெய்துமல்லோ மகதேவவாலயங்கள்பூசைசெ
யதார், பாச்சவேதேவாலயங்கட்டுதற்கு பாகமுடன்தங்கமென்றபோக்குச்
சொல்வேன், காச்சவேசெம்புதனேயுருக்கிக்கொண்டு கருவானமுப்பூவைப்
போட்டிடாயே. ௪௮

போடவேசெம்பதுவுமூரலேகி பொலிவானதங்கமதுவாகும்பாரு, நீட
வேமுன்சொன்னக்குருவைத்தானும் நினேவாகநவலோகந்தன்னிலீய, கூட
வேமாற்றதுவுமதிகங்காணும் குணமானயேமமதுயென்னலாகும், தேடவே
சீவனத்துக்கில்லாவிட்டால் திறமானமுப்பூவையறிந்துகாணே. ௪௯

காணவேயின்னமொருகருமானங்கேள் கருத்துடனேசொல்லுகிறேன்
மைந்தாநீயும், தோணவேபூணுகஞ்சேர்தானப்பா தோற்றமுடன்தானேபே
பாய்ச்செம்பையல்லோ, பூணவேசெம்புதனேபரணேபண்ணி போக்கானசூத
மதுஉள்ளேவிட்டு, வேணவேபூநீரில்குன்றிபோடு வேகமுடன்மேற்பரணே
கொண்டுமூடே. ௫௰

மூடவேமண்சீலேவலுவாய்ச்செய்துமுனிநாதர்சொற்படியேபுடமேபோ
டு, கூடவேகோழியென்றபுடத்தைப்போடு குணமுடனேபுடமாறியெடுத்து
ப்பாரு, வாடவேசூதமதுமடிந்துமேதான் வளமானகளங்கமதுபோலேயா
கும், தேடவேசெம்புதனில்நூற்றுக்கொன்று தெளிவானகளங்கமதைகொடு
த்திடாயே. ௫௧

கொடுக்கையிலேமாற்றதுவுமெட்டேயாகும் குணமானபொன்னதுஞ்ச
வனேபோலாம், விடுத்துமேபொன்னதனேவாரடித்து விருப்பமுடன்பூங்கா
வி் புடத்தைப்போடு, தொடுத்திடவே மாற்றதுவும் பத்தேயாகும் தேரா
மல்பசுமைநிறச்செம்பொன்னாகும், எடுத்துமேசிவாலயங்கள் கட்டநன்று
யெழிலானசூதமென்றேகுருவுமாமே. ௫௨

குருவானசூதமதைபின்னுமைந்தா கொப்பெனவேரவியெடுத்துபரணேக்
குள்ளே, திருவானபரணேதனில்வைத்துப்பின்பு திகழுடனேகெந்திதனேகள
ஞ்சியோடு, மருவானபரணேதனேமூடிப்பின்பு மார்க்கமுடன்புடம்போடகட்
டிப்போகும்,வுருவானகளங்கமதுவாகும்பாரு வுத்தமனேகளங்கெடுத்துசெ
ப்பக்கேளே. ௫௩

செப்பவென்றால்நாவில்லைபாவுமில்லை செம்மையுடன்வெள்ளிதனில் நூற்றுக்கொன்று, ஒப்பமுடன் தானுருக்கிக்கொடுத்துப்பாருலுகோகோகாதாக்கள்வித்தையாகும், அற்பமென்றுநினையாதேமைந்தாகேளு அரசர்களுமிந்த முறைதானமாட்டார், சொற்பமுடன்மாந்தருக்குவுண்மையாக தோற்றவே யிந்தமுறைதெளிந்திட்டேனே. ருச

தெளியவேயின்னமொருமார்க்கம்பாரு தோற்றமுடன்யாமுரைப்போமாந்தர்க்காக, ஒளிவுடனேசீனபதிமார்க்கத்தார்கள் வொடுக்கமுடன்செய்துவரும்வித்தையாகும், வெளியாகசெத்தவரைக்காண்பதற்கு வேட்கமுடன் ஜாலமென்றுசொல்வேன்பாரு? வளியாளவட்டாரந்தன்னிலேதான் வளமுடனேமாளியென்றுசெய்தார்தாமே. ருரு

போகர்செத்தவரைக்காணுதலும் அவர்களிடம்

பேசுதலுமாகிய

குாளிஜால மாளிகை.

தாமானமாளிகையாஞ்செப்பக்கேளு தடநீளம்சதுரமதுசொல்வேன்பாரு, வாமானகுறுக்குவறையிருபதாகும் வாகானநெடுக்குவரைநாற்பதாகும், நாமானகணக்குவகைவீடுசொல்வோம் நாற்சதுரமெழுநூற்றுமிருபதாச்சு. சமானமாகவல்லோதுறைகள்தோறும் சட்டமுடன்கண்ணாடிக்கதவுமாட்டே. ருசு

மாட்டவேகண்ணாடிவாசலுக்குள் மார்க்கமுடன்குழலொன்றுமிருத்தியங்கே, நீட்டமுடனெழுநூற்றுமிருபதுக்கும் நெடிதானகுழலொன்றுவெவ்வேறாகும்,வாட்டமுடன்கண்ணாடிசுற்றோரந்தான்வாகுடனேகாந்தமென்றகம்பிதானும்,தேட்டமுடன்தானமைத்துநடுபையத்தில்தெளிவாசகுழல்தனிலேபின்னிப்போடே. ருஎ

பின்னவேகாகமென்றகுழலில்தானும் பேரானகம்பியதுசேர்ந்தபோது நன்னயமாய்வேகமுடன்வாய்விநாலே நளினமுடன்காற்றதுவுமிகவேதங்கி, பன்னவேசப்தமது மிகவுண்டாச்சு பாங்குடனேவாசல்வழி தன்னிலப்பா, சொன்னதுபோல்செவிதனக்குகேட்கும்பாரு சூட்சமதுகருவாளிகாண்பான்பாரே. ருஅ

பார்க்கவென்றால்வென்றால்வாசல்முகம்வொவ்வொன்றிற்கும் பாங்குடனேபிரதமைகள்தானமைத்து, ஏர்க்கவே ஆண்பெண்ணுய்ருபமைத்துயெ

ழிலானவாடைகளுங்கொண்டுசாத்தி.தீர்க்கமுடன்பூதமென்றகண்ணு டிக்குள் திறமையுடன்பூதமதைக்காணலாகும், சேர்க்கவேகண்ணுடி குக்கந்தோறும் சிறப்பானகருமையைதிட்டிடாயே. ருகூ

திட்டவேகருமையைநாட்டிப்பாரு திறமானலஞ்சனமுமிதற்கீ டல்ல, நீட்டமுடனெழுநூற்றுசொச்சம்வீட்டில் நிலையானமைதனை யேவமைத்தபின்பு, கூட்டமுடனெவ்வொருகண்ணுடிதன்னில் குறி ப்புடனேரூபமதைகாணலாகும், வாட்டமுடன்சிகரமதுமேல்வட்ட த்துள் வாகுடனேபரிதியதுவொளிவுகாணே. சுய

காணவேவிழிதனிலேவஞ்சனமுமிட்டு கருத்துடனேபிரணவத் தைமாறிக்கொண்டு தோணவேவெட்டவெளிதன்னில்நின்று தோற் றமுடன்பரிதிதனைக்கண்டபோது, மாணவேவிழிதனிலே நிமையொ ட்டாமல் மார்க்கமுடன்கடிகைபதுபத்தேயாகும், பூணவேபூமிதனி ல்நின்றுகொண்டுபுகழானநடுநெற்றிமையம்பாரே. ருக

மையமாம்வட்டமதுநின்றுகொண்டுமயங்காமல்விண்ணுலகம்பா ர்க்கும்போது, பையவேதோற்றுவதுரூபங்காட்டும் பான்மையுடன்சு யரூபந்தன்ரூபம்போல், மெய்யானதேகமதுவடிவந்தோன்றும் மிக் கானரூபமதுவர்ணங்காணும், பொய்யானதரிசனமு மெய்யேயாகும் போக்கானரூபமதுமெய்போலாமே. சுஉ

ஆமேதானிப்படியேரூபங்காட்ட வனேகவிதபான்மைகளு மித னாலாகும், நாலேதான்சொன்னபடிநான்காங்காண்டம்நாட்டிலேமா னிடர்கள்பிழைக்கவென்று, போமேதான்போகரேழாயிரத்தில் பொ ங்கமுடன்மாண்டவரைக்காணவென்று, தாமேதான்மாளிகையொன் றுசெய்தேனப்பாசட்டமுடன்ஜெகஜாலமாளியாச்சே. சுங

ஆச்சப்பா ஜகஜாலமாளிதன்னில் அப்பனேயாம்கோடிவரைதா ன்சொல்வோம், பேச்சப்பாபேசுதற்கின்னஞ்சொல்வோம்பேரான செத்தவர்பேர்கேட்கச்சொல்லி, கூச்சலுடன்பின்னிருந்தபிரணவத் தைக்குறிப்புடனேமாறியல்லோ குறளிதன்னால், மூச்சிருந்துபேசும துபேச்சைப்போலமுன்னிருந்துபேசும்வகைமொழிசொல்வேனே. ()

மொழிசொன்னவார்த்தைக்குமுன்னேநின்று மூர்க்கமுடன்குற ளியதுபின்னேசென்று, வழிசெல்லும்பிரதமையின்வாசலமுன்னேவ ழிமடக்கிவார்த்தையதுமுன்னேகூறும், பழியில்லாமாந்தருக்குசெக ஜாலத்தை பாங்குடனேபூதமதுகூறும்பாரு, முழியுடனேமுகங்காட் டிப்பல்லைக்காட்டி மூர்க்கமுடன்கோபித்துப்பேசுந்தானே. சுரு

தானனகுறளியென்றபூதந்தானும் தகமையுடன்நாம்நினைத்த காரியத்தை, வானகமாளிகையினுள்ளேசென்று மார்க்கமுடன்ஜால மென்றகண்ணாடிக்குள், பானமுடனுள்ளிருந்துபேசும்பாருபாலகன் போல்வார்த்தையதுமிகவேசொல்லும், தேனமிர்தங்கொண்டதொரு சொல்லைப்போல தெளிவாகமுன்னின்றுபேசும்பாரே. ௬௬

பேசுகையில்ரூபமதையாருங்காணார் பேருலகில்மாயவித்தைஜா லவித்தை, காசுபணங்கேட்டாலுங்கொடுக்கும்பூதம் காசினியில்பூத மதைவசமேசெய்வார், தேசுலவுநாட்டுவளமெல்லாந்தோன்றும் தே சத்திலதிதமென்றவித்தையப்பா,வீசுபுகழ்மண்டபத்தில்ஜாலவித்தை வெகுவாகச்செப்புகிறேனின்னங்கேளே. ௬௭

கேளேதான்பூதநாதிவிசதைசொல்வேன் கெடியானகுறளியெ ன்றபூதந்தானும், விளேதான்பிரணவத்தின்வசமதாக்கி வேகமுடன் ஜாலமென்றமாளிதன்னில்,நாளேதான்போகாமல்கதிரோன்முன்னே நளினமுடன்பூதமதையேவல்செய்து, சூளேதான்ஜாலமென்றமாளி தன்னில் சூட்சமுடன்குறளிதனைவசியமாட்டே. ௬௮

ஆட்டேதான்ராசாதிராசர்தானும் அங்ஙனவேதான்மயங்கிவார் த்தைசொல்வார்,கேட்டேதான்காலாங்கிநாதர்தம்மால்கிருபையுடன் சாலமென்ற மாளிதன்னில், நீட்டமுடன் வாசல்வழி சென்றவர்க்கு நிலையானவட்சரத்தைமாறல்செய்து, கூட்டமென்றகுழல்தனிலே ஓ திப்பின்பு கூர்மையுடன்ஓசையதுகேட்குந்தானே. ௬௯

ஓசையாமெழுநூற்றுயிருபதுக்குள் ஒப்பமுடன்சப்தமதுகேட் கும்பாரு, ஆசையுடன்தலைமாளிமுதலில்நின்று அப்பனேநடுமாளிமை யமட்டும்; பூசையுடன்கடமாளிநெடுகுமட்டும் பொங்கமுடன்தந்தி யென்றகம்பிதன்னால், பாசையுடன்யிரும்புக்குகம்பிமாட்டிபாகமுட ன்குழல்தனிலேசில்லுபோடே. ௭௰

போடேதான்வாசல்வழிமுழுதுந்தோறும் போக்கானமையசனை த்திலதம்போடு, நீடேதான்திலதமதைப்பார்க்கும்போது நிலையான கோட்டைவழிமாளிதோன்றும், தேடவேவஞ்சனத்தின்மையினாலே தேசத்திலுள்ளதொருவதிசயங்கள், கூடவேஜாலமென்றமாளிதன்னி ல் குறிப்புடனேபார்ப்பதற்குதோற்றமாமே. ௭௧

தோற்றவேமையாழிமாளிதன்னில் துப்பறவாய்நடுமையமிருந்துக் கொண்டு, ஏற்றமுடனெவ்வோருவறைகள்தன்னில் யெழிலானபிரத மையின்பக்கஞ்சென்று, கூற்றனைப்போல்குறளியிட தந்திரத்தால்

கோடானகோடிவழிநடக்கலாகும், சாற்றலுடன்காலமென்றமாளித ன்னில் சதுராநந்தனடத்தவிதிகள்கேளே. எ௨

விதிபுடனேமுடிப்பதற்குவின்னஞ்சொல்வேன் வேதாந்தத்தா யினதுவருளினாலே, மதிபோன்ற சந்திரனைப்போலேயொக்க மாது மையாளின்னமொருபதுமைதானும், கதிரோனைத்தானெரிக்கும்சோ திப்பா காசினியிலொருவருந்தான்கண்டதில்லை, துதியுடனேபூதமெ ன்றகுரளிதானும் துப்புரவாய்வதிசயங்கள்சொல்லுந்தானே. எ௩

சொல்லுவதிலவர்மனதில்தோற்றமெல்லாம் சூட்சாதி சூட்சம தைக்கண்டுதானும், வெல்லுவதுபிரணவத்தைசொல்வேன்பாரு விரு ப்பமுடன்-அம்-இப-வங்கென்றேபோது, புல்லுதற்கு ஆங்-ரீங்-ரீயுஞ் சௌவும்புகழானஉயிரெழுத்தைமாறல்செய்து, செல்லுதற்குசோட சமாம்வாலைசக்ரம் தெளிவுடனேபோட்டுமெல்லோமாறிக்கொள்ளே.

உச்சாடனம்.

கொள்ளவேஉச்சாடனம்வுரைப்பேன்கேளு கொடிதானபவமக ற்றிரீயுமைந்தா, விள்ளவேபரணமுடன்சத்திபூசை விருப்பமுடன்தா ன்செய்தா லெல்லாஞ்சித்தி, துள்ளவேவனுமாரை வரவழைக்க து றையுடனேவறுகோணச் சக்கரத்தில், எள்ளளவும்பிசகாமல்வழிசே ராமல் யெழிலானபிரணவத்தைமுன்னேகூறே. எ௫

கூறயிலே யங்-மங்-சிங்-கென்றேயோதுகொடிதானவுருவதுதா ன்லட்சமாகும், தீறமுடனிருவாணமாயிருந்து திறமுடனேமுக்கோ ணவட்டத்துள்ளே, சீறலுடன்வராகிதனைவரவழைதது சிறப்புடனே பூசையதுசெப்பக்கேளும், சுற்றமுடன்வராதமொன்றுகொண்டுவந் து சட்டமுடலுடல்நீக்கி சிரசுதன்னை,நேரமுடன்நடுச்சாமவேளைத ன்னில் நேர்மையுடன்மசானகரையிருந்துசெய்யே, எசு

செய்பவென்றால்பூசையதுவின்னங்கேளு தெளிவுடனேமசான மதில்சக்கரந்தான், மெய்யுருவங்கொண்டுமெல்லோபுவனைவாலை மேதி னியில்கைவசமாய்செய்துகொண்டு, பொய்யுடலைமெய்யென்றுநம்பி யேதான் புகழானவஞ்சனத்தை மாற்றுதற்கு, மைவிழியாள் பாசம தைமிகவும்நீக்கி மார்க்கமுடன்தவநிலையில்நின்றிடாயே, எஎ

நின்றுமேவராகமென்றசிரசின்மேலேநிலையானபதிவிளக்கையே ற்றிவைத்து, நன்றுடனேமசானத்தின்சவத்தின்மேலே சட்டமுட ன்திபெறிந்துவேகும்போது,வென்றிடவேவராகத்தின்சிரசின்மேலே

வினயமுடன்பதிவிளக்கேயேற்றிவைத்து, சென்றிடவேகுரளிதனை வரவழைத்து சிறப்புடனேகொள்ளிதனைகாவல்வையே. எ௮

வைத்தவுடன்கொள்ளியாய்ப்பிசாசுதானும்வாகுடனேகுறளிக் குகாவல்நின்று,செத்ததொருசவனத்தின்மேல்யிருந்தபன்றிசேரவே சிரசதுவும்யெகிரித்தானும், மெத்தவே ஓங்காரமிட்டுமேதான்மேன் மையுடன்குறளிக்குயெதிர்முன்னாக,சத்தமுடன்கூச்சலிட்டுவராகன் தானும் சதுர்முகமாய்குரளிமுன்பேசும்பாரே. எ௯

பாரேதான்மசானமதில் பூசைசெய்துபட்சமுடன் குறளியைத் தான்வசியஞ்செய்து,நேரேதான்ஜாலமென்றமாளிதன்னில் நேர்மை யுடன்நாலுபுறங்காவல்வைத்து, சீரேதான்செத்தவர்பேர் கேட்கும் போது சிறப்புடனேகுறளிவந்துமுன்னேகூறும், வேரேதான்சஞ்சா ரமனிதரில்லை வினவுக்குவிடைகொடுக்குங்குறளியாமே. ௮௰

குறளியாம்ஜாலமென்றமாளிதன்னில் குறிப்பான நடுவாசல் தி ட்டுவாசல், திறனுடனேகூட்டமதுயெட்டுபேராய் தீறமுடனெண்தி சையாந்திக்குபாலர், மறனுடையமேல்வாசல்முன்னேநின்று மதிப்பு டையநாகமென்ற குழல்சந்தாலே, சுறனுடனே மேல்வட்டம் பரிதி முன்னே சூட்சமுடன்செத்தவரைக்காணலாமே. ௮௧

காணலாமவரவர்தன்னடையாளத்தை கண்டுமேமுகத்தெதிரே பேசலாகும், தோணவேபேசுதற்குமுன்னேதானும்தோற்றமுடன்ம யினமதுநிறம்போல்நிற்கும், பூணவேஅந்தவண்ணமென்னலாகும்புக ழான ருபமதுகண்ணிற்றோற்றும், வேணவே யுபசாரமிகவேபேசும் விருப்பமுடன்முன்னின்றுமறையும்பாரே. ௮௨

மறையபிலேநாம்நினைந்தரூபந்தோற்றும் மன்னவனேமயங்காதே மதிகொள்ளாதே, திறையுடனேமுடியல்லோகண்ணாடிக்குள் தீறமு டன்முன்னின்றுவார்த்தைகூறும், முறையுடனே தான்புகலும்முனி நாதாகேள் முன்னின்றுபேசுதற்குபின்னேசென்று, குறையன்றி மு ன்னடந்தகாரியத்தை கூறிடுமேமனிதனைப்போல்கூறுமாமே. ௮௩

கூறவென்றுலெழுநூற்றுயிருபதுக்குள் கொப்பெனவேமந்திர த்தையுச்சாடித்து,தீறமுடன்குறளிதனைக்கிட்டழைத்து திகழுடனே ஞானோபதேசஞ்சொல்லி,கோறமுடன்கைதனிலேமையைப்பூசிகொ ப்பெனவேகண்ணாடிமேலேவைத்து, பாறமுடன்வட்டமொளித்தன் னைப்பார்க்க பருவமுடனுருவமதுதோணும்பாரே. ௮௪

தோணுமேஜெகஜால மாளிதன்னில்தோற்றமுடன்கருவெல்லா மிதற்துள்ளாகும், காணுமேகையொளியில்வட்டந்தானும் களிப்புட னேமையுருவாய்காணலாகும், ஏணவேகருமறைப்பைக்காணலாகும், பெழிலான சமயமதுவாய்க்கும்பாரு, வூணவேவட்டமென்றபக்கம்நி ன்று வுத்தமனேநடுமையந்திலர்ந்தந்திட்டே. அரு

தீட்டையிலேகருமானமின்னமொன்று திறமுடனேசெப்புகிறே ன்மாந்தர்க்காக, வாட்டமுடன் ஜெகசால கொள்ளிதன்னை வாகுட னேதானழைத்துத் திட்டங்கூறி, தேட்டமுடன்பிரணவத்தைமுன்பி ன்னாக தெளிவுடனே ஓதிவைத்தபடிநிதானம், சூட்டியேகுறளிக்கு ப்பிரணவததைக்கூறி சூட்சமுடன்அட்சரத்தைசுறுக்கிமாறே. அசூ

மாறப்பாவஞ்சனமாம் வீட்டுக்குள்ளே மன்னவனேநடுமையம் நின்றுகொண்டு, கூறப்பாசெத்தவரைக் காணவென்று குறிப்புடனே பட்சம்வைத்துக்காண்பதற்கு, நேரப்பாவந்தவர்பேர் வூர்தானென் ன நிலையானயிருப்பிடமும்ரூபமென்ன, ஊரப்பாமுன்னிருந்தரூபமெ ன்ன வுத்தமனேயிறந்தபின்புரூபங்கேளே. அஎ

கேளவேவடிவத்தின்வரணங்கேளு கெடியானவாடையென்றரூ பங்கேளு, நீளவேவாபரணப்பெயருக்கேளு நிலையானகைத்தொழிலை ப்பின்னங்கேளு, மீளவேமறபினிட குலாச்சாரந்தான் மிக்கானவொ ழுக்கமென்றவாச்சாரங்கேள், மாளவேமாண்டதோர் வருஷங்கேளு மன்னவனேமாதமென்றமுடிவுங்கேளே. அஅ

கேட்கையிலேயிறந்ததோர்நாளுஞ்சொல்லும் கெவுனமுடன்நா ழிகையும்முன்னேகூறும்; நீட்கமுடனடையாளஞ் சொல்லும்போது நிஷ்களங்கமாகவல்லோ உண்மைதோன்றும், சூட்கமுடன்குறளிக்கு த்திலதவித்தை சுத்தமுடன்சொல்லுகின்றதண்மையுண்டு, வேட்கமு டன் பில்லிதனைவசியஞ்செய்து லோகமதில் வெகுசித்துவாடலாமே

ஆடலாம்வெகுதந்திரம் குறளிக்குண்டு அப்பனேசூனியமுமித னுலுண்டு, தேடவேகுட்டியதுமலைக்குட்டிதானும் தெளிவுடனேநா ம்சொன்னகாரியத்தை, ஊடவேஒளித்திருந்துவதையச்செய்யும் வுத் தமனேயிருள்மாளிகாணலாகும், நாடவேஜாலக்காள் மோகினியுந்தா னும்நலமானகுட்டியென்றவீரியனுந்தானே. கூ௦

தானானவீரியனும் ஆரியனுப்வேண்டும் தகமையுள்ளவாரியனு யிருப்பானானல், வேனனமந்திரத்தைமிகவேபேசும் மிக்கானகிரமவி

திதானடத்தும், பானனகுருமுறைபோல் யாகஞ்சொல்லும் பாலகனேயாகமதுகுறுதிக்கூறும், தேனனவீரியனுங் குட்டிதன்னை தெளிவுபெறலோகமதில்வசியஞ்செய்யே. ௯௧

செப்பவேகுட்டியனும்வசியமானல் ஜெகத்திலேகோடிவித்தையாடலாகும், பையவேமந்தர்மேலேவலாகும், பாங்குடனேகல்லதனைபெறியலாகும் மெய்புடனே ஜெகஜாலவித்தையப்பா மேதினியிலாருந்தான்செய்பவில்லை, பெய்யவேசங்கிலியன் கறுப்பன்தானும் பேரானவண்ணமாரேழுமாமே. ௯௨

ஏழானவண்ணமார்காவலாளர் எழிலானஜாலமென்றமாளிதன்னில், பாழானவையன்மார்பிடாரிதானும் பச்சையென்றதேவதையும் காளியோடு, வாழாதகுமரிகளாஞ் சத்தகன்னி வளமுடனே பச்சையென்றபல்லக்குதன்னை தாழாமல் தோள்தனிலெடுத்துக்கொண்டுதகமையுடன்காளிதனைதூக்குவாரே. ௯௩

தூக்கியேஜாலமென்றமாளி தன்னில், துப்புரவாய்காவலுடனிருந்துகொண்டு, நோக்கமுடன்தேவதையைவசியஞ்செய்து, நொடிக்குள்ளேகோடிவித்தையாடலாகும், பாக்கவென்றுலோகமதில்மாந்தர்யவும், பதபதைத்துநடுநடுங்கிக்கதருவார்கள், வாக்குடனேவரமுனக்குபதமுந்தந்துவாகுடனேசெல்லுமெனசெப்புந்தானே ௯௪

செல்லவென்றுயின்னம்வெகுகூத்துகேளீர், செயலானநாதர்முனிரிஷிகள்தாமும், வெல்லவேபூதமதைவசியஞ்செய்து வேணவுபசாரமதுவதன்கையாலே, புல்லவேயேவல்தனைசசெய்யவென்று புகமாக வசியமதுசெய்துகொண்டு, மெல்லவேதம்பணிக்கி ஆளதாக்கிமேன்மையுடன்சித்துகளுமாடினரே. ௯௫

ஆடினர்வெகுகோடிகாலமப்பா அவனியிலேசித்தர்களுமுனிவர்தாமும், கூடியேபில்லியென்ற பூதந்தன்னை துணைப்படுத்திதம்வசமாய்செய்துகொண்டு, தேடியேவெகுகோடி நிதிகள்தன்னை தேசமதில் பூதத்தின்வசியத்தாலே, நீடியேகர்ப்பாந்தகாலமட்டும் நீனிலத்தில் தாமிருந்தார்சித்தர்தாமே. ௯௬

சித்தானசிந்துவகையின்னஞ்சொல்வேன் ஜெகதலத்தி லனேகவிதபூதமுண்டு, முத்தானவேதாள பூதமப்பா முதுலகில்ராஜர்களும் வசியஞ்செய்வார், நித்தமுடன் வேதாளபூதந்தானும் நேர்மையுடன் விக்கிரமாதித்தனுக்கு சுத்தமுடன்வாகனமாயிருந்துகொண்டுதொல்லுலகில்வெகுகாலமிருந்தார்தாமே. ௯௭

இருந்துமேயின்னம்வெகுவிஞேதங்கேளு பெழிலானஜாலமென்றமாளிதன்னில், பொருந்தவேயெல்லவரும்பார்க்கவேதான் பொலிவானபெக்காளஜாலந்தன்னே, திருந்தவேயெழுநாற்றுயிருபதுக்குள் திறமானமாளிகையாம்பக்கோரத்தில்,வருந்தியேதானிருந்துஜாலமாளி வாகுடனேகுடியிருப்புகண்டோம்பாரே. ௯௮

கண்டோமேயின்னமொருகருமானங்கேள் கருவானநாகார்ச்சுன்னுசிர்மத்தில், தண்டுளவமாலேயணிபூண்டுகொண்டு தக்கனுடயாகமதில்தானிருந்து, கொண்டல்வண்ணனச்சுதனும்கோமான்தானும்குடியிருப்புகோட்டைதனில்காவல்நின்ற, துண்டரிகமானதொருராட்சபூதம் துடியானதேவனுபூதமாமே. ௯௯

ஆமேதான்பூதமதுதன்னேத்தானும் அப்பனேஜாலமென்றமாளிதன்னில்,போமேதான்நடுமையம்மத்திவாசல்பொங்கமுடன்கறுவீரன்பத்திரகாளி, வேமேதான்கறுப்பண்ணன்டாகினிதானும் மிக்கானகாட்டேரிசங்கிலிநாயன், தாமேதான்சொன்னபடிமசானவீறி சட்டமுடன்தெய்வங்களனேகமுண்டே. ௱

உண்டானதெய்வங்களனேகமுண்டு வுத்தமனேசர்வகலேக்கியாணமுண்டு, பண்டானபொய்களவுசூதுமுண்டு பண்பானவிசுவாசமில்லேகண்டீர், திண்டானராட்சதமாம் பூதந்தன்னில் திறளானநவகோடிரிஷிகளெல்லாம், கண்டிதமாய்யித்தாதிபூதந்தன்னில் காசியினிற்கோடிவித்தையாடலாமே. ௱௧

ஆடலாம்பலபேதபூதந்தன்னுல்வப்பனேவஷ்டகர்மவித்தையாகும் நீடவேஜாலமென்றமாளிதன்னில் நேர்புடனேகோடிவரையாடலாகும்,பாடவேபூதங்கள்தன்னினுலும் பாங்குடனேசங்கிதங்கூறலாகும் தேடவேஎக்காளஜாலந்தன்னே தெளிவுடனேயாட்டிவைக்கும்பூதம்பாரே. ௱௨

பூதங்கள்பலபேதவாத்தியங்களேவாசிக்கும்ஜாலம்.

பாரேதானஷ்டவிதமாளிதன்னில் பாங்குடனேவஷ்டவிதவாத்தியங்கள்,நேரேதானெருமாளிசின்னமாகும் நேர்ப்புடனேயொருமாளிதிரிச்சங்காகும், வேரேதானெருமாளிபிரம்மதளம் வேகமுடன்ஒருமாளிதுத்தாரியாகும்,சேரேதானெருமாளிதம்பூறுமாகும் சிறப்பானவொருமாளிமத்தளமுமாமே. ௱௩

ஆமேதானெருமாளிகைத்தளமுமாகும் வப்பனேயொருமாளிதம்பறையுமாகும், வாமேதானெட்டுவிதமாளிதன்னில் வாகுடனேபல

பேதவாத்தியங்கள், நாமேதானிருமித்தவண்ணமாகும் நலமுடனே மாளிதனில்சென்றுமேதான், பாமேதான்மந்திராட்சரத்தையோதபா டுமேபலவிதவாத்தியங்கள்தானே. ௱௪

தானனவாத்தியங்கள்கேட்கும்போது தகமையுடன்மாந்தரெல் லாம்ப்ரமிப்பாகும், கோனனமாளிதனில்குடியிருப்பு கொற்றவனே யாருந்தானில்லைகண்டீர், தேனனவமிர்தமது போலேயல்லோதெளி வானவாத்தியங்கள்கூறலாகும், பானனபலபேததொனிகள்தோற்று ம் பாரினிலேமாந்தரெல்லாம்பிர்மிப்பாரே. ௱௫

போகர்கோகர்ண ஜாலம்.

பாரேதான்யெழுநூற்றுயிருபதுக்குள் பகருவேன்கோகர்ணஜா லந்தன்னை, நேரேதான்நெடுஞ்சாலமாளிகைக்குள் நேர்மையுடன்இ டையொன்றுநாட்டியேதான், வாரேதான்நெடுங்கம்பினாலுபக்கம் வா குடனேதானிறுத்திவிட்டம்பூண்டு, சேரேதான்மேல்வட்டங் கயர்கள் மாட்டி சிறப்புடனேகீழ்வட்டம்மணிகள்மாட்டே. ௱௬

மாட்டவேநடுக்கம்பந்தன்னிலேதான் மதிப்புடனேமேற்சிகரம் நின்றுகொண்டு, ஓட்டமுடன்கயறுதனைப்பிடித்துக்கொண்டு ஓங்கா ரசப்தமுடன்சுத்திவந்து, நாட்டமுடன்தரணிதனைபண்ணூர்ந்துபார் த்து நயமுடனேகுளிகைதனைவாயிற்பூண்டு, தேட்டமுடன்துதிக்கை யிலேகரணந்தன்னை தெளிவாகக்காணுதற்குஜாலங்கேளே. ௱௭

கேளேதான்வஞ்சனமாம்மையைத்தீட்டி கெவனமுடன்லாடம தில்வசியம்பூண்டு, பாளேதான்போகாமல்கருவுதன்னைபாங்குடனே தேகமதிற்பூசக்கேளு, நாளேதான்வாண்ருபங்கெஜரூபமாக்கி, நாணி லத்தின்மேலிருந்துகுதிப்பாயானால், சூளேதான்சகஸ்திரமாம்யானை தோற்றம் சுந்தரனேபார்வைக்குவாகாயந்தானே. ௱௮

தானனசகஸ்திரமாம்பானைரூபம் தகமையுடன்மாந்தரெல்லாங் காணலாகும், பானனபராபரத்தைகாணமாட்டார் பாரினிலேகோக ர்ணவித்தைகாண்பார், தேனனவித்தையதுகோகர்ணவித்தை தேச த்தில்கிட்டாதுமாந்தருக்கு, வேனனசீனபதிதேசத்தார்கள் விருப்ப முடன்செய்கின்றஜாலமாமே. ௱௯

ஆமேதான்மச்சென்றமாளிதன்னில்அப்பனேகோகர்ணவித்தை செய்வேன், தாமேதான்கயர்தனிலேமேலேநின்று தாக்கானவூசியெ ன்றகாந்தந்தன்னால், வேமேதான்வுச்சாணிதன்னிலுப்பா வேகமுட

ன்னின்றுகொண்டுகரத்தைவீச, சாமேதான் சகத்திரமாங் கரங்கள் தானும் சரஞ்சரமாய்வந்துவிழக்காணலாமே. ௱௰

காணலாம் வஞ்சனமாங்கருவினலே காசினியில் வெகுகோடி வித்தைகாண்பீர், பூணலாம்மந்திரத்தின்வசியத்தாலும் போக்கானபி ரணவத்தின் மாறலாலும், தோணவேதேவதையும் வசியத்தாலே தோற்றமுள்ளகருவியிடபேதத்தாலும், நாணவேசதாகாலம்மாளிசெ ன்றுநாட்டமுடன்ஜாலவித்தையாடலாமே ௱௰௧

ஆடலாம்ஜெககோடிபதிகள்கோடி அப்பனேவெகுகாலமிருந்து கொண்டுதேடலாம்சின்மயத்தின்கேசரமாம்வித்தைதெளிவுடனேஆ டுதற்குபின்னங்கேளு, கூடலாம் கேசரத்திலிருந்துகொண்டு கோடா னகோடிவித்தையாடலாகும்நீடலாம்வானரத்தின்வித்தைகேளும்நெ டிதானஅங்குதனர்வித்தையாமே ௱௰௨

வித்தையிலேயின்னமொருவித்தைகேளும் வீரனும் அங்குதனர் வனுமார்தானும், நித்தமுடன்வஞ்சனமாமையைத்தானும் நீடுறவே வுள்ளங்கை தன்னிற்ருக்கி, சுத்தமுடன் கேசரத்திலிருந்துகொண்டு துப்புரவாய்வட்சரத்தையோதும்போது மத்திபத்தில்நடுமையமிருந் துகொண்டுமௌனிலத்தில் வஞ்சனத்தைப்போவாரே. ௱௰௩

போடயிலேஜாதிவர்ணஞ்சொல்லக்கேளும் பொலிவானநீலவி ழித்தானுமாகா, நீடயிலேபூனையென்றநேத்திரமாகும் நீடாழிவஞ்ச னத்தைப்பார்க்கவென்ருல், கூடயிலே குபேரனென்றபட்டணந்தா ன் குவலயத்தின்நிதிகளெல்லாங்காணலாகும், தேடயிலேவனுமானு ம்முன்னேநிற்கும் தெளிவானதேவதையுங்காணலாமே. ௱௰௪

காணயிலேபிரணவத்தையோதும்போது கருவானமைதனிலேமகி மைகேளு, தோணவே வீரபத்ரன்முன்னே நிற்பான்தோற்றுகையில னுமாருங்கொண்டுசெல்லும், பூணவேஸ்ரீராமர்வைத்தபொன்னேபொ ங்கமுடன்பாராளவஞ்சனத்தில், நாணவேயனுமாரும் மிகவேசொல் லும் நாட்டமுடன்நிதியெடுககஜாலமாச்சே. ௱௰௫

போகர் அஞ்சனத்தில்ராமர்திரவியத்தையெடுத்தது.

ஆச்சென்றுவிடுகாதேயின்னங்கேளுஅப்பனேயான்கண்டவரை க்குஞ்சொல்வேன், நாச்சலுடனெழுநூற்றுசொச்சம் வீட்டில்நடுவா னமத்திமத்தில்சதுரம்போடு, வீச்சுடனேபதினேந்துவனைதான்போ டுவிவரமுடன்கறுக்குவறைபதினேந்தாகும்ஏச்சலுடன்நெடுக்குவறை பதினேந்தாகும், எழிலானநூத்தியம்பதனையுமாச்சே. ௱௰௬

அறையானவீடுமுனைகுலம்போடு அப்பனேரீங்காரங்கொண்டு மாறு,திறையோடுலுங்காரமுள்ளடக்கி திட்டமுடன்எட்டியென்றபீடமீதில்முறையோடு மௌனமதாயிருந்துகொண்டு மூன்றெழுத்துமைந்தெழுத்தும்ஓதித்திரு. சிறைபானவைரவனும்முன்னேநிற்பான் சீறலுடன்பிரணவத்தையோதுவீரோ. ௱௰எ

ஓதுகையில்அஞ்செழுத்தையுள்ளடக்கி உத்தமனேஎவ்வெழுத்தைமவ்வெழுத்திலூணி,தீ துறவேபகையாளிதன்னைநோக்கிதிட்டமுடன்கற்பூரவொளிதான்கொண்டு,காதலுடன்வட்சரத்தையுள்ளமர்த்தி கருவாகச்செய்பவனே சித்தனுகும், நோதலுடன்வஞ்சனத்தைதகையில்திட்டி நோக்கமுடன்செய்பவனேசித்தனுமே. ௱௰அ

ஆமேதான்பிரணவத்தையுச்சரித்து ஆண்டவனைத்தானினைந்துவருளும்வோதி, தாமேதான்பாதாளவஞ்சனத்தை தாரணியிலெல்லவருங்கண்டுமெச்ச, வேமேதான்சத்ருமித்துருவுதானும் வேகமுடன் சென்றுமல்லோவுறவுபேசி நாமேதான்ரீங்காரம் வுள்ளடக்கி நாட்டமுடனுங்காரம்உள்ளேபூட்டே. ௱௰கூ

பூட்டுகையில்பிரணவத்தையோதும்போது பொங்கமுடன் சத்துருமித்துருவுமாகும் நாட்டுகையில் நசி, மசி,மசியென்றேயோத நாசமடாவஞ்சனத்தின்தயிலத்தாலே, வாட்டுகையில்குறளிமுதல்பூதபேதம்வஞ்சனுதேவிமுதல்வசியமாகும் கூட்டுகையில்காலனெவனெதிரேநிற்கான் துரைராஜவஞ்சனத்தின்மையின் போக்கே. ௱உ௰

போக்கானகர்லாங்கிநாதர்பாதம் பொங்கமுடன்யான்வணங்கிசீனதேசம், நோக்கமுடன்காடுமலைவனுந்திரங்கள்நொடிக்குள்ளேசென்றுமல்லோவேதைபார்த்தேன்,தாக்கவேசீனபதிதேசத்தார்கள்சட்டமுடனெந்தனையுங்குருவாயெண்ணி, வாக்குடனேகுருமொழியாஞ்சீஷனென்று வசனித்தார்கோடியுகம்வசனித்தாரே. ௱உக

வசனித்தார்சீனபதிமாந்தரெல்லாம் வறைகோடிதிறைகோடிவகுக்கக்கோடி, நிசமுடனேயென்வாக்குமெய்யென்றெண்ணிபூடாழியுலகமெல்லாம்வசனித்தார்கள், தசமுடடேதாரணியி லஞ்சனத்தைத்தாக்குடனே வெகுமாண்பர்செய்துபார்த்து, பிசகில்லாப் பிரணவத்தை மெய்யென்றெண்ணிபேருலகில்மாந்தரெல்லாந்துதித்திட்டாரே.

துதித்தாரேகாலாங்கிநாதர்தம்மை தோற்றமுடன் யென்னுரும்வாசீர்மித்து, மதிப்புடனேயவர்பாதம்தான்வணங்கி வகையுடனே

யெப்போதும்கருணைகூர்ந்து, கதிப்புடனேசமாதிதனி லிருந்துகொண்டு சதாகாலம்லாடமதில்மையேபூண்டு, விதிப்பபனேதானெண்ணி விண்ணின்மீதில்வெகுகாலம் தானிருந்தார்மாந்தர்தாமே. ரஉங

வைத்தியசூட்சமுப்பு.

தாமானவின்னமொரு மாற்கம்பாரு தயவுடனேமாணுக்கள் பிழைக்கவென்று, கோமானும்பங்குனிசித்திரையிலப்பா கொற்றவனே பூநீறுவிளையுங்காலம்,மானுனபூனீறைத்தானெடுத்து மாற்கமுடன்செப்புகிறேன்மைந்தாகேளு, பானுனபூனீறைப்படிதான்ரண்டு பாகமுடன்வாரிவந்துசெப்பக்கேளே. ரஉச

செப்பவென்றால்கற்சுண்ணம்படிதான்நான்கு தெளிவானவமுரியதுபடிதான்பத்து, ஒப்பமுடன்நல்லெண்ணைப்படிதான்வைந்துவுத்தமனே யிரண்டையுந்தான்கலக்கிக்கொண்டு, நெப்பமுடன்நெளிவிறுத்துப்பின்னுங்கேளு,நேர்ப்புடனேதான்காய்ச்சவுப்பேயாகும், துப்பறவேயுப்பதுவு மிகவேபூர்க்கும் துறைபாயுப்பதுவைபத்து முறைகாச்சே. ரஉரு

காச்சிடவேசாம்பலதுசெப்பக்கேளு கருவானசாம்பலதுஎருச்சாம்பலப்பா, நீச்சென்றயெருச்சாம்பல்கொண்டுவந்து நிசமானகுழம்பதுவைத்தானெடுத்து, பாய்ச்சியேசல்லாவைமேலேபோட்டுப்பாகமுடன் குழம்பதுவைமேலேயூத்து, ஏச்சலென்றவுண்டைதனையெடுத்துக்கொண்டு யெழிலானரவிதனிலேகாயப்போடே. ரஉசூ

காய்ந்தபின்புபாண்டமதிலிட்டுமைந்தா கவனமுடன்வரைப்பாண்டம்போட்டுமேதான், தோய்ந்திடவேமல்லியென்ற யிலையைமைந்தாசுத்தமுடன்வதன்மேலேவைத்துக்கொண்டு,தோய்ந்திடவேமேற்சட்டிக்கொண்டுமூடித் தெளிவாகசீலையதுவலுவாய்ச்செய்து, பாய்ந்திடவேதீயெரிப்பாய்நாலுசாமம்பதமுடனேதானெடுப்பாய்பின்னுங்கேளே. ரஉஎ

பின்னுங்கேள் யேரியிலேவளர்ந்தபிண்டம் போரானமிறச்சியுடன்வதிகங்கொண்டு, வின்னமுடன்துவாரமதுவிட்டுமைந்தா விவரமுடன்வீரமதுவொன்றேயாகும், கன்னலுடன்பச்சையென்ற பூரந்தானும்கருவானபூனீறும்சரியாய்ச்சேர்த்து, பன்னவேசிப்பிக்குத்துவாரமிட்டுப்பாலகனேயிம்மருந்தில் குன்றிபோடே. ரஉஅ

குன்றியாமருந்ததுதான்போட்டபின்பு குமுறவேதளவாயாஞ்சட்டிதன்னில்,வென்றிடவேயடுக்கடுக்காய்பரப்பிமைந்தாமேல்மூடி

காற்றில்லாவொடுக்கந்தன்னில், பன்றிடவேவைத்தவுடன் சலமிறங் கும் பட்சமுடன்ஜெயநீரையெடுத்துபாலா, தன்றிடவேமேற்சொன் னபூநீற்சேர்த்துச் சாங்கமுடன்ருனைப்பாய்சாமம்நாலே. ௱உகூ

நாலானசாமமது வரைக்கும்போது நலமானவுரவண்டுகுழியா னைதானும்,காலானசூதமுடனபச்சைபூரம்கருவானவாறுபுள்ளி வண் டுஞ்சேர்த்து, பாலானசீனமுடன்சாரஞ்சேர்த்து பாகமுடன்தான ரைப்பாய்லகுவதாக, வேலானபில்லையதுதட்டிமைந்தா வேகமுடன் ரவிதனிலேகாயப்போடே. ௱௩௰

போடேதான்பில்லையதுகாய்ந்தபின்புபொங்கமுடன் பேரண்ட ஞ்சுத்திசெய்து,நீடேதான்வகல்தனிலேகீழ்பரப்பிநேர்மையுடன்பில் லைதனைமேலேவைத்து,தூடேதான்மேலுமந்தப்பொடியைப்போட்டு துப்புறவாய்மேல்மூடிசீலைசெய்து, காடேதான்ரவிதனிலேகாய்ந்தபி ன்பு கனமாகக்கோழியென்றபுடந்தான்போடே. ௱௩க

புடமதுதான்தீயாறியெடுத்துப்பாரு பொங்கமுடன் சுண்ணம் பாமட்டிபோலாம், திடமுடனேபத்துமுறையிப்படியேபோடு திறமா னசுண்ணமதுவாகும்பாரு, தடமானசுண்ணமதுயெடுத்துக்கொண்டு தகமையுடன்பேரண்டம் சிற்றண்டதோடு கடமானசிப்பியொடுக ண்டுதானும் கருவானநத்தையொடுசமனதாமே. ௱௩உ

நத்தையுடனிவையெல்லா மொன்றாய்க்கூட்டி நலம்பெறவேசி ற்றண்டக்கருவாலாட்டி, முத்திபெறமூசையிட்டுவூதிப்பாரு வுத்தம னேசுண்ணம்பாயிருக்கும்பாரு, பத்தியுடன்வுலையில்வைத்து வூதும் போதுபாங்கானசுண்ணம்பாயிருக்கும்பாரு, வெத்தியுடன்சுண்ணம தையெடுத்துக்கொண்டுவேதாந்தத்தாயினதுவருளைப்போற்றே. ()

போற்றியேசுண்ணம்பைத் தானெடுத்துப் புகழாகமூசையொ ன்றுபிடித்துமேதான், ஆற்றியேமுன்சொன்னமுப்புச்சுன்னம் அப்ப னேதானெடுத்துமூசையிட்டு, தூற்றியேதேவதைக்குப்பூசைசெய்து துறைபோலமுறைபோலசீலைசெய்து,மாற்றியேசுண்ணம்புச்சீலைசெ ய்துமயங்காமல்புடம்போடநீறிப்போமே. ௱௩௪

நீறியதோர்பற்பத்தையெடுத்துக்கொண்டு நினைவாகயிப்படியே பத்துமுறைபோடு, கூறியதோர்பற்பமது ருபற்பமாச்சு குணமான காரமென்றகாலனுகும், மீறியதோர்சரக்கெல்லாங்கொல்லும்காலன் மிக்கானபற்பமதுகுருவுமாகும், தேறியதோர்பற்பமதி லெந்தபாகம் தெளிவாகச்செய்தாலும்தாக்கிடாயே. ௱௩௫

தாக்கவென்றால்கிரதங்கள்லேகியங்கள் தலைகமையுள்ளசெந்தூ ரம்பற்பம்யாவும், நோக்கமுடன்குளிகைகள்கபாடம்யாவும் நுணுக் கமுடன்மாத்திரைகள்கட்டுவகையாகும்,சூக்கமுடன்தயிலங்களெண் ணை முதல்யாவும் சுளுவானசூரணங்களரசாயனங்கள்முதலாய், தூக் கமுடன்கடிகளவுபட்டால்போதும் துறையானமருந்தெல்லாம்வீறு மாமே. ௱௩௬

வீறானவவுஷதங்கள் முப்பூபட்டால் விட்டுப்போகுமடாபி ணிகளேது, கூறானவவுஷதங்கள் காரமெத்தகுடிலமுடன் நோயெல் லாஞ்சண்ணும்பாரு, நீரானநேத்திரங்கள்சிவந்துகாட்டும் நெடிதான மேனியதுகறுப்புமாகும், தூரானநோயெல்லாங்காடேபோகும் துப் புறவாய்முப்பூவின்மகிமைதானே. ௱௩௭

தானானமுப்பூவின்மகிமையாலே சட்டமுடன்சரக்கெல்லாங்க ட்டும்பாரு, பானானசூதமது துள்ளியோடும் பாங்கானகெந்தியதுமீறி ப்போகும், தேனானலிங்கமதுசெந்தூரிக்கும் தேற்றமுடன்பூரமதை ப்பொருமிக்கொல்லும், கோனானவீரமதுபற்பமாகும் கொடிதானபா ஷாணம்சாகும்பாரே. ௱௩௮

பாரேதான்நவதாது முப்பத்திரண்டும்படுமுன்னேசரக்கெல்லா மடிந்துகொல்லும், நேரேதான்லவணவகையிருபத்தைந்தும் நேரா னகற்கவகை முந்நூற்றுச்சொச்சம், கூரேதான்சொன்னபடி சூட்ச முப்பு குன்றியிடைபட்டாக்காலெல்லாமாளும் வீரேதான்சரக்குக ்கு நெடுங்காலனுகும் மிக்கான துருசுக்குகுருவுமாமே. ௱௩௯

குருவானகண்டரதுகுருவுமானால் குவலயத்தில் கோடிவித்தை யாடலாகும், திருவானவாமியவள்முன்னேநிற்பாள் திக்கெல்லாமெச் சுதற்குசித்தனுவாய், மருவானநாதாக்கள்ரிஷிகள்தாமும் மதிப்புட னேயுந்தனுக்குவரமுமீவார், கருவானவுளவறிந்தசித்தனுவாய் காசி னியிலுன்னைப்போல்சித்தனுண்டோ. ௱௪௰

உண்டோதான் வையகத்தில் சித்தனுண்டோ ஓகோகோயுந்த னையும்ரிஷிதானென்பார்,திண்டானதேவமுனியுன்னையென்பார் திற மையுள்ளநாதாக்கள்குருவேயென்பார், சண்டாளமானதொரு கருமி மாண்பர் சட்டமுடன்பொய்நாதனென்பார்கண்டீர் கண்டாலும்விடு வாரோ சித்துருபம் காசினியில்சபித்திடுவாருண்மைபாரே. ௱௪௧

(சித்தர்கள் முப்பூவைக்கேகுதல்)

பார்க்கவென்றால்நாதாக்கள்சித்துருபம் பட்சமுடன்வுந்தனுட வருகில்வந்து, தீர்க்கமுடன்வருந்தியல்லோமுப்புகேட்பார் திசுமுட

னேகுருவெனக்கு வேண்டுமென்றுர் கார்க்கவென்று மஞ்சாடிகுரு கேட்டாலும் கர்த்தனேயுந்தனிடகடாட்சமென்று,மூர்க்கமதுவாரா மல்முன்னேநின்று முடிவணங்கிபடிபணிந்துமொழிசொல்வீரே. ()

மொழியானவார்த்தைக்குமுன்னேனின்று மோசமதுவாராமல் முடிவுசொல்லி, வழியானதுறையோம்மார்க்கஞ்சொல்லி வகையுட னேயவர்தமக்குத்தொண்டுசெய்து,பதியானவார்த்தைக்குமிடங்கொ டாமல்பட்சமுடனவர்மீதில்கிருபைவைத்து, சுழியானவாசிமுனைதன் னைநோக்கிசூட்சாதிசூட்சமதைக்கேட்டிடீரே. ௱சங

கேட்டளவிலுன்மீதில்கிருபைவைத்துகேழ்விக்குவுத்தாரவிடை யுஞ்சொல்லி,நாட்டமுடன்பரிபோகமிகவுஞ்செய்துநயமுடனேசரச முறைதாமுறைத்து, தேட்டமுடன்மனதிறங்கச்செய்துகொண்டுதெ ளிவானகுருவதனையடைந்துகொள்ள, வாட்டமுடன்லகுவுடனே பி ன்னுங்கேட்பார் வகைமோசம்போகாதேமன்னுகேளே. ௱சச

சித்தர்கள் மகிழலேகியம்.

கேட்கவேயவர்தமக்குகளிப்புகொள்ள கெவனமுடன் குளிகை பென்றலேகியங்கேள், சூட்கமுடன்மாணுக்கள்பிழைக்கவென்றுதொ ல்லுலகிலடியேனுங்கருணைகூர்ந்து, நீட்கமுடன்கோரக்கர் மூலிதன் னைநேர்மையுடன்தானெடுப்பாய்சேர்தானொண்டு, வாட்கமலவட்ட மென்றபாண்டந்தன்னில் வகையுடனேகாலாங்கிசொற்படிக்கே. ()

சொல்லானசொல்லுக்குகுறைநேராமல்தோற்றமுடனுவின்பால் படிதான்ரண்டு, புல்லானசீலைதனைவேடுகட்டி புகழானகெஞ்சாவை மேலேவைத்து, கல்லானபாண்டமதைமேலேமூடி கடிதானவாலுகை யாமேலேவைத்து, வெல்லவேதீயெரிப்பாய்சாமமொண்டு விருப்பமு டன் சுண்டமட்டுமெயெரித்திடாயே. ௱சரு

எரிக்கவேயிப்படியேபத்துமுறைதானும் பெழிலானகெஞ்சாவை சுத்திசெய்து, வெரிக்கவசம்போவதற்குயின்னஞ்சுத்தி வேகமுடன் சொல்லுகிறேன்மைந்தாகேளு, பொரிக்கவசம்நிம்பழத்தின்சாற்றினு லே பொருந்தவேபத்துமுறைமுன்போற்றீட்சை, சரியுடனேசெய்யு கையில்கெஞ்சாசுத்தி சட்டமுடன்காலாங்கியுரைத்ததாமே. ௱சசா

தாமானகெஞ்சாவை யெடுத்துக்கொண்டுசட்டமுடன்ரவிதனி லேகாயப்போடு, காமானகல்லுரலில்போட்டுமைந்தா கருவாகத்தா ளிடித்துப்பொடியாய்ச்செய்து, வேமானதொருவபிணிதன்னை வேக மதுபோவதற்குப்பின்னுங்கேளு, சாமானமாகவேதான்யெளநீர்தன் னில் சட்டமுடன்றீட்சையது பத்துசெய்யே. ௱சஅ

செய்யவேயபினுக்குதீட்சையப்பா செப்புகிறேன்வருண்மைந்தா யின்னம்பாரு, துப்பவேபசும்பாலாம்பசுமோராகும்துப்புறவாய்சுத் தியதுநன்றுய்ச்செய்து, பெய்யவேபத்துமுறைதீட்சைதானும் பே ரானவபினுக்குச்செய்யவேண்டும், உய்யவேதீட்சையது யானபின்பு வுத்தமனேகடைசரக்குசெப்பக்கேளே. ௱சகூ

கேளேதான்சுக்குடனேவால்மிளகுதானும் கெடியானகெசகசா மராட்டிமொக்கு, வேளேதான்லவங்கமுடன்லவங்கப்பட்டை வேக முடன்ஜாதிக்காய்சாதிப்பத்திரி, கோளேதான்நேராமல்ஜாஜிராவும்கு ணமானருமஸ்திபாஜிபிந்து, பாளேதான்போகாமல்பேதாவும் பா வ்குபெறலவங்கமென்றபட்டைதானே. ௱ருய

தானனபட்டையுடன்யிம்பூராவும்தாக்கான மாசிக்காய்தான்றி க்காயும், மானனகடுக்காயும்மகரப்பூவும் மாசற்றயேலமுடன்நெல் லிக்காயும், கோனனகுமட்டியின்விரைபினேடு கொடிதானவூமத்தி ன்விரையுந்தானும்,பானனகெஞ்சாவின்விரையுந்தானும் பளிங்கான கொடிவேலிமூலியாமே. ௱ருக

ஆமேதான்மூலியொடுசூரைவித்து அப்பனேவேலியென்றபரு த்திதானும், தாமேதான்வலம்புரியுமிடம்புரியுமாகும் தாக்கானவமு க்கராலிஸ்கோல்தானும், வேமேதான்தாதுமாதுளையின்வேறும் மிக் கானவாத்தலரிசுருளிதானும், நாமேதான்சொன்னபடி யிருவேலிகூ ட்டி நயம்பெறவேசூரணமாய்ச்செய்துகொள்ளே. ௱ருஉ

கொள்ளவேகற்கவகை யின்னஞ்சொல்வேன் கோளாறுநேராம ல்குருபதத்தால், விள்ளவேதக்கோலம்பரங்கிப்பட்டை விருப்பமுட ன்வாலுளுவை திப்பிலியுமாகும், மெள்ளவேயிருசீரக்காட்டுச்சீரம் மேலானவாய்விளங்கம்ஓமந்தானும், அள்ளவேரோஜனேயும்பூலாவா கும் அப்பனேபூமிசக்கரையுமாமே. ௱ருந

சக்கரையுஞ்சீந்திலொடு சதாவேலிதானும் தாக்கானபெருவா கைசிறுவாகைபாகும்,ஒக்கவேதண்ணீரின்மிட்டானுகும் உற்பனமா ம்தம்பலப்பூச்சிதானும, சிக்கவேபாதிரியுமுல்லைதானும் சீராவாந் செங்கழுநீர்ப்பூண்டுமாகும்,தக்கவேசிவகரந்தைவிஷ்ணுகரந்தை சட் டமுடன்சாட்டரணைக்கூடச்சேரே. ௱ருச

சேரவேவசுவாசிமிளகுதானும் சிறப்பானவோமமுடன் ரேவல் சின்னி,திரவேவிச்சியுடனலம்வித்து திறமானபேயத்திவிரையுமாகும்

பாரமுடன்கடலாஞ்சிபட்டைதானும்பாங்கானவெண்ணாகன்பட்டை கூட்டி, வாரவேவிளாம்பழத்தின்வித்துகூட்டி, வருப்பானகலுமிச்ச ன்வித்துமாமே. ௱௫௫

வித்தானநரிமிரட்டிவேறுங்கூட்டி விதமானகரும்பசளைசெம்பச ளையாகும், முத்தானவெள்ளைபென்றகுன்றிதானும் முனையானவரச னுடவித்துதானும், சித்தானகுறிஞ்சாவின்வித்துங்கூட்டி சிறப்புட னேயெட்டியென்றவித்துமாகும், சுத்தானவித்தாதிசரக்கையெல்லாம் சூட்சமுடன்களஞ்சிபதுவெடுத்துக்கொள்ளே. ௱௫௬

எடுக்கவென்றால்சரக்கெல்லாமொன்றாய்க்கூட்டி எழிலானசூர ணமாய்ச்செய்துகொண்டு, தொடுக்கவேமுன்சொன்னசரக்கோடொ க்க துறையோடும்முறைபோடும்சேர்வைகண்டு, கொடுக்கவேசீனிய துபாவுசெய்து கொற்றவனேசூரணத்தைப்போட்டுமேதான், விடுக்க வேநெய்தேனும்விட்டுக்கூட்டி விருப்பமுடன்மெழுகுபதந் தன்னிற் கிண்டே. ௱௫௭

கிண்டயிலேமதுரமாம்திராட்சிதானும் கிளைபானகதலியிடதே னுமாகும், பண்டுடனேகொடிமுந்திரிரசமுமாகும் பாங்கானகுங்கும ப்பூகஸ்தூரிதானும், விண்டிடவேவாலுகைபாமடுப்பிலேற்றி வீரான ஜலமதுவும்போகக்கிண்டி, கண்டுமேமெழுகுபதந்தனிலிறக்கி கணப தியைதானினைந்துகருத்தில்நில்லே. ௱௫௮

நிற்கையிலேகணபதியுங் கந்தன்றானும் நிருவாணிமயேஸ்வரியு மெதிரில்நிற்பாள், துர்க்கையெனும்பத்திர காளியம்மன் துறைமுகமா ய்நின்றுகொண்டுகாட்சியீவாள், பற்குணனுமற்சுனற்கு தந்தகாட்சி பாலகனேயுந்தனுக்குமீவாள்பாரு, விற்பிடித்தமன்னரெல்லாங்காளி க்கல்லோ விண்ணுலகில்தான்நடுங்கிவிடுபட்டாரே. ௱௫௯

பட்டாரேராஜர்முடி மன்னரெல்லாம் பத்திரகாளியம்மன்சாப த்தாலே, கெட்டலைந்துமாண்டதொருவேந்தரெல்லாம் கெடியானயெ ந்தனதுகுருவினாலே, விட்டகுறையிருந்ததொருநேர்மையாலேவேதா ந்தகாலாங்கிநாதர்தம்மால், பட்டமுடிமன்னரெல்லாமீண்டுசாபம்பா ரினிமேல்நெடுங்காலம்வாழ்ந்திட்டாரே. ௱௬௰

வாழ்ந்திட்டகாலமதுதன்னிலேதான் வாருடனேமாந்தரெல்லா மொன்றாய்க்கூடி, தாழ்ந்திட்டரிஷிகோடிமுனிவருக்கு தகமையுடன் வேள்வியத்தைச்செய்யவென்று, ஆழ்ந்திடவேதம்கருத்தில் மனதிலுன் னி அப்பனேசீனபதிமார்க்கஞ்சென்று, சூழ்ந்திட்டபோகனைதானடி வணங்கி சூட்சமுடன்பாகமதை யறிந்தாந்தாமே. ௱௬௧

அறிந்துமேகாயகற்பலேகியத்தை அன்புடனே நாதாந்தரிஷிக ளுக்கு, செறிந்துமேபாகமுடன்செய்துமேதான் சிறப்புடனேயுண்ப தற்குகற்பமீய்ந்தார், முறிந்துமேயாணந்தகற்பந்தன்னை முப்பொழு துமுண்டுமெல்லோகளித்துமேதான், வெறிந்துமேசினமதுவுமொடுங் கியேதான் வெட்டவெளிதனிலிருந்துகும்பித்தாரே. ௱௬௨

கும்பித்துநிற்கையிலேசிவயோகிதானும் குவலயத்தில்மானிடர் மேலிச்சைகொண்டு, தம்பனங்கள்முதலானவசியமார்க்கம் ஜெகத்தி லேவஷ்டவிதகருமம்யாவும், சும்பனமாம்கொக்கோகலீலையாவும்சூட் சாதிசூட்சமெல்லாஞ்சுளுவாய்ச்சொல்லி,சம்பகத்திலிருந்துக்கொண் டுசெதாநிஷ்டையாவும் சட்டமுடன்தாமறிந்தார்பலமாந்தர்தாமே. ()

தாமானசித்தர்களுமுனிவர்தாமும் சதகோடிசூரியர்போல் பிர காசித்து,பூமானுங்கருவாளிபானபேர்க்கு புகழுடனேயிப்பாகஞ்சொ ன்னாரல்லோ, காமானமாகவேதான்காயகற்பம் கருத்துடனேசெய் தார்கள்மனுக்கள்கோடி, நாமேதான்சொல்லிவிட்டோம்மறப்பையெ ல்லாம் நலமுடனேநாதாக்கள்சினவார்பாரே. ௱௬௪

லேகியத் தத்துவம்.

பாரேதான்லேகியத்தின்பெருமைகேளுபாருலகிலறிந்தமட்டுஞ் சொல்வேன்பாரு, நேரேதான்தூதுளங்காய்ப்பிரமாணந்தான் நேர் மையுடன்வுண்டவர்க்குமுறைமைசொல்வேன், சேரேதான்ஆவின்பா ல்கொள்ளவேண்டும், செம்மையுடனவர்தமக்குக் காட்சிமெத்த, கூ ரேதான்கெவுனமுடன் குளிகைகொண்டு கொற்றவனேவதிசயங்கள் சொல்வார்காணே. ௱௬௫

காணவேவர்னுலகில்போகுஞ்சித்தர் கண்ணுக்குற்றோற்றுவது மெய்போலாகும், பூணவேசூரியனுமெதிரேநிற்பான் பொங்கமுடன் சந்திரனுந்தூரேநிற்பான், வேணவேலாகிரிகளுண்டபோது வெகுவா னவினோதவகைசொல்லலாகும், தோணவேநேத்திரங்களிருந்துகொ ண்டு தொலலுலகில்கண்டதெல்லாம்பினத்துவாரே. ௱௬௬

பினத்துவார்ஆகாசமார்க்கந்தன்னை பெருமையுடன்அதிசயங்க ள்மிகவுஞ்சொல்வார், நினைப்புடனேகண்ணுக்குத்தோற்றம்யாவும் நி லையானவதிசயம்போல் கூறுவார்கள், புனப்புடனேபித்தமதுமேலே சொக்கி புகழானகபாலத்தை வரட்சிசெய்யும், தினப்புடனேசரீரமெ ங்கும்தினவுண்டாகும் திரளானதேகமதுசொக்கிப்போமே. ௱௬௭

சொக்கவேகாயாதிபூரணத்தால் தொல்லுலகிலதிசவகைமெத்த க்கூறும், சிக்கவேமலைகுகைகள்வனாந்திரத்தில் சிறப்புடனேசித்தர்க

ளைக்கண்டேனென்பார், ஒக்கவேயவர்களிடங்கூடிருந்து உத்தமனே காயகற்பங்கொண்டேனென்பார், தக்கவேகைலயங்கிரிகண்டேனெ ன்பார் சாயுச்சியபோதையிலேயிருந்தார்பாரே. ௱௬௮

போதையிலேஞானமுண்டுவெருளுஞ்சொல்வார் பொங்கமுடனே திசபங்கள்வினைகளுஞ்சொல்வார், தீதையிலேகற்பமதுவுண்டபோது திரளானதத்துவங்கள்மிகவுஞ்சொல்வார், பாதையிலேயிருந்துகொ ண்டுகண்ணைமூடி பாரினிலேபரியாசவார்த்தைசொல்வார், வாதையி லேயன்னமதுதேவையில்லை வைகுண்டப்பதிதனிலேகேட்பார்பாரே

கேட்கையிலேலாகிரிகள்மிகவுமிஞ்சி கெடியானவடிதடிகள்மிக வுண்டாகி, மூட்கமுடன்கீழ்விழுந்துபிரண்டெழுந்து முனையானகும் பகத்திலிருப்பேனென்று, தாட்கமலபீடமதில்வீற்றிருக்கும் தாயான மயேஸ்வரியைக்காண்பேனென்றும், சூட்சமுடன்சுந்தரனார்தான்தா னென்று சொல்லுவார்பலதுதியுஞ்சொல்லுவாரே. ௱எ௰

சொல்லுவார்பரிபூர ணனந்தத்தை சூட்சமுடன் ஞானவெளி சோதியென்பார், வெல்லுவார்லாகிரியைக்கடந்தோமென்பார் வேதா ந்தவெட்டவெளியறிந்தோமென்பார், புல்லுவார்பூவுலகைமறந்தோ மென்பார் பூதலத்திலென்னைவிடகுருவோவென்பார், அல்லலற்றுமா ய்கைதனைமறந்தேனென்பார் அப்பனேகுளிகையுடவேகந்தானே. ()

போகர் சிறுகற்பம்.

தானனயின்னமொருகருமானங்கேள் தகமையுடன்காயாதிகற்ப ந்தன்னை, பானனகாலாங்கிநாதர்பாதம் பாரினிலேதாள்பணிந்துவடி பேன்றானும், தேனனகற்பமதுசிறுகற்பந்தான் தேசத்தில்மாந்தர்க ள்பிழைக்கவென்று, மானனவபினியதுசேர்தானப்பா மார்க்கமுடன் கெஞ்சாவின்சேர்தானென்றே. ௱எ௨

ஒன்றான்பிரண்டையுந்தான்தேனையூட்டி வுத்தமனேகல்லுரலிலி டித்துத்திரு, பன்றானபுகையிலையைமேலேசுத்தி பாங்குடனேயெருக் கிலையைவதன்மேல்சுத்தி, நன்றானபனைவெல்லங்கவகஞ்செய்துநலமா கபூமிதனில்புதைத்துப்போடு, வென்றிடவேமண்டலந்தான் சென்ற போது விருப்பமுடன்தானெடுத்துசெப்பக்கேளே. ௱எ௩

செப்பவென்றால்கவசமதைநீக்கிப்போடு தெளிவுடனேயபினிய துகாரமாகி,ஒப்பமுடன்கோரக்கர்மூலியாலே ஓகோகோமகிமைகளு மிகவுண்டாகும், வெப்பமதுவபினிக்குமிகவுண்டாகி வீறுடனேபித்த மதுவதிகங்காட்டும், தப்பிதங்கள்நேராமல்வபினிக்கேதான் சாத்து கிறேன்சுத்திவகைசொல்லக்கேளே. ௱எ௪

சொல்லவென்றால்பன்னீரால் மைந்தாயீயும் சுத்தமுடன்தான ரைப்பாய்நாலுசாமம், வெல்லவேதிராட்சிபென்றபழரசத்தால்மேன் மைபெறவெண்சாம மறைப்பாயப்பா, புல்லவேமலைத்தேனு மிரண்டு சாமம் புகழுடனேதானறைப்பாய் புதல்வாகேள், செல்லவேமை போலவரைத்துமேதான் சீர்பெறவேசிமிழ்தனிலே பதனம்பண்ணே.

பண்ணவேகுளிகையது தூதுளங்காய் பாகமுடன்றானெடுத்து வருந்தும்போது, நண்ணவேகாயாதிகற்பமாகும் நலமானகண்ணிர ண்டுஞ் சொருவல்கொஞ்சம், எண்ணவேமயக்கமது வதிகங்காணும் யெழிலானபுன்னகையு மிகுதியாகும், தண்ணமுடன்தேகமதுகாந்த லாகும் சதாகாலம்நிஷ்டையிலே யிருப்பார்தாமே. ௱எசு

தாமானசெபந்தனிலேயிருந்துகொண்டு சதாகாலநிஷ்டையிலே வழியுந்தேடி, சேமமுடனுந்தமக்குமொழியுஞ்சொல்லி சிறப்புடனே யாசீர்மப்பேருறைத்து, வேமமுடன்சோடவுப சாரமோதி வேகமுட ன்பிரணவத்தை மனதிலெண்ணி, நாமமுடன்காலாங்கிதனைநினைந்து நவின்றிட்டேன்போகரிஷி நவிலத்தானே. ௱எஎ

காயகற்ப சூரணம்.

தானனையின்னமொரு கருமானங்கேள் சாற்றுகிறேன்மாணுக்க ள்பிழைக்கவென்று, கோனனையெனதையர் காலாங்கிநாதர் குருபதத் தைவடியேனுந் தாள்பணிந்து, வேனனகாயகற்பசூரணத்தை விருப் பமுடன்யானுரைப்பேன் பின்னுங்கேளீர், மானனமகதேவ ரிஷிகள் தானும் மானிலத்தில்மறைத்துவைத்தார் பான்மையாமே. ௱எஅ

பான்மைபாம்கொங்கணரு மிந்தபாகம் பாரினிலேகளங்கமறச் சொல்லவில்லை, மேன்மையுடனகஸ்தியரும் புலஸ்தியருக்கப்பா மே தினியில்விளக்கமறச் சொல்லவில்லை, வாண்மையுடன்புலிப்பாணிக்கி ந்தபாகம்வசனித்தார்ஆயிரத்துவன்னூருக்குள், நோன்மையுடனெனை ப்போலச்சொன்னாரில்லைநுட்பமதைமாந்தர்க்குச்சொன்னேன்பாரே.

பாரேதான்சுக்குடனே வாய்விளங்கம் பாங்குடனேதிப்பிலியும் வசுவாசிதானும், நேரேதான்மிளகுடனே தான்றிக்காயும் நேரான கடுக்காயுநெல்லிக்காயும், கூரேதான்சித்திரமாம்மூலத்தோடு கொடி தானசிவதைவேர் சித்தாமுட்டி, வீரேதான்வாலுளுவை சோம்புயேல ம் விருப்பமுடன்செங்தோன்றிவேருமாமே. ௱அ௰

வேருனபெட்டிவேர் துத்திமூலம் வெளியானவாவாரை பஞ்சமு லம், கூருனதாதுமாதுளைபின்வேறுங் குணமானசெங்கொட்டை சிவ

ஞர்வேம்பு, நாருனசெங்காலிவேறிரேடு நறுக்கந்தம்பிஞறிபட்டை தானும், பாருனபூதமாம் விருட்சத்தோடு பாங்கானகருக்குன்றி வேறுமாமே. ௬௮௧

ஆமேதான்கருங்காலி பட்டைதானும் அப்பனேசெஞமைறவேறிரேடு, தாமேதான்வெம்பாடம்பட்டைதானும் தாக்காலகொழிஞ்சியிடபட்டைமூலம், வேமேதான்விராலியிடமூலந்தானும்விரையான பேய்மிரட்டி பட்டைமூலம், நாமேதான்சொன்னபடி வகிற்கட்டைதானும் நலமானசந்தனமும் செஞ்சாந்துமாமே. ௬௮௨

சாந்தானபூவந்திபட்டைதானும் சதுரானவெண்ணுவல்பட்டையோடு, காந்தமெனும்வேங்கையுடபட்டைதானும் கருவானவுதிரமாம்மூலத்தோடு, பாந்தலெனும்கொங்கலவன்மூலத்தோடு பளிங்கானவிராலியிடமூலந்தானும்,வேந்தர்கைக்கோவூன்றிவிருட்சமூலம்விளைவானபட்டையுட முலந்தானே. ௬௮௩

மூலமொடுகரும்பசளை செம்பசளைதானும் முஷ்டியுடன்கருவாகைபெருவாகைதானும், சீலமுடன்பற்பாடம் யிம்பூராவும் சிறியாணின்நங்கையுடன்பெரியாநங்கை, தாலமெனும்புளியாரைசிறியாரைதானும் தகமையுள்ளநிலவேம்பு கருவேம்புதானும், பாலமெனும்பொடுதலையாஞ்சீந்திலோடு பசுமையாம்பொற்சீந்தி நற்சீந்தியாமே. ௬௮௪

சீந்திலொடுசெவ்வாழை கருவாழைதானும் சிறப்பானவுப்பதுவும்தானுமாகும், சாந்திமலர்நந்தியா வட்டமூலம் சார்புடனேகொன்றைவேர்புன்னைவேறும், தாந்திகழுஞ்செங்கழுநீர்ப்பூண்டுதானும்தகமையுள்ளவட்டாரிதுத்திமூலம், ஏந்தலெனுமயிற்கொன்றையிருவாட்சிதானும் யென்மகனேவகைக்குஒரு பலமாய்த்தூக்கே. ௬௮௫

தூக்கையிலேதூக்கமது வதிகங்காணு தொல்லுலகில்மூலிவகைசமனதாக, ஏக்கமுடன்மூலவகைரெட்டிப்பாக யெழிலானசூரணமாய்ச் செய்துகொள்ள, நோக்கமுடன்ரவிதனிலே காயப்போடு நுணுக்கமுடன்கல்லுரலில் மாவதாக்கி, பாக்கவேதான்சூரணத்தைச் சுத்திசெய்து பசும்பாலில்புட்டாவி செய்திடாயே. ௬௮௬

செய்யவென்றால்கைபாகஞ்செய்பாகங்கேள் செப்புகிறேன்தளவாயாஞ் சட்டிதன்னில், பையவேயாவின்பால்பாண்டமிட்டு பாகமுடன்சூரணத்தைசீலைமேலே, மொய்யவேபுட்டுபோல் பிசறிவைத்து முசியாமல்மேல்சட்டி கொண்டுமூடி, வெய்யவேதானெறிப்பாய்சுண்டமட்டும் வென்மகனேதானெறிப்பாய் புகலக்கேளே. ௬௮௭

கேளேதான் ரவிதனிலேகாயப்போடு கெணிதமுடனிப்பாகம்ப
த்துபோடு, கோளேதான்வாராமற்சூரணத்தை கொப்பெனவே தா
னெடுத்துசெப்பக்கேளு, பாளேதான்நேராமற்சீனிசேர்த்து பதமுட
னேமண்டலந்தான்கொண்டாயானால், நாளேதான்தேகமதுகற்பமாகு
கும் நளினமுடன்போகரிஷிநவின்றவாரோ. ௫௮௮

வாரானகற்பமென்றசூரணத்தை வாதுடனேகொள்பவனுஞ்சி
த்தனாவார், நேரானசீனபதிமாந்தருக்கு நேர்மையுடன்றானுரைத்த
கற்பமாகும், சீரானகற்பமதுவுண்டபேர்க்கு தேசத்தில்வயதல்லோ
லக்கோயில்லை, காரானகடந்தமுனிசித்தனென்பார் காயாதிகற்பத்
தின்பான்மைதானே. ௫௮௯

தானானகற்பமதுவுண்ணும்போது சதாகாலம்நிஷ்டையிலேயிரு
க்கலாகும், வேனானகற்பத்திற்குறுதிசொல்வேன் வெளியரங்கமாக
வல்லோதிரியவேண்டாம், பானுமதிசூரியனும்பார்க்கவொண்ணா பால
கனேயொடுக்கமதிலிருக்கவேண்டும், தேனானபுளிபுகையுந்தள்ளவே
ண்டும் தேசமதில்காயத்தைநிறுத்துவாயே. ௫௯௧

நிறுத்துகையிலஷ்டாங்கயோகம்வேண்டும் நிலையானசமாதிதனி
லிருக்கவேண்டும், பொறுத்துமேசிவயோகந்தன்னிற்சென்று போக்
கானவாசியைத்தானிழுத்தவேண்டும், கறுத்துமேவாத்துமத்தின் நி
லையைக்காண கலியுகத்தில்வெகுகாலமிருந்தார்தாமும்,மறுப்புடனே
பிறவியதுகாணமற்றான்மானிலத்தில்மடிந்தவர்கள்கோடியாமே. ( )

கோடியாஞ்சித்தர்களுமுனிவர்தாமும் குவலயத்தேகற்பமுண்
டிருந்தார்தாமும், பேடியாஞ்சிலமாந்தரவரைப்பார்த்து பேரின்ப
நிலைதனையேயொளித்தாற்போலும், நாடியேயவர்களிடஞ்சென்றுமே
தான் நயனமுடன்லகுவார்த்தைமிகவும்பேசி, வாடியேயவர்பதத்தில்
கிட்டிநின்றுவாகுடனேகற்பமதைமுறைகேட்டாரோ, ௫௯௨

முறையுடனேகற்பமதைவாங்கிக்கொண்டு மூதுலகில்வெகுபேர்
கள்செய்யவெண்ணி, கறைகண்டவயித்தியன்போல் மனதிலெண்ணி
காசினியில்முறைகெட்டுத்தாருமாறாய், திறைமறவுதெரியாமல்தேர்
ந்தோன்போல திறமையுடனனுபோகந்தெரியாமற்றான், குறைமனை
த்தாய்சூரணத்தைசெய்துமேதான் குவலயத்தில்கெட்டவர்கள்கோடி
யாமே. ௫௯௩

கெட்டலைந்துபோனவர்கள்கோடாகோடி கெவனமுடன் செய்
யாதார்கோடாகோடி, சுட்டலைந்துபோனவர்கள்கோடாகோடி குட்

சமூடன்வயித்தியத்தைக்காணார்கோடி, பட்டலைந்துகெட்டவர்கள் பாடுபட்டு பதமிழந்துபோனவர்கள்கோடாகோடி, திட்டமுடன்சாஸ்திரத்தைப்பாராமற்றான் திடங்குலைந்துமனநலிந்துபோனார்தாமே.

போனாரேமூதுலகில்பெரியோர்யாவும் பொலிவான சாஸ்திரத்தைப் பொய்யென்றெண்ணி, ஏனோதான்மானிலத்தில் சுட்டுக்கெட்டு பேளிதங்களாகவல்லோமாண்டுபோனார், நானோதான்கண்டமட்டுஞ்சாஸ்திரத்தை நன்குடனேயாராய்ந்துபலநூல்கண்டு, பானுமதிசுடர்போலேதிரட்டியல்லோ பாடிவைத்தேன்சத்தகாண்டம் பண்பாய்த்தானே. ௱௯௫

பண்பானசாஸ்திரத்தைப் பாடிவைத்தேன் பாரினிலேமாண்பரெல்லாமறந்துபோனார், திண்பானசீனபதிமார்க்கத்தோர்கள் திறமுடனேகண்டறிந்து யெடுத்துக்கொண்டார், நண்பானசாஸ்திரத்தைமெய்யென்றெண்ணி நயமுடனேபலம்விளையுமென்றுகந்து, கண்பான நூற்கோர்வையாவுங்கண்டு காசினியில்மாந்தருக்குகருதினோமே ()

செப்பிடுவித்தை.

கருதவேயின்னமொருகருமானங்கேள் கானிசியில்மானிடர்கள்பிழைக்கவென்று, துருதமுடன்ஜாலமென்றவித்தைசொல்வேன்தொல்லுலகில்செப்பிடுவித்தைகண்டீர், பருவமுடன்கன்னியென்றபெண்ணைத்தானும் பாங்குடனேஜோஷினைகள்மிகவேசெய்து, உருவமுடன்கைச்சிலையாங்கையிலீந்து உத்தமனேவாளுமொருகையிலீயே. ()

ஈயவேலோகமென்றவாய்வினாலே பெழிலானபிரதமைகளொன்றுசெய்து, மெய்யுடனேரூபமதைதானமைத்து மேன்மையுடன்காந்தமென்றசத்தைதானும்,கைதனிலேதானுருக்கிசேர்வைகொண்டு கசடறவேயிரும்புக்குக்காரமேத்தி, பெய்யவேயிடைகண்டுபினமுங்கண்டுபேரானகருக்குருவுந்தானுங்காணே. ௱௯௮

காணவென்றால்பிரதமைக்கி வுயிரோயில்லை காசினியில்வாயுவென்றரூபமப்பா, தோணவேரூபமதுவார்த்தையில்லைதோற்றமுடன்பார்வையதுஒளியேயில்லை, வேணவேகண்ணுக்குவினோதவித்தை வேடிக்கைப்பார்த்தவர்க்குப்பகடியாகும், ஊணவேவடகரத்தில் பதுமையேந்தி வுத்தமனேயிடகரத்தில்வாளையீயே. ௱௯௯

வாளுடனேகேடகமுங்கையிலேந்தி வளமையுடனிடப்புறத்தில்வாளினாலே, தாளுடனேபூமிதனிலிருந்துகொண்டு தகமையுடன்கேடகத்தைப்பதுமைமீதில், மாளுவதுபோலாகவாளைவீசி வல்லுயினைவாங்குகின்றவீரனைப்போல், கோளுகளுநேராமல்குமரிதன்னால் கொற்றவனேவாளுதனைசக்கரத்திலீயே. ௨௱

சக்கரமாம்வாளுதனைகேடகத்திலேந்திசட்டமுடன்முன்பின்னுய்பிரட்டியேதான், மிக்கவுடல்கீழ்விழவேவாளும்மேலே மேலானவாளுமதுபதுமைகீழே, தொக்கவுடல்பதுமையதுமேலேயாகும் சொல்லுலகில்வாளுமதுகீழேயாகும், தக்கபடிசெப்பிடுமாஞ்சாலந்தன்னில் சட்டமுடன்பதுமையதுதோரொண்ணுதே. உ௱௧

தோர்க்காதுபதுமையதுவாளினுலே தொல்லுலகில்பதுமையதுமேலே நோக்கும், பார்க்கவேலோகத்துமாந்தருக்கு பாங்கானசெப்பிடுஜெகஜாலந்தான், ஏர்க்கவேவதிசயத்தைமிகவேகாட்டும் யெழிலாகபிரமிப்பார்மாந்தர்கண்டீர், மார்க்கமுடன்மாந்திரீகமென்பார்காணீர் யென்மகனேஜாலமென்றவித்தைதானே. உ௱உ

வித்தானவித்தையிதுஜாலவித்தை மேதினியில்ஜெகஜாலவித்தையப்பா சித்தானசித்தர்முனிரிஷிகள்தாமும் சிறப்புடனேபூவுலகிலாடும்வித்தை, சுத்தானகோட்டையிதுயின்னஞ்சொல்வேன்சுருபமென்றகாந்தமதுகோட்டையப்பா, குத்தானகல்லதுதான்நடுமையத்தில் கொற்றவனேசங்கிலிகலணியாய்மாட்டே. உ௱௩

மாட்டையிலேநடுக்கம்பம்மீதிருந்துநடுவானகுத்துக்கால்மீதிறங்கி, கோட்டையதுவாசலதுகாந்தக்கோட்டை சொப்பெனவேநடுவாசல்வந்துநின்று நீட்டமுடன்கன்னிகையில்வாள்கொடுத்து நீளமுடன்நெடுக்குவரைசுத்திவந்து, மூட்டமுடன்கேடகத்தைகோட்டைமீதில் முனைநடுவாம்மத்திமத்தில்முன்னேவையே. உ௱௪

வைத்துமேதலைகீழாய் சுத்திவந்து வள்முடனேகுத்துக்கல் மீதிருந்து, குத்துடனேபிரதமையை கேடகத்தால் குறிப்புடனேநேர்பார்த்துபாரின்மீது, எத்தனுடன்கேடகத்தைகையிலேந்தி யெழிலானபிரதமையைமேலேவைத்து, சுத்தியேகோட்டைவழிதான்கடந்துசூட்சமுடன்பிரதமையைகீழவையே.

கீழானபதிதனிலேபிரதமையும்நிற்க கீர்த்தியுடன்கேடகமுந்தாவிவிளையாட, தாழானபூமிதனில்கேடகமும்நின்று சட்டமுடன்பிரதமையும்யெகிரிமிக்குத்த, சாழான கோட்டைக்குள்சண்டையதிவேகம் சாங்கமுடன்பத்மயுசஞ்சரிமுறிதலாக, நீழானசெகஜாலவித்தையிதுதானும் நீணிலத்திலதிதமெனும்பதுமைவித்தைதானே. உ௱௬

பதுமையாம்கோட்டைக்குள் காவலதிகாரி பாங்குடனேயெதிர்நின்று பேசும்படைதன்னை, புதுமையுடன்பிரதமையைதானெழுந்து புகழ்ச்சியுட

ள்கேடகத்தின்கீழிருந்து, கதுமையுடன்கேடகத்தைதலைமேல்கொண்டு சனி வுடனேசதாகாலம்கூடிக்கச்செய்யும், மதுரமுடன்வெட்சணியால்பேசச்செய்யும் மகாகோடிவினோதங்களின்னங்கேளே. ௨௱௭

பிரதமையைக்கன்னிப்பெண்பிரம்பாலடித்தது.

கேட்கையிலேகன்னிகையாள்பிரம்பெடுத்து கிருபையுடன்வசனிக்கும் போதுமங்கே, நீட்கமுடன்பிரதமையும்வாய்திறந்து நிட்சயமாய்முன்னின்றுபேசும்பாரு, வாட்கையுடன்கேடகத்தி னுத்தங்கண்டு வளமையுடன்கைதொடுத்துவார்த்தைகூறும், வேட்கமுடன்குறளியின்றன்வசியத்தாலே வேடிக்கைவினோதவித்தைபேசும்பாரே. ௨௱௮

பேசுகையில்மாந்தரெல்லாம்பிரமைகொண்டு பேருலகில்செப்பிடுகைவித்தைபோல, வீசுதமிழ்க்கவிவாணர்முனிவர்தாமும் விண்ணுலகிலிம்முறைபோற்சொன்னதில்லை, காசுபணஞ்செலவழித்தோர்கோடியுண்டு காசினியிலென்முறைபோற்செய்ததில்லை, மாசுமறையில்லாமல்போகர்தாமும் வசனித்தோம்மானிடர்கள்பிழைக்கவென்றே. ௨௱௯

மகாகாயகற்ப செந்தூரம்.

பிழைக்கவென்றுலின்னமொருகருமானங்கேள் பேரானசீனபதிமாந்தருக்கு, தழைக்கவேகாயாதிகற்பஞ்சொன்னேன் தாரணியில்திரேதாயினுகதிலப்பா, முழக்கமுடன்காலாங்கிநாதர்தாமும் முனிவருக்குகாலுரைத்தகாயகற்பம், வழக்கமதுபிசகாமல்யானுமல்லோ வசனித்தேன்கலியுகமாய்முதலின்றுனே. ௨௱௰

தானானகலியுகத்திலடியேன்றானும்தகமையுடன்குளிகையதுபூண்டுகொண்டு, சோனானமேனதையர்காலாங்கிதம்மை குருபதத்தையெந்நாளுமனதிலுன்னி, தேனானசீனபதியார்க்குஞ்சென்று தெளிவுடனேயானுரைத்தேன்முறைமையோடு, வேனானவெளியரங்கமாகவல்லோ விருப்பமுடன்பாடிவைத்தேன்போகர்தாமே. ௨௱௰௧

தாமானசீனபதிமார்க்கத்தோர்கள் தாரணியிலிவ்வேதையதிகமென்று, பூமானும்யோகிகளும்ரிஷிகள்தாமும்பொங்கமுடன்செய்வதற்குமனதிலுன்னி காமானமாகவேதான்சத்துருவைக்கண்டு கவனமுடன்மித்துருவையொன்றுய்ச்சேர்த்து, நாமேதான்சொன்னபடிசோதித்தல்லோநலமுடனேசீனத்தோர்கண்டார்காணே. ௨௱௰௨

காணவென்றால்வெருகோடிகாலந்தானும் கருவான நூலெல்லாமுளவு பார்த்து, தோணவேசரக்கெல்லாங்கண்டாராய்ந் துதோற்றமுடன்சோதித் தார்மித்ருதன்னால், காணவேகுகைதோறும்சோதித்தல்லோ நலமுடனேசத் துக்கள்மிகவாராய்ந் துபூணவேயோரளவாய்ச்சத்தையெல்லாம் புகழுடனே தானெடுக்கும்விபரங்கேளே. ௨௱௰௩

அயச் சத்து.

கேளேதான்வயத்தினுடசத்துசொல்வேன் கெவனமுடன்அயமதுதான் சேர்தானென்று,பாளேதான்போகாமலோகர்தன்னை பக்குவமாய்பொடியா க்கியெடுத்துகொண்டு, கோளேதான்நேராமல்நிம்பழத்தால் கொற்றவனே நாற்சாமமறைத்தபோது, வீளேதான்களிம்பற்றுவெளுக்கும்பாரு விருப்ப முடனமுறியினால்கழுவிப்போடே. ௨௱௰௪

போடேதான்அயப்பொடிக்கிதிரட்டிமைத்தா பொங்கமுடன்சாரமதுகா ரமாகும், நீடேதான்சீனமதுகல்லுப்பாகும் நெடிதானசம்பழத்தின்சாற்றி னாலே, கூடேதான்தானரைப்பாய்ரெண்டுசாமம் குமுறவேசலமதனாற்கழு விப்போடு, பாடவேஅயமதுவும்சுத்தியாச்சு பாலகனே சத்தெடுக்கவகை யைத்தேடே. ௨௱௰௫

வகையானகாரமதுபலம்பத்தாகும் வளமுடனேசெவ்வல்லிப்பூச்சாற்றா லே, தொகையுடனேபத்துநாளரைத்தபோது துறையோடுவெண்காரமெழு குமாகும், பகையானபெரிகாலன்பாலினாலே பாகமுடன்றானரைக்கவிபரங் கேளு, சிகையுடனேவரைப்பொடியுமொன்றேயாகும் சேரானகாரமது நேர் தான்சேரே. ௨௱௰௬

சேர்த்துமேயெரிகாலன்பாலினாலே சிறப்புடனேதானரைப்பாய்நாலு சாமம், பார்த்துமேவச்சிரமாங்குகையில்தானும் பாங்குடனேதானெடுத்து சீலைசெய்து, பூர்த்தியுடன்ரவிதனிலேகாயவைத்து புகழானசாவுலையில்வை த்தூது, தீர்த்துமேவயமதுவு முருகியல்லோ திறமானசத்ததுவும்மாகும் தானே. ௨௱௰௭

தானானசத்துக்குயின்னங்கேளு தகமையுடன்வெண்காரங்கூடச்சேர்த் து, பானானமுன்சொன்னசத்தைத்தானும் பாகமுடன்தானரைப்பாய்யெரி காலந்தான்,தேனானதேனதுவுங்கூடச்சேர்த்து தெளிவாகமுன்போலவரை ப்பாயப்பா, கோனானபெனதையர்காலாங்கிநாதர் குருசொன்னசொற்படி யேசெய்திடாயே. ௨௱௰௮

செய்யவேவச்சிரமாங்குகையில்வைத்து செம்மையுடன்ஒட்டைவனைத்துச்சீலைசெய்து, பையவேரவிதனிலேகாயவைத்து பான்மையுடன்சரவுலையில் வைத்தூது; துய்யநல்லவயமதுவுங்களங்குமாகும் துப்பரவாய்மூசைதனையுடைத்துப்பாரு, பொய்யல்லாவயமதுவும்மணிபோல்நிற்கும் பொலிவானசத்தென்றமணியைவாங்கே. ௨௱௰௯

வாங்கியேமணியெடுத்துயலையவேண்டாம் வளமுடனேமணிதனையேயுடைத்துப்பாரு, தாங்கியேதிரியாதேமாண்பாகேளு துய்யநல்லமணியதுவுஞ்சத்தேயாச்சு, ஓங்கியேமணிதனையேபதனம்பண்ணு வுத்தமனேயின்னமொருமார்க்கம்பாரு, ஏங்கியேநிற்காதேயின்னஞ்சொல்வேன் யெழிலானவப்ரகேசத்தைவாங்கே. ௨௨௰

அப்ரேகசத்து.

சத்தானசத்ததுவுமின்னஞ்சொல்வேன் தாரணியில்நாதாக்கள்முனிவர்தாமும், சித்தானரிஷிதேவர்சொன்னதில்லை சீர்பெறவேதொகுப்புடனேவடியேன்றானும், முத்தானநூலெல்லாம்கண்டாராய்ந்து மூதுலகில்கீர்த்தியுடன்சொன்னேன்யானும், புத்தானகிருஷ்ணதிரேகர்தன்னை புகலுகிறேன்மாணுக்கள்பிழைக்கவென்றே. ௨௨௧

பிழைக்கவேநவநீதஞ்சேர்தான்ரெண்டுபிழைமோசம்வாரமலெடுத்துக்கொண்டு, தழைக்கவேமுன்சொன்னகாரமப்பா சாங்கமுடன்நாலுக்குவொருபாகந்தான், கழைக்கவேகுழிக்கல்லுதன்னிலிட்டு கருவானதேனதனிலாட்டிமைந்தா, உழைக்கவேவச்சிரமாங்குகையில்வைத்து வுத்தமனேகுகையில்வைத்துசீலைசெய்யே. ௨௨௨

சீலையென்றால்சீலையதுகாரச்சீலை சீரானசுண்ணாம்புச்சீலையப்பா,வேலையெனும்ரவிதனிலே காயவைத்து விருப்பமுடன்சரவுலையில் வைத்தூது, காலையதுசாமமது தான்துவக்கி சருவுடனேசத்துதனை யூதித்தீரு, மாலையிலேமூசைதனை யுடைத்துப்பாரு மன்னவனேசத்தென்ன வருணனுமே. ()

அருணனுமாதித்தா னிதற்கொவ்வாது வப்பனேயப்ரேக சத்துமாச்சு, தருணமதுதப்பாமல் பின்னுங்கேளு தகமையுடன்சத்துதனை யெடுத்துக்கொண்டு, சருணையுடன்முன்சொன்ன சத்துதானும் களிப்புடனேதானெடுத்துக் கல்வமிட்டு, வருணனுப்புகரியுப்பு பொட்டிலுப்பு வகையுடனேதான்போட்டுவறைத்திடாயே. ௨௨௪

அரைக்கையிலேயாறுவகை செயநீர்தன்னால் வப்பனேதானனைப்பாய்நாலுசாமம், திரைக்கையிலேமெழுகுபதந் தன்னிலாட்டி திறமையுடன்வச்சிரமாங் குகையில்வைத்து, குறைக்கையிலேசில்லிட்டுச்சீலைசெய்து கொற்றவனேரவிதனிலேகாயப்போடு, முறைப்படியேரவிதனிலேகாயவைத்து முன்போலசரவுலையிலேத்திடாயே. ௨௨௫

எத்தியேதீமூட்டி வுருக்கும்போது யெழிலானமூசைய துவமுருகியேதான், நாத்தமுடன்நவநீதவாசம்வீசும் நலமானசரக்கதுவுமுருகிப்போச்சு, காத்திரமாம்குகைதனையேயுடைத்துப்பாரு கருவானவப்ரேகசத்துமாச்சு, சூத்திரமாமிப்பாகங்கண்டறிந்து சுளுக்குடனேபாடிவைத்தேன் காண்டநான்கே. ௨௨௬

நாலானகாண்டமதுயின்னங்கேளு நலமானசத்ததுவு முன்போலேதான், காலானகுழிக்கல்லி லிட்டுமைந்தா கருத்துடனேதேன்விட்டு யரைப்பாய்நீயும், பாலானவச்சிரமாக்குகையிலிட்டு பாலகனேசீலைபது வலுவாய்ச்செய்து, மேலானரவிதனிலேகாயவைத்து மேன்மையுடன்தானெடுத்து செப்பக்கேளே. ௨௨௭

செப்பவென்றால்சரவுலையில்வைத்துவூது செம்மையுடன்நவநீதம்சத்துமாகும், ஒப்பில்லையுனக்கிடு ஒருவருண்டோ வுத்தமனேநீயுமொரு சித்தனல்லோ, தப்பிதங்கள்வாராதுசத்துதன்னால் தகமையுடன்மூசைதனை யுடைத்துப்பாரு, மெய்புடனேசத்துமதுவொளியேவீசும் மேன்மையுடனிப்பாகம் பத்துமுறைத்ரே. ௨௨௮

தீரவென்றால்நவநீதசத்துமாகும் திறமையுடன்சத்துதனையெடுத்துக்கொண்டு, காரமுடன்பூனீரு சரியாய்ச்சேர்த்து கருத்துடனேதேன்விட்டு யரைப்பாய்பின்னும், பாரமுடன்வச்சிரமாங் குகையில்வைத்து பாலனேசில்லிட்டுச்சீலைசெய்து, ஈரமதுபோவதற்குரவியில்வைத்துயென்மகனேகாய்ந்தபின்பு யெடுத்துக்கொள்ளே. ௨௨௯

கொள்ளவேசரவுலையில் வைத்துவூது கொற்றவனேசத்ததுவையென்னசொல்வேன், மெள்ளவேமூசைதனைவுடைத்துப்பாரு மேலானசத்ததுதா னென்னசொல்வேன், விள்ளவேசத்துதனை யெடுத்துக்கொண்டு விருப்பமுடன்பீங்கானிற் பதனம்பண்ணு, எள்ளளவுங்குறையொன்றுநேராதப்பா யெழிலானசத்திநுடவேகந்தானே. ௨௩௰

கெந்தகச்சத்து.

வேகமாமின்னமொருகருமானங்கேள் விருப்பமுடன்கெந்தியென்றசத்துசொல்வேன், பாகமாங்கெந்தியதுசேர்தானென்று பாங்கானபூநீருசேர்தாமென்று, சாகமுடன் பூமைம்மண்ணைப்போச்சென்

டமுடன்யெரிகாலன்பாலாலாட்டு, மேகமென்றவரணம்போலிருக்கு ம்பாரு மேன்மையுடன்காரமதுகாலாய்க்கூட்டே. உ௲க

கூட்டியேதானரைப்பாய் நாலுசாமம் குழறவேவச்சிரமாங் குகையில்வைத்து, மாட்டியேசில்லிட்டுச்சீலைசெய்து மயங்காமல்ரவிதனிலே காயப்போடு, சூட்டியேவாலுகையா மேந்திரத்தில் சூட்சமுடன்நடுமையம் மூசைவைத்து, நாட்டமுடன்சத்துக்குத் துருத்திகாலு நயம்பெறவேயூதிடவேசத்துமாமே. உ௲உ

சத்தானமூசைதனே யுடைத்துப்பார்க்க சார்பானகெந்தியதுசத்துமாகி, வித்தானபூநாகச்சத்தினலே வீருனகெந்தியது சத்துமாச்சு, சுத்தானகெந்தியதுசத்துமானல் சுந்தரனேவெகுகோடிவித்தையாடும், புத்தானபூனுகந்தன்னிலப்பா பொன்னவனேகெந்தியது சத்துமாச்சே. உ௲௩

ஆச்சென்றுவிடுகாதே யின்னங்கேளு வப்பனேகாலாங்கி நாதர்வாக்கு. போச்சென்றுவுலகத்தில் பொய்யாதப்பா பொலிவாகசித்தர்முனிரிஷிகள்தாமும், நீச்சென்றபூனுகம் மறந்தாரப்பா நீணிலத்தில் காலாங்கிதானுராய்ந்து, மாச்சலுடனிப்பாகஞ்சொன்னுரையா மண்டலத்தில்கண்டவர்களில்லைதானே. உ௲௪

தானனவேதமுனி ரிஷிகள்தாமும் தாரணியிலனேகவிதஞ்சொன்னையா, கோனனயெனதையர் காலாங்கிநாதர் குருசொன்னபடியளவாயானுஞ்சொன்னேன், பானசத்துவகைசாத்திரத்தில் பாடினர்பல பேதவன்னமாக, தேனயின்னூல்போ லாருஞ்சொல்லார் தெளிவாகப்பாடிவைத்தேன் காண்டம்கான்கே. உ௲௫

காண்டமேழாயிரத்தில் நடுக்காண்டந்தான் காசினியில்மாண்பர்கள் பிழைப்பதற்கு, தூண்டுகோலபோலவேயிந்நூல்தன்னை துறையோடுமுறையோடுஞ் சொன்னேன்யானும், வேண்டியதோர்கருமானமின்னூல்தன்னில் விருப்பமுடன்பாடிவைத்தேன் நான்காங்காண்டம், ஆண்டகையாமெனதையர் காலாங்கிநாதர் யருளிருந்தால்பொருளபிக்கு வன்பாய்த்தானே. உ௲௬

அன்பானகெந்தியதுசத்துதன்னை யப்பனேயாமுறைப்போமின்னுங்கேளு, தென்பானபிரிதிவியின் விளைவுமார்க்கம் தேசமுடன்செம்மண்ணும் பூனுகந்தான், முன்பாகமுன்சொன்னமுறைபோற்றானும் முக்கியமாய்கெந்தியிட சத்தைத்தானும், சன்பாகபூனுகஞ்சரியாய்ச்சேர்த்து கூட்டமுடன் தானரைப்பாய் சாமம்நாலே. உ௲எ

நாலானயெரிகாலன்பாலினுலே நயமுடனே தானரைக்கும்போதுமங்கே, பாலானபாலதுவுங்கூடச்சேர்த்து பாகமுடன்சத்துதனை வுறவதாக்கி, சேலானசெம்பினுடசத்துதன்னுல் செம்மையென்றபூனுகங்கெந்திசத்து, மாலானகெந்தியதுசத்துமார்க்கம் வையகத்திலாரெடுப்பார்வதிதந்தானே, உ௩அ

அதிதமாய்கெந்தியதுசத்துதன்னே வப்பனேவச்சிரமாங் குகையில்வைத்து, கதிதமுள்ளமூசைதனிலடைத்துமைந்தா கவனமுடன்சில்லிட்டுச்சீலெசெய்து, பதிதமுள்ளரவிதனிலேகாயவைத்து பளிங்குபெறசரவுலேயில் நடுமையத்தில, துதிதமுடன்கரிபோட்டு வூதும்போது துடியானதுரித்தியதுநாலுமாட்டே. உ௩௯

மாட்டடாநாற்சாமமுருக்கித்திரு மன்னவனேசத்தாரியெடுத்துப்பாரு, நீட்டடாமூசைதனையுடைத்துப்பாரு நிலேயானகெந்தியதுசத்துமாச்சு, கூட்டடாயிப்படியேபத்துமுறைதிரு குணமானபாகமிது சத்துபாகம், தீட்டடாகெந்தியுடசத்துதன்னே திறமுடன்பீங்கானிற்பதனம்பண்ணே. உ௪0

நாகச்சத்து.

பண்ணவென்றுலின்னமொருபாகம்பாரு பாரினிலேநாதாக்கள்செய்ததில்லே, நண்ணமுடன்மானிடர்கள்பிழைக்கவென்று நயமுடனேகாலாங்கிநாதர்பாதம், எண்ணமுடன்யான்வணங்கிபணிந்துபோற்றி யென்மகனேயுங்களுக்காயச்சொன்னேன்பாருவண்ணமுள்ளநாகமதுசேர்தானென்று வளமையுடன்தானெடுத்து செப்பக்கேளே.()

செப்பவென்றுல்நாகமதுசேர்தானென் றுசிறப்பானசூதமதுசேர்தானென்று, ஒப்பமுடன்காரமதுசேர்தான்பாதி ஓகோகோபூனீர்தான்சேர்தான்பாதி, செப்பமுடன்குழிக்கல்லி லொன்றுப்போட்டு நேர்மையுடன்வாறுவகைசெயநீர்தன்னுல் தப்பிதங்கள்வாராம லறைப்பாய்மைந்தா தகமையுடன்றனறைப்பாய்சாமம்நாலே. உ௪உ

நாலானசாமமதுவறைக்கும்போது நாயகனேநாகமதுவீரடங்கி மாலானமயினமதுபோலேயாகும் மகத்தானதாளகமுங் கூடச்சேர்த்து, சூலானநாகமதுகற்பத்துள்ளே சூதமென்றராசாவுங்கூடச்சேர்ந்து, காலானகதிர்மேகந்தன்னைப்போல கண்ணுக்குத்தோன்றிடுமேமயினமாமே. உ௪௩

ஆமேதான்மயினமதைதானெடுத்து வப்பனேவச்சிரமாங் குகையில்வைத்து, தாமேதான்சில்லிட்டுச்சீலெசெய்து தகமையுடன் ரவித

ளிலேகாயவைத்து, போமேதான்சரவுலையில்வைத்தூது பொங்கமுடன் துருத்தியதுண்டேயாகும், நாமேதான்சொன்னபடிநாகச்சத்துராசாக்கள்கண்டதில்லைநளினந்தானே. ௨௪௪

நளினமாஞ்சத்துதனையெடுத்துப்பாரு நலமானநாகத்தின் சத்தேயாகும், பளினமுடன்சத்துதனை முன்போல்மைந்தா பாலகனேபின்னுமதைக்கல்வமிட்டு, துளினமுடன்தாளகமுஞ் சூதம்சேர்த்துதுகளறவேபூநீறுக்கூடச்சேர்த்து, மளினமுடன் வாறுவகைசெயநீர்தன்னால் மார்க்கமுடன்ருனைப்பாய்மன்னுகேளே. ௨௪௫

மன்னுநீமயங்காதேயின்னுங்கேளு மதிப்புடனேதானனைப்பாய்நாலுசாமம், தென்னுநீதிறமுடனேமெழுகதாக்கித் தீரமுடன்வச்சிரமாங்குகையில்வைத்து, பொன்னுநீசீலையதுவலுவாய்ச்செய்து பொங்கமுடன்ரவிதனிலேகாயவைத்து, என்னுநீசொன்னபடிமுன்போலப்பா யெழிலுடனேசரவுலையிலேத்திடாயே. ௨௪௬

ஏத்தியேநடுமையம்தானிறுத்தி யெழிலுடனேசரவுலையையூதும்போது, சாஸ்திரத்திலுள்ளபடிதப்பாகாது தகைமையுடன்சத்ததுவும்வீயமாகும், கூத்தனுமேநானடுங்கும்வேதைமார்க்கம குவலயத்தில்வொருவரால்கூறப்போமோ, நேத்தியுடன்சத்துவையெடுத்துப்பாரு பென்னசொல்வேன் மக்களாயின்னுங்கேளே. ௨௪௭

கேளேதான்நாகமதுசத்துவாங்கி கெவனமுடன்முன்போல வறைப்பாய்நீயும், கோளேதான்வாராமல்குற்றமநீங்கி கொற்றவனேநாகமதுசத்துவாங்கி, பாளேதான்போகாமல்பின்னுங்கேளு பாகமுடன்முன்சொன்னசரக்கையெல்லாம், தூளேதான்பொடிபண்ணிகல்வமிட்டு துப்புறவாய்செயநீரிலறைத்திடாயே. ௨௪௮

அறைத்துமே யாறுவகை செயநீர்தன்னால் அப்பனே மயினம்போல்மெழுகதாக்கி,குறைத்துமேவச்சிரமாங்குகையில்வைத்து கொற்றவனேசில்லிட்டுச்சீலைசெய்து, திறைத்துமேரவிதனிலேகாயவைத்து தீறமுடன்வாலுகையா மேந்திரத்தில் முறைந்திடவேநடுமையந்தானிருத்தி முசியாமல்கரியதனைக்கொட்டிடாயே. ௨௪௯

கொட்டியேசத்துதனையூதும்போது குறிப்புடனேதுருத்தியதுரெண்டதாகும், திட்டமுடனாற்சாமமூதித்தீரு, திறமானகுகைதனையேயுடைத்துப்பாரு, வட்டமென்றபில்லையதாய்வுருகிநிற்கும் வளமானசத்ததுவுஞ்சொல்லப்போமோ, நட்டமில்லைநாகத்தின்சத்துதானும்மையானநாகத்தினீயமாமே. ௨௫௰

ஆமேதான்நாகமது ஈயமானல் அப்பனேகோடான கோடிவித்தை, நாமேதான்சொன்னபடியிந்தமார்க்கம் நலமுடனேபத்துமுறை செய்யவேண்டும், தாமேதான்சத்தெடுத்துப் பதனம்பண்ணு சாங்கமுடன்யின்னமொரு கருமானங்கேள், வேமேதான்வங்கத்தின் சத்து சொல்வோம் விபரமுடன்மாணுக்கள் பிழைக்கவென்றே. ௨௫௧

வங்கச் சத்து.

பிழைக்கவேவங்கமது சேர்தானென்று பேரானசிங்கியது சேர்தானென்று, வழக்கமுடன்மனேசிலையுஞ் சேர்தான்பாதி வாகுடனேதானுருக்கி கல்வமிட்டு, பழக்கமுடன்தேனதுவை விட்டுவாட்டி பளிங்குடனேவச்சிரமாங் குகையிலேத்தி, தழைத்திடவேசில்லிட்டுச் சீலைசெய்து தகைமையுடன்ரவிதனிலே காயவ்வையே. ௨௫௨

காய்ந்தபின்புவச்சிரமாங் குகையைத்தானும் கனமுடனேசரவுலையில்வைத்தூது, தீய்ந்திடவேகுகையதுவு மழுகியேதான் திறமானவங்கமது வுருகிநிற்கும், பாய்ந்திடவேவங்கமது களங்குமாகும் பாரினிலேசித்தர்செய்யும் வேதையாச்சு, தோய்ந்திடவேவேதைமுகம் யாருங்காணர் தொல்லுலகில்கருவாளிகாண்பான்பாரே. ௨௫௩

பார்க்கவேவங்கமதை யெடுத்துக்கொண்டு பரிவாககல்வமதில் பொடியாய்ச்செய்து, தீர்க்கமுடன்முப்பூவுங் காலதாக திறமுடனே தேன்விட்டு யரைத்தாயானல், மார்க்கமுடன்மெழுகதுவும் வெண்ணைபோலாம மயங்காமல்வச்சிரமாங் குகையில்வைத்து, ஏர்க்கவே மேன்மூடி சீலைசெய்து யெழிலாகரவிதனிலே காயவையே. ௨௫௪

காயவேமூசைதனை யெடுத்துக்கொண்டு கவனமுடன்சுண்ணும் புச்சீலைபின்னும், தோயவேயெழுசீலை பின்னுஞ்செய்து தோராமல் ரவிதனிலே காயவைத்து, நேயமுடன்மரவுலையில் வைத்தூது நேர்மையுடன்சத்ததுவும் மணியாய்ப்போகும், உபாயமுடன்மூசைதனை யுடைத்துப்பாரு வுத்தமனேவெள்ளியென்றமணிபோலாமே. ௨௫௫

ஆமென்றமணியெடுத்து சொல்லக்கேளு வப்பனேசூதமது நேரேயாகும், காமென்றபாஷாணம் நேரேயாகும கருவாகயிரண்டையுந்தான் வரைத்துமல்லோ, நாமென்றவங்கத்துக் கங்கிபூட்டி நாயகனேசுண்ணும்புச் சீலைசெய்து, தாமென்றரவிதனிலே காயவைத்து சட்டமுடன்குழல்தனிலே வுருக்கிடாயே. ௨௫௬

உருக்கியேமூசைதனை யுடைத்துப்பாரு வுத்தமனேகளங்கமது மென்னசொல்வேன், நருக்கியேபின்னுமதை மூசையிட்டு நயமுடனேவுருக்கிப்பார் களங்கமாகும், பெருக்கியேகளங்கெடுத்துப் பின்னுங்கேளு பேரானமூசைதனை யுருக்கிப்பாரு, செருக்கமுடன்களங்கதுவு மென்னசொல்வேன் சிறப்பானபோகரது பாகந்தானே. ௨௫௭

தாம்பரச்சத்து.

பாகமாமின்னமொரு கருமானங்கேள் பாலகனேமாணுக்கள் பிழைக்கவென்று, யூகமாம்தாம்பரத்தின் சத்துசொல்வேன் யுர்ப்பனமாமதின்சுத்தி பின்னுங்கேளு, நாகமென்றசில்விஷத்தை நீக்குதற்கு நலமாகப்பூநீரில் சுத்திசெய்து, சாகமுடன்தாம்பரத்தைசுத்திசெய்ய சார்பானமுறையோடு கதைசொல்வேனே. ௨௫௮

சொல்லவென்றால்தாம்பரமாங் கொடியகாலன் தொல்லுலகிலூரலது போவதற்கு, வெல்லுகின்றபூநீரு சேர்தானென்று விளைதமுள்ளசெம்பதுவுஞ் சேர்தான்ரெண்டு, கொல்லுகின்றவீரமது சேர்தான்காலாம் குணமானசீனமது சேர்தான்காலாம், புல்லுகின்றகருங்குன்றி சேர்தான்காலாம் புகழானசிற்றண்டஞ் சேர்தான்காலே. ௨௫௯

காலானசரக்கெல்லா மொன்றாய்க்கூட்டி காட்சிபெறகல்வமதிலிட்டுமைந்தா, பாலானசெயநீராம் சாரநீராம் பக்குவமாய்தானரைப்பாய் சரக்கையெல்லாம், மேலானசெயநீரால்சாமம்நாலுமேன்மையுடன்தானரைப்பாய் மைந்தாகேளு, கோலானமாத்திரைபோல் செய்துகொண்டு கொற்றவனேநிம்பழத்தின் சாற்றாலாட்டே. ௨௬௰

ஆட்டவென்றால்விதிசொல்வேன் மதியாய்க்கேளு வப்பனேசுத்திந்ததாம்பரத்தை, நீட்டமுடன்மருந்தையெல்லாம்தாம்பரத்தில் நீதியுடன்கீழ்மேலும்பூசிப்போடு, வாட்டமுடன்ரவிதனிலே காய்ந்தபின்பு வகையுடனேவோட்டிலிட்டுசீலைசெய்து, தேட்டமுடன்சோழியென்ற புடத்தைப்போடு தெளிவாகப்புடமாறியெடுத்துப்பாரே.

பார்க்கையிலேசெம்பதுவும்பொருமிக்காட்டும் பதமதுதான்சரியாச்சுதாம்பரங்கள், தீர்க்கமுடன்பணைதனிலேயடித்தபோதுதிறமுடனேசெம்புககு வதர்தான்போகும், மூர்க்கமென்றவூரலது யற்றுப்போச்சு முழுமக்கள்தாமறியார் செம்புவூரல், சேர்க்கையிலேயிந்த முறைபத்துபாகம் செவ்வையுடன்புடம்போட்டு யெடுத்துப்பாரே,()

எடுத்துமிகப்பார்க்கையிலே யென்னசொல்வேன் யேளிதமாஞ் செம்பதுவும்யெற்றமெத்த, அடுத்துநின்றபேர்களுக்கு யிந்தபாகம்அ

றியாமற்செப்பவனேபத்தியுள்ளான், தொடுத்தகுறிதன்முறைபோல் செய்யுமாசான் தோற்றுமல்கண்ணுக்குச்செய்வான்பாரு, கெடுத்து மேமுறைபோலச்செய்துகாட்டி கெவனமுடன்வுட்கருவைக்காட்டா ன்தானே. உகூங

தானுனதாம்பரத்தை யெடுத்துகொண்டு தண்மையுடன்குரு சொன்னநேர்ப்பாகர்தான், கோனுனயெனதையர்காலாங்கினுதர்குரு சொன்னவாக்கதுபோல்தாம்பரத்தை, மானுனதாம்பரத்தைச்சேர் தான்கொண்டு மாட்டடாவச்சிரமாங்குகையிற்றனும், வேனுனசெம் புநின்றுருகும்போது விருப்பமுடனதிற்போட சரக்குகேளே. உகூச

சரக்கென்றால்வீரமது வெள்ளையாகும் தாக்கான்பாஷாணம்கெ வுரியாகும், திரக்கமுடன்காரமதுபூரமாகும்திகழானசூதமதுசரிநேரா கும், உரக்கமுடன்சரக்கெல்லாஞ்சரியாய்த்தூக்கி வுத்தமனேகல்வ மதில் பொடியாய்ச்செய்து, இரக்கமுடன்தாம்பரத்துக்கிடைசேர்பா தியெழிலுடனேகிராசமது நினைவாய்ப்போடே. உகூரு

போடவேசெம்புருக்கிக்கிராசமீவாய் பொங்கமுடன்லகுவதாய் தாக்கிக்கொண்டு, நீடவேசெம்புதனையாறிப்பின்பு நினைவாகமூசைத னையுடைத்துப்பாரு, கூடவேசெம்பதுவுங்களங்கமாகும் குணமான வூரலதுயற்றுப்போச்சு, வாடவேதிரியாதேமைந்தாகேளு வகுப்புட னேயிப்பாகஞ்செய்துபாரே. உகூசு

பார்க்கையிலேசெம்பதுவுங்களங்கமாகி பரிசுத்தகளங்கமதுயெ ன்னசொல்வேன், தீர்க்கமுடன்களங்கதனையெடுத்துக்கொண்டு தீர முடன்கல்வமதிலிட்டுமைந்தா, ஏர்க்கவேபொடிசெய்துமைபோலாக் கியெழிலானதேனதனில்வறைத்துமேதான், சீர்க்கமுடன்மூசைதனி லடைத்துமைந்தா சிறப்புடனேசீலைசெய்துரவியில்தாக்கே. உகூஎ

தாக்கவேமூசையதுகாய்ந்தபின்பு தகமையுடன்சரவிலையில்வைத் துவூது நோக்கமுடன்செம்பதுவும்வூறலற்று நொடிக்குள்ளேகளங்க மென்றபேருமாச்சு, தூக்கவேசெம்பென்றகளங்குதானும் துனையான வேதைமுகம்தன்னிற்றேன்றும், வாக்கதுதான்தப்பாது போகர்தா மும் வரமுடனேபாடிவைத்த வண்மையாமே. உகூஅ

காயகற்பசெந்தூரசத்துவகை.

வண்மையாம் சத்தெல்லாஞ்சமனதாக வளமுடனேதானுறுக்கி யெடுத்துகொண்டு, தண்மையுடன்தங்கமதுநாலுக்கொன்றுதாக்கவே களங்குடனே தங்கஞ்சேர்த்து, திண்மையாம் [illegible]

ம்தீர்க்கமுடன்களங்குக்கு பெட்டிலொன்று, "உண்மையாம்கெர்தியதுகூட்டியேதான் உத்தமனே தானரைப்பாய்சாமம்நாலே. ௨௬௯

பொற்றலைகையாந்தகரை.

நாலானசாமமது வரைக்கும்போது நலமானசூதமதையெட்டிலொன்று, வேலானபொற்றலையுன்சாற்றாலாட்டி விருப்பமுடன்பில்லையது வேசாய்தட்டி, மாலானரவிதனிலேகாயப்போடு மார்க்கமுடன் வோட்டிலிட்டுச்சீலைசெய்து, காலானகெஜபுடத்தில்போட்டாயானால் தளிர்ச்சியுடன்வெந்ததுவும்கறுப்புமாமே. ௨௭௰

கறுப்பானசெந்தூரந் தனையெடுத்துகருவாககையானின்சாற்றினாலே, உறுப்பாகதானரைப்பாய்நாலுசாமம் வுத்தமனே முன்போல பில்லைதட்டி. செறுப்பானபில்லையதுகாய்ந்தயின்புசேற்றமுடன்வோட்டிலிட்டுச்சீலைசெய்து, குறுப்பானகெஜபுடத்தில் போட்டாயானால் கொற்றவனேசெந்தூரம்மாகுந்தானே. ௨௭௧

தானானசெந்தூரஞ்சிவப்பதற்கு தண்மையுள்ளபுடமதுவு மைம்பதாகும், கோனானயெனதையர்காலாங்கிநாதர்குருசொன்னபடியாக புடமேபோடு, மானானபுடமதுவுமைம்பதானால் மகத்தானசெந்தூரஞ்சிவப்புமெத்த, தேனானசெந்தூரந்தனையெடுத்து செப்புகிறேன்பின்னுமொரு பாகங்கேளே. ௨௭௨

பொடுதலைமூலி.

பாகம்போம்பெண்ணுதேகெந்திதாரம் பகருமந்தசெந்தூரம்நாலுக்கொன்று, வேகமுடன்சரக்கதனையொன்றும்ச்சேர்த்து விருப்பமுடன்சூதமதுபெட்டிலொன்று, சாகமுடன்சரக்கெல்லாமொன்றாய்ச்சேர்த்து சட்டமுடன்தானரைப்பாய்நாலுசாமம், நேசமுடன்பொடுதலையின்சாற்றினாலே நேர்ப்பாகதானரைத்துபில்லைதட்டே. ௨௭௩

தட்டியேரவிதனிலேகாயவைத்து தகமையுடன்வோட்டிலிட்டுச்சீலைசெய்து, சட்டமுடன்கெஜபுடமாம்போட்டாயானால் சார்பானசெந்தூரஞ்சிவப்புகாணும், நட்டமில்லாபுடமதுவுமைம்பதாகும் நயமுடனேபாகமது தவறிடாமல், இட்டமுடன்புடம்போடச் செந்தூரிக்கும் யெழிலானசெந்தூரஞ் சொல்லொண்ணாதே. ௨௭௪

சொல்லவென்றால்நாவில்லைப்பாவுமில்லை சுந்தரனேசித்தர்செய்யும்வேதையாச்சு, வெல்லவேசெந்தூரமார்க்கந்தன்னை விருப்பமுடன்காரமது கொள்வதற்கு, புல்லவேபின்னுமொருபாகங்கேளு புகழானசெந்தூரஞ்சிவப்புகாண, கொல்லலேவிலாரியிடதயிலத்தாலேகொற்றவனேதானரைப்பாய் சாமமெட்டே. ௨௭௫

விலாரிமூலி.

எட்டானசாமமதுவறைத்தபோது யெரிலான்செந்தூரம்மெழுகுபோலாம், திட்டமுடன்தானறைத்துபில்லேதட்டி தீர்க்கமுடன் ரவிதனிலேகாயப்போடு, குட்டமதுபில்லையதாய்தட்டியேநான் குறிப்புடனேசீலேசெய்ப வகைமைக்கேளு, வட்டமென்னவோட்டிலிட்டுச்சீலேசெய்து வளமைபெறகெஜபுடமாம்போட்டுத்தீரே. உஎசு

திரவென்றல்புடமாறி யெடுத்துப்பாரு திறமானசெந்தூரஞ்சொல்லப்போமோ, சாரவேசெந்தூரந்தனையெடுத்து சாங்கமுடன் விராலியிடதயிலத்தாலே, பாரமுடன்தானறைப்பாய்நாலுசாமம்பதராமல்மெழுகதுபோலாகவேதான், நேரமுடன்பில்லையது லகுவாய்த்தட்டி நேர்ப்புடனேரவிதனிலேகாயப்போடே. உஎஎ

போடவேவோட்டிலிட்டுச்சீலேசெய்து பொங்கமுடன் கெசபுடமாம்போட்டுத்தீரு, நீடவேயிப்படியேஐந்துபத்து நினைவாகபபுடம்போடச்செந்தூரிக்கும், தேடவேசெந்தூரம்யெடுத்துப்பாரு தேசிகனேகாரமதுகூரொண்ணாது, பாடவேயின்னம்வெகுமூலிசொல்வேன் பாலகனேநீயறிவாய்ப்பண்பாய்த்தானே. உஎஅ

வல்லாரைமூலிகை.

பண்பானமூலிகைதான்சொல்லக்கேளு பாரினிலே மெத்தவுண்டுகாயகற்பம், திண்பானமூலிவல்லாரைகற்பம் திறமானமூலியதுசார்பிழிந்து, நண்பானசெந்தூரங்கல்வமிட்டு நயம்பெறவேமூலியிடசாற்றாலாட்டி, வண்பாகநாற்சாமமறைத்தபோது வளமாகமெழுகதுபோலாகும்பாரே. உஎகூ

பாரேதான்மெழுகதனைபில்லேதட்டி பாகமுடன்ரவிதனிலேகாயப்போடு, சீரேதான்வோட்டிலிட்டுச் சீலேசெய்து சிறப்பானகெஜபுடந்தான்போட்டுத்தீரு, நேரேதான்செந்தூரங்காரமேரி நெறியானகாயகற்பகுருவுமாச்சு, தீரேதான்பின்னுமிதுசெந்தூரத்தைதீர்க்கமுடன்புடம்போடவகைமைத்தேடே. உஅ0

தேடயிலேசெந்தூரமைம்பதாகும் தேற்றமுடன்புடமதுவு மதிகங்கொண்டால், கூடயிலேசெந்தூரங்காரமேரி குறிப்புடனேகாயாதிக்குறுதியாச்சு, நீடயிலேயிப்படியேதீர்ந்தாயானல் நீணிலத்தில்நீயுமொரு சித்தனுவாய், பாடயிலேயொருவருந்தான் சொல்லவில்லை பாரினிலேயின்னூல்போ லொருநூலுண்டோ. உஅக

புளியாரை மூலி.

உண்டேதான்வையகத்தில்பலநூலுண்டு வுத்தமனேசாஸ்திரங்கள்கோடியுண்டு, கண்டேனேநானும்வெகுநூல்கள்தன்னை கவடற்ற நூலிதுதான்மெய்நூலாகும், திண்டானவேதமுனிநூல்கள்சொன்னார்திகழுடனேகாசினியிலனேகமுண்டு, கொண்டானகொண்டபடி விணேதஞ்சொன்னார் குவலயத்திலின்னூல்போலில்லைதானே. ௨௮௨

தானனசெந்தூரஞ்சாற்றக்கேளு தகமையுடன் புளியாரைச்சாற்றினாலே, பானனசெந்தூரமரைத்துமேதான் பதமுடனேபில்லைதட்டிக்காயவைத்து, வேனனவோட்டிலிட்டுச்சீலைசெய்துவிருப்பமுடன்கெஜபுடத்தில்போட்டாயானால், கோனனகுருநாதர் சொன்னவாக்கு குவலய ்தில்பொய்யாதுமெய்யாம்பாரே. ௨௮௩

பாரோதான்செந்தூரங்காரமேறிபாகமுடன்காயாதிகற்பமாகும், நேரேதான்வைந்துபத்துபுடமேபோடு நெறியானபுடமதுவுந் தப்பாவண்ணம், கூரேதான்சொன்னபடி செந்தூரிக்கும் கூர்பானகாரமது சொல்லப்போமோ, வேரேதானின்னமொரு மார்க்கம்சொல்வோம் வேதாந்தத்தாயினது வருள்தான்காணே. ௨௮௪

பொன்னுவாரைமூலி.

காணவென்றுமின்னமொரு மாற்கம்பாரு கருவான செந்தூரப்போக்குசொல்வேன், தோணவேசெந்தூரந்தனையெடுத்து துறையுடனேகல்வமதிலிட்டுமைந்தா, பூணவேபூநீருமுப்புச்சுண்ணம் புகழாகத்தான்போட்டுபெட்டிலொன்று, வேணவேபொன்னினுவாரையாலே விருப்பமுடன்தானரைப்பாய்சாமம்நாலே. ௨௮௫

நாலானசாமமதுவரைத்தபோது நயமுடனே வெண்ணெயது போலேயாகும், பாலானவெண்ணெயதுயிதற்கொவ்வாது பாலகனே சித்தர்முகம்வேதையாச்சு, சேலானவனமூலிதன்னையப்பா செம்மையுடன்தான்கூட்டிவறைத்தபோது, மாலானசத்தெல்லாம்மடிந்துமேதான் மகத்தானசெந்தூரமுடியலாச்சே. ௨௮௬

ஆச்சென்றுவிடுகாதேமைந்தாகேளு வப்பனேபில்லையதுதட்டியேதான், காச்சலென்றரவிதனிலேகாயப்போடு கருவானவோட்டிலிட்டுச்சீலைசெய்து, பாச்சலுடன்கெசபுடமாம்போட்டுத்தீரு பாலகனேயாறியபின்னெடுத்துப்பாரு, முச்சடங்கிப்புடமதுதான் வெந்துதானால் மோசமில்லைதோஷமில்லைவாராதன்றே. ௨௮௭

வாராதுதோஷமதுநேராதல்லோ வகுப்பானசெந்தூரமுறுதிகாணும், நேரானசெந்தூரந்தனையெடுத்து நேர்மையுடன்கல்வமதிலிட்டுப்பின்னும், சேரானபொன்னிறவாரைமூலி சேரவேதான்விட்டுவைறைத்துமேதான், நீரானமைபோலவறைத்துமல்லோ நிஷ்களமாய்ப்பில்லைபதுதட்டிப்போடே. ௨அஅ

போடவேரவிதனிலேகாய்ந்தபின்புபொங்கமுடன்வோட்டிலிட்டுச்சீலைசெய்து, நீடவேகெசபுடமாய்போட்டாயானால்நீரானசெந்தூரமென்னசொல்வேன், கூடவேயிப்படிபாய்ஐந்துபத்துகொற்றவனேபுடமதுதான் தீர்ந்தாயானால், நாடவேசெந்தூர மென்னசொல்வேன் நாதாக்கள்கைமறைப்புகண்டுபாரே. ௨௯௰

பாரேதான்சித்தர்முனிரிஷிகள்தாமும்பாருலகில்செய்வதுதான் வதிதமார்க்கம், நேரேதான்ரிஷிதேவர்கோடாகோடிநேர்மையுடன்பலநூலுங்கண்டாராய்ந்து, சீரேதான்வனேகவித காயகற்பம் சிறப்புடனேதாமுடிந்தார் லக்கோயில்லை, வேரேதான்வநேகநூல்யானுங்கண்டேன் வுற்பனத்தையுளவறிந்துசொல்லார்தாமே. ௨.௯௰

தாமானகருவெல்லாமறைத்துப்போட்டார் தகமையுடன்திருமூலவர்க்கத்தார்கள், நாமேதான்சொன்னபடிநூலாராய்ந்து நாட்டினுள்ளவளப்பமெல்லாங்கண்டார்பாதி, தேமேதான்காயாதி கற்பசாங்கம்தெளிவாகச்சொன்னவர்களொருவரில்லை, பூமானுங்காலாங்கிநாதர்தாமும் புசமுடனேபாடிவைத்தார்கோடியாமே. ௨௯௧

கோடியாஞ்சித்தர்களிலொருவருண்டு கூறினர்பலபலவாய்கண்டாராய்ந்து, தேடியேமானிடர்கள் பிழைக்கவென்று தெளிவாகப்பாடிவைத்தார்சித்தர்தாமும், பாடியதோர்நூலெல்லாம் பழுதாராய்ந்து பாரினிலேபலபலவாம்பேதஞ்சொன்னர், நாடியேபோகரிஷிஅடியேன்றானும் நயம்பெறவேயுலகமதில்நவின்றிட்டேனே. ௨௯௨

நவின்றிட்டேனின்னமொருகருமானங்கேள் நாட்டிலுள்ளமாணக்கள்பிழைக்கவென்று, தவின்றிட்டசாத்திரத்தின்யுத்தாயுத்தம் தண்மைபெறவெகுசுளுவாயாரய்ந்தேநான், புவின்றிட்டகாயகற்பசெந்தூரத்தை பூட்டினேன்லோகத்துமாந்தர்க்காக, கவின்றிட்டேன்பொன்னிறாமத்தைதன்னால் கருவாகநானறைப்பாய்சாமமெட்டே. ௨௯௩

பொன்னூமத்தைமூலி.

எட்டானசாமமது செந்தூரத்தை யெழிலாகத்தானரைப்பாய் மைந்தாகேளும், திட்டமுடன்மைபோலேதானரைத்து தீர்க்கமுடன் பில்லையதுலக்குவாய்த்தட்டி சட்டமுடன்ரவிதனிலேகாயவைத்து, சாங்கமுடன்வோட்டிலிட்டுச்சீலைசெய்து, வட்டமென்றகுழிதனிலேயெருவடிக்கி வாகுடனேபுடமதுவும்போடுபோடே. ௨௯௪

போட்டவுடன்றியாறியெடுத்துப்பாரு பொலிவானசெந்தூரமென்னசொல்வேன், நீட்டமுடன்செந்தூரக்காரமேறி நீணிலத்தில்காயாதிகற்பமாச்சு, வாட்டமுடன செந்தூரமிந்தபாகம் வளமையுடன் வைந்துபத்துபுடந்தான்போடு, தாட்டிகமாய்செந்தூரமருணன்போலாம் தாரணியிலொருவருந்தான்செய்யார்தானே. ௨௯௫

தானானசெந்தூரந்தீதவித்தை !தாரணியிலொருவருந்தான்செய்ததில்லை, கோனானமெனதையர் காலாங்கிநாதர் கொற்றவனார் தம்பதியிலடியேன்சென்று, வேனானசாத்திரத்தினுளவுபார்த்து வேகமுடன்சீனபதிசென்றுயானும், பானானகுளிகைதனைப்பூண்டுகொண்டு பறந்திட்டேன்சீனபதிதேசங்காணே. ௨௯௬

காணவேசீனபதிசென்றேன்யானும் கமலமுனிசீர்பாதங்கண்டு போற்றி, வேணவுபசாரமதுமிகவுஞ்செய்து வெற்றியுடன்குளிகையதுபூண்டுக்கொண்டு, பாணமதுபோலெழும்பிவடியேன்றானும் பக்கலென்றசமாதியதுநின்றேன்யானும், நாணவேதலைகுனிந்துநின்றபோது நாதராங்கமலமுனிவிடைசொன்னாரே. ௨௯௭

விடையென்றுசொல்லுகையிலடியேன்றானும் விருப்பமுடன்வுத்தாரஞ்சொல்லலுற்றேன், தடையில்லாவாக்கதுவுங் கமலர்தாமும் தாட்சியுடனெந்தனுக்குவுரைததாலே, மடைபோன்றசெந்தூரகாயகற்பம் மகதேவர்மகிட்சியுடன்செய்யலுற்றேன், இடையூறுவாராமல்யெந்தனுக்கு பெழிலானவாக்கதுவுங்கொடுவென்றேனே. ௨௯௮

கொடுவென்றுகேட்கையிலேசித்துதாமும் கொம்பெனவேயெந்தனுக்குச்சாபந்தீர்த்து, படுமுன்னேசரக்கெல்லாங் கட்டிப்யோகபாரினிலே காயாதிகற்பந்தானும், தொடுகுறிபோலெந்தனுக்கு வுளவுஞ்சொல்லி, தோஷமதுபோவதற்கு முறையுஞ்சொல்லி விம்லகலு [illegible]நீக்கக்காயகற்பம்விருப்பமுடன்வாக்களித்தார்முறையுந்தானே

தானனகமலமுனிநாயர்தாமும் தகமையுடனெந்தனுக்குவாககளி த்தார் கோனனகாலாங்கிநாதர்பாதம் கும்பிட்டுவடியேனுந் தாள்பணி ந்து-தேனளசாத்திரத்தைக்கண்டாராய்ந்து திரட்டிவைத்தேன் போ கரேழயிரந்தான்பானனகாலாங்கிதனைநினைந்து பாடிவைத்தேன் சத்த காண்டம் பண்பாய்த்தானே ௩௱

செந்தூரப்பெருமைரோதநிதானம்

தானேதான்செந்தூரப்பெருமைதன்னை சாத்துகிறேன்மானுக்க ள்பிழைக்கவென்று.மானேகேள்வனுபானமினமறிந்து மயங்காமல்மா னிடர்கள்கொள்வதற்கு தேனேதான்பசும்வெண்ணை நெய்யுமாகும் தே ற்றமுடன் தாலாகுஞ்சூரணந்தான் ஊனனலேகியங்கள்குரதமாகும்வு த்தமனேயிஞ்சிரசம் முலைப்பாலாமே ௩௱௧

ஆமேதான்சர்க்கரையுமெழுகுமாகும் அப்பனேயிந்தவிதவனுபா னங்கள்நாமேதான்சொன்னபடிசிகிச்சைசெய்தாலநாடாதுதேகம்வனு பிணிகள்போகும்போமேதான்பொல்லாதநோய்கள்போகும்பொலிவா னரோகத்தின்மாற்கஞ்சொல்வேன்வேமேதான் பிணிக்குறிப்பு வுளவு சொல்வேன் வேகமுடன்காயாதிகற்பங்கேளே ௩௱௨

தீரும்வியாதி

கேளேதான்வாயுவென்றதெண்பதும்போம் கெடியானபித்தமது நாற்பதும்போம் நாளேதான்கிரந்திபதினெட்டும்போகும் நாடாது ஜ ன்னிபதிமூன்றும்போகும் பாளேதான்பாண்டுவகையாறுந்தீரும் பால கனேமூலமிருபதுவும்போகும் வீளேதான் அதிசாரரோகம்போகும் வீறனகிராணியென்றதாறும்போமே ௩௱௩

ஆறனவாதமென்றரோகம்போகும் அப்பனேசிலேதம்மதுதொ ண்ணூற்றாறும்காறனகெடியரோகம்பதினெட்டும்போம்கருவானகாச மென்றரோகமெட்டும் வேறனவுளமாந்தைரோகம்போகும் விருப்ப முடன்பிரமியங்களனைத்தும்போகும் கூறனமேகமென்றயிருபத்தொ ன்றும் கொற்றவனேசடலம்விட்டுயேகும்பாரே ௩௱௪

பாரேதான்குட்டமதுபதினெட்டும்போம் பாங்கானசோகையெ ன்றரோகம்போகும்-நேரேதான்மகோதரங்களெட்டுப்போகும் நெடி தானவிஷபாகமாறும்போகும் சேரேதான் சூலைபதினெட்டும்போகும் செழிப்பானகுன்மமென்றதெட்டும்போகும் மேரேதான்பெரும்பாடு ரோகம்போகும்மேலானகல்லடைப்புவாலும்போமே ௩௱௫

மோமேதான் விப்புருதிரோகம்போகும் பொலிவானகாப்பன்பதி
னெட்டும்போகும் வேமேதான் பவுத்திரங்கடனைத்தும்போகும் விரு
ப்பமுடன் நேத்திரநோய் தொண்ணூற்றுகும் நாமேதான் சொன்னப
டிவதிரோகங்கள் நாட்டிலுள்ளவதிசூரியெல்லாம்போகும் தாமேதான்
பீநிசங்களெட்டும்போகும் தாக்கானசிரசிநோ யனைத்தும்போமே

சிரமானநோயுடனே யின்னஞ்சொல்வோம் சீரானதாகமென்ற
ரோகம்போகும் வரமானவிக்கல்வலிரோகம்போகும் வகையானசுவாச
மென்றரோகம்நீங்கும் உரமானவாந்தியென்ற ரோகம்போகும் வுத்த
மனே மார்புநோய்தனைவிட்டேங்கும்பரமானகம்மலென்றரோகம்போ
கும் பார்த்திபனே சகலவிஷரோகம்போமே ௫௱௭

போமென்றுவிடுகாதே யின்னஞ்சொல்வோம் பொலிவானவாண்
குறியின்ரோகம்போகும் தாமெனவேபெண்குறியின் ரோகம்போகும்
தாக்கானமருந்துவகை வீறுபோகும் நாமெனவேமலட்டுவலி ரோகம்
போகும் நாடாதுக்கசரோகமெல்லாம் நீங்கும் வேமெனவே காயாதிகற்
பமாற்கம் விருப்பமுடன்செய்கின்றவீரந்தானே ௫௱௮

வீராமாஞ்சில்விஷங்களற்றுப்போகும் வேகமென்றபிளவைமெ
ணனுங்கட்டிப்போகும் சாரமாம்ரத்தவிஷமற்றுப்போகும் சதாகாலம்
மேலிளைப்பு தேர்ந்துபோகும் தூரமாங்காதவழி நடக்கலாகும்நடந்தா
லும் வாசியதுகீழேநோக்கும் பாரமாந்தேகமது கற்றூணாகும் பாரினி
லேவெகுகாலமிருக்கலாமே ௫௱௯

இருக்கலாங்கோடியுக்கற்பகாலம் யிருந்தாலும்நரைதிரையும்ஒன்
றுமில்லை சுருக்கமுடன்மேனியது தளந்திடாது தளர்ந்தாலும் நரம்பு
க்கு வலுவுமுண்டு பெருக்கமுடன் காயாதிகற்பககாலம் பேருலகில்நீயு
மொருசித்தனவாய் உருக்கமுடன் செந்தூரங்கொண்டபேர்க்கு வுலக
த்தில் வயதுகணக்கில்லைதானே ௫௱௰

கணக்கில்லைகாலன் லந்தணுகமாட்டான் காசினியில் வெகுகாலமி
ருக்கலாகும் பிணமாகிமுச்சடங்கி யிருந்திட்டாலும் பேருலகிலுன்னை
யொருசித்தனென்பார் சனநேரம்வாசியைநீ நடத்திட்டாலும் சதாசிவ
ன்தான் நீயென்றுசொல்லுவார்கள் மணமுடனேபூமிதனில் வாழலாகு
ம்மண்ணுலகில் வேந்தரெல்லாம்நடுங்குவாரே ௫௱௰௧

நடுங்குவார்வுனைக்கண்ட சீஷவர்க்கம் நாடோறும் வுந்தனுக்குப்ப
ணியேசெய்து ஒடுங்கியேயுந்தனிடபக்கஞ்சென்று வுபசாரவார்த்தை
களுமதிதம்பேசி கொடுக்கவசியானதொருயுந்தனுக்கு கோபமதுவா

ராமல் முன்னேனின்று படுந்துயரமிகவாகி மனதிலெண்ணி பட்சமு
டனசதாநித்தஞ்சேவிப்பாரே ௫௰௨

சேவிபபார்தவநிலையிலொடுங்கிநின்று சேர்வையுடன்காட்சிதனை
க்காணவென்று கோவிப்புவாமல்குருவைத்தானும் கொற்றவனுமிமெ
ன்னாளும் பணிந்துநின்று தாவிப்பாம்சோட சோபசாரத்தோடு தண்
மையுடனேவலுக்கு முதலாய்நின்று சாவிப்புவராமல் புனிதவானையச
தகோடிகாலம்வரைபணிசெய்வாரே ௫௰௩

பணியானநீயுமொருசித்தனைப்போல் பாலகனேயென்னாளுமிருப்
பதற்கு அணியானசிவயோகந்தன்னிற்சென்று ஆத்தாளை சதாநித்தம்
பூசித்தேதான் துணிவோடுசமாதிநிலை நின்றுகொண்டுதுப்புறவாய்மே
ல் மூச்சுதனையடக்கி மணியானபூரகத்தைதமேலேநோக்கி மார்க்கமுட
ன்வனகத்தைப்பூட்டிப்பாரே ௫௰௪

பூட்டிமிகப்பார்க்கையிலே பொலிவுதோன்றும் பொங்கமுடன்சு
மூத்திதனைமேலிறுத்தி ஆட்டுமெந்தைதனிவோனாய்ப் புகுந்தாப்போல
வப்பனேயஷடாங்கந் தன்னிற்சென்று கூட்டுமுறைவகையறிந்து சிவ
யோகிதானும் குணமுடனே புங்கசித்திபெற்றுக்கொண்டு பாட்டுநயம
றிந்துமல்லோ பாரின்மீது பாரமுடன்தவசிருத்தல்மெத்தநன்றே ()

நன்றானயோகமதை யறியவேண்டும்நாயகனேயென்னாளும்பூசை
வேண்டும் குன்றானமாய்கைதனையறுக்கவேண்டும் கொடிதானபொரு
ளாசைநீக்கவேண்டும் பன்றானசாத்திரத்தைப்பலவும்பார்த்து பாரினி
லே கோளாறுபறியவேண்டும் சென்றாலும்ராசரிடஞ் செல்லவேண்டு
ம்செயலான பாக்கியத்தைநீக்கனன்றே ௫௰௬

நீக்கவேபொருளாசை யவர்க்குச்சொல்லி நிதியெலாந்தானழிக்க
மதியுஞ்சொல்லி போக்கவேகர்மானுபவத்தைநீக்கி பொங்கமுடன்யெ
ன்னாளும் ஞானமோதி வாக்க துவும் பிசகாமல்வறியோருக்கு வண்மை
யுடன் தானமதுசெய்யச்சொல்லி நோக்கமுடன் னவரவர்க்குத்தக்க
பாகம்நுண்மையுடன் கொடுப்பதுவேதருமமாமே ௫௰௭

காயாதிகற்பமுண்டவர்கள் அஷ்டசித்திபெற

தருமமாங்காயாதிகற்பமுண்டோர் சதாகாலஞ்சாயுச்சியம்பெருவ
தாகும் கருமாம்வஷடாங்க பீடைதானும் காசினியில் வெறுப்பதுவே
யோகமார்கம் சருமமுடன்காயமது பூமிதன்னில் கட்டமுடனிருந்தா
லுங்கரிப்பேறாது மருமமுடன் சித்தாதிசித்தரெல்லாம் மானிலத்தில்
யிப்படியேவழங்கினரே ௫௰௮

வழக்கமுடன்தானிருந்தார்சித்தாசித்து வையகத்தில்காயாதிகற்ப முண்டு பழக்கமதுமிகவாகிபாரினிற்குள் பதிங்கிருந்தார் வெகுகோடி காலந்தானும் முழக்கமுடன் ஆண்டுக்கோர்கோஷ்டிகாட்டும் மூதுலகி லகண்டவர்கள் பிரமிப்பார்கள் தழக்கமுடன் சீஷவர்க்கம்யிதுவேபாக ந்தாரணியில்வெகுசித்துஆடினரே ருகசு

சீஷர்கள் ஆசானுக்கு அஞ்சலிசெய்தது

ஆடினார்சித்தர்முனிரிடியைப்போல் அவனிதனில்கோடிமனுதவ சியோர்கள் தேடியேசமாதியிட நிலையைக்கண்டு தேற்றமுடன்பெரி யோரையடுத்துமேதான் கூடியேகும்பல்கும்பலாகச்சேர்ந்து குருவா ன்தவநிலையைக்காணவென்று நாடியேசொருபமென்ற நிலையைக்காண நலமுடனேகாத்திருந்தாரனேகம்பேரே ருஉ0

போனவழிதனிலே வதிதம்பூண்டுபேருலகில் நீயுமொருசித்தனை ப்போல் தூரானகெட்டவழிசெல்லாமற்றுன் துரைராஜ சுந்தரன்போ லிருந்துகொண்டு வாரானசாத்திரத்தின் வண்மைபார்த்து வண்மையு டன்வாதமதையறிந்துகொண்டு தேரானயோகமதைநிலைநிறுத்தி தேற் றமுடன்யோகநிலைக்கிடமுந்தேடே ருஉக

தேடையிலேவிட்டகுறை நேர்ந்துதானல் தெளிவுடனேயுந்தனு க்குலபிக்கும்பாரு கூடையிலேவாசானன்னில்லாவிட்டால் கொற்றவ னேகாயாதிகற்பம்போதும் பாடையிலேசென்றாலும்திரேகமபோமோ பாரினிலேதெரியாமல்யிருந்தார்கோடி நீடையிலேகாயாதி செந்தூரந் தான் நிலைத்துதடாதேகமதுகற்றூணச்சே ருஉஉ

கற்றூணும்பொற்றூணுங்கருங்கல்லாகும் காசினியில்காயாதிகற்ப மாச்சு கற்றூணுங்காயாதி செந்தூரந்தான் நாயகனே யுக்கோடிதவஞ் செய்தாலும் பற்குணனும்வீராதிவீரன்போலும் பாரினிலேசதகோடி சூரியன்போல் துற்குணங்கள் தானகன்றுசித்தனாவாய் துரைராஜசிவ யோகிநீயாவாயே ருஉரு

ஆகையிலேசெந்தூரமுண்டபேர்க்கு அவனிதனில் நரையில்லைதி ரையுமில்லை சாகையிலேசேத்துமங்களணுகிடாது செத்தாலும்ஆவிப து வெடிபோதாது போகையிலேதளஞ்செயனும் சிரசுக்குள்ளேபொ ங்கமுடன் தான்வகித்துக்கற்பகாலம் வேகையிலே தீயதனில்வெந்திட் டாலும வெகுசுறுக்காய்தேகமது துள்ளுமபாரே ருஉச

பாரேதான்தேகமது துள்ளுமபோது பாரினிலேசெகஜால வித் தையென்பார் நேரேதான்சவமுகத்தில் நிற்குமபோது நெருப்பானத

ணலதுவும்விந்துபோகும் கூரானமானிடர்கள்சொல்வதென்றால் குவ லயத்தே செகஜாலவித்தையென்பார் தூரேதான்மசானமதி லிருந்து கொண்டு துப்புறவாய் சவமதனைபழிகொல்வாரே ௩௨௫

பழியானசெந்தூரங்காயகற்பம் பாருலகிலுண்டவர்க்குக் காயம் போகா வழியானசெந்தூரம் யார்தான்செய்வார் வண்மையுள்ள சிவ யோகிதானேசெய்வான் மொழிவானகருவாளியானமாந்தர் மோசமின் றிகாசுதனைசெலவுசெய்து கழியானசெந்தூரப்போக்குதன்னை கனமு டனேசெய்பவனேபுனிதனுமே ௩௨௬

புனிதனுமயின்னமொருமார்க்கம்பாரு புகழானசெந்தூரஞ் செப் பக்கேளும் வனிதமுடன் வெள்ளிசெம்பில் பத்துக்கொன்று வாகுட னே தானுருக்கிகுருவொன்றீய கனிவானகரியோட்டிலூதிப்போடுகரு வான்செம்பதுவுங்கொஞ்சம்நீங்கி தனியானவெள்ளிபதுவரண்மேறித கமையுடன் பொன்னென்றமாமாற்றுமாச்சே ௩௨௭

ஆச்சப்பாகுடவனிலேபத்துக்கொன்று அப்பனே பாய்ச்சிடவே மாற்றெட்டாகும் மாச்சப்பாசெம்புதனில் பத்துக்கொன்று பாங்குபெ றமாற்றதுவுமெட்டதாகும் பேச்சப்பாபிசகொன்று மில்லைதானும்பே ரானதங்கமது பத்துக்கொன்று மூச்சப்பாவிடுகாமலுருக்கியேதானமு தன்மையுடன் தானெடுக்கக்களக்குமாமே ௩௨௮

களங்கானதங்கமதை யெடுத்துக்கொண்டு கருணையுடன்வெள்ளி தனிலபத்துக்கொன்று விளங்கவேதானுருக்கியெடுத்துக்கொண்டு வே கமுடன்வாரடித்துப் புடத்தைப்போடு அளங்கமுடன் தங்கமதுவிளை யும்பாரு அப்பனேசிவத்துக்குவுருகிதங்கம் நளங்கமுடசிவராஜ யோக ஞ்சென்று நாட்டிலேதாமிருந்தார்கோடியாமே ௩௨௯

கோடியாந்தவகோடிரிடிகள்கோடி குவலயத்தில் சத்துவகையறி யாமற்றூன் கோடியேசுட்டலைந்து கெட்டார்கோடி தெரிசனங்கள் கா ணுமல் மாண்டார்கோடி வாடியேமனந்தளர்ந்து வழிகாணுமல் வகை கெட்டு நூல்பார்த்து மறந்தார்கோடி கூடியேயொருவரிடம்முறைகள கேட்டு கூர்மையுடன்பாராமல் கெட்டார்தாமே ௩௩௰

கொங்கணவர்காயகற்பம்

தாமானயின்னமொருகருமானங்கேள் தகமையுள்ளசித்தர் முனி கொங்கணவரப்பா சாமான்யமானதொருசாத்திரத்தை சதுரானசங்க மதிற்கொண்டுசென்று பூமான்கள்சித்துவகையிருக்குங்கூட்டம்புகழ்ச் சியுடன்வழிபாடு சென்றுமங்கே மாமான்யமானதொரு கொங்கணவ

ர்தாமும் மகிப்புடனே சபைநடுவேசென்றிட்டாரே ௩௩௧

சென்றிட்டகொங்கணவாசித்துதாமும் சிறப்புடனே சித்தர்முனி தம்மைக்கண்டு வென்றிட்டசாத்திரததைவாதுபேசி விருப்பமுடன்ச த்துவகைமிகவும்பேசி கன்றிட்டகருக்குருவை தெரிந்துகொண்டு கரு த்துடனேகுருமுடிக்க மனதிலெண்ணி பன்றிட்டசாத்திரத்தைத்தோ ஷஞ்சொல்ல பாரினிலேசத்துவகை முடித்தார்காணே ௩௩௨

காணவேசத்துவகை யெடுக்குமார்க்கம் கடந்ததோர்ஞானிமுதல் சித்தர்தாமும் தோணவேபாஷாணம்முப்பத்திரெண்டும் துறையோடு ம்முறையோடுஞ் செப்பக்கேளு பூணவேவகைவகைக்குப்பலமதாகபுக ழுடனேதேனதனில் நாலுசாமம்வேணவே தானகைப்பாய்மைந்தாகே ளு விருப்பமுடன்வெண்ணெயதுபோலேயாட்டே ௩௩௩

ஆட்டியேபோவிதனிலேகாயவைத்து அப்பனேமூசைதனிலடைத்து மைந்த பூட்டியேவாலுகையா மேந்திரத்தில் புகழாகதானறைப்பாய் மைபோலாக நாட்டியேமூசைதனி லடைத்துமைந்தா நலம்பெறவே சில்லிட்டுச்சீலைசெய்து நீட்டமுடன சாவுலையில்வைத்துவூதுநேரானே சரக்கெல்லாம் புகைந்துபோமே ௩௩௪

போகுமேசரக்கெல்லாஞ்சத்தேயாகி பொங்கமுடன் யீயமதுபோ லேயாகும் சாகுமேபாஷாணம்புகைந்துமல்லோ சத்துபோல்சதயர்கி ளங்கமாகி வேகுமேசாவுலையில் புகையுண்டாகி வேகமுடன்அஞ்சன த்தின் கல்போலாகும் பாகுடனேவுருக்கியதோர் மூகைதன்னைபதமுட னே தானெடுத்துவுடைத்துப்பாரே ௩௩௫

பாரேதான்பாஷாணஞ்சரக்குஞ்சேர்ந்து பாகமுடன்தானுருகிகரியா ய்நிற்கும் நேரேதான் பூனகம்மண்ணைப்போக்கி நேர்மையுடன்சத்துக் குநேர்சேராக கூரேதான்வினயமுட னென்றுப்சேர்த்து கொற்றவ னேகல்வமதிலிட்டுப்பின்பு வேரேதான் ஆவின்னெய்தன்னாலாட்டிவே கமுடன் மூசைதனிலடைத்திடாயே ௩௩௬

அடைக்கவென்றால் வச்சுரமாங்குகையில்வைத்து அப்பனேசில லிட்டுச்சீலைசெய்து தடையறவேரவிதனிலேகாயவைத்து சாங்கமுட ன்சாவுலையில் வைத்துவூது மடைபோன்றதீயதினால் வெந்துசத்தாய் மார்க்கமுடனீயம்போலுருகிநிற்கும் இடைநடுவேகளங்கமதையெடுத் துக்கொண்டு யெழிலானதங்கமது நேர்தான்கூட்டே ௩௩௭

கூட்டியேதானுருக்கியெடுத்துக்கொண்டு கொற்றவனே கல்வமதி ட்டுமைந்தா தாட்டிகமாய் பொற்றலையின்சாற்றினாலே தண்மை

யுடன்தானரைப்பாய் நாலுசாமம் நீட்டமுடன்தானரைத்துபில்லைதட்டிகோர்புடனேரவிதனிலே காயவைத்து வாட்டமுடன் வோட்டிலிட்டுச்சிலைசெய்து வளமையுடன் சரவுலையிலேற்றிடாயே ருருஅ

ஏற்றியேவுருக்குமுகம் தன்னிலேதான் யென்மகனேதுருத்தியது நாலதாகும் போற்றியேவாலாமபிரைதனைநினைந்து பொங்கமுடன் மூசைதனைநெருப்பிலிட்டு தூற்றியேகரியதனைமேலேகொட்டி துப்புரவாய் மூசைபதுயமுகுமட்டும் நாற்றிசையுந்தீபறக்கவூதுவூது நாயகளே சத்தெல்லாமுத்துமாமே ருருகூ

முத்தானசத்ததுவுஞ் சொல்லப்போமோ மூதுலகில்யாரேனுங்கண்டதுண்டோ சித்தானமுனிரிடிகள்செய்யும்வேதை தேசத்திலமற்றவரால்செய்யப்போமோ வித்தானகளங்கமது காயகற்பம்விண்ணுலகில்கருவாளி செய்வான்பாரு சத்தானசததுதனை யெடுத்துமைந்தா சார்புடனே மூசைதனையுடைத்துப்பாரே ருசய

உடைத்துமிகப்பார்க்கையிலே யென்னசொல்வேன்ஓகோகோநாதாக்கள்ரிடிகள்வேதை புடைத்துமேசத்துதனைதானெடுத்து புகழாகக்கல்மதிலிட்டுமைந்தா கடைப்புடனேவீரமென்ற செயநீர்தன்னால் களிப்புடனே தானரைப்பாய்சாமம்நாலு படைப்புடனே பில்லைதட்டிகாயவைத்து பாங்குபெறவோட்டிலிட்டுச் சிலைசெய்யே ருசக

சிலையென்றால் பெழுசிலைவலுவாய்ச்செய்து சிறப்புடனேசெம்மண்ணைமேலேபூசி காலைதனில்கெஜபுடத்தில் போட்டுமல்லோ கருவாகமூன்றுநாள்பொறுத்தபின்பு மாலையென்னும் மூன்றுநாள்மாலையப்பா மயங்காமல்தானெடுப்பாய்மைந்தாநீயும் வாலைபென்னும்திரிபுரையாம் புவனைவாலை வண்மையுடன் தானினைத்துயெடுத்திடாயே ருசச

எடுத்துமிகப்பார்க்கையிலே பென்னசொல்வேன் யெழிலானசெந்தூரமேற்றமெத்த அடுத்துநின்றபேர்களை நீதூரந்தள்ளி அப்பனே செந்தூரமெடுத்துக்கொண்டு தொடுத்தகுறிதப்பாமல் பின்னுங்கேளுதோராமல்கல்வமதிலிட்டுமைந்தா கொடுத்துமேமுன்சொன்னசெயநீர்தன்னால் கொப்பனவேதானரைப்பாய்சாமமெட்டே ருசரு

எட்டான்சாமமது வரைக்கும்போது யெழிலானவெண்ணையது போலேபாகும் கட்டானசூதமதுகாலாய்ச்சேர்த்து கருவாகதானரைப்பாய் சாமம்ரெண்டு மட்டானபில்லையது சிறுகத்தட்டி மதிப்பானரவிதனிலேகாயவைத்து தட்டானபதிதனிலே குழிதான்வெட்டி தகமையுடன்புடம்போடவரிசைகேளே ருசசு

வரிசையென்றால்வரிசையது செப்பக்கேளும் வாகுடனேகுழித னிலேமணல்காண்தொட்டி சரியானமண்மேலே வுப்பைகொட்டி சார் பாகமில்லேதனைமேலேவைத்து பரிவுடனேமேலுமந்த வுப்பைக்கொட் டி பன்புடனேமணல்தனைமேல்பரப்பி குறியானகுறுப்பதுபோல் வுமி தனைக்கொட்டி கொற்றவனே மேல்தனிலேயெறுவுபோடே ௫௪௫

போட்டவுடன்தீமூட்டிப்புடந்தான்போடு பொன்னவனேமூன்று நாளாறுமட்டும் தாட்டிகமாய்தனையெடுத்து பார்க்கும்போது சட்டமு டன்செந்தூரமருணன்போலாம் மாட்டிமையாய் யிதமுறை ஐந்துப த்துமயங்காமல்தான் போடவரிசைகேளு பாட்டினது முறையேனும் பொய்யுமாகா பாரினிலேகொங்கணவர் பாகமாமே ௫௪௬

பாகமாங்கொங்கணவபாகந்தானும் பாரினிலேபாரேனுஞ் செய்த துண்டோ கோபமாம் முனிசொன்னவாக்குப்பொய்யோகொற்றவனே கொங்கணவர் வார்த்தைபொய்போ ஏகவழித்தனைக்கடந்த ஞானவசித து யெற்றமுடன்மானிடர்கள்பிழைக்கவென்றுசாகமுடன்செய்துவை த்தார்யிந்தபாகம் சட்டமுடன்கொங்கணவர்நாதர்தானே ௫௪௭

தானனசெந்தூரமென்னசொல்வேன் தாரணியில்மாமுனிவர்ரிடி கள்தாமும் தேனனபாகமிதுகைபாகந்தான் தேற்றமுடனாராய்ந்துகே ளாவிகேட்டு கோனனயெனதைபர்காலாங்கிநாதர்சொன்ன வளவாக்கு னமுங்கண்டு பானனசெந்தூரப்பாகங்கண்டு பாரினிலேசந்தேகநீங் கினரே ௫௪௮

நீங்கினார்கொங்கணவர்கைபாகத்தில் நீடாழிகாலம்வரை நுணுக்க ம்பார்த்து தூங்கியேதிரியாமல் சித்துதாமும் துறையோடுமுறையோ டுச்செய்துசொண்டா ஓங்கியேபாகமதுகைவிடாமல் வுத்தமனேசெய் துமல்லோகுளிகைபூண்டு ஏங்கியேபோகாமல்மைந்தாநீயும் யெழிலு டனேயிப்பாகஞ்செய்திடாயே ௫௪௯

செய்பவென்றால்வெகுகோடிமாந்தர்தாமும் செம்மையுடன்செய் துமல்லோ முறைதான்காணார் பையவேகருவாளிசெய்வான்பாருபாரி னிமேல்மற்றவரோகாணார்காணார் கைடவருங்கோபத்தோர் செய்யமாட் டார் நாட்டிலுள்ளசாதமீகர்செய்வார்பாரு துய்யவேவாதவித்தைசெய் வோர்தாமும் துப்புறவாய்செய்வதுவும் திண்ணமாமே ௫௫௰

போகர்சீனபதியில் நவவிதவர்ணஞ்செய்தது

திண்ணமாமின்னமொரு கருமானங்கேள் திகழானவர்ணமென்ற போக்குசொல்வோம்வண்ணமுடன்பஞ்சவர்ணவிதங்கள்சொல்வோம்வ குப்புடனேபதிற்பிறந்தவர்ணநான்காம் நண்ணமுடன்வாயுவென்றயி ரும்புதன்னில் நலமானவர்ணமதுரூபபேதம் -கண்ணபிரான்வர்ணமது போலேயாகும் காசினியில்சித்தர்செய்யும்வேதைபாச்சே　　ருகக

வேதையிலே யின்னமொருபோக்கைக்கேளும் வீருனசிறியகண் ணுகந்தானுதீதையிலே தானுருக்கிமதிப்போடு திகழானகளங்குபோ லுருகும்பாரு- போதமுடன்சூதமதைக்கூடச்சேர்த்து பொங்கமுடன் தானரைப்பாய்நாலுஜாமம் நாதமுடன்சாரமென்றசெயநீர்தன்னுல்நளி னமுடன்தானரைத்துசெப்பக்கேளே　　ருகஉ

செப்பவென்ருல்வளையலுப்புகூடச்சேர்த்து சிறப்புடனேநிம்பழ ச்சார்தானும்விட்டு ஒப்பமுடன்வென்னீரில்கலக்கிக்கொண்டுவோங்கு பெறசெம்பென்றதகட்டைத்தானும் நெப்பமுடன் தகடடித்துஜலத் திற்போடநேரானவர்ணமதுமேலேதாவி துப்பரவாவொளிவீசுந்தகட் டின்மேலே சூரியன்போல்தங்கமென்றவர்ணமாமே　　ருகங

ஆமேதான்வர்ணமொடுசிவப்புபச்சை அப்பனேநீலமென்றகறுப் புகாணும் தாமேதான்ரசமதனைக்கூடச்சேர்த்து தண்மையுடன்சீசாவி லடைத்துமைந்தா வேமேதான்தகடதனைதோய்க்கும்போது விதமா னசஞ்சாயவரன்ங்காணும் நாமேதான்சொன்னபடி ரூபாவர்ணம் நப முடனேதகடதனிலேறும்பாரே　　ருகச

பாரேதான்யிரும்புக்குயிந்தமார்க்கம் பாகமுடன்செய்துவந்தால் பண்பதாகும், நேரேதான்வங்கமதுதகடடித்து நேரானமுன்சொன்ன சரக்கிலேநான்வாரேதான்வங்கமதையுருக்கியேதான்வளமுடனேகாய் ச்சியல்லோதோய்ச்சிப்பாரு கூரேதான்துரிசியிடகாரத்தாலே கொற்ற வனேபலவேதம்விளையுந்தானே　　ருகரு

விளையுமேசகலவிதரூபாபேதம் வேகமுடன் தோன்றுவது யுண் மைபாரு-களையுடனேசூதத்தால்யெல்வாங்தோற்றும்காமரூபவடிவமெ ல்லாமிதிலேதோன்றும்தளைவுடனேதாளகத்தின் புகையினலேதகமை யுள்ளகெந்தியதுகாரத்தாலு மசுளையுடனேபுத்ததுபோல் புகையெ.. ம்பிசொர்ணமென்னுவேகமென்றவரணமாமே　　ருகசா

கருவங்கபற்பம்

வரணமாயின்னமொருபோக்குச்சொல்வேன்வாகானகருவங்பற்ப ங்கேளுதரணமாங்கருவங்கஞ்சேர்தாரனென்றுதகடையுடன்தகடடித்து செப்பக்கேளு, முரணமாங்கருங்காலிகிழங்குதன்னை முதன்மையுடன் தானரைத்துமூசைசெய்து,திரணமாம்குகைக்குள்ளேதகடைவைத்து தீர்க்சுமுடன்முன்சொன்னமுப்புபோடே கூருள

போட்டுமேசில்லெட்டுச்சீலைசெய்துபொங்கமுடன்ரவிதனிலேகா யவைத்து,காட்டென்றயெருவதனைகெஜமதாக்கிகருவாகக்குழிவெட்டி ப்புடத்தைப்போடு,மூட்டென்றபுடமாறிமூன்றுநாள்தான்முக்கியமாய் திருவாணிபூசைசெய்து, தாட்டிகமாய்ப்புடந்தனையேதிறந்துபாருதளு க்கற்றகருவங்கபற்பமாமே கூருஅ

ஆமேதான்பற்பமதையெடுத்துக்கொண்டு அப்பனேசிற்றண்டம் சௌவுபோக்கி,தாமேதான்பற்பமெடைசரியாய்தூக்கிதகைமையுள்ள சிற்றண்டங்கூடச்சேர்த்து, போமேதான்வெண்கருவால் மிகவயாட்டி பொங்கமுடன்தானரைப்பாய்நாலுசாமம், நாமேதான்சொன்னபடிபி ல்லைதட்டிநலமாகரவிதனிலேகாயவைவயே. கூருகூ

வைத்ததொருபில்லைதனையோட்டிவிட்டுவண்மையுடன்சீலையதுவ லுவாய்ச்செய்து, கைத்ததொருகுழிதனிலேபுடமேபோடுநலமானகெ ஜபுடததில்வெந்துநீரும், தைத்ததொருபுடமாறியெடுத்துப்பாருதளர்ச் சியுள்ளபற்பமதுசொல்லப்போமோ, மெத்திடவேபற்பமதைபதனம்ப ண்ணுமேதினியில்சித்தர்செய்யும்வேதைபாச்சே கூசூ0

ஆச்சென்றுவிடுகாதேபின்னங்கேளு அருமையுள்ளபாலகனேபி ன்னுஞ்சொல்வேன், மாச்சலென்றகற்பமதைவனுபானத்தில்மார்க்கமு டன்பணவிடைதான்கொண்டபோது, மேச்சலென்றமேகமதுயிருபத தொன்றுமேதினியில்கண்காணுதோடும்பாரு, வீச்சலென்றுபிரவீச்சுச ன்னிபோகும்வீரமுடன்தாதுவிர்த்தியதிகமாமே கூசூக

அதிகமாங்குன்மமென்றதெட்டும்போகும்ஆண்மையுடன்குறிரோ ய்களனைத்தும்போகும், சதிரானகுஷ்டமதுபதினெட்டும்போம்சட்ட முடன்நீரிழியுமாறும்போகும், மதிமேகமென்றதொருரோகம்போகும் மாசற்றதேகமதுவன்னிநீரும், துதியுடனேதாரணியில்சதாகாலந்தான் துப்புறவாய்யோகநிலைசமாதிதேடே கூசூஉ

தேடையிலேசமாதிநிலைதன்னைக்கண்டு தெளிவாககேள்விகளில னேகங்கேட்டு, கூடையிலேசிவயோகநிலையினின்றுகுணமானவழிபாடு

தனையடுத்து, மாடையிலேசினமென்றகோபந்தள்ள மதிப்புடனேதார ணியிலிருந்துகொண்டு, நீடையிலேகரிவங்கபற்பந்தன்னைநீணிலத்திலு ண்பவனேசித்தனும ௩௬௩

சித்தனுய்ப்பிறந்தாலும்மதிகள்வேண்டும் சீறலென்றசினமதுவை த்தள்ளவேண்டும், பத்தியுடன்பதாம்புயத்தையெந்நாளும்பட்சமுட ன்மனநதனிலேநினைக்கவேண்டும், நித்தியமும்பரவெளியில்நிற்கவேண் டும்நீடாழியுலகாசையொழிக்கவேண்டும்,முத்தியுடனஷ்டமாசித்திதன் னைமுழுதுலகில்பெறுபவனேயோகியாமே ௩௬௪

வெள்வங்கபற்பம்

யோகமென்றால்போகமதைத்தள்ளவேண்டும்யொருவருடன்வீண் வார்த்தைகூறலாகா, போகமதைநீக்கிவிட்டுபூமிதன்னில் புகழாகவாசி யோகந்தன்னிற்சென்று,தாகமுடன்கானப்பால்தன்னைகொண்டுசதாகா லம்னிஷ்டையிலேயனுமானித்து, வேகமுடன்விட்டகுறைவந்தபோது வெறுப்பன்றிபொருப்பலுடன்மீளவீர்தாமே ௩௬௫

மீளுவதுயின்னமொருகருமானங்கேள் மிக்கானவெள்வங்கபற்ப ஞ்சொல்வேன், தாளுமையாய்வெளவங்கஞ்சேர்தானென்று தகமையு டன்சவுட்டுப்புச்சேர்தான்பாதி,கோளகற்றிதகடித்துமேலேபூசிகொ ற்றவனேயாவாரைபஞ்சாங்கத்தில், மாளுறைபாய்வெள்வங்கம்நீற்றுத ற்குமானிலத்திற்பஞ்சாங்கப்புடத்தைப்போடே ௩௬௬

போடவேவெள்வங்கம்பொருமினிற்கும் பொலிவானசோளமது போலேபாகும், நீடவேகோளமென்றபொரியெடுத்துநீட்சியுடன்கல்வ மதிலிட்டுமைந்தா,கூடவேயாறுவகைசெயநீர்தன்னால்கொற்றவனேதா னறைப்பாய்சாமம்நாலு, சாடவேமைபோலேவெண்ணையாக்கிச்சட்ட முடன்தானறைத்துபில்லைதட்டே ௩௬௭

தட்டியேரவிதனிலேகாயவைத்துசதுராகவோட்டிலிட்டுச்சீலைசெ ய்து, திட்டமுடன்குழிவெட்டிப்புடத்தைப்போடு திரமானபுடமதுதா ன்கெஜமேயாகும்,மட்டமென்றபுடவதுவும்ஒன்றேயாகும்மறவாமல்மூ ன்றுநாள்பொறுத்தபின்பு,சட்டமுடன்தானெடுத்துப்பார்க்கும்போது தவளைனிறம்போலாகஃபிருக்கும்பாரே ௩௬௮

பாரேதான்பற்பமதைதனையெடுத்துபாகமுடன் கல்வமதிலிட்டுப் பின்பு, நேரேதான்கிளிமூக்குகிழங்குதன்னைநேர்ப்புடமேனசார்பிழிந்து சொலலக்கேளு, சீரேதான்வெள்வங்கபற்பந்தன்னைசிறப்புடனேதான

றைப்பாய்நாலுசாமம், கூரேதான்வெண்ணெயதுபோலேனமர்ந்தாகுறிப் பாகதானரைத்துபில்லைதட்டே ௬௬௬

பில்லையென்றால்பில்லையதுகாசதாகபெறுமையுடன்தட்டியல்லோ ரவியிற்போடு, கல்லுபோல்தானுலர்த்தியெடுத்துக்கொண்டு கருவாக வோட்டிலிட்டுச்சீலைசெய்து, அல்லன்றிகெஜபுடத்தில்போட்டாயானு ல்அப்பனேபற்பமதுதவளம்போலாம், வெல்லவேபற்பமதையெடுத்து க்கொண்டுவிருப்பமுடன்கிழங்குச்சார்தன்னாலாட்டே ௬எ௰

கிழங்கென்றால்கிழங்கறுவுங்கொல்லன்கோவை கெடியானசாறது னைபிழிந்துகொண்டு, பழங்கமுடன்தானரைத்துபில்லைதட்டிபாகமுட ன்ரவிதனிலேகாயவைத்து, புழங்கவேவோட்டிலிட்டுச்சீலைசெய்துபுக ழாகெஜபுடத்தில்போட்டாயானுல்,விழங்கவேபற்பநிறங்கொக்குபோ லாம்விண்ணுலகில்செப்பவரும்அருமைதானே ௬எ௧

அருமையாம்பற்பமதையெடுத்துக்கொண்டு அப்பனேசிமிழதனி லேபதனம்பண்ணுபெருமையுடன்பணவிடைதான்சர்க்கரையிற்கொள் ளபேரானகவமூலமொன்பதும்போம், சிறுமைபடச்செயரோகம்மெல் லாம்போகும்சேர்மானமானதொருகசரோகம்போம்,ஒருமையுடன்தே கமதுகற்றூணுகும்வுத்தமனேயுனக்கீடுசொல்வாருண்டோ ௬எ௨

உண்டோதான்வையகத்தில்வுனக்கீடுண்டோ;வுத்தமனேநராஜப தியுநீதான், கண்டபடிபலபலவாஞ்சாத்திரத்தைகருத்திலேசத்தேனும் னினையாமற்றூன், விண்டபொருளொன்றிருக்கவொன்றைகொண்டுவி ட்டகுறைதொட்டகுறையில்லையென்று, சண்டியென்னும்மானிடரை ப்போலேநீயும்சதாகாலமிருப்பதுநன்கல்லதாமே ௬எ௩

நன்கல்லசாத்திரத்தைத்தாறுமாறாய் நலமுடனேபாராமற்கெட்ட லேந்து,புன்கவிகளொன்றிருக்கவொன்றைப்பார்த்துபுராதனத்தின்பொ ருளறியார்மட்டிமாண்பர், வன்கொடுமைசெய்பவரோடிணங்கிச்சென் றுவாதாடிபலகாலும்வார்த்தைபேசி, தென்பொதுகைதனிலிருக்கும்சி த்தர்நூலைத்தெளிவாகப்பாராதமட்டிமாடே ௬எ௪

மாடானமாடிதுதான்சென்மமாடுமானிலத்தில்நூலறியாமட்டிமா டு, கூடானகூடழியுஞ்சண்டிமாடுகுவலயத்தில்மெத்தவுண்டுகூறப்போ மோ, தேடானபாக்கியமுமிங்கிருக்கதேசத்தில்சுட்டலைந்தோர்கோடா கோடி, பாடானவழியறிந்துகாணுமற்றூன்பாரினிலேவிட்டகுறைக்கா ளாவாரே ௬எ௫

சூதச்செந்தூரம்

ஆவாரேயின்னமொருகருமானங்கேள் அப்பனேசூதமென்றராச ன்தன்னை, சாவானகள்ளியென்றமரத்தில்தானும் சட்டமுடன்தான்கு டைந்துசொல்லக்கேளும், பூவானசூதமதைவதனில்விட்டுதுப்புறவாய் யதின்துளைமேலேகொட்டி,நாவானசீலையதுவலுவாய்ச்செய்துநலமாக வாறுதிங்கள்கழித்துப்பாரே ௬௭௫

பார்க்கையிலேசூதமதுகாரமேறிபாலகனேவெண்ணையதுபோலே யாகும், தீர்க்கமுடன்வெண்ணைதனையெடுத்துக்கொண்டு திறமுடனேக ல்வமதிலிட்டுக்கேளு, ஏர்க்கவேமுன்சொன்னமுப்பூதானும்யெழிலாக க்களஞ்சியதுகூடப்போட்டு, நீர்க்கவேசூதமென்றவெண்ணைதன்னில்நி லையானதுருசுபலந்தன்னைப்போடே ௬௭௬

போடவேபற்பமதுகூடச்சேர்த்துப் பொங்கமுடன்கெந்தியென்ற செபநீர்தன்னால், நீடவேதானரைப்பாய்சாமம்நாலுநீட்கமுடன்வெண் ணையதுபோலேமைந்தா, கூடவேபில்லையதுதெல்லுபோலேகுணமாக த்தான்செய்துரவியில்வைத்து, தேடவேவோட்டிலிட்டுச் சீலைசெய்து தெளிவுடனேபுடம்போடபற்பமாமே ௬௭௭

பற்பமாங்கெசபுடத்தில்நீறும்பாரு பாலகனேசிமிழ்தனிலேபதன ம்பண்ணு, அற்பமென்றுவிடுகாதேபுண்பவானேவன்புடனேவெண்ணை தனில்குன்றியுண்ண, கெற்பமேரோகமதிலிருக்கும்நோய்கள்குலையோ டேபோகுமடாபின்னுங்கேளு, துற்பலத்தைநீக்கியல்லோவலுவைக்கா ட்டும்துடியானபற்பதத்தின்நேர்மைதானே ௬௭௮

நேர்மையாம்மேகமென்றரோகம்போகும்மேனியதுபளபளக்கும் சிவந்துகாட்டும், கூர்மையாம்கபரோகம்சில்விஷங்கள் கொடிதானவயி ற்றுவலிமேலிளைப்பு, தீர்மையாம்பௌத்திரமாம்முளைமூலங்கள் தீமை செய்யுங்கண்டத்தின்மாலைபோகும், வார்மையுடன்கைந்ரோசைகந்க் குத்துவளமானகிரந்திமுதலற்றுப்போமே ௬௭௯

அற்றுமேபீசமதினின்றரோகம் அப்பனேகால்வீக்கம்கைவீக்கம் போம், முற்றுமேநரம்புகளும்முறுக்குமீறி முனையானதாதுவிர்த்தியதி கமாகும், பற்றுதுஅரையாப்புகொறுக்குமூலம் படருமேதாமரையுமற் றுப்போகும், வற்றுமேதேகமதுவலுத்துக்காட்டும் வண்மையுடன்மே னியதுமின்னுந்தானே ௬௮௰

மேகரோகத்தயிலம்

தானையின்னமொருகுட்சஞ்சொல்வேன்தகமையுடன்மானிடர்க

ள்பிழைக்கவென்று,கோனனெனதையர்காலாங்கிநாதர்குருபதத்தை யடிபேனுர்தாள்பணிந்து,பானனபராபரியைமனதிலெண்ணிபாடினே ன்காண்டமேழாயிரந்தான், தேனனயின்னூல்தான்குருநூலாகும்தேச த்தில்கிட்டாதுசிவயோகிக்கே ரு௮க

சிவயோகியானவர்க்குபெல்லாங்கிட்டும்தேசத்தில்மற்றவர்க்குக்கி ட்டாதப்பா, தவயோகியென்றுலேகற்பங்கொள்வான்தாரணியில்மற்ற வர்கொள்ளமாட்டார், நவயோகம்பெற்றவரும்சிவயோகியாவார்நாட்டி லேமற்றவருமாவாரோதான், பவமகற்றும்புண்ணியர்க்குயெல்லாமெய தும்பாரினிலேசித்தனைப்போல்வாழலாமே ரு௮௨

ஸதானவிதி

வாழலாம்வெகுகோடிகாலமப்பாவரிசைபெறத்தலைமுழுகவிபரங் கேளு, நீழவேநெல்லியுடன்மிளகுதானும்நெடிதானகடுக்காயும்மஞ்சள் கூட்டி, காழவேப்பரிசிவைந்துங்கூட்டிகருவாகசமயெடையாய்யெடுத் துக்கொண்டு, சாழவேகையாஞ்சாற்பாலுங்கூட்டிச்சாங்கமுடன்தான னைப்பாய்சாமம்றலே ரு௮ங

நாலானசாமமதுவனைத்துமைந்தாநலமுடனேஸதானமதுசெய்யு ம்போது, காலானகாலனுக்குமிடமேயிலலேகண்ணிரண்டுங்குளிர்ச்சிய துமிகவேயாகும், பாவானவிழியிரண்டுமெரிச்சல்நீங்கி பாலகனேசிரசு வலிதானேபோகும், மாலானமண்டைபிடிக்கபாலக்குத்து மார்க்கமுட ன்சடலம்விட்டேகுமபாரே ரு௮ச

ஏகுமேகண்ணோய்கள்தொண்ணூற்றுறும் யெழிலானமண்டைபி டிக்கபாலக்குத்து, போகுமேவாதபித்தம்தலைகெட்டோடும் பொலிவா னவாசியதுகீழ்நோக்காகும், வேகுமேபாவியதுமயிர்க்கால்பற்றி வெளி தனிலேகாற்றேடேசேரும்பாரு, பாகுடனேதேகமதுகற்றூணுகும்பா லகனேகாயாதிகற்பமூழ்கே ரு௮ரு

மூழ்கியபின்பெண்ணுகாமதுபாணந்தான் முக்கியமாய்மூன்றுமண் டலந்தானப்பா, மாழ்கியேசோராதேமயங்கவேண்டா மன்னவனேமூ முறைபிப்படியேகாரு, வாழ்கவேகற்பகோடிகாலமப்பாவளமையுடன் தானிருந்துகற்பங்கொள்ளே ரு௮சு

சாரணைகுருமூலி

கொள்ளவேயின்னமொருகருமானங்கேள்கொற்வனேயாம்கண்ட வரைக்குஞ்சொல்வோம், மெள்ளவேஜாரணைபாமூலியப்பாமேன்மையு டன்சேரதுதான்கொண்டுவந்து, துள்ளவேபொடியாக்கிமைந்தாநீயும் துறையுடனேனிழலதனிலுலர்த்திக்கொண்டு, தள்ளவேசூரணமாய்செ ய்துக்கொண்டுசற்பனையாய்ச்சுத்தியதுசெய்துகேளே ரு௮எ

கேளேதான்பிட்டாவிசெய்துக்கொண்டு கிருபையுடன்மூன்றுமுறைசுத்திசெய்து, பாளேதான்போகாமல்சூரணத்தைப்பாங்குபெறரவிதனிலேகாயவைத்து, வீளேதான்திப்பிலியுமிளகுதானும் விருப்பமுடன்சீரகமுமொன்ருய்க்கூட்டி, நாளேதான்போக்காமல்சீனிசேர்த்துநலமுடனேசூரணமாய்க்கொண்டுபாரே ௩௮௮

கொண்டவுடன்வாயுவென்றகுன்மம்போச்சுகொடிதானசூலையொடுவாதம்போகும், பண்டுடனேகால்குடைச்சல்பறந்துபோகும் பாரினிலேயென்னூலைவெளிவிடாதே, திண்டுடனேசேத்துமத்தையறுத்துப்போடும்திறமானவுளமாந்தையேகும்பாரு, அண்டமுடள்காபாதிகற்பமாகும்அப்பனேமூலியிடவேகங்காணே ௩௮௯

தாம்பிரபர்பம்

காணவென்ருலின்னமொருமார்க்கம்பாருசருவானதாம்பிரத்தின்மார்க்கஞ்சொல்வோ, தோணவேதாம்பரத்தின்துட்டுவாங்கி துப்பரவாய்லேசாகத்தகடுதட்டி,மாணவேசெங்கொடுவேலிதன்னைமயங்காமல்தானறைத்துவுண்டைசெய்து, வேணபடிகுகைபிடித்துதாம்பரத்தைமெதுவாகவதிற்பொதியவிபரங்கேளே ௩௯௰

கேட்கவென்ருல்சீலையதுவலுவாய்ச்செய்து கெவனமுடன்ரவிதனிலேகாயவைத்து- நீட்கமுடன்குழிவெட்டிபெருவடிச்கிநிஷ்களமாய்ப்புடம்போடவெந்துநீறும்- பூட்கமுடன்புடமாறியெடுத்துபபாருபொன்னவனேதுட்டதுதான்பொருமிவெள்ளை-தாட்கமலநாயகியாள்பாதத்தாணைதப்பாதுபற்பத்துக்குறுதியாச்சே ௩௯௧

ஆச்சென்றுவிடுகாதேபின்னுங்கேளுஅப்பனேகல்வமதிவிட்டுமைந்தா-பேச்சொன்றும்பேசாதேபொடியதாக்கிப் பேரானமுன்சொன்னமுப்புசேர்த்து-மாச்சலென்றசாரத்தின்செயநீர்தன்ஞல் மாளவேமூன்றுநாள்நெழுகறைத்து - பாச்சலுடன்பில்லையதுலகுவாய்த்தட்டி பாலகனேரவிதனிலேகாயவையே ௩௯௨

காய்ந்தபின்புசில்லோட்டில்சீலைசெய்துகனமானகெஜபுடமாம்போட்டுத்தீருமாய்ந்துமேதாம்பரமுமூரலற்றுமாசற்றபற்பமதுதவளம்போலாம்-தீய்ந்துமேவூரலதுமாண்டுபின்பு திறமானபற்பமதுகுருவுமாகி - சாய்ந்தவுடன்வாதத்திற்குறுதியாச்சுசாபானகுருபற்பமிதுவென்பார்கள்-வேய்ந்துமேசிமிழ்தனிலேபதனம்பண்ணுவேதாந்தத யநமக்குவருள்சொல்வாளே ௩௯௩

சொல்லவென்ருல்வெள்ளிதனில்பெட்டுமாற்று சொர்ணமதுபிறவிக்குயிடுமாச்சு-நல்லதொருபிறவியிடத்தங்கமென்பார் நாதாக்கள்செ

ய்கின்றவேதையாச்சு - புல்லறிவுடையதொருபுத்திமான்காள் பூதலத்திற்செய்துமல்லோயோகஞ்செய்வார்-விலலணிந்தவேந்தர்களுஞ் செயலாகும்விருப்பமுடன்வாதத்தின்பெருமைபாரே ௩௯௪

பார்க்கவென்றால்தாம்பரத்தின்பற்பந்தன்னைப் பாங்குடனேநெல்லிடைதான்கொண்டபோது- தீர்க்கமுடன்வனுபானமறிந்துகொண்டால்திறமுடனேதேகமதுகற்றூணாகும்-சேர்க்கமுடன்வாயுவென்றதென்பதும்போம்செயலானபித்தமதுநாற்பதும்போம்-மூர்க்கமுடன்சேத்துமங்கள்தொன்னூற்றாறும்மூட்டோடேபோகுமடாமுடிவுதானே ( )

தானேகேள்பற்பமதுகொண்டபோதுதாக்கானவாசியதுகீழ்நோக்காகும்-மானேகேள்சிவராஜயோகங்கிட்டும்மன்னவனேநீயுமொருசித்தனுவாய்-வேமேதான்சொன்னபடியோகமார்க்கம்வெளிப்படையாய்யெப்போதுங்காணலாகும்நாமேதானுரைத்தபடியேழுகாண்டம்நடுகொண்டமிதிலதிகங்காணலாமே ௩௯௬

தங்கபற்பம்

காணலாமின்னமொருமார்க்கம்பாருகனமானமாணுக்கள்பிழைக்கவென்று - பூணலாம்தங்கமென்றகாசுதன்னைப்புகழாகத்தானெடுத்துச்செப்பக்கேளு-தோணவேமூலியதுகவுழ்தும்பைத்தான்தோற்றமுடன்முன்சொன்னமுப்பூசேர்த்து - வேணவேதானரைத்துமூசைசெய்துவிருப்பமுடன்காசதனையுள்ளேவையே ௩௯௭

வைத்துமேசீலையதுவலுவாய்செய்து வளமைபெறரவிதனிலேகாயவைத்து-தைத்தமுடன்குழிவெட்டிப்புடமேபோடுதாக்குடனே ஐபுடத்தில்வெந்துநீறும்-பைத்தவிழாமூசைதனையெடுத்துப்பாரு பாலகனேதங்கமென்றகாசுதானும்-கைத்தவமாய்பொருமியதுநொறுங்கிநிற்கும்காவலேதானெடுத்துசெப்பக்கேளே ௩௯௮

செப்பவென்றால்நாவில்லைப்பாவுமில்லை செயலானபாக்கியமுமிதனாலாகும்-ஒப்பமுடன்தானெடுத்துக்கல்வமிட்டுவுத்தமனேகவுது பைச்சாற்றினாலே-கொப்பெனவேதானரைப்பாய்நாலுசாமம்கொற்றவனேவெண்ணையதுபோலேயாகும்-எப்படியும்வெண்ணையதுபோலே பானல்யெழிலானபற்பத்துக்காதியாச்சே ௩௯௯

ஆதியாம்பூமியுடனுதத்தாலேஅப்பனேதங்கமதுபற்பமாகும்-சோதியாம்தங்கமென்றவெண்ணை தன்னைச்சுருதியுடன்பில்லையது லகுவாய்த்தட்டி-வாதிகள்செய்பாகம்போல்மனதிலூணிமயங்காமல்ரவிரனிலே காயவைத்து-சாதியாமோரெருவில்புடத்தைப்போடுதப்பாது கெஜபுடத்தில்நீறுமாமே ௪௱

கிறியதோர்பற்பமதைபின்னுங்கேளு நேர்மையுடன்தானெடுத்து
க்கல்வமிட்டு கூறியதோர்வாககதுவும்பிசகாமற்றான் குணமாகத்தான
யைப்பாய்செயநீர்தன்றால் மாறியதோர்சாரமென்றகெந்நீறுமார்க்க
முடன்றானரைப்பாய்மைபோலாக மீறியேபோகாமல்வெண்ணையாக்கி
மிதியுடன்வில்லைதட்டிக்காயப்போடே சாக

போடேதானரவிதனிலேகாயவைத்துப் பொங்கமுடன்வோட்டி
லிட்டுச்சீலைசெய்து நாடேதான்குழிவெட்டிப்புடத்தைப்போடு நலமு
டனேகெஜபுடந்தனில்நீறும்பாறு கூடேதான்புடமதுவைத்திறந்துபார்க்
ககுணமானபற்பமது தவளம்போலாம் தேடேதான் பற்பமதைப்பதனம்
பண்ணுதேசத்திலகிட்டாதுசிவயோகிக்கே சாஉ

கிட்டாதுபாவிகட்கும்கருமிகட்கும் கீர்த்தியுள்ளயுத்தமர்க்குப்
பலிக்கும்பாருளட்டாதபொருள்ளையிதிலேதோற்றும்யெழிலானவுட
லாவிப்பொருளகளெல்லாம் விட்டானும்விடுகுறைகளெள்ளாங்கா
ணும் வெழிலானவிதிபிருந்தால்லபிக்கும்பாரு முட்டாளாயிருக்காம
ல்முடிமன்னநீ முறையோடேசெய்துமல்லோமுடிவுகாணே சாங

அநுபானம்

காணவென்றால்பற்பமதையுன்னக்கேளுகருவானலேகியங்கள்கி
ரதமாகும் தோணவேநெய்தேனும்வெண்ணையாகும் தோற்றமுடன்மி
ஞ்சிரசம்முலைப்பாலாகும் பூணவேயிந்தவிதவனுபானங்கள் புகட்டிநெ
ல்காயாகற்பமாகும் நாணவேவகைபாகம்செய்பாகங்கள் நயமுடனேதா
மறிந்துவிண்ணுவீரே சாச

உண்ணையிலேசேத்துமங்கள்தொண்ணூற்றாறும்வுத்தமனேபித்த
மதுநாப்பதும்போம் நண்ணமுடன்வாயுவென்ற தெண்பதும்போம்நய
மானமேகவகைபிருபத்தொன்றும் குன்னமேவ குன்மமென்றதெட்டும்
போகும் கூரானகிரந்திபதினெட்டும்போகும் வாகாகநீரழிவுயாவும்
போமே சாரு

ஆருனசலமேகம்அகன்றுபோகும் அப்பனேவுளமாந்தைகவிசி
போகும் வாசான்குஷடம்பதினெட்டும்போம் வாகானவண்டத்தின்ப
வாய்வுபோகும் தூருனமேலீளைப்புக்தீர்ந்துபோகும் துடியானநரம்பெ
ல்லாம்முறுக்கேபோகும் சாருனவூலீகைகளிதங்கோல்வாது சட்டமு
டன்போகரிடியுரைத்ததாமே சாசு

உரைத்தோமேசினபதி மாந்திருக்குவுத்தமனேகண்காணுவுன

வையெலலாம் நிரைத்துவிட்டேன்வெள்ளையென்றமாதருககு நிறை
யானகைமுறையும்முழுதுஞ்சொன்னேன் கரைத்துவிட்டேன்காயா
திகற்பந்தன்னை கருவாகவுளவுதனையறிந்துகொண்டார் பரைத்துமேக
றபமதுயுண்டபோது பறக்குமடாநோபேதுபிணிதானேதே சாஎ

ஏதானதங்கபறபமுண்டபோது யெழிலானதேகமதுகற்றூணுகும்
வாதானமனுக்குஅருகியில்லை வந்தநோய்தீர்ந்துவிடும் வசனித்தேனு
ன்-சூதானதங்கமதையுண்டபேர்கள் துரைகோடிகாலம்வரையிருக்க
லாகும்-தீதானபிணிகளதுபிதிலேதோயும்திரளானநோய்பிணியும்பரக்
கும்பாரே சாஅ

பாரேதான்தங்கமதைகொண்டபோதுபாரினிலேநீயுமொருசிதத
னுவாய்வேரேதான்சாததிரததின்வுளவுபார்தது தெளிவானகைமுறை
களறியவேண்டும் நேரேதான்அறிந்தாலுமவொன்றுமில்லை னேர்பான
வழிபோடுசெய்தாலசுததி கூரேதானகுணங்கண்டுகுறியுங்கண்டுகொப்
பெனவேசெய்பவனேஞானியாமே சாகூ

ஆமேதான்தங்கபறபமுண்ணுமபோது அப்பனேபததியங்களு
றைக்கக்கேளும் நாமேதானசொனனபடி புளியுப்பாசாகலமுடனேபா
லனனங்கொள்ள ஈனறு தேமேதானபததுநாள்யிப்படியேகொண்டுதெ
ளிவானமண்டலந்தான் கொள்ளக்கேளு வேமேதான்சுட்டபுளிவறுத்
துப்பாகும் வேகமுடன்மண்டலந்தான்வுணடுகொள்ளே சாய

கொள்ளவேபற்டமதுவுண்டுகொண்டு கோடானகோடிமுறைசித்
துசெய்வீர்-விள்ளவேகன்னியென்றமாயாகற்பம் வீணிலேயனுபோக
மிகவுந்தள்ளு-மெள்ளவேகைபாகஞ்செயபாகத்தை மேதினியில்கண்
டறிந்துபின்னுங்கேளு-எள்ளளவுபிசகாது தான்வாராவண்ணம் யெழி
லுடனேசெய்துமல்லோவருள்தான்காணே சயக

பொன்னுவாரைசூரணம்

காணவேயின்னமொருகருமானங்கேள்கவனமுடன்யானுரைப்பே
ன்கடியபழுலி-நாணவே பொன்னிறுவாரைதன்னை நலமாகச்சமூலம்ம
தைக்கொண்டுவந்துபாணமெனும்ரவிதனிலே காயவைத்துபாகமுடன்
சூரணித்துவடிகூன்கொண்டு தோணவேபாணமதில்பாலைவிட்டுதுப்புர
வாய்வேடுகட்டிசீலைமூடே சயஉ
மூடியதொர்சீலைதனில் சூரணத்தைமுதிராமல் பதமுடனேதான்
மைத்து-நீடியேமேற்பாண்டந்தன்னைமூடி நினைவாகத்தானெறிப்பாய்
சுண்டுமட்டும் சாடியேபாண்டமதைதிறந்துபார்த்து சட்டமுடன்சூர

ணத்தையெடுத்துக்கொண்டு-வாடியேதிரியாமல்ரவிபிற்ருனும் வளமு டனேசூரணத்தைக்கொட்டியாற்றே

ஆற்றியேசூரணத்தைரவியிற்போட்டு அப்பனேகாய்ந்தபின்புயெ டுத்துக்கொண்டு-தேற்றியுடன்முன்சொன்னமுப்புசுண்ணம்செடிதான களஞ்சியதுகூடச்சேர்த்து தூற்றியேசீனியதுசரியாய்க்கொண்டு துப்பு ரவாய்திரிகடிகைதன்னையப்பா-மாறியேவெண்ணைதனில்கொண்டாயா னுல்மண்டலத்தில் போதுமடாபிணிகள்தானே சாய௯

னடக்குந்தேவர்பக்கல் நீணவேசீடர்க்கமனைத்துமேதான் நீடூழிமு
டிவுதனில்காணலாமே ௯௯௩

ஆமேதான்வுலகுதனிலிருந்துமென்னவப்பனேதேகமதைக
ந்துவிட்டேன் நாமேதான்பாசமதைத்துறந்துவிட்டேன் நாட்
நாதாக்களாசைவிட்டேன் போமேதான்வுலகத்திலிருந்தா
பொன்னுலகுமெய்போதுகைகாணியாகும தாமேதான்
யேவாழ்வு சதாநித்தம்மோட்சமென்றவீதிதா

தானானலோகமதில்லெல்லாம்பொய்யே சட்டமுடனிருந்தவர்க
ரமிலலை நான் கோனானகுருசொன்ன நூலும்பொய்யே குவலயமுமொ
ருகாலமழிந்துபோகும் தேனானசத்தசாகரமுமப்பா திரைமேடுவரை
காணாதாகிப்போகும் பானானவுலகமதுவழிந்துபோகும் பாருலகைக
ண்டவர்களில்லைதானே ௯௯௫

இல்லையேநாதாக்கள் சித்துதாமும் செழிலுடனேசொல்லவருமா
ண்டாரப்பா- தொல்லையெனும்பிறவியதுயற்றுப்போச்சு தோற்றமில்
லையண்ட சராசரங்களெல்லாம்- வல்லதொருவாத்மாவும் காணப்போகா
மகத்தானலோகத்தாமாசையப்பா சொல்லவென்றால்நாவில்லையப்பாவு
மில்லை தொல்லுலகைமறந்தவனேசித்தனானே ௯௯௬

போகர்திக்குவதிசயம்

சித்தனாய்ப்பிறந்துமேபாலன்றானும் சிறப்புடனேகாலாங்கிகிரு
பைதன்னால்- சுத்தமுடன்கிழக்குதென்கிழக்குதானும் சூட்சமுடன்
தென்மேற்குதெற்குதானும்- பத்தியுடன்மேற்குவட மேற்குதானும்
பாங்கானவடகிழக்குவடக்குதானும், வெகுதியுடன்சுத்திவந்தேன்குளி
கைதன்னால் வேதாந்தத்தாயினதுவொளிகண்டேனே ௯௯௭

கண்டதொருகுளிகைதன்னால் கைலையெல்லாங் காசினியோர்
தான்புகழசுத்திவந்தேன்- அண்டமுடனதிசயங்கள்யெல்லாம்பார்த்து
வப்பனேகாலாங்கிகடாட்சத்தாலே- விண்டிடவேலோகாதிவதிசயங்க
ள்விருப்பமுடன்பாடிவைத்தேன்சத்தகாண்டம்- சண்டமாருதம்போ
லவேழாயிரந்தான் சாற்றினேன்லோகத்துமாண்பருக்கே ௯௯௮

மாண்பானபெருநூலேழாயிரந்தான் மகத்தான நூலிதுதானலா
ங்காண்டம் - காண்பானசத்தகாண்டந்தன்னிலேதான் கருவிகளுகி
யெல்லாங்கிரட்டிவைத்தேன் - நீண்பானகாண்டமதுயேழுக்குள்ளே
நினைத்ததொருபொருள்களெல்லாங்காணலாகும்- காண்பானசீனபதி
யுலகத்தார்க்கு தகமையுடன்செப்பினதோர்நூலிதாமே ௯௯௯

நூலானநூலிதுதான்நாலாங்காண்டம் நுணுக்கமுடன்பாடிவை
த்தசத்தகாண்டம்-பாலானநூலதுபோல்யாருஞ்சொலலார் பாலகனே
வாயிரத்துக்கொருகாண்டந்தான் - சேலானகாண்டமதுயேழுமாகும்
சிறப்பானகாவியமேழாயிரந்தான்- மாலானகுருநூலாம்பெருநூலாகு
ம்மகத்தானகாண்டமதுநான்குமுற்றே ௲

போகர்சத்தகாண்டம்-எ௲

௪-வதுகாண்டம்

முற்றிற்று,

உ

கடவுள் துணை

மகாமகுத்துவம்பொருந்திய

போகமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

பெருநூலாகியகுருநூல்

சத்தகாண்டம்

௭௲.

ஐந்தாவதுகாண்டம்.

காப்பு

ஆதியென்றசத்திபராபரமேகாப்பு
அகிலமெல்லாம்பேர்படைத்தவுமையாள்காப்பு
நீதியெனும்பரஞ்சோதிசுடரேகாப்பு
நீடாழியுலகனைத்துங்கொண்டோன்காப்பு
பாதிமதிசடையணிந்தபரமன்காப்பு
பாதாளந்தனில்வாழுஞ்சேடன்காப்பு
சோதியெனுங்காலாங்கிபாதங்காப்பு
சுத்தமுடன்றாள்பணிந்தேன்பாதக்காப்பே ௫

பணிந்தேனே காலாங்கிநாயர்பாதம் பாங்கானதிருவடிக்குநமஸ்கரித்தேன் - அணிந்தேனே காண்டமதுயேழுஞ்சொன்னேன் அறையானவாயிரத்துகொருகாண்டந்தான் - பணிபோன்றபோகரேழாயிரந்தான் மகத்தானநூலிதுதான்பெருநூலப்பா - கணிதமுடன்காண்டமிதுவைந்துமாகும் காசினியில்வெகுமகிமையறியலாமே ௨

அறியவேயைந்தாவதானகாண்டம் வெளிதனிலிசையுஞ்சனிதிலடக்கம் - குறியானகாண்டமிதுவைந்துக்குள்ளே குவலயத்தில்ம[illegible] கைகள்சாகரங்கள் - தெரியாதகாரணங்களுண்டானாலும் தெ[illegible]

தருவியிலிலடக்கம்- சரியானசீனபதிமார்க்கமெல்லாஞ்சட்டமுடன்கூறு
வேன்போகர்தானே ௩

தானவகாண்டமதுவைத்துக்குள்ளே சாகரத்தின்பெருமையெ
ல்லாஞ்சாற்றலாகும்- கோனவயெனதையர்காலாங்கிநாதர் குருபாதந்
தனைவணங்கியாவுஞ்சொல்வேன்-பாநனமனேன்மணியாள்முன்னே
நிற்க பாடிவைத்தேன்போகரேழாயிரந்தான்- மானவநாதாக்களென்
பேரிற்றான் மனக்கோபங்கொள்ளாமல்மன்னிப்பீரே ௪

சத்தசாகரப்பெருமை

கொள்ளவேயிரித்வென்றபூமிதானுங் குவலயத்தில்நான்கிலோ
ர்பங்குமாகும்- விள்ளவேசத்தசாகரமுமப்பா மிக்கானமூன்றுபங்கெ
ன்னலாகும், உள்ளவேகாலாங்கிகிருபையாலே வுத்தமனாடியேனுங
குளிகைபூண்டு- தெள்ளமிர்தமான தொருசாகரந்தான் தேற்றமுடன்
திருப்பாலின்கடலுமாமே ௫

கடலானயேழுவகைகோடிமட்டும் காசினியில்குளிகைகொண்டு
சுத்திவந்தேன்- மடலானசீனபதிக்கடலும்விட்டு மகத்தானதிருப்பா
லின்கடலுங்கண்டேன்-அடலாகவஷ்டதிசைசுத்திவந்தேன் வப்பனே
மற்றசாகரமுங்கண்டேன்- திடலானநெய்க்கடலும்பாலுங்கண்டேன்
தீர்க்கமுடனுவர்க்கடலுங்கண்டேன்தானே ௬

கண்டேனேயுவர்க்கடலைக்கடந்தபின்பு கடிதானதயிர்க்கடலையா
னுங்கண்டேன்-விண்டேனேமதுபானக்கடலுங்கண்டேன் விரிவான
கருப்பஞ்சாகரமுங்கண்டேன் - அண்டமெலாந்தான்புகழும்நன்னீரா
னவழகானசாகரமுங்கண்ணிற்கண்டேன் - தண்டுளவமாலையணிகிரு
ஷணன்கொண்ட சாகரமாம்மத்திபத்திலிறங்கினேனே ௭

இறங்கினேன்கிருஷணனவர் பள்ளிகொண்ட வெழிலானகடலி
னதுநடுமையத்தில், அறங்குடையஆலிலையைக்கண்டேனங்கே வப்ப
னேகுளிகைகொண்டு வதின்மேல்நின்றேன்- திறமுடையகுளிகைய
துவலுவினாலே தீர்க்கமுடன்சென்றேரிவந்தேனப்பா, சிறகில்லாப்ப
ட்சியதுபோலேயானும் சீர்த்தியுடன்குளிகையினால்பறந்திட்டேனே

இட்டேனேசத்தசாகரமுங்கண்டேன் வெழிலானசத்ததீவுகளு
ங்கண்டேன் - திட்டமுடன்சம்புவென்றதீவுகண்டேன் திசமூவா...

லட்சமாந்தீவுக்கண்டேன்-சட்டமுடன்செத்தீவுயானுங்கண்டேன்சார்பாலகிரவுஞ்சத்தீவுகண்டேன், வட்டமாஞ்சாகரத்தின்தீவுகண்டேன் வளமானசான்மலியுங்கண்டேன்பாரே ௯

பாரேதான்சான்மலிதத்தீவுகண்டேன் பாங்கானபுஷ்கரத்தீவுகண்டேன்- நேரேதான்சத்ததீவுகளுங்கண்டேன் நேரானகுளிகையதுபூண்டுகொண்டு- சீரேதான்நாலாகிபுஜபலத்தால் சிறப்புடனேலோகமெல்லாஞ்சுற்றிவந்தேன் - கூரேதான்சீனபதியானுஞ்சென்றேன்குவலயத்திலிதுபோலலொன்றுகாணே ௰

போகர்சத்தரிஷியைக்கண்டது

காணேனேசீனபதிதேசம்போல கண்டதில்லைஒருதேசம்யானுமப்பா- பானமுடன்சீனபதிக்கடலோரத்தில் பண்பானமலையொன்றுகுகைதானுண்டு - வாணர்முதல்வந்திரக்கும்பொய்கையுண்டு வளமானமண்டபங்கானங்கொன்றுண்டு- தோணவேகுளிகையதுபூண்டுகொண்டு சொல்லுலகையான்மறந்துசென்றேன்பாரே ௰௧

சென்றேனேமலைவிட்டுமண்டபத்திற்சேனகெடுங்காதவழிபோவேன்யானும்- நின்றதொருரிடிமலையாமலையொன்றுண்டு நிலையானசப்தரிடிமலைதானாகும்-குன்றானமலையோரங்குளிகைகொண்டு கொற்றவனுர்காலாங்கித்தனைநினைந்து - தென்றிசையில்பொதிகைமுனிக்கார்த்தாப்போல தேர்வேந்தேயெந்தனையுங்காரென்றாரே ௰௨

காரென்றுசொல்லுகையில்காலாங்கிதம்மை கருத்திலேதானினைந்துநமஸ்கரித்து - ஆரென்றுநினையாமலையர்பாதம் அப்பனேவணங்கினேன்காக்கவென்று- பாரென்னைக்காத்தருளவேண்டுமென்று பட்சமுடனுச்சரிக்கமனதுவந்து - சீரென்றநாமமதுபேர்விளங்க சிறப்புடனேயான்தொழுதேன்போகர்தாமே ௰௩

தாமானவதிசயங்களின்னுஞ்சொல்வேன், தாக்கானமலைதனிலேரிடிகளப்பா- கோமான்கள்தாமறியார்ரிடியார்தம்மை குவலயத்தில்சத்தரிடியானுங்கண்டேன்- நாமானமரீசியெனுமரிடியார்தாமும் நலமானமுதல்வரையிலிருந்தாரப்பா- வேமானமாகவல்லேலாஅத்திரியார்தாமும்வேகமுடன்யிரண்டாங்கால்வரைமீதுண்டே ௰௪

உண்டானஅங்கிரசுரிடியார்தாமும் வுத்தமனேமூன்றாங்கால்வரையிலப்பா- திண்டானதபசிலிருந்துகொண்டு திறமானயோகநிஷ்டைசெய்வாரப்பா, கண்டேனேநாலாங்கால் வரையிலப்ப

புலவெதிபரைக்கண்டேனையானும்- ஐண்டமாருகம்போலவைந்தாங்கா
லகம்சக்கிதிமேலவரையிலிருப்பார்பாரே ௰௫

பாரேதான்புலகனரிடியார்தாமும் பான்மையுடன்மேல்வரையி
லிருப்பாரங்கே- நேரேதான் ஆறுவகாலவரைமேலப்பா நேர்மையுட
னிருந்துகாரிடிதானுமப்பா- சீரதனிதழாவகாலவரைமேலப்பா சிற
ப்பாவசிஷ்டருங்கண்டேனையானும்- தீரதான்சப்தமகாரிடிகளாக
மைதீரகமுடனேமலைதனிலகண்டனதாமே ௰௬

தானுவசப்தரிடி யெழுபேர்கள் தாககானமலைதனிலேதவசிருக்
கும்- கோனுவகுகைதனைப்பக்கண்டனையானும் கொற்றவனாசிரம
மெல்லாங்கண்டேன் சுருளிரடிரசுந்து சோலைகானந் தீக்கமுடனே
மூவர் குளிகைபூண்டு-மானுமமனமகிரியாளிருபையாமேலமலை
மீதலபெழுவரைசென்றேன்காணே ௰௭

காணவேரிடிகளிடஞ் சென்றேனேயானும் காளாங்கிநாதருடகிரு
பையாலே-பூணவேஞானோபதேசம்பெறறேன் போகமுடன்தருவி
கரணதிபெலலாம்- தோணவேயென்றனுக்குஉபதேசங்கள் துறைராச
சுந்தரனுஞ்சொன்னாரங்கே-வேனவேசகலகலைக்கியானமெல்லாம விரு
ப்பமுடன்பிழைக்கவென்றுகொடுத்திட்டாரே ௰௮

கொடுத்தாரேபூவுலகில் பிழைக்கவென்று குவலயத்திலெண்மீதி
ல்பட்சமவைத்து-அந்ததவிதாருகுளிகைக்குவுதாறுசொல்லிலப்பனே
காரணங்கள்மிகவுங்கூறி- வுடுத்துடைம்கொண்டதனையும்தலைவிட்டேகி வே
தாந்தசித்துமுனிரிடிகளெல்லாம் - அடுக்கமவைபுத்திபாமிகவுங்கூறி
ஓகோகோசப்தரிடிபோவென்றாரே ௰௯

என்றுமேசப்தரிடிவுரையும்பெற்றுமெய்திலானகாலாங்கிகிருபை
யாலே - சென்றேனேகுளிகைபதாமிபவும்பூண்டு சீனபதிக்குளாக
வந்தேன்பானும்- நின்றேமேபெண்ணையார்காலாங்கிநாதர் திருபாதச
மாதியிடஞ்சேர்வைசெய்தேன் - குன்றுனமலைதனிலேயறிபல்லோ
கெப்பியவேகமலமுனிதன்னிடங்காணே ௨௰

தாமேதான்கமலமுனி சமாதிபக்கல் தன்னையுடனயான்சென்
றுசேர்வைசெய்தேன்-வேமேதான்சீனபக்கக்கோட்டைக்குள்ளேமே
கமுடன்குளிகைகொண்டுமிளங்கினேனயான்-போமேதான்சீன திப
பெண்களெல்லாம் போகமுடனென்தனையுமணையவல்லோ-நாமேதான்
நினைத்தபடிபெண்களெல்லாம் நாட்டமுடன்மோகித்துவணைந்தார்பா

உக

ஜீனபதியிலசப்தரிஷிகளைப்போல் போகருக்கு புத்திரருண்டாதல்

பாரேதான் சினேந்திரதொருகலிதன்னில் பங்கானசப்தரிஷிபோ
லேயப்பா - நேர்மேதான் சினேந்தவண்ணம் ரிஷிகள் போலே நேர்மையுட
ன்தான் பிறந்தரிஷிகளப்பா - சீர்மேதானவர் கொடுத்தவரத்தினாலே சிற
ப்பானசப்தரிஷி பிறந்தாரங்கே - கூர்மேதான் தேவரிஷியென்னலாகுங்கு
வலயத்தில் அரசரைப்போல் பிறந்தார்தாமே ௨௨

பிறந்தாரே சீனபதிவாசுசெய்ய பேரானசப்தரிஷியாசாரப்பா துற
ந்தொருஞானிகளைப் போல அரசரப்பா - அப்புறவாயச் சீனபதியாண்ட
துண்டு - மறந்தாரே வெகுகாலமிருந்து மல்லேர வையகத்தில் வாழ்க்கை
தனைவிட்டு நீங்கி - கறந்ததொரு பால்போலேஞானபூண்டு காக்கினியில்
வெகுகாலமிருந்தார்பாரே ௨௩

இருந்தாரே கோடிவரை யுகாந்தகாலம் வெழிலானசீனபதிக்கோ
ட்டைதன்னை - பெருந்தகமேவயாசாட்சிடத்திலேதான் பொங்கமுடன்
காயாதிகற்பங்கொண்டு - திருந்தவேசமாதிதனில் சிறங்கியல்லோ திட்
டமுடன்தானிருந்தார்சித்துதாமும் - வருந்தவேகோட்டையது யேழு
சுத்து வாகாகத்தலைவாசலேழுதானே ௨௪

ஏழானதலைவாசலோவ்வோர்சித்து பிறங்கியேசமாதியதுபூண்டு
கொண்டார் - தாழானதிருவாசலோவ்வோர்பக்கம் தண்மையுடன்சமா
தியதுபெருமைமெத்த - வீழாமல்தேகமதுவழியாமற்றுன்வீரானகோ
ட்டையதுவாசல்முன்னே - சாழானசமாதியதுயேழுகண்டேன் சட்
டமுடன்சீஷவர்க்கமநெருங்கினோமே ௨௫

நெருக்கவேவெகுகோடிமாண்பரப்பா நேராகவெந்தன்முன்வந்
துநின்று - குருங்கையன்கரமணைத்தாவெடுத்து கொபவெனவே
முடிமீதிலசுமந்துகொண்டு - தருணமேவாசீர்மம்மிகவுஞ்செய்து சட்
டமுடனென்றனையும்கேள்விகேட்டு - வருந்தியேயிக்காலமெங்கேசென்
றீர்வண்மையுடனவந்ததுவும்புதுமையாச்சே ௨௬

ஆச்சென்றபுதுமையதுமிகவுரைத்து லப்பனேயென்தேவாயிக
காலந்தான் - போச்சென்றுதேகமதுமனதிலெண்ணி பொங்கமுடன்வ
ந்ததுவும்புதுமையாச்சு - பாச்சலுடன்காயாதிகற்பங்கொண்டு பாங்கா
யத்தகமதுயனந்தசொல்லி - வீச்சலுடன்காலாங்கிகிருபையாலே வி
திர்த்தேனவல்லோமென்றுரைத்தாமே

இட்டாரேவெகுமாண்பர்கும்பல்கூடி யெழிலாகயெங்கனி - மூ
ந்தாரப்பா - சட்டமுடன்யான்கண்டவதிசயங்கள் சார்புடனேயானு
ரைத்தேன்போகமெல்லாம்- திட்டமுடன்மாண்பரெல்லாமதிசயித்து
தீரமுடன்வீற்றிருந்தார்சீனந்தன்னில- பட்டமுள்ள அரசருடசமாதி
விட்டு பாங்குடனேகுளிகைகொண்டுபுறப்பட்டேனே ௨௮

புறப்பட்டேன்சீனபதிக்கடலோரந்தான் புகழானவதிசயங்களெ
ல்லாம்பார்த்து - திறக்கவேவடக்குமுகந்திருப்பால்தன்னில் தீரமுட
ன்குளிகைகொண்டுசென்றேன்யானும்- திறமாறிதானிருக்குமாண்ப
ரல்லோ நீடானலசுவத்தின்முகத்தைபோல- உறமானமாண்பர்களை
க்கண்டேனப்பா வுத்தமனேசெகத்துக்குள்ளிருப்பார்தானே ௨௯

இருப்பாரேமலைமீதும்பாறைமீதும் யெழிலானவட்டமதில்பிற
க்கினேன்யான் - விருப்பமுடன்குளிகைபதுபூண்டுகொண்டு வீரமு
டனவர்களிடஞ்சென்றபோது- பொருப்பானமலையொன்றுதகைதானு
ண்டு பொங்கமுடனபிராவதமென்னலாகும்- குருப்பானயேழுவரை
வுபாங்கனும் குணமானமலையொன்றுகண்டேன்தானே ௩௰

சத்தகன்னிகளைக்கண்டது

கண்டேனேயென்மனதில் சந்தேகத்தால் கவனமுடன்குளிகை
கொண்டுசென்றேன்யானும்- அண்டவொண்ணாப்பாறையதுமேலேயு
ண்டு வகலமதுயோசனைதான்சொல்லப்போமோ- தொண்டர்முனிசித்
தர்களுமனேகமுண்டு தோறமுடனெந்தனுக்குக்கண்ணிறமேறுன்ற
சண்டமாருதம்போலயென்னைகண்டார் சட்டமுடனுரென்றுகேட்
டார்தாமே ௩௧

கேட்டாரேசித்துமுனியெந்தனுக்காய் கிருபையுடன்பாரென்று
கேட்கும்போது - தாட்டிகமாய்க்குளிகைகொண்டுவந்தவன்யார் தண்
மையுள்ளசிறுபாலாவென்றபோது- நீட்டமுடன்காலாங்கிசீஷனென்
றேன் ஞானசித்தமுனிரிடிகளெல்லாம் - வாட்டமுடனெந்தனையும்
வாசீர்மித்து வளமுடனேஞானோபஞ்செய்தார்பாரே ௩௨

பாரேதான்யானுமல்லோசிலதுகாலம் பான்மையுடனங்கிருந்தே
ன்சித்தர்பக்கல்-நேரேதான்வடகோடிகானகத்தில நேரானதோப்புண்
டுகுளமுமுண்டு- ஊரேதாவென்றறிந்துவுளவறிந்து வுத்தமனேயாசீ
ர்மங்காணுதென்றேன், பேரென்னவூரென்னபதிதானென்றேன் பே
ரான சத்தகன்னிபதியென்றாரே ௩௩

பதியென்றுசொல்லுகையிலடியேன்றானும் பட்சமுடனென்மீ திலகிருபைவைத்து- துதிபுரியுஞ்சத்தகன்னியாசிர்மந்தான் தப்புரவா ய்பவ்விடத்திற்செல்லொண்ணது-ஜிமதிபோன்றசத்தகன்னியிருக்குந் தானம் மகத்தானதேவதாவாசிரமந்தான் - சுதிபெறவேசென்றவர்க்கு யெல்லாமுண்டு காசினியில்போவார்தானில்லைதானே ௫௪

இல்லையென்றுபோனாலுங்கன்னிமார்கள் யெழிலானமாண்பர்க ளிச்சயிட்பாரப்பா, கொல்லவேமெனுக்குயறுதியாகும் கோபத்தால் சாபமதுவாய்க்கும்பாரு- புல்லவேயவ்விடத்திற்செல்லவேண்டாமபுக ழானசத்தகன்னிமார்களப்பா-எல்லைவிடடுப்போகாதேயெந்தன்பாலா யெடுத்துரைத்தாரெந்தனுக்குமிகுதியாச்சே ௫௫

ஆச்சென்றுபோகாம லடியேன்றானும் வன்புடனேமறுபடியுங் கேள்விகேட்டு- பாச்சலுடன்குளிகையதுபோட்டுக்கொண்டு பாங்கி மார்சத்தகன்னியேழுபேரை - மூச்சடங்கிப்போனதொருதேகம்போ லமொய்குழல்மார்தங்கள்முன்னடியேன்நின்று - ஏச்சியேயவர்களிட ங்கண்டுபேசி யெழிலாகயான்வருவேனென்றிட்டேனே ௫௬

என்றேனேசிறுபாலன்சொன்னவார்த்தை யெழிலானசவமுனி கன்ரிடிகள்கேட்டு- நின்றதொருநெடுமூச்சுத்தானறிந்து நேர்மையுட னெந்தனுக்குயிதவுகூறி - குன்றின்மேல்செல்வதற்குவினயஞ்சொல் லிகொப்பெனவேயாசிர்மமமிகவுங்கூறி- வென்றிடவேயடியேனையனு ப்பினார்கள் விடுபட்டுக்குளிகைகொண்டுபோனேன்றானே ௫௭

போனேனேயாசிர்மந் தன்னிலேதான் பொங்கமுடன்காவணத் தையிறங்கினேன்யான்- சோனைபோல்சுனையருகேயிறங்கினின்றேன் சொன்னமென்றசத்தகன்னிமார்கள்கண்டார்-தேசீனதான் அசலிகை யாசிர்மந்தான் இகழானமுதற்பீடம்முதற்காவணந்தான் மானேதான் திரௌபதியாமரெண்டாம்பீடம் மகத்தானசீதையதுபீடந்தானே ( )

சீதையாம்பீடமது மூன்றாம்பீடம் சிறப்பானதாரையாம்நான்கா ம்பீடம், வேதையாம்மண்டோதரிஐந்தாபீடம் மிக்கானசரமாலியா றும்பீடம- பாதையாம்காந்திரௌதாசிறமாலியாகும் பாகானசத்தக ன்னியேழுபேர்கள்; கோதையாம்தேவகன்னியேழுபேரைக் குளிகை கொண்டியானுமங்கேகண்டிட்டேனே ௫௯

பஞ்சவர்களைசத்தகன்னிவிசாரித்தல்

கண்டேனேயவர்களிடம் வார்த்தைபேசி கலியுகத்துவதிசயங்களெல்லாங்கேட்டேன்- கொண்டல்வண்ணனச்சுதனார்செய்திகேட்டேன் கோடானகோடிபெண்கள்முறைமைசொன்ன-விண்டபடிவார்த்தையதுமிகவுமங்கேவேதாங்கத்தாயினதுவருளுமபெற்று,தொண்டனெனுமைத்துனர்களைந்துபேரும்சுகமுடனேகேட்டுமெல்லோவிசாரித்தாரே()

கேட்டுமேகலியுகசேதிதன்னை கீர்த்தியுள்ளபஞ்சபாண்டவர்கள் தம்மை வாட்டமுடன்கலியுகமுதலில்தன்னில் வளமாகவெவ்விதத்தில்மடிந்தாரென்று-நீட்டமுடனெந்தனையுமகேட்கும்போது நீடூழிகோடிவரையிருந்தாரங்கே-காட்டமதுகலியுகமுதலிலப்பா கண்காணுமண்மேலேபோனார்தாமே ௪௧

போனதொருசெய்திதன்னையானுரைத்தேன் பொங்கமுடன்வெங்கன்மேல்பட்சம்வைத்து - தானமொடுசித்தர்முனி ரிடியார்தம்மால் தாரணியில்சாபமதுநேரிட்டாலும்- வானமொடுதேவாதிதேவசெனைம வந்தெதிரேபோராட்டஞ்செயதிட்டாலும், தீனமொடுசாபமதுசெல்லாமற்றுன் தீர்க்கமுடனெந்தனுக்குவரந்தந்தாரே ௪௨

தந்தாரேசாபமது நீக்கியல்லோ தாரணியில்சத்தகன்னிமார்கள் தானும்,அந்தமுடனெந்தனுக்குவாசீர்மித்து வவனியெல்லாஞ்செல்வதற்கு அதிசஞ்சொல்லி, சொந்தமுடனுபதேசமமிகவுங்கூறி குட்சாதிசூட்சமெல்லாந்தெளிவுரைத்து, பெந்தனுககுமாந்தமென்றமைகொடுத்துயெழிலாகச்சினபதிப்போவென்றாரே ௪௩

என்றவுடன்காலாங்கிநாதர்தம்மை யெழிலாகத்தானினைந்துசீனம்போக, சென்றுமேகுளிகைகொண்டுவடியேன்றானும் சிறப்புடனே சீனபதிவந்தேன்யானும், மூன்றுமேநடந்தசேதியெல்லாம் முனையாசீனபதிமாண்பருக்கு, நன்றாகத்தானுரைத்தேனடியேன்று அம்கலமுடனேபணக்களிப்புகொண்டார்பாரே ௪௪

சத்தகன்னிசங்கதியைசீனத்தார்க்குக்கூறல்

பாரேதான்சத்தகன்னிமார்கள்நேர்மை பாங்குடனேதானுரைத்தேன்சீனத்தார்க்கு, நேரேதானெந்தனுக்குவுறுதிசொல்லி நேர்மையுடன்சாபமதைத்தவிர்த்தாரென்றே, ஊரேதான்போகவென்றுவிடையுந்தந்து வத்தமர்ச்குவாதியந்தமுடிவசொல்லி, பேரேதான்வாழ்கவென்றுவெந்தனாளும பெருமையுடன்யிருக்கவென்றுவரந்தந்தாரே ௪௫

தயிர்க்கடலுக்குவடகோடி

தந்தாரேசீனபதிவிட்டுவந்தேன் தகமையுள்ளகுளிகையதுபூண்டு கொண்டு - வந்தேனேதயிர்க்கடலுக்கப்பாலப்பாவாகான வடகோடி கானகத்தில்-சொந்தமுடன்யானுமல்லோசென்றேனங்கே சுத்தமுள்ள வாசிர்மங்கண்டேன்யானும்-அந்தமுடனாசீர்மம்நடுமையத்தில்அழகான வாயக்கால்கூடந்தானே ௪௬

தானானகூடமதுசித்ரகூடம் தண்மையுள்ளசித்தர்களுமறியானூடு கோனானயெனதையர்காலாங்கிநாதர்- கொற்றவனாரெந்தனுக்கு வுரைத்தநீதி - மானானவடகோடிகானகத்தில் வளமானவாயக்கால்மண்டபந்தான்- தேனானமனோன்மணியாளிருக்கும்ஸ்தானம் தேவியென்றகூடமதுவிசித்திரமாமே ௪௭

ஆமேதான்ஆயக்கால்மண்டபத்தில் அண்டவொண்ணாதேவரிடிக் கூட்டமப்பா-தாமேதான்காலாங்கிசொன்னவாக்கு தாரணியில்மெய்பானவார்த்தைகொண்டு - போமெனவேவடகோடிகானகத்தில் பொங்கமுடன் குளிகையதுபூண்டுகொண்டு வேமெனவேயாசீர்மந் தன்னிற் சென்றேன் வேதாந்தத்தாயினதுயிடங்கண்டேனே ௪௮

போகர்வடகோடிகானகத்தில் மனோன்மணியைத்தெரிசித்தது

கண்டேனேமனோன்மணியாள் வீற்றிருக்கும் கடிதானவாசீர்மந் தன்னைக்கண்டேன்-அண்டவொண்ணாச்சேனையதுரிடிகள்கூட்டம் அங்ஙனவேயான்கண்டுபயமுங்கொண்டு - தொண்டரெனும்ரிடிமுனிவர் சித்தர்தாமும்தோற்றமுடனாசீர்மந்தன்னைச்சுற்றி - கொண்டல்வண்ணனச்சுதனும்முன்னேநிற்க கோடானகோடிவரைபார்த்திட்டேனே ௪௯

பார்த்தேனேமனோன்மணியாளாசீர்மத்தில் பலகோடிநவகோடிரிடியார்தாமும்-கார்த்துமேசதாகாலஞ்சூழ்ந்திருக்க கனகமணிநவரத்தினவாசீர்மத்தில் தீர்த்தமுடன்தடாகமென்றபொய்கைதன்னில் திகழானமனுக்கூட்டமனேகம்பேர்கள்- சார்த்தகையாழ்வார்பன்னீராயிரந்தான் சட்டமுடன்தவசிருக்ககண்டேன்தானே ௫௰

மனோன்மணியாள்தாமரைப்பொய்கை

கண்டேனேமனோன்மணியாள்பொய்கைதன்னை காசினியில்மற்றவரால்காணப்போமோ - தொண்டனெனும்ஆள்வார்கள்பொய்கைதன்னில் தோற்றமுடன்காவலதுபூண்டுநிற்பார்வண்டுழலாள்மனோன்மணியாள் நிர்த்தஞ்செய்வாள் வசந்தமணிமண்டபத்தின் பொய்கைதன்

னில்-தெண்டமுடனடியார்கள்கூட்டமெல்லாந் தெரிசிப்பார் மனோன்
மணியைதெரிசிப்பாரே ருக

பாரேதானடியேனும் குளிகைகொண்டு பட்சமுடன்சீஷவர்க்கந்
தன்னைக்கண்டேன்-நேரேதானாசிர்மந்தன்னைச்சுற்றி நேர்மையுடன்கார்
த்திருக்கும் ரிடியார்பக்கல் சீரேதான்குளிகையதுபூண்டுகொண்டுசிறப்
புடனேபொய்கைதனில்நடுமையத்தில்-கூரேதான்நீராழிமண்டபத்தில்
கொப்பெனவேயிறங்கிவிட்டேன் பண்பாய்த்தானே ருஉ

பண்புடனேரிடிமுனிவரென்னைக்கண்டு பதறியேயோடிவந்து யா
ரென்றார்கள்-திண்பானகாலாங்கிநாதர்தம்மைதிடுக்கிட்டுமனந்தனிலே
தானினைந்து-நண்பானகாலாங்கிச்சீடனென்றேன் நாதாக்கள்சித்தொ
ளிவுநடுங்கினார்கள்- கண்பானமனோன்மணியைக்காணவென்றுகாசினி
யில்குளிகைகொண்டுவந்திட்டேனே ருங

வந்திட்டேனென்றதுமேரிடியார்தாமும் வணக்கமுடனெந்தனுக்
குவாசீர்மித்து தந்திட்டார்மனோன்மணியைக்காணவென்றுதகமையுட
னிடமதுவுங்காண்பித்தார்கள்- அந்தமுடனெந்தனையுமழைத்துக்கொ
ண்டு வன்பானவாசிர்மந்தன்னின்முன்னே-சொந்தமுடனென்னைநிறுத்தி
வுளவுசொன்னார் சூட்சமுடன்தான்கண்டுதிரும்பினேனே ருச

போகர் மனோன்மணியைக்கண்டதை சீடர்க்குரைத்தல்

திரும்பியேமனோன்மணியைக்காணவென்று சிலகாலமங்கிருந்து
வுளவுகண்டேன்-அரும்பொன்மணிநவரத்தினவாசிர்மத்தில் அழகான
மனோன்மணியாள்பீடங்கண்டேன் - சுரும்புடையபூந்துடையாள்சொ
ரூபங்கண்டேன்-தோற்றமுடன்கண்ணிற்குத்தோற்றலாச்சு கரும்பெ
னவுந்தேன்மாரிபொழியக்கண்டேன் கைலங்கிரிப்போலிருக்கும்பொய்
கையாமே ருரு

ஆமேதான்பொய்கையிடங்கிட்டிநின்றேன்வப்பனேமனோன்மணி
யைக்கண்டதில்லை- தாமேதான்மனோன்மணியாள்ரூபம்போலதற்சொ
ரூபமானதொருஜோதிகண்டேன் - போமேதான்பொன்னானவாசிர்மத்
தைப் பொங்கமுடன்நெடுந்தூரங்கண்டேன்யானும்-தேமேதானவச்சி
த்திரபொய்கையப்பா-தெளிவானமண்டபத்தைப்பார்த்தேன்பாரே

பார்த்தேனேநீராழி மண்டபத்தைப் பளிங்கானபன்னகச் சாலை
கண்டேன் - தீர்த்தமுடன்பூஞ்சோலைத்தன்னைக்கண்டேன் திகழான

பொன்னம்பலந்தன்னைக்கண்டேன்-சேர்ந்துமேரிடிகோடி முனிவர்தம்
மை சேனைமுதல்நவகோடிசித்தர்கண்டேன் - சார்த்தகிரி யாழ்வார்கள்
கணக்கோயில்லை சட்டமுடன்வடகோடிமகிமைதானே ௫௭

தானனபின்னமொருமார்க்கஞ்சொல்வேன் தகமையுள்ளபுலிப்பா
ணிசொல்லக்கேளும் - கோனனயெனதையர்காலாங்கிநாதர் குவலயத்
தில்வெகுகாலமிருந்தாரப்பா - தேனனமனோன்மணியாள்காமருபிதே
விதனையொருநாளுங்கண்டதில்லை பானனபராபரியாள்சோதியல்லால்
பாங்கியனையொருநாளுங்காணேன்தானே ௫௮

காணேனேயென்றுசொல்லிக்காலாங்கிநாதர் கனமாகயென்றனுக்
குச்சொன்னதுண்டு வேணபடிவெகுகாலங்காத்திருந்தார் வேதாந்தத்
தாயினதுவருளைக்காண-மாணவேவனகோடிகாலமப்பா வையகத்தில்
மனோன்மணியாள்சொரூபங்காண- நீணவேகாயாதிகற்பங்கொண்டுநெ
டுங்காலந்தாமிருந்தார்தவசியாமே ௫௯

தவசுடனேசின்மயத்திலிருந்துகொண்டு தாரணியில்மதியமுர்தம்
வெகுவாய்ப்பூண்டு- பவமகற்றிசமாதிதனில்கோடிகாலம் சட்டமுடன்
தாமிருந்தார்நாதர்தாமும்- சிவக்கடலைக்காணுதற்குவெகுவாயெண்ணி
தீரமுடன்சமாதிதனிலிருந்தாரப்பா அவமுடனேசமாதிவிட்டுயெகியுந்
தான் வவனிதனில்மனோன்மணியைக்காணார்பாரே ௬௰

பாரேதானின்னமொருமார்க்கங்கேளு பாருலகில்வெகுகோடிசித்
தருண்டு நேரேதான்மனோன்மணியைக்கண்டதில்லை நேர்மையுடன்
சோதியென்றவொளிவுகண்டார் வீரேதான்சொருபநிலைக் கண்டபோ
தே விருப்பமுடன்சோதிமயந்தன்னிற்றோன்றி கூரேதான்மனோன்
மணியைபினைத்தவண்ணங் கொப்பெனவேதரிசனைபோல் தோற்றலா
ச்சே ௬௧

போகர்தனகோட்டியென்னும் ராமேசுவரத்தைக்கண்டது

தோற்றமுடன்புலிப்பாணிமைந்தாகேளு தொல்லுலகைசுத்திவந்
துகுளிகைகொண்டேன்- காற்றில்லாராமேசுவரந்தானென்னுங்கனமா
னதனக்கோட்டிக்கடலைக்கண்டேன்-மேற்றிசைக்குக்கீழ்பாகங்கடலோ
ரந்தான் மேலானதென்பொதிகைசமீபமப்பா-நாற்றமுள்ளசங்கதுவும்
பிறக்குமஸ்தானம் நடுக்கடலாந்திட்டொன்றுகண்டேன்பாரே ௬௨

கண்டேனேநடுக்கடலாம்மத்திபத்தின் கனமானபாறையொன்று
திட்டொன்றுண்டு- தண்டுளவமாலையணிகிருஷ்ணபூபன் தகமையுள்ள
மண்டபந்தானங்கொன்றுண்டு - கொண்டல்வண்ணன்ஸ்ரீராமர்சீதா

தேவி குடியிருப்புவாசிர்மந்தன்னைக்கண்டேன்-வெண்டாமரைப்பொய் கையுண்டுஸ்தலமுமுண்டு மேன்மையுள்ளகுகையதுவும் பார்த்திட் டேனே ௬௩

பார்த்தேனேசீதையென்னும் பெண்ணணங்கைபண்பான வச்சிர மாங்கல்லினாலே சேர்த்தியுடன்கைச்சிலையாய்யமைத்துமேதான்நேரா ணமுகவையென்னுஞ்சாகரத்தில் பூர்த்தியாய்ச்சேதுபதி ஸ்தானஞ்செ ய்வோர் புகழானராமருடதேவிதன்னை தீர்த்தமுடன்சீதாவின்பிராட்டி யாளை தினக்கிரமவலங்காரஞ்செய்வார்தாமே ௬௪

செய்வாரேராமலிங்கம்பூசைசெய்து ஸ்ரீராமர்பிராட்டியார்ரூபங் காண உய்யவேவோடமதுதன்னிற்சென்று வுத்தமனார்ஸ்ரீராமர் தேவி தன்னை துய்யமுனிசித்தனவர்ரிடிகளெல்லாம் சுத்தமுடன்வோடமதிற் சென்றுமேதான்-பையவேவிக்கிரகம்பூசைசெய்ய பட்சமுடன்போவா ரும்வருவார்தாமே ௬௫

தனக்கோட்டிக்கி யிடபாகம்

தாமானயின்னமொருமார்க்கங்கேளு தாக்கானதனக்கோட்டியிட பாகத்தில் வேமானமென்றதொருவாசிர்மந்தான் மிக்கானகாடுள்ளே குகைதானுண்டு கோமானுக்கொப்பானரிடியார்தாமும் குருபர்னசாமி யென்றசித்துவுண்டு நாமானமாகவல்லோகுளிகைபூண்டுநன்மையுடன் சென்றேனேவனந்தானுள்ளே ௬௬

போகர் குருபர்னமகாரிடியைக் கண்டது

உள்ளானவாசிர்மந்தன்னிற்சென்றேன் ஓகோகோநாதாக்கள்சித் தருண்டு கள்ளரெனறசித்தரப்பாகணக்கோயில்லேகாசினியிலவர்பெரு மைமெத்தவுண்டு தெள்ளமூர்தமானதொருசித்துமுன்னே சிறப்புட னேகுளிகைகொண்டியானுஞ்சென்றேன் மெள்ளவேசித்தர்முனிக்கண் டபோது மேதினியில்யாரென்று யெனைக்கேட்டாரே ௬௭

கேட்டவுடன்சித்தர்கட்கு விடையுஞ்சொன்னேன் கெடியானகா லாங்கிசீடனென்றேன் நீட்டமுடன்தனக்கோட்டிக் காணவந்தேன்நீதி யுடன்சீதையென்னுந்தேவிகண்டேன் வாட்டமுடனிடப்பாகங் குளி கைகொண்டேன் வாகானவாசிர்மமிங்கேகணடேன் நாட்டமுடன்குளி கைகொணடுயிறங்கியல்லோ நாதாந்தசித்தொளிவைக்கணடிட்டேனே

கணடவுடன் ரிடிக்கூட்டமுனிவர்யாவும் கருத்துடனேயெந்தனு க்குவுறுதிசொல்லி அணடமுடன் ஆகாயரிடிகள்தேவர் வப்பனே

அதிசயங்கள் தாமுரைத்து மண்டலங்களிதான்புகழும் ரிடியார்தம்மை வாட்டமுடன்யான்கண்டேன்போகர்தானும்தண்டமிழ்சூழ்சித்தர்முனி ரிடிகள்கூட்டம்தண்மையுடனெந்தனுக்குவிதிசொன்னரே சுசுகூ

விதியானவாசகத்தையானுங்கேட்டு விருப்பமுடன்குளிகைகொண்டுவாசிர்மத்தில் பதியானகுருபர்னரிடியார்தம்மை பட்சமுடன்காணுதற்குவருகிற்சென்றேன் ததியானரிடிப்பக்கஞ்சென்றபோது தகமையுள்ளரிடியாருமென்னைப்பார்த்து மதிபோன்றதிருமுகத்தைநோக்கியல்லோமார்க்கமுடன்வார்த்தையதுசொன்னர்பாரே எ௰

சொன்னரேகுருபர்ன ரிடியார்தாமும் தோற்றமுடன்சிறுபாலாயெங்கேவந்தீர்- மன்னவனேகுளிகைகொண்டுவந்ததென்ன மாராட்டமாகவல்லோவந்தாயப்பா- வன்னெடுங்கோபமுள்ளசித்தர்தாமும் வளமுடனேயுந்தனையுஞ்சபிப்பாரப்பா இன்னெடுங்காலமிலா திந்தகாலம் யிறையவனேயேன்வந்தீரென்றிட்டாரே எக

இட்டாரேகுருபர்னரிடியார்தாமும் யெழிலானபோகர்முகந்தன்னைப்பார்த்து பட்டமரந்துளுத்ததுபோல்பாலாநீயும் பட்சமுடன்வந்திறனுந்தனுக்கு சட்டமுடன்வரந்தருவேனென்றுசொல்லி சாங்கமுடனெனக்குரைத்தார்ரிடியார்தாமும் அட்டதிசைப்புகழவல்லோவரங்கள்பெற்று வாசிர்மந்தான்கடந்துவந்திட்டேனே எஉ

சம்புமகாரிடியைக்கண்டது

வந்திட்டேன்தனக்கோட்டிக்கடலோரந்தான் வாகானசம்புவென்றசங்கைக்கண்டேன் பந்திட்டமாகவல்லோகடலோரந்தான்பாரினிலே குளிகைகொண்டுசெல்லும்போது முந்திட்டகுருபர்னர் செய்தியெல்லாம் முனையானசம்புவெனறசங்கர்தானும் தொந்திட்டமாகவல்லோ சம்புதானும் தொன்மையுடன்தானுரைக்கக்கேட்டிட்டேனே எங

போகர் முத்தாசிர்மங்கண்டது

கேட்டேனேமுத்திஞசிர்மந்தானுங் கெடியானசாகரத்தைக்கிட்டிவந்தேன் நீட்டமுடன்முத்துரையுங்கடல்தானப்பா நீடாழிசாகரமுமளவுமெத்த தேட்டமுடனணியென்ற முத்துதானும் தெளிவானகடல்தனிலேவிளையுஞ்சிப்பி நாட்டமுடன்சித்தர்முனிடிரியார்தாமும் நவிலவேதானிருக்குங்கடல்தானமே எச

கடலானநடுமையம்பாறைமீதில் கனமானசம்புமகாரிடியாசிர்மம் அடலானவாயக்கால்மண்டபந்தான் அழகானகள்ளழகர்கோட்டைதானும் • மிடலானதேவதா ஸ்தலமுமுண்டு மிக்கானவடிவேலர்கோயி

னுண்டு-குடதிசையாம் பக்கமதில் பொய்கையுண்டு குறிப்பானசம்பு மகாபதிதானுமே ௭௫

பதியான பாறையின்மேல் மகிமைமெத்த பாங்கானகோட்டையதுகள்ளர்கோட்டை-மதிபோன்றசம்புமகாரிஷியார்தாமும் மகத்தானவாசீர்மஞ்சொல்லப்போமோ - துதியுடனேமாண்பரெல்லாங்கோடாகோடி துப்புறவாய்தெரிசித்து வருவார்போவார்-கதிபெறவேவடிவேலர்கோயில்காண காசினியில்வெகுகோடிவருவார்தானே ௭௬

வருவாரேபாசீர்மந் தன்னிற்சென்று வரமுடனேவெகுபேர்கள் கோடிமாண்பர்-மருவானமுல்லைபிருவாட்சியோடு மகத்தானநமஸ்காரமஞ்சலித்து குருவானசம்புமகாரிஷியைத்தானும் கோடிப்பார்திரிகாலபூசைமார்க்கம் உருவானவடிவேலர்தம்மைக்காணவுகந்துமேதான்போவார்கோயில்தாமே ௭௭

தாமானவாசீர்மந்தன்னைவிட்டுநாக்கானவடிவேலர்கோயில்பக்கல் போமேதான்வெகுகோடிமாண்பரப்பா பொங்கமுடனர்ச்சனைகள் மிகவுஞ்செய்வார்-பூமேவும்பன்னகச்சாலைதன்னில் புகழானபுட்பமது மிகப்பதிப்பார் தேமேவும்நவதாதுகனிகளோடு தெளிவாகதானமைத்துப் பூசிப்பாரே ௭௮

பூசிக்குங்கிரியைதனையானுங்கண்டேன் பொங்கமுடன்தனக்கோட்டியானும்வந்தேன் - நேசித்துசம்புமகாரிஷியார்தம்பால் நேசமுடன் பின்னும்யான்சென்றுவந்தேன் ஆசித்துஆசீர்மந்தன்னில்வந்துபடிமேலுந்தலைவணங்கிமுடிவணங்கி-வாசித்துப்பிரணவத்தையோதியேதான் வணக்கமுடன்பின்னும்யானதொழுதிட்டேனே ௭௯

சம்புமகாரிஷிபோகருக்குவுபதேசங்கூறல்

தொழுதேனேரிஷியாரின்சீர்பாதந்தான் தோத்திரங்கள்மிகச்செய்துகரங்குவித்து-பழுதுருசாபமதுநேரிடாமல் பாலகனையெந்தனையுங்காக்கவென்று அழுதுமேவடியேனும்முடிவணங்கி வன்புடனேகாலாங்கித்தனைநினைந்து நெழுகாமல்தான்பணிந்தேனடியேன்றானும் நேர்மையுடன்வரமெனக்குக்கொடுத்தார்பாரே ௮௰

பாரேதான்குளிகையதுபூண்டுகொண்டு பாரினிலேசம்புவரம்பெற்றுவந்தேன் - நேரேதான்முத்துறையும்நாடுங்கண்டேன் நெடிதானஆழியதுயானுங்கண்டேன் சீரேதான்சிப்பிவுறைமுத்துதானும் சிறப்பானகடலதுவும்பார்த்துவந்தேன் ஊரேதான்குருபர்ன ரிஷியாசீர்மம் வுத்தமனேயான்கண்டவளஞ்சொல்வேனே ௮௧

[illegible]ளமானமார்க்கமதுயின்னங்கேளு வண்மையுள்ளதனக்கோட்டி வடபாகத்தில்-தளமானபதியொன்றுபாறைகண்டேன் தண்மையுள்ள சம்புமகாரிஷியைக்கண்டேன் குளமானபொய்கையதுசித்தர்வாழ்க்கை குவலயத்திலநற்கீடியாதொன்றில்லை பளமானநவகனியும்நவதாதோடு பாறையதில்தான்விளையும்பாண்டினாடே ௮௨

நாடானபாண்டிவளநாட்டைக்கண்டேன் நவகோடிரிஷிமுனிவரா சிரமந்தான்-காடானதவமுனிகளுறையும்நாடு காசினியில்மாணபர்கள் தானறியானாடு-கோடானகோடியிலேயொருவனப்பா குறையானவிட் டகுறையிருக்குமானால் நாடாணமைக்கொண்டதொரு தலமுங்காண பார் தாரணியிலவனுமொருசித்தனாமே ௮௩

சித்தனாய்ப்பிறந்தாலுமென்னலாபம் சீரானவிட்டகுறையிருக்க வேண்டுங்-கத்தனதுபதவிதனைப்பிறவேவேண்டும் காசினியில்விதியா ளிப்பெறுவானப்பா சுத்தமுடன்ஞானோபதேசந்தன்னை சூட்சாதிசூட் சமதை யறியவேண்டும்-பித்தனைப்போலிருக்காமற்பேரின்பத்தில் பே ருலகில்வாழ்பவனேயோகியாமே ௮௪

யோகமென்றால்யோகமது சொல்லொணாது யொளிவானபிர காசமானசோதி - பாகமுடன்சின்மயத்தினிலையில்நின்றுபட்சமுடன் சதாகாமெர்ச்சித்தேதான்-சோகமதுவாராமல்சமாதிதன்னில்தொல்லு லகில்மாய்கையதுவாசையற்று- வேகமுடன்மனோன்மணியைமனதிலு ன்னி வெட்டவெளியம்பரத்தேநிற்பீர்தாமே ௮௫

நிற்பீரேநிலைதனிலேநின்றுகொண்டு நீடானபிரணவத்தையுச்சரி த்து - கற்பதித்ததூணதுபோலெந்தநாளுங் கலங்காமல்சமாதிதனில் நின்றுகொண்டு சொற்படியேகுருவினதுமொழியுங்கேட்டுதோராமல் ஞானமதுபூண்டுகொண்டு பற்பலபேதத்தின் பேதாபேதம்பாரினிலே சொல்லாதபான்மையாமே ௮௬

பான்மையென்றசதாநிலையில்நின்றுகொண்டு பட்சமுடன்யோக மதைநிலைநிறுத்தி-ஆன்மாவுக்கொருநாளுமழிவில்லைவவனிதனில்நீயு மொருசித்தனைப்போல்-மேன்மையுடன்தானிருந்துவையகத்தில்மெய் யானவழியறிந்தபதவிகண்டு- மான்மையென்றமோட்சவழிக்கானதாகி மகிதலத்திலிருப்பவனேபுத்திவானே ௮௭

புத்தியென்றால்வாதமதுக்காணபதற்கு புகழானயோகமதை நிறு த்துதற்கும் நித்தியமும்வாசியதையுள்ளடக்கி நிகழானசுவாசமதை மேல்நோக்காமல்- சத்தியென்றசொரூபமதைக் கண்ணிற்கண்டு சதா

காலம்கர்மவினைதனையகற்றி முத்திபெறவழிபாடுசெய்துகொண்டுமூவு லகிலிருப்பவனேதர்மவானே ௮௮

தர்மமாமின்னமொருமார்க்கஞ்சொல்வேன் தாரணியில்காலாங்கி கடாட்சத்தாலே கர்மமென்றபவக்கடலைவிட்டகற்றி கருவிகாணுதியுட ன்தொந்தம்பார்த்து-வர்மமுடன்நடப்பவனேயுத்திவானும் வரைகடந் துயிருப்பவனேகமுதைமாண்பன் - சர்மவினைவிட்டகற்றித்தரணிதன் னில் சட்டமுடன்பேருணடாய்வாழ்குவீரே ௮௯

தனக்கோட்டியில்அலையில்லாமலிருப்பதைப்பற்றிபோகர் புலிப்பாணிக்குக்கூறல்

வாழ்கவேயின்னமொருமகிமைகேளும் வாகானதனக்கோட்டிகட லிலப்பா தாழ்கவேயலைகடலில்சத்தந்தானும் தணமையுடன்நின்றதொ ருவளப்பஞ்சொல்வேன் மாழ்கியதோர்கடலதனில்பாறைமீதில் மகத் தானகுருபர்னரிடியார்தாமும் வேழ்வியுடனுசீர்மந்தனைநடத்தி விருப் பமுடன்தானடத்துங்காலந்தானே ௯௰

சீதாதேவியாகங்காணவந்தது

தானனயாகமதுநடத்தும்போது தாக்கானலங்கையென்றபதியில் வாழும்-தேனனமாதுமையாள்சீதாதேவி தென்னிலங்கைப்பதியைவி ட்டுவாசிர்மத்தில கோனனகுருபர்னர்வேழ்வியாகம் கோதையருந்தா ன்பார்க்கவந்தபோது பானனதனக்கோட்டிகடலில்தானும்பாரமுடன் சத்தமதுகேழ்க்கலாச்சே ௯௧

கேழ்க்கவென்றுலின்னமொருமார்க்கங்கேளு கெடியானபற்றமெ ன்றபனையில்தானும் வேழ்க்கமுடன்காற்றேசைத்தன்னிலேவேக முடன்அலைபனையும்வீசலாச்சு சூழ்க்கமுடன்சப்தமதை மாதுகேட்டு சுத்தமுள்ளயாசிர்மம்யாகந்தன்னில தாழ்க்கமலநவரத்தின கசிதந்தன் னில் தவிக்கவொட்டாசப்தமதைநண்டார்தாமே ௯௨

சீதைசாபத்தால்கடலின்அலைநின்றது

கண்டதொரு அலைகடலின்சப்தந்தன்னை காரிழையாள்ஸ்ரீராமர் தேவியப்பா கொண்டல்வணணச்சுதனைத்தனைநினைந்துகொடுத்ததொரு சாபத்தாலலையும்போச்சு விண்டபடிகற்பகத்தருவுக்கப்பாமேதினியில் சப்தமதுயில்லைகணடீர் தண்டலெனும்பனைமரமுமசைவுமில்லை தார ணியில்தனக்கோட்டிமார்க்கந்தானே ௯௩

மார்க்கமுடன்தென்றிசையில் கடலில்தானும் மகத்தானஸ்ரீராமர் தேவிதன்னால் ஏர்க்கவேகடலோசை நின்றுபோச்சு யெழிலானதனக் கோட்டிமகிமையப்பா தீர்க்கமுடன்சம்புமகா ரிடியலத்தால் திறமா

ணசங்கதுவும்பிரக்கலாச்சு வார்க்கமுடன்திரிச்சங்குதன்னிறலேவாகா
ணகோட்டையதுகட்டலாச்சே ௬௪

போகர்திருச்சங்குகோட்டையைக்கண்டது

ஆச்சென்றும்போகாமலின்னஞ்சொல்வேன் வப்பனே புலிப்பாணி
மைந்தாகேளு மாச்சலென்றதனக்கோட்டிகீழ்பாகத்தில்மகத்தானதிரு
ச்சங்குகோட்டையுண்டுநீச்சுடனேகடல்தனில்பிறந்தசங்கு நிலைகோடி
சங்கதனையெடுத்துமல்லோ வீச்சுடனேகாதவழிக் கோட்டைதானும்
விருப்புடன்கட்டிருக்கக்கண்டேன்பாரே ௬௫

கண்டேனேதனக்கோடி கடல்மையத்தில் கனமானதிருச்சங்கு
யாழிகோட்டை - அண்டர்முதல்தேவா திரிடிகளெல்லாம் வன்புடனே
வந்திரங்குங்கோட்டையப்பா- தண்டுளபகிருஷ்ணவதாரந்தானும் தக
மையுள்ளவாசிர்மம்லொருபக்கந்தான்-கொண்டல்வண்ணனுசிர்மமதற்குப்
பினனல் குறிப்பானயேழுசுத்துகோட்டைபாரே ௬௬

பாரேதான்யேழுசுத்து கோட்டையப்பா பாங்கானஆணிமுத்து
மதில்தானுகும் - நேரப்பாஆணிமுத்துதன்னினலே நிலையானகோட்
டையதுகட்டிருக்கும்-சீரேதான்யேழுசுத்துகோட்டைக்குள்ளே சிறப்
பானபிரிங்கிமகாரிடியாசிர்மம், கூரேதான்மாண்பர்களுங் காணப்போ
-மோகுவலயத்தில்தனககோட்டிமகிமைதானே ௬எ

தானனயேழுசுத்துக்கோட்டைக்குள்ளே தவகோடிரிடிகளுமே
சூழ்ந்திருப்பார்-மானனமதில்தனிலேசித்துமாண்பர்மகாதவசிவீற்றிரு
ப்பார்கோட்டைதன்னில் மோனனவாசிர்மந்தன்னில்தானும்மகத்தான
முத்துசிம்மாதினந்தான்- கோனனபிரிங்கிமகாரிடியார்தாமுங்கொற்ற
வனர்வீற்றிருக்கும்பதிதானச்சே ௬அ

ஆச்சப்பாகுளிகையது பூண்டுகொண்டேன் வப்பனேவாசிர்மந்த
ன்னிற்சென்றேன்-கூச்சலுடன்ரிடிமுனிவர்சித்தர்கூட்டம் கூறவொண்
ணகோஷ்டமதுசொல்லப்போமோ-பேச்சரியாமாண்பர்களோ காணப்
போரார் பேரானபிரிங்கிமுத்துரிடியாசிர்மம்- மாச்சலுடன்காண்பதற்
குமுடியாதப்பா மகத்தானசித்தரதுகோட்டைஆச்சே ௬௯

கோட்டையாந்திருச்சங்குகோட்டையப்பா குறிப்பானஆணிமுத்
துகோட்டைதன்னை-நீட்டமுடன்கோட்டைதனையறியமாட்டார்நீடான
சாகரத்தில்செல்லமாட்டார்- வாட்டமுடன்குளிகைகொண்டுகாலாங்கி

நாதர் வகுப்பானமகிமையினால்கண்டேன்பாரு - தேட்டமுடன்யென
தையர்சொன்னவாக்கு தெளிவானசொற்படியேகாணலாச்சே ௱

காணவேகலியுகத்துமுன்னேயப்பா காலாங்கிநாதர்சொன்ன திரு
வாக்குத்தான் தோணவேயெந்தனுக்குயிப்போதல்லோ தோற்றமுடன்
யெந்தனுக்குக்காணலாச்சு வாணர்முதல்சொன்னதொருகோர்வையெ
ல்லாம் வளமாகயிவ்வண்ணஞ்சொன்னதில்லை - பூணவேகுளிகையது
பூண்டுகொண்டு புகழானகோட்டைதனைப்பார்த்திட்டேனே ௱க

பார்த்தேனேபிரிங்கிமகாரிடியார்தன்னை பட்சமுடனடியேனுமஞ்
சலித்து - தீர்த்தமுடன்சோடசோபசாரத்தோடு திகழாகபிரிங்கிமகாரி
டியார்முன்னே - சேர்த்துமேகரங்குவித்துசிரமேல்வைத்துசிறப்புட
னேதாள்பணிந்துவஞ்சலித்தேன் பூர்த்தியுடன்மனதுவந்துசாமிபாதம்
பொன்னடியைமறக்காலுந்தொழுதிட்டேனே ௱உ

தொழுதுமேமுக்காலும்பணிந்துமேதான்தொல்லுலகையான்மற
ந்துதுதித்தேனப்பா - பழுதுபடாத்திருமேனிக்காவலாரே பாருலகில்
பள்ளிகொண்டரூபனை-முழுதுமேயாழியதுகோட்டைசுத்திமோன
முடன்குளிகைகொண்டுநிற்கும்போது வழூவாகபாசீர்மமங்கேகண்டே
ன் வண்மையுள்ளகிருஷ்ணனுசீர்மந்தானே ௱ங

கிருஷ்ணராசீர்மங்கண்டது

தானனதுவாரகைபாம்புருடனப்பா தாக்கானகிருஷ்ணரவராசீர்
மந்தான் தேறனதிருச்சங்குகோட்டைக்குள்ளே தெரிசித்தேன்முத்
தினுசீர்மம்பின்னால் வானனபிரிங்கிமகாரிடியார்பக்கம் வகுப்பானவா
ணிமுத்துக்கோட்டையோரம்-மானனயகதேவனுசீர்மந்தான்வையகத்
தில்பார்த்தவர்களில்லைதானே ௱ச

இல்லையேயொருவருந்தான்கண்டதில்லை யெழிலானபிரிங்கிரிடி
க்கோட்டைகண்டேன் - புல்லவேயடியேனைப்பார்த்தபோது புகழான
சிறுபாலாவென்றுசொல்லி வல்லதொருகாலாங்கிசீடபாலா வாகான
போகரென்றுதானழைத்து சல்லாபங்கொண்டல்லோயென்னைப்பார்த்
து சட்டமுடன்யாரென்று மதிப்பிட்டாரே ௱ரு

மதித்துமேயெந்தனையுங்கேட்டபோது மகதரானகாலாங்கிச்சீட
னெனறேன் துதிப்புடனேயெந்தனையுமாசிர்மித்து துப்புறவாய்பட்ச
மதுகொண்டுயெனனை கதிரோனகள்காணுதயாழிகோட்டை கருவுட
னேயுளவறிந்துகுளிகைகொணடு விதிப்படியேவிட்ட குறையிருந்ததா
லேவிருப்பமுடனுந்தனையுங்காணலாச்சே ௱சு

காணுதற்குகாலம்வந்துநேர்ந்துதென்றுகாலாங்கிநாதரதுகிருபை
யாலே வேணபடிபலாபலத்தின்மகிமையாலே வினயமுடன்கோட்டை
யதுகண்டாயென்று கோணமல்மனதுவந்து யென்னைப்பார்த்துகொற்
றவனேகாலாங்கிசீடாயென்று நீணவேபிரிங்கிமகாரிடியார்தாமும்நீட்சி
யுடன்சந்தோடங்கொண்டார்தாமே ௱௭

போகர் ஆணிமுத்துவிளையுந்துறையைக்கண்டது

தாமானபிரிங்கிமகாரிடியைத்தானும் தகமையுடன்கண்டுவந்துவு
றவுபேசிஆமானமானதொருஆணிமுத்துஅலைகடலில்விளைகின்றவழித
ங்கேட்டேன் நாமானவார்த்தைக்கிவன்பார்தாமும் நாதரதுகாலாங்கி
கிருபையாலே எமாந்துமுத்துறையும் வளமைசொன்னார் யெழிலான
முத்துவளங்கண்டிட்டேனே ௱௮

கண்டேனேமுத்துறையும்நாடுங்கண்டேன் கருவானஆணிமுத்து
தானுங்கண்டேன்- கொண்டேனேவெகுதூரங்குளிகைகொண்டுகொப்
பெனவேமுத்துறையும்பதியுங்கண்டேன்விண்டபடிகுளிகையதுபலத்
திலுலே வீரானஆழிவளைசுத்திகண்டேன் உண்டதொருகுண்ணளவு
முத்துங்கண்டேன் வுகமையுள்ளசிப்பிமுத்துகண்டேன்பாரே ௱௯

பார்த்தேனேமலைமலையாய்முத்துதன்னை பாங்கானஆழிக்குளனே
கங்கண்டேன் நேர்த்தியுடன்முத்தெடுக்கும்பதமுங்கண்டேன் நேர்மை
யுடனுளவுதனையறிந்துகொண்டு சேர்த்துமேஆணிமுத்துகையிலேந்தி
சிறப்புடனேசீனபதியானுஞ்சென்றேன் பூர்த்தியுடன்குளிகைதனை வி
ட்டிறங்கி புகழாகச்சமாதியிடமிறங்கினேனே ௱௰

சீனபதியில்காலாங்கிசமாதியைக்கண்டுபோகர் அஞ்சலித்தல்

இறங்கியேகாலாங்கிநாயர்தம்மை யெழிலானசமாதிதனைத்தெரிசி
த்தேன்பான் திறமானகாலாங்கிநாதர்தானும் தீரமுடன்பான்வந்துசெ
ய்திகண்டு-வரமுடனேயெந்தனுக்குவசீரகவாக்களித்தார்யெந்தனது
குருபரன்றான்-கரங்குவித்துமுடிவணங்கியடியேன்றானும் கர்த்தாவை
த்தெண்டனிட்டுப்பணிந்திட்டேனே ௱௰௧

சீனத்தார்க்கு தீவைபோகர்கூறல்

பணிந்தேனேகாலாங்கிநாயர்பாதம் பட்சமுடன்தெண்டனிட்டுப்ப
திமிற்சென்றேன்-அணியணியாய்சீனபதிமாண்பரெல்லாம்வன்புடனே
யென்னைவந்துகண்டாரப்பா - துணிவுடனேகொண்டுவந்தமுத்தையெல்
லாம் துப்புறவேசீனத்தார்க்கறியச்சொல்லி மணியானமுத்துறையுங்
கடலையானும் மாண்பர்களேகண்டுவந்தேனென்றிட்டேனே ௱௰௨

இட்டேனேமுத்திருக்கும்பதியுஞ்சொன்னேன் யெழிலானதிருச்சங்குகோட்டைசொன்னேன் வட்டமுடன்திருச்சங்கு கோட்டைபக்கல் வாகானகிருஷ்ணவாசிர்மஞ்சொன்னேன்- பட்டணங்கள்சீனபதிமார்க்கமெல்லாம் பட்சமுடன்பான்வந்துசேதிகண்டு- திட்டமுடன்மாண்பரெல்லாமெந்தனுக்குதீரமுடனுசிர்மஞ்சொன்னார்பாரே ௬௰௩

பார்க்கவேயெந்தனுக்குப்பணிந்துமேதான் பட்சமுடன்முத்திருக்குந்தீவுதன்னை தீர்க்கமுடன்போகவென்றுவடையாளங்கள்தீரமுடன் கேட்டார்கள்மாண்பரெல்லாம் ஏர்க்கவேயாழியென்னுங் கடலிலப்பா யெழிலானமுத்தெடுக்கப்போகாதப்பா மார்க்கமுடன் குளிகையது பூண்டுகொண்டு மகத்தானமுத்தெடுக்கவேண்டும்பாரே ௬௰௪

சீனபதிபார்நீராவிக்கப்பலால் முத்துக்கடல்கண்டது

பாரேதான்குளிகையதுயில்லாவிட்டால் பாங்கானநீராவிக்கப்பல் வேண்டும்- நேரேதான்நீராவிக்கப்பல்தனனில்நேர்மையுடன்சேர்மித்துநீங்களெல்லாம்-ஊரேதான்நீராவிக்கப்பல்கொண்டு வுத்தமனேமுத்தாழிக்காணவேண்டும் சேரேதானுழிதடம்நடக்கும்போது சீரானபுத்தியதுவேண்டுந்தானே ௬௰௫

தானனதனக்கோட்டிவடபாகத்தில் தாக்கானமுத்தாழிதீவுமுண்டுதேனனசித்தர்முனிகண்டதில்லை தேவதாரிடிகளெல்லாங்காணுமாழிபானனபராபரியாள்வாசஞ்செய்யும் பாங்கானமுத்துறையுந்தீவுமாச்சுமானனமண்டலத்தில் யாருங்காணார் மகத்தானமுத்துறையுந் தீவுமாச்சே ௬௰௬

ஆச்சப்பாதீவுவழிசெல்லும்போது வப்பனேகடல்தனிலேமுடக்கமுண்டு நீச்சுடைடயகடல்தனிலே போரும்போதுநீடானமலைப்பாறைக்குண்ணுமுண்டு வீச்சுடனேநீராவிமரக்கலந்தான் வீறுடனேயாழிதனிற்செல்லும்போது மாச்சலென்றமலைவளத்தாரிடருண்டாகும் மகத்தானமரக்கலமுமுடைந்துபோமே ௬௰௭

போகர்மரக்கலக்கண்ணாடி சொன்னது

போமேதாநீராவிக்கப்பல்தானும் பொங்கமுடன்கடல்தனிலேசெல்லும்போது ஈமேதான்கண்ணாடிக்கைப்பிடித்து நலமுடனேயாழிதடம்பார்க்கும்போது வேமேதான்கண்ணாடிக்கைபிடித்து விருப்பமுடன்கப்பல்முனைத்தனிலிருந்து தாமேதான் கண்ணாடிதன்னையப்பா தாரணியில் ஆழிதனைக்காணுவாயே ௬௰௮

காணுகையிலுந்தனுக்குப்புத்திவானே கடலிலுள்ளமர்மமெல்லாங்கண்ணிற்றேற்றும், தோணுமேமலைப்பாறைக் கல்களெல்லாம் தோற்றுடையுந்தன்கண்ணாடியாலே, பூணவேவழிதடத்தைக்கண்டுமெல்லோ புகழானமலைப்பாறையொதுங்கியேதான், நீணவேநெடுந்தூரஞ்செல்லலாகும் நீராவிக்கண்ணாடிக்கப்பல்தானே ௬௰௯

தானானநீராவிக்கப்பல்கொண்டு தகமையுள்ளவாணிமுத்து யெடுக்கலாகும், தேனானஆணியென்றமுத்தைதானும் தெளிவாகக்கடல்தனிலேயெடுக்கலாகும் கோனானகுருசொன்னவாக்குதானும் குறையாமலாழிதனில்நடத்தினக்கால் பானானபாதாளமுத்தையெல்லாம் பாங்குடனேயெடுப்பதற்குதுறையுமாச்சே ௬௨௰

துறையானதுறைவழியேகண்டபோது துப்புறவாய்க்கனகமெல்லாங்கைக்குள்ளாச்சு மறைவானபொருளெல்லாங்கண்ணிற்றேற்றும் மகத்தானநிதிகளெல்லாமெடுக்கலாகும் திறைகடலில்நீராவிக்கப்பல்தன்னால் திரளானகளஞ்சியத்தைக்காணலாகும் குறையாமல்செல்வமதுயென்னாளுந்தான் கொற்றவனேயுந்தனுக்குவாய்க்கும்பாரே ௬௨௧

வாய்க்குமேமகமேருபருவதந்தான் வாகானகுகைபாவிப்பர்வதந்தான் தீய்க்கவேதீவுகளுங்காணலாகும் திறைகோடிகடலதனைச் சுற்றலாகும் வேய்ப்பானபதிதனிலேமகிமையெல்லாம் வேகமுடன்மரக்கலத்தால்காணலாகும் சாய்க்கவேசீனபதியுலகத்தார்க்குசட்டமுடன்தானமைத்தநூலிதாமே ௬௨௨

நூலானபோகரேழாயிரந்தான் னுணுக்கமுள்ளபொருளெல்லாமிதிலேதோயும் பாலானசாத்திரந்தான்சத்தகாண்டம் பாலகனேயிக்காண்டமைந்தாங்காண்டம் மேலானகாண்டமிதுயேழுக்குள்ளே மேதினியில்கருவிகரணாதியெல்லாம் மாகானசத்தசாகரமடக்கம் மகத்தானபோகர்னூல்பெருனூலாமே ௬௨௩

அகஸ்திபர்பன்னிராயிரத்தை போகர்சிறப்பித்தது

பெருநூலாம்போகரேழாயிரந்தான் பெருக்கமுடன் பாடிவைத்தேன்சீனத்தார்க்கு விருனூலாமடியேனுஞ்சொன்னமார்க்கம் விருப்பமுடனகஸ்தியருமொருனூல்செய்தார் குருநூல்காவியம்பன்னிராயிரந்தான்கும்பமுனிபாடிவைத்தார்காண்டமப்பா திருநூலாங்காண்டமதுபனிரெண்டுமாகும் திறமானவாயுறுவேதந்தானே ௬௨௪

போகர்பச்சைமலைக்கண்டது

வேதமாம்பின்னமொருமார்க்கங்கேளுவிருப்பமுடன்புலிப்பாணி மைந்தாநீயும் நீதமுடன்குளிகையதுபூண்டுகொண்டு நீதியுடன்சினபதிவிட்டுயானும்- போதமுடன்வடகோடிகானகத்தை பொங்கமுடன்திரும்பிவந்தேனடியேன்றானும் காதமெனுங்கடலாழிதன்னிலப்பா கவனமுடன்குளிகைகொண்டுசென்றேன்பாரே ௱௨௫

பாரேதான்வடகோடியாழிதன்னில் பாங்குடனேகுளிகைகொண்டுயானுஞ்சென்றேன் நேரேதான்குளிகைகொண்டு செல்லும்போது நேர்மையுடனுசீர்மமொன்றுகண்டேன் ஊரதுபோல்கடலாழிநடுமையத்தில் ஓகோகோதீவதுதான் கண்டேனபபா- சேரேதான்குளிகையது சென்றுயானுஞ் சேர்ந்தேனேதீவுதனில் கிட்டினேனே ௧௨௬

கிட்டவேதீவுதனிற்செல்லும்போது கெடியானதேவதாமலையொன்றுண்டு- முட்டவேபாசிபோலிருந்ததப்பா மூதுலகில்மலையென்றுநினைந்துகொண்டேன்- வட்டமுள்ளபாறைதனைசோதித்தேன்யான் வளமானபச்சையென்றமலைதானப்பா - திட்டமுடன்கண்டறிந்தேன் பச்சையப்பா திடமானபச்சைமலைபார்த்திட்டேனே ௱௨௭

பார்த்தேனேமலையினிட மகிமைமெத்த பாருலகில்சித்தர்முனிகண்டதில்லை - தீர்த்தமுடன்மலைமீதில்சுனைதானுண்டு திரமானபச்சையென்றநிறத்தைப்போல- கார்த்துமேகாவுடன்வெகுகோடிசித்தர் கநிர்காணமலைதனிலேயிருப்பாரங்கே- பூர்த்தியாயவர்களிடஞ்சென்றேன்யானும் புகழாகவடிபணிந்துதொழுதிட்டேனே ௱௨௮

தொழுதேனேசித்தர்வர்க்கந்தன்னைக்கண்டேன் தோற்றமுடன்குளிகைகொண்டுபக்கல்சென்றேன் - பழுதுபடாமேனியதைப்பார்க்கும்போது பச்சையென்றதிருமேனியென்னலாகும்- புழுகுடனேபட்சிமிருகங்களெல்லாம் புகழானபச்சைநிறமென்னதாகும் - கிழுகுடனேபிராம்பட்சியெல்லாமப்பா காணுகைக்கிப்பச்சைநிறமென்னலாமே

என்னவேயென்தேகம்பச்சையப்பா யெழிலானஜலமெல்லாம்பச்சையப்பா- துன்னவேமண்டலமும்பச்சையப்பா துறையானபூமிமுதல்பச்சையப்பா-பன்னவேபார்லோகம்பச்சையப்பா பாங்கானவிருட்சமுதல்பச்சையப்பா- சொன்னதோருமார்க்கமெல்லாம்பச்சையப்பா சுடரொளியையென்சொலவேன்போகர்தாமே ௱௩௰

பச்சைமலைசித்தர்போகரைக் கேள்விகேட்டது

தானென்மலைவளத்தைக்கண்டேன்யானும் தகமையுள்ள சித்தர்களோசொல்லொண்ணாது - கோணனசித்தரென்னைக்கண்டபோது குவ

லயத்துமனிதரப்பா குளிகைகொண்டு-ஏனோதானிம்மலையில் வந்திரெ
ன்றார் யெழிலானசித்தரென்னைக்கேட்டபோது- நானேதான்காலாங் கி
சிடனென்றேன் நாதாக்கள்காணவல்லோவந்திட்டாரே ௱௩௧

வந்தேனேவிருவினதுபதாம்புயத்தை வணக்கமுடன்காணு தற்கு
குளிகைகொண்டேன்-அந்தமுடன்பச்சையென்றமலையைக்காணவன்பு
டனேயானுமல்லோவநதேனென்றேன் - சொந்தமுடன்யானுரைக்கும்
வார்த்தைகேட்டு சுந்தரனுஞ்சித்தர்முனிரிடிகள்யாவும் - எந்தன்மேல்
பட்சமதுமிகவும்வைத்து யெழிலாகக்கூறலுற்றார் சித்தர்தாமே ௱௩௨

சித்தானசித்துமுனிரிடிதானப்பா சிறப்புடனேயெந்தனையும்பார்
த்துமேதான்-பத்தியுடன்காலாங்கிப்பாதம்போற்றி பாலகனேயிம்மலை
யில்வந்ததாலே-வெத்திபெறயெந்தனையுஞ்சபிக்கவந்த வேதாந்தசித்த
ரெல்லாமனமிதங்கி - சுத்தியுடனிதிகாசப்புராணமெல்லாம் சூட்சாதி
சூட்சமுடன்சொன்னார்பாரே ௱௩௩

சொன்னாரேயெந்தனுக்குவேதஞானம் சொரூபமென்றசுடரொ
ளியைக்காணவென்று மன்னுகேள்காலாங்கிபோகாநாதா மகிமையுள்ள
வாசிர்மமிங்கொன்றுண்டு- தென்பாறைபச்சையென்றமீதிலப்பா தேர்
வேந்தரிடியாருமொருவருண்டு-முன்னேதான்பெரியோர்கள்சொன்ன
ப்போல மோனமென்றஞானகுருசித்துவுண்டே ௱௩௪

மோனமகாரிடியைக்கண்டது

உண்டானசித்துமகாரிடியார்தாமும் ஒகோகோநாதாக்கவாசிர்மங்
தான்-கண்டேனேபச்சையென்றமலையின்மீதில் காவலர்களாயிரம்பேர்
சூழ்ந்திருக்க - திண்டானவாசிர்மங்கிட்டியேதான் தீரமுடன்குளிகை
தனைப்பூண்டுகொண்டு - அண்டமதில்தான்பறநதுமேலேநின்று வப்ப
னேகுளிகைகொண்டுயிறங்கினேனே ௱௩௫

இறங்கியேமோனகுருயெதிர்முன்பாக யெழிலாகக்குளிகைகொ
ண்டுநின்றேனங்கே-திறமுடையசித்தர்களோவாயிரம்பேர்தீரமுடனெ
ந்தனையேசபிக்கவந்தார் - நிறமானபச்சையென்றசித்துதாமும் நீருக்கி
யெந்தனையுஞ்சபிக்கவநதார்-மறம்போலநின்றுவிட்டேன் போகர்யானு
ம்மார்க்கமுடன்தாள்பணிந்துதெரிசித்தேனே ௱௩௬

தெரிசித்தேன்மோனமகாரிடியைபானும் தீரமுடன்வடகோடிகா
னகத்தில் - பரிசித்துரிடியாரும்பச்சைமீதில் பாங்குடனேவீற்றிருந்த
வாசிர்மந்தான் வரிசையுடன்மோனமகாரிடியாசிர்மம் வண்மைதனைக்

காணவென்றுவந்தேன்யானும் - குரிசையென்றமோனகுருவாசிர்மத்
தை குறிப்புடனேயான்கண்டுவணங்கினேனே ௫௧௭

மோனகுருபோகருக்குவுபதேசங்கூறல்

வணங்கவேரிடியாருமென்னைப்பார்த்துவாகுடனேபாரப்பாவென்
றுகேட்க-இணங்கவேகாலாங்கிச்சீடனென்றேன் யெழிலானமோனகு
ருரிடியாசிர்மம்-சுணங்கமதுவாராமலடியேனறன்னை சூட்சமுடன்தன்
னருகில்வரவழைத்து- மணமுடனேயெந்தனுக்குஞானோபதேசம்மார்
க்கமுடன்வரமதுவுங்கொடுத்தார்பாரே ௫௧௮

பாரேதான்வெகுகோடிகாலமப்பாபட்சமுடன்பச்சையென்றமலை
தான்மீதில்-நேரேதானவக்கனியும்நவதாதோடு நேர்மையுடன்தானறி
ந்துயிருந்தேனங்கே - சீரேதான்சிலகாலஞ்சென்றபின்பு திகழுடனே
மோனமகாரிடியையானும் சாரமுடன்ஞானோபதேசம்பெற்று சட்ட
முடன்சீனபதியேகினேனே ௫௧௯

போகர் சீனபதிக்குவந்தது

ஏகவேசீனபதிபோகவென்று யெழிலானகுளிகைதனைப்பூண்டு
கொண்டு-வேகமுடன்சீனபதிவந்தேன்யானும் வெட்டவெளியாகாயங்
கோட்டைதன்னில் - சாகமுடன்குளிகைவிட்டுயிறங்கி, தான் சட்ட
முடன்மாண்பரெல்லாங்கண்டேன்யானும் - சோகமுடன்சீடவர்க்கங்
கண்டபோது சுத்தியென்னைவந்துமல்லோ சூழ்ந்தார்பாரே ௫௨௰

சூழ்ந்தாரேயெந்தனையுஞ்சீடவர்க்கம் சூட்சாதியானதொருமார்க்க
மெல்லாம்- தாழ்ந்துமேயெந்தனையுங்கேட்கும்போது சட்டமுடன்யா
னுரைத்தேன்பச்சைதன்னை-ஆழ்ந்ததொருகடல்தனிலேமலைதானுண்
டுஅப்பனேவடகோடியாழிதன்னில்-வாழ்ந்துமேபச்சைமலைதன்னிலப்
பா வாகுடனேவெகுகாலமிருந்தேன்பாரே ௫௨௧

ஆகாயமார்க்கமாய் கூண்டுகட்டிக்கொண்டு யிறங்கி
பச்சைபெடுக்கும்விதி

இருந்தேனேயின்னமொருமார்க்கஞ்சொல்வேன்யெழிலானமாண
பர்களேகேளுங்கேளும்-திருத்தமுடன்வடகோடியாழிதன்னில் தீரமுட
ன்பச்சையதுயெடுக்கவென்றால் - பொருந்தவேநீருவிக்கப்பல்தானும்
போகாதுகடலுக்குத்தடந்தானில்லை-வருந்தியேசுழலதுவுமெத்தவுண
டு வாகானபட்சிமுதல்மடிந்துபோமே ௫௨௨

மடியுமேகடலுக்குமேற்பாகத்தில வன்முடனேஆகாயம்பறக்கும்
பட்சி - துடியுமேதான்பறந்துசுழலுமாழி துப்புறவாயச்சலமதிலேவி
ழுகும்பாரு- வடியதனில்கற்பாறை மெத்தவுண்டு அலைகடலில் தடம

துவுங்காணப்போமோ- நொடியானவாகாயக்கூண்டுதன்னில் நோக்க
முடன்றீவுக்குச்செல்லலாமே கசங

செல்லலாம்பானுரைத்த கூண்டினாலே சிறப்புடனேதீவுக்குப்
போகலாகும் - வெல்லவே ஆகாயமார்க்கந்தன்னில் விருப்பமுடன்கூ
ண்டைவிட்டுயிறங்கியல்லோ- புல்லவேயான்சொன்னவாசிர்மத்தில்பு
கழானவடகோடிகடலில்தானும்- நல்லதொருபச்சையென்றமலையைக்
கண்டு நலமுடனேயிறங்கியல்லோயெடுக்கலாமே கசச

எடுக்கலாம்பச்சையென்றகளஞ்சியத்தை யெழிலானவடகோடி
யாழிதன்னில்- தொடுக்கவேகூண்டுவழிமார்க்கமாக தோராமல்பச்சை
தனையெடுக்கவேண்டும் - விடுக்கவேயாகாயந்தனிலெழும்பி விடுபட்டு
ச்சுழலதனைத்தாண்டியேதான். ஒடுக்கமுடன்சீனபதிக்கோட்டைக்கு
ள்ளே வுத்தமனேயிறங்கவென்றுவுரைத்திட்டேனே கசரு

தனக்கோட்டிக்கு வடபாகத்தில் கெம்புவிளையும
ஆறறைக்கண்டது

உரைத்தேனேயின்னமொருமார்க்கங்கேளு வுகமையுள்ளபுலிப்
பாணிமைந்தாசொல்வேன்- நிரைப்படியேயெனதையர்காலாங்கிநாதர்
நேராகவெந்தனுக்குச்சொன்னமார்க்கம்- திரையானவடகோடியாழித
ன்னில் தீர்க்கமுடனாசிர்மங்கொன்றுண்டு - வரைகோடிகானகந்தான்
சொல்லொண்ணாது வாகானகுளிகைகொண்டுசென்றேன்பாரே ()

பாரேதானாறிதடம்யான்கடந்தேன் பாங்கானவாசிர்மந்தன்னிற்
செல்ல- நேரேதான் குளிகையதுகொண்டுமல்லோ நேரானவடகோடி
கானகத்தில்- நேரேதான்குளிகைகொண்டுயிறங்கியல்லோ தீர்க்கமுட
ன்றீவுதனைக்கண்டேன்பானும் - ஊரேதானென்றில்லைக்கடல்தானப்
பாவுத்தமனேபாசிர்மங்கியாருண்டே கசஎ

உண்டானவாசிர்மந்தன்னிற்சென்று ஒகோகோநாதாக்கள்பெரு
மைதன்னை - கண்டேனேவடகோடியாசிர்மத்தில் கனமானசித்துமு
னிரிடிகள்யாவும் - தொண்டருடன்வாசிர்மந்தன்னைச்சுற்றி சொரூப
மென்றசித்கொளிவுசொல்லொண்ணாது - அண்டர்முனிராட்சதர்கள்
காணாடு வப்பனேகுளிகைகொண்டுசென்றேன்தானே கசஅ

தானானகுருபதத்தைக்காணவென்று தாக்கானமனோன்மணிபா
ளநளும்பெற்று- கோனானயெனதையர்காலாங்கிநாதர் கொற்றவனார்
குருமொழியாஞ்சொற்படிக்கி- தேனானகுளிகைகொண்டுசென்றுமல்

லோ தெளிவு டனேபாசிர்மந்தன்னில்நின்றேன்-பானுனகம்பிளியாஞ்
சித்தர்தாமும் பாற்கடலிலெலந்தனையும்பார்த்திட்டாரே ௧௪௯

போகர் கம்பிளிசித்தரைக் கண்டது

பார்த்தாரேநடுக்கடலாசிர்மத்தில் பாங்கானசித்துமுனிரிடிகளெ
ல்லாம்- வேர்த்துமுகமாயிருக்கபானுங்கண்டேன் வீரானதேகமெல்
லாம்ரோமமப்பா - சீர்த்தியுள்ளசித்தாப்பாவையகத்தில் சிறப்பான
லோகமதிற்கண்டதில்லை - பூர்த்திபாலகிமையது சொல்லொண்ணாது
பொன்னுலகுசித்தரென்றுசெப்பலாமே ௧௫௦

செப்பவென்றாலவர்களிடங்கிட்டிநின்றேன்செங்கதிரோன்போ
ல்விசும்சடலமப்பா- ஒப்பவேதேகமதுரோமந்தானும் வுத்தமனேகா
டியென்றேசெப்பலாகும் - இப்புவியிலாரேனுங்கண்டதில்லை எழிலா
னகாடிமயிர்சித்தரப்பா- அப்பதியிலாசிர்மமாருங்காணார் அலைகடலி
ல்வழிகாணார்மாண்பர்தாமே ௧௫௧

மாண்பானவையகத்தில்யானுமல்லோவளமுடனேகுளிகைகொ
ண்டுசென்றேனப்பா - விண்போகாக்காலமதுயான்கடந்து விருப்ப
முடனட்டதிசைக்காணவென்று- காண்பானவடசோதித்தாண்டியல்
லோ கைலைபதிகொப்பானதீவுதன்னில் - ஆண்மையுடன்சென்றும
ல்லோசித்துதம்மை வனபுடனேயான்கண்டவளஞ்சொன்னேனே ()

சொல்லவேயாசிர்மந்தன்னினின்றசுடரானசித்தர்முனிதன்னை
க்கண்டு- வல்லதொருரோமமுள்ளசித்தரப்பா வண்மையுடனெந்தனை
யாரென்றுகேட்க - புல்லறிவானதொருவடியேன்றானும் புகழுடனே
காலாங்கிச்சீஷனென்றேன்- மெல்லவேயெந்தனையுமாசிர்மித்து மேன
மையுடன்பட்சமதுகொண்டார்தாமே ௧௫௩

கொண்டாரேகாலாங்கிபெருமைக்க கொப்பனவேரோமமென்
றகாடிசித்து- சண்டமாருதம்போலககோபங்கொண்ட சகலருமேயெ
ன்பேரிலாசிர்மித்து - கண்டுமேயுபதேசஞ்செய்வதற்கு கருத்திலேமெ
ன துவந்துயடியேனுக்கு விண்டதொருஞானோபதேசமெல்லாம் விரு
ப்பமுடன்போதித்தார்சித்தர்தாமே ௧௫௪

சித்தானசித்துமுனிரிடிதானப்பா சிறப்புடனேயெந்தனுக்குபா
வுஞ்சொல்லி-முத்தானவாசிர்மம்பெருமைசொல்லி மூதுலகிலமகிமை
யெல்லாந்தானுரைத்து- எத்தலமுங்கண்டுவந்தசிறுபாலாகேள் மொழி

லானவாசீர்மகிமையெல்லாம் சுத்தமுடனுத்தமக்குயாமுரைத்தோம் சூட்சாதிசூட்சமெல்லாமறிந்துகொள்ளே ௧௫௫

போகர் கெம்புநதி கேட்டது

கொள்ளவென்று சொல்லுகையிலடியேன்றானும் கொப்பெனவே கெம்புநதியெங்கேயென்றேன் - விள்ளவேயென்றனுக்குச்சொன்னாரப்பா விருப்பமுடன்வடகோடிகானகத்தில் - அள்ளவேவயோத்திநகர்மேற்பாகத்தில் அழகானகெம்புநதியென்றுரைத்தார் - மெல்லவேகெம்புநதிக்காணவென்று மேன்மையுடன்குளிகைகொண்டு விடைபெற்றேனே ௧௫௬

பெற்றேனேசித்தரிடம்விடைதான்பெற்று - போனகுளிகைதனைப்பூண்டுகொண்டு - சுற்றமுடன் அயோத்திநகர்தன்னைநோக்கி சூட்சமுடன்மேற்பாகந்தன்னிலேசென்றேன் - வுற்றதொருகுளிகைகொண்டுமேற்பாகத்தில் ஏகோகோநாதாக்களிருக்கும்ஸ்தானம் - வெற்றியுடன்காலாங்கிதன்னைநினைந்து விருதுடனேவடியேனுமிறங்கினேனே ௧௫௭

இறங்கினேனயோத்திநகர்மேற்பாகத்தில் எழிலானகெம்பாறுநதிமையத்தில் - திறமுடையகெம்புக்கால்மண்டபந்தான் தெளிவானபதியொன்றுகுகைதானுண்டு - சிறமானகெம்பென்றசித்தர்தானும் நீலவர்ணன்முகம்போலேசித்தொன்றுண்டு - உறமானமண்டபத்தில் தவசியாரும் வுந்பனமாய்த்தானிருக்கக்கண்டிட்டேனே ௧௫௮

கண்டிட்டேன்குளிகையது பூண்டுகொண்டு கடிதானகெம்பாறுநதிமையத்தில் - தண்டுளபமாலைபணிகிருஷ்ணன்போல் தவமுடையசித்தொருவரங்கேயுண்டு, மண்டலிகர்தானறியாதிவுதானும் மகத்தானகெம்பாறுமண்டபந்தான் - அண்டமெல்லாம்தான்புகழும்நதிதானப்பா வப்பனேகெம்பாறுபார்த்திட்டேனே ௧௫௯

பார்த்தேனேரிடியாரைமடியேன்றானும் பட்சமுடன்பக்கல்தனில்போனுஞ்சென்றேன் - தீர்க்கமுடன்கெங்கைநதிபானத்தோடுதிறமுடனேயஞ்சலிகள் மிகவுஞ்செய்தேன் - சேர்த்துமேயென்தனையுங்கொண்டணைத்து சிறுபாலாயெங்குவந்தீரென்றுரைத்தார் - ஏர்க்கவேயெந்தன்மேல்பட்சம்வைத்து எழிலானவாசீர்மஞ்சொன்னார்பாரே ()

சொன்னவுடன் அடியேனுங்கால்நடுங்கி சுத்தமுடன்தலைகுனிந்துசாஷ்டாங்கித்தேன் - நன்மையமாய்காலாங்கிநாதர்தம்மால் நாடிவந்தேனுசீர்பந்தன்னேயென்றேன் - வுன்னிதமாய்க்கெம்புநதிக்காணவென்

றுவுகந்தொருகுளிகைதனைக்கொண்டுவந்து- பன்னவேயாசீர்மங்கி
ட்டிவந்தேன் பட்சமுடனெந்தனுக்குவருள்செய்வீரே கசூ

அருளென்றுசொல்லுகையில்வடியேன்மீதுவன்புடனேகிருபை
யதுமிகப்புரிந்து - தெருள்கலையிற்றெள்ளமுதேதேனேமானே தெக
ட்டாதகண்மணியேபோகர்பாலா இருளகற்றுஞ்செந்தேனேசிவகவே
றேபெழிலானகுணக்குன்றேயோகவானே-பொருளானஞானோபதே
சங்கேட்டும் பொன்னவனேயுந்தனக்குவருள்சொல்வேனே கசூஉ

சொல்வேனேஞானோபதேசந்தன்னை சூட்சாதிசூட்சமதையுன
க்குரைப்பேன்-வல்லதொருகாலாங்கிநாதர்பாதா வளமையெல்லாமுந்
தனக்குயோதுவேன்யான்- வெல்லவேஞானோபதேசமெல்லாம் விரு
ப்பமுடனுனக்களிப்பேனென்றுசொல்லி- புல்லவேபூதலத்தின்மகி
மையெல்லாம் புகழ்ச்சியுடனெந்தனுக்குரைத்தவாரே கசூ௩

கெம்புரிடி போகருக்கு ஞானோபஞ்சொல்லி
கெம்புவிளைவுகாட்டியது

ஒருவர்கெம்பாறுநதியுஞ்சொன்னார் ஒகோகோநாதாக்கள்கண்
டதில்லை- வாதுரைதகவெந்தனுக்குரிஷியார்தாமும் வண்மையுள்ளஞா
னோபதேசரைத்தாரப்பா-மாதுமனோன்மணியாளின்கிருபையாலேமக
த்தானமகிமைகளுஞ்சொன்னாரப்பா- சேதுபந்தமானதொருகடலினே
ர்மை செப்பினாரெந்தனுக்குச்செப்பினாரே கசூ௪

செப்பினார்கெம்புகனையெடுக்கவல்லே!! சேதுபந்தவயோத்திக்
குமேற்கேயப்பா- ஓப்பவேகெம்பாறுவடமுகத்தில் ஓங்கியதோர்வோ
டையொன்றுகுகைதானுண்டு-வெப்புடனேவடகோடியாற்றையப்பா
விண்ணுலகில்கண்டவர்களாருமில்லை- செப்பமுடனெந்தனுக்குவுள
வுசொல்லி- நேர்மையுடன்வோடைதனைககாண்பித்தாரே ககூ௫

காண்பித்தார்வயோத்திகர்வோடைதன்னில் கனமானகெம்பின
து அருவிகண்டேன் - ஆண்பானகெம்பினது அருமைதன்னை வப்ப
னேநாதாக்கள்சொல்வாரோசொல் - தூண்போலேகல்லதுதானயிருக்
கும்பாரு துடியானகெம்பினதுவோடைதன்னை- சாண்போலேபாறை
யதுமிகவிருக்கும் சாண்பானசிறுகல்லுபொடியுமாமே ககூ௬

பொடியானகல்லதுதானமணலதானப்பா பொங்கமுடன்பழுத்த
க்காய்ப்போலிருக்கும் - துடியானகெம்புதனையெடுப்பாரப்பா தூண
போன்றகெம்புதனை யெடுக்கமாட்டார்- படியானவோடைத்துள்சித்தர்

காவல் பாங்கானமேற்பிரத்தைச்செல்லலாக- அடிபோன்றகாணுறுவதி
லேயுண்டு அற்புதமாமருவியென்றவாழியாமே கசுஎ

ஆழியாம்மேலருவில்தன்னிலப்பா வப்பனேசழற்சிக்காய்யளவு
போலும்-நாழியால்நான்கொண்டுகெம்பளக்கு நாயகனேபெருமண
லாயருவியாயும்- கீழியுடன்கிழருவில தூண்போல்கெம்பு நீடானையிலே
போலேயிருக்கும்பாரு- தாழினிடமிளேகின்றகெம்புமார்க்கம் தகமை
யுடன்வெகுபேர்கள்காணாதாமே கசுஅ

காணுரேகெம்பினுடவாற்றின்மார்க்கம் காசினியில்காலாங்கிகிரு
பையாலே- தேணுதகருவிகரணுதியெல்லாம் சோறறமுடனேந்தனு
க்தக்காண்பித்தார்பார்- பூணுததுறைமுசலுக்காணுறுந்தான் பொங்க
முடன்கெப்பினதுவருவிதானும்-மாணமுறும்கெமபினுடதீவுதன்னே
மார்க்கமுடன்கண்டுவந்தேன்தேசமாமே கசுகூ

போகர் சீனபதிக்குவந்து கெம்புவிளைவுகூறல்

தேசமாமின்னமொருமார்க்கஞ்சொல்வேன் சிறப்பானசீனபதி
வுலகத்தார்க்கு- மோசமதுதெரியாதமாண்பரப்பா மூதலகில்சீனபதி
யானைப்போல- பாசமுடன்மெய்யென்றுநம்புமாண்பர் பாருலகில்சீன
பதியுலகமப்பா- நாசமுள்ளமற்றதோர்தேசமெல்லாம் நலமானகருமி
கன்தானென்னலாமே கஎ௰

என்னவேசீனபதி யுலகத்தோர்க்கு யெழிலானகபடுகளுஞ்சூது
தானும் - பன்னவேபழிபாவம்தெரியாதப்பா பாருலகிலம்மாண்பர்
போலேயுண்டோ- துன்னவேபாம்கண்டமார்க்கந்தன்னே துப்புரவா
ய்சீனபதியுலகத்தோர்க்கு- முன்னமேமகாலாங்கிசொன்னுப்போல மூ
யற்சியுடன்தானுரைப்பேன்பதியுள்ளோர்க்கே கஎக

பதியானசீனபதிமாண்பரேகேள் பாருலகில்கடலேழுஞ்சுத்திவ
ந்தேன் - நிதியானநவகோடிதிரவியங்கள நேர்மையுடன்தானிருக்கு
ம்சலமுங்கண்டேன்- துதியானசித்தர்முனிரிடிகள்தாமும் சூழ்ந்திருக்
கும்கெம்பினுடநதியுங்கண்டேன்- மதியாததவசுமுனிசித்தாசிர்மம்மா
ர்க்கமுடன்கண்டுவந்தேன்மகிமைபாரே கஎஉ

பாரேதானகெம்பாறு நதியுங்கண்டேன் பாங்கானவோடைமுத
லருவிகண்டேன்- நேரேதான்காணுறுமாழிகண்டேன் கோணகெம்பு

த்தூண்பாறைநணடேன்-சாரேதான்மேலருவியுள்ளருவிகண்டேன்
சாங்கமுடன்கெம்பினுடமண்டபந்தான் - தீரேதான்வடகோடிமேற
பாகத்தில் தீரமுள்ளசித்தர்கள்தான்காவலுண்டே ௧௭௩

காவலாங்காணுறுபகியிலப்பா கார்த்திருப்பார்வெகுகோடிசித்த
ரங்கே- ஆவலு டன்கெம்பெடுக்கப்போகும்போது வப்பனேயவர்கரு
ணைமிகவேவேண்டும்- யேவலுடனவர்பணிக்குமுன்னேநின்று பெழி
லானகெம்புதனையெடுக்கலாகும் - கோபமதுவாராமல் குருவின்முன்
னே கொப்பெனவேயாசீர்மமகொள்வீர்தாமே ௧௭௪

கொள்ளவேயாசீர்மங்கொண்டபோது சொற்றவனேயுந்தமக்குத்
தடமுஞ்சொல்வார் - விள்ளவேவதியிருக்குமிடமுஞ்சொல்லி விருப்
பமுடன்கெம்பினுடநாடுஞ்சொல்லி- உள்ளதொருவுடல்பொருள்களா
வியோடு வுத்தமனேயுந்தனுக்குத்தத்தமீய்ந்து கள்ளமின்றிமனதுவா
டக்கவென்று கடாட்சமுடனருளதுவுஞ்சொல்வார்பாரே ௧௭௫

சொன்னதொருவிதிமுறைகளனைத்துங்கூறி சுத்தமுடன்ஞா
னோபதேசமோதி- நன்னயமாய்வையகத்தில்வாழ்கவென்று நாதாந்த
க்கண்மணியினருளைப்பெற்று- என்னுளுஞ்சித்தருக்குமுத்தனாகபெ
ழிலாகயிருக்கவென்றுவாசீர்மித்து, பன்னவேபரப்பிமமசோதிதன்
னைபகட்டுவார்யுந்தமக்குப்பண்பாய்த்தானே ௧௭௬

போகர் யானைமலைகண்டது

தானானயின்னமொருமார்க்கமகேளு தகமையுள்ளபுலிப்பாணி
மைந்தாசொல்வேன்- தேனானதென்மதுரைவடமேற்கப்பா தெளிவா
னயானைமலையென்றொன்றுண்டு- கோனானயெனதையர்காலாங்கிநாத
ர்கொற்றவனாரெந்தனுக்குச்சொன்னமார்க்கம- பானானகுருசொன்ன
மொழிப்படிககிப் பாலகனே குளிகைபதுகொண்டேன்பாரே ௧௭௭

கொண்டேனேகுளிகையதுயானுங்கொண்டு கூரானயானைமலைக்
காண்பதற்கு- அண்டமுடனாகாயந்தான்பறந்து, அழகானயானைமலை
மீதிற்சென்றேன்- கண்டேனேவுச்சிதனில்மண்டபந்தான் காலானகா
லமதுமூன்றுயோகம-உண்டானசித்தரப்பாயங்கேயுண்டு வுத்தமனே
கல்லடியாஞ்சித்தராமே ௧௭௮

கல்லானசித்தரப்பாயனேகமாண்பர் காசினியிலிருந்துவந்துமலை
மேற்செல்றோம- வல்லானயானைமலையுச்சிதன்னில் வளமுடனே ரூபு

க்காய்மண்டபத்தில் - கொல்லமெனுஞ்சிஷர்களாமாயிரம்பேர் கூட்ட
மிட்டுவங்கிருக்கக்கண்டேன்யானும - வெல்லவேபோகாதுசித்தர்தம
மை வேகமுடன்தான்சபிப்பாருறுதியாமே ௧௭௯

உறுதியாமோனநிலைக்கொண்டசித்து மூதுலகில்பார்ததவர்களா
ருமில்லை. மறுமமாம்வதிதமூதல்மகிமைகோடி. வண்மையுள்ளசித்தர்
களுமககேயுண்டு - நறுமணங்கள்கொண்டதொருசித்துதமமை நவில
வேமுடியாதுமலைமேலப்பா- குறுமுனியாமகஸ்தியர்க்குநேரதானகொ
ற்றவர்களங்கிருக்கக்கண்டேன்தானே ௧௮௦

தும்புருமகாரிடியாசிரமம்

தானான ஆயுக்கால்மண்டபத்தில் தகமையுள்ளகல்லடியாஞ்சித்த
ரப்பா- கோனனமண்டபத்திலசமாதியுண்டு கோமானும்தும்புருரிடி
யார்தாமும்- பானனபளிங்குமாமண்டபந்தான் பாங்கானமலைமீதில்யி
ருக்தும்பாரு- தேனானரிடிமுனிவர்சித்தர்தாமும் தேற்றமுடன்கொ
லுக்கூடம்காப்பாரதாமே ௧௮௧

கொலுவானமண்டபத்திலடியேன்றானும் கொப்பெனவேகுளி
கைகொண்டுயிறங்கியல்லோ- வலுவானகல்லடியாஞ் சித்தர்முன்னே
வளப்பமுடன்குளிகைவிட்டுயிறங்கிநின்றேன்- மெலுவானவார்த்தை
யதுமிகவும்பேச மேன்மையுடனென்மனதிலெண்ணங்கொண்டு- அ
லுவானசமாதிபக்கல்நின்றேனயானும் அங்ஙனவேகண்டாரேமுனி
வர்தாமே ௧௮௨

முனியானசித்தர்முனிரிடிகள்தாமும் மூர்க்கமுடனென்மீதிற்சி
னமுங்கொண்டு- தொனியானவார்த்தையதுசீறலாகி தோற்றமுடனெ
ந்தனையுஞ்சபிக்கவென்று- பனிபோன்றமலைமீதில்யிருந்துமல்லோபா
ங்குடனேபுறப்பட்டாராயிரம்பேர் - கனிவுடனேயவர்களையான்கண்
டபோது கால்விழுந்துசாஷ்டாங்கஞ்செய்திட்டேனே ௧௮௩

இட்டேனேசித்தர்முனி ரிடிகளுக்கு யெழிலுடனேயடிவணங்கி
தெண்டனிட்டேன் - கிட்டினின்றயெந்தன்மேல்கிருபைவைத்து கீர்த்
தியுடன்யாரப்பாவென்றுகேட்க- திட்டமுடன்காலாங்கிநாதர்தம்மை
திறமுடனேமனந்தனிலே நினைந்துகொண்டு - வட்டமுடன்குளிகை
காணவேயின்னமொருபுதுமைசொல்வேன் காசினியிலநாதக்கு ள்கூறவில்லை - தோணவேஜாதியென்றமுனிவர்தானுந் துப்புரவாய் தானுதித்தவண்மையாராய-பூணவேபுரட்டாசிமாதமப்பா புகழானபூ ரட்டாதியென்னலாகும்-மாணவேநாலாங்கால்தன்னிலப்பா மகத்தான சோதிமுனியுதித்தவாறே சுறுயந

வாரானபிரம்மரிடிமைந்தனப்பா மகத்தானசூரியகுலந்தனிலுதி த்த - தூரானபெண்மாதுமறவாஜாதி தகளானசோதிமாமுனிதானு கும்-வேரானமலைகுகைகள்குண்ணுதேடி விளக்கமறகல்லதனைவாரா யந்தேதான் - கூருனவயிரக்கல்கண்டெடுத்த கொற்றவனூர்சோதிமா முனிதானுச்சே சுறுயச

ஆச்சப்பாயின்னமொரு மார்மஞ்சொல்வேன் வப்பனைபுலிப்பா ணிவண்ணவேகேள்-மூச்சடங்கிசென்றதொரு டமகார்தனுவமுனியு டவேதானபிறந்தவண்மைகேளிர்-மாச்சலென்றமார்கழியாம்திங்களப் பாமகத்தானஉத்திரட்டாதிதானும்- வீச்சுடனேநாலாங்காலென்னலா கும்விளவானநாள்தனிலே பிறந்தார்தாமே சுறுயரு

பிறந்தாரேடமகார்யாரென்றுக்கால் பேரானசுந்தரனார்மைந்த னப்பா-இறந்ததொருசுக்கிரற்குமைந்தனப்பா பெழிலானபின்னேயது ரெண்டாமபிள்ளை-துறந்ததொருஞானியப்பா சைவஞானிசுத்தபுள் ளவீராதிவீரனப்பா-மறந்ததொருமார்க்கமெல்லாம் யாந்தீசத்தால் மகத்தானபுத்தியினுலறிந்தசித்தே சுறுயசு

சித்தானையின்னமொரு மகிமைசொல்வேன் சீர்பாலாபுண்ணிய்
னேபுகலக்கேளீா-முத்தானஞானியிலு மூதிர்ந்தஞானி மூனையான
சுந்தரனார்சித்துதாமும்-புக்தியுள்ளபூபாலன் தான்பிறந்தபுசமானமா
தமதுபேதெனருக்கால்-சுத்தமுள்ள ஆவணியாந்திங்களப்பாசுடரான
சுந்தரனார்பிறந்தார்தானே ௯௨௰

தானனரேவதியாமூன்றுங்காலாம்தண்மையுடன்பிறந்ததொரு
நாளுமாச்சு- சோனனசுந்தரனாருளவுகேட்டால் கொற்றவனேசிக்கிந்
தாமலையினுச்சி-தேனனநவகண்டரிடியார்தம்மின்சிறப்பாகயவர்தமக்
குபோனதும் - மானனமகத்துவகானுள்ளசித்து மண்டலத்தில்சிவ
ஞானசித்துபாரே ௯௨௧

பாரேதானின்னமொருவிதஞ்சொல்வேன்பாலகனேசிறப்பாலா
பகாக்கேளும்-ஆரோதான்சொன்னார்களிதிகாசங்கள் வப்பனேயார்
தானுஞ்சொல்லவில்லை-நேரேதான்யின்னமொரு மார்க்கஞ்சொல்வே
ன்நெடிதானவரரிடியாமென்றசித்து-சீரேதானவர்பிறந்த வண்ணமப்
பாசிறப்புடையசித்திரையாந் திங்கள்தானே ௯௨௨

சித்திரையாமசுவனிதான் மூன்றுங்காலாம் சிறப்பானநாள்தனி
லேபிறந்தாரென்றும் - பத்தியுடனவருடையமார்க்கஞ்சொல்வேன்
பண்பானதிரணக்கியமுனிவர்போன்-முத்திவழிசெல்லுகின்ற சித்து
வாகும் மூனையானவரரிடியாமென் றும்பேரு-சத்திடங்கள்தவாத விசு
வயோகிதாரணியில்வரரிடியாமென்னசமே ௯௨௩

என்னவேயின்னமொரு வயணஞ்சொல்வேன் யெழிலானமைந்
தனதுபுத்திவானே-துன்னவேவால்மீகர் பிறந்தநேர்மை தப்புரவாய
வருடையவளமைசொல்வேன்- மன்னவனுக்கேற்பானவால்மீகர்தா
னும் மகத்தானலோகமதில்பெரியசித்து - சொன்னதொருபுரட்டாசி
திங்களப்பா சொற்பெரியவனுஷமதி நாலாங்காலே ௯௨௪

காலானவால்மீகர் வேடனப்பாகன்னியாள்பெற்றதொருகுறத்தி
மைந்தன்-கோலானமராமராவுபதேசங்கள் கொற்றவனார்பெற்றதொ
ருசித்துமாச்சு-பாலானமாண்பருக்கு ஞானகாண்டமபகுத்தறியவால்
மீகர் சரிதையப்பா-மாலானவவர்பெருமை யாருக்குண்டு மகத்தான
ரிடிகளுக் கில்லைதானே ௯௨௫

இல்லையேயின்னமொருசரிதைசொல்வேன் யெழிலானயெந்தனது புத்திமாரா-தொல்லுலகிலகீர்த்திபெற்ற மாதுசித்து துப்புராளூர் வசியாளென்னுமாது-எல்லவருந்தான் புகழவைகாசிதன்னில் யெழிலானபூரமென்ற நாலாங்காலம் - வல்லமையாய்வந்துதித்த தேவமாதுவையசத்திலூர்வசியா ளென்றமாதே சுஉசு

மாகானவூர்வசியாள்மார்க்கந்தானும் மகத்தானகானகததரிடதானப்பா-தீதானபிரிஙகிமகாரிடியின் பேததிதீர்க்கமுடன்கானீனன்பெற்றமாது- ஆதானசாத்திரங்கள்சித்த நூலில அறிவுடையவூர்வசியான் மாதுதானும்-கோதானந்தான்குடுத்துபிறந்தமர் துருவலயத திலூர்வசியாஞ்சித்துகாணே சுஉஎ

காணவேயின்னமொரு கவிதைசொல்வேன்கண்ணுனகண் மணியேகழாக்கேண்மோ-பூணவேபுலிப்பாணிமைந்தாபாரு புகழானவெந்தனிருமணியேகேளும்- வேணவேயின்னம்வெருவனேகசித்துவேடமதுபூண்டுமல்லோ யிருந்தாரப்பா-மாணமருங்கல்வியுள்ளசித்துதன்னில் மகத்தானசித்துகளைக கூறலாச்சே சுஉஅ

கூறவென்றால்கமலமுனிபிறந்தநேர்மைகூறுவேன்வைகாசிதிங்களப்பா-மாறலுடன்பூசமதுரெண்டாங்காலம் மகத்தானகமலமுனிபிறந்தநாள்தான்-சீறலதுவாராதசேவசித்து தெளிவுடையவையகத்துக்குகங்கசித்து- ஆறவேயொருவரால்கூறப்போமோவப்பனேஞானவொளி சித்துபாரே சுஉகூ

பாரேதான்சித்தொளியின்மகிமைபாரு பாங்கானகோலாங்கிபாட்டன்வர்க்கம்-நேரேதான்வம்முஷத்திற்பிறந்தசித்து செடிகானசின்மயானந்தசித்து-வேரேதானின்னமொருமார்க்கஞ்சொல்வேன் வெளியரங்கமானதொரு மாராகேண்மோ-சீரேதான் அறிவானனந்தசித்தர் தீர்க்கமுடன்பிறந்ததொரு நேர்மைகாணே சுங௦

காணவேமாசியென்ற திங்களப்பாகருவானரேவதியாமூன்றும்மாதம்-பூணவேயவர்பிறந்தநாளதாகும் புகழானமார்க்கமது யேசென்றுக்கால்- வேணதொருடமரகனூர்மைநதனப்பா வேதாந்தஅறிவானனந்தாகும்-தோணவேபிரதிலோமமென்றேசொல்வார் தொல்லுலகிலிவர்போலுஞ் சித்துமுண்டே சுஙக

உண்டானயின்னமொரு மர்மஞ்சொல்வேன்வுத்தமனேநாதாந்தமணியேகேண்மோ-தொண்டனெனறுஞ்சித்துமுனி ரிடிகளுக்கு தோ

[illegible]ருய போகர்சத்தகாண்டம்-எ௲

றமுன்னைவகைப்பேயர் சித்துவாகும்- கண்டவர்கள்விடுகார்கள் சித்து
தமனைமகாசினியிலுபதேசம்பெற்றசித்து-அண்டமெனும்வையகத்தில்
[illegible]நேர்மை வப்பனேயானுனாய்பேன் சொல்வேன்பாரே ௯௱௨

ஆச்சப்பா கன்னியவள்பெற்றபிள்ளை யவதாரபுருஷரென்றேசெ
[illegible]நம் மூச்சடங்கிவெகுகால மிருந்தசித்து முனையானவகைப்பேய
[illegible]யாகும்-மாச்சலுடனின்னமெ ரு மார்க்கங் கேகும்மகத்தான குத
[illegible]யென்றசித்து தாமுமெ ஏச்சலதுவாராமல் தானபிறந்தவெழில
[illegible]னுடமார்க்கங்கேளே ௯௱௩

கேளேதானுடியாந்திங்களப்பா கெவனமுடன் விசாகமென்றமூன்
றுவகாலில்-நாளப்பா தான்பிறந்த குதம்பைசித்துநலமுடனே திரிகால
பூசைசெய்து-வேளப்பாயாகமது முடித்துமல்லோ வேள்வியுடன்பா
லூர்கமுண்டசித்து-ஆளப்பாபெரியோர்கள்நேசம்பெற்றுவப்பனே
னப்பொருந்தி லிருந்தசித்தே ௯௱௪

இத்துனைமாதவயாங்குலத்துஇத்த சிறப்பானகுதம்பையெனுமி
இத்துவப்பா-முத்தானபாலமுர்த முண்டுமல்லோ மூதுலகைத்தாண்ப
பூத்தசித்துவாகும்-பத்தியுடன்வையகத்தில் நெடுங்காலந்தான் பாண்
மையுடன்வீற்றிருந்தபத்மசித்து- சுத்தியுள்ளதிருவாத்தி மரத்தின்
கீழ்சுந்தரமபோலிருந்தவொரு மாயாசித்தே ௯௱௫

மாயானசித்தல்லோமகிமையாரு மகத்தானபுலிப்பாணிமைந்தா
கேளு-தாயானபாம்பாட்டிசித்தரப்பா தாரணியில்நெடுங்காலமிருந்த
சித்து-காயானமுப்பழமும் பாலுங்கொண்டு கலியுகத்தில் நெடுங்காலமா
யிருந்தசித்து-சேயானபாம்பாட்டி இந்ததாரும்சிருலகில் பிறந்தவோ
ரு சித்துதானே ௯௱௬

தானனபாம்பாட்டி பிறந்தமாதம் தாக்கானகார்த்திகையாந்திங்க
ளப்பா-கோனனமிருகசீரிடந்தானுகும் கொறறவனேமூன்றுங்காலே
ன்னலாகும் - கேளுனவவர்பிறந்த நாள்தானப்பா தேசத்திலேசித்தர்
[illegible]கண்டதுண்டோ-மானனபதினெண்பேர் நூலைப்பார்த்துமார்க்க
முடன்றுணிந்து செல்லிட்டேனே ௯௱௭

செல்லவேயென்றான் பாம்பாட்டிமார்மைந்தானும் தோற்றமுடன்ஜோ
தியென்றவம் மூலநாள்- புல்லவேமசானகுறிசேர்க்கையப்பாபுகழ்பெரி
யதுநடனுர்பெறறபிள்ளை-வெல்லவேமாலைசுற்றித்தான்பிறந்தவெதாங்
[illegible]பாம்பாட்டியென்னலாகு-நல்லவிதாருசித்துமுனி வுபதேசங்கள்
[illegible]டனேபெற்றயாம்பாட்டியாமே ௯௱௮

பாம்பானபின்னமொருமார்க்கங்கேளு பண்புள்ளபுலிப்பாணி
நேசபாசா- தீப்பிலாகாலசண்டரிடியார்தாமும் திர்க்கமுடன்பிறந்த
தொருதின்னம்பாரு-காம்புகழுஞ்சித்திரையாங்திங்களப்பா சாக்கா
ணவுத்திரட்டாதிரண்டாம்பாதம்- மாம்புலமாய்வட்டாரந்தன்னிலப்பா
மகத்தானசிவவேடம் பூண்டசித்தே ௯௫௯

பூண்டதொருகாலசண்டரிடியார்தாமும் புகழானபோகண்டரு
ளிதான்சித்து - ஆண்டகையார்சித்துமுனிமைந்தனுக்கு வன்பான
பேரனதுபேரனப்பா-ஆண்டகையாங்காலசண்டசித்துவாகும் தாரணி
பதிசிவயோகசித்துவாகும்- வேண்டியதோர்கருமானமறிந்தசித்துவே
தாந்தகாலகண்டரென்னலாமே ௯௬௰

என்னவேயின்னமொருமார்க்கஞ்சொல்வேன் பெழிலானபுலிப்
பாணிகண்ணேகேளுர் -பன்னவேவடிவேலர்தாம்பிறந்த பதாப்புயத்
தைச்சொல்லுகிறேன்பண்பாய்க்கேளும்- தன்னவேமூன்றுயுகஞ்சட
ந்தவேலர் துப்புரவாய்ப்பிறந்திலொரு நேர்மையப்பா-சொன்னபடியா
வணியாந்திங்களப்பாசொல்லுகிறேன்முசுற்பூசங்கால்தானென்றே

ஒன்றானகால்தனிலேபிறந்தநாளாம் வத்தமனோர்வடிவேலர்பிறந்
தாரென்றும்-குன்றானமலைபோலேசாத்திரங்கள்கூறினார்குவலயத்தி
ல்சொல்லொண்ணாது-தென்றிசையிலகஸ்தியருக் குபதேசங்களை செ
ய்ததொருவடிவேலர்சித்துமாகும்-பன்றிபெருச்சாளியின்மேல் வாரி
யேகும் பண்பானவிநாயகர்க்குசம்பிராமே ௯௬௨

தம்பியென்றுசாத்திரங்கள் சொல்லலாச்சு சுகசோமவடிவேலர்
சித்துதன்னை -வெம்பியதோர்மாண்பருக்குரோகந்தீர்க்கும்வெட்டவெ
ளிவடிவேலரென்றேசொல்வார் கும்பியேமனங்கொதித்து வந்தியோர்
க்குகோடானகோடிபொருளீவாரப்பா- தம்பியேயெந்தனுக்கு குருவு
மாகும் தாக்கானவடிவேலர் தன்மைபாரே ௯௬௩

பாரேதானின்னமொரு பசுமூஞ்சொல்வேன் பாங்கானபுலிப்பா
ணிமகனேபாரு-சீரானயூகிமுனி பிறந்தவண்ணம்சிறப்புடனேசெ
ல்லுகிறேன்திறமைமெத்த- நேரானவைகாசியாந்திங்களப்பாநெடிதான
பூசமதுமூன்றுக்காலார்-கூரானநாளதனிற் பிறந்தசித்து குறிப்பான
யூகியென்றமுனிவர்தானே ௯௬௪

தானானபூகிமுனிமார்க்கமென்றால் தகமையுள்ளதன்வந்திரிக்கு
ற்றபோன்-கோனானசிங்கவிதுல்க்குஇத கொம்பனையாள்கானீனன்
பெற்றபிள்ளை-தேனான திரவிடத்திற்சொன்னாற்போல தீர்ககமுடன்
வடமொழியிற்சொல்லலாச்சு-மானானமாண்பர்களுக்குபயோகத்தால்
மாட்சியுடன்சொன்னதொரு நீதியாமே ௯௪௫

நீதியாமின்னமொருமர்மஞ்சொல்வேன் நிஷகளங்கமானபுலிப்
பாணியப்பா-நீதிலா ஜெமதக்னிமுனிவர்தானும் சிறப்புடனேபிறந்த
தொருநேர்மைசொல்வேன்-கோதிலாதற்பசிமாதமப்பா குறிப்பான
புனர்பூசமென்றநகால்தான்-பாதிமதிசடையணிந்த தமபிரான்போல்
பாரினிலேயவதரித்த சித்துதாமே ௯௪௬

சித்தானஜெமதக்னிமுனிவர்தானும்சிறப்பானபரத்துவமாமரிடி
யினபேர்ன்-முத்தானவனுலோமன் பெறறபிள்ளைமூதுலகில்கீர்த்தியு
டனிருந்தசித்து-சுத்தானபூகியென்றசாதிரந்தான் சாங்கமுடன்பன்
னீராயிரந்தானாகும்-சுத்தமுள்ளரிஷிதேவர் சொன்னதில்லை சுந்தரானு
ஜிதிகாசங் கூறினாரே ௯௪௭

கூறினாரின்னமொருகுறிப்பைகேளு கூரானபுலிப்பாணிமைந்
தாபாரு மீறியதோர்திரணக்கிமுனிவரப்பா மிக்கானபிறந்ததொரு
வண்மைசொல்வேன்- ஆறுபுடைதிங்களாம்புரட்டாசியப்பாவப்பனே
திருவாதிரைரெண்டாம்பாதம் வீறுபுகழ்சாத்திரத்தைமனதிலுன்னி
விருப்பமுடனபாடிவைத்தார் நூலிதாமே ௯௪௮

நூலானமார்க்கமதுயேதென்றுக்காம் நுணுக்கமுடன்ஜெமதக்
னிபெற்றபாலன்-கோலானகுறத்தியுடசற்புத்திரந்தான் குறிப்பானபி
ரதிலோமமென்னலாகும்-பாலானமார்க்கமதுயேதென்றுக்கால் பட்ச
முடனசொல்லுகிறேன் பண்பாய்கேளு-காலானபுலிப்பாணி மைந்
தாகேளு கசடற்றபுத்திரனே புகல்வேன்பாரே ௯௪௯

புகலுவேன்சண்டீசர்பிறந்தநேர்மைபுகழானவைகாசிமாதமாகு
ம்-திகலுவேன்பூரமென்றமூன்றுகால்தான்நீதியுடன்றான்பிறந்தநா
ளேயாகும்-சகலமுமறிந்தவொரு சித்துதாமுஞ் சதாகாலம்வையகத்தி
லிருந்தசித்து-அகலவேபுலஸ்தியருக் குமறபோன் அன்பானவேட
ருடஜாதிதானே ௯௫௦

சாதியங்கானீனன்பெற்றபிள்ளைசாங்கமுடனெடுங்காலமிருந்த
சித்து-சோதிமணிசுந்தரம்போல் குகைதானுள்ளே சுட்டெறிக்குமதி
லாப்போலேயிருக்குஞ்சித்து-நீதிமனுமுறைதவறாமிருந்தசித்து நீடா
ழியுலகப்பிரண்டசித்து-திலாசங்கமென்ற புலவருக்கு தீர்க்கமுட
ன்வுபதேசஞ்செய்தசித்தே ௯௫௧

செய்யவேயின்னமொருமார்க்கம்பாரு செம்பவளகனிவாயா துய்
யபாலா-உய்யவேதிருமூலரென்றசித்துவுலகத்தில்தான்பிறந்த சேதி
வண்ணம்-பையவேபுரட்டாசிதிங்களப்பா பாலகனார்வந்துதித்த மாத
மாகும் வெய்யவேயவிட்டமென்ற மூன்றாங்கால்தான் மேதினியில்
வந்துதித்த சித்துமாச்சே ௯௫௨

ஆச்சப்பா திருமூலவர்க்கத்தோர்கள் அவனியிலேசொலவதற்கு
நாவுமில்லை-மூச்சடங்கிப்போனதொரு பாண்டியர்கள்தாமும் மூனே
யானசங்கமதில்வாதுசெய்தோன் - பாச்சலுடன்சோனுக்குப்பெற்ற
பாலன்பாரினிலேயனுலோமனென்னலாகும்-வீச்சலுடனிதிகாசபுரா
ணமெல்லாம் விருப்பமுடன்பாடிவைத்த சித்துகாணே ௯௫௩

போகர்தட்சணபதிமாண்பரின்குறிப்பை

சினபதியாருக்குரைத்தல்

காணவேயின்னமொருகருமானங்கேள்கருவானபுலிப்பாணிமை
ந்தாபாரு-தோணவேயெழுகடலுஞ்சுற்றிவந்தேன் தோறாமல்தட்சண
மாண்பாதம்மை-பூணவேநெடுங்காலமிருந்துமல்லோபொங்கமுடன
திசயங்கள்மிகவுங்கண்டேன்-வேணதொருதேவாதிதேவரல்லோவிரு
ப்பமுடனனேகவித கோயிலுண்டே ௯௫௪

உண்டானவையகத்துமாண்பர்தமமில் வுத்தமனேசன்னதங்கள்
மெத்தவுண்டு-கண்டாலுமமாண்பர்களைப்பார்த்தபோதுகருவானதெ
யவகளுஞ்சாடத்தால் - செண்டானமுறைமைகொண்டு வுறவுபேசி
செப்பமுடனருகிருந்துசிலதுமாண்பர் - திண்மையுடன்குறிசொல்ல
வந்தோனுக்கு தீர்க்கமுடன்சானுவைப்பார் வதிந்தானே ௯௫௫

அதிதமாஞ்சமூசாரி செய்யுபவித்தை வண்போவாயிரமபேர்
குறிகேட்டாலும்-கதிதமுடன்தேவதைகள் வசியத்தாலேகதிரானசுக
சேதிசொல்வோன்போல மதிபோன்றதேவதா கிருபையாலும் மகத்
தானவுண்மைமொழி கூறினாற்போல்-சதியுடனேசன்னதங்கள் மிகவு
மாகி சட்டமுடன்கூறலுறரூர் மாண்பார்க்காமே ௯௫௬

மாண்பானகுறிசொல்லும் மார்க்கங்களும் மகத்தானபத்துபே
ரெட்டுபேர்கள்- ஆண்பிள்ளைத்தன்னோடும் பாலரோடும் வழகானமா
தர்களின் கூட்டத்தோடு-வீண்பேச்சிவார்த்தைகளு மிகவாய்ப்பே
சிவிருப்பமுடன்பாதோன்றுந்தெரியார்போலும் - நாண்போடுதாது
ரைக்கும் மாண்பர்தாமும் நலமானமாந்தருடன் பேசுவாரே ௯௫௭

பேசியேமாண்பரோடுவுறவுபேசி பேரானகுறிகேட்க வந்தோர்
தம்மை-காசினியிற்வந்ததொருமாண்பர்நாங்கள் கருவாகக்குறிசொல்
லுமாண்டிதன்னை-பாசிபடாகுறியுரைப்பா ரென்றுசொல்லி பட்சமு
டன்வெகுதூரங்கேட்டுவந்தோம்-மாசியென்னும்மதிதனிலே குறிகள்
கேட்டோம் மகத்தானகுறியதுவுஞ் சொல்லலாச்சே ௯௫௮

சொல்லவென்றால்குறியதுவு மென்னசொல்வோம் சோடசத்தி
லொன்றேனும்பொய்யேயில்லை-வெல்லவேகுறிகேட்டோர் மெய்யை
ப்போலேமேன்மையுடன் கூடிவரு மாண்பரோடு-புல்லவேவுறவுகொ
ண்டு நயங்கள்பேசி புகழானயெதிரியின்றன் வார்த்தைதன்னை-மெல்
லவேயவருரைக்கும் வார்த்தைதன்னை மேன்மையுடனுபாயத்தா லறி
வார்தானே ௯௫௯

தானதையெதிர்மாண்பர்கூறும்வார்த்தைதன்மையுடனுபாயமதா
ய்த்தானறிந்து-கோனான குறியுரைக்குஞ் சங்கன்றானும் கொப்பென
வேயடையாளருபத்தோடும்- மானதையெதிரியின்றன் வார்த்தையெல்
லாம் மார்க்கமுடன்றானுரைத்து ஆளைக்காட்டி - பானதுபதிமேடை
மறைந்துகொண்டு பாங்குடனேகுறிசொல்வோர் பின்னிற்பாரே

நின்றுமேதாதுரைத்து ஆள்காணாமல் நேர்மையுடனேர்பக்கம்
மறைவாய்நின்று-சென்றதொருமாண்பருக்கு குறியுஞ்சொல்லசெம்
மலுடன்ஜங்கமனும்வேடம்பூண்டு- நன்னயமாய்க்கிருஷ்ணமுடிதானு
ம்பூண்டு நலமானவுடுக்கைதனைக்கையிலேந்தி பன்னவேபலபேர்கள்
கூட்டத்தோடும் பாரினிலேபலகுறிகள் சொல்வான்பாரே ௯௬௧

சொல்வானேயவரவர்கள் வார்த்தைகொண்டும்துப்புரவாயமுன்
சொன்ன தாதைக்கொண்டும்-புல்லவேகுறிமேடை தனிலிருந்து பக
ழானயாவேசம்வந்தாற்போல-மெல்லவேவாய்திறந்து பொன்னாங்கா
ணைமேன்மையுடன்மென்றுதின்று உமிநீர்தன்னை-நல்லதொருமதுவு
ண்ட நாற்றம்போல் நயமுடனேவமனமது செய்வான்பாரே ௯௬௨

செய்யவேமதுபானங் கொண்டுமல்லோ செயலானதன்னினைவு
தனக்குமாறி-பையவேமயன்மீதில் வாடைகொண்டு பதறுதேதேகம

துகிலைகொள்ளாது- உய்யவேயார்வந்து யெதுகேட்டாலும் உத்தம
னேசித்தடியேன்சொல்வேன்பாரு- துய்யபுகழ்பாண்டியன்போலவுதா
ரம்பேசி துப்புரவாய்க்குறிசொல்லிவான் கேட்பான்பாரே ௬௯௩

பாரேதான்முன்சொன்ன வடையாளம்போல் பாக்குடனே மா
ண்பர்களையுருட்டிப்பார்த்து-நேரேதானீசானிய மூலையப்பாநெருக்க
முடன்நடுப்பந்தலதனிலிருக்க-சீரேதாங்கட்டமுகிமாதுதன்னை சிறப்
பானசித்தடியைக்கூப்பிடென்று- ஆரோதானமம்மா குறைகளொன்
று ஆர்க்கமுடிபோகாது யென்பான்பாரே ௬௯௪

என்னவேயுந்தனுக்குக் குறைகள்மெத்த ஏர்க்கமுடிபோகாது
ரோகம்மீறி-யன்னவேயுன்புருஷனுன்னைவிட்டு பாரினிலேவனசாரி
சென்றானம்மா-தின்னவேமைந்தனுக்குக் கண்ணும்போச்சு துப்புர
வாய்ப்பாவாடைராயனுக்கு-மின்னவேகங்கணமுங் கட்டியல்லோமிக்
கானபொங்கல்களு மிட்டீர்காணே ௬௯௫

காணவேயிருபத்தோர்வாரமம்மா கட்டமுகிகாணிக்கைகொண்டு
சென்று-தோணவேமுதற்பூசை யுன்னுதென்று துப்புறவாய்சொல்
லினதும்வுண்டோகூறும்-நாணவேகுறிமுகத்தில் வந்துயென்னைநன்
மையோதுன்மையோ வென்றுசொல்லி - பாணம்போல்மனதுருகி
மனதுவந்து பாலகனேகேட்கவந்தீ ருண்மைதானே ௬௯௬

உண்மையாமென்குறிகள்பொய்யாதம்மா வுத்தமியோநாதாக்கள்
வணங்குவார்கள் - வண்மையாங்கைகண்டகுறிதானென்று வளப்ப
முடன்நிதிபெணக்குக்குடுப்பார்பாரு - திண்மையாம்பாதகாணிக்கை
யோடும்தீர்க்கமுடன்புஷபதாம்பூலத்தோடும்- தண்மையுடன்வெகு
வுபசாரத்தோடும் தட்டாமலெந்தனுக்குத் தருவார்தாமே ௬௯௭

தட்டாமல்தருவார்தானென்றுசொல்லி தர்க்கமிட்டுசித்தடிக்கு
வாதுகூறி- கொட்டாவிகொண்டல்லோமலையேரியப்பா கொப்பென
வேயான்பேர்சீருமென்றுசொல்லி-சட்டமுடன்கற்பூரபழத்தைவாங்
கசாங்கமுடன்வாயதனிலேகொண்டுமல்லோ-வட்டபுரியம்மனதுபாத
ம்போறேன் வளமுடனேயெல்லோரும் பணிவீர்தாமே ௬௯௮

பணியவென்றுகுறிசொல்வோன் கூறும்போது பண்பானமுழு
மூடர்கமுதைமாண்பர்-அணியணியாய்க்குறிகேட்டு மெய்மெய்யென்றெண
ணியவன்பாதந்தன்னில்விழுஞ்சண்டிமாண்பர் - மணியானதெய்வம
துவொன்றிருக்க மார்க்கமுடன்மதுகொள்ளும்மாண்பர்தன்னை-கணி
தமுடன்குறிகண்டு குணமுங்கண்டு காசினியில்வந்துதித்த தெய்வந் ௬௯௯
தானே

தானமது கொள்ளும் மதுரைவீரன் தாரணியில்குறிசொல்
லுந்தெய்வமென்றுங்-கோனான மூழமடையர் பேயரப்பா குவலயத்
தில்கல்விகற்றும்பேபனுகி-மானானபஞ்சறிவுந்தானறிந்து மகத்தான
சாத்திரங்கள் படித்துக்கேட்டு-பானதக்குறிசொல்வோர்வலையிற்சிக்கி
பண்புடனேமயங்குகிறார் மடையர்தாமே ௯௭௰
மடையானமாண்பர்களும் பலநூல்கற்று மகத்தானமாயாவின்
வலைபிற்சிக்கி-இடைநசிவில்லைவையகத்து வாழ்க்கைதன்னைவெழிலாகந்
தன்மனதில்பாராமற்றான்-கடைபோன்றஞானவழி கோடிசித்தர் கரு
வானசாத்திரங்களசெய்திருக்க - இடமுறவேசற்றேனு மனதுறாமல்
தீர்க்கமுடன்பலநூலும் பார்த்தார்தானே ௯௭௧

சத்தகன்னி குறிகேட்கல்

தானானபின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் தகமையுள்ளபுலிப்
பாணிமைந்தாகேளு-கோனானவெனதையர் காலாங்கிநாதர் கொற்ற
வனார்தாமிருக்குங்காலந்தனனில் - பானவையகத்து மாண்பரெல்
லாம் பதிகெட்டுமதிகெட்டு குறிகள்கேட்டு - தேனானமனோன்மணி
யைமறந்துமல்லோ தீர்க்கமுடன்மூடவழி சென்றார்பாரே ௯௭௨
பாரேதான்குறியுரைக்குஞ் ஜங்கன்றானும் பாங்கானபதிமேடை
தனிலிருந்து-நேரேதான்மாண்பர்களின் கூட்டந்தன்னைநோமையுட
ன்தானோக்கிப்பார்த்துமேதான்-சீரேதான்சத்தகன்னி வந்தேனப்பா
சிறப்புடனேசன்னதங்கள் மிகவுண்டாச்சு-கூரேதான்வாடைகொண்
டுவீசுதையா கொற்றவரேகுறிகேட்டால் கூறுவேனே ௯௭௩
கூறுவேன்விளையாடிசன்னதங்கள் கொப்பெனவேஓங்காரசத்த
த்தோடு-மாறுபடாத்திருமேனி முந்தையப்பா மகத்தானபச்சைசிடி
வனத்திற்றானும் - ஆறுண்டுகுளமுண்டுமடுவுமுண்டு அங்கிருக்கும்
வனத்துகன்னியானுமல்லோ-வீறுடனேவெகுநாளா யுந்தன்வாசல்
விருப்பமுடன்விளையாட வந்தேன்பாரே ௯௭௪
வந்தேனென்றுசொல்லுகையில் ஜங்கன்றானும்வகைபறியமுழு
மூடர்மாண்பர்தம்மில்-சிந்தனையாயதிலொருவர் தானெழுந்துசிறப்பு
டனேகுறிகேட்கவந்துநின்று-பந்துமுலைஸ்தனத்தாளே பச்சைகன்
னிபட்சமுடனெந்தனுக்குக் குறிகள்கூறும்- தந்தையார்வைத்ததோர்
நிதிகள்கோடி தாரணியில்மெத்தவுண்டு சொல்லொண்ணாதே ௯௭௫
உண்டானதிரவியங்கள் மெத்தவுண்டு ஓகோகோநாதாக்கள்குடி
த்தபாக்கியம் தனைமையுடனேநவதானியதலங்கள்யாவும்தகமையுடன்

தருமமது செய்தேன்யானும் வண்மையுடன்யாகமது செய்துமல்லோ
முக்கதானகாணிக்கையாவுந்தந்தேன் -உண்மையாய்க்கொடுத்த நிதிகோ
டியுண்டு வுத்தமனேமைந்தனிலை யென்றார்தாமே ௬௭௬
என்றுமேமாண்பர்களி லொருவனப்பா யெழிலானஜங்கமனைக்
கண்டுமல்லோ, குன்றுனமலைநாடுகுகைகள் தன்னில கோமபனேயே
வந்ததொருகன்னிதானே, சென்றுமேதமபதிக்கு வந்தேனம்மா செம்
மலுடன்யெந்தனுக்கு மைந்தன்வேண்டும், இன்றுமேகுறியுரைத்து
யெந்தனுக்கு யெழிலுடனேயேசவென்று தொழுதிட்டாரே ௬௭௭
தொழுதாரேசமுசாரி யானமாண்பன் துப்புரவாய்பாதகாணிக்
கையிட்டு, அழுதாரேதேவியுடன் றானுமல்லோ அங்ஙனமேயிருபே
ருஞ்சாஷ்டாங்கிட்டு, முழுவதிலுமெங்களைநீர் பாதுகாத்து மொய்கு
ழலையெங்களுக்கு மைந்தனீய்ந்து, பழுவுடனேகற்பூர தீபாராதி
மகிழ்ச்சியுடன்தருவேனென்று பணிந்திட்டாரே ௬௭௮
பணியவே சத்தகன்னிஜங்கன்றானும் பட்சமுடன்மனதுவந்து
மனங்களித்து, மணியானமைந்தனல்லோ யுனக்குண்டாகும் மகப்பே
றுமெத்தவுண்டுயுந்தமக்கு கணிதமுடன்குறியுரைத்தேன்மைந்தாபா
லா கட்டழகியுன்றேவியின்றுமட்டும், துணிவுடனேயிருபத்தோர்
வாரமப்பா துப்புரவாய்ப்பூசைமுகம்வரச்சொல்வீரே ௬௭௯
சொல்லவேசத்தகன்னிஜங்கன்றானும் சுத்தமுடன்சமுசாரிமாண்
பன்கேட்டு, வெல்லவேதன்தேவி தனையழைத்துவிருப்பமுடனின்று
முதல்நீயுமேதான், புல்லவேசத்தகன்னி சங்கன்றானும் புகழாகவாக்
குரைத்த தன்மைபோலே, நல்லதோர்யிருபத்தோர் வாரமட்டும் நலமு
முடனேபதிமுகத்தில செல்வீர்தாமே ௬௮௰
தாமானசமுசாரிமாண்பன்தேவிசட்டமுடன்நாயகன்சொற்கட
வாமற்றான், பேமானிதானுரைத்தவார்த்தைதனைபெருமையுடனே
சம்மையயென்றெண்ணி, சாபாலியமாவதொரு பெண்பால்தானும்
சட்டமுடன்ஜங்கமன்றலைவாசல்சென்று, பூமான்களறியாமல் பதிமுக
த்தில் புகட்சியுடன்ஜங்கமனைக் கண்டாள்பாரே ௬௮௧
கண்டதொருசத்தகன்னிஜங்கன்றானும் கருத்துடனேகொம்ப
னையைக்கொண்டுசென்று, அண்டர்முனிதேவாதி தேவர்க்கெல்லாம்
அவனியிலேகுறியுரைத்தேன் மெத்தவுண்டு, தண்டுளவமாலையணி
கிருஷ்ணன்போல தகைமையுடன்மாதுதனைக் கைபிடித்து; கொண்ட

ணைத்துசைதன்னியஞ்செய்துமல்லோ கோப்பெனவேமைந்தனுமு
ண்டாக்கினனே ௯௮௨

ஆக்கினன்யிருபத்தோர் வாரமட்டும் அங்ஙனவேபதிமுகத்தில்
சென்றுமல்லோ, பாக்கியங்கள்பெற்றவர்போல வாரவாரம்பதிமுகத்
தில்ஜங்கமென்றன் கூடிருந்து; சாக்கிரங்கள சொற்பனங்கள் கண்டாற்
போலே சட்டமுடன்தமபதிக்கு வந்துமல்லோ, நீககியேசத்தகன்னி
வரமும்பெற்று நீட்சியுடன்வடபதிக்கு வந்திட்டாரே ௯௮௩

வந்தாரேவெகுநாட்கள்தான்கழித்து வளமையுடன்மைந்தனையு
ம்பெற்றபின்பு, சிந்தனைகள்தாயநீங்கிகலியும்நீங்கி சிற்பரனைப்போல
வொருபாலன்பெற்று-பங்கமுடன்மணவாளன்மனைவிதானும்பட்சமு
டன்மைந்தனையுங்கொஞ்சியல்லோ, இந்தவுலகத்தினிலேசத்தகன்னி
யெழிலானகுறிப்போலே யுண்டென்பாரே ௯௮௪

என்பரேமுழுமடையர் தானுமப்பா யெழிலானசாத்திரங்கள்
கற்றுமென்ன, வன்பானமாண்பனல்லோ நம்மைப்போலே வளமை
யுடன்வையகத்தில் வந்தமாணபன், தன்போலேமனிதனென்று வறி
யமற்றான் தண்மையுடன்சத்தகன்னி ஜங்கன்றன்னை, நன்னயமாய்
மனிதனையுஞ்சாமியென்று நலமுடனேயவர்காலில் விழுந்திட்டாரே

விழுந்தாரேயவன்கலைவி தன்னிற்சென்றுவிட்டகுறையிருந்த
தொருபாவத்தாலே, அழுந்திமயபவன்வலையிற் சிக்கியல்லோ அவனி
யிலேபேருண்டாய்பேறும்பெற்று தொழுதுமேகுலதெய்வமவன்தா
னென்று தொல்லுலகின்கெட்டதொருகழுதைமாண்பர், மழுவேந்துங்
கதைபேசி நயங்கள்பேசிமானிலத்தில்கெட்டவர்கள்கோடியாமே

தட்சணமாண்பருக்கு பலவிததேவதை குறிகூறல

கோடியாமின்னமொருமார்க்கஞ்சொல்வேன் குறிப்பானதட்சண
மாண்பருக்கு, நீடியேபலதேவகோடியாக நீதியுடன்தாமரைப்பார
னந்தமார்க்கம், வாடிபேவையகத்து மாண்பரெல்லாம் வளமையுடன்
பலகாலுந்தொழு திறக்கி, கேடியேசிரவியங்களனைத்துந்தந்து நிர்க்க
முடன்தான்கொடுத்து நிதிகேட்பாரே ௯௮௭

நிதியானமானிடர்மேல்குறிகள்வந்து மிக்கவிளையாடிமது சன்ன
தங்கள், பதியானபதிவிட்டு வந்தேனென்றும் பாலகனேசெய்வகன்
னிநான்தானென்றும், துகியுடனேமாகதருனி யென்பேரொன்றும்
துப்புறவாயெல்லையது பிடாரியென்றும், மதியானலாடமுனிநான்தா
னென்று மந்த்தானசன்னதங்கள் கூறுந்தானே ௯௮௮

தானனவர்மனது காளியென்றும் தாக்கானவேல்முருகர் யான் தானென்றும், கோனனவாடைமுனி யான்தானென்றும் குறிப்பான காட்டேரி யான்தானென்றும்,தேனன திருவேங்கடபதிதானென்றும் சிறப்பான அங்காளவல்லியென்றும், மானனகாத்தவ ராயனென்றும். மகத்தான அனேகவித தெய்வம் பாரே ௯௮௯

பாரேதான்தெய்வமது வனேகங்கோடிபாரினிலேமாண்பர்மேல் சன்னதங்கள்-நேரேதான்தெய்வமயல் கொண்டோர்போலும்நேர்மை யுடன்பலபலவாஞ் சன்னதங்கள்-கூரேதான்குடிகள்படைசேனைதன் னில் கோஷடமிட்டுசன்னதங்கள்மிகக்கொண்டாடும்-வீரேதான்பிரா ணப வுச்சாடணங்கான் வீரமுடன்தானுரைப்பார்வெகுவாய்த்தானே

தானேகேள்லாடகவியனேகஞ்சொல்வார்- தாக்கானபரிபாஷை மிகவுஞ்சொல்வார்-மானேகேள்சன்னதங்கள் மிகவுண்டாகி மார்க்க முடன்திரேகமது நடுக்கல்கொண்டு- தேனேகேள்சிதாபாச நிலையில் நின்று திர்க்கமுடன்வதிதங்கள் மிகவுரைப்பார் - தானே தானதெய்வ மதுகொண்டாறபோலே தகமையுடன்பலபிரட்டு பேசுவாரே ௬௯௧

பேசுகின்றவார்த்தைதன்னை மெய்யெனறெண்ணி போனதட் சணத்து மாண்பரெல்லாம் - காசுபணம்நிதியனைத்தும் மிகவுந்தந்து கருத்துடனேகுறிமுறைகள்கேட்பாரப்பா-ஆசுகவிசாத்திரங்கள் பார் த்துமென்ன அறிவுகெட்டமாண்பருக்கு மதியீனந்தான்-தேசுலவுபூ ந்துடையாய் போகசீஷா புண்ணியனேமிகவுரைப்பேன்சேனுகேளே

கேளேதான்கட்சணத்து மாண்பரெல்லாம் கெவனமுடன் குறி கேட்டுமதியுங்கெட்டு-பாளேதான்சாத்திரத்தை மிகப்பாராமல் பாரு லகில் மதிகெட்டகுருடராகி- ஆளேதானறிவழிந்துமானங்கெட்டுவப்ப னேவஞ்ஞானவலையிரசிக்கி-நாளேதான்போகாமல் நமனுக்காளாய்நா ட்டினிலேயிருந்தவர்கள்கோடிகாணே ௯௬௫

காணவேயென்தனது சிஷபாலா கருவானபுலிப்பாணி மைந்த கேளு-தோணவேதேசாதி தேசமெல்லாம் துப்புறவாய்க்குளிகைகொ ண்டுவடியென்றுனும-நீணவேகாலாங்கிகடாட்சத்தாலேநீதியுடன்சத் தசாகரமுந்தாண்டி-பாணமுடனேழுகடலுஞ் சுற்றிவந்து பாக்சான நிலைதனிலே நின்றிட்டேனே ௯௬௪

இட்டேனே அட்டதிசை யானுங்கண்டேன் செழிலான சட்சண த்துமாண்பர்போலே கெட்டதொருமாண்பர்களைக்கண்டதில்லைகெடி

யானதட்சணமாம்பதியிலப்பா-திட்டமுடன்வெகுகோடிமாண்பர்தம்
மை தீர்க்கமுடன்கண்டேனே தட்சணத்தில்- சட்டமுடன்காலாங்கி
நாதர்தாமும் தானுனாத்தவண்ணமது போல்கண்டேனே ௯௯௫

கண்டேனேயடியேனும் யானுமல்லோ க்னமானபோகரேழாயி
ரத்தை-அண்டர்முனிதேவாதி தேவரெல்லாம் வன்புடனேமனதுவந்
துகளிப்பதற்குப்-கண்டகம்போல்வையகத்து சித்துமாண்பர்தருவா
னகுருக்கள்மனுவேந்தருக்கும்-சண்டமாருதம்போலே யிந்தநூலைசா
ற்றினேன்பெரியோர்கள் சமுசாரிக்கே ௯௯௬

சாரிகேள்சமுசாரியானபேர்க்கு சட்டமுடன்சித்துமுனி யான
பேர்க்கு-வாரிதிபோல்பெருநூலேழாயிரந்தான்மகத்தான நூல்களெல்
லாமிதிலடக்கம்-மீறியதோராயின்னூலுக் குற்றநூலாம்மேன்மையுட
னகஸ்தியனார்க்காவியந்தான்- வீறியதோர்பன்னீராயிரககாண்டந்தான்
வித்தகனார்பாடிவைத்த நூல்தான்பாரே ௯௯௭

பாரேதான்சத்தகாண்டந்தன்னிற்குள்ளே பாங்கானலோகவதி
சயங்களெல்லாம்-நேரேதானுருவ தானகாண்டம் நெடிதானகாண்ட
மிதுகுருநூலாகும்-நீரேதான்கடைககாண்டமேழாங்காண்டம் தீர்க்க
முடனின்னவதிசயங்கள்கூறும்- சீரேதான்காலாங்கிகடாட்சத்தாலே
சிறப்புடனேபாடிவைத்தேன் பெருநூல்தானே ௯௯௮

நூலான நூலிதுதான் சத்தகாண்டம் நுணுக்கமுடனிதிலடக்க
ஞ்சொல்லொண்ணாது-பாலான பதினெண்பேர் சொன்னநூலும்பயி
லானவிந்நூலுக்கொவ்வாதப்பா-சேலானநவகோடி ரிடிகள்தாமுஞ்செ
ம்மலுடன்கோடிவரை நூலுஞ்செய்தார்-மாலான நூலிதுவும் மகிமை
மெத்த மகத்தானவிந்நூல்போ லில்லைதானே ௯௯௯

தானானவெனதையர் காலாங்கிநாதர் தண்மையுடனவர்பாதகடா
ட்சத்தாலும்-தேனானமனோன்மணியாள் கிருபையாலும் தேற்றமுட
ன்காவியமேழாயிரத்தை - மானான வையகத்தோர் பிழைக்கவென்று
மகத்தானசீனபதிமாண்பருக்கு- பானனகாண்டமேழாயிரத்தில்பட்ச
முடனிருமூன்று காண்டமுற்றே ௲

போகர் சத்தகாண்டத்தில்

ஆறவதுகாண்டம்

முற்றுப்பெற்றது

உ

கடவுள் துணை.

மகாமகுத்துவமபொருந்திய

போகமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய பெருநூலாகிய

குருநூல்

சத்தகாண்டம் - எ௲

ஏழாவதுகாண்டம்

காப்பு

தானான பிரகாச மானநந்தி
தண்மையுள்ள மனோன்மணியாள் பாதம்போற்றி
கோனான வேல்முருகர் தாள்பணிந்தேன்
கொற்றவனே அரிஅயனும் பதந்தான்போற்றி
மானான வகஸ்தியனார் பாதம்போற்றி
மகத்தான கமலமுனி தாள்பணிந்தேன்
தேனான சதாசிவத்தி னடிபணிந்தேன்
தேற்றமுடன் காலாங்கி பாதங்காப்பே க

காப்பானபதினெண்பேர் முனிவர்தானும் பலபலவாய்ப்பாடி வைத்தார் நூல்கள்பேதம் - மூப்பான நூல்களுமே யனேகஞ்சொன் னார் முனையானசித்துமகா ரிடிமார்தாமும்-வாப்பானபெருநூலி லனே கஞ்சொன்னார் வன்மையுடனிந் நூல்போ லாருஞ்சொல்லார்- தாப் பான நூலிதுதான்சத்தகாண்டம் வண்மையுடன்பாடிவைத்தா ரேழா யிரந்தானே உ

தானானசத்தகாண்டமேழாயிரத்தில் தண்மையுள்ளகாண்டமிது வேழாங்காண்டம்-கோனானகாலாங்கிகடாட்சத்தாலே கூறினேன்வை யகத்துவதிசயங்கள்- தேனானமணிபோலேழாயிரத்தில் தேற்றமுட ன்சொல்லிவைத்தே னேழாங்காண்டம்-மானானகடைக்காண்டம்நீதி மார்க்கம் மன்னவனேயுந்தமக்காய் ஓதினேனே ௩

ஓதினேன்சீஷபதிமாண்பருக்கு வுத்தமனேகாண்டமேழாயிரந் தான்-நீதியுடன்சன்மார்க்கநிலைபுஞ்சொன்னேன்நிஷகளங்கமானதொருவழியுஞ்சொன்னேன்-பாதிமதிசடையணிந்த தம்பிரான்கள்பாருலகில்செய்ததொரு நூலையெல்லாம்-ஆதியந்தமுடியுடனே பொருளாராய்ந்து வப்பனேசின்மார்த்தின் வழிசொன்னேனே ௪

சொன்னதொருபொருள்களெல்லாமிதிலடக்கஞ்சுந்தரனேபோகரேழாயிரந்தான்-மன்னவர்கள்வையகத்து வாழ்க்கையெல்லாம் மார்க்கமுடனிதிலடக்கஞ் சொல்லொண்ணது-தென்னவர்கள்தேவாதிமுனிவர்தாமும் தேற்றமுடனசெய்ததொரு நூலையானும் - பன்னலேதிரட்டியல்லோ பெருநூலாகபாரினிலே வினோதவகை சொல்லிட்டேனே ௫

இட்டேனேயிதிகாசப் பொருள்களெல்லாம் எழிலானபோகரேழாயிரத்தில்-சட்டமுடன்பாடியல்லோ நுணுக்கமாகசாங்கமுடன் செய்துவைத்தபெருநூலப்பா-நட்டமதுவாராது யிந்நூலப்பாநலமானவேதையிது கோடிக்கோடும்-திட்டமுடன்நாதாக்கள் சொன்னதில்லைதிர்க்கமுடன்சத்தகாண்டம் பண்புதானே ௬

பண்பானவறுவகைகாண்டத்துள்ளேபலகோடிவேதைமுகமனந்தஞ்சொன்னேன்-நண்பானநாதாக்கள் நீதிமார்க்கம் நலமுடனேயாரேனுஞ்சொன்னதில்லை-திண்பானநீதிவழிக்குறியசித்தை தீர்க்கமுடன்பாடிவைத்தேனின்னூலுக்குள்-வண்பானபெருநூல்தான்குருநூலாகும வண்மையுடன்பாடிவைத்தேன் காண்டமாமே ௭

காண்டமாஞ்சத்தகாண்ட மேழாயிரந்தான் காவியங்கள்போலவொரு நூலுமில்லை-பாண்டவாள்வையகத்து மாண்பரெல்லாம்பாங்குடனேசித்துவகை முனிவர்வாழ்க்கை - தாண்டவம்போல்பெருநூலேழாயிரத்தில் சாற்றினேனறுகாண்டந் தன்னிற்குள்ளே- பூண்டதொருலோகவதிசயங்களெல்லாம் புகட்டினேன்காலாங்கி கடாட்சந்தானே ௮

தானானசத்தகாண்டந் தன்னைப்போலே சாற்றினாகஸ்தியனார்முனிவர்தாமும்-கோனானபன்னீராயிரந்தானப்பா கொற்றவனேபுலஸ்தியருக்குபதேசித்தார்-பானானபனிரெண்டு காண்டஞ்சொன்னார் பாலகனேவாயிரத்துக் கொருகாண்டந்தான்-தேனானமனோன்மணியாள்கிருபையாலே தேற்றமுடன்பாடிவைதத நூல்தான்பாரே ௯

பாரேதானேழுலட்சங்காப்புதன்னை பாலகனேபாடிவைத்தானந்தமாக-நேரேதானின்னூலேழாயிரந்தான் நேர்மையுள்ளகாண்டமதுதன்னைப்போலும்- சீரேதானகஸ்தியனாருண்டுசெய்தசிறப்பானபன்னீராயிரத்தைப்போலும்- ஆரோதான்சொன்னதுண்டோ நூலையப்பாவப்பனேயானுமல்லோ வுரைத்திட்டேனே ௰

உரைத்தேனேவெகுநூல்களனந்தங்கோடி வுத்தமனேயிந்நூலுக்கொப்பதாமே - கரைத்ததொருபொருள்களெல்லா மிதிலடக்கம் காசினியில்கண்டவர்கள் விடுவாரோசொல்-நரைதிரையுமவருவதில்லையிந்நூலகண்டால் நாதாக்கள்தன்முதலோர் நாணுவார்கள்- சுரைபடர்ந்தகதைபோலே யெண்ணவேண்டாம் சுந்தரனேகுருநூலாம்மெய்நூலாமே ௰௧

நூலானனூலுக்குள் மார்க்கஞ்சொன்னேன் நுட்பமுடன்மார்க்கமது யென்னவென்றால்-பாலானசித்தருக்கு நீதிசொன்னேன் பானகுடனேயனீதவழி விதியஞ்சொன்னேன்-சேலானசன்மார்க்கந் தன்மார்க்கந்தான் செப்பினேன்கடைக்காண்ட மேழினுள்ளே மாலானமருத்துவங்கள் சொல்லொண்ணாது மகத்தானநீதிவழி பாடுகாணே

காணவேசத்தகாண்ட மேழினுள்ளே கருவானகடைக்காண்டந்தன்னுக்குள்ளே-பூணவேசிடிகையென்ற நுணுக்கமப்பா புகட்டினேன்புலிப்பாணிமைந்தாகேளு- ஆணவங்கள்தானொடுங்கி மைந்தாநீயும்வப்பனேசித்தாதி முனிவர்க்கெல்லாம்-நாணமுடன்முடிவணங்கிகரங்குவித்து நற்பாதகமலமதை வணங்குவாயே ௰௩

வணங்கியேநூலதனைப் பதனம்பண்ணுவகையில்லாகசடருக்குயீயவேண்டாம்-சுணங்கமெனுங்கழுதையப்பா மாண்பர்தாமுஞ்சகந்தரனேவெகுபேர்களிருப்பாருண்டு-கணமூடையராட்சதர்கள் தன்னைப்போலேகருமிகளுமெத்தவுண்டுயீயவேண்டாம்-மணமகமழும்புண்ணியர்கள் தம்மைத்தேடி மகத்தானநூல்கொடுத்தால் புனிதமாமே

புனிதமாங்கருமிகட்கு கொடுத்தாயானால் பூபாலாகண்மணியேபாபமெய்தும்-கனிவுடையபுண்ணியர்கள் வெகுபேருண்டு காசினியிலுன்னைவந்து நூல்கேட்டாலே இனிதானவார்த்தையதுமிகவுங்கூறியெழிலான நூலுக்கு சாபந்தீர்ந்து- தனியாகத்தானழைத்து வுபதேசித்து தாரணியில்பிழைக்கும்வகை சொல்லுவீரே ௰௫

சொல்லவென்றால்நாவில்லைப் பாவுமில்லை துரைராஜகாலாங்கி
நாதர்தம்மை-புல்லவேயவர்தமது பதாம்புயத்தைபோற்றியேயென்று
றும்மனதுவந்து-இல்லலதுவிட்டகற்றி யன்புகூர்ந்து வப்பனேசதா
சித்தம்மனதிலுன்னி-வெல்லவேயுபதேச மோதியல்லோ விருப்பமு
டன் நூல்கொடுத்தால் புண்ணியமாமே ௰௫

புண்ணியமாமின்னமொரு மார்க்கங்கேளுபுகழானபுலிப்பாணி
மைந்தாபாரு-மண்ணிலிமேல்வெகுகோடி சித்துதாமும் மகத்துவங்க
ளகொண்டதொரு புனிதவான்கள்-நண்ணியதோர் நூல்களெல்லாமிக
வுங்கூறி நல்முடனேமறைத்துவைத்தா ரனேகங்கோடி-உண்மையா
ய்நூலதனைப் பாடியல்லோ வுத்தமனேமறைத்ததினு லொன்றுங்
காணே ௰௬

ஒன்றுவசித்துமுனி ரிடியைப்போலும் ஓகோகோநாதாக்கள்
தன்னைப்போலும்- குன்றுன நூலதனை மிகவும்பாடி குகைதனிலே
மறைத்துவைததார் கோடிமாண்பர்-வென்றிடவேயகஸதியரு மிகவா
ய்ப்பாடிவெட்டவெளிகுகைதனிலே மறைத்துவைததார்-தென்றிசை
யில்சித்தர்களுந்தாமுமல்லோ தெரியாமல்மலைமீதிலொளித்தார் தாமே

தானுனசாத்திரத்தைபாடியல்லோ தண்மையுடன்குகைதனிலே
வைத்தாரப்பா-கோனுனகும்பமுனி ரிடியார்தாமும் கூட்டமிட்டுசாத்
திரத்தை மறைததுவைத்தார்-மானுனகாலாங்கி நாதர்தாமும் மார்க்க
முடன் நூலதனைப்பாடியல்லோ தேனுனசிஷவர்க்கமாண்பருக்குததே
ற்றமுடன் நூல்கொடுததார் திண்ணமாமே ௰௭

போகர் இமயகிரிவடபாகத்தில் சிங்கம் குட்டி

ஈனுவதைக்கண்டது

திண்ணமாமின்னமொருமார்க்கம்பாருதிர்க்கமுடன்புலிப்பாணி
மைந்தாகேளு-வண்ணமாமேருவுக்குவடபாகத்தில் மகத்தானகடலோ
ரக்காட்டகத்தில்-நண்ணவேசிங்கமலையானுக்கண்டேன் நாதாக்கள்
சித்துமுனியங்குமுண்டு - திண்ணமுடன்குளிகையது கொண்டுமல்
லோ தீர்க்கமுடனவ்வனத்தை யிறங்கினேனே ௨௰

இறங்கினேன்வடபாகங்கடலோரத்தில்யெழிலானவிருளடைந்த
கானகந்தான்-உறக்குமேகரடிபுலி சிங்கந்தானும் ஓகோகோநாதாக்க
ள்மெத்தவுண்டு-திறமுடையகரிக்கூட்டஞ்சொல்லொண்ணாது நிராள

ளவுடகோடி கானகத்தில்-குறைவன்றிவாழுமது மிருகமெல்லாங்கொற்றவனேயிமயகிரி வடபாகந்தானே ௨௧

தானானமுற்பக்கம் அரிகள்கூட்டம் தாக்கானபிற்பக்கம் கரிகள்கூட்டம்-கோனானமேற்பக்கம் பரிகள்கூட்டம் கொற்றவனேகீழ்ப்பக்கம் நரிகள்கூட்டம் - தேனானநீளமையங்கானகந்தான்தேவிமனோன்மணிபானுமறியாநாடு-மானானபரிதிமதிகாணாநாடுமகத்தான சில்லென்றகாடுதானே ௨௨

காடானநடுமையங்கானகத்தில் காடிபுலிசிங்கமது வாழுநாடு தாடாண்மைகொண்டதொரு தழைக்குநாடு திகழ்மையுள்ளகானகந்தான்சித்தர்நாடு-நாடாளும்ராஜபதி கண்டதில்லை கலமுடனேதேவரிடியிருக்கும்நாடு-பாடாண்மைகொண்டதொரு பசுக்கள்நாடு பாரினிலேயாரேனுங் காணார்தாமே ௨௩

காணாரேயவ்வனத்தின் மகிமைதன்னை கதையுரைப்பேன்புலிப்பாணிமன்னாகேளு-தோணமல்சித்தர்முனி ரிஷிகளுக்கும் தொல்லுலகில்கண்டறியா வதிசயங்களானதுசிலதுமென்ற காட்டகத்தை நன்மையுடன் குளிகைகொண்டுசென்றுயானும்-வீணாகக்காலமதுகழியாமற்றான் விருப்பமுடன்சிலகால மிருந்திட்டேனே ௨௪

இட்டேனேநெடுங்கால மடியேன்றானும் யெழிலானகாலாங்கிகிருபையாலும்-திட்டமுடன்குளிகைகொண்டு கானகத்தில் தீர்க்கமுடன் சுற்றிவருங்காலந்தன்னில்-பட்டையம்போலாண்சிங்கம் பெண்ணைக்கண்டு பாச்சலுடன்மோகமது வதிகமாகி-சட்டமுடன்கலவிதனில் மிகக்கலந்து சாங்கமுடனிருக்குமது காலந்தானே ௨௫

காலமாமானுடனே பெண்ணுங்கூடி கலவிதனிலிருக்கின்றநாளுங்கண்டேன்-தாலமாம்பன்னிரண்டு வருஷத்தாலும் தாக்கானபெண்சிங்கங்கருவுமாகி-கோலமுடன்பூரணமாங் கெற்பங்கொண்டு கொற்றவனேயீனுகிறகாலமாச்சு - சாலமதுயென்சொல்வேன் புன்னாசேளு சாங்கமுடனொருவருந்தான் கண்டிலாரே ௨௬

பெண்சிங்கம் யானைக்கூட்டத்தில் குட்டியீனுவது

கண்டேனேகானகத்தி லதிசயங்கள் கண்கொள்ளாமகிமையது யென்னசொல்வேன்-அண்டர்முனிசாடசதாக்க ளறியாநாடு யவ்வனத்தில்சிங்கமது கற்பங்கொண்டு பண்டுபலவனதுக்க ளருந்தியல்லோ

பாங்குடனேசெற்பவேதனையுமாகி - அண்டமுடியாமலது சிங்கந்தா
னும் அவனிதனில்வேதனைகள் படுகலாச்சே ௨௭

ஆச்சப்பாவாண்சிங்கந்தானுமல்லோ அரிவையெனும்பெண்சிங்
கந்தன்னைக்கண்டு - பாச்சலுடன்யானையது யிருக்குங்கூட்டம்பாண்
மையுடன்தானறிந்துமனதுவந்து-மேச்சலுடன்பெண்சிங்கந் தன்னை
க்கூட்டிமேன்மையுடன்கரிக்கூட்டந் தன்னிலங்கே- மாச்சலதுவாரா
மல் சிங்கந்தானும் மன்னவனேசென்றல்லோ நிற்கலாச்சே ௨௮

நிற்கவேகரிக்கூட்டம் முன்னதாக நேரானசிங்கமது பின்னதா
க-விற்பனமாய்முதுகொடுத்துநின்றுகொண்டு வீரமுடன்குட்டியது
யீன்றபின்பு-சொற்பெரியகுட்டியென்ற சிங்கந்தானும் சுந்தரனே
மத்தகெஜந் தலைபிற்பாய்ந்து- உற்பனமாமூளையது உரிந்துமல்லோ
வுத்தமனேசிங்கமது யிறங்கும்பாரே ௨௯

பாரேதான்சிங்கமது யிறங்கும்போது பாங்கானகரிக்கூட்டமங
டுங்கியல்லோ-நேரேதான்தலைவாறுதிசைமாறிதானும்சேர்மையுடன்
கானகந்தைச்சென்றுபோகும்-சீரேதான்சிங்கமென்ற குட்டிதானும்
திறளானகரிக்கூட்டந்தன்னிற்சென்று-வீரேதான்நாட்குநாள் யிரை
யுங்கொண்டு விடுபட்டுகோட்டகத்தே வருகுங்காணே ௩௰

காணவேசிங்கமது பிறவியல்லோ கைலாயநாதருட கடாட்சத்
தாலே தோணவேவையகத்தில் குட்டியீன்று தொல்லுலகில்வாழ்கு
வதுமகிமைமெத்த-ஆணவங்களதிகமுண்டு அரிதனக்கு அவனியிலே
ராஜனென்றமிருகமாச்சு-பூணவேவையகத்தின் மிருகமெல்லாம் புக
ழானசிங்கத்தில் கீழுமாச்சே ௩௧

கீழானமிருகமது வனேகமுண்டு கீர்த்தியுள்ளசிங்கமது ராஜன
ப்பா-பாழானகாடுகளி லிருக்குஞ்சிங்கம் பார்த்தவர்களாரேனுங்கண்
டதுண்டோ-சாழலுடன்கானுறு தன்னிலப்பா சடடமுடன்விழுந்தி
றந்தகனைகேட்டார்கள்-ஆழானமடுக்களிலே விழுந்திறந்த அதிசயங்
களவைபகத்தில் கண்டார்தாமே ௩௨

சிங்கத்தினுல் சித்தர்கள்மடிந்தது

காமானபின்னமொரு மார்க்கம்பாருதண்மையுள்ளபுலிப்பாணி
மைந்தாகேளு-கோமான்களறிந்ததில்லை குவலயத்தில் கொற்றவனே
பின்னமொரு மகிமைசொல்வேன்-சாமானியமானதொரு சித்தராப்பா
சடடமுடனன்பதுபேர்கூட்டமாக-கூமானமாகவல்லோகூட்டங் கூ
டி அடவான்காட்டகத்தில் வந்திட்டாரே ௩௩

வந்தசொருவழி தனிலேமார்க்கங் கண்டு வண்மையுடன்சிங்கமது
கர்ச்சித்தல்லோ-சிந்தனையாய்மாண்பருட சைகைதன்னை சீறலுடன்
தானறிந்துகோபமிஞ்சி-தொந்தரவுசெயவதற்கு மனதுவந்துமீறாற்ற
முடன்பாச்சலதுவதிகமாகி - விந்தையுடன்சிங்கமது வேவுகொண்ட
வீரியத்தைக்கண்டார்கள் சித்துதாமே கச

சித்தர்கள் சிங்கத்தைக்கண்டு கல்லாலமரத்தின்மே
லேறிக்கொண்டது

சித்தானசித்துமுனி ரிடிகள்தாமும் சீறலுடன்வருகின்றசிங்கந்
தன்னை-புத்தியுள்ளசித்துமுனி பார்த்துயேகிபுகழானவன்பதுபேர்
கூட்டத்தோடும்-பத்தியுடன்கல்லாலின் மரத்தின்மேலே பரிவுடனே
யேறியல்லோ பாக்கும்போது -சுத்தியெங்கும்பார்த்துமல்லோசிங்கந்
தானும் சுந்தரனான்பதுபேர் காணலாச்சே கரு

காணவேசிங்கமது சித்தர்தம்மை கனமானவீரியத்தால்கோபமி
ஞ்சி-தோணவேசிங்கமது யேதுசெய்யும் தோர்ருமல்கோபமது வதி
சங்கொண்டு-பாணமபோல்சிறுகீரை பூமிதன்னில் பள்ளமதாய்ச்செ
ய்துமல்லோமண்ணைத்தானும-பூணவேமூத்தி•ததில் வாலைவிட்டுபுக
ழுடனேமண்ணதனைப் பிரட்டலாச்சே கசா

பிரட்டியேவால்தனிலே மண்ணையேத்தி பின்பக்கமாகவல்லோ
திரும்பியேதான்-வாட்டியேவாலதனை தூக்கியேசான்வளமையுடன்
மண்ணதனைநோக்கியல்லோ - தூட்டியேவால்சுற்றி யெரியும்போது
துப்புறவாய்மண்ணதனைமேலேநாக்கி-மிரட்டியேதானெரியமண்தா
னப்பா மீறியேசித்தரின்மேல் விழுகலாச்சே கஎ

விழுகவேநாற்பத்தி யெண்மர்பேரில் விஷமானமண்ணதுவம்
மேலேபட்டு-பழுதுபடாமேனியதில் விஷமுங்கண்டு பாங்குடனே
நித்திரைகள் வருசாறபோலே-சமுகியேசிங்கமது சென்றபின்புநடுக்க
முடன்றிரேகமது லுடுக்கமாகி-டூழுதுமேநாற்பத்தியெண்பர்பேரு
மூதுலகமண்மீதில் விழுந்திட்டாரே கஅ

மண்ணானபூமிதனில் விழுந்தபோது மயக்கமுடன்கண்ணூரங்கி
யிருந்தாற்போலும்-திண்ணமுடன்மடிந்தார்கள்சித்தரெல்லாம் திர்க்க
முடன்வையகத்தைக்கண்டதில்லை - எண்ணியேமரத்தின்மேலிருந்த
பேர்கள்யெழிலானயிருவருமே யிறங்கியேபின்-குண்ணியேமுகம்வா
டி மனமயர்ந்துகுவலயத்தில்மடிந்தவரைக் கண்டார்தாமே உகூ

தானனமண்படா இரண்டுபேருஞ்சட்டமுடன்மரம்விட்டுச்சீறி
ரங்கி-கோனன சிங்கமது சென்றபின்பு கொற்றவனேயிருவருமேயறி

ந்துகொண்டு-ரீதனுணமனேன்மணியை மனதிலுன்னதெளிவுடனே
புத்தியதுமிகவுமாகி-பானுனசித்துமுனி யிருவாதானும் பரிட்சிக்க
வெண்ணமது கொண்டிட்டாரே ௪௦

கொண்டுமேமரத்தடியை விட்டிறங்கி கொற்றவர்கள்சிங்கத்தின்
பள்ளங்கண்டு- விண்டிடவேமுத்திரமாம் பள்ளங்கண்டு விருப்பமுட
ன்சோதனைகள்செய்யவெண்ணி - கண்டிடவேகரமதனிலிருந்தசெம்
பைகட்டழகர்தாமெடுத்து மண்ணிற்போட-கொண்டதொருசெம்பா
துவுந்தங்கமாச்சு கொற்றவனேயதின்விஷத்தை யறிந்தார்பாரே ௪௧

பாரேதான்விஷமேறி பழுக்கலாச்சு பாங்கான நரியின்துமுத்தி
ரந்தான்-நேரேதான்மண்ணதனில் விஷமுமாகி நேர்மையுடன் சித்தரி
ன்மேல்படுகலாச்சு-சீரேதான்தேகமது புண்ணுமாகி தீர்க்கமுடன்தா
னிறந்தார்சித்தரெல்லாம் - ஆரேதான்கண்டவர்கள்உலகிலில்லை யப்ப
னேசித்தர்முனி கண்டார்தானே ௪௨

கண்டாரேசித்துமுனிரிடியார்தாமும் கானகத்திலிடந்தனதொரு
வதிசயத்தை-தண்டகம்போல்தான்கண்டு பிரமித்தேங்கிசாரணியிலே
குளிகைகொண்டு சீனந்தன்னில்-வண்ணமுடன்சீனபதிமாண்பருக்கு
வளமாகவதிசயத்தையெடுத்துக்கூற- திண்ணமுடன்மனதுவந்து ம
னமகிழ்ந்து தீர்க்கமுடன்சீனபதிக் கேகினாரே ௪௩

போகர் சீனபதிக்குவந்தது

ஏகவேயின்னமொருமார்க்கம்கேளு யெழிலான புலிப்பாணிமணி
யேபாரு-சாகமுடன்நெடுங்காலம் வடமேருதன்னில்சட்டமுடன் நா
னிருந்தேன் சிலதுகாலம்-பாகமுடன்சிங்கத்தி னதிசயத்தை பாரினி
லேநாதாக்கள் கண்டதில்லை-வேகமுடன்யான்கண்டு சீனத்தார்க்குவி
ருப்பமுடனுபதேசஞ் செய்திட்டேனே ௪௪

செய்தேனேவடமேருதன்னிலப்பா சிறப்பானசிங்கத்தின்மகிமை
தன்னை-வெய்யபுகழ்சீனபதி மாண்பருக்கு விருப்பமுடனுபதேசஞ்
செய்தேன்யானும்-பயமேயான்கொண்ட காயகற்பம் பட்சமுடனே
வர்களுக்குக் கொடுத்தேன்பாரு-துய்யவேசீனபதி மாண்பரெல்லாந்
துப்புரவாய்க்காயாதி கொண்டார்பாரே ௪௫

பாரேதான்காயாதி கொண்டபின்பு பாங்கானசீனபதி மாண்பர்
தம்மில்-நேரேதான்சிலதுபேர் ஞானவானாய நேர்மையுடன்குளிகை
யது பூண்டுகொண்டு-தீரேதான்வடமேரு கானகத்தில் தீர்க்கமுடன்
தானசென்று காணுதற்கு- வீரேதான்குளிகையது பூண்டுகொண்டு
விருப்பமுடன்வடமேருக் கேகினாரே ௪௬

ஏகினார்சிங்கமென்ற காட்டகத்திலெழிலானநாதாக்கள் தன்னைப்
போலே-பாகமுடன்காயாதி கொண்டுமல்லோ பக்குவமாய்க்குளிகை
விட்டுக்கானகத்தில்-சாகமுடன்சிங்கமதைக் கண்டாரங்கே சட்டமுட
ன்சிங்கமது கெர்ச்சித்தேதான்-வேகமுடன்சீனபதி மாண்பர்தம்மை
வீறுடனேகொல்லுதற்கு வருகலாச்சே ௪௭

வருகவேசித்துமுனி தம்மைப்போலே வாகானசீனபதிமாண்ப
ரெல்லாம-பெருகவேகல்லாலின்மரத்தின்மேலே பேரானமுன்னிருந்
தசித்துபோலே-சொருபமதைக்கண்டவுடன் மரத்தின்மேலில் சுந்தர
னேபார்த்துமல்லோதிகைத்துநின்று-அருவமெனனசிங்கமதைக்கண்
டுமல்லோ வப்பனேபிரமமித்து நின்றிட்டாரே ௪௮

நின்றுமேசித்துமுனி ரிஷியார்தாமும நேரானசிங்கமது கண்டு
மேதான்-குன்றிடவேதனமனதிலுறுதிகொண்டுகூரானசிங்கமதுமே
துசெயயும்-வென்றிடவேமுன்போலே மண்ணைவாரி விட்டெரியசீன
பதி மாண்பரெல்லாம-தன்றிடவேகல்லாலின் மரத்தின்மேரில்சட்ட
முடன்மேலிருந்து விழுந்தார்தாமே ௪௯

தாமானசீனபதி மாண்பரெல்லாம் தகமையுடன்மண்ணதனில்
விழுந்துமேதான் - பூமான்கள்விஷமதுவுஞ்சகியாமற்றுன் புசமுமன
தேகமது சிலிர்த்துமலமேலோ-நாமானபஞ்சேந்திரிய முள்ளடங்கி நம
னுக்குஆளாகிபொறிகலங்கி-வேமானமாகவல்லோ மண்ணினமேரில்
விழுந்துமேபிரண்டிருக்கக் கண்டிட்டேனே ௫௦

போகர் சீனபதிமாண்பருக்கு சிங்கத்தின்விஷத்தை
முறித்து வுயிர்குடுத்தல்

கண்டேனேசீனபதி மாண்பர்தமமை கடுகெனவேவிஷமேரியி
ருந்தபேர்க்கு-தண்டசம்போல்காயாதி முறிப்புமானும் தகமையடன்
தான்கொடுத்துயெழுப்பியல்லோ- மண்டலங்களுள்ளளவும் சிங்கசற்
பமடியாமலிருப்பதற்கு மனதுவந்து விண்டவேயாண்கொடுத்துவுயி
ர்கொடுத்தேன் விட்டகுறையிருந்ததினுலெழுந்தார்பாரே ௫௧

பாரேதான்சீனபதிமாண்பருக்கு பாங்கானகற்பமுறையானுஞ்
சொல்லி-நேரேதான்பிழைப்பதற்கு வழியுஞ்சொன்னேன்னேர்மையு
டன்கருவாளிசண்டுகொள்வார்-சீரேதான்சித்தர்முனிமார்க்கந்தன்னை
சிறப்புடனேயானுரைத்தேன்மாண்பருக்கு- வேரோதான்மறறோரா
லசொல்லப்போமோ வேதாந்தகாலாங்கி கடாட்சந்தானே ௫௨

கர்ணனைபதி மாண்பரெல்லாந்தகமையுடன்தாமெழுந்தருடி வணங்கி-கோனைகாலாங்கி கடாட்சத்தாலேகொம்றவனைர்னைபதி மாண்பரெல்லாம்-பானுவைவிட்டகுறை யிருந்துமல்லோபாககுடனேயென்றுமேலெழுப்பப்பட்டார் - பானுமகதேவர்கடாட்சத்தாலேமனைபொருளையானுமல்லோ வுணர்ந்திட்டேனே ௫௩

பேர்சர் உச்சிலிங்கத்தேளைக்கண்டது

உணர்ந்தேனேயினமொரு மார்க்கம்பாரு வுத்தமனேபுலிப்பாணிமைந்தாகேளு-பணக்கமழும்வட கோடி கானகத்தில் மார்க்கமுடன்மகமேருபக்கந்தன்னை-கணமுடனேயனேகவித தெய்வந்தானுங்காட்டகத்தேவாசமதுசெய்துகொண்டு -பிணமதனையாபூதிகொள்ளுங்காளிபேரானகாட்டகத்தைக் கண்டேன்தானே ௫௪

தானேகேளண்டமுனியறியாக்காடு தகமையுள்ளவனந்தனிலேதிரிந்தயானும்-மானேகேள்மகமேரு சாரல்பக்கம்மகத்தானகுன்றுகளுமலையுமுண்டு-தேனுமலைதனிலே வாசஞ்செய்யும் தேளதுவுந்திரள்கூட்டஞ்சொல்லொண்ணாது-கோனுனதேளதுவின்கூட்டந்தன்னைதேற்றமுடன்கோடிவரை யான்பார்த்தேனே ௫௫

பார்த்தேனேசெந்தேளாங் கோடிவர்க்கம்சாங்கமுடன்யுகம்பிரித்துநடக்கும்போது-தீர்த்தலிங்கந்தனிலுதித்த செந்தேளப்பாதிரமுடன்கோடிதளம்வருகும்போது - ஆர்த்தியுடன்மேலேறிவருகுந்தேளாம்வப்பனேவுச்சிலிங்கத்தேளேயாகும்- மூர்த்தியுடன்மும்மூர்த்தியானபேரும் முதலகில்நடுக்குவது திண்ணமாமே ௫௬

திண்ணமாமுச்சிலிங்கத் தேள்தானப்பா தீர்க்கமுடன்காட்டகத்தேயிருக்கக்கண்டேன்-வண்ணமுடன்மலேச்சாரல் காளிகோயில்லளமானதேவதா ஸ்தலமுங்கண்டேன்-எண்ணரியகோயிலது மூலஸ்தானமெயதிலாகவாள்நுழையயிடமுமுண்டு- தண்ணமுடன்காளிதனைக்காணவென்றால் சாங்கமுடன்சுரங்கம்வழி செல்வார்பாரே ௫௭

பாரேதான்தேவதாஸ்தலத்துக்குள்ளேபாங்கானவழியதுவுமூலஸ்தானம்-நேரேதான்காளிதனைக் காணவென்றால் நேர்மையுடன்மார்பாலே நகர்ந்துமல்லோ-தீரேதானெண்சாணு விடமுந்தாண்டி தீர்க்கமுடன்காளிதனைக்காணலாகும் - கூரேதானதற்கப்பால்காளிவாசம் கொற்றவனேதானிருக்கக் காணலாமே. ௫௮

சுரங்கத்தில் உச்சிலிங்கத் தேளிருப்பது

காணலாம்வுச்சிலிங்கத் தேள்தானப்பா கடியதொருசுரங்கமதில்வாசஞ்செய்து - பூணவேநெடுங்காலம் வாசஞ்செய்து பொங்கமுட

னிருக்குமந்தகாலந்தன்னில் - நீணவேயவ்விடத்தில் கரிக்கூட்டங்கள்
நீதியுடன்சொல்வதற்கு லக்கோயில்லை - ஆணவங்கள்மிஞ்சியல்லோ
யானைக்கூட்டம் வப்பனைகணக்குண்டோ சொல்லொண்ணாதே ௫௯

யானை கோனனைத்துறத்துவது

ஒண்ணதுகாட்டகத்தே கோனன்றனும் வுத்தமனைமாடாடு
மேய்க்கும்ஸதானம்- அண்ணார்ந்துபார்ப்பதற்குமுடிகொள்ளாதுவப்
பனைபசுக்கூட்டம்மெத்தவுண்டு-கண்ணாலேயானையது கோனன்றன்
னைகடைநோக்கிப்பார்த்தல்லோசீறலாகி-மண்ணோடேதும்பிக்கையா
ற்புரண்டிமகத்தானகோனனைத் துரத்தலாச்சே ௬௰

ஆச்சப்பாகரியல்லோ கோனனைத்தான்வப்பனைது த்துகின்ற
வேளைதன்னில்-பாச்சலுடன்கோனனும் ஓட்டங்கொண்டுபதுங்கியே
செல்வதற்குகாளிகோயில்-மூச்சடங்கியோடியல்லோ சேஷஸதானம்
மூனையானகாளியதுமூலஸ்தானம்-மாச்சலதுவருவதற்கு முன்னதா
கமகத்தானசுரங்கம்வழிச் சென்றான்தானே ௬௧

சென்றாரேகோனனுங் காளிபக்கல் செம்மலுடன் பதுங்கியல்
லோமுற்புரத்தில் னின்றாரேகோனனும் வுடல்நடுங்கி நீதியுடன்காளி
புரம்தன்னில்நிற்க-குன்றேரிவாழுகின்ற யானையப்பா சொற்றவனை
சுரங்கம்வழிவருகலாச்சு-வென்றிடவேயானையது தும்பிக்கையால்வீர
முடன்சுரங்கமது நுழையலாச்சே ௬௨

நுழையவேசுரங்கத்தின்வழியிலப்பா நுண்மையுடன் தும்பிக்கை
விட்டுமல்லோ-குழையவேதகமது செல்லாமற்றான் சொற்றவனை
யானையதுபின்றுகொண்டு-தனழமெய்க்குகோனனை துபபிக்கையால்
தட்டாமல்நாற்புறமுந்தடவும்போது - நுழையவேகதிதனக்குயிட மு
மில்லை நுட்பமுடன்யிடையூறு நேரலாச்சே ௬௩

ஆச்சுதே தும்பிக்கையாலேதானும்வப்பனைகோனனைத்தேடும்
போது-மூச்சடங்கித்தானிருந்து கோனன்றனும் மூனையானகாளியி
ன்மேல்சிந்தையாகி-மாச்சலதுவாராம லிருந்துகொண்டான் மகத்தா
னயானையுந்தன் தும்பிதன்னை-வீச்சலுடன்வுச்சிலிங்கத் தேன்தானப்
பா வீரமுடன்கொட்டிடவே சத்தமாமே ௬௪

சத்தமதுகொண்டிடவேயானைதானும் சதுரானமலைதனிலேகேட்
கும்போது-முத்திபெறுஞ்சித்தர்களின் கூட்டத்தார்கள் மூனையான
சத்தமதைக்கேட்டுமேதான் - புத்தியுடன்யானையது தன்னையல்லோ
புகழானவுச்சிலிங்கத் தேள்தானப்பா- வெத்தியுடன்கொட்டியதோர்
தேள்தானென்று வீரமுடன்சித்தர்களு மறிந்திட்டாரே ௬௫

அநிங்காரேவுச்சிலிங்கத் தேள்தானப்பா வப்பனேகரிதனையே
கொட்டிற்றென்று-செறிந்துமேமலேதனையே விட்டிறங்கிசெம்மலுட
ன்யானைபதுபக்கல்வந்தார்- குளியானயானையதுவிஷமுமீறிகொப்பெ
னவேநெருப்பதுபோலெறியுதவகே-மூறியுடனேதங்கமெல்லாம்பற்றி
யல்லோ மூனைபானகொழுந்துவிட்டு யெரியலாச்சே ௬௬

எரிந்துமேபிரிதிவென்ற சாம்பலாச்சு மெழிலானயானையது மடி
ந்துபோச்சு-செரிந்ததொருசாம்பல்தனைசித்தர்கண்டுசோரபலவரவ
ர்கள்பங்குவீதம்- புரிந்துமேயங்கதுவும்பகரும்போது புகழானகோ
னனுஞ்சுரங்கத்தண்டே-வரிந்துமேகோனனைசித்தர்கண்டு வகையுட
னேவளப்பமதைக் கேட்டிட்டாரே ௬௭

கோனன்மீதில் இரக்கம்வைத்து சித்தர்கள்
பங்குகொடுத்தது

கேட்டவுடன்கோனனும் மனநடுங்கி கெவனமுடன்சித்தர்கட்கு
கூறலுற்றான-வாட்டமுடன்மாடாடு மேய்க்கும்போது வளமானயா
னையது யெனனைக்கண்டு- காட்டிகமாய்ச்சீறலுது மிகவுண்டாகி சட்ட
முடனென்தனையுந்துரத்தலாச்சு - கோட்டமுடன்யானையது வருகும்
போது கொப்பெனவேயான்பயந்து ஓடினேனே ௬௮

ஓடினேன் தங்குதற்கு யிடமில்லாமல் ஒகோகோநாதாக்கள்முனி
வரேகேள்-தேடியேகாளியது தேவஸதானமதேற்றமுடன்யான்கண்
டு மனதுவந்து-வாடியேசுரங்கமது வழியிற்சென்று மகத்தானகாளியி
ன்றன் பக்கல்நின்றேன்-நீடியேயானையது யென்தனைத்தான் விஷகளங்
கமாகவல்லோ தேடலாச்சே ௬௯

ஆச்சையாசித்துமுனிரிடியாரேகேள் ஆங்காரமுள்ளதொரு யா
னைதானும்-மூச்சடங்கிததும்பிக்கை தன்னிலேமேபுனையானசுரங்கத்
தின்வழியிலுள்ளே - பாச்சலுடன் தும்பிக்கைவிட்டபோது பாழான
சுரங்கமதில்யகிமைமேயதோ-கூச்சலுடன் வீறிட்டு யெறிந்துமேதான்
கொப்பெனவேபிரிதிவென்ற சாம்பலாச்சே ௭௰

சாம்பலாய்ப்போனதொரு சேதிகண்டு சட்டமுடன்சுரங்கமது
வுள்ளிருந்து-நிமபுகளும்நோது யென்றுசொல்லி நீர்க்கமுடன்வெ
ளியாககும் வந்தேனென்றான்-விமபுடையகோனனின்வார்த்தைதன்
னைவிருப்பமுடன்சித்தர்முனிகேட்டுவந்து-நாமிவனுக்கோருதவி செ
ய்யமென்று நலமுடனேசித்தரெல்லாம நினைத்திட்டாரே ௭௧

நினைத்துமேவுச்சிலிங்கத் தேளினாலே நிஷகளங்கமானதொருதி
ரவியங்கள்-சுனைபோலேயேமமென்ற தங்கந்தானும் துப்புரவாய்நந்த
பங்குவாய்த்ததென்று-கனையானகோனனுல் வந்தபாக்கியம் காசினி

யில்சதகோடி சொல்லொண்ணாது-பனையளவுபாக்கியமு மிவனாலாச்சு
பட்சமுடன்சித்தர்முனியெண்ணினாரே ௭௨
எண்ணியேசித்தர்முனி மனதுவந்து யெழிலானகோனானைத் தா
னழைத்து-பண்ணவேயேமமென்ற வித்தைதன்னைபட்சமுட னிவனு
க்கோர்பாகமீய்ந்து-வண்ணமுடன்செய்பாகங் கைபாகங்கள் வளமை
யுடன்காண்பித்து விதியுஞ்சொல்லி-சுண்ணமென்றசாம்பல்தன்னையோ
ர்பாகந்தான் சுத்தமுடன்கைகொடுத்துப் போவென்றாரே ௭௩
போமென்றுசொல்லியல்லோ முனிவர்தானும் பொங்கமுடன்
கோனானுக்குறுதிகூறி-காமமென்றகாலாங்கி வாக்குபோலே நலமுட
னேஞானோபதேசஞ்செய்து- தாமமென்றபிரிதிவாஞ்சாமடல்தன்னைசட்
டமுடன்தான்கொடுத்து மதியுஞ்சொல்லி- வேமமென்றகாட்டகத்தே
சித்தர்தாமும் வேகமுடன்குகைதனிலே சென்றிட்டாரே ௭௪
சென்றவுடன்கோனானுஞ் சாம்பல்தன்னைசெம்மலுடனவர்பதிக்
குக்கொண்டுசென்று-பொன்னானமாற்றதுவுஞ் செம்பிலேறபுசமான
செம்பதுவுந்தங்கமாச்சு-மன்னவனைப்போலாகக் கோனான்தாமும் மக
தேவர்சித்தர்முனி தம்மைப்போலும்- தென்னகரிராமருடசெல்வம்
போலும் திறளானகோடிவரை பார்த்திட்டானே ௭௫
பார்த்தானேசித்தருட மகிமைதன்னால் பாங்கானவேமமென்ற
வேதைதன்னை-சீர்த்தியுடன்முறைசெய்த தபோபலத்தால் சீர்பெற்
றான்கோனானுஞ்சித்துதம்மால்-பேர்பெற்றான்கோனானுங் காட்டகத்
தில் பேருலகில்விட்ட குறை யிருந்ததனால் - தார்வேந்தர்மெச்சிட
வேதரணிதன்னில் தாமுமொருசிவயோகி போனானே ௭௬

போகர் சதுரகிரிவதிசயத்தை புலிப்பாணிக்குகூறல்

ஆனானேயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் வப்பனேபுலிப்
பாணிபுத்திவானே-கோனானின் கதையுரைத்தேன் மகிமையல்லோ கோற்
றவனேயின்னமொரு மகிமைசொல்வேன் - தேனானதேவிமனோன்
மணியாள்பாதம்தேற்றமுடன்யான்வணங்கி காதைசொல்வேன்-பா
னுகாலாங்கி நாதர்பாதம் பட்சமுடன்யான்வணங்கிப் பகருவேனே
பகருவேன்புலிப்பாணி மன்னாகேளீர் பாருலகில்குளிகை கொ
ண்டுசுத்தியேதான்-நிகரமுடன்வைகுசத்து வதிசயத்தை நீதியுடன்
யான்கண்டுமலையிற்றேடி - சிகாமதுசதுரகிரி மலையிலப்பா சிறப்புட
னேயானிறங்கி யிருக்குங்காலம் - நிகரமுடன்கிரிதன்னையே சுத்தியல்
லோ நீடூழிகாலம்வரை திரிந்திட்டேனே ௭௮

பனையளவுசித்தரை போகர் கண்டது

திரிந்துமேமலையோரந் தன்னிற்சென்று தீர்க்கமுடன்யான்காணும்வேளை தன்னில்-புரிந்துமேசிகரமது கிரியில்நின்றுபுகழான பனையளவுசித்துதாமும் - தெரிந்துமேமலையைவிட்டுக்கீழிறங்கிசிறப்புடனேமாண்பர்களைக் காணும்வண்ணம்-செரிந்துமேமகிமையது கோடியுண்டு தேசமதில்விதியுள்ளான் காண்பார்பாரே ௭௯

சதுரகிரிசித்தர்பொதிமாட்டுக்காரனை புகையிலைகேட்டது

பாரேதானின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் பாலகனேபுலிப்பாணிமன்னுகேளு-ஆரோதான்பொதிமாட்டுக்காரரப்பா ஆயிரம்பேர் ஒருகூட்டமாகக்கூடி-தேரோடும்பாவனைபோல் மாண்பரெல்லாம்தேற்றமுடன்மலையோரஞ் செல்லும்போது-சீரோடும்புகயிலையின் பொதிகைதன்னை சிறப்பானசித்துமுனி கண்டிட்டாரே ௮௰

கண்டாரேபுகையிலையின் வாசந்தன்னை பாங்கானபனையளவு சித்துதானும்-கொண்டதொருபுகையிலையிலெண்ணமப்பா கொற்றவனேமபக்கமதுமிகவுண்டாகி - எண்ணமுடன்புகையிலையின் கற்பந்தன்னை ஏற்றமுடன்குகைபிடிக்கமனதயர்ந்து வண்ணமுடன்மலையைவிட்டுக்கீழிறங்கி வளமுடனேவருவதற்கு எண்ணினாரே ௮௧

எண்ணியேசித்துமுனி ரிடியார்தாமும்யெழிலானகிரியைவிட்டுயிறங்கும்போது-நின்னவொருபனமரம்போல தோற்றமாச்சுவேகமாகவல்லோயிறங்கும்போது-தண்மையுடன்மேற்பதியைவிட்டுமல்லோதாழ்வேபடிபடியாய் இறங்கும்போது - புண்ணியனார்சித்துமுனி ரிடியார்தாமும் புகழுடனேயிறங்கிவரக் குறைவானாரே ௮௨

குறைகாணரோமமென்ற கசடிபோலும் கொற்றவனேசித்துமுனிரூபங்கண்டார்-திறையானபொதிமாட்டுக் காரரெல்லாம்தீர்க்கமுடன்சித்துமுனியிறங்குமநேர்மை - மறைவாகவாள்ரூபங் குறைந்துகாணும்மகத்தானரோமமதுதெரியவில்லை - முறையானமகத்துவத்தையெண்ணுமற்றான் மூர்க்கமுடன்சித்துதனை வசனிப்பாரே ௮௩

வசனிக்கபொதிமாட்டுக் காரரெல்லாம் வளமையுடன்ஒருவருக்கொருவரைகூறி-நிசமுடையபனையளவு சித்துபோலும் நீதியுடன்சித்துதனைமதியாமற்றான்-புகழுடையதேவாதி சித்துதம்மைபுகழானமகத்துவங்களெண்ணாமற்றான் - கசம்போன்ற ஆயிரம்பேர் மாண்பரெல்லாங்கட்டாகஒருவருக்கோர் பேசுவாரே ௮௪

பேசுவார்மலையைவிட்டு யிறங்குஞ்சித்தை பேரானமகத்துவங்களறியாமற்றான்-காசுபணமில்லாத சித்தரென்றும் கருவானசதுரகிரி

யிருக்குமாண்பன்-வீசுபுகழ்மருத்துதங்க ளில்லாரென்றும் வீரமுட
னொருவருக்கோருகர்துபேசி-ஆசுகவிபோலாக வார்த்தைகூறி வப்ப
வேசம்வாதம் செய்வார்தானே ௮௫

தானனபொதிமாடடுக் காரரெல்லாம் தகமையுடன் ஒருவருக்
கோர்வாதுகூறி-கோனனகுருவெனறமறியாமரமுன் கொற்றவனே
ரும்பலதுமிகவுங்கூடி-தேனனபுகையிலையினபொதிகைதன்னைதேற
றமுடன்தானிறக்கியமுதுசொல்ல-மானனசாவடியாங்கிரியோரந்தான்
மகத்தான அமுதுகொள்ள நண்ணுவாரே ௮௬

நண்ணியேயேகாந்த கூட்டங்கன்னில் நலமுடனேதானிருக்கும்
வேளைப்பா-திண்ணமுடன்கிரிதனிலே யிருந்தசித்து திர்க்கமுடன்
மாண்பருடகூட்டந்தன்னில் - வண்மையாய்பொதிமாட்டுக் காரர்தம்
மைகதகமையுடன்சித்துமுனி யருகிறசென்று-உண்ணவேபுகையிலைதி
ன்கற்பமப்பா வுத்தமனேயெனக்கருளு மென்றிட்டாரே ௮௭

என்றுமேயேதுரைத்தார் முனிவாசாமும் யெழிலானமாண்பர்
களின்முகத்தைநோக்கி-குன்றுமேல்சித்துமுனி யொருவருண்டுகுவ
லயத்திலொருநாளும் வருவதில்லை- இன்றுமுதல்காற்றினது வாடை
யாலே யெழிலானபுகையிலையின்வாசமப்பா- வென்றிடவேயவர்தமக
குகாணலாச்சு விட்டகுறையிருந்ததனுல் கிடைக்கலாச்சே ௮௮

ஆச்சப்பாபொதிமாட்டுக்காரர்பாலா வப்பனேயெந்தனுக்குமன
துவந்து-மூச்சடகித்தானிருக்குஞ் சித்துகானும்முனேயானவனைந்து
நீடிமுனிவருக்கு-பாச்சலென்றபுகையிலையின் கற்பமப்பா பட்சமுட
ன்நீரவர்க்குத்தருவீரானல்-மாச்சலென்றவினையகலுமுந்தமக்கு மாக
யோகபுண்ணியமது கிட்டும்பாரே ௮௯

பொதிமாட்டுக்காரர்கள் சித்தர்பெருமையறியாமல்
பகடிசெய்யல்

பாரேகானென்றலுமே யோகிதானும பாங்குடனேசித்துமுனி
நாதருக்கு-சீரோகாண்புகையிலையின் கற்பந்தானும் சிறப்புடனேயான்
களதுகொடுப்போமானல்-நேரோதானுமமாலே மகிமையென்ன நேர்
மையுடனெந்தமக்குக்கூறுமென்றார்-தீரோதாஞ்சித்துமுனி ரிடியார்
தாமும் சிறப்புடனேமனதுவந்து கூறுவாரே ௯௰

கூறுவார்வாய்திறந்து முனியர்தாமும் கொப்பெனவேபொதி
மாட்டுக்காரருக்கு-தேறுதலாய்வார்த்தையது கூறும்போதுதேற்றமு
டனதிலொருவன்தானெழுந்து-மாறுதலாய்சித்துமுனி தம்மைப்பார

த்துமகத்தானரிடியாரேபண்பாய்க்கேளும்-ஆறுபுடைசூழ்ந்திருக்கும்
நதியோரத்தில் அசோகமென்றவிருட்சமது விழுகலாச்சே ௯௧

சித்துமுனிசாபந்த அசோகமரத்தை நேராய்நிறுத்தல்

விழுந்ததொரு அசோகமென்ற விருட்சந்தன்னை வீறுடனே
நிமிரவதுசெய்வீரானால் - பழுதுபடாத்திருமேனி தன்றனக்குபட்ச
முடன்கற்பமதுதருவோம்நாதா - வழுதுணைபாகற்பமது கொண்ட
போது மகத்தானசித்துமுனியெங்களுக்கு-முழுதுமேபுகைபிலேயின்
கற்பந்தன்னை முனைபாகய ங்கொடுப்போங் காணீர்தானே ௯௨

காணவேமாண்பரெல்லாங் கூறும்போது கருவானசித்துமுனி
ரிடியார்தாமும்-தோணவேயவர்களுக்கு பிரமைதோன்ற துப்புர
வாய்சித்துமுனிநாதரல்லோ-வேணதொருகாயாதிகொண்றசித்துவே
கமுடனசோகமென்ற விருட்சந்தன்னை - பூணவேதானோக்கிபார்த்து
மலலோ புகழானவிருட்சமதை நிமிர்த்தினாரே ௯௩

நிமிர்த்தவே விருட்சமது தானெழுந்து நீதியுட னிலையூன்றி
நிற்கும்போது, சமர்த்துள்ளசித்துமுனிதம்மைக்கண்டு தாரணியிலி
ம்மகிமைபெரிதுமல்ல, சமர்போன்றகானகததிலிருக்குங்கல்லாம்சடி
தானமலைகலலைத தன்னைத்தானும், சமர்ந்துமேயெந்தனிடங்கொண்
டுவந்துசுந்தரரேகொடுத்தாலே நம்புவோமே ௯௪

நம்புவோமென்றல்லோமாண்பரெல்லாம்நயமுடனேவார்த்தை
யது மனதுவந்து-வம்புடனேசிததுமுனிதம்மைக்கண்டுவளமுடனே
வார்த்தையதுகூறும்போது, தெம்புடனேகுண்ணுமலைதன்னைத்தா
க்கிதிரமுடன்பொதிமாட்டுக்காரர்முன்னே, கும்பல்தனில்குண்ணத
னையெடுத்துமல்லோகொப்பெனவேகொணடல்லோ போட்டிட்டாரே

போட்டாரேசித்துமுனிரிடியார்தாமும் பொங்கமுடன்கொண்டு
வந்துமாண்பர்முன்னே, நீட்டமுடன்குண்ணதனைக் கொண்டுவந்த
நிலையானவித்தையதுமகிமையல்ல, வாட்டமுடன்பின்னுமொருமார்க்
கஞ்செய்தால் மகத்தானமகிமையென்று நம்பியல்லோ, கூட்டமுடனு
நகமக்குப்பணிகள்செய்து கொப்பெனவே சீஷர்களா யிருப்போம்
தானே ௯௫

தானவார்த்தையது கேட்டபோது தண்மையுடன்சிவஞான
சித்துதாமும், கோணபொதிமாட்டுக் காரர்தம்மை கொப்பெனவே
மகிமையதுயென்னவேண்டும், தேனமகிமையது வேண்டுமானல்
தேற்றமுடன்சித்தொளிவுஞ்செய்யக்கூடும், மானமகாதேவர் கடா
ட்சத்தாலே மார்ச்சமுடன் மகிமையது வதிதமுண்டே ௯௭

பொதிமாட்டுக்காரர் சித்தனை மறைவாகுவிக்கச் சொன்னது

தருவேனென்றசித்தமுனி கூறும்போது தகமையுள்ளபொதி
மாட்டுக்காரர்தாமும்-குருவானசித்தமுனி ரிஷியாரேகேள் சொற்ற
வரேயெங்களுக்குயின்றுதானும்- பருவமையுமின்னலிடி காங்கல்தா
மும் பட்சமுடன்வாசவமைப்பிராலல்லோ - திருவானகுருவென்று
வும்மைத்தானும் நீரமுடனென்றுளும் வந்திப்போமே ௯௯

வந்திப்போமும்மையொரு குருவாயெண்ணி மகத்தானசாதக்
கன்னீர்தானென்றும்- சிந்திப்போஞ்சதாகால மர்ச்சித்தேதான் சிருட
னேசின்மயத்தை தமனதிலுன்னி-எங்காளுக்கிரிவாழுமபதாம்புயத்தை
யெழிலானசற்குருவை மெய்க்குருவென்றெண்ணி-பந்தியேகிரி சனி
லேமாண்பரெல்லாம் பாங்குடனேசதாநித்த மர்ச்சிப்போமே ௱

போமேதான்வார்த்தையது கூறும்போது பொங்கமுடன்வன
த்துமகா ரிடியார்தாமும்-தாமேதான்சொன்னபடி வனத்தில்தானும்
தகமையுடன்மண்காற்று மழையுமாக- ஆமேதான்மின்னலிடி ஜோதி
போலும் அவனியெலாங்தத்தளிக்கமிகவேசெய்தார்-வேமேதான்பொ
திமாட்டுக்காரரெல்லாம் விருப்பமுடன்கண்டல்லோ பிரமித்தாரே

பிரமிக்கசிறுபாலர் மாண்பரெல்லாமபோனசித்தமுனிரிடியார்
கொள்ளவேஅனுபானந்தன்னிலீய கொற்றவனேகாசமதுவாறும்போகும், உள்ளதொருபாண்டுவகை யாறுந்திரும் வுத்தமனேவாயுவென்றதெண்பதும்போம், கள்ளமிலாப் பித்தமது நாற்பதும்போம் கயரோகஞ்சில்விஷங்க ளற்றுப்போகும், வள்ளலுயர்மேகமென்ற குஷ்டரோகம் வண்மைபெறுந் தாமரையுந்தானும்போமே. சூசூங

போமேதான் பொல்லாதரோகம்போகும் போக்கானவாய்நாற்றம் வெள்ளைதீரும், நாமேதான்சொன்னபடி நளிர்சுரங்கள் நலமிலாக் கிராணியது ஆறுந்தீரும், வேமேதான்நேத்ரவலி தொண்ணூற்றாறும் விட்டகலும்மேனியதுகாந்திமெத்த, ஆமேதான்நாதாக்கள் கொண்ட கற்பம்மவப்பனே நாகசெந்தூரம்பாரே. சுசுச

பாரேதான்செந்தூரமுண்டபேர்க்கு பாலகனையேழானை பெலனுண்டாகும், நேரேதான்கிருஷ்ணவதாரனைப்போல்நெடிதான ஸ்ரீ லீலை மன்மதன்காண், சீரேதான்செந்தூரந்தானுமல்லோ ஸ்ரீராமர் கொண்டதொருகற்பமாகும், வேரேதான்கற்பமது யிதற்கிடுண்டோவேதாந்தத்தாய்கொடுத்த கற்பமாச்சே. சுசுரு

கற்பமாம்நாகமென்ற செந்தூரந்தான் காலாங்கிநாதருடகடாட்சத்தாலே, சொற்பமென்றுநினையாதே துய்யபாலா சுந்தரனே சமுசாரிக்கானவித்தை, விற்பனர்கள் கொண்டாடும் வேதைதன்னை விள்ளாதே யொருவருக்கும் விள்ளவேண்டாம், அற்பமென்று நினையாதே வருள்மைந்தாகேள் ஆச்சரியமானதொரு மகிமைதானே, சுசுசு

பூரக்கட்டுவேதை.

மகிமையாமின்னமொரு போக்குசொல்வேன் மகத்தான புலிப்பாணிமன்னாகேளு, அகிலமெலாங்கன்புகழுங் காலாங்கிநாதர் வன்புடனேயெந்தமக்குச்சொன்னநீதி, சகிதமுடனுந்தமக்கு ஞானோபித்து சகலகலைக்கியானமெல்லா முபதேசிப்பேன், விகிதாய்க்கருமிகளு மும்மைப்பற்றி விரமுடன்நேசமது கொள்வார்பாரே சுசுஎ

பாரானகருமிகளு மும்மைவேண்டி பாருலகில்கிரிகைவதஞ் செய்யவென்று காரானநல்லவர்போல் வார்த்தைகூறி கடுஞ்சினத்தை மனதிலுள்ளி மெய்யேகூர்வார், நோரானசிடிகையென்ற வேதமார்க்கம் நேர்மையுடன் தாமுனாக்க வதிதஞ்சொல்வார், கூறுனவார்த்தையது மிகவிடாமல் குணமுடனேநயமதுவாய்நேசங்கொள்ளே. சுசுஅ

கொள்ளவென்றால் பூரணத்தைக்கேட்பாரப்பா கொற்றவனே மர்ம்மமதைவெளிவிடாதே, தெள்ளுதமிழ்வாகடத்தைப் பேசுபேசு தே ஜாளிவின் சின்மயத்தை வெளிவிடாதே, உள்ளதொரு பொருளெல்லாமுவமையோடும் வுத்தமனே தடம்பிரித்துக்கேட்பாரப்பா, கள்ளமனமில்லாமல் கபடகற்றி கண்மணியேவுண்மையது புகன்றிடாயே. ()

புகலவேபுலிப்பாணி மன்னுகேளு புகழானபூரமென்ற வேதைதன்னை, சகலமுனிசித்தர்களுஞ் சொன்னாரப்பா தாரணியில் மர்மமதாய்ச் சொல்லிவிட்டார், திகலவேசாத்திரங்கள் கோடாகோடி நீதியுடன்கட்டுமுறை யனேகங்கண்டார், அகலமுள்ள யிரும்பென்ற பாண்டந்தன்னை வப்பனே வெண்மையதாய்த் துலக்கிப்போடே. (௯௭௰)

போடேதான் பூரமென்றசரக்குதன்னை பொங்கமுடனயச்சட்டிதன்னிலிட்டு, நீடவேபலமொன்றாய் நிறுத்துக்கொண்டு நிஷ்களங்க மானவெள்ளாட்டுப்பாலல், சாடவேசுருக்கதுவு மெட்டுசாமம் தன்மையுடன்தான்கொடுத்துப் பின்னுங்கேளு, கூடவேபசுவின்பால் நாலுசாமம் செற்றவனேதான்கொடுத்து யெடுத்திடாயே. (௯௭௧)

எடுக்கவேபூரமதுவென்னசொல்வேன் யெழிலான தந்தமதுபோலேகாணும், ஒடுக்கமதாய்வுருகியல்லோ யிறுகிக்காட்டும் வுத்தமனே கனநிறம்போலேகாணும், தொடுக்கவேவெடியுப்புபலமொன்றாகும் தோராமல்சீனமது பலமொன்றாகும், விடுத்தவொரு துருசதுவும் பலமொன்றாகும் விந்தகனே சிங்கியதுபலமொன்றாமே, (௯௭௨)

ஒன்றானசரக்கெல்லாங் கல்வமிட்டு வுத்தமனேநாதாக்கள்சொன்னவண்ணம், வென்றிடவேகல்வமதிலிட்டுமைந்தா வேகமுள்ள வருக்கன்பால்தன்னாலாட்டி, குன்றானபூரமதுக்கப்பூட்டி கூர்மையுடன்ரவிதனிலே காயப்போடு, நன்றானசீலையதுயேழுசெய்து நலமுடனேயெரிக்கும்வகை வரிசைகேளே. (௯௭௩)

வரிசையாய்த்தளவாயாம் பாண்டந்தன்னில் வகையுடனேபூமணலைக்கொட்டியேதான், பரியானபூரமதை யெடுத்துமைந்தா பாங்குபெறமணலதனிற்பொதிந்துமல்லோ, விரிவான மணலதனால் மேலுமூடி மேலுமந்தப் பாண்டமிட்டுசில்லுசெய்து, துரிதமுடன்ரவிதனிலே காயவைத்து துப்புரவாய் வாலுகையாலேற்றிடாயே. (௯௭௪)

ஏற்றியேதீபமதுவென்னசொல்வேன் எழிலானபுலிப்பாணி புத்திமானே, போற்றியேவம்பாளின் பதாம்புயத்தை பொங்கமுடன் தானெரிப்பாய்க் கமலம்போலே, நீற்றவேபூரமதுகட்டுவாகி நீதியுடன்தவளம்போல்நிற்கும்பாரு, ஆற்றியேஜாமமது நாலுமாகும் வப்பனே தானெரித்து யெடுத்திடாயே. (௯௭௫)

எடுக்கவேகணபதியைப்போற்றிசெய்து யெழிலானபாண்டமது திறந்துபாரு, விடுத்தவொருபூரமதுயென்னசொல்வேன் விண்ணுலகு

சந்திரன்போல்விளக்கமெத்த, தொடுத்ததொரு பூரமதைத் தானெடுத்து சோராமல்கவசமதைநீக்கியேதான்; தடுத்திடா மருந்துவகை யானுரைப்பேன் தற்பரனேசிற்பரனேசார்ந்துகேளே, (௯௭௬)

சார்ந்துமேபூரமதை யெடுத்துபாலா தன்மையுடன் பற்பமதுசெய்வதற்கு, ஓர்ந்துமேபியமென்ற செந்தூரத்தை ஓர்காமேபோகநாதாக்கள்மறைத்துவைத்தார், தீர்ந்ததொருசெந்தூரந்தனைபெடுத்து திர்க்கமுடன் பூரமதுக்கிடையேதூக்கி, ஆர்ந்துமே சிற்றண்டக்கருவிதனிலேவைப்பனை தானறைப்பாய் சாமமதனாலே. (௯௭௭)

நாலானசாமமதுவறைத்துபின்பு நவமாகப் பூரமதுக் கங்கிபூட்டி, பாலானரவிதனிலே காயப்போடு பட்சமுடன்தானெடுத்துச் சீலைசெய்து, மாலானமண்மறைவிற் புடத்தைப்பாரு மகத்தான கோழியென்றபுடமேயாகும், சூலானபூரமதுக்குள்ளிருந்து சுந்தரனேசூதமது மடியும்பாரே. (௯௭௮)

மடியுமேயிப்படிதான் பத்துமுறைபோடுமோர்க்கமுடனீயமென்ற செந்தூரத்தால், படிபடியாய்கருவிட்டு ஆட்டிஆட்டிபாலகனேபூரமதுக்கங்கிபூட்டி, விடிந்தபின்புரவிதனிலே காயவைத்து வித்தனே சீலையதுவலுவாய்ச்செய்து, முடிந்தபின்புமுன்போலேபுடமும்போடு முனையானபதமாறியெடுக்கக்கேளே. (௯௭௯)

கேளேதான்பூரமது யிறுகியல்லோ கெடியானசூதமது மடங்கிநிற்கும், வீளேதான்பூரமதைபெடுத்துமைந்தா விருப்பமுடன் பின்னுமல்லோவதிதங்கேளு, நாளேதான்போகாமல் நாதவானே நவிலுகிறேன் பஞ்சபூதவாராகாரம், சூளேதான் துநூசவெடி யுப்புக்காரம் சுந்தரனே வருஞ்சாரஞ் சீனந்தானே. (௯௮௰)

சீனமாங்கரியுப்புத்தானுஞ்சேர்த்து சிறப்புடனேசெவ்வாலம் பாலாலாட்டி, சோனதமாம்பூரத்துக்கங்கிபூட்டி சோறாமல்ரவிதனிலேகாயப்போடு, கானமருஞ் சுண்ணாம்புச்சீலைசெய்து கடுரவியால் பின்னுமங்கேகாயவைத்து, ஊனமது வாராமல் மணல்தானப்பா வுத்தமனே கோழியென்ற புடத்தைப்போடே, (௯௮௧)

புடமாறித்தீர்ந்தபின்பு யெடுத்துப்பாரு புகழானஆறுவகை சாக்குதன்னால், தடமானபஞ்சபூதவாராகாரம் தன்மையுடன் சாக்கதுவுஞ்

சேர்ந்துமல்லோ, திடமாகப்புகழடங்கிவீரடங்கி தீர்க்கமுள்ள பூரம யென்னசொல்வேன், மடலானபூரமது வுருகியல்லோ மார்க்கமுடன் தந்தம்போலிருக்கும்பாரே. சூ அ௨

தந்தமாம்பூரமதுகட்டுமானால் தண்மையுள்ளவேதையதுயென் சொல்வேன், அந்தமுடன்பூரமதை யெடுத்துபாலா ஆகாகாவாரகமென்றசெய்பினாலே பந்தமுடன்சுருக்கதுவும் நாலுஜாமம் பாகமுடன் தான்கொடுக்க முழுக்கட்டாகும், விந்தையுடன்பூரமது சிடிகைவேதைவிண்ணுலகில் மண்ணுலகில் காணார்தாமே. சூ அ௩

காணாமல்சித்துமுனிநாதர்தாமும் கருவானசாத்திரங்கள் வதிதஞ் சொன்னார், தோணககருக்குருவும் முறையாடெல்லாம் தோறுமலபடிவைத்தார்நூல்கள்தோறும, வீணாதான் பேரகாமல் சாத்திரத்தில் விட்டகுறைபிருந்தாலே லபிக்குமென்று, மாணாக்களறியவென்று பல நூலெல்லாம் மானிலத்தில்பலவிதமாய்க் கூறினாரே, சூ அ௪

கூறினார்வாதநூலனேகஞ்சொல்லி குணமானபாகமதைவிட்டறுத்து, தேறினார்நூல்களெல்லாமுன்பின்னாக தேற்றமுடன்கைமறைப்பாய்க்கட்டறுத்து, மீறியேசிலநூலி லுண்மைகூறி மிக்கான செய்பாகம் வேறறுத்து, சீறியேமாணாக்கர்தமைச்சினந்து சீரறுத்துவாரறுத்துதிகைத்திட்டாரே. சூ அ௫

திகைத்ததொருநூல்களெல்லா முளவாராய்ந்து தீர்க்கமுடன் காலாங்கிபதம்பணிந்து, பகைத்ததொருசித்தர்களைக் காங்குவித்து பட்சமுடனஞ்சலிகள் மிகவுஞ்செய்து, வகையுடனேகுளிகைபூண்டுமல்லோ வளமானசீனபதி யடியேன்சென்று, தகமையுடன்குருபாணர்பதாம்புயத்தை தாள்பணிந்துசதாகாலந் தெரிசித்தேனே- சூ அ௬

தெரிசித்தேன் சமாதிமுகம்பதிவாய்நின்று தேற்றமுடன் குருவணக்கமதிகங்கூறி, புரிசடையோன் பதாம்புயத்தைமனதிலெண்ணி பூபாலகாலாங்கிநாதபாதா, தெரியாத யெங்கனுக்கு வுண்மைகூறி தெளிவானவுபதேசம்மிகவேநண்ணி, சரிபானசமாதியதுபெறவேவேண்டி சட்டமுடன்வரமெனக்கு வருளென்றேனே. சூ அ௭

என்றதொரு வாக்கதுவுங்கூறும்போது எழிலானகாலாங்கி நாதர்தாமும், தென்றிசையில்கும்பமுனி நாதருக்கு தேற்றமுடன்தரிசனைகள்தந்தார்போலே, சென்றதொருயெந்தனுக்கு வாசீர்மங்கள் தெளிவா

கமனதுவந்து வதிதங்கொண்டு, கன்றழுகுங் காலமதில் தாயுவந்து கடும்பசிக்குப் பால்கொடுத்தக்கதைபோலாச்சே. சூ அ அ

ஆச்சப்பாயெந்தனுக்கு வுபதேசங்கள் அவனிதனி லாரதுதான் சொன்னாரில்லை, மூச்சடங்கிசென்றதொரு காலாங்கிநாதர் முனையாகஎந்தனுக்குவுண்மைகூறி, மாச்சனுடன் சமாதிமுகந்தானிருந்து மன்னவனேகருவிகரணாதியந்தம், ஏச்சலதுவாராமல் பெற்றுமல்லோ யெழிலானசினபதிகடந்திட்டேனே. சூ அகூ

கடந்தேனேசிலபதிநீக்கியல்லோ காலாங்கிநாதருடகிருபையாலும் சுடர்போன்றமனோன்மணியாள் கடாக்ஷத்தாலும் சுந்தரனே வஷ்டதிசைதுடந்துவந்தேன, திடமானமுறைபாடு வழிபாடெல்லாம் தீர்க்கமுடன்குணபாடு தெரிந்துமேதான், சடமுடனேகாயாதிகற்பங்கொண்டு தாரணியில்நெடுங்காலமிருந்திட்டேனே. சூ கூ௰

இருந்தேனேநெடுங்காலங் குளிகைகொண்டு எழிலான சமாதிமுமெல்லாங்கண்டு, பொருந்தவேயுந்தமக்கு வுபதேசங்கள் பொங்கமுன்கொட்டிவைத்தே னிடங்கொள்ளாது, இருந்தவேபூரமென்றகாயகம் திட்டமுடன்குன்றிவிதங்கொண்டாயானால், அருந்தியதோர்தேகதுஜோதிமின்னும் வப்பனேபூரமதின் வேகந்தானே. சூ கூக

தானானகுருசொன்னவாக்குபோலே சட்டமுடன் மண்டலந்தானுண்பாயானால், பானானதேகமதுயென்னசொல்வேன் பரிதிகண்ட பனிபாலே நோய்கள்தீர்ந்து, தேனானமேனியது காந்திவீசும் தேசமதில்தியாளியறிவான்பாரு, மானானமகாதேவர்கடாட்சத்தாலே மார்க்கமுனுந்தமக்கு வமைக்கலாச்சே. சூ கூஉ

வேதைமுகம்.

அமைப்பானபூரமதையெடுத்துமைந்தா வப்பனேமதிதனிலேநூற்றுக்கொன்று, நிமைப்பொழுதுங்காலமது வீண்போகாமல் நீதியுள்ளபுலிப்பாணிபுனிதவானே, சுமைதாங்குமாலியாளர்க் குறைதீர்த்தாப்போல் சுந்தரனேசிடிகையென்றவேதைதன்னை, அமைப்புடனேமதிதாவமுருகும்போது வப்பனேபூரமது வொன்றுதாக்கே. சூ கூங

தாக்கியேவுருக்குமுகந்தன்னிலப்பா தகமையுடன்வெள்ளிதனைஎத்துப்பாரு, ஆக்கியோன்வாக்கதுவும்பொய்யாதப்பா வப்பனேவெள்ளியதுயென்னசொல்வேன், பாக்கியமுண்டாகுதற்குப் பசுமையாகி பசு

ங்குடனே பக்கனாயாம்மாற்றுமாகும், வாக்கதுவும் பொய்யாதுனமைந்
தாகேளு வண்மையுள்ளபிறவியென்றதங்கபாச்சே. ௬௯௪

தங்கமாம்சுயக்தங்கம்பிறவித்தங்கம் தாரணியில் நாதாக்கள் மெச்
சுந்தங்கம், புங்கசித்திக்குகந்ததொருவோசத்தங்கம் புகழானசமுசாரிக்
கானதங்கம், வங்கமதற்கையாதவலுத்ததங்கம் வளம்பெரியசித்துமு
னிபோற்றுந்தங்கம், இவகிதமாமாண்பர்களுக்குகந்ததங்கம் வெழில
னடராஜ தங்கம்பாரே. ௬௯௫

பாரேதான் புலிப்பாணி மைந்தாகேளு பாலகனே யின்னமொரு
போக்குசொல்வேன், நேரேதான்செம்பதுவுங்களஞ்சிநூறு. நேர்மையு
டன்குகைதனிலேவிட்டுமைந்தா, தீரேதான்பாகமது பிசகிடாமல் தீர்க்
கமுடன்த னுருக்கி மருந்தைதீவாய், கூரேதான் காரமது விட்டுருக்கி
கொற்றவனே குருவென்றுகொடுத்திடாயே. ௬௯௬

கொடுத்தவுடன் செம்பதுவுமுருக்கியல்லோ கோவேந்தர் புலிப்
பாணிமன்னுகேளு, அடுத்தவிஷஞ்செம்பினது வூரலேகிவப்பனேமா
ற்றதுவுஞ்சொல்லப்போமோ, தடுத்திடாவர்ணமது வென்னசொல்வே
ன் தாரணியில் நாதாக்கள்மறைத்தசூத்து, நடுப்படையில்வில்லுக்குநா
ணுமற்று நாணிலத்தில்விழுந்தொரு கதைபோலாச்சே. ௬௯௭

கதைபானசெம்பதுவு மாற்றேறுமெத்த காசினியிலாரறிவார்மகிமை
தன்னை, சதைபாமல்வாரடித்துப் புடத்தைப்போடு சட்டமுடன் தங்க
மதுவென்னசொல்வேன், உதைபாதுபுடத்துக்கு வசைந்திடாது உத்த
மனேவங்கமதுக்குறகிடாது, பதையாமல்வாரடித்துப்புடந்தான்போ
ட பாங்குபெறசெம்பொன்னின் மகிமைபாரே. ௬௯௮

பாரேதான் கவசகுண்டலத்துக்காதி பாங்குடையசிவயோகிக்குக
ந்ததங்கம், நேரேதான்வருமைவருங்காலந்தன்னில் நேர்மையுடனுண்
பதற்குச்சொன்னேனே, ஆரேதான்சொல்வார்களிந்தப்போக்கு வப்ப
னேயாமுனக்குவுரைத்தேனப்பா, சீரேதான்நெடுங்காலந்தவமிருந்துசி
த்தரேனேவேகமுகந் செய்துபாரே. ௬௯௯

செய்துமேகுருநவணக்கமிகவுங்கூறி செயலானபாக்கியமுமதிகங்
கொண்டு, வைபகங்கள்தான்புகழ புத்திவானுப் வளம்பெரிய நாதாக்க
ள்பதம்பணிந்து, ஐயநல்லசிவவேடம் பூண்டுமல்லோ துப்புரவாய்
யோகனிஷ்டைதனிலிருந்து, மையவேயுனக்குகந்த சிஷன்தேடிபாலக
னேவுபதேசஞ் செய்வாய்தானே. (௭௦௦)

கொச்சிவீரக்கட்டு,

தானனையின்னமொருபோக்குச்சொல்வேன் தகமையுள்ளநற்பாலாகண்புள்ளானே,கோனனையெனைதையர்காளாங்கிநாதர் கொற்றவனொந்தனுக்குச்சொன்னநீதி,சேனனமனோன்மணியாள் கடாட்சத்தாலே தெளிவுடனேயெந்தனுக்கு வுபதேசித்தார் பானனபாஞ்சுடரைப்போற்றியேதான்பாடுகிறேன் கொச்சியென்றவேதைகாணே ௭௱௧

காணவேகொச்சியென்ற வீரமப்பா கவனமுடன்பலமது தான்கொண்டுவந்து தோணவேலட்சுமியாள்வீற்றிருக்கும் துகையானவில்வமதுபழந்தான்பத்து நீணவேபழமதனைக்கீறியல்லோ நீதியுடன்வீரமதையுள்ளமைத்து மாணவேசீலையதுவலுவாய்ச்செய்து மயங்காமல்மணலமறைவிற்புடத்தைப்போடே ௭௱௨

போடவேயிப்படியே பத்துமுறைபோடுபோக்கானவீரமதுகட்டிப்போகும் நீடவேவீரமதுகட்டினுக்கால்நீடாழியுலகமெலாங்கட்டலாம்பார் சாடவேவீரமதைத்தானெடுத்துசட்டமுடனியமென்றசெந்தூரத்தை ஆடவேபழச்சாற்றால்தானரைத்து வப்பனேவீரமதுக்கக்கிபூட்டே ௭௱௩

பூட்டியேரவித்னிலேகாயவைத்து பொங்கமுடன்சீலையது வலுவாய்ச்செய்து நீட்டியேமணல்மறைவிற்புடத்தைப்போடு நீதியுடன்வீரமது புகையடங்கி தாட்டிகமாய்வுருகியதுகட்டிநிற்கும் தாடாண்மையானதொருலப்புதானும் கூட்டியேபின்னுமந்த வீரந்தன்னைருணமாகமறுபடியுஞ்செப்பக்கேளே ௭௱௪

செப்பவென்றலின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் செயலானவீரமதுதானெடுத்து ஒப்பமுடன் மிருதாருசிங்கிதன்னை ஓகோகோ,நாதாக்கள் மறைப்புநீக்கி தபபிதங்கள்வாராமல் சிங்கிதன்னை சட்டமுடன் வெண்கருவால்தானரைத்து மெய்ப்புடனே வீரமதற்கங்கிபூட்டி மேன்மையுடன் ரவிதனிலேகாயப்போடே ௭௱௫

காய்ந்தபின்புசீலையதுவலுவாய்ச்செய்துகவனமுடன்மண்மறைவிற்புடத்தைப்போடு தேய்ந்ததொரு வீரமதுகட்டுமாகிதேற்றமுடனபடிகமென்றகல்லுபோலாம் மாய்ந்ததொரு வீரமதைத்தானெடுத்துமறுபடியும்முன்போலப்பாகஞ்செய்து பாய்ந்ததொருமண்மறைவிற்புடந்தான்பத்து பாலகனேபோட்டுவாககட்டிப்போமே ௭௱௬

கட்டியதோர்வீரமதைத்தானெடுத்துகலங்காமல் சீலையதுவிலக்கியல்லோ இட்டமுடன்பின்னுமொருபாகஞ்சொல்வேன் தீர்கசமுள்

ளபுலிப்பாணிபுலக்கேளீர் எட்டியென்றவித்ததுவும்பலங்காணேந்து
யெழிலாகக்கிம்பழத்தின்சாற்றினாலேகொட்டியதோர்விஷமதனைதகா
னமைத்து கூறவேவீரமதற்கக்கிட்டே ௭௱௭

அங்கியென்றவீரமதைதாவியில்வைத்துலப்பனேயெழுசிலைவலு
வாய்ச்செய்து இங்கிதபாய்மண்மறைவிற்புடத்தைப்போடு யெழிலா
னபுடமாறியெடுத்துப்பாரு சங்கையில்லாவீரமது யென்னசொல்வே
ன்சட்டமுடன்மணிபோலேயிறுகிநிற்கும் வங்கமென்றமணிபோலே
தோற்றும்பாருவளமையுள்ளவீரமணியாகுந்தானே ௭௱௮

தானானவீரமணி யென்னசொல்வேன் தாக்கானபுடமதுவுமுன்
போலாக கோணான புடமதுவும் நூறுபோடு கொற்றவனேவீரமணி
யென்னசொல்வேன் மானானவீரமணிகட்டினாக்கால் மதகரியிலேறு
ற்கு ஐபமுண்டோ தேனானமனோன்மணியாள்கடாட்சத்தாலேதே
ஜோளிவின் வீரமணிகாணலாமே ௭௱௯

காணலாம் வீரமணிதனையெடுத்து கனமானமதகரியின் மேலே
சென்று பூணவேவீரமணிகட்டினேன்யான் புகழாக யெதிரியென்ற
மான்பர்தம்மை வேணவேமண்டைதனைப்பிளப்பேனென்று விருது
பறைபறைந்திடலாமணியினாலே நாணவேசித்தாதி முனிவர்தாமும்
நடுங்குவார்மணிதனையே கண்டபோதே ௭௱௰

கண்டதொருநாதாந்தசித்துதாமும் கனமுடனேயுந்தனைத்தான்
போற்றுவார்கள் மண்டலத்து ராஜாதிராஜர்தாமும் மகாவீரனென்ற
ல்லோமதிப்பார்தானும் கொண்டல்வண்ண அச்சுதனார் கிருஷ்ணதா
ரன் குவலயத்தில் கொண்டதொரு குளிகையென்பார் தெண்டிரை
சூழ்மாண்பரெல்லாமும்மையல்லோதேர்ந்தெதொருசித்துமுனியென்
பார்பாரே, ௭௱௰௧

பாரேதான்வீரமென்றகுளிகைதன்னை பாங்குடனேதானெடுத்
துப்பகரக்கேளும் நேரேதானவினை தமுதகின்பேரில்நேர்மையுடன்
தான்வைக்கப்பால்கொடாது சீரேதான்வீரமணியாட்டந்தன்னால்சிற
ப்பானபாலதுவுஞ்சுவறிடபோகும் நீரேதான்மணியதனை யெடுத்தா
யானால் ஷிஷகளங்கமானபால் சுரக்கும்பாரே ௭௱௰௨

சுரக்குமேமணிதனையேயெடுத்துபாலாசுந்தரனேசொல்லுகிறே
ன்சூட்சம்பாரு இரக்கமுடனுன்மீதில்மனதுவந்துயெழிலானமணியி
னதுபூட்டகத்தை திறக்கவே மணியென்றவண்மைதன்னை திர்க்கமுட
ன்புகலுகிறேன் திண்ணம்பாரு பறக்கவேவாயுவேகந் தன்னைப்போ
லே பாரினிலேவாயிலிட்டுநடக்கலாமே ௭௱௰௩

நடக்கவேநெடுந்தூரம்நெடுங்காலந்தான் நடராஜசுந்தரனேகவில் லேனப்பா அடக்கமுடன்குளிகைதனைவாயிலிட்டு அவனியெலாந் டந்தாலுமசைந்திடாது படம்வரையும்மாதர்தனைப்புணர்ந்திட்டாலு ம்பகரவேகூடாதலிலாவண்ணம் சடமதுவுந்தோன்றுது யுந்தமக்கு சட்டமுடன்குளிகைதனைக்கொள்வீர்தாமே ௭௱௰௪

குளிகைவேதைநமுகம்

கொள்ளவேயின்னமொரு போக்குசொல்வேன் குணமானபுலி ப்பாணிக்குபேத்திரகேள் எள்ளளவுப்பிசகாதுயிந்தபாகம்பெறுவா னவீரமணிவேதையப்பா விள்ளாதேபொருவருக்குமிந்தபாகம் விட் டகுறையிருந்ததினாலுந்தமக்கு களளமதுவாராமல் மனதுவந்தாகண் மணிகேட்சித்தேன்பண்புதானே ௭௱௰௫

பண்பானவீரமணிதனையெடுத்துபார் வேந்தாவெள்வங்கருசே தாரப்பாவண்ணமுடனதானுருக்கிகுகையிலிட்டு திறமுடனேவீரம ணிதனைபெடுத்து அண்ணலார்பதம்போற்றியடிபணிந்துவப்பனேகு ளிகைதுயெடுத்துமைந்தா வண்ணமுடன்வங்கமது வுருகும்போது வளம்பெறவேகுளிகைதனைப்பொதிந்திடாயே ௭௱௰௬

பொதியவேநீநன்றுமேலெழும்பி பொங்கமுடன் பணியதுவுந் தெறிக்கும்பாரு மதிபோன்றவெள்ளியது பென்னசொல்வேன்பகந் தானவெள்ளியட்டீர்தனேயி அதிபெறவேவெள்ளியது பாற்றுமெ த்தகைப்புரவாய்ச்சொல்வதற்கு நாவுமில்லைபதியானவீரமணிதனிலுதி க்கபரிதிபென்றவெள்ளியதுகாணலாமே ௭௱௰௭

காணவேயின்னமொருபோக்குசொல்வேன் கண்மணியேபுலிப் பாணிகவிராசேந்திரா ஆணவத்தாலவந்ததொரு சசரோமங்கள்வட்ப னேதேனதனிலுபாணித்தால் நாணமதுவாராமல்நல்ரே கங்கள் நா டாதுமேனிவிட்டெழுகும்பாரு மாணமருக்கல்வியுள்ள புத்திமானே மார்க்கமுடனின்னமொருமறுமங்கேளே ௭௱௰௮

கேளப்பர்மணியதனையெடுத்துமைந்தா கெவனமுடன்பாணித ணிதபதனம்பண்ணு வாளப்பாதேகமதுசெல்லும்போது வளமுடனே ஐந்தருவுந்துண்ணுமல்லோ நாளப்பாவுடலைவிட்டாத்துமந்தான் நீங் கியேபோவதற்குமுன்னதாக பாளப்பாதன்னைத்தானமறந்துமல்லோ யாழுடலம்போவதற்குநாளுமுண்டே ௭௱௰௯

உண்டானகாலமது ஒடுக்கங்கள்னில் வுத்தமனேதாகமென்றக
ருவுதன்னில் கொண்டிடவேவீரமென்ற குளிகைதன்னை கொற்றவ
னேதானிழைத்துநாவில்இட்ட தண்டமுடன்செத்தசவம் போலானு
லும் தாரணியில்தனையெடுத்துவார்த்தைகூறும் சண்டமாருதம்போ
லேயிந்தவீரம் சட்டமுடனுந்தனுக்குவோதினேனே ௭௨௰

சகலரோகங்களுக்குஞ்சூரணபாகம்

காயகற்பம்

ஓதவேயின்னமொருமார்க்கஞ் சொல்வேன் ஒகோகோ நாதாக்க
ளொளித்தமார்க்கப் நீதமுடன்காயகற்பச்சூரணந்தான் நிலையானயோ
கிகட்கு மாண்பருக்கும் தோதமுடன் சாக்குவகை செப்பக்கேளும்
தோன்றுமல்சுக்குடனேமிளகுமாகும் ஆதமுடன்திப்பிலியுங்கடுக்காய்
த்தான்றி வப்பனேமாசிக்காய்தானுங்கூட்டே ௭௨௧

கூட்டவேதேசாவாம்வாய்விளங்கம் குணமானகார்போகங் கடுக்
காய்ப்பூவும் நாட்டமுடன் சிற்றரத்தைபேரரத்தை நலமானவாலுளு
வையோமந்தானும் வாட்டமுடன் சிறுமல்லி பேரமல்லி வளமான
குராசானியோமந்தானும் கோஷ்டமுடன் கண்டதிப்பிலியுங்கூட்டி
குணமான அதிமதுரமேலந்தானே ௭௨௨

தானவகிராம்புடனே லவங்கப்பட்டை தன்மையுள்ளஜாதிக்
காய்ஜாதிப்பத்திரி சோனைதக்கோலம்பிரப்பின்மூலம் கொடிசான
பூநீசர்க்கரையுமாதம் தேனனபாகியுடபட்டைதானும்தெளிவான
வால்மிளகு செங்கடுக்காய் பானன துளசியென்றவித்துதானும் பாங்
கான ஆவின துவித்துங்கூட்டே ௭௨௩

வித்தான அரசினதுவித்துமாகும் வீரானயிச்சினுடவித்துமாகு
ம்சுத்தமுள்ளபூனையென்ற காலிதானும் சுந்தரனே வூமத்தைவித்தும்
கூட்டு மெத்தவரிதானதொருவிராலிவித்துமேன்மையுள்ளபூஅரசன்
வித்துகூட்டு சத்தகுக்கப்பாலேவிளையும்வித்து சந்தனமாம்வித்தது
வுங்கூடச்சேரே ௭௨௪

சோப்பா அத்தியுடவித்துதானும் செயலான அழிஞ்சியுடவித்
துதானும்கூரப்பாசாரத்தின்வித்துதானும் குறிப்பானவூமத்தின்வித்
துதானும் நேரப்பா முருக்கிலையின் வித்துதானும் நெடிதான எருக்
கினுடவித்துதானும் ஆரப்பாகுரியுடவித்துதானும் வப்பனேயெள்
ளினுடவித்துகாணே ௭௨௫

காணவேவகைவகைக்குப் பலந்தானென்று கருக்காகத்தான்வறுத்துசூரணித்து-தோணவே சூரணந்தையொன்றாய்க்கூட்டி சோராமல்பசும்பாலில்சுத்தித்தேதான்-கேணதொருசரிபாகஞ்சீனிசேர்த்து விருப்பமுடன் சீசாவிற்பதனம்பண்ணு - ஆணவங்கள்வுண்டாகயிந்தபாகம் வப்பனேசரிகூட்டி பதனம்பண்ணே ௭௨௬

பண்ணவேமுப்பூவுகளஞ்சிசேர்த்து பான்மையுடன்மண்டலந்தான்கொண்டபேர்க்கு-நண்ணவேநச்சாமயமது தன்னில் நாட்டமுடன் சிவயோகஞ்செய்யும்பேர்க்கு-திண்ணவேமண்டலந்தான் காயகற்பந்தீர்க்கமுடன்சமுசாரிக்கானவித்தை-வண்ணமுடனிப்பாகஞ்சித்தருக்கு வளமையுடன்மறைத்துவைத்தாருண்மையாரே ௭௨௭

பாரேதான் மண்டலங்காயாதியப்பா பாக்குபெறவுண்டவர்க்குயெல்லாஞ்சித்தி-நேரேதான் சமுசாரிக்கானகற்பம் நெடிதானதுறைவிகட்குமுகந்தகற்பம்-சீரேதான் காயாதிகொண்டபின்பு தீர்க்கமுடன்வழலையதுகொள்ளவேண்டு நீரேதான்வழலையதுகைபாகந்தான் நீதியுட னறிவதற்குயின்னங்கேளே ௭௨௮

யோகஞ்சாதிப்போர்க்குவழலைத்திராவகம்

கேளப்பாபுலிப்பரணிமன்றுபாரு கெடியானயோகங்கள்சாதிப்போர்க்கு - வாளேதான்சமுசாரிகுடியுள்ளோர்க்கும் வகுப்பான சிவயோகிவேடத்தோர்க்கும்- பாளேதான்யோகமதுபோகாமற்றான்பகருகிறேன்திராவக வழலையப்பா-கூளேதான்கைபாகஞ் செய்பாகந்தான்கூட்டுகிறேன்வரிசைமுறையின்னங்கேளே ௭௨௯

முறையானமுறைபாடுயேதென்றக்கால் மூனையானலவணமது வெடியுப்பாகும்-துறையானகல்லுப்புவளையலுப்பு துடியானசவுட்டுப்புயிந்துப்பாகும்-குறையகற்றும் கரியுப்புபூநீறப்பு குணமானகாரமுடன்சீனக்காரம்-பிறைபோன்ற பாஷாணங்கௌவுரிதானும்போனலிங்கமது பூரங்கூட்டே ௭௩௰

கூட்டவேவீரமுடன் சிங்கிதானும்குணமானதாளகமும்கௌவுரிதானும்-நீட்டவேமனோசிலையும்வரிதாரங்காண் நிலையானகெந்தியுடன்கற்பாஷாணம் நாட்டமுடன் சங்குயென்றபாஷாணந்தான் நலமானதுத்தமுடன் துருசுங்கூட்டு-வாட்டமுடன் சரக்கெல்லாஞ் சமனதாக வளமுடனேதானிறுத்து யெடுத்துக்கொள்ளே ௭௩௧

கொள்ளவேசரக்குநிகர்சாரஞ்சேர்த்து கொடிதானசீனமது செட்டிப்பாகிவிள்ளவேகுழிக்கல்லில்பொடியதாக்கி வீரானவாலையிட்டுதிராவகந்தான்-மெள்ளவேபாண்டமதில் சாக்கையிட்டுமேன்மையுட

ங் சக்கரமாம்வாலைதன்னை-எள்ளளவுகோளாறுநேரா மற்றுன் வெளி
தானதிராவகத்தை வாங்குவாங்கே ௭௯௨

வாங்கையிலேதிராவகந்தான்வெகுத்தவண்ணம் வளமையுடன
மறுபடியுமடித்துவாங்கு-தூங்கியேதிரியாதே துய்யபாலாதப்பூரவா
ய்திராவகத்தையேழுமுறைவாங்கு - ஏங்கியேயிருக்காமல்திராவகத்
தையெழிலானசீசாவிற்பதனம்பண்ணு சாங்கமுடன்யோகமதுசாதி
க்குங்கால்சட்டமுடன் திராவகத்தின்தன்மைகேளே ௭௯௩

தன்மையாம்திராவகத்தைதாக்கும்வண்ணம் தகமையுள்ளபுலி
ப்பாணிதயவுள்ளானே-உண்மையுடன் மண்டலந்தானந்திசத்திவுத்த
மலைகளஞ்சிபதுகொண்டாயானால்-நன்னமுடன்வாசியதுமேல்சேரா
க்காது ஙளினமதுவாராது நடுங்காமேனி சுண்ணமது கொண்டாலு
மொன்றுமில்லை சுந்தரனே திராவகத்தை பதனஞ்செய்யே ௭௯௪

புலிப்பாணிக்குபோகர்ஞானப்பால்வூட்டல்

செய்யவேபின்னமொருபுசெப்பஞ்சொல்வேன் செயலானபுலிப்
பாணிநணிதவானே வையகத்தில்நெடுங்காலமிருந்தமல்லோ வளமு
டனேவுபதேசமனேகங்கொண்டீர்-வெய்யவேமகுத்துவங்கள் கோடா
கோடி மேன்மையுடன்தானை..ந்திர்புண்ணியத்தால்-டையவேயுந்த
மக்கு ஞானப்பாலைபகருகிறேன்புலிப்பாணிபண்புள்ளானே ௭௯௫

பண்பானபுலிப்பாணிபாருள்ளானே பகருகிறேன் ஞானமென்
றபாலைப்பப்பா-நண்பானவேங்கைதனைவிட்டிறங்கி நலமுடனே திருப
பாலின்கடலின்மார்க்கம்-விண்ணதனில் குளிகையிட்டுயெழும்பி ஹுந
விட்டகுறையிருந்ததொரு புண்ணியத்தால வண்ணமுடன்மின்ன
டர்ந்துவருகவென்றுவணக்கமுடன்போகரவர் கூறுவாரே ௭௯௬

கூறுவார்வாய்திறந்து போகர்தாமும் குணமானபுலிப்பாணித
ன்னைத்தானும்-நாறுமுடலந்தனுக்குவுபதேசங்கள் நற்கதிகள்பெறுவ
தற்குநயமதாக- ஆறுபுடைசூழ்நகரந்தன்னைநீங்கி வப்பனை திருப்பா
லின்கடல்வாவென்று-பேறுடையசப்தமுடனுச்சாடித்து பெருமை
யுடன் சிஷனுக்குபோதிப்பாரே ௭௯௭

போதிப்பார்லோகமதுமார்க்கந்தன்னை பொங்கமுடன்சாத்திரத்
தின்வழிபாடெல்லாம்- சாதிப்பாயுலகமெல்லாமாடலாகும் தரபான
போலிருப்பதற்குஞாயமுண்டு-நீதியுடன்வையகத்துமகிமையெல்லா
ங்கிஷகளங்கமாகவல்லோநடத்தலாகும்- ஆதியந்தமானதொரு சாதி
பேதம்வப்பிலேநடத்துவதாமுண்மையாரே ௭௯௮

பாரோதான்திக்கெட்டுமாளலாகும் பாராளுமன்னவரை வெல்லலாகும் தீரோதான்திக்குஜெயக்கொண்டதீரன் தீர்க்கமுள்ளயற்குணனைவெல்லலாகும், சீரோதானெழுகடலுங்காணலாகும் சிறப்புடனே நீரின்மேல் நடக்கலாகும், கூரோதான்மிருகமென்றஜாதிதன்னை குறிப்புடனே யழைப்பதற்குவசியமுண்டே எஙகூ

வசியமாம்பட்சிதனைப்பிடித்துவந்து வழக்கமுடன் பாஷைதனைச்சொல்லலாகும், நிசிதமுடனரவமதையாட்டலாகும் நிஷ்டூரமானதொருகொடியபேரை நசிதமுடன்நன்மையாய்ச்சொல்லலாகும் நல்லபாணபரிபோகஞ்செய்யலாகும், பசிவந்தபாலனுக்குப்பல்கொடுத்த பாருலகில் கதைபோலமுடியுந்தானே எசய

த்தானமுலகமதையாண்டுமென்ன தாரணியில் கீர்த்தியதுபெற்றுமென்ன, கோனானகோவேந்தர்தன்னைப்போலே கொற்றவனேகிரீடமதைக்கொண்டுமென்ன, தேனானமாளிகையுங் கட்டியென்ன திகழான சமுசாரங்கொண்டுமென்ன, பானானபாலகனைப்பெற்றுமென்ன பாலகனே ஞானமென்றயால்தான்வேண்டே எசக

பாலானஞானமென்றபாலையப்பாபகருகிறேன்புலிப்பாணிபள்ளிக்குள்ளானே, மேலானபதந்தனையேநண்ணவேண்டும் மேதினியில்பவக்கடலையகற்றவேண்டும், நாலானபதந்தனக்கு மேலேயப்பா நற்பதமாம் பொற்பதத்தை நண்ணல்வேண்டும், காலானசிதாபாசப் பொருளையப்பா கருதுவேனுந்தமக்குக்கருதுவேனே எசஉ

கருதவென்றால்நாவில்லேப்பாவுமில்லை கண்மணியேபுலிப்பாணிகவிராஜேந்திரா, திருதமுள்ளதிருப்பாலின்கடலின்பக்கம் சிறப்பானேயென்பாதா சிறியவானே, குருவினதுகாலாங்கிநாக்குபோலே குணமானவுபதேசம் நீயும்பெற்று, பரிதிமதியுள்ளநாளளவுமட்டும் பாலகனேயுபதேசம் போற்றுவாயே எசங

போற்றவேபுலிப்பாணிபுகழுள்ளானே பொங்கமுடன்திருப்பாலின்கடுமையத்தில், ஆற்றவேகிருஷ்ணவதாரனப்பா ஆலேநடலில் பள்ளிகொண்டவம்பலத்தில், நாற்றிசையும்நாதாந்தசித்துதாமும் நடுக்கமுடன் ரிஷிகளெல்லாம் பார்த்திருக்க, மேற்புறத்தில்போகரிஷ நாதர்தாமும் செல்லவேவேடபாசஞ்சாதிப்பாரே எசச

சாதிக்கவட பாகந்தானிருந்துசட்டமுடன் புலிப்பாணிக்குமதே சிக்க மேதினியில் தேவாதிதேவரெல்லாம் மேன்மையுடன் கண்டல லோ பிரமித்தேகை, ஆதியென்றபராபரியாள்முன்னேநிற்க அவ்வ லேயுபதேசமனதுவந்து, சோதிமணிமந்திரத்தை யுச்சாடித்து சுந்த ரர்க்குவுபதேசங்கூறுவாரே ௭௪௫

கூறுவாருபதேச மென்னவென்றால் குணமான திருப்பாலின் கடலின்மேலே, மாறுபாடானதொருமயத்தைநீக்கி மகத்தான சிபாபா சநிலையில்நின்று தேறுதலாய்சமாதிமுகம் நிற்கவேண்டும் தேஜோளி யின் சின்மயத்தையறியவேண்டும், ஆறுதலமென்றதொரு பிரளயத் தையப்பனே வுச்சரித்துநிலையில்நில்லே ௭௪௬

நிலையானநிலையதுவுமென்னசொல்வேன் நிஷகளங்கமானதொரு கபாலபீடம், கலையானகலையதுவும் யிடகலைபிங்கலையில் கருவானநாசி யதுமையம்பற்றி, மலையானகபாலமென்ற பீடம்பற்றி மகத்தானமூல வரைமேலேசென்று தலையான பஞ்சேந்திரிய மூள்ளடக்கம் சாற்று கிறேன் சிவயோகஞ்சாற்றுறேனே ௭௪௭

சாற்றுகிறேன் துவாரமதுவொன்பதுந்தான் சட்டமுடன்தாள டைத்துமேலேபூட்டி, போற்றியதோர்கும்பகத்தில் நின்றுகொண்டு போதனைசத்தியெல்லாம் மனதிலுன்னி, தூற்றியேதான்புடைத்து பொருளாராய்ந்து துப்புரவாய் சிதாபாசக்கலையறுத்து, மாற்றியே வட்சரத்தை வுள்ளாராய்ந்து மகத்தானவுளவுதனையறிந்துகொள்ளே,

கொள்ளவேயறுபத்துகலைநான்காகக்கோடானகலைவகுத்துக்கயி ர்கள்மாட்டி, விள்ளவேசச்சிதாநிலையில்நின்று விட்டகுறை கருமள வும்மேலேநோக்கி, உள்ளதொருபூரணத்தை வெளிகாட்டாமல் வுத் தமனே விசித்திரியிலேநின்றுகொண்டு, தெள்ளமூர்தமானதொரு ஞா னப்பாலை தேற்றமுடனூசாத்திலிருந்துதாக்கே ௭௪௯

தாக்கவேயூசாரதனைதக்கொள்ளும்போது தகமையுள்ளவனுகதத் தையெட்டிவாங்கு, நோக்கமுடன்கேசரத்தைக் கொண்டாயானல் நு ணுக்கமுடன் கலைவகுத்துப் பிரிக்கலாகும், ஆக்கமுடன் விசித்திரியி லேயிருந்துகொண்டு ஆண்மையுடன்சுழித்தியிலே மேலேபாய்ந்து சாக்கரதை சொற்பனமுமவஸ்தைபற்றிசட்டமுடனிருப்பதுவேசமா திதானே ௭௫௰

ஞானப்பாலறிதல்.

தானனசமாதியிலே நின்றுகொண்டு சட்டமுடன்யோகமது கொள்ளும்போது,கோனனகுருநிலையைக்கைநிலையாயூன்றி குவலயத்தில் நடப்பவனேயோகவானாம், தேனனதேஜொளிவின் மயத்தைக்கண்டு தேற்றமுடன்சொக்கியல்லோ போகாமற்றான்,பானனபரஞ்சுடரைப் பற்றியல்லோ பரவெளியில் சமாதிவழி சாதிப்பாயே. (எருக)

சாதிக்கமூச்சுடரை யறியலாகும் சட்டமுடன்நிஷ்டானுபூதிகொண்டு, ஆதிபந்தங்கருவிகா ரனளவாராய்ந்து வஷ்டாங்கயோகநிலை தன்னிற்சென்று, நீதியுடன்மாபவலைசிக்கறுத்து நிஷ்களங்கமான சுபாநிலையிற்சென்று,சோதியெனுமுட்பொருளைமனதிலுன்னி சுந்தரனேகமலமென்ற பீடந்தாக்கே. (எருஉ)

தாக்கையிலேகேசரத்தில்நின்றுகொண்டு தகமையுள்ளபூரணத்தைப்போற்றிசெய்து, நோக்கமுடன்கும்பகத்தின்மேலிருந்து நொடிக்குள்ளே சுவாதிஷ்டானந்தெரிந்து,வாக்குடனேமனோலயத்தையுச்சரித்து வளமுடனேயஷ்டநிலை பதியிற்சென்று,தூக்கமெனுமிருட்கடலை விட்டகற்றி துய்யகருணைந்தங் கருவிபூணே. (எருங

பூணவேகருவியென்றால்ஞானப்பாலை புகழானபவக்கடலை விட்டகற்றி, தோணவேசின்மயத்தை மனதிலுன்னி தோருதகடுஞ்சினத்தை சிக்கறுத்து, வேணபடிமூச்சுடரைப் பற்றியல்லோ வேதாந்தமனோன்மணியைத்துதித்துநின்று, நீணவேவைராக்கிய கியானமூட்டி நிஷ்களங்கமானதொரு நிலையில்நில்லே. (எருச)

நில்லப்பாபசுபதிபாம் பாசந்தன்னை நிலைபானமவுனமென்ற நிலையிற்பூட்டி,வல்லதொருபிரகாச நிலையில்நின்று வளம்பெறவே குக்குமத்தின்வேரறுத்து, புல்லவேபாஷாந்திர பேதாபேதம் புகழானகருவிகாரணியந்தம் நல்லதொருசிவானந்த நிலையைப்பற்றி நாட்டமுடன் மனதுவந்து நவிலக்கேலே. (எருரு)

நவிலவேசிதாபாசவலைபகற்றி நலமுடனேபௌஷிகத்தின் வேரறுத்து, கவிலவேகற்பாந்திர காலமட்டும் கருத்துடனேசச்சிதாநிலையைப்பற்றி, புவிலவேயருட்கடலைக்காண்பதற்கு புகழானயிருட்கடலைவிட்டகற்றி, விவிலவேவித்தியா ரண்ணியத்தை விருப்பமுடன் கூறுகிறேனுண்மைபாரே. (எருசு)

பாரேதான்சன்னியாசி வர்த்தங்கொண்டு பாங்கானகலைபகற்றி நிலையைப்பற்றி, சேரேதான்சிவானந்த லகிரியாலே செம்மலுட

ன் குருசம்பிரதாயவர்க்கம், நீரேதான்கற்றறிந்து நிலையில்நின்று நிட்சிதமாம்பொருளதனைவிட்டகற்றி, கூரேதான்சசிவர்ணசுயரூபத்தை குணமுடனே யோதுகிறேனின்னந்தானே. (௭௫௭)

தானானமனக்குரங்கைவிட்டகற்றி தண்மையுள்ளயிநிகாசப்பொருளறிந்து, தேனானவமுர்தமெனுஞ் சீரபாத்திரம் தெகிட்டாததெள்ளமுர்தஞானப்பாலை, மானானமதியமுர்தங்கொண்டாற்போல மதகரியாமாணுவத்தை யொடுக்கிநின்று, பானான்பத்மமெனும் யுகாந்தப்போனா பற்றறுத்துவிட்டறுத்து பதிவாய்நில்லே (௭௫௮)

நிற்கையிலேசோதிமயந் தன்னிற்றோற்றும் நீதியுள்ளபாடுதுறைவழிதான்காட்டும், அற்பமென்றுநினையாதேயடிவணங்கி அம்பாத்தின்மேலிருந்து அறிவாலுன்னி, சொற்பமதாய்வாசியதைகீழ்நோக்காமல் சோராமல்மனந்தளர்ந்து சூட்சமேகி, உற்பனமாய்உமிநீரை வழலையாக்கி வுத்தமனேநாள்தோறு மமுர்தமுண்ணே. (௭௫௯)

உண்ணவேதேகமெனுங் கோட்டைதன்னில் உத்தமனே வுட்கோட்டையேழுகோட்டை, நண்ணவேதுவாரமது வொன்பதாகும் நலமானபஞ்சேந்திரியமைந்துமாகும், திண்ணவேயுடல்பொருளாவியந்தம்திர்க்கமுள்ளயேழுசுற்றுகோட்டைக்குள்ளே,வண்ணமுடன்கலையதுதான் முப்பத்திரண்டு வளமானயிடைகலைபின்கலைதான்ரெண்டே. (௭௬௰)

இரண்டானகலைக்குள்ளேமுப்பத்திரெண்டு யெழிலானகலையதுவுமிதிலடக்கம், திரண்டுமேரேசகபூரகத்தைப்பற்றி தெளிவானகும்பகமுமதிலடக்கம், கரண்டகம்போலாகாசகபாடமாகும் கருவிகரணுஇயந்த மதிலடக்கம்,வரண்டதொருமேல்வீடுமோட்சவீடுவளம்பெரியவாகாயகோட்டையாமே. (௭௬௧)

கோட்டையாங்கபாலமென்ற கோட்டையப்பா கொடிதானசின்மயத்தின் கோட்டையாகும்,பாட்டையுடன்வாசலதுவதிலேயுண்டுபாலகனேசின்மபத்தின்வாசலப்பா, தேட்டையெனும்வமுர்தமப்பா வுமிழ்நீர்தேட்டை தேஜொளிவின்பம்பரம்போல்சுரக்குந்தேட்டை, காட்டையதுகண்டாலுங்காணலாம்பார் காயாபுரிக்கோட்டையின்றன்கருகாணாரோ. (௭௬௨)

காணாரோபஞ்சேந்திரிய கோட்டைதன்னை கருவானதடங்களதுகாணமாட்டார்,தோணாரோவாசலதுதடங்கண்டாலும் தோராமல்சின்மபத்தின்வழியறிந்து, வீணாளைப்போக்காமல்விட்டில்போலே வியாபித்துக்கருவயர்ந்து விழலாய்ப்போனார், ஊணாமல்பரஞ்சுடரையன்னென்றெண்ணி யுத்தமனேபாதைவழிதெரியார்தானே. (௭௬௩)

தானனவட்சரத்தையோதமாட்டார் தன்மையுள்ளகுருட்டுவழி தன்னிற்சென்று, தேனனமடாலயத்தை வீடென்றெண்ணி தேற்ற முடன்கிருஷ்ணவதாரனப்பா, பானனகீதையிலேயுபதேசித்த பற்கு ணனுபதேசம்போலேயப்பா, மானனபத்மபீடம்பெற்றேனென்று மார்க்கமுடன்தாமுணர்த்துகெட்டார்பாரே. (௧௬௪)

கெட்டாரேஞானத்தின் பீடங்கண்டால் கெடியானமோட்சவழி காணலாகும், தொட்டாலேசின்மயத்தின்பொருளைதொட்டால் தோ ணுமல்கேசரிதானடத்தலாகும், விட்டகுறையிருந்தாலும்ஞானப்பால் தான் விருப்பமுடனுந்தமக்கு லபிக்கும்பாரு, தொட்டகுறிபோலது வே துய்யபாலா துப்புரவாயுபதேசஞ்செய்திட்டேனே. (௭௬௫)

திருஷ்டாந்தரங்களுக்கு.

இட்டேனேயின்னமொருபாகஞ்சொல்வேன் எழிலானபுலிப் பாணி ராஜபாலா, நட்டதொருபயிரெல்லாம் பயிர்தானாமோ, நாட தனில்பெற்றதெல்லாம்பாலராமோ, துட்டரொன்றால்துட்டரது சொ ல்லப்போமோ துரைராஜசுந்தரனே துய்யவேலா, கெட்டவர்கள் நல் லவர்களாவாரோதான் கெடியானவையகத்தில்மாண்பர்தாமே. ௭௬௬

மாண்பானவையகத்தின் மார்க்கஞ்சொல்வேன் மார்க்கமுடன் முறைபாடுவெவ்வேறாகும், தாண்பானகொக்கதுதா ன்னமாமோ தாடாண்மைகொண்டதொருகோழிதானும், ஆண்பானகபாலமென்ற மயிலதானமோ, வப்பனேகுன்றின்மணிகெம்பாமோசொல்,சாண்பா னசெக்கதுவும்லிங்கமாமோதாரணியில்முறைபாடியின்னங்கேளே.()

கேளேதான்பனியதுவு மழைதானாமோ கெடியான மின்மினி தான் விளக்காமோசொல், தாளானபிரிதிவென்றபவளந்தானும் தாக் கான நற்பவளமாகுமோசொல், பாளானசிப்பியது வெள்ளியாமோ பாலானவெள்ளைமண லுப்பாமோசொல், கோளான மாண்பர்களில் வீகர்தான்கூற ஞொற்றவனேவேணவித்தியாசம்பாரோ. (௭௬௮)

பாரோதான்சவுரியங்களதிகமுள்ளோர் பாருலகிலொருவருக்கோ டீடுமுண்டோ, நேரோதானவரொக்கரிஷிகளாவார் நேர்மையுடனிவ ரொக்கரவரோனவார், சீரோதான்சீர்வளங்கள்மிகவும்பாடி சிறப்புட னேபேர்வளங்கள்மிகக்கொண்டாடி, கூறோதான்சித்துமுனி சாத்திர ங்கள் கூறினார்வெகுகோடிவேதைதானே. (௬௬௯

வேதையாயின்னமொருபாகஞ்சொல்வேன் வேதாந்தத்தாயின துகிருபையாலே, பாதையாம்சமுசாரிக்கானவித்தை பாதகனையுந் தமக்குப்பகருவேன்யான், சீதையெனும்பெண்ணரசிமாதுபூண்டப் ஜெகசோதிதங்கமதை யென்னசொல்வேன், சூதகற்றிமயக்கறுத்து சுட்டிடாமல் சுந்தரனேசிடிகையென்றவேதைகேளே. (எ௭௰)

கேளேதான்துருசதுவுஞ்சேர்தானெட்டு கெடியானதாரமது சேர்தானென்று, பாளேதான்போகாமல்கல்வமிட்டு பாலகனேதான ரைப்பாய்நாலுசாமம், கீளேதான்செருப்படையில்நாலுசாமம் நிலை யானதுணூமூலிநாலுசாமம், கீளேதான்வேரோடிப் படர்ந்திருக்கும கெடியானகும்மட்டிமூலிவாங்கே. (எ௭௧)

வாங்கியேதானரைப்பாய்நாலுசாமம் வளமுடனேமாத்திரையா ய்ச்செய்துகொண்டு, தூங்கியேதிரியாதே துய்யபாலா துப்புரவாய் மாத்திரையைப்பீங்கானிட்டு, ஓங்கியேவெள்ளாட்டுக் கோமியந்தான் உத்தமனேமண்டலந்தா னூறப்போடு, சாங்கமுடன்மண்டலந்தான் சென்றபின்புசட்டமுடன்மாத்திரைதானெடுத்துக்கொள்ளே (எ௭௨)

கொள்ளவேமாத்திரைதான்பதனம்பண்ணு கோவேந்தர்புலிப்பா ணிபுனிதவானே, விள்ளவேவெள்ளியதுபலந்தான்ரெண்டு விருப்ப முடன்மாத்திரைதான்துலந்தான்பத்து, எள்ளளவும்பிசகதுவும்நேரா மற்றுன் எழிலானவெள்ளிதனை மூசையிட்டு, உள்ளபடிவெள்ளியது வுருகும்போது வுத்தமனேமாத்திரைதான் துலமும்போடே.(எ௭௩)

போடேதான்மாத்திரைதானுருகியல்லோ பொங்கமுடன்தானி றக்கிவைத்துமல்லோ, நாடேதான்மற்றுநாள் பின்னுமப்பா நலமுட னேமூசைதனையுருக்கிக்கொண்டு, நீடேதான் பின்னுமந்த மூசைதன் னில் நிலையானமாத்திரையை துலந்தானீவாய், கூடேதான்மூசைதனை யிறக்கிவைத்து குணமாகமற்றுநா ளுருக்கிக்கொள்ளே. (எ௭௪)

உருக்கியேபத்துமுறைபத்துநாளப்பாமுனையானமாத்திரையை கிராசமீவாய், செருக்குடனேபத்துநாளானபின்பு செவ்வையுடன்மூ சைதனையெடுத்துமைந்தா, பெருக்கவேயாறுவகை ஜெயநீர்தன்னில் பேரானவெள்ளிதனையுருக்கிச்சாய்ப்பாய், சுருக்கமதுவாராது வெள் ளிக்கப்பா சுந்தரனேபத்துமுறை யுருகியூக்கே. (எ௭௫)

ஊத்தையிலேயிருண்டசெம்புவெள்ளிதானும் வுத்தமனேமஞ்ச ளென்ற வரணங்காணும், நாத்தமுள்ளசெம்பதுவுமூறலேகி நலமான வெள்ளியது பழுக்கும்பாரு, பார்த்தவர்கள்வாதமென்ற சூதுவித்தை பாருலகில்மகிமைதனை யறிவாரேதான், நேத்தியுள்ளகண்டாது மன்மைபாலேநேர்மையுள்ளவெள்ளியது பழுக்கலாச்சே. (௭௭௬)

ஆச்சப்பாமலைகாட்டுக் குள்ளிருக்கும் வப்பனேகுரும்பரென்ற சித்துதானும், பாச்சலுடன்காடுமலை வனாந்திரங்கள் பாங்கானகுதனைகளிலேயிருந்துகொண்டு,ஏச்சலதுவாரா மலென்னுளைக்கும் யெழிலானகண்டருடவேதைதன்னை, ஆச்சரியமாகவல்லோ செய்துகொண்ட வப்பனேகடைமாறி யுண்ணுவாரோ. (௭௭௭)

உண்ணுவார்சமுசாரி தம்மிடத்தில் உத்தமனேநிதிவாங்கி பொன்கொடுத்து,திண்ணமுடன்மாற்றதுவு மென்னசொல்வேன் துப்பவெள்ளிபத்தரையுங் காணுங்காணும், எண்ணரியகற்பொருளைக் காணமற்றான் எழிலானசமுசாரி யெல்லாமாய்ந்தார்,பண்ணவெனக்குவமையதுவறியாமற்றான் பாருலகில்யானுமல்லோ மயங்கினேனே(௭௭௮)

மயங்கியதோரெந்தனுக்கு மன்னுகேளு மகத்தானகாலாங்கிகிருபையாலே,நயம்படவேவித்தையதுயானுங்கண்டு நாதாந்தசித்தொளிவிளெலியுங்கண்டு, செயம்பெறவேவாதமென்ற வேதைதன்னை சேர்வையுடனுந்தனுக்கு யானுந்தந்தேன், பயம்படவேயென்னுளும்பதாம்புயத்தைப் பணிந்துமல்லோவஞ்சலித்துதுதிப்பாய்தானே. (௭௭௯)

தானனஸ்ரீராமர் கொண்ட சீதை தகமையுள்ளஜானகியாற்றலறனக்கு, கோனனகோவேந்தர் பதியிலப்பா கொற்றவனேசித்தாகளுமுடித்தவேதை,தோனனசெம்பொன்னே தங்கவர்ணம்தேற்றமுடன் பிறவியென்றதங்கமாகும்,பானன சுயத்தங்கம்நயத்ததங்கம் பாருலகில் நாதாக்கள் மறைத்தார்காணே. (௭௮௰)

காணவேநாதாக்கள்மறைத்ததாலே காலாங்கிநாதருடகிருபையாலும், தோணவேமனோன்மணியாள் கடாட்சத்தாலும் தோருமனுந்தனுக்குமனதுவந்து,வேணதொருநீதிமுறைபாடுகூறி வேதாந்தவுபதேசவுண்மைகூறி, நீணவேயுந்தனுக்கு வுபதேசித்தேன் நீடாழிபதவிதனை யாளுவீரோ. (௭௮௧)

தாளக்கட்டுவேதை.

ஆளவென்றுலின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் வப்பனேபுலிப்பாணியறிவுள்ளானே, மீளவேதாரமது சேர்தானெட்டுநிலையானகாரமதுசேர்தான்ரெண்டு, சூளவேதுருசதுவுஞ் சோதால்ரெண்டு சுந்தரனேசூதமது சேர்ந்தான்ரெண்டு, மீளவேயினவையெல்லாங் கல்வமிட்டு மிக்கானசிவகரந்தை சாற்றாலாட்டே. (எஅஉ)

ஆட்டவேநாற்சாம மானபின்பு வப்பனேமாற்றினைதான் செய்துகொண்டு, தாட்டிகமாய்வெள்ளிதனை யுருக்கிமைந்தா சட்டமுடன் சேருக்குபத்துதாக்கு, நீட்டமுடன்வெள்ளியதுவுருகும்போது நிஷ்களங்கமானதொருமருந்துதன்னை, வாட்டமில்லாசேரதுதா னென்று தாக்கு வளமுடனேவெள்ளியது வுரியும்பாரே. (எஅங)

உரியுமேமாத்திரையை வாங்கிக்கொள்ளும் வத்தமேனிமூசைதனையாறவைத்து, சரியாகவைந்துநாள் தனியவிட்டுசாங்கமுடன்மறுபடியும்பின்னுமல்லோ, பரியானவெள்ளிதனை மூசையிட்டு பட்சமுடன்தானுருக்கிமருந்தையப்பா, வரியானகணக்குடனேமுன்போலப்பா வளமுடனேசேருக்கு ஒன்றுதாக்கே. (எஅச)

தாக்கவேமூசையிட்டு வுருக்கிமைந்தா திண்மையுடன்நாளதுவுமைந்தாக, நோக்கமுடனிப்படியேபத்துமுறையப்பா நுணுக்கமுடனுருக்கியல்லோ ஆரவைப்பாய், வாக்கதுவும்பொய்யாதுகாலாங்கிநீதி வளம்பெரியசித்தர்களுமறைத்ததோஷம், ஏக்கமதுகொள்ளாமலெழில்வேந்தாகேள் எழிலுடனேசெய்குவதும்பாகமாமே, (எஅரு)

பாகமாமிப்படியேபத்துமுறைதீர்ந்த பாலானவெள்ளிதனை யெடுத்துமைந்தா, ஆகமத்தில்முறைபாடு செய்பாடெல்லாம் வப்பனே கண்டுமிக வுளவாராய்ந்து, வேகமுடனுறவகைஜெயநீர்தன்னில் வேட்கமுடன் தானுருக்கி சாய்ப்பாயப்பா, பாகமதுபொய்யாது மெய்யேயாகும் பாருலகில்செய்தவர்க்குசித்திதானே. (எஅசா)

சித்தியாமிப்படியேபத்துமுறைபாடு சேர்வைகண்டேதான்கண்டு வுருக்கிச்சாய்ப்பாய், சத்தியவான்காலாங்கி நாதர்வாக்கு சங்கரனே பொய்யாது வேதவாக்கியம், பத்தியுடன்மனோன்மணியைத தொழுதுபோற்றி பாலகனேமுறைபோலேசெய்வாயப்பா, சுத்தியுள்ளவெள்ளிதனை யூதிப்பாரு சுந்தரனேமாற்றதுவுஞ்சொல்லொண்ணாதே.(

சொல்லவென்றால் நாவில்லைப்பாவுமில்லை துரைராஜசுந்தரனே யெவர்தான்காண்பார், வல்லதொருசித்தர் திருமுனிவர்தாமும் வளம்பெரியசாத்திரத்தில்மறைத்துவைத்த, கல்லானமுறைகளெல்லாங் கருக்கஏகாட்டி கருவிகாணுதியந்தம்முடிவுண்டாக்கி, நல்லதொருமுறைபாடுசெய்பாடெல்லாம்நாட்டினிலேமாண்பர்களுக்குரைத்திட்டேனே.()

உரைத்தேனேதாரமென்றகளங்குமார்க்கம் ஓகோகோநாதாக்கள் கூறவில்லை, வரையானபொருளெல்லா மிதிலேதோயும் வளமானமாற்றமதுவும்பத்தேயாகும், திரைகடலில்நாதாக்கள் மறைத்ததாலே தீர்க்கமுள்ளவேதைமுகம்யானுங்கண்டு, விரைபோட்டால்சுரையொன்று முளைக்குமோதான் வித்தகனேதாரமென்றதங்கமாமே. (௭௮௮)

நாற்பத்தெண்பேர்முனிவர்கள்-பதினெண்சித்தர்கள்

நவகோடிரிஷிகள்-போகரை வருந்தல்.

தங்கமாயின்னமொருவபணஞ்சொல்வோம் தண்மையுள்ள புலிப்பாணிதபவுள்ளானே, இங்கிதமாயெந்தனையுஞ்சித்தர்கூடியெழிலான விண்ணப்ப வருந்தல்தன்னை, சங்கமென்றசபைபாரு மனதுவந்து சட்டமுடனெந்தனையுங்கேள்விகேட்க, வந்தனமாய்ச்சொன்னதொரு வளம்பாடெல்லாம் வண்மையுடனுந்தனுக்குவோதுவேனே. (௭௯௰)

ஓதவேயெந்தனையுஞ் சித்தர்கூடி ஓகோகோநாதாக்கள் கூட்டத்தோடும், நீதமுடனெந்தனையும் வரவழைத்து நீதியுடன்முறைபாடு வழிபாடெல்லாம், தோதகமாய்கட்டுரைத்தார் கோடாகோடி தேறுமல்யானுமல்லோ விடைகள்சொன்னேன், போதனைகள்மிகவுரைத்தாரிறங்கிபல்லோ பொங்கமுடன்யானுமல்லோ விடைதந்தேனே. ()

தந்தேனேவிடையதுவு மென்னவென்றால் தகமையுள்ளரிஷிகூட்டமுனிவரெல்லாம்-சொந்தமுடன்வாதாடி வுறவுகொண்டு சோறுமலெந்தனுக்குயிதவுகூறி, வந்தனங்கள்மிகச்செய்து வஞ்சலித்து வளம்பெரியகாலாங்கி நாதசீஷா, இந்தவரைநெடுங்காலங்கோடிகாலம் இகபரமுங்கண்டறிந்தசித்துபாரே. (௭௯௨)

பாரேதான்வையகத்தின்மகிமையெல்லாம் பட்சமுடன்காலாங்கிநாதர்தாமும், சீரேதானுந்தமக்குவுபதேசங்கள் செய்துவைத்தபடியாலே தோஷமில்லை, நீரேதான்குளிகையதுபூண்டுகொண்டு நீடாழியுலகமெலாஞ்சுற்றிவந்து, கூரேதான்மகிமையெல்லாமறிந்துகொண்டோர் கொற்றவனார்காலாங்கிகடாட்சந்தானே. (௭௯௩)

தானனமகிமையெல்லாமருந்தாலுந்தான் தாரணியிலொருபோதுந்தோஷமில்லை, கோனனவுமதைபர்காலாங்கிநாதர் கொற்றவனார்குருபாதகடாட்சத்தாலே, தேனனசாத்திரத்தின் முறைபாடெல்லாம் தெளிவுடனே சிக்கறுத்துசத்தகாண்டம், பானனசூரியன்போலே மூவாயிரந்தான் பாடிவைத்தேர்சீனபதிமாண்பருக்கே. (எகூச)

மாண்பானசாத்திரத்தையுந்தன்சிஷன் மகத்தானபுலிப்பாணிக்குபதேசித்தீர், ஆண்மையுள்ளசித்தாதிசித்தரெல்லாம் அவர்பேரில்மெத்தமனஸ்தாபமுண்டு, வீண்போன்றசாத்திரமாயிருந்தாலல்லோ விருப்பமுடனவர்தமக்குவுபதேசிக்க, தாணமையுள்ளசாத்திரந்தான் சத்தகாண்டம் தாரணியில்மகத்துவங்கள்மெத்தவுண்டே. (எகூரு)

உண்டானசாத்திரத்தை யவர்க்குமல்லோ வுத்தமனேமனதுவந்துவுபதேசித்தீர், கண்டாலும்விடுவாரோ ரிஷிகள்தாமும் கருவானமகிமையென்றவேதைமார்க்கம், சண்டமாருதம்போலயுலகவாழ்கை சட்டமுடன்வெகுகோடியோதிவிட்டு, மண்டலத்தில்மகிமையெல்லாம் வெளியிட்டாக்கால் மாண்பர்களுமொருவருந்தான்மதியார்தானே. ()

தானனசத்தகாண்டமேழாயிரந்தான் தகமையுடன்கூறிவிட்டீர் தோஷமில்லை, பானனயெண்ணாயிரஞ்சாத்திரத்தைப்பகரவேண்டாம்புலிப்பாணிநாதருக்கு, தேனனசாத்திரத்தைமனதுவந்து தேற்றமுடன்மேருகிரிதன்னிலப்பா, கோனனகுகைதனிலேவைத்தாலல்லோ கொற்றவனேலோகமெலாமதிப்பார்தானே. (எகூஎ)

மதிப்பானசாத்திரத்தைவெளியிலிட்டால் மகதேவரானவருமொருவருண்டோ, துதிப்புடனேயொருவருந்தான்தன்னைத்தானுந்துப்புரவாய்மதிப்பாருமாருமில்லை, விதிப்படியேவிட்டகுறையிருந்துதானால் விருப்பமுடன்வினயம்வந்து கிட்டும்பாரு, கதிபெறுவரெண்ணாயிரங்காவியத்தால் காசினிபிலதிதமென்றமார்க்கம்பாரே. (எகூஅ)

பாரோதான்காண்டமேழாயிரத்தில் பாருலகில்வெகுகோடிவசனியங்கள், நேரோதான்சித்தாதிகூட்டத்தோடு நேர்மையுடன்பாடிவைத்தநுணுக்கமெல்லாம், சேரோதான்கிட்டிருந்துவுளவுகண்டு சேனரகசியங்களெல்லாம்வெளிபாய்விட்டீர், ஊரோதானுலகமெலா மிதிலடக்கம் உத்தமனேயேழாயிரம் பாடல்தானே. (எகூகூ)

பாடலாய்மறைத்துவைத்த சங்கையெல்லாம் பாரிலுள்ளமாண்பர்களுங்கண்டுகொள்வார், தேடவேசாத்திரத்தைப்புனிதவானே தேற்றமுடன்புலிப்பாணிக்குறுகிகூறி, ஆடவேயம்பலத்தில் நல்லேர்தன்மைஅறிவுடையோர்சிவயோகிமாண்பருக்கு, கூடவேசாத்திரத்தைத்தந்துமல்லோ குணமானவெகுபுக்திகூறுவீரோ. (அ00)

கூறுவீர்யிநிகாசபுத்திசொல்லி குவலயததிலாள்கண்டு பதமுங் கண்டு,தேறியதோர்சிறுபால ராஜனுலுந்தான் தேற்றமுடன்புத்திமதி மிகவுரைத்து, மீறியேகட்டளைக்கு மிஞ்சிடாமல் மிக்கமனதுவந்தும ல்லோ மதிதங்கூறி, ஆறியேசினமதுவு மிகவகற்றி வப்பனேநூல்கொ டுத்துப் பதனைஞ்சொல்லே, ௮௰௧

சொல்லவேபுலிப்பாணிக் குண்மைகூறி தோருமல்மனத்திட மும் நன்றாய்ச்சொல்லி, வெல்லவேயவராவர்க்குத் தக்கதாக வெதாந்த சின்மயத்தை யோதச்சொல்லி, புல்லவேசாத்திரத்துக் குறுதிசொல லிபுகழானசத்தியங்கள் வாங்கியேதான், நல்லதொருசாத்திரத்தைத் தந்திரானுல் நலமாகயிருக்குமென்று நவின்றிட்டாரே, ௮௰௨

நவின்றதொருவாக்கதுவும் பிசகாமற்றான் நாதாக்கள்சொல்லுக் கு யிடையூறின்றி, குவின்றிடவேபுலிப்பாணி புனிதவானே குவலய த்தில்புத்திபுண்டாய்மாண்பர்கண்டு,தவின்றிடவேவிதியாளி குணமு ங்கண்டு தக்கபடி நூலீய்ந்தால் தருமமாகும், புவின்றிடவேயுந்தன துமனதுபோலே பூதலத்தில்நடப்பதுவுங் கடாட்சந்தானே ௮௰௩

தானுனகாலாங்கிநீதிபோலேசட்டமுடன்போகரேழாயிரத்தை கோனுனவையகத்தில்யானும்பாடி கொற்றவனேயுந்தனுக்கு வுபதே சித்தேன், தேனுனசாத்திரத்தைப்பாதுகாத்து தேசத்தில்கொடுப்ப துவுமுந்தன்பாரம்,பானுனகருமிகட்கு கொடுப்பாயானுல் பாலகனே பாவம்வந்து யெய்தும்பாரே, ௮௰௪

சித்தர்கள் மகிமை,

பாரேதானின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் பாங்கானபுலிப் பாணி டீளிக்குள்ளானே, நேரேதானவரவர்கள் மகிமைதன்னை நேர் மையுடன்சொல்லுகிறே னுண்மையாக, சீரேதான்சித்தரெல்லாமொ ன்றாக்கூடி சிறப்புடனேகாலாங்கிநாதர்தன்மை, வீரேதான்சீனபதித ன்னிலேகி விருப்பமுடன்மனதுவந்து வந்திட்டாரே, ௮௰௫

வந்தாரேகாயாதிகொண்டசித்து வளம்பெரியசீனபதிமார்க்கந்த ன்னே, அந்தமுடன்காலாங்கிசமாதிபக்கல் லற்புதமாய்வெகுகோடிநா தர்தாமும, சொந்தமுடனெனதையர் காலாங்கிநாதர் சுடரொளியைக் காணவென்று மனங்களித்து, விந்தையாய்வுபதேசம்பெறவேநண்ணி விருப்பமுடன்சமாதியிடம் வந்தார்தானே, ௮௰௬

தானுனநெடுங்காலஞ்சமாதிருந்த தண்மையுள்ளநாதாக்கள்ரிஷி கள்தாமும, கோனுனயெனதையர் காலாங்கிநாதர் கொற்றவனுர்முன்

பகலினயங்கூறி, தேனுமருத்துவக்க ளிதிகாசங்கள் தேற்றமுடன் செப்தலலோ மேவல்செய்தார், பானுபரஞ்சுடரா மெந்தன்நாதர்ப ட்சமுடனதிசயத்தைக் கண்டிட்டாரே, ௮௱௭

பூதானந்தசித்தர்மகிமை

கண்டாரேயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் கனகாதிபூஷண மேகல்விமானே, அண்டமதிலாகாயந் தன்னிலல்லோ வப்பனேமகா பூதநந்தநாதர், உண்டிவில்லுகவுண்டேகு மாகாயத்தில் வுத்தமனே யந்தமட்டுஞ் சொல்வேனென்று, கண்டிதமாய்க்காலாங்கி வாக்குதந் துகனமுடனேவாசியோகம் நடத்தினாரே ௮௱௮

வாசிதைத்தானடத்திபூதநாதர் வளமானகேசரத்தி னம்பரத்தில் மாசியெனுமண்டலத்தி லேகியல்லோ மனனமின்னார்மண்டலந்தா னங் கிருந்து, காசிபதிகடலோரந் தன்னிற்சென்று கனமானசீனபதியருகி ல்வந்து, தேசியெனும்வாசியைத்தா னடத்தியல்லோ தேற்றமுடன் சீனபதிஇறங்கினாரே ௮௱௯

இறங்கினார்நாற்பதுநாள் மண்டலந்தான் யெழிலானவாகாஷந்த னிலிருந்து, சிறந்ததொருவாசியைத்தானடத்தியல்லோ சிறப்புடனே வையகத்தோர்காணவென்று, பறந்துமேவையகத்தி லிறங்கியேதான் பாங்கானகாலாங்கிசமாதிமுன்னே, இறந்ததொருசவம்போலே விழு ந்தாரல்லோ யெழிலாகபூதநாத சித்துதானே ௮௱௰

சித்தானசித்துமுனி நாதர்தாமும் சிறப்பானகாலாங்கிதம்மிடத் தில்,பத்தியுடனஞ்சலிகள் மிகவுஞ்செய்து பான்மையுடன்சிரங்குனி ந்துகாங்குவித்து,முத்திபெறயெந்தனுக்கு வுபதேசங்கள் முனிவரே செய்யவென்று வடிபணிந்து, சத்தியமாயெந்தனைத்தா னுதரிக்க ச்ட் டமுடன்கடாட்சமது வருள்செய்வீரே ௮௱௰௧

அருளானவருளதுவும் பெற்றுமல்லோ வன்புடனேபூதநா னந் தசித்து, இருளானயிருளகற்றி மையம்பூண்டு யெழிலானசீனபதிவி ட்டுமல்லோ, குருவானடமரகனு னந்தனுரை குறிப்புடனே காண்ப தற்கு மனதில்லெண்ணி, திருவானஜோதிமயந் தன்னைக்காண தீர்க்க முடன்தென்பொதிகை வந்திட்டாரே ௮௱௰௨

கருவூரார்மகிமை

வந்தாரேயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன்வளமனபுலிப்பா ணிவறிவுள்ளானே, இந்தமானிலத்தில்வெகு வதிசயங்கள் யெழிலா னசித்துமுனி கோடாகோடி, சுந்தரனுர்காலாங்கி நாதர்பக்கல் தப்புர

வாய்வந்தவர்கள் லக்ககோடியில்லை, விந்தைதகளுமிகச்செய்தார் பூரிடியார்
தாமும் விண்ணுலகுகருவூரார் சித்துபாரே அ௱யஉ

பாரப்பாபுலிப்பாணி பண்புள்ளானே பாலகனேயெந்தனிருமணியேகேண்மோ, ஆரப்பாவாகாய மண்டலத்தில் வப்பனேநட்சத்திரவளவுமட்டும், நேரப்பாவாசியைத்தா னடத்திபல்லோ நேர்மையுடனாகாயஞ்சென்றுரில்லை, கூறப்பாகருவூரா ரென்றசித்து கொற்றவனேவாகாயஞ் சென்றூர்காணே அ௱யங

காணவேகருவூராரென்றசித்து காசினியில்மகிமைமெத்தகொண்டசித்து, தோணவேநடேசரைத்தா னுவந்துசெய்த தோருதகருவூராரென்றசித்து- மாணமருங்கல்வியுள்ள சித்தரெல்லாம மானிலத்தில் மகிப்பதற்குக் கீர்த்திகொண்ட, ஆணவமாங்காமியத்தை விட்டொழித்த வப்பனேகருவூரா ரென்றசித்தே அ௱ய௪

சித்தானசித்துமுனி கருவூரார்தாஞ்சிறப்பானகாலாங்கிநாதர்முன்னே, சுத்தமுடன்காலாங்கி நாதர்தம்மை சுந்தரனார்சினபதி சமாதிதன்னில், வித்தகனார்பார்த்திருக்க மகிமைபூண்டு விண்ணுலகமாகாயஞ்செல்வேனென்று, பத்தியுடன்நட்சேத்திர வளவுமட்டும் பாங்குடனேசெல்வேனென்று பேசினாரே அ௱யரு

ஏகவேவாசியோகஞ் செய்துகொண்டு யெழிலானநட்சத்திரமண்டலத்தில், போகவேமகாவுறுதி கொண்டுமல்லோ பொங்முடன்மூன்றுமண்டலந்தானப்பா, சாகாமல் ஆகாயமண்டலத்தில் சட்டமுடன் மூன்றுமண்டலமிருந்து, வேகமுடன்வாசியோகஞ் செய்துகொண்டு வேட்கையுடன் பூமிதனி லிறங்கிட்டாரே அ௱யசா

இட்டாரேகருவூராரென்றசித்து யெழிலானவையகத்தின் மகிமைகோடி, சட்டமுடன்செய்தல்லோ யாகம்பூண்டு சதுராகநெடுங்காலந்தாமிருந்தார், திட்டமுடன்காலாங்கி நாதர்தாமும்தீர்க்கமுடன் கருவூரார்தன்றனக்கு, வட்டாடன்முதலியத்தார் மகிமையெல்லாம்வளமுடனேயுபதேசஞ்செய்தார்பாரே அ௱யஎ

சுந்தரானந்தர்மகிமை

பாரப்பாபுலிப்பாணி பளிங்குள்ளானே பகருகிறேன்சித்தருடமகிமைதன்னை- ஊரப்பாசினபதிசேகரங்கன்னில் வுத்தமனார்காலாங்கிநாதர்தம்மை, சேரப்பாசமாதியிடஞ் சென்றுமல்லோ செம்மலுடன் காலாங்கிதம்மைக்காண- ஆரப்பாவென்றல்லோ கர்த்திநாதர் வப்பனேமனதுவந்து கூறென்றாரே அ௱யஅ

கூறென்றுசொல்லுகையில் சித்தான குணமானசுந்தரா னந்த மூர்த்தி, தேறலுடன்யாரென்று வினவிக்கேட்ட தெளிவானகாலாங் கிநாதர்தாமும்- மாறலதுவாராமல் சித்துதாமும் மகத்தானகாலாங்கி நாதருக்கு- ஆமலுடனஞ்சலித்துமனதுவந்து வப்பனேசுந்தானுமெ ன்றிட்டாரே- ௮௨௰

என்றுரேசுந்தரா நந்தமூர்த்தி யெழிலானகாலாங்கி நாதருக்கு- வென்றிடவேயென்தேவா லோகநாதா விருப்பமுடன்தங்களிடம்ம னங்களித்து சென்றுநான்வந்தேனே சீனதேசம் செம்மலுடனடியே னைப்பாதுகாத்து குன்றுனவுபதேச மெந்தனுக்கு கொப்பெனவே கூறுமென்று பணிந்திட்டாரே ௮௨௧

பணிந்துமேசுந்தரா னந்தர்தாமும் பட்சமுடன்காலாங்கிநாதரு க்கு துணிந்துமேயெந்தனதுமகிமைதன்னை அப்புரவாய்க்காட்டுகிறே ன்குருநேவந்தாகேள் கணிகமுடன்மேகமண்டலத்தில்யானும் கர்த்தா வேவாசியோகஞ்செய்துகொண்டு பணிவுடனேவாகாஷஞ் சென்றும ல்லோ பாங்குடனேமேகத்தோ டேகுவேனே ௮௨௨

ஏகுவேன்மேகத்தோ டிணக்கமாகி யெழிலான திருப்பாலின்க டலின்மேலே போகுவேன்மேகங்கள் ஜலங்கிரட்டி பொங்கமுடன் தானிறங்குங்காலந்தன்னில்- தாகுடனேமேகமது வாகாஷத்தில் தக மையுடன்செல்லுமது பக்கமெல்லாம்- வாகுடனே ஆகாஷந் திரிந்து யானும் வளமுடனேநெடுங்கால மிருப்பேன்தானே ௮௨௩

தானுனபூமிசஞ்சாரமில்லை தண்மையுடன்மேகத்தில் மேகமாக- கோனுனமண்டலத்தில்நெடுங்காலந்தான் கொற்றவரோவாசியோகஞ் செய்துகொண்டு- தேனுனமனோன்மணியைத் துதித்துமல்லோதே ற்றமுடன்நெடுங்காலந் தானிருந்தேன்- பானுனபாஞ் சுடரேசொரூ பாகந்தா பரம்பொருளைவுபதேசப்பகருவீரே ௮௨௪

பகரவென்றுசுந்தரானந்தர் கேட்ட பாருலகிலிதிகாச மகிமைக ண்டு- நிகரமுடனிவர்தமக்கு வுபதேசங்கள் நீதியுடன்கூர்வதற்குமன ங்களித்து- உகரமென்றவட்சரத்தை யுபதேசித்து வுத்தமனார்சுந் தரானந்தருக்கு- சகரமுடன்யகரமுதல் வுயிர்களெல்லாம் கருவான வட்சரத்தை ஓதினாரே ௮௨௫

ஓதவேயஞ்சலிக்ள் மிகவும்பெற்று வுத்தமனூர்சினப்தி கண்டுமே
ல்லோ நீதமுடன்விடையதுவும் பெற்றுமல்லோ நிலேயானதம்பதிக்
குயேகினூர்காண் சேதமதுவாராமல் சித்துதானும் ஜெகதலத்தில்கெ
டுங்கால மிருந்தாரல்லோ தோதமுள்ளசித்தாதி சித்தரெல்லாம்தோ
ஞுமல்யென்குருவைக் கண்டிட்டாரே ௮௨௬

போகர் புலிப்பாணிக்கு பாஷாணவிளேவுகள் கூறல்

கண்டாரேயின்னமொருகருமானங்கேள் கைலாசபுலிப்பாணிக
ருவுள்ளானே அண்டாண்டதேசமெல்லாஞ்சுற்றியங்தேன் வப்பனே
பாஷாணவிளேவுகண்டேன் அண்டரிகமானதொரு விளேவுமார்க்கம்
துப்புரவாயான்கண்டு விடமூங்கண்டேன் சண்டமாறுதம்போலே
விளேவுகண்டேன் தண்மையுள்ளபாஷாண விளேவுகேளே ௮௨௭

சுருமாக்கல்விளேவு

கேளப்பாசுருமாவின் விளேவுமார்க்கம் கெடியானடில்லிக்குமே
ற்கேயப்பா ஆளப்பாபூமியெல்லாஞ் சுருமாவாகும் வப்பனேநீலாஞ்
சக்கல்லுதானும் கோளப்பாவாராது அஞ்சனக்கல் கொற்றவனேசுரு
மாவின் கிழ்மட்டந்தான் கீளப்பாவஞ்சனமாம் பாறையல்லோ கெடி
யான்கல்லினுட பூமியாமே ௮௨௮

கெந்தகவிளேவு

பூமியாம்டில்லிக்கு கிழக்கேயப்பா புகழான்கெந்தகத்தின் பூமி
யாகும் சாமிபதிகிருபையினுல் விளேயுங்கெந்தம்சதுரானசித்தர்களு
க்குகந்தகெந்தி வாமிசிவகாமியம்மாள் வீற்றிருக்கும வளமானசிவப்
புகெந்தியகைசேயுண்டு காமிகவேகுளிகைகொண்டு சென்றேனப்பாங
லமானடில்லிக்கு கிழக்கேதானே ௮௨௯

கிழக்கானபூமியப்பா நெடுந்தூரந்தான் கிளேயானவாறுண்டு சு
னைகானுண்டு பழக்கமதாய்மாண்பர்களும் போனதில்லே பாங்கானகு
றும்பருட நாடேயாகும் அழகானபூமியது சொல்லொணுது வப்ப
னேகெந்தகந்தான் விளேயும்நாடு தழலானசெடிமரங்கள்பூண்டுமில்லே
தாரணியைக்குளிகைகொண்டு கண்டிட்டேனே ௮௩௰

தாளகவிளேவு

இட்டதொருகிழக்குக்குத் தெற்கேயப்பாயெழிலானதிருச்சங்கு
மைந்தனல்லோ சட்டமுடனுண்டிருந்த ராச்சியத்தின் சதுரானமே
ற்புறத்தி லேடையப்பா வட்டமுள்ளபூமியது நெடுந்தூரந்தான்வள
மானதாளகத்தின் பூமியாகும் இட்டமுடன்பூமியெல்லாந் தாளகந்தா
ன்திறமானநேமையமரிதாரமாமே ௮௩௧

அரிதானவரிதாரமென்னசொல்வேன் வப்பனே வதின்கீழேம
ஞேசிலையுமாகும் சரிதானவிளைவல்லோ பூமியெல்லாம் சாங்கமுடனே
தாளகத்தின்பூமிபாகும் பரியானதங்கமது விளையும்நாடு பாருலகில்
நாதாக்களகண்டதுண்டு திரிலோகந்தான்மதிக்கும் தங்கமப்பா தீர்க்க
மூடன்விளைகின்ற நாடுதானே ௮௱௨

கற்பரிபாஷாணவிளைவு

நாடானநாடதுதான் சொல்வேனப்பா நலமானபுலிப்பாணிகேள்
புள்ளானே காடானகாடெல்லாம்யான்திரிந்து கனமானகுளிகையது
கொண்டுமல்லோ மேடானபூமியது திரிந்துமேதான் மேன்மையுள்ள
கற்பரிபாஷாணங்கண்டேன் தாடாண்மையுள்ளதொரு பாஷாணத
தால் தாரணியில்தங்கமிகச் செயயலாமே ௮௱௩

செப்பவேகற்பரிபா ஷாணந்தன்னால் செயலானநவலோகம்வெ
ல்லலாகும் துய்யதொருநவலோகம் நீறிப்போகும் துப்புரவாய்லோ
கங்கள் சத்துருவேயாகும் வெய்யவேகடுமையாந் தன்னிலப்பா வேட்
கமெனுமவுல்பாஷா ணந்தானாகும் பையவேயதின்கீழே தானிருக்கு
ம்பாங்கானஜலபாஷா ணந்தானப்பாரே ௮௱௪

காயகற்ப அயச்செந்தூரம்

பாரப்பாயின்னமொரு பரிகாரந்தான் பாலகனேஸ்தூலமதுவு
றுதிசெய்ய- ஆரப்பாமணலிரும்பு கொண்டுவந்து வப்பனேவுருக்கிய
ல்லோதகடடித்து- சீரப்பாமுன்சொன்ன பாஷாணத்தை சிறப்புட
னேலிம்பழத்தின் சாற்றினாலே- ஊரப்பாமூன்றுவகைபாஷாணந்தா
ன்வுத்தமனே தானரைப்பாய்சாமம்நாலே ௮௱௫

நாலானசாமமதுதானரைத்து நலமானயிரும்பதனைத் தகடதா
க்கி- பாவானசரக்கெல்லாம் மேலேபூசி பட்சமுடன்ரவிதனிலேகாய
வைத்து- மாலானசில்லிட்டுச் சீலைசெய்து மார்க்கமுடன்கோழியென்
றபுடங்கான்போடு- சூலானவயமதுவும் களங்கமாகி துப்புரவாய்த்தா
னிருக்கும் வயந்தான்காணே ௮௱௬

காணவேபதரெல்லாந் தானெடுத்து கருவாகபுடம்தூவாய்ச்சேர்
த்துக்கொண்டு- தோணவேகடைசரக்கு செப்பக்கேளீர் தோருமல்
கெவுரியென்றவீரந்தானும்- மாணவேகெந்தகமும் லிங்கந்தானும் மு
கத்தானசிவ்வியுடன் பூரமாகுயும்- நீணவேவகைவகைக்குப் பலந்தா
ன்காலாய் விஷகளங்கமாகவல்லோ பழச்சாற்றாலே ௮௱௭

நானுனசாறதுவும் பிழிந்துகொண்டு தண்மையுள்ளவயப்பொ டியாங் களக்குதன்னில் தேனுனசெம்பழத்தின் சாற்றினுலே தெளி வறவேகானைறப்பாய் நாலுசாமம் பானைபில்லையது லகுவாய்ச்செ ய்துபாலகனேவிதனிலே காயவைத்து மானுவேோட்டிவிட்டுச்சிலே செய்து மகத்தானமண்மறைவிற் புடத்தைப்போடே அகூஅ

போடேதானிப்படியே புடந்தான்போடு பொங்கமுடன்தாவ ைறத்து பில்லேதட்டி நீடேதான்முன்னுரைத்த பாகம்போலே நீதியு டன்பில்லேதட்டிக்காயவைத்து கூடேதான்சில்லிட்டுச் சிலேசெய்து கொற்றவனே கோழியென்ற புடந்தான்போடு போடேதான்மண்ம றைவிற்பத்துமுறைபோடு பொலிவானவயமதுவுஞ்சிவக்கும்பாரே()

சிவக்குமேஅயமதுவும் பாஷாணத்தால் சிறப்புடையகுற்றமது பதினென்றும்போம் தவப்பலனேக்கொண்டவர்க்குச் சித்தியாகும் தகமையுள்ளமணலிரும்புசெந்தூரந்தான் அவப்பலனேக்கொண்டோ ர்கள்காணமாட்டார் வப்பனேபுத்தியுள்ள புனிதவானே பவக்கடலே விட்டகற்றிப் பாலாரியும் பாருலகிலிருப்பதுவே புண்ணியமாமே

செந்தூரமனுபானம்

புண்ணியனுயிருக்கவெனுல் பூபாலாகேள் புகழானசெந்தூர முண்பதற்கு திண்ணமுடன்தேனதனில் மண்டலந்தான் திரமுடன் தானருந்த தேகக்கற்றான் வண்ணமுடன்வாசியது மேல்நோக்காது வளமானசெந்தூரந் தானுமல்லோ நண்ணமுடன்சட்டையது தள்ளு ம்பாரு நாதாந்தசித்தர்கள்தா னுடுங்கூத்தே அசுக

கூத்தானசெந்தூரம் மண்டலந்தான் குறிப்புடனேகொண்டவர் க்குப்பலனேக்கேளு நீத்தமுடன்நெடுங்கால மிருக்கலாகும் நெடியா னரோகமது கடமேலபோகும் சாத்தகியான்வார்தானுங் கொண்டகற் பம் தாரணியில்வெகுகால மிருந்தாரல்லோ பூத்தமலர்முகசுகுணமா தர்தம்மை புகழாகவாயிரம்பேர் கூடலாமே அசஉ

கூடலாங்கிருஷ்ணவதாரனல்லோ கொற்றவனுர்சிலகால முண் டகற்பம் ஆடலாம்தேசவிளையாட்டையெல்லாம்வப்பனேவயமென்ற செந்தூரத்தால் ஓடலாம்வெகுதூரங்நடக்கலாகும் வுத்தமனேநடந் தாலும்யிளைப்போயில்லே தேடலாயவெகுகோடி திரவியங்கள் தேடி னுல்பலனென்றுமிலலேதானே அசங

இல்லையெசெந்தூரம் வேதைகாண வெகுமிலானவெள்ளியதுகள ஞ்சிதாறு தொல்லேயெனும்பிறவியது மாற்றம்போலேதோருமல்வர்

ணமதுசொல்லப்போமோ கொல்லனதுவுலையில்வைத்து வுருக்கியல்லோ கொற்றவனேசெந்தூரங்களஞ்சிதாக்கு வல்லதொருவெள்ளிய துயமுழுப்புமாகி மகத்தானயேமமது சொல்லொண்ணாதே ௮௪௪

ஒண்ணாததங்கமது மாற்றுசொல்வேன் ஓகோகோநாதாக்கள்மறைத்தகூத்து தன்னமுடன்மாற்றதுவோ லக்கோயில்லை தாடாண்மைகொண்டதொரு வுறத்ததங்கம்-பண்ணுதற்குவிட்டகுறையில்லாவிட்டால் பலிக்குமோபாராளும் மாண்பருக்கு எண்ணமுடன்மனதுவந்துயிந்தபாகம் யெழிலாகசெய்பவர்க்குப் பலிக்குந்தானே ௮௪௫

பலிக்குமேயித்தங்கம்பிறவித்தங்கம் டாணிலுள்ளசிவயோகிக்கானதங்கம் ஒலிக்குமேஜெகஜோதியானதங்கம் வுத்தமனேகருமிகட்குவாய்க்காதப்பா நலியாளர்தங்களுக்கு யிந்ததங்கம் நாதியற்றபேர்களுக்குநவிலவேண்டும் பலியாதுகருமிகளா யிருப்பாரானால் பாருலகில்கருமிகட்கு வாய்க்காதன்றே ௮௪௬

மகாசிடிகை அயச்செந்தூரம் சமுசாரிக்கானவேதை

அன்றானயின்னமொரு போக்குசொல்வேன் வப்பனேபுலிப்பாணியன்புள்ளானே குன்றானசெந்தூர மென்னசொல்வேன்குறிப்பானவயமதுவும் பலந்தான்பத்து வென்றிடவேசம்பழத்தின் சாற்றிலே விருப்பமுடன்சுத்தியது செய்துமல்லோ நன்றாகக்கல்வமதிலிட்டுமைந்தா நலமுடனேதானரைக்க மருந்தைக்கேளே ௮௪௭

கேளப்பாமுருங்கைவேர்பட்டைதன்னை கிருபையுடன்தானிடித்துசாற்பிழிந்து பாளப்பாபோகாமல்பத்துசாமம்பாங்குடனேதானரைப்பாய் சுன்னநீரும் ஆளப்பாபலமதுவுமொன்றேயாகும் வப்பனேதான்போட்டு வரைத்துமல்லோ சூளப்பாபில்லையது லகுவாய்ச்செய்து சுந்தரனேரவிதனிலே காயப்போடே ௮௪௮

காய்ந்தபின்புபில்லையதை யெடுத்துமைந்தா கருவாகவோட்டிலிட்டுச்சீலைசெய்து வாய்ந்ததொருபுடமதுவும் கெஜமேயாகும் வளமுடனேபோட்டபின்புயெடுத்துப்பாரு நிய்ந்துமேபோகாமல் செந்தூரந்தான்தீர்க்கமுடனருணனதுநிறம்போலாகும்மாய்ந்துமே அயமதுவும்மடிந்துமல்லோ மகத்தானசெந்தூரஞ் சொல்லொணாதே ௮௪௯

சொல்லவென்றால்நாவில்லைப் பாவுமில்லை துப்புரவாய்நாதாக்கள்மறைத்தசித்து வெல்லவேயிவ்வேதை யார்தான்செய்வார் விதியாளிசெய்வாரேமற்றோர்காணார் புல்லவேசெந்தூர மகிமைதன்னை பூதலத்தில்மாண்பர்களுங் கண்டதில்லை அல்லவென்றால்செந்தூரங்கோடிபாகம் வப்பனேகண்டதுண்டு மெத்தகாணே ௮௫௰

காணவேசெந்தூரம்மண்டலந்தான் கருவாகசொண்டவர்க்குப் பலனைக்கேளு, தோணவேதேனதனில் கொண்டாலல்லோ தோருமல்தேகமது யிறுகும்பாரு, வேணதொருரோகமெல்லாம் நீங்கியல்லோ விரைக்குமேநரம்பதுவுந்துடிப்புமெத்த,பாணமெனும்மன்தனுர்வேகந்தன்னை பாலிக்கும்வயத்தினுட வீரந்தானே ௮௫௧

வீரமாம்வாசியதுமேலோடாது வீருனநாமபுகளுமுறுக்குமேறி, சாரமுடன்தேகமது வலுவுமெத்த சட்டையதுமூன்றுவிசைதள்ளும்பாரு, சோரமென்றதேகமது வழுகுமீறி கொற்றவனேநெடுங்காலமிருக்கலாகும், பாரமென்றவயமதுவுஞ் சொல்லப்போமோ பாராளுஞ்சித்தர்முனி வேதையாச்சே ௮௫௨

வேதையாமின்னமொரு போக்குசொல்வேன் வேதாந்தப்புலிப்பாணிபின்னியவானே, பாதையாம்மதிதனிலே பத்துக்கொண்று பட்சமுடன்தானுருக்கி குருவொன்றீய, சோதனைக்குயிடையாத வுறத்தகங்கம் சோராமல்வங்கமிட்டுவூதிப்போடு, வேதநூறைசொன்ன வழிதப்பாதப்பா வேதாந்தசித்தினுட வுண்மைபாரே ௮௫௩

சிடிகைஅயச்செந்தூரம்

உண்மையாமின்னமொரு பாகஞ்சொல்வேன் வுத்தமனேபுலிப்பாணிபுனிதவானே, திண்ணமுடனயமதுவும் பலந்தான்பத்து திறமானவிம்பழத்தின் சாற்றினாலே, வண்ணமுடன்தானரைப்பாய் நாலுசாமம் வாகுடனேகழுவியல்லோ வயமெடுத்து, தண்ணமுடன்கல்வமதிலிட்டுமைந்தா தகமையுடன்பழமதுதான் செப்பக்கேளே ௮௫௪

செப்பவென்றால்கருநாகப் பழரசத்தால்செம்மலுடன்தானரைப்பாய் நாலுசாமம், ஒப்பமுடன்முப்பூவுங் களஞ்சிசேர்த்து வுத்தமனேதானரைத்து பில்லைதட்டி, தப்பிதங்கள்வாராமல் ரவியில்வைத்து சட்டமுடன்சில்லிட்டுச்சீலைசெய்து, மெய்ப்புடனேகோழியென்றபுடந்தான்போடு மேலானசெந்தூரமாகுந்தானே ௮௫௫

தானானசெந்தூரந்தனையெடுத்து தண்மையுடன்முன்போலகல்வமிட்டு, தேனானகருநாகப்பழரசத்தால் தேற்றமுடன்தானரைப்பாய்நாலுசாமம், பானானபில்லையதுவலகுவாய்ச்செய்து பாலகனேரவிமுகத்தில்காயப்போடு, மானானசில்லிட்டுச்சீலைசெய்து மார்க்கமுடன்முன்போலப்புடத்தைப்போடே ௮௫௬

போடேதான்பத்துமுறை யிப்படியேபோடு பொங்கமுடனயமதுவுஞ்செந்தூரந்தான், நாடேதான்முறைபோலே செய்வாயானால்நல

மானசெந்தூரம்வேணதயாகும், கூடேதானுவின்பால்வெண்ணைதன்
னில் குணமுடனேயெல்லிடைதான் கொண்டாயானால், தேடேதான்
காலாங்கிகடாட்சத்தாலே தெளிவாகதேகமதுமின்னும்பாரே அ௫எ

பாரேதான்மண்டலந்தான்கொண்டபோது பாங்கானதேகமது
சட்டைதள்ளும் -நேரேதான்தேகமது வண்டுபோலாம் நெடிதானவா
சியது மேல்நோக்காது- கூரேதான்தேகமதுகற்றூணாகும் கொற்றவ
னேயமனுக்குநாளுமில்லை - வேரேதான்கற்பமது வேண்டுமோதான்
வித்தகனேவயத்தினுட மகிமைகாணே அ௫அ

காணவேயின்னமொருமகிமைசொல்வேன்கருவானபுலிப்பாணி
கணிதவானே- தோணவேவெள்ளியது களஞ்சிபத்து தோறுமல்தா
னுருக்கிமருந்தொன்றீய- மாணவேவெள்ளியது பழுக்கும்பாரு மகத்
தானமாற்றதுவு மென்னசொல்வேன்- வேணபடிவங்கமதைக கொடு
த்தேயூது வேட்கையுடன்வாணமது யேகாதன்றே அ௫௯

ஏகாதுவுப்புக்குங் காவிக்குந்தான் யெழிலானசெந்தூரமென்ன
சொல்வேன்-போகாதுபுடத்துக்கு வுறுதிதங்கம் பொங்கமுடன்நாதா
க்களுறைத்ததில்லை- சாகாமலிருந்திடலாஞ் செந்தூரத்தால் சதாகால
ங்கற்பமது வுண்டுபாரு- வேகாதுதேகமதுதீயிற்பட்டால் வெந்தாலு
ம்மேனியது வினைகொள்ளாதே அ௬௰

போகர் காலாங்கிநாதர் சீஷியசரித்திரத்தை

புலிப்பாணிக்கு வுபதேசித்தல்

கொள்ளவேயின்னமொருமார்க்கஞ் சொல்வேன் கொற்றவனே
புலிப்பாணி குணமுள்ளானே - தெள்ளமுர்தமானதொரு யெங்கள்
சாமி தெளிவானகாலாங்கிநாதர்தாமும்- உள்ளபடிதிரேதாயி னுகத்
திலப்பா வுத்தமனேதாமிருந்த வண்மையெல்லாம்- கள்ளமின்றியில்
லாமல்யானுரைப்பேன் கைலாசபுலிப்பாணி கருவாய்க்கேளே அ௬௧

கருவானதிரேதாயினுகத்திலப்பா காலாங்கிநாதருட வண்மை
யெல்லாம்- திருவானகுருமுனி சொன்னநீதி தீர்க்கமுடனிருவாதுச
ரித்திரங்கள்- குருவானயென்தேவ ரெங்கனுக்கு கூறியதோர்லோக
வதிசயங்களெல்லாம் கருவறிந்துவழியறிந்து யுந்தமக்கு கழறுவேன்
புலிப்பாணி கவிவல்லோனே அ௬௨

வல்லதொருதிரேதாயினுகத்திலப்பா வளமானலட்சத்திநாற்ப
த்தாண்டில்- புல்லானவுலகமது மகிமைசொல்வேன் புகழானபிரள
யங்கள்நேர்ந்தபோது- கல்லானமலைகளுமே முழுகியல்லோகடலேழுந்

தான்கடந்து மலைமட்டந்தான் - வல்லமையாய்சத்தசமுத் திரங்களெ ல்லாம் வளமுடனேபொங்கியது நிற்கலாச்சே　　௮௯௩

நிற்கையிலேகாலாங்கிநாதர்தாமும் நீடாழியுலகமதைக் கண்டே யேங்கி- சொற்பமுடன் தன்மனதி லெண்ணியல்லோ தோருமல்கா லாங்கி கமலர்தாமும்- விற்பனர்களிருவருமாயக்காலாங்கிகிரியில்வி ற்றிருந்தார்மண்டலந்தான் நெடுநாளப்பா - அற்பமுடன்வையகத்து மாண்பர்நம்மில் வனேகம்பேரம்மலையி லிருந்திட்டாரே　　௮௯௪

இருந்தாரேநெடுங்காலங் காலாங்கிநாதர் யெழிலானமலைமீதிலெ ன்னசொல்வேன்- பொருந்தவேகாயாதி கற்பங்கொண்டு பொங்கமு டனவுலகமதின் மகிமையெல்லாம்- திருந்தவேகண்ணினும் கண்டும ல்லோ தீர்க்கமுடன்தன்மனதி லுள்ளடக்கி - அருந்தவத்திலுதித்த தொருரிஷிகள்தேவர் வனேகரிடமகிமையெல்லாம் பார்த்திட்டாரே()

பார்த்தாரேகாலாங்கிமலையிலப்பா பாங்கானரிடியினுட மகிமை சொல்வேன்- தீர்த்தமென்றகமையிலப்பா ரிடியாருண்டு திறமானரி டியாரும் புலிரூபந்தான் - மூர்க்கவேதிருமுகத்தைக் கண்டாலல்லோ வப்பனேமானிடத்தின் சித்துபோலாம்- மூர்க்கமதுவாராது முனிநா தர்க்கு முனேயானவேங்கையுடசித்துதானே　　௮௯௬

சித்தானவேங்கையென்றமனிதசித்து ஜெகதலத்தில்யாரேனுங் கண்டதில்லை- பத்தியுள்ளயென்தேவர் காலாங்கிநாதர் பாங்கானதிரே தாயினுகத்திலப்பா- வெத்தியுடன்கண்டதொரு மகிமைதன்னை வே தாந்தசித்தெனக்கு வெளியிட்டார்காண் - எத்திசையுமசித்தர்முனிக ண்டதில்லை யெழிலானவதிசயத்தின் கூறுதானே　　௮௯௭

மச்சரிடி,

கூறானகோடிவகை வதிசயங்கள்கொற்றவனேகாலாங்கி மலையி லப்பா- நீறானமலைமுனியாந் தவசியப்பா நெடுங்காலந்தானிருக்குங் கொடியசித்து-வாறானமச்சமென்றதேகமப்பா வளமானதிருமுகந்தா ன்மனிதரூபம்-சேருடும்சுனையோரம் மலையோரத்தில் செம்மலுடன் தவமிருப்பார் ரிடியார்தானே　　௮௯௮

தானானவர்பெருமை மெத்தவுண்டு தகமையுள்ளசித்தாதிகண் டதில்லை- கோனையென்தேகர் காலாங்கிநாதர் கொற்றவனுமெந்தனு க்குச்சொன்னநீதி-தேனானமகிமைசாருங் கோடாகோடி திரேதாயினுவ கத்திலப்பாகண்டதுண்டு-மானவநெடுங்காலசித்துவென்று மகதேவர் சொல்லெனக்குத் தெரியலாச்சே　　௮௯௯

கூர்மரிடி

ஆச்சப்பாயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் வப்பனேபுலிப் பாணிவரியவானே- மூச்சடங்கிநெடுங்கால மிருந்தசித்து முனையான காலாங்கிநாதரப்பா- பாச்சலுடன்பிரளயங்கள்வந்தபோது பாங்கான மலைமீதி லிருக்குங்காலம்-மாச்சலுடன்தவயோகி ரிடியார்தம்மைமன் னவனேகண்டவழி சயத்தைக்கேளே ௮௭௰

கேளப்பாதேகமது கூர்மவர்ணம் கெடியான திருமுகந்தான்மனு ஷரூபம்- வாளப்பாநெடுங்காலந் தவசிருந்து வளமையுடன்காலாங்கி மலைமேற்றானும்- ஆளப்பாபிரளயங்களவந்தபோது வப்பனேதவசி ருந்தசித்துமாகும்- காளப்பாதிரேதாயு னுகத்தில்தானும் கருவானம லைபதனி லிருந்தசித்தே ௮௭௧

வராகரிடி

சித்தானபுலிப்பாணிசிறியபாலா சிறப்புள்ளவதிசயங்க ளின்ன ஞ்சொல்வேன்-பத்தியுடன்காலாங்கி நாதர்தாமும்பாருலகில்திரேதா யினுகத்திலப்பா- சத்தியங்கள்தவராமல் தவசுசெய்து சாங்கமுடன் பிரளயங்கள்வந்தபோது-சுத்தியேநிற்பதற்கு யிடங்கொள்ளாமல் சுந் தானர்மலைமீதிலேறினரே ௮௭௨

ஏறினர்காலாங்கி மலையின்மேலே யெழிலானபிரளயங்கள் வந்த போது- மிறியேயாகங்கள்செய்துகொண்டு மிக்கான மலைதனிலேயிரு க்கும்போது- கூறியதோர்வராகமென்ற ரிடியர்தாமும கொற்றவனு ர்மலைதனில்தவசிருந்தார்-கோறியேகாலாங்கிநாதர்தாமும் கொப்பென வேதவசியிடஞ் சென்றார்பாரே ௮௭௩

பாரேதானென்னையர் காலாங்கிநாதர் பாங்கானமலைதனிலே தவ சிருந்த- சீரானவராகரிடி தன்னைத்தானும் சிறப்புடனேகாலாங்கி கா ணும்போது- தீரானவுருவமது வராகம்போலும் திர்க்கமுள்ளதிரு முகந்தான்மனிதரூபம்- நேரேதான்தவயாகஞ் செய்துகொண்டு நேர் மையுடன்தானிருந்த ரிடிகண்டாரே ௮௭௪

கண்டாரேநெடுங்காலந் தவசிருக்கும் கருவானரிடியாரை மனது வந்து-தெண்டமுடன்காலாங்கி நாதர்காமும் தேற்றமுடன்ரிடியாரை க்கேட்கும்போது- சண்டமாருதம்போலே ரிடியார்தாமும் சட்டமு டன்மனதுவந்து சாற்றலுற்றார்- திண்ணமுடன்திரேதாயி னுகத்தி லட்டா திநவாண்டுமுதல்வருஷஞ் சமாதிதானே ௮௭௫

தானானகாலாங்கிநாதரேகேள் தகமையுடன்திரேதாயி னுகத்திலப்பா- தேனானமனோன்மணியாள் கிருபையாலே திரளானபிரளயங்கள்வந்தபோது- மானானமகதேவர் கடாட்சத்தாலே மன்னவனே நெடுங்காலந் தவசிருந்தேன்- பானான வையகத்திலாரேனுந்தான் பக்கல்வந்துகேட்டதில்லை யென்றிட்டாரே அளசு

இட்டாரேவராகரிடி முனிவர்தாமும் பெழிலானகாலாங்கி தன்னைக்கண்டு- விட்டகுறையிருந்ததொரு புண்ணியத்தால் விருப்பமுடனெந்தனையுங் காணலாச்சு- சட்டமுடனுந்தனுக்கு வுபதேசங்கள் சாங்கமுடன்போதிப்ப னேன்றுசொல்லி- திட்டமுடன்வுலகத்தின் மகிமையெல்லாம் தீர்க்கமுடன்காலாங்கிக் கோதினாரே அளஎ

ஓதினார்சமாதிமுகமிருந்தகாலம் வுத்தமனார்காலாங்கி நாதருக்கு ஆதியெனும்பாபரத்தின் ரகசியத்தை வப்பனேகாலாங்கிக் கோதினார்காண்- நீதியுடனுபதேசம் பெற்றுமல்லோ நிசட்சியுடன்தெற்குமுகம்திரும்பிவந்தார்- பாதிமதிசடைபணிந்த சம்பிரான்போல் பரமகுருரிடியொருவரிருந்திட்டாரே அளஅ

நரசிங்கரிடி

இருந்தாரேயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் பெழிலானபுலிப்பாணியினபுள்ளானே - பொருந்தவேதிரேதாயி னுகத்திலப்பா பொங்கமுடன்காலாங்கி நாதர்தாமும- திருந்திபேகண்டதொரு வதிசயங்கள் தீர்க்கமுடனெந்தனுக்குச் சொன்னநீதி- வருந்தவசிநரசிங்கரிடியார்தன்னை வளப்பமுடன்கண்டதொருவுண்மைபாரே அளசு

உண்மையாங்காலாங்கிநாதர்தாமும் வுத்தமனார்திரேதாயினுகத்திலப்பா- வண்மையுடன்காலாங்கி நாதாதாமும் வாகுடனேமலைமிதிற்கண்டசேதி - திண்மைபெறமார்க்கமது யேதென்றாக்கால் தீர்க்கமுடன்கிரிசுத்தி வருகும்போது- வண்மையுள்ளசுனையொன்றுதடாகமுண்டு வளம்பெரியதவசிதனைப் பார்த்திட்டாரே அஅ௦

பார்த்தாரேநரசிங்கரிடியார்தம்மைப் பட்சமுடன்காலாங்கிகாணும்போது-தீர்த்தமுடன்ரிடியாரின் தவசின்வேடம் திரேகமெல்லாஞ்சிம்பத்தின்ரூபமாகும்- நேர்த்தியுள்ளவர்ணமது தங்கவர்ணம் நேர்மையுடன்வையகத்திலிருந்தசிதது - ஆர்த்ததொருதிருமுகம் மனிதரூபம் வப்பனேதவநிலையை யறிந்திட்டாரே அஅக

அறிந்தாரே தவசியது மகிமைதன்னை அன்புடனே மனதுவந்து யருவில்வந்து, சிறந்ததொருரிடியாரைக் காலாங்கிநாதர் தேற்றமுடன் வினவியங்கே கேழ்க்கும்போது, குறித்ததொருகாலாங்கி நாதருக்கு குணமானநாரசிங்க ரிடியார்தாமும், மறித்துமேகாலாங்கி நாதர்தாமும் மன்னவனே மார்க்கமது கூறுவேனே ௮௮௨

கூறுவேனென்றலுமேரிடியார்தாமும் குணமானகாலாங்கிநாதருக்கு, தேறுதலாயுபதேசம் மிகவுஞ்சொல்லி தேற்றமுடன் நெடுங்காலம் மலையிலப்பா, மாறுலகவையகத்தில் தவசிருந்து மன்னவனே யானறிந்த மகிமைகோடி, ஆறுதலையுபதேச வதிதங்கூறி வப்பனே போகவென்று விடைதந்தாரே ௮௮௩

தந்தாரேகாலாங்கிநாதருக்கு தாரணியிலதிசயங்க ளதிதஞ்சொன்னார், பொந்திபேகாலாங்கி நாதர்தாமும் போனதொருகிரிகைதனில்மேற்குபாகம், சொந்தமுடன்காணுதற்குமனதுவந்து தோருமலைதீபோரம்வருந்தும்போது, விந்தையுடனதிசயங்க ளென்னவென்றால் வீரானவாமரிடி தனைக்கண்டாரே ௮௮௪

வாமரிடி,

கண்டாரேபுலிப்பாணி கணிதவானே காசினியிலின்னும்வெகு வதிசயங்கள், அண்டர்பிரானுதாக்கள்ரிடியார்தாமும் யாரேனுங்கண்டறிந்து சொன்னதுண்டோ, சண்டமாருதம்போலே யெந்தன்தேவர் சட்டமுடன்காலாங்கி நாதர்தாமும், கண்டறிந்தவதிசயத்தை யாமுரைப்பேன் கண்மணியேவிண்மணியே சுமுறக்கேளே ௮௮௫

கேளப்பாயெந்தனது காலாங்கிநாதர் கெடிதானதிரேதாயிலுகத்திலப்பா, ஆளப்பாகிரிசுத்தி வருகும்போது வப்பனேமலையோரம்வடபக்கந்தான், மீளவேதவசிலையைப் பார்க்கவென்று மிக்கானகுகையருகேவந்தபோது, சூளப்பாரிடியார்கள் கூட்டத்தோடும் சுந்தரனே வாமமகா ரிடிகண்டாரே ௮௮௬

கண்டாரேவாமமகா ரிடியார்தம்மை கருவானதேகமது வாமரூபம், கொண்டதொருதிருமுகமும் மனிதரூபம் கோடானகோடியது நெடுங்காலந்தான், அண்டமகாரிடிபோலே வாமர்தாமும் வருளான பெருந்தவசு தானிருந்தார், கொண்டல்வண்ணனச்சுதன்போல் விசுவரூபம் கொடியதவஞ்செய்திருக்கக் கண்டிட்டாரே ௮௮௭

கண்டாரேதிரேதாயினுகததிலப்பா கடுந்தவசிசெய்திருந்த ரிடியார்தமமை, சண்டமாருதம்போலே தவசிருந்து சாங்கமுடன்வையகத்துமகிமையெல்லாம், வண்டணியாள்ரேணுகையாள் மகிமைதன்னை வளமுடனேதானுரைத்தார் காலாங்கிக்கு, குன்னதின்மேலிருந்து தவசியாரும் கூறினார்வெகுகோடி மகிமைதானே ௮௮௮

பரசுராமரிடி,

தானானயின்னமொரு தன்மைசொல்வேன் தன்மையுள்ளபுலிப்பாணி தனவானேகேள், கோனானபெனதையர் காலாங்கிநாதர்கொற்றவனுரெந்தனுக்குச் சொன்னநீதி, தேனானதிரேதாயி னுகத்திலப்பா கேற்றமுடனிருபதா மாண்டுதன்னில், பானானபிரம்மகுல பரசுராமன் பருந்தவசுதானிருந்த வண்மைபாரே ௮௮௯

பாரேதான்பிரளயங்கள்வந்தபோது பாங்கானகாலாங்கி மலேயின்பேரில், நேரேதான்நெடுங்காலந் தவசிருந்த நேர்மையுள்ள பிரம்மகுலசித்துதானும், சீரேதான்கிரிதனக்கு கிழ்ப்பாகந்தான்சிறப்புடனே தவமிருந்த ரிடியார்தம்மை, ஆரோதான்காண்பதற்கு வையகத்திலப்பனேயாராலும்முடியாதன்றே ௮௯0

அன்றானகாலாங்கிநாதர்தாமும் அறிவுடையசித்தமகா ரிடியாரல்லோ, குன்றானபருவதத்தைத் தேடியேதான்குணமானகாலாங்கிநாதர்தாமும், சென்றுரேபரசுமகாரிடியார்பக்கல் செம்பவளரிடியாருமகுகிற்சென்று, நின்றுரேநெடுநேர முடிகள்சாய்த்து நீதியுடன்காலாங்கிபணிந்திட்டாரே ௮௯க

பணிந்திட்டகாலாங்கிநாதருக்கு பட்சமுடன்பரசுமகா ரிடியார்தாமும், துணிந்திட்டகாலாங்கிநாதருக்கு துப்புரவாயுபதேசங்கோடிவண்ணம், அணிபெறவேவையகத்து மகிமையெல்லாம் வப்பனேவுபதேசஞ்செய்தாரல்லோ, கணிசமுடன்காலாங்கிநாதர்தாமும் கருத்துடனேமலேயைவிட்டு யேகினாரே ௮௯௨

ஏகவேகாலாங்கிநாதர்தாமும் யெழிலானசினபதிதன்னிற்சென்று,பாகமுடன்லோகவசியங்களெல்லாம பாலித்தார்சினபதிப்பெண்களுக்கு, ஆகமசாஸ்திரபுராணங்களெல்லாம் அங்ஙனவேபோதித்து வினயகூறி, போகரென்றயெந்தனையுஞ் சீஷனுச்கி பொங்கமுடனெடுங்கால மிருந்திட்டாரே ௮௯௩

ராமரிடி

இருந்தாரேயின்னமொரு வயணஞ்சொல்வேன் யெழிலானபுலிப்பாணி யெந்தன்மாரா- பொருந்தவேசினபதி விட்டுநீங்கி போககு

முடன்காலாங்கி நாதர்தாமும் - திருந்தவேகிரேதாயி னுகத்திலப்பா தீர்க்கமுடன்பிரளயங்கள் வந்தபோது- அருந்தவசியாயிருந்த ராமர் தன்னை அக்கணவேகண்டுமெல்லோ மதித்திட்டாரே ௮௯௪

மதித்தாரோராமரிஷி முனியார்தம்மை மார்க்கமுடன்காலாங்கிநாதர்தேவர்- துதிப்புடனேராமரிஷி யென்றுமேதான் துப்புரவாயஞ்சலிகள் மிகவுஞ்செய்து- விதிப்படியேபட்டாபி ஷேகரென்று விருப்பமுடன்தன்மனதி லுவந்துகொண்டு- நதிக்கரையைத்தான்தேடி தீர்த்தங்கொண்டு நமஸ்காரதுதிகள்மிக செய்திட்டாரே ௮௯௫

செய்ததொருகாலாங்கிநாதர்தம்மை செங்கண்மால் ரிஷியாரும்மனங்களித்து- துய்ததொருதுளபமாம் மாலைதன்னை துப்புரவாய்கையேந்திமுடிகள்சாய்த்து- வெய்யபுகழ்வுபதேச மெந்தனுக்கு விருப்பமுடன்செய்யவென்று வினவிக்கேட்க- கைதவமாய்வுபதேசவுண்மைதன்னை கர்த்தாவுமவர்தனக்கு கூறிட்டாரே ௮௯௬

கூறியேயுபதேச வுண்மைதன்னை குணமானகாலாங்கிநாதருக்கு தேறியதோர்கிரேதாயி னுகத்தில்தானும் தேற்றமுடன்தானடங்கமகிமையெல்லாம் -ஆறிடவேகாலாங்கிநாதருக்கு அக்கணவேயுபதேசஞ்செய்தாரல்லோ-மீறியேகாலாங்கி நாதர்தாமும் மிக்கவேசீனபதி சென்றிட்டாரே ௮௯௭

சென்றுமேசிலகாலமங்கிருந்து செம்மலுடன்கிரேதாயி னுகத்தில்தானும்-குன்றுமலைவனுந்திரங்கள் குகைகள்தேடி கூறுவசித்தமுனியனைத்துங்கண்டு-தென்றிசையில்கும்பமுனி மலையுங்கண்டு தேற்றமுடன்காலாங்கி மலையைக்காண - வென்றிடவேபிரளயங்கள்வந்தபோது மேன்மையுடன்மலைதனிலே யிருந்திட்டாரே ௮௯௮

பலராமரிஷி,

இருந்தாரேயின்னமொரு மிணக்கஞ்சொல்வேன் மெழிலானபுலிப்பாணி புனிதவானே- திருந்தவேகிரேதாயி னுகத்திலப்பா தீர்க்கமுடன்காலாங்கி நாதாதாமும- அருங்கவசிபலராம ரென்னுஞ்சித்துவம்மலையில்நெடுங்காலந் தவசிருக்க- குருந்தமேனும்மாக்கலப்பைத்தோளிலேந்தி குணமானரிஷியாரின் தவங்கண்டாரே ௮௯௯

தவமானரிஷியாருங் கிரியைதன்னில் சட்டமுடன்நெடுங்காலந்தவசுகொண்டு- சவம்போலேமூச்சடங்கி ரூபத்தோடும் சட்டமுடன்தவசிருக்கும் வண்மைதன்னை-பவமகற்றுகாலாங்கிநாதர்தாமும் பண்புடனேமுடிசாய்த்து கலைகுனிந்து- நவகோடியஞ்சலிகள் மிகவுஞ்செய்து நாதாந்தசித்தருவே கெதியென்றாரே ௯௦௦

கெதிபென்றுகாலாங்கிகேட்குங்காலம் கெடியானபலசாமரிடியார்தாமும் - பதிதனைத்தேடிவந்தரிடியார்க்குபட்சமுடன்ஞானோபதேசஙகூறி மதிபோன்றமகதேவர் காலாங்கிக்கு மார்க்கமுடனுலகவதிசயங்களெல்லாம்-இதிகாசபுராணமெனுமறைட்டையெல்லாம் விட்டமுடன்மனதுவந்து போதித்தாரே ௯௱௧

பௌத்மரிடி

போதிக்கவின்னமொரு வயணஞ்சொல்வேன் பொங்கமுடன்புலிப்பாணிபுகழுள்ளானே - ஆதித்தன்சந்திரன்போல்பௌத்மசித்து அரகாவென்னசொல்வேன்கிரியிலப்பா -ஜோதிபிரகாசமென்றகாலாங்கிநாதர் சொர்ணமென்றகிரியைதனிற்செல்லும்போது-சாதியிலாதவனுர்பௌத்மசித்து சட்டமுடன்நெடுந்தவசிபார்த்திட்டாரே ௯௱௨

பார்த்தாரேயென்தேவர்காலாங்கிநாதர் பாரானமலைதனிலேதவசியானை-சார்த்தகையாள்வார்போல தவங்கள்பூண்டு சட்டமுடன்நெடுங்காலசித்துதமமை, கோர்த்துமேகரமெடுத்து அஞ்சலித்து கொப்பெனவேகாலாங்கிவணக்கஞ்செய்தார், தீர்த்தமுடன்பத்திரமாந் துளபமாலை தீர்க்கமுடன்தான்கொடுத்து வசனித்தாரே ௯௱௩

வசனிக்காஞானோப தேசந்தன்னை வளமுடனேபௌத்மமகாரிடியார்தாமும்,நிசமுடனேமனங்களித்துமனதுவந்து நிட்சயமாஞ்ஞானமென்ற யிதிகாசத்தை, வசனமதாயுபதேச வுண்மையாக வாக்களித்தார்காலாங்கிநாதருக்கு, தசமுடனேபஞ்சதச காயமாக்கி சட்டமுடன்மனதுவந்து கொடுத்திட்டாரே ௯௱௪

கலிகரிடி,

கொடுக்கவேயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் கோளாறுதானகற்றிமைந்தாகேளு, விடுக்கவேகாலாங்கிநாதர்தாமும் விட்டகுறையிருந்ததொருதன்மையாலே, படுகளம்போல்பததாவு தாரந்தன்னை பாற்கடல்கள்சுற்றிவந்து பான்மைகொண்டார், தொடுகுறிபோல்கலிக்கமகாரிடியார்தம்மை தோறுமல்கிரிதனையேகண்டார்தாமே ௯௱௫

தானானகலிக்கமகாரிடியார்தன்னை தகைமையுள்ளகாலாங்கி நாதர்தாமும், யானனகிரேதாயினுகத்திலப்பா பாங்கானமலைதனிலே கண்டாரங்கே, தேனானபிரளயங்கள்வந்தபோது தேற்றமுடன்மலைதனிலேயின்றசித்து, கோனானகொடுந்தவசியானசித்து கொப்பெனவேசித்துமகாபக்துமாமே ௯௱௬

கலியுகத்தாருக்கு வியாசமகாரிஷியார் இந்தசரிதைகளை பத்தவ
தாரமென்று புராணக்கட்டுகூறினூர் இவர்கள் கிரேதாயுக
த்து மனிதரென்று சொல்லப்படுவர்

பத்தானமகிமைபது மென்னசொல்வேன் பாங்கானபுலிபபாணி பாலாகேளீர், செத்துமேசாகாமல்காயக்கொண்டு சேனைநெடுங்காலமதுவரையிலப்பா, மூத்தானமோட்சவழி பெறுவதற்கு முனையானபத்துமகா ரிஷியார்தாமும், சுத்தமுடன்கிரேதாயினுகத்திலப்பா சுந்தரனேதவசிருந்து சித்துபாரே கூஎ

பாரேதான்காலாங்கி நாதர்தாமும்பட்சமுடனெந்தனுக்குச்சொன்னநீதி, நேரேதானவர்களுந்தான்மனிதரன்றி நெடிதானதேவதாதாரமல்ல, சீரேதான்கலியுகத்து மாண்பரெல்லாம் சிறப்புடனேதசாதரக்கடவுளென்று, வேரேதானின்னமொருதெய்வமுண்டோ வித்தகனேயென்றல்லோ விதிக்கின்றூரே கூஅ

வித்தகனேயிவர்களெல்லாந்தெய்வமல்ல விண்ணுலகம்மதிப்பதற்குகூடுமோதான், செத்தவர்கள்கோடிமனுமாண்பருண்டு தேவாதிதேவரிடியானபேரும், சைத்தவங்கள்தான்மறந்துமண்ணுப்போனூர்காசினியிலியாவருந்தானிப்படியேபோனூர், மெய்த்தவங்கள்செய்துமல்லோகாரம்பூண்டு வெகுகோடிமாண்பர்களுமிருக்கின்றூரே ()

போகர் ஆயிரத்தெட்டு சிவாலயப் பெருமைகூறல்

இருக்கவேயின்னமொருமகுத்துவங்கள் யெழிலானபுலிப்பாணி கன்னியவானே, பொருக்கவேவையகத்தின்மகிமையெல்லாம் புகட்டினேனகணக்குண்டோலக்கோயில்லே, பெருக்கவேதுகைகண்டுவிதிகள்கண்டு பேரானஸ்தலமகிமையாவுங்கண்டு, குருக்கவேதிசையெட்டும்திக்குநான்கும் கூரானதேவகோட்டை கூறுவேனே கூாய

கூறுவேன்புலிப்பாணிமன்னுகேளு கொற்றவனூர்காலாங்கிசொன்னநீதி, பேறுடையவையகத்தின் ஸதலங்களெல்லாம் பேர்வகுத்துச்சீர்வகுத்துப்பிரித்துசசொன்னூர், ஆறுதலம்பஞ்சபூதலத்தைக்கண்டுவப்பனேயெந்தனுக்கு வோதினூர்காண், மாறுபடாஸதலமகிமையுந்தனுக்கு மார்க்கமுடன்வகைபிரித்துச் சொல்வேன்தானே கூாயக

தானுனபஞ்சபூத தலமேதென்றூல் தாக்கானகாளஸதிரி காஞ்சியாகும், தேனூன திருக்காசிசிதம்பரந்தான் தெளிவான திருவருணை ஸதலமுமாகும், பானுனஸதலத்தினது சேர்வைசொன்னேன் பாங்

கானஆறுதாரங்கள் சொல்வேன், மானனமகதேவர்மதுரையைத்தான்
மகத்தானஸ்தலமென்று மதிப்பிட்டாரே ௯௱௰௨

மதிப்பானஸ்தலத்தினது கோர்வைசொல்வேன் மகத்தானமது
ரைக்கு ரெண்டுபத்துநாலு, துதிப்புடையசிதம்பரக்கோர்வைசொல்
வேன் துப்புரவாயப்பதினாறுரெண்டுமெட்டு, மிதியானவருணைக்கு
கோர்வைசொல்வேன் விர்பனனேசோடசமா மொன்றுநான்கு, மதி
போன்றகாளஸ்திரி கோர்வைசொல்லேன் மாககருடன்கலைரெண்டு
தசங்களொன்றே ௯௱௰௩

ஒன்றானகாசியின்றன்கோர்வைசொல்வேன் ஓகோகோநாதாக்
கள்மறைத்தகூத்து, சென்றதொருகோர்வையது யேதென்றக்கால்
செய்மலுடன்ஒன்றுபத்துநான்குமெட்டு- நன்றானதிருக்காஞ்சிகோர்
வைசொல்வேன் நலமானபஞ்சம்ரண்டு சத்தம்நாலு- குன்றானகணக்
குவளையின்னஞ்சொல்வேன் குணமுள்ளபுலிப்பாணி மன்னுகேளே;

மன்னுகேள்திருவானைக்காவலப்பாமகத்தானஸ்தலத்தினதுகோ
ர்வைசொல்வென்- நன்னயமாயதைச்சார்ந்த தேவஸ்தானம நலமான
யீராறுதலமேயாகும்- தென்னாடன்கும்பமுனி யகஸ்தியன்தான் தே
வதாகிரியுடனே ஸ்தலமுஞ்சொல்வேன் - முன்னேதான்பெரியோர்க
ளுரைத்தவண்ணம் முனியானகோயில்வகை கூறுவேனே ௯௱௰௫

வரையானவகத்தியனார் ஸ்தலமொன்றுண்டுவளமானகோர்வை
யதுயின்னஞ்சொல்வேன்- திரையானசந்தமதுமூன்றேயாகும்திகழா
னவஷ்டமதுநான்கேயாகும் - குறையாதநந்தியது கோட்டையப்பா
கொற்றவனார்மலையருகேசுற்றியுண்டு - முறையானவகத்தியனார் தே
வஸ்தானம் முனையானலக்கமிது சொலலொணாதே ௯௱௰௬

ஒன்னுது திருக்கடையூர்தேவதானம் வுத்தமனேகோர்வையது
யென்னசொல்வேன் -திண்ணமுடன்கலைநான்கு யிருமூன்றுறுதிகழா
னமண்டபங்கள்பதினெட்டாகும் - வண்ணமுடன்சீர்காழிதேவதான
ம்மகத்தானகோர்வையதுயென்னசொல்வேன் - திண்ணமுடன்கலைநா
ன்குபதிகளெட்டு தாக்கானமண்டபமும்பதினாலாமே ௯௱௰௭

நாலானசேதுபதி தலமுஞ்சொல்வேன் நலமானகோர்வையது
யென்னசொல்வேன் - காலானவறுபத்துநாலுமாகும்கருவானமண்ட
பந்தான்முப்பத்திரெண்டு - மாலானமகதேவரெங்கநாதர் மார்ககமுட
ன்கண்டறிந்ததலமுமாகும்- பலானமனோன்மணியாள் கடாட்சத்தா
லே பங்கானபுதுமையின்னங் கூறுவேனே ௯௱௰௮

கூறுவேன்தணிகையது தலமுமாகும் கூரானகோர்வையதுயெ
ன்னசொல்வேன் - ஆறுகலங்கோட்டையதுயலேமேலப்பா வப்பனே
தசம்ரெண்டுசத்தம்நாலு - வேறுண்டோவையகத்தில் சொன்னரில்
லெ வெட்டவெளியானதொருதலமுமில்லை- நாறுண்டோபூவதுபோல்
மணமுமாகி நாணிலத்தில்கோடிதலங் கண்டேன்பாரே ௯௧௯

பாரேதான்கோண மதுநவகோணந்தான் பாங்கானகும்பமென்ற
கோணமப்பா - நேரேதான்தேவதா தலமுமாகும் நெடிதானகோர்
வையது யென்னசொல்வேன் - கூரேதான்கலையாறுயிருசிகையெட்டு
குணமானதேவதா தலமுமாகும் - நீரேதான்வகுத்தறிய யின்னஞ்
சொல்வேன் நிஷ்களங்கமாயவா தலமுமாமே ௯௨௦

தலமானதேவதா தலமுமாகும்தாக்கானகோர்வையது யென்ன
சொல்வேன்- பிலமானகோயிலதுமுப்பத்திரெண்டு போனமண்டப
ந்தான் அறுபத்துநான்கு- வலமானபாஞ்சாலதேசமப்பாவளமானதே
வதா தலமுமாகும்- நலமானகோர்வையதுயென்னசொல்வேன் நாட்
டிலேநவில்வதற்கு நாவில்லைதானே ௯௨௧

நாவில்லைப்பாவில்லையென்னசொல்வேன் நன்மையுள்ளவறுபத்
துநாலுசத்தம்- காவிலாநேபாள தேசமப்பா கருவானதேவதா தலமு
மாகும் - பூசிலுபர்கோர்வையது யென்னசொல்வேன் புகழானசத்த
மதுபரிசமெட்டு - தாவுபுகழாவடையா தலமுமாகும் தகமையுள்ள
கோர்வையது சொல்லக்கேளே ௯௨௨

சொல்லவென்றால்நாற்பத்தி யாறேயாகும் சுத்தமுள்ளசத்தமது
நாலேயாகும் - வெல்லவேபழனிமகா தலமுமாகும் வேதாந்ததலத்தி
னதுகோர்வைசொல்வேன்- புல்லவேசதுரெட்டு திசைகள்நான்கு புக
ழானகோணமது வறுபத்துநான்கு-வெல்லவேகழுக்குன்ற பதிதான
ப்பா மேன்மையுள்ளதலமென்று செப்பலாமே ௯௨௩

செப்பவென்றால்கோர்வையது யென்னசொல்வேன் ஜெகதலத்
திலாராலுஞ் சொல்லப்போமோ - ஒப்பமுடன்யிருபத்துநாலுமாகும்
ஒகோகோகாதாக்கள் மறைத்தகூத்து- எப்படியும்யிரைக்தாய்ப் பதி
னாறாக யெழிலானமண்டபமுங்கூறலாகும் - தப்பிதங்களில்லாமல்தய
வுள்ளானே சாற்றுகிறேன்திருவொற்றி யூறைத்தானே ௯௨௪

தானானதுவாபரமாம் யுகத்திலப்பா தகமையுடன்பிரளயங்கள்
வந்தபோது - கோனானதிருவொற்றி யூர்தானப்பா கொற்றவனேகடுக்
கடலில்வெந்தூரந்தான் - தேனானமாபுரமுங்கோபுரந்தான் தெரியா

மல்பிளபங்கள்வந்துமல்லோ - மானான தலமதுவும் முழுகியல்லோ ம
ன்னவனேசமுத்திரமும் மேவலாச்சே ௯௨௫

மேலவென்றால்கோர்வையது யென்னசொல்வேன் மேன்மையு
ள்ளநாற்பத்தியெட்டேயாகும் - தாவுகடலலையதுவுமிஞ்சியேதான் ச
ட்டமுடன்பூமியல்லோ முழுகலாச்சே - ஆவலுடன்குளிகைகொண்
டுசென்றேனப்பா வப்பனேதிருப்புவனங் கண்டேன்யானும் - நாவத
னில்கூறுதற்கு ளவிலமில்லை நலமானதலமதுவும்மகிமையாச்சே ()

ஆச்சப்பாகோர்வையது யென்னசொல்வேன் வப்பனேபதினெ
ட்டுரெண்டுபத்து- பாச்சலென்றதிருப்பழனிதலமுமாகும் பாங்கான
மகிமையது யென்னசொல்வேன் - மாச்சலென்றகோர்வையது மூப்ப
த்திரெண்டு மகத்தானமண்டபமு மெட்டுநாலு- வீச்சுடனேகுளிகை
கொண்டு பார்த்துவந்தேன் வித்தகனேபுலிப்பாணியின்னங்கேளே ()

சேளப்பாபிணிதீர்த்தவயித்தியநாதர் கெடியானதலமென்றதொ
ன்றுவுண்டு - ஆளப்பாகோர்வையது யென்னசொல்வேன் வப்பனே
பதினாறுதிக்குநாலு- வாளப்பாதிருப்பரமாவருன்றந்தானும் வளமை
யுள்ளகெடிஸ்தலமா மகற்குப்பேரு- சூளப்பாகோர்வையது யென்ன
சொல்வேன் துப்புரவ யிருமூன்று சதுரமெட்டே. ௯௨௮

எட்டானதிருவாரூரென்னலாகும் யெழிலானகோர்வையது யெ
ன்னசொல்வேன்- சட்டமுடன்திருவாச லறுபத்துநான்கு தசமையு
ள்ளகலையாறு சத்தமெட்டு- திட்டமுடன்திருவிடையா மருதூரப்பா
ம் வதா தலமென்றுசெப்பலாகும்- வட்டமுடன்போர்வையது வன்
பத்நாலு வப்பனேபரிசபது நாலுதானே ௯௨௯

நாலானதிருவிரிஞ்சி தலமுமப்பா நலமானமலைநாடு கள்ளர்தே
சம்- மாலானகோர்வையது யென்னசொல்வேன் பாங்கானவிளையாட்
டுசத்தமெட்டு- காலானதிருச்சோழ தலமுமாகும் கருவானமகிமைய
துயென்னசொலவேன் - நூலானகோர்வையது நாலுபத்துநுட்பமு
டன்கலையாறு டீசமெட்டே ௯௩௰

எட்டானசோனாடு தலமுமப்பா யெழிலானமகிமையதுயென்ன
சொல்வேன் - மட்டானகளபதியின் மகிமைசொல்வேன் மகத்தான
கோர்வையது தொண்ணூற்றாறு- திட்டமுடன்பாண்டியனார் தலமு
மப்பா திகழானவைபவளாமேயாகும் - வட்டமுடன்கோர்வையது
யென்னசொல்வேன் வகையுள்ளவிரெண்டுசோடசமுமேழே ()

ஏழானகாசியதுயெட்டேயாகும யெழிலானமகிமையதுயென்ன
சொல்வேன்- சாழானகோர்வையதுநூற்றிரண்டுபத்து சட்டமுடன்ம

மையதுமெத்தவுண்டு- காழானநாகார்ச்சுன தலமுமாகும் கருவான கோர்வைபது யெழுபத்திரெண்டு- தாழானடில்லியது மகிமைமெத்த தாக்கானகோர்வையது யெண்பத்திரெண்டே ௯௬௨

ரெண்டானசீன பதிதன்னிற்சென்று வெழிலானகுளிகையதுயாஞம்பூண்டு - குண்டலிபாம்வசிதனைப்பூட்டியல்லோ கொற்றவனே சீனபதியானிருந்து- சண்டமாருதம்போலே சிங்நாட்சென்று சாங்கமுடன்குளிகையது பூண்டுகொண்டு- வண்ணமுடன்றீர்த்தவளை காணுதற்கு வளமுடனேசென்றதொரு மகிமைபாரே ௯௬௩

தீர்த்தமகிமை

பாரேதான்படிகாமாந் தீர்த்தங்கண்டேன் பாங்கானஜம்புவென்றதீர்த்தங்கண்டேன்- நேரேதான்செந்தாமரை தீர்த்தங்கண்டேன்நெடிகானமனோன்மணியாள் தீர்த்தங்கண்டேன்- கூரேதானமயேலவாரூர் தீர்த்தங்கண்டேன் குறிப்பானமச்சமென்ற தீர்த்தங்கண்டேன்- சீரேதான்மாணிடவ தீர்த்தங்கண்டேன சிறப்பானகோபருவ தீர்த்தங்காணே ௯௬௪

காணவேபட்சியென்ற தீர்த்தங்கண்டேன் கருவானசங்கினுட தீர்த்தங்கண்டேன் - பூணவேசங்கணமாந் தீர்த்தங்கண்டேன் புகழானவியாசமுனி தீர்த்தங்கண்டேன்- மாணவேமகதேவர் தீர்த்தங்கண்டேன்மகந்தானபச்சையென்ற தீர்த்தங்கண்டேன் - தோணவேதிருப்பாலின்தீர்த்தங்கண்டேன் தோருகவண்டேன் தீர்த்தநாமே ௯௬௫

தீர்த்தமாங்கபமால் தீர்த்தங்கண்டேன் திறமானநாகேஸ்வரதீர்த்தங்கண்டேன்- பூர்த்தியாய்ப்பரமசிவ தீர்த்தங்கண்டேன் புகழானபாகவத தீர்த்தங்கண்டேன்- கீர்த்தியுளளசெங்கணமால் தீர்த்தங்கண்டேன் கெடியானபுண்ணியத் தீர்த்தங்கண்டேன்- பார்த்தேதேவேசடாயுவென்ற தீர்த்தங்கண்டேன் பாங்கானவச்சிரவல்லிதீர்த்தந்தானே,()

தானானகுசலமென்றதீர்த்தங்கண்டேன் தாக்கானயமுனையென்றதீர்த்தங்கண்டேன் - கோனானவகஸ்தியனார் தீர்த்தங்கண்டேன் குணமானவன்னியனார் தீர்த்தங்கண்டேன்- தேனானமல்லியென்ற தீர்த்தங்கண்டேன் தெளிவானவனுமாரின் தீர்த்தங்கண்டேன் - பானானகாசியென்ற தீர்த்தங்கண்டேன் பாங்கானகைலங்கிரிதீர்த்தம்பாரே,

பாரேதான்செண்பகத்தின் தீர்த்தங்கண்டேன் பாங்கானகைகேசிதீர்த்தங்கண்டேன் - நேரேதான்கருப்பண்ணர் தீர்த்தங்கண்டேன் நெடிதானசிக்கிந்தா தீர்த்தங்கண்டேன்- கூரேதானவிடமென்றதீர்த்தங்கண்டேன் குணமானஜெகமோகினி தீர்த்தங்கண்டேன்- சீரேதான்திருவல்லி தீர்த்தங்கண்டேன் திறமானகடம்பகத்தின்தீர்த்தங்காணே

காணவேயின்னம்வெகு தீர்த்தமுண்டு கண்மணியேவிளாடமெ ன்றதீர்த்தங்கண்டேன்- பூணவேயிரணியனூர் தீர்த்தங்கண்டேன்புக ழானபுஜண்டரிட தீர்த்தங்கண்டேன்- வேணபடிதிருமாலின் தீர்த்த ங்கண்டேன் விருளானகும்பமென்றதீர்த்தங்கண்டேன் - நீணவேகா ளிங்கதீர்த்தங்கண்டேன்ரிஷிகளங்கசொர்ணமென்றதீர்த்தந்தானே ()

தானானதீர்த்தமது யென்னசொல்வேன் தகமையுள்ளபுலிப்பா ணிதம்பிரானே- மானான தாமரையின் தீர்த்தங்கண்டேன் மகத்தான ஞானமென்ற தீர்த்தங்கண்டேன் - வேனானயாதவமான தீர்த்தங்கண் டேன் வெளியானவமுர்தமென்ற தீர்த்தங்கண்டேன் - பானானவசுவ னியாந் தீர்த்தங்கண்டேன் பாங்கானவற்புதமாந் தீர்த்தமாமே, ()

ஆமேதான்புலிப்பாணியன்புள்ளானே வப்பனேவனுகதத்தின் தீர்த்தங்கண்டேன்- நாமேதான்காலாங்கி நாதர்தம்பால் நலமானகுளி கைபது பூண்டுகொண்டு - தாமேதான்காலாங்கி சொன்னநீதி தன் மையுடன்வாக்கதுவும் பொய்பாமற்றான்- போமேதானஷ்டதிசையா ங்கடந்து பொங்கமுடன்தீர்த்தமதைக் கண்டிட்டேனே ௯௨௧

கண்டேனேவெகுகோடி தீர்த்தந்தன்னை காசினியிலார்கண்டா ரென்னைப்போல- உண்டானசித்துமுனி ரிஷிகள்தேவர் வுலகமெலாங் குளிகைகொண்டு சென்றதுண்டோ - ஒண்டொடியாய்மரப்பொந்து சமாதிபீடம் ஓகோகோநாதாக்கள்கண்டதில்லே- சண்டமாருதம்போ லேகுளிகைபூண்டு சட்டமுடனஷ்டதிசை கண்டிட்டேனே ௯௨௨

இட்டேனேயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் யெளிதானநா தாந்தசித்துதாமும்- பட்டமாம்விட்டல்லோ பாரின்மீது பாருலகில திசயத்தைக் கண்டதில்லே- விட்டகுறையிருந்ததொரு புண்ணியத்தா ல்வேதாந்தத்தாயினது மகுத்துவததால் - சட்டமுடன்மையகத்தமகி மையெல்லாம தாரணியில்கண்டறிந்த புதுமைபாரே ௯௨௩

புதுமையாம்வெகுகோடி சித்தர்தாமும் புகழானவுலகுதனில் கோடிகோடி- கதுமையுள்ளதேவரிஷி யிருந்தாரல்லோ காசினியில திசயங்கள் கண்டேனென்றும் - பதுமமுகமஷ்டதிக்குப் படிசம்பவு ம்பார்த்துவர்தவுறுதியதுங் கூறவில்லே - வதுவைபுரிசுரக்காயுங் கரிக் காயென்றவார்த்தையது போலவேவாய்நவின்றிட்டாரே ௯௨௪

நவின்றரேசித்துமுனிகோடாகோடி நாற்பத்துயெட்டுலட்சகிர ந்தந்தன்னே, குவின்றதொருசாதகிரங்களமலேபோலாக குண்மூடனே பாடிவைத்தார்லக்கோயில்லே- கவிந்ததொருகுறைக்குவழி சுறுக்குமா

க்கம் கண்டுமனதுவந்தல்லோ வுளவாராய்ந்து- அவிந்தத்திருவிளக்கது
வை யேற்றினாற்போல் வப்பனேசத்தகாண்டம் பாடினேனே ()

போகர்தன்வரலாற்றைப் புலிப்பாணிக்கு கூறல்

பாடினேனின்னமொருமார்க்கஞ்சொல்வேன் பாலகனே புலிப்பா
ணிபகரக்கேளாய்- நீடியதோர்காலாங்கி கிருபையாலே நீதியுடன்நெ
டுங்காலமிருந்தேனங்கே- தேடியேகாலாங்கினாதர்தாமும் தேற்றமுட
ன்றன்றனக்கு வுகந்தசீஷன்- நாடியேவேண்டுமென்ற நன்மையாலே
நானவற்குநற்சீஷனாகினேனே ௬௭௬

ஆகினேனெடுங்காலம் பணிதிசெய்து வப்பனேசமாதிக்குப்பூ
சைசெய்தேன்- பாகில்விழுமீயைப்போல் பாதவித்தேன் பட்சமுட
னென்மீதில் மனதுவந்து- சாகின்றசடலமதுக் காயந்தந்து சட்டமுட
னெந்தனுக்குயிதவுகூறி- மேகிடவேஞானோபதேசஞ்சொல்லி மேன்
மையுடனெந்தனை யாசீர்மித்தாரே ௬௭௭

எங்கனையுமாசீமம மிகவுஞ்செய்து வெழிலானவுபதேச வுண்
மைகூறி- அந்தமுடனாதியந்த முடிவுஞ்சொல்லி வப்பனேயோகமெ
ன்றவழியுங்காட்டி - விந்தையுடன்வையகத்து மகிமைகூறி விட்டகு
றையாவனைத்து மொழிந்துமல்லோ- சொந்தமுடனென்னனுஞ் சீஷ
னுக்கி சுந்தரனேமகுத்துவங்கள் கூறினாரே ௬௭௮

கூறினார்வெகுகோடியிதிகாசங்கள் கொற்றவனேசமாதிமுறைப்
பாடுஞ்சொல்லி - தேறியேசிலகாலமங்கிருந்து தேற்றமுடன்வையக
த்துவதிசயங்கள்- மீறியேதானுணர்ந்து குளிகைபூண்டு மிக்கானநாடு
பதிதேசமெல்லாம், கோறியேதேசமெல்லா மகிதம்பூண்டு கொற்றவ
னேயெந்தனுக்கு வருள்தந்தாரே ௬௭௯

தந்தாரேயெந்தனுக்குக்கோடியாகம சட்டமுடன்காலாங்கிநாத
ர்தாமும்- அந்தமுடனெந்தனுக்கு வதிதமார்க்கம வப்பனேதாமுரை
த்துப்போகவென்று- இந்தமானிலத்திலுள்ள மகிமையெலலாம் ஏற்
றமுள்ளகுளிகையினா லறிந்துகொண்டு- விந்தையுடன்பாடிவைப்பே
ன்சத்தகாண்டம் விண்ணுலகம்மண்ணுலகம் விடங்கொள்ளாதே ()

கொள்ளாதுபோகரே ழாயிரந்தான் கொற்றவனேநாதாக்கள்கூ
றவில்லை - எள்ளளவும்பிசகாது யின்னூலப்பா யிணையான நூலுக்கு
யெதுவேதென்றால் - கள்ளமிலாக்கும்பமுனி சொன்னநூலாம கசி
னியில் பெருநூலாம்பேதமுண்டோ - தள்ளவுந்தான்போகர்காண்
டமப்பாதருவானபன்னீரா யிரந்தானுமே ௬௮௧

பன்னீராயிரமென்னும நூல்தானப்பா பயிலானசாண்டமதுப ணிரெண்டுமாகும், சொன்னமொழிதவாது துய்யபாலா துகளகற்றிப் பன்னீராயிரந்தான்சொன்னூர், கன்னியமாய்ப்பணிரெண்டு காண்ட ஞ்சொன்னூர் கண்மணியேவாயிரத்துக்கொருகாண்டந்தான், உன்னி தமாயின்னூலுக் குவமைகூறி வுத்தமனூர் பாடிவைத்தார் குண்மை தானே ௯௫௨

உண்மையாமென்னூலைக்கண்ட றிந்து வுத்தமனே கும்பமுனி நூ லைப்பாரு, திண்ணமுடனே பணிரெண்டுகாண்டம்பாரு தீர்க்கமுடன்ாக சியங்களெல்லாம்விள்ளும், நன்மைபெறமோட்சவழி கதியேகொள வார் நாதாந்தக்கும்பமுனிமுன்னேசிற்பார், தண்மையுள்ளசாத்திரந் தான்பெருநூலப்பா தகைமையுள்ளபணிரெண்டு காண்டம்பாரே ()

பாரேதானகஸ்தியனூர்கோடி நூல்கள் பாருலகில்பாடிவைத்தார் மறைபபுமெத்த, நேரேதான்பெருநூலின்மார்க்கமெல்லாம் நேர்மை யுள்ளவென்னூல்போல்விள்ளலாகா, சீரேதான்பணிரெண்டுகாண்ட மாக சிறப்புடனேபாடிவைத்தார்புலஸ்தியர்க்கு, வேரேதான்சாத்திர ங்கள்பார்ப்பதுண்டோ பார்த்தாலும்பெருநூலுக்கொவ்வாதன்றே ()

அன்றானசாத்திரங்களனந்தங்கோடி வளவில்லாசூத்திரங்கள்க ணக்கோயில்லை, குன்றானமலைபோலேகுவித்துவைத்தார் கோடிதான சாத்திரத்தின்மகிமையெல்லாம், தென்றிசையில்கும்பமுனிசெய்தநூ ல்கள் தேசத்தில்பாதியுண்டுவையகத்தேதப, வென்றிடவேபதினெண் பேர்செய்தநூல்கள் வேட்கமுடன்மறுபாதியென்னலாமே ௯௫௫

என்னவேகும்பமுனியென்றநாமம் யெழிலானவகஸ்தியரின்னா மமாகும், பன்னவேயகஸ்தியனூர்யென்றநாமம் பலபலவாஞ்சாத்திரத் தில்முறைபாடாக, துன்னவேகும்பமுனியென்றபேநான் துப்புரவா ய்யெப்போதும்வழங்கும்பாரு, சொன்னதொருநூல்களிலே மகிமை கோடி தோறுமலபாடிவைத்தார்முனிவர்தாமே. ௯௫௬

முனியானசாத்திரங்கள்பலநூல்கோர்வை முதுலகில்பாடிவைத் தார்சித்தரெல்லாம், கனியானநவகனியாம் நூல்தானப்பா கருத்துட னேபணிரெண்டுகாண்டஞ்சொன்னூர், பனியதுதான் சூரியனைக்கண் டாற்போலே பறக்குமடாபணிரெண்டுகாண்டமுன்னே, தொனிபோ ன்றசாத்திரங்கள்களவுமார்க்கம் துப்புரவாய்க்காவியத்துக் கொவ்வா தன்றே ௯௫௭

அன்றானசாத்திரமாங்கோர்வையப்பா வட்பனேபணிரெண்டுகா ண்டஞ்சொன்னூர், குன்றானமலைபோலேகோடித்தங்கம் கொட்டினூர் பணிரெண்டுகாண்டத்துள்ளே, சென்றிடவேவயித்தியமும்வாதமார்க்

கம் செயலானயோகமுதல்ஞானமார்க்கம், வென்றிடவேமாந்திரீக மத
ரண மேவதும் வேண்டியதோர் கருமானமிகவுண்டாமே ௯௫௮

உண்டானசாத்திரத்திலில்லாமார்க்கம் வுந் தமனேபெருநூலிற்
காணலாகும், கண்டாலும்விடுவாரோபெருநூலப்பா காசினியிற்பனி
ரெண்டுகொண்டந்தன்னே, விண்டதொருபொருளெல்லாமதிலோதோயு
ம்வித்தகனேமற்றோர்நூல்காண்பதில்லே, சண்டமாருதம்போலேபனி
ரெண்டுகாண்டம் சங்கையறவாயிரத்துக்கொருகாண்டந்தானே ( )

சங்கையில்லாபெருநூலைப்பார்த்தபேர்கள் சாயுச்சியபதவிதனை
ப்பெறவேயாகும், இங்கிதமாய்ப்பெருநூல்கள்பார்க்காமாண்பர் பெ
ரிலானசாலோகசாமீபந்தான், அங்கமுடன்சாரூபபதவிமூன்றும்வப்
பனைகிட்டுவதுமரிதேயாகும், புங்கசித்திபெட்டுவித போகந்தன்னை
புகழுடனேபெருநூலோர்காண்பார்தானே ௯௬௰

போகர்புலிப்பாணியை யாசீர்வதித்துபுத்திகூறல்

தானென்னமொரு தண்மைசொல்வேன் தாக்காணபுலிப்பா
ணிதயவுள்ளானே, ஞானவெனதையர்காலாங்கிநாதர் கொற்றவ
னேயெந்தனுக்குச்சொன்னநீதி, பானுவபார்லோகமிடங்கொள்ளாது
பாலகனேசொல்வதற்குநாளுமில்லே, தேனுவமனோன்மணியாள்கடா
ட்சத்தாலே தேற்றமுடன்கோடிமுறைசொல்வேன்பாரே ௯௬௧

பாரேதான்கலியுகம்பிறக்கலாச்சு பாலகனேசத்தியமும் விழலா
ய்ப்போச்சு-ஆரோதானுந்தனுக்குமதிகள்சொல்வார் வப்பனேயுபதே
சம்பெற்றமட்டும், பேரிருக்கலூரிருக்கபிதாவிருக்க பேரானமருத்து
வத்தைவெளிவிடாதே, சீரழிந்தமாண்பரெல்லாஞ் செனிப்பாரப்பா
ஜெகதலத்தில்கருமியென்றகோடிபேரே ௯௬௨

கோடியாம்நல்லவர்போலிருப்பாரப்பாகொற்றவனேயுந்தனுக்கு
வுபதேசித்த,தேடியதோர்பொருளப்பாசத்தகாண்டம் தெளிவானயே
ழாயிரக்காவியத்தை, பாடியேயுந்தனுக்குதத்தமாக டட்சமுடன்யான்
கொடுத்தபெருநூலப்பா, வாடியேமயங்காதேமனம்விடாதே மதிகெ
ட்டுகில்லாதேநூல்கொடாதே ௯௬௩

கொடுத்தாலும்விதியாளிபார்த்தறிந்து கொற்றவனேகொடுத்தா
லும்புண்ணியமெய்தும், கெடுத்ததொருகுடிகெடுக்கும் பாவிகட்கும்
கெடியானசண்டாளமாண்பருக்கும, அடுத்துறவுநயமபேசி புரணிக்கு
றும் வனியாயக்காரருக்கும்வறிவிலர்க்கும்,தொடுத்ததொருபெருநூ
லாஞ்சத்தகாண்டம் துப்புரவாய்க்கொடுத்தாலேபாவமாமே ௯௬௪

பாவமாம் நூலதனைப்பதனம்பண்ணு பாலகனேசமாதிமுகம்வை
த்துப்போற்று- ஆவலுடன்விதியாளிவந்துகேட்டால் வப்பனேநீகொ
டுத்துமதிகள்கூறு- சாவதுவுங்கலைமேலேயிருக்குமப்பா சாங்கமுடன்
நூல்கொடுத்தல்மெத்தநன்று- போவதுமெய்யிருப்பதுபொய் யென்ற
வாக்கியம் பொங்கமுடன்வேதமது நுணுக்கமாமே ௯௬௫

வேதங்கள் நுணுக்கறிந்துயியாவிட்டால் வெகுபாவம்வெகுசாப
ம்நரகமெய்தும்- நீதமுடன்பரிசுத்தவாளருக்கு நீதியுடன்கொடுப்ப
துவேதர்மமாகும்- தோதமுடன்விதியாளிவந்துகேட்டால் தோணும
ல்சமாதிமுகமிருந்தநூலை- ஆதலாமாமருளினதுவிசுவாசத்தால் வப்ப
னே நூல்கொடுத்துமதிகள்கூறே ௯௬௬

கூறவென்றால்புலிப்பாணிகுணமுள்ளானே கொற்றவனேகலி
யுகமும்பிறந்துபோச்சு - மாறலுடன்வையகத்தில்வெகுபாடப்பா மா
ண்பர்களும்வெகுகேடுபடுவாரப்பா - சீறலுடன்பொய்சூது கபடதந்
திரம் சிறப்பானகுறைபாடுவதிகமார்க்கம்- மீறவேதானடக்குங் கலியு
கத்தில்மிக்கானவுண்மைபது வறிந்துகொள்ளே ௯௬௭

கொள்ளப்பாயொருவரையும்நம்பவேண்டாம் கொற்றவனேகலி
யுகத்திலனியாயங்கள்- தள்ளவேபோகாதுதரணிமீதில் சட்டமுடன
னேகவிததெய்வமென்பார்- விள்ளவேவிசுவாசம்பாவமுண்டு வித்தக
னேயனேகவிதசாத்திரங்கள் - உள்ளபடிகூறுவார்மாண்பாப்பா வுத்
தமனேமயங்காதேபுத்திவானே ௯௬௮

புத்தியாய்கலியுகத்தில்சிலதுகாலம் புசமுடனேதாமிருந்து சமா
திநாள்வாய்- சத்தியத்தை நத்தவராதேதம்பிரானே சதகோடிசூரியன்
போல்ஞானகொள்ளு- வித்தகனேவிற்பனனேவிண்ணுள்ளானேவி
ட்டு- குளமநேருமட்டும்வையகத்தில் - புத்தியாய்நெடுங்காலந்தாமிருந்
துபுண்ணியனேசமாதிமுகம புதிவீர்தானே ௯௬௯

போகர் சமாதிக்குப்போதல்

தானானபுலிப்பாணிதகமையோனே தாக்கானயென்தேவர் சொ
ன்னநீதி - கோணாககாலாங்கிவாக்குபோலே கொற்றவனேசமாதிமுக
ஞ்செல்வேனப்பா- மாஞானமனோன்மணியாள் கடாட்சத்தாலும் மக
தேவாகாலாங்கிகிருபையாலும் - பாரானபாரிலுள்ளோர் புண்ணியத்
தால் பாலகனேசமாதிமுகஞ்செல்வேன்தானே ௯௭௰

செல்கவென்றால்பெருந்தன்முறைபாடுபோலே ஜெகதலத்திலசில
காலம்நீரிருந்து- புல்கவேவையகத்தைத்தான்மறந்து புகழாலைசமாதி

மூகமேவநன்று- வில்கவேகலியுகத்திலிருந்துமென்ன விட்டகுறையி
ருந்தாலுமென்னலாபம் - அல்லவநுநெந்நாளுமிருந்தாலுந்தான் வெப்
பனேதேகமது மண்ணுப்போமே ௯௭௨

மண்ணானதேகமது யிருந்துமென்ன மகிதலத்தில்நெடுங்காலம்
வாழ்ந்துமென்ன - வண்ணமுடன்கலியுகத்திலனியாயங்கள் வாகுட
னேசதாகாலம்நடக்கும்பாரு - எண்ணமதுகலியுகத்து மாண்பருக்கு
வெழிலானகோடிமுறைசத்துவங்கள் - கண்ணவிந்தமாண்பரப்பாகலி
யுகத்தார் காசினியைமறப்பதுவும்மெத்தநன்றே ௯௭௨

நன்றானகாசினியைமறந்துமல்லோ நான்போகுஞ்சமாதிமுகந்
தன்னைப்போலே- குன்றானகலியுகத்தில் நீயுமப்பாகொற்றவனேசமா
திமுகஞ்செல்கநன்று- என்றைக்கும்வையகத்தின்வாழ்க்கையெல்லா
ம் வெழிலுடனேமறப்பதுவுமெத்தநன்று - தென்றிசையில்கும்பமு
னிசமாதிபக்கல் தேற்றமுடன்சமாதிமுகங்கொள்வீர்தானே ௯௭௩

போகர் சித்தர்களுக்கும் ரிஷிகளுக்கும் வணக்கங் கூறுகின்றார்

தானானவகஸதியாக்குச்சரணஞ்சொன்னேன் தாக்கானவவர்பா
தம்போற்றிபோற்றி- கோனானவாரிஷியார்தாள்பணிந்தேன் கொற்
றவனேயவர்பாதம்போற்றிபோற்றி - தேனானகாலாங்கிசரணஞ்சொ
ன்னேன் தேற்றமுடனவர்பாதம்போற்றிபோற்றி - மானானசட்டமு
னிசரணஞ்சொல்லேன் மார்க்கமுடனவர்பாதந்தொழுதிட்டேனே, ()

தொழுதேனேரோமரிஷிசரணஞ்சொன்னேன் தோறுமலவர்பா
தம்பணிந்துபோற்றி - பழுதபடாமச்சமுனிசரணஞ்சொன்னேன்பா
லகனேயவர்பாதம்போற்றிபோற்றி- தொழுதுமேசிவவாக்கியர்சரண
ஞ்சொன்னேன் தோற்றமுடனவர்பாதப்போற்றிபோற்றி - விழுந்து
மேநந்திசர்சரணஞ்சொன்னேன் விருப்பமுடனவர்பாதம் பணிந்திட்
டேனே ௯௭௫

பணிந்தேனேதன்வந்திரிசரணஞ்சொன்னேன் பாலகனேயவர்
பாதந்தொழுதுபோற்றி - அணியானராமருக்குச்சரணஞ் சொன்னே
ன்வப்பனேயவர்பாதம்போற்றிபோற்றி- துணிந்துமேகௌபாலர்தா
ளபணிந்தேன் திப்புரவாய்ச்சரணங்கள் மிகவுஞ்சொன்னேன்- பணி
யானசுந்தரானந்தருக்கு மகத்தானசரணங்கள்போற்றிதானே ௯௭௬

போற்றியேதேரையர்சரணஞ்சொன்னேன் புசமுடனேயவர்பா
தந்தொழுதுபோற்றி - ஆற்றலுடன்பூகண்ணருக்கு வப்பனேயவர்
பாதந்தொழுதுபோற்றி- மாறலுடன்புண்ணாக்குயீசருக்கு மகத்தா
னசரணங்கள்மிகவுஞ்சொன்னேன்- தெற்றமுடன்யிடைக்காடர் சர
ணஞ்சொன்னேன் தெளிவுடனேயவர்பாதந்தொழுதேன்தானே ()

தானனடமாகானந்தருக்கு தண்மையுடன்மிகனெக்கி சரணஞ்
சொன்னேன், கோனனுட்சணனுயருக்கு கோடிமுறைசரணங்கள்
மிகவுஞ்சொன்னேன்- பானனவகப்பேபயசித்தருக்கு பட்சமுடன்வெ
குகோடிசரணஞ்சொன்னேன்- மானனயாக்கோபுபாதம்போற்றிமா
ர்க்கமுடன்சரணங்கள் கூறினேனே ௬௭௮

கூறினேன்குறும்பரென்றசித்தருக்கு கோடான்கோடியது சா
ணஞ்சொன்னேன்- தேறியேயவர்பாதந்தொழுதுபோற்றி தேற்றமு
டனஞ்சலிகள்மிகவுஞ்செய்தேன் - மாறுபடாசோதியென்றமுனிவரு
க்கு மகத்தானசரணங்களதிகஞ்சொன்னேன்- ஆறுநதிதீர்த்தமதுகொ
ண்டுமல்லோ வவர்பாதமர்ச்சனைகள் செய்திட்டேனே ௬௭௯

செய்தேனேயின்னம்வெகுமார்க்கஞ்சொல்வேன் செயலானபுலி
ப்பாணிசெல்வனானை- துய்யநலவூர்வசியாள் சரணஞ்சொன்னேன்
துப்பரவாயென்மீதிற்கடாட்சம்வைத்து- வெய்யபுகழ்காலாங்கிகடாட்
சந்தாலே விருப்பமுடனென்மீதில்மனதுவைத்து- தையலெனுமூர்வ
சியாள்கடாட்சத்தாலே சட் முடன்சத்தகாண்டம்பாடினேனே ()

பாடினேன்புலிப்பாணிமைந்தாகேளு பாலகனேவியாசமுனிகா
தருக்கு- தேடியேயவர்பாதந்தொழுதேனப்பா தேற்றமுடன்சரணங்
கள்மிகவுஞ்சொன்னேன்- கூடியேகௌதமரிடிய ரீன்றன் கொற்றவ
னேயவர்பாதந்தொழுதுபோற்றி- நீடியேயஞ்சலிகள்மிகவுஞ்செய்து
நீதியுடனவர்பதத்தைப் பணிந்திட்டேனே ௬௮௧

இட்டேனேதிருமூலர்சரணஞ்சொன்னேன் யெழிலுடனேயவர்
பாதந்தொழுதுபோற்றி- சட்டமுடன்பாம்பாட்டிசித்தருக்கு சதகோ
டிநமஸ்காரஞ்செய்தேன்யானும்- திட்டமுடனவர்பாதந்தொழுதுபோ
ற்றி தீர்க்கமுடன்மேலுமஞ்சலிகள்செய்தேன் - பட்டமுடன்கடுவெ
ளியார்சித்தருக்கு பாலகனேநமஸ்காரஞ் செய்தேன்பாரே ௬௮௨

பாரேதான்கமலமென்றமுனியாருக்கு பட்சமுடன்தசகோடிசா
ணஞ்சொன்னேன் - சீரேதானவர்பாதந்தொழுதுபோற்றி சிறப்புட
னேவஞ்சலிகள்மிகவுஞ்செய்தேன்- நேரேதான்கைலாச ரிடியாருக்கு
நேர்மையுடனவர்பாதந்தொழுதுபோற்றி- கூரேதான்நமஸ்காரம்மிக
வுஞ்சொன்னேன் கொற்றவனேபுலிப்பாணி பண்புள்ளானே ௬௮௩

பண்பானவஞ்சனமாம்ரிடியாருக்கு பாலகனேசரணங்க ளதிகஞ்
சொன்னேன்-நண்புடனேதாள்பணிந்து மூடிகள்சாய்த்துநன்மையுட

னவர்பாதந்தொழுதுபோற்றி- வண்பானநவகண்டர் பாதம்போற்றிவ
ளமுடனேயவர் தனக்குச் சரணஞ்சொன்னேன் - திண்பானவஞ்சலி
கள்மிகவுஞ்செய்து தீர்க்கமுடன்கரங்குவித்து வணங்கினேனே ()

வணக்கவேயின்னம்வெகுசித்தருண்டு வளமானநாகாந்தரிடியா
ரப்பா, இணக்கிவேன்ஜமதகினி முனியாருக்கு மெழிலானசரணங்க
ள் மிகவுஞ்சொன்னேன்- குணங்கமதுவாராமல்ரிடியாருக்கு சுத்தமுட
னவர்பாதந்தொழுதுபோற்றி- மணக்கமூங்கிராணுக்கிய முனிவருக்கு
மார்க்கமுடனவர்பாதந்தொழுதிட்டேனே ௯௮௫

தொழுதேனேயின்னமொருமார்க்கஞ்சொல்வேன் தொல்லைபெ
ணும்பிறவிபதுமயக்கறுத்த - பழுதுபடாபுலிப்பாணிபகர்வேனப்பா
பாலகனேயின்னமவெகு சித்தருண்டு - முழுதுமேமூதலகில் கீர்த்தி
பெற்ற முனியானவசுவனியாந்தேவருக்கு - தொழுதுமேயவர்பாதம்
போற்றிபோற்றி தோற்றமுடனஞ்சலிகளபகருவேனே ௯௮௬

பகரவே புஜண்டமகாரிடியாருக்கு பண்புடனேவெகுகோடி சர
ணஞ்சொன்னேன்- நிகரவேயவர்பாதந்தொழுதுபோற்றி நீதியுடன்
தலைகுனிந்துமுடிகள்சாய்த்தேன்- சுகராஜபரிச்சித்து மன்னனுக்குச்சு
ட்டமுடன்சோதிடங்கள்தாமுரைத்த - சுகரென்றரிடியார்க்குச்சரண
ஞ்சொன்னேன் துப்புரவாயவர்பாதம்பணிந்திட்டேனே ௯௮௭

பணிந்தேனேபுலிப்பாணிமன்னவாகேள் பாருலகில்கும்பமென்
றயீசருக்கு- துணிந்துமேயவர்பாதந்தொழுதுபோற்றி துப்புரவாய்ச
ரணங்களதிகஞ்சொன்னேன் - கணிகமெனநமூலத்தினீசருக்கு கன
காபிஷேகமுடன் சரணஞ்சொன்னேன் - மணிபோன்றபாதமதைத்
தொழுதுபோற்றி மன்னவனேசதாகாலம்நினைப்பேன்காணே ௯௮௮

காணவேகருவூரார்சித்தருக்கு கனகாபிஷேகமது மிகவுஞ்செய்
து-தோணவேயவர்தனக்குச்சரணஞ்சொன்னேன் துப்புரவாயவர்பா
தமபோற்றிபோற்றி- மாணமருங்கல்வியுள்ளகொங்கணர்க்கு மகத்தா
னசரணங்கள்மிகவுஞ்சொன்னேன் - நீணவேவாலையானந்தருக்கு நீதி
யுடன்பாதமது பணிந்தேன்தானே ௯௮௯

தானானபுலஸ்தியர்க்குச்சரணஞ்சொன்னேன் தாக்கானவால்மீக
ர்பாதம்போற்றி-கோனானசுப்பிரமணியர்சரணஞ்சொன்னேன் கூரா
னவர்பாதந்தொழுதுபோற்றி- தேனானஜெபகண்டி பாதம்போற்றி
செங்கமலவள்ளுவனார் சரணஞ்சொன்னேன் - மானானமகதேவர்கால
தூதர்மநத்தானபாதமது பணிந்திட்டேனே ௯௯௦

இட்டேனேவகோடிரிடியாருக்கும் யெழிலானபதினெண்பேர் சித்தருக்கும்- சட்டமுடன்நாற்பத்தியெட்டுபேர்கள் சதுரானமுனிவருக்குஞ் சரணஞ்சொன்னேன்- திட்டமுடன்மனோன்மணியாள்பாதம்போற்றிதிகழான சுடரொளியாஞ்சோதிபோற்றி- அட்டதிசைதான்புரமூங்காலாங்கிநாதா வையனேயுன் பாதமபோற்றிதானே ௬௬௧

போகர் சிதர்களுக்கு அவையடக்கங்கூறல்

தானானசிததுமகாரிடியாருககு தண்மையுள்ளமனுவொன்றுசொல்வேனப்பா- கோனானதெனதையர்காலாங்கிநாதர் கொற்றவனார்சீனபதிதேசந்தன்னில் - மானானவையகத்துமகிமையெல்லாம் மார்க்கமுடனெந்தனுககுவுபதேசித்தார் - பானானசதகோடிசூரியன்போல் பாடினேன்சத்தகாண்டம் டண்பாய்த்தானே ௬௬௨

பண்பானலோகவதிசயங்களெல்லாம்பாருலகில்நாதாக்கள்மறைத்ததாலே- நண்பானமாண்பர்களும்பிழைக்கவேதான் நலமானபுலிப்பாணியாளனுக்கு - இண்ணமுடனிதிகாசவித்தையெல்லாம் தீர்க்கமுடன்சத்தசாகரத்தைப்போலே- உண்மையாய்போகரேழாயிரந்தான்வுகமையுடன்பாடிவைத்தேன் காண்டம்பாரே ௬௬௩

பாரேதான்மருத்துவங்கள்வெளியாச்சென்று பண்புள்ளநாதாக்கள்நீங்களெல்லாம்- வேரேதான்கோபமது கொள்ளாமற்றான் வேழுக்கமுடனெந்தன்மேல்கிருபைவைத்து- சீரேதான்சிறுபாலனென்னையுந்தான் சிறப்புடனேமனதுவந்துவஞ்சலித்து - நேரேதானென்மீதிற்சினங்கொள்ளாமல் நேர்மையுடன்கொண்டணைத்தல்பாரமாமே ()

பாரமாமென்னூலிற்றுநளுண்டானாற்பாலகனேசிக்கருத்துமனங்களித்து - தூரானவார்த்தையது மிகக்கொள்ளாமல் துப்புரவாயச்செந்தமிழைச்சீர்திருத்தி - கூரானவிதிபாடுமுறைபரடோடு குணபாடுவழிபாடுதானமர்த்தி- சீரானபோகரேழாயிரத்தைசிறப்புடனேயுகந்துமனங்கொள்வீர்தாமே ௬௬௫

தாமானசித்துமுனி ரிடியார்முன்னில் தகமையுடன்பாடிவைத்தசத்தகாண்டம்- ஆமேதான்பசுபசுங்கிளைபூண்டனே வப்பனேயருந்நாக்கைசத்ரம்போலும்-வேமேதான்செந்தமிழாற்சித்தர்முன்னேவேட்கையுடன்யான்செய்தசத்தகாண்டம் - தாமேதான்புல்லறிவாலுரைத்தாலே தண்மையுடன்பெரியோர்புன்னைகையுமாமே ௬௬௬

நகையானபோகரேழாயிரந்தான் நலமானசித்தர்முனிவர்களுக்கு தகமையுள்ளகாண்டமது பெருமையோசொல் தாரணியிலனேகம்பே ர்சித்தர்கூடி-குகைதனிலேவெகு நூல்களபாடியல்லோ கொற்றவனே சமாதிமுகமவைத்தாரப்பா - வகையானசாத்திரமதுக்கொப்புசொல்ல வல்லவனையென்னாலும்முடியாதன்றே ௯௯௭

அன்றான வாதிசேடன்றன்னாலும் வப்பனேவள்ளிடவும்போ காதப்பா - குன்றானமலைபோலேசாத்திரங்கள் கொட்டினார்சிதம்பரசபை லாம்பலக்கோயிலிலே- வென்றிடவேகும்பமுனிவர்க்கத்தோரும் வேதா ந்தத்திருமூலவர்க்கத்தோரும்- நன்றாகப்பாடிவைத்தார் கோடி நூல்க ள்நலமாகப்பாடிவைத்தேன் சின்னூலாமே ௯௯௮

சின்னூலாமென்ற கொருயிந்தநூலே சினமதுவுங்கொள்ளாமல் மனதாவந்து- பன்னூலும்பெருநூலாயிருந்திட்டாலும் பட்சமுடன் மனங்களித்துவாசிர்மிதது- என்னூலைக்குறமமதுகூறாமற்றான் செய்தி லானசிறியேன்மேலன்புகூர்ந்து - நன்னூலாயிதப் பூண்டுயின்னூல்த ன்னை நன்மையுடனனுசரித்து கொள்ளநன்றே ௯௯௯

கொள்ளவேபோகரேழாயிரந்தான் கொற்றவனேநெடுங்கால தவமிருந்து - உள்ளபடியுடல்பொருள்களாவியெல்லாம் வுத்தமனே யின்னூலுக்கொப்பிவைத்தேன், கள்ளமிலாசாத்திரமாஞ் சத்தகாண் டம் கலியுகத்தார்தான்பிழைக்கப்பாடிவைத்தேன் - உள்ளபடிசாத் மதுயின்னூற்கில்லை வுத்தமனேகாண்டமது யேழுதானே ௲

தானானகாண்டமதுயேழுக்குள்ளே சதகோடிசூரியர்போல்மகு த்துவங்கள் - கோனானகாலாங்கிகடாட்சத்தாலே கொற்றவனேபெரு நூலாங்குருநூலாக - தேனானமனோன்மணியாள்கிருபையாலும் தே ஜொளிவின்சின்மயத்தினருளினாலும்-மானானபோகரேழாயிரந்தான் மார்க்கமுடன் பெருநூலும் முற்றதாமே ௲௧

போகர்சத்தகாண்டம் - எ௲

எ - வது சத்தகாண்டம்

முற்றுப்பெற்றது,